தமிழர் நாகரிகம்

முதல் தொகுதி

★

தொகுப்பாசிரியர்

நடன. காசிநாதன், எம்.ஏ.,

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

★

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை - 600 113

1994

6515

தமிழர் நாகரிகம்

தமிழர் நாகரிகம்

★

தொகுப்பாசிரியர்

நடன. காசிநாதன்

★

வெளியீடு

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை

முதற் பதிப்பு 1994 - 96 — 500 பிரதிகள்
வெளியீடு எண் : 127

தமிழர் நாகரிகம்

தொகுப்பாசிரியர்
நடன. காசிநாதன்

விலை ரூ.

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 600 113

65/5

உள்ளடக்கம்

முன்னுரை

தமிழர் வரலாறு பழைய கற்காலம் முதல் தொடங்குகிறது. இற்றைக்குச் சுமார் 2,00,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தமிழகத்தில் மனித இனம் வாழ்ந்திருக்கிறது என்பதற்குத் தொல்லியல் தடயங்கள் மிகுந்த அளவில் கிடைத்துள்ளன. குறிப்பாகச் சென்னைக்கு அருகிலுள்ள அத்திரம்பாக்கம், வட மதுரை ஆகிய இடங்களிலிருந்து கிடைத்திருக்கின்ற பழைய கற்காலக் கருவிகளே தக்க சான்றுகளாகும். பழைய கற்காலந்தொட்டு வாழ்ந்த மனிதன் தம்முடைய தொழில் திறன், சிந்தனைத் திறன், பேச்சுத் திறன் ஆகியவற்றில் படிப்படியாக முன்னேறி கி.மு. 900 அளவில் மிகச் சிறந்த நாகரிக நிலையை எட்டியிருக்கிறான். அவன் அவ்வாறு எய்திய நாகரிக நிலையின் உச்சகட்ட வளர்ச்சியின் எச்சங்களே இன்று நமக்குக் கிடைத்திருக்கின்ற சங்க இலக்கியங்கள் ஆகும். அதற்குப் பிறகு ஒரு காலகட்டத்தில் உன்னத நிலையை அடைவதும், ஒரு காலகட்டத்தில் அயலார் படை எடுப்பினாலும், அயலார் பண்பாட்டின் தாக்கத்தாலும் பின்னிலை எய்துவதுமாக மாறி மாறி தமிழர் வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். பின்னாட்களில், குறிப்பாகப் பல்லவர், முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகர அரசர், நாயக்கர், மராட்டிய மன்னர்கள் மற்றும் சேதுபதி மன்னர்கள் ஆகியோர் காலங்களில் தமிழகம் பல ஒப்புயர்வற்ற வெற்றிகளை அடைந்து கலை, வாழ்வியல், சமயம், அரசியல், பொருளாதாரம், நீதி, காவல், வணிகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பிறர் கண்டு வியக்கும் வண்ணம் சிறப்பு நிலை பெற்றிருந்திருக்கிறது. அந்நிலைதான் தமிழர் நாகரிகம் என்று கூறப்படும் நிலையாகும். அந்நாகரிகத்தைச் சிறப்புற எடுத்து விளக்கும் வகையில் எழுதப்பட்ட நூலே ''தமிழர் நாகரிகம்'' என்று வெளிக்கொணரப்படும் இந்நூலாகும். இந்நூலில் தமிழர் நாகரிகம் கீழ்க்காணும் தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளது.

1) கோயிலும் குடியிருப்பும்
2) ஓவியமும் காவியமும்
3) செம்பும் சிலையும்
4) ஆடலும் பாடலும்
5) விழவும் சடங்கும்
6) அடுகலனும் பரிகலனும்
7) போரும் அமைதியும்
8) உழவும் தொழிலும்
9) காலினும் கலத்தினும் வணிகம்
10) எண்ணும் எழுத்தும்
11) பேராட்சியும் ஊராட்சியும்
12) தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்நூலின் முதல் ஐந்து கட்டுரைகள் அச்சிடப்பட்டு எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தஞ்சையில் வெளியிடப்பட்டது. மீதமுள்ள ஏழு கட்டுரைகள் பின்பு அச்சாக்கப் பெற்று முழு வடிவில் தற்பொழுது நூலாக வெளியிடப்படுகிறது. தமிழர் நாகரிகம் பற்றி அறிந்து கொள்ள விழைவார்க்குப் பெரிதும் பயனுள்ள நூலாக இது அமையும் என்று நம்புகிறோம்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு எம்முடைய பணிவான நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்.

இந்நூலுக்குக் கட்டுரை எழுதி சிறப்பு செய்திருக்கின்ற இத்துறை தொழில் நுட்ப அலுவலர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் அச்சாகும்பொழுது பிழைத் திருத்தம் செய்து, கட்டுரைகளைத் தொகுக்கும் பணியில் உதவிய முனைவர் ஆ. பத்மாவதி, கல்வெட்டாய்வாளர் அவர்களுக்கும், இந்நூலைச் சிறந்த முறையில் அச்சாக்கித் தந்துள்ள அச்சுப் பிரிவு அலுவலர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் 110 நிழற்படங்கள் இடம்பெற்றுள்ளன. இவை தமிழரின் நாகரிகச் சிறப்பைக் கண்ணால் கண்டு அறிந்துகொள்ள உதவும் மூலச் சான்றுகளின் நகல்கள் ஆகும்.

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

கோயிலும் குடியிருப்பும் 1

தமிழ்நாடு, கட்டடக்கலைக்குத் தனிச்சிறப்புப் பெற்ற மாநிலமாகும். இங்கு காணப்பெறும் கோயில்களும், அரண்மனைகளும் இதர கட்டடங்களும் தமிழர்களின் கட்டடகலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

தமிழகக் கட்டடக் கலையினை, வாழ்வியல் தொடர்புடைய (Secular Architecture) அரண்மனைகள், மாளிகைகள், நெற்களஞ்சியங்கள், மண்டபங்கள் போன்றவை என்றும், வழிபாட்டியல் தொடர்புடைய கோயில்கள் (Religious Architecture) என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

கட்டடக்கலை சங்ககாலத்திலிருந்தே சிறந்தோங்கி வளர்ந்திருக்கிறது. கோயில்கள் அரண்மனைகள், மாளிகைகள், மண்டபங்கள் போன்ற கட்டடங்களைப்பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க அளவில் செய்திகள் கிடைக்கின்றன.

அரண்மனைகள்

குறித்த காலத்தில், சிற்ப நூல் வல்லுநர்கள் கயிறுகொண்டு திசை குறித்துத், தெய்வம் தொழுது, பின்பு அரசனுக்கு வேண்டிய மனைகளையும், மண்டபங்களையும் அமைத்தனர், அரண்மனைகள் சுற்றுமதில்களோடு கட்டப்பட்டிருந்தன. மதில்கள் வானைத் தீண்டும் அளவிற்கு உயர்ந்தும் அகன்றும் இருந்தன. முப்படையும் செல்லத்தக்க குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. சில வாயிற்கதவுகளில் இரும்பு உபயோகிக்கப்பட்டிருந்தது. யானைப் படைகள் கொடியோடு அவ்வழி சென்றன. அரண்மனை அந்தப்புரச் சுவர்கள் உயர்ந்தும் சிறந்த வேலைப்பாடுகளோடும் விளங்கின. சுவர்களில் வண்ணங் கொண்டு பூங்கொடிகள் தீட்டப்பட்டிருந்தன. தூண்கள் கருமையும், திரட்சியும் பளபளப்புங் கொண்டு விளங்கின.[1]

மதில்

உழிஞைப்போர் பற்றித் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. மதிலைவளைத்தலும், மதிலைக் காத்தலும் உழிஞைப் போராகும். மதில் மீது பலவகை இயந்திரப் பொறிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வரணுக்கு அருகில் அகன்ற ஆழமான அகழி இருந்தது.[2]

மாளிகைகள்

மன்னரும் செல்வரும் மாளிகைகளில் வாழ்ந்தனர். பூம்புகார், காஞ்சி, மதுரை போன்ற மாநகரங்களில் மாளிகையும், மாடமும் உயர்ந்தோங்கிக் காட்சி அளித்தன. இத்தகைய மாடத்தின் சிறப்பினை 'மழை தோயும் உயர் மாடம்,' 'முகில் தோய் மாடம்' விண்பொர நிவந்த வேயாமாடம்' என்று சங்க இலக்கியங்கள் கூறுவதால் விண்ணைத் தொடும் மாடமாளிகைகள் அமைந்திருந்தன என அறியலாம்.[3]

---

1. தமிழகக் கோயிற் கலைகள் — இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி — தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு - 1976.
2. தமிழர் நாகரிகமும், பண்பாடும் — அ. தட்சிணாமூர்த்தி — 1973.
3. தமிழகக் கோயிற் கலைகள் — தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு — 1976

நகரம்

தாமரை மலரை ஒத்து அமைந்த மதுரை மாநகரின் சிறப்பினைப் பரிபாடலால் அறிகிறோம். மலையை ஒத்த பெரிய இல்லங்களில் மக்கள் வாழ்ந்தனர். அத்தகைய மனைகளில் நிலா முற்றங்களும், காற்றும் வெளிச்சமும் நன்கு வரத்தக்க பெரிய சாளரங்களும் இருந்தன. மதுரைப் புறஞ்சேரியில் சமணர், பௌத்தர், அந்தணர் பள்ளிகள் முறைப்படி கட்டப்பட்டு இருந்தன.

நகரத் தெருக்கள் ஆற்றைப்போல நீண்டும், அகன்றும் அமைந்திருந்தன. இதனை 'ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு' என்றும் 'பூவின் இதழகத்தனைய தெரு' என்றும் இலக்கியம் கூறும்.[1]

சிலப்பதிகாரத்தில் உள்ள மதுரை வாயிலின் வருணனை குறிப்பிடத்தக்கது. பல வகைப் பொறிகளையுடைய நகர் வாயில், பண்டைய அரசின் பாதுகாப்பு ஏற்பாட்டைக் காட்டுவதுடன் பழந்தமிழரின் கட்டடக்கலை அறிவாற்றலையும் உணர்த்தும்.[2]

மிளையுங் கிடங்கும் வளைவிற்பொறியும்
கருவிரலூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறுவெந்நெயும் பாகடு குழிசியும்
காய் பொன்னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித்துலாமுங் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில்

— (சிலம்பு 15. 207-18)

பூம்புகார் நகரில் இருந்த மண்டபத்தை மகதநாட்டுத் தொழில் வினைஞரும் மராட்டியக் (மகாராட்டிரம்) கம்மரும், அவந்தி நாட்டுக் கொல்லரும், யவனத் தச்சரும் தமிழ் நாட்டுக் கட்டட அமைப்பாளரும் ஒன்று சேர்ந்து அமைத்தனர்.[3]

மகத வினைஞரும் மராட்டக்கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத்தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடுகூடி
கொண்டு இனிது இயற்றிய

— (மணிமேகலை 19. 107-115)

மதுரைக் காஞ்சி, 'விண்ணுற வோங்கிய பல்புடைப் புரிசை' என்பதால் மிக உயர்ந்த மாடங்கள் அமைந்த மதில்கள் இருந்ததை அறியலாம். வீடுகளில் காற்றுப் புகுவதற்கும் பல வழிகள் இருந்ததைச் 'சில் காற்றிசைக்கும் பல்புழை நல்லில்' என்ற அடி தெளிவுபடுத்தும்.

---

1. வரலாற்றுக் கட்டுரையும் பிறவும் - அ.கி. பரந்தாமனார் - 1965.
2. தமிழிலக்கியங்கள் காட்டும் கட்டட அடிப்படைகள் - வி. ஐ. சுப்ரமணியம். அதிட்டானங்கள் கருத்தரங்கு - தஞ்சாவூர் 1988.
3. சங்ககாலத் தமிழர் வாழ்வு - லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் - 1958.

அரண்மனை மட்டுமல்லாமல் வேறு பல கட்டடங்களைப் பற்றியும் சங்க இலக்கியங்களில் பரவலாகச் செய்திகள் காணப்படுகின்றன.

கலங்கரைவிளக்கம்

வானத்திற்கு முட்டுக் கொடுத்தது போன்று கலங்கரைவிளக்கம் உயர்ந்து நின்றது. இதில் ஏறிச் செல்ல ஏணி சார்த்தப்பட்டிருந்தது. வேயாத மாடத்தை இது கொண்டிருந்தது என்பதை பெரும்பாணாற்றுப் படை கீழ்வருமாறு கூறுகிறது.

வானமூன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றரும் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர்ஞெகிழி

மண்டபங்கள்

புகார் நகரில் பல மண்டபங்கள் இருந்தன. அவை எவ்வாறு அழகிய வேலைப் பாட்டுடன் கட்டப்பட்டிருந்தன என்பது பற்றியும், கட்டடம் கட்டுவதற்கு உரிய மனை மரபுடன் அவை கட்டப்பட்டன என்பதைப் பற்றியும் சிலம்பு கூறுகிறது.[1]

பொன்னினும் மணியினும் புனைந்தன ஆயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின்
துயர் நீங்கு சிறப்பினவர் தொல்லோர் உதவிக்கு
மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங்கு உயர்ந்தோர் ஏத்தும்
அரும் பெறன் மரபின் மண்டபம்

— *(சிலம்பு 5 105-110)*

நடன அரங்கங்கள்

பண்டைக் காலத்தில் நடன அரங்கங்கள் இருந்திருக்கின்றன. இவ்வரங்கங்கள் நடனமாடுதற்கு ஏற்றவாறு எவ்வாறு அமைக்கப்பட்டன என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன.[2]

சங்க காலத்தில் கட்டடங்கள் செங்கற்களாலும் மரத்தாலும் கட்டப்பட்டிருந்ததால் பெரும்பாலும் அழிந்துவிட்டன. அத்தகைய கட்டடங்களில் சில தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. செங்கமேடு (விருத்தாசலம் அருகில்), திருக்காம்புலியூர், அளகரை, உறையூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), பூம்புகார், கொற்கை, வசவசமுத்திரம், கரூர், அழகன்குளம், திருக்கோயிலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் வெளிப்படுத்தப் பட்ட கட்டடங்கள் பண்டைய கட்டடக்கலைச் சிறப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.[3]

கட்டடக்கலை வளர்ச்சி

சங்க காலத்திற்குப் பின்னர் தமிழகத்தை ஆட்சிபுரிந்த பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர, நாயக்க மன்னர்கள், மராட்டிய மன்னர்கள், சேதுபதி மன்னர்கள் போன்றோரும் தொடர்ந்து கட்டடக்கலை வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

---

1. கட்டடக்கலை - நடன. காசிநாதன் - தமிழக நுண்கலைகள் (பதி) வி. எம். ஞானப்பிரகாசம் க.சி. கமலையா, தமிழ்ப் பண்பாட்டு மன்றம் - சென்னை - 1978
2. நடன அரங்கங்கள் - டாக்டர் ஜான் ஆசீர்வாதம் - கலைமகள் இதழ் - 8/1990.
3. தொல்லியல் செய்திமடல் - சூன் 1994.

பல்லவர் காலத்தில் வழக்கில் இருந்த வாழ்வியல் கட்டடக்கலைக்கான சான்றுகள் யாதும் இதுவரைக் கிடைத்தில. பூம்புகாரில் கிடைத்திருக்கின்ற புத்தவிகாரம் பல்லவர் காலத்தின் தொடக்கக் காலத்தினைச் சார்ந்ததாக எடுத்துக்கொண்டால் சங்ககாலத்தை அடுத்த பல்லவர் காலத்திலும் வாழ்வியல் கட்டடங்கள் செங்கல் மற்றும் சுதையினால் மட்டுமே கட்டப்பெற்றிருந்தமைத் தெரியவருகிறது.

சோழ மன்னர்கள் தங்கி அரசாட்சி செய்த அரண்மனைகள் பற்றிக் கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன. சோழ மன்னர்களின் தலைநகர்களாக விளங்கிய தஞ்சாவூர், கங்கை கொண்டசோழபுரம், பழையாறை போன்றவற்றுள் கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழாய்வு மேற்கொண்டதில் பண்டைய அரண்மனைகள் எவ்வாறு கட்டப்பட்டன என்பதை உணர முடிகிறது. கங்கைகொண்ட சோழபுரத்தில் வெளிப்படுத்தப்பட்ட செங்கற் சுவர்கள், கண்டெடுக்கப்பட்டுள்ள ஓடுகள், இரும்பு ஆணிகள், வண்ணப்பூச்சு பூசிய காரைப் பகுதிகள் போன்றவை சோழ அரண்மனை எவ்வாறு எழிலார்ந்த முறையில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.[1]

பிற்காலத்தில் நாயக்க மன்னர்கள் திருச்சிராப்பள்ளி, மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், போன்ற இடங்களில் அரண்மனைகள் கட்டினார்கள். மதுரையில் இருக்கும் திருமலை நாயக்கர் அரண்மனை மதுரை நாயக்கர்கால கட்டடக்கலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. அரண்மனைகளை மட்டும் அவர்கள் கட்டவில்லை;[2] கோயில்களில் நெல் போன்ற தானியங்களைச் சேமித்து வைப்பதற்காக நெற்களஞ்சியங்களையும் அமைத்திருக்கின்றார்கள். தஞ்சையை அடுத்த திருப்பாலத்துறை, திருவரங்கம் கோயில், திருவானைக்கோயில், மதுரை அழகர் கோயில் போன்ற கோயில்களில் இன்றும் பண்டைய நெற்களஞ்சியங்களைப் பார்த்து மகிழலாம்.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் கட்டடக்கலை வரலாறு தனிச் சிறப்புடையது. இவர்களது கட்டடங்களை அரண்மனைகள், சத்திரங்கள், பாலங்கள், தேர்முட்டிகள், ஆற்றங்கரை மண்டபங்கள் என்று பலவகையாகப் பிரிக்கலாம். கருங்கல் கிடைக்காத தஞ்சை மாவட்டத்தில் செங்கற்களைக் கொண்டு கருங்கல்லால் எவ்வாறு கட்டுவார்களோ (கட்டடப்பகுதிகள் அமைத்து) அவ்வாறே தூண்களையும், சுவர்களையும் அமைத்து மண்டபங்கள், அரண்மனைகளைக் கட்டியுள்ளனர். தஞ்சாவூரில் உள்ள மராட்டிய அரண்மனை,[3] பட்டுக்கோட்டை அருகில் உள்ள மனோரா[4] ஒரத்தநாட்டில் உள்ள முத்தாம்பாள் சத்திரம், திருவிடைமருதூரில் உள்ள அரண்மனை மற்றும் தேர்முட்டி, திருவையாறில் உள்ள பாலங்கள் போன்றவைகளைக் குறிப்பிடத்தக்க சான்றுகளாகக் கொள்ளலாம்.[5]

இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்கவிலாசம் அரண்மனை சேதுபதி மன்னர்களின் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.[6]

இவர்களைத் தொடர்ந்து தமிழகத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர்களும் அரண்மனைகளைக் கட்டியுள்ளனர். பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்ட பொம்மன் அரண்மனை, எட்டயபுரம், உடையார் பாளையம் போன்ற ஊர்களில் காணப்படும்

---

1. இராசேந்திர சோழன் அகழ்வைப்பகக் கையேடு — மா. சந்திரமூர்த்தி, கி. ஸ்ரீதர் கா. நெடுஞ்செழியன்.
2. திருமலை மன்னர் கையேடு — செ. போசு, வெ. வேதாசலம்.
3. வரலாற்றில் தஞ்சை — கு. தாமோதரன் - 1984.
4. மனோரா — நடன. காசிநாதன் - 1979.
5. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்—செ. இராசு—தமிழ்ப் பல்கலைக் கழகம்-தஞ்சாவூர்-1987.
6. இராமலிங்கவிலாசம் அரண்மனை கையேடு — மா. கலைவாணன்.

பாளையக்காரர்களின் அரண்மனைகள் நீர்த்தேக்கம் (பூம்புகார்), தூம்பு (கங்கை கொண்ட சோழபுரம்) பிற்காலக் கல் தூம்புகள், வழிபாட்டியல் கட்டடங்கள் ஆகியவை தமிழகக் கட்டடக்கலை வளர்ச்சியின் தொடர்ச்சியை அறிந்து கொள்வதற்கு உறுதுணையாகத் திகழ்கின்றன.

சங்ககாலக் கோயில்கள்

தமிழகக் கோயில்கள், கட்டடக்கலை நுணுக்கமும் தனிச்சிறப்பும் வாய்ந்தவையாகும். சங்ககாலக் கோயில்கள் 'கோட்டம்', 'அம்பலம்' என்றெல்லாம் அழைக்கப்பட்டன. திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருஏரகம், பழமுதிர்ச்சோலை, திருத்தணி ஆகிய கோயில்களின் சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையில், பிறவா யாக்கைப் பெரியோன் (சிவன்), முருகன், பலராமன், திருமால், இந்திரன் ஆகியோர் கோயில்களில் திருவிழாக்கள் நடைபெற்ற செய்தி காணப்படுகின்றன. கனாத்திறம் உரைத்த காதையில், புகார் நகரில் அமரர் தருக்கோட்டம், வெள்ளை யானைக் கோட்டம், பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம், வச்சிரக்கோட்டம், புறம்பணையான் வாழ்க்கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக்கோட்டம், காமவேள் கோட்டம் போன்ற கோயில்கள் இருந்த செய்தி கூறப்படுகிறது.[1]

சங்ககாலக் கோயில்கள் பெரும்பாலும் செங்கற்களாலும், மரத்தாலும் கட்டப்பட்டதால் நாளடைவில் அழிந்துபட்டன.

முற்காலப் பாண்டியர், பல்லவர்கள் காலத்தில் மலையைக் குடைந்து கோயில்கள் எடுக்கப்பட்டன.[2] இதனை,

ஏதத் அநிஷ்டகம் அத்ருமம்
அலோகம் அசுதம் விசித்திர சித்தேந
நிர்மாபிதம் நிருபேண ப்ரும்மேசுவர விஷ்ணு
லக்ஷிதாயதனம்

என்ற மண்டகப்பட்டு குடைவரைக் கோயில் கல்வெட்டினால் அறியமுடிகிறது. இக்குடைவரையை எடுத்த முதலாம் மகேந்திரவர்மன் நான்முகன், திருமால், சிவபெருமான் ஆகிய முப்பெரும் தெய்வங்களுக்கும் கல் இன்றி, மண் இன்றி, உலோகம் இன்றி, சுதை இன்றி விசித்திர சித்தனாகிய தான் தோற்றுவித்ததாகக் கூறிக்கொள்கிறான்.

இக்குடைவரைக் கோயில்களை உருவாக்குவதற்காக மலையின் புறப்பகுதியைச் சதுரம் சதுரமாக வெட்டியெடுத்தனர். இதனை மாமல்லபுரத்தில் முற்றும் முடிவுறாத குடைவரை ஒன்றில் காணலாம்.[3]

பல்லவர்கள் குன்றை வெளிப்புறத்தில் செதுக்கி அமைத்த ஒற்றைக் கல் கோயிலையும், (Monolithic Temples) பல துண்டுக் கற்களைக் கொண்டு கட்டுவித்த கட்டுமானக் கோயிலையும் (Structural Temple) இங்கே காணலாம். மேற்காண்பவற்றுக்கு எடுத்துக் காட்டாக முறையே மாமல்லை ஐந்து ரதக் கோயில்களையும், கடற்கரைக் கோயிலையும் கூறலாம்.

பல்லவர் காலத்தில் கோயில் அமைப்பில் விமானம் உயர்ந்தும் கோபுரம் சிறிய அளவிலும் அமைக்கப்பட்டிருப்பதை கடற்கரைக்கோயிலிலும், காஞ்சி கைலாசநாதர்

1. சோழர்கலைப் பாணி — எஸ். ஆர். பாலசுப்ரமணியம் — 1966
2. ஓவியப்பாவை — இரா. நாகசாமி - 1979
3. மாமல்லை — இரா. நாகசாமி - 1968

கோயிலிலும் காணலாம். கடற்கரைக் கோயில் வாயிலில் அமைந்துள்ள கோபுரம் ஒரு நிலை உடையதாய் காணப்படுகிறது. இவ்வாறு ஒரு நிலை பெற்றிருக்கும் அமைப்பை 'துவார சோபை' என கட்டடக்கலை நூல்கள் கூறுகின்றன.[1]

சோழ மன்னர்கள் காலத்தில் கோயிற் கட்டடக்கலை தமிழகத்தில் உன்னத வளர்ச்சி அடைந்தது எனலாம். ஒன்று முதல் பல தளங்கள் உடைய விமானங்களை இக்காலத்தில் காணமுடிகிறது. முற்காலச் சோழர் காலத்தில் ஏனாதி, காளியாப்பட்டி, பனங்குடி, கண்ணனூர் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோயில்கள் ஏகதள விமான கற்றளிகளாகும். மேலும் கொடும்பாளூர், திருச்செந்துறை, சீழையூர், திருக்கட்டளை ஆகிய ஊர்களில் உள்ள கோயில்கள் இரண்டு நிலைக் கற்றளி விமானத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. தஞ்சாவூர், கங்கை கொண்டசோழபுரம், தாராசுரம், திரிபுவனம் ஆகிய கோயில்களின் விமானங்கள் பல தளங்களை உடையதாக விளங்குகின்றன.

கோயில் விமானங்கள் 1. போகம் 2. பத்ரம் 3 விசாலம் 4. சுவஸ்திகம் 5. கரம் 6. கண்டம் 7. தூங்கானை விமானம் 8. சுத்தவிமானம் 9. விருத்தம் 10. கல்யாண சுந்தர விமானம் 11. கோசல விமானம் 12. பத்ய பத்ர விமானம் 13. சுந்த விமானம் எனப் பதின்மூன்று வகைப்படும்.[2]

விமான உயர அமைப்பினைக் கொண்டு சாந்திகம், பௌஷ்டிகம், ஜெயதம், அத்புதம், சர்வகாமிதம் என்று ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.[3]

மேற்காணும் விமான அமைப்புகளை 1. நாகரம் 2. வேசரம் 3. திராவிடம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளில் அடக்குவர்.

நாகரம் என்பது சதுரவடிவானது. வேசரம் எனப்படுவது வட்ட வடிவமாகவோ, நீண்ட வட்ட வடிவமாகவோ அமையும். திராவிடம் என்பது ஆறு பட்டையாகவோ அல்லது எட்டு பட்டையாகவோ அமையும்.

சதுரவடிமாக அமைக்கப்படும் விமானம் சிவனுக்கும்;வட்டமாகவோ, நீண்ட வட்டமாகவோ அமைக்கப்படும் விமானம் திருமாலுக்கும் அமைப்பார்கள். இந்தியாவின் வடபகுதியிலுள்ள கோயில்களின் அமைப்பை நாகரம் என்றும், தென்பகுதியில் உள்ள கோயில்களின் அமைப்பைத் திராவிடம் என்றும், இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்ததை வேசரம் என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன. பொதுவாக மேற்குறிப்பிட்ட மூன்று அமைப்புள்ள விமானங்களையும் சோழர்காலக் கோயில்களில் காணமுடிகிறது.[4]

பொதுவாக தென்னகக் கோயில்கள் கருவறை, அந்தராளம், முகமண்டபம், மகா மண்டபம், திருச்சுற்று, பரிவாரக்கோயில், திருமதில், கோபுரம் என்ற அடிப்படையான அங்கங்களை உடையவையாகும். தொடக்கக் காலத்தில் கருவறை மற்றும் முகமண்டபத்தோடு கூடிய கோயிலைப் பார்க்க முடிகிறது. இக்கோயில்களில் முக்கிய ஆதார உறுப்புகளாக உபபீடம் அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி என்ற அங்கங்கள் உள்ளன.

பெரும்பாலான கோயில்களில் மேற்கூறிய உறுப்புகளில் உபபீடம் நீங்கலாக மீதி ஆறு அங்கங்கள் அமையப் பெற்றுள்ளன. இதனை ஷடாங்க விமானம் என்பர். ஒரு சில கோயில்

1. காசியபம் - பக்கம் - 503. சரசுவதி மஹால் நூலக வெளியீடு, தஞ்சை.
2. மயமதம் - சரசுவதி மஹால் நூலகம் வெளியீடு - தஞ்சாவூர்.
3. காசியபம் - ,, ,, ,, ,, - பக்கம் 283.
4. திருக்கோயில் விமானம் - கல்வெட்டு இதழ் 21 - வி. இராமதாஸ், ஸ்தபதி.

அமைப்பில் நான்கு அங்கங்கள் மட்டுமே இடம் பெறுவதாய் உள்ளது. எடுத்துக்காட்டாக மாமல்லபுரத்து ஐந்து ரதக் கோயில்களில் திரௌபதி ரதம் எனப்படும் கோயிலைக் கூறலாம்.

இக்கோயில் குடிசை வடிவில் அமைந்த கற்றளியாகும். இவ்வமைப்பில் பிரஸ்தரம், கிரீவம் இடம் பெறவில்லை. இதனைச் சதுரங்க விமானம் என்பர். பொதுவாக விமானம் என்பது அடித்தளம் முதல் ஸ்தூபி வரை உள்ள கட்டட அமைப்பே ஆகும். விமானம் என்பது கருவறை மேல் அமைக்கப்படும் கட்டட அமைப்பு என்று கூறுவாரும் உண்டு. பெரும்பாலான கோயில்கள் ஒரு கருவறை கொண்டதாய் அமையும். இதில் சில வேறுபாடு உள்ள கோயில்களும் உண்டு. உதாரணமாக கருவறை கீழே இல்லாமல் சற்று மேலே உள்ளதாய் எடுப்பர். இதனை மாடக்கோயில் என்பார்கள்.[1]

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோளீசற்கு
எழில் மாடம் எழுபது செய்துலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன்

என்று கோச்செங்கட்சோழனைத் திருமங்கையாழ்வார்ப் போற்றுவதை இங்கே நினைவு கூறலாம்.

மேலே சொல்லப்பட்ட கோயில்கள் யாவும் பீடம் முதல் ஸ்தூபி வரை கருங்கற்களால் ஆனவை. இவற்றைக் 'கற்றளி' என்பர். திருச்சிக்கு அருகில் உள்ள பராந்தக சோழன் காலத்தில் எடுக்கப்பட்ட திருச்செந்துறை கோயில் இறைவன் 'கற்றளிப் பெருமானடிகள்' என்று கூறப்படுவதும், இச்கோயிலை எடுப்பித்த பூதி ஆதித்த பிடாரியார் 'நாம் எடுப்பித்த திருக்கற்றளி' என்று பெருமை படப்பேசுவதும் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. இத்தகைய விமானத்தை 'புருசஹர்மியம்' என்று சிற்ப நூலார் கூறுவர்.[2]

யானையின் பின்பகுதி போன்று அமைக்கும் விமானத்தையே 'ஹஸ்தி பிருஷ்ட விமானம்' அல்லது 'கஜபிருஷ்ட விமானம்' என்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. இது 'தூங்கானை மாடம்' என்று தமிழில் வழங்கப்படுகிறது. தொண்டை நாட்டுக் கோயில்கள், பெரும்பாலும் இத்தகைய கட்டடப்பாணியிலேயே கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். திருவொற்றியூர், திருமழிசை, திருமுல்லைவாயில், இடையார்ப்பாக்கம்[3] போன்ற கோயில்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சில கோயில்கள் தேர் போன்ற வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை 'ரதக் கோயில்கள்' எனலாம். சிதம்பரம் அருகில் உள்ள மேலக்கடம்பூர், குடந்தை சாரங்கபாணி கோயில் போன்ற கோயில்கள் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். மேலக்கடம்பூர் கோயிலை, 'தென் கடம்பை திருக்கரக்கோயில்' என்று போற்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் தமது திருஅடைவு திருத்தாண்டகத்தின் ஐந்தாம் செய்யுளில் கோயில் கட்டட வகைகளின் பெயர்களைக் கீழ்க்காணுமாறு கூறுகிறார்.[4]

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடெட்டு மற்றும்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்

1. கோச்செங்கணானின் மாடக் கோயில்கள் - டாக்டர். இரா கலைக்கோவன் - கல்வெட்டு இதழ் 20.
2. காசியபம் - சரசுவதி மஹால் நூலகம் வெளியீடு - தஞ்சாவூர் - ப. 283.
3. இடையார்ப்பாக்கம் - கி. ஸ்ரீதரன் - கல்வெட்டு இதழ் 20.
4. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் - மயிலை. சீனி. வேங்கடசாமி - 1969.

இருக்கோதி மறையவர்கள் வழி பட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில்கள் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே.

இதன் மூலம் தமிழகத்தில் அப்பர் காலத்தில் பல்வகை விமான அமைப்பு உடைய கோயில்கள் இருந்ததை நம்மால் அறியமுடிகிறது.

சிவனுக்காக எடுக்கப்பட்ட கோயில் 'ஈசுவரகிருஹம்' அல்லது 'ஈச்சுரம்' என்றும் திருமாலுக்காக எடுக்கப்பட்ட கோயில் 'விஷ்ணு கிருஹம்' அல்லது 'விண்ணகரம்' என்றும் கூறப்படுவதை கல்வெட்டுகளினால் அறிகிறோம். காஞ்சிபுரத்தில் வைகுந்தப் பெருமாள் கோயிலில் மூன்று கருவறைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்துள்ளன. திருமாலுக்காக கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் நந்திவர்மனால் கட்டப்பட்ட இக்கோயில் 'பரமேச்சுர விண்ணகரம்' என அழைக்கப்படுகிறது. இம்மூன்று கருவறைகள், மூன்று உலகங் களையும், அங்கெல்லாம் பரம்பொருள் பரவி நிறைந்திருக்கிறது என்ற தத்துவத்தையும் அடக்கியுள்ளது எனலாம்.

பல்லவர் காலத்தில் விமானம் பல நிலைகளை உடையதாய் கட்டப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து முற்காலச் சோழர் காலக் கோயில்களிலும் விமானங்கள் பல்லவர் அமைப்பு முறையைப் பின்பற்றியே அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

கருவறையின் புறச்சுவரில் எந்தெந்தத் திசையில் என்னென்ன சிற்பங்கள் அமைக்க வேண்டும் என சிற்ப நூல்கள் கூறுகின்றன. இந்த உருவங்கள் அமைக்கப்படும் மாடத்தை 'தேவகோட்டம்' என்று அழைப்பர். முற்காலச் சோழர் கோயில்களில் தேவகோட் டங்களில் இடம்பெறும் தெய்வ உருவங்களில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. பொதுவாக தெற்கில் - தட்சிணாமூர்த்தி, மேற்கில் - அர்த்தநாரி அல்லது ஹரிஹரன், வடக்கில் பிரம்மா என்ற முறையில் அமைப்பதுண்டு. ஆனால் கீழ்க்கண்ட கோயில்களில் குறிப்பிடத் தக்க மாற்றங்கள் காணப்படுகின்றன.[1]

கோயில்	தெற்கு	மேற்கு	வடக்கு	கிழக்கு
துடையூர்	வீணாதர தட்சிணாமூர்த்தி	ஆலிங்கன சந்திரசேகரர்	பிரம்மா	— —
திருச்செந்துறை	ரிஷபாந்திகர்	—	—	—
லால்குடி	வீணாதரர்	—	பிட்சாடனர்	அர்த்தநாரி
எறும்பியூர்	தட்சிணாமூர்த்தி	ஹரிஹரன்	பிரம்மா	—
கீழையூர் இரட்டை கோயில்கள்	தட்சிணாமூர்த்தி	முருகன்	பிரம்மா நின்ற-அமர்ந்த நிலை	—
எறும்பூர்	தட்சிணாமூர்த்தி	சிவன் யோக நிலை	பிரம்மா	—
குடந்தை நாகேசுவர சுவாமி	தட்சிணாமூர்த்தி	அர்த்தநாரி	பிரம்மா	—

1. இக்கட்டுரை ஆசிரியர்களால் கள ஆய்வின்போது நேரில் கண்டு ஆய்வு செய்யப்பட்டது.

துடையூர், கீழையூர், எறும்பூர் போன்ற கோயில்களின் தேவகோட்ட சிற்பங்கள் அமர்ந்தும், யோக நிலையில் இருப்பதும் ஒரு தனிச் சிறப்பாகக் கருதப்படுகிறது. இவ்வாறு அமைத்திருப்பதின் அடிப்படை நோக்கம் மேலும் ஆய்வுக்குரியது. சோழர் குல அரசியான செம்பியன் மாதேவியாரால் எடுக்கப்பட்ட கோயில்களில் தேவகோட்டச் சிற்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு பல தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்டன. இது கட்டடக் கலையின் வளர்ச்சியில் ஒரு புதுமை. மேலும் முற்காலச் சோழர் கோயில்களில் கருவறையைச் சுற்றி பரிவார ஆலயங்கள் அமைக்கப்பட்டு விளங்குகின்றன. எடுத்துக் காட்டாக சிதம்பரம் அருகில் உள்ள எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயிலில் அஷ்ட பரிவாரக் கோயில்களை எடுப்பித்ததாக அக்கோயிலில் உள்ள பராந்தக சோழனின் கல் வெட்டால் அறிய முடிகிறது.[1] இவ்வாறு கோயில்களில் பரிவாரக் கோயில்கள் அமைக்கப் பட்டது கோயிலின் வளர்ச்சியில் மற்றொரு புதுமை எனலாம்.

இடைக்காலச் சோழர் காலத்தில் இராஜராஜசோழன் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டினான். இக்கோயில் கருவறை அமைப்பு சற்று புதுமையானது. உட்சுவர், புறச்சுவர் என்ற இரு பிரிவுகளைக் கொண்ட இச்சுவர்களின் மேல் விமானம் எடுக்கப்பட்டது இரண்டாம் தள உண்ணாழிகையின் நுழைவு வாயில் வழியே உள்ளே சென்று இவ்விமானத் தின் உட்பகுதியை அண்ணாந்து பார்த்தால் முழு விமானத்தின் உட்பகுதியைக் காண முடியும். விமானத்தின் உட்பகுதியை கண்ணுறும் ஒவ்வொருவரும் சோழர்காலக் கட்டடக் கலைஞரின் அளப்பறிய ஆற்றலை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.[2] இத்தகைய அமைப்பினை 'கதளிகா கரணம்' என்று சிற்பச் சொல் வழக்கில் கூறுவதுண்டு. அதாவது வாழைத்தாரை கூம்பு பகுதி மேலிருப்பது போல திருப்பிப் பிடித்தால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு இவ்விமானத்தின் உட்பகுதி அமைந்துள்ளது.[3]

இக்காலத்தில் அமைந்துள்ள கோபுரமானது விமானத்தைக் காட்டிலும் உயரம் குறை வானது. தஞ்சைக் கோயில் இரண்டு திருச்சுற்றுக்களை உடையதாயும், இரண்டு நுழைவு வாயிலை உடையதாயும் கட்டப்பட்டுள்ளது. நுழைவு வாயில் கோபுரங்களுக்கு கேரளாந்தகன் திருவாயில், இராஜராஜன் திருவாயில் என்று பெயர் சூட்டப்பெற்று அழைக்கப்பட்டு வந்துள்ளன. காசியப சில்ப நூலில் கோயிலினுள் இருந்து துவங்கும் நுழைவு வாயிலை 1. துவார சோபை 2. துவார சாலை 3. துவாரபிராசாதம் 4. துவார ஹர்மியம் 5. துவாரகோபுரம் எனப்பெயரிட்டுக் கூறப்பட்டுள்ளது.[4] தஞ்சைக் கோயிலில் காணப்படும் கோபுரங்களைத் துவார சோபை (இராஜராஜன் திருவாயில்) துவார சாலை (கேரளாந்தகன் திருவாயில்) எனலாம்.

பிற்காலத்தில் விமானங்களின் உயரம் குறைந்தும் கோபுரங்களின் உயரம் மிகுந்தும் கட்டப்பட்டுள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலக் கோபுரங்கள் அடிப்பகுதி அகலமாகவும், உயரம் சற்றுக் குறைவாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. திரிபுவனம், திருவாரூர் கோயில்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். விஜயநகர, நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோபுரங்கள் மிக உயர்ந்து காணப்படுகின்றன. கோபுரங்களின் முழு வளர்ச்சியை இக்காலத்தில் காணமுடிகிறது. கோபுரங்களில் ஸ்ரீகரம், ரதிகாந்தம், காந்த விஜயம், விஜய விசாலகம், விசாலாலயம், விப்ரதீகாந்தம், ஸ்ரீகாந்தம், ஸ்ரீகேசம்' கேசவிசாலகம், ஸ்வஸ்திகம், திசாஸ்வஸ்திகம், மாத்சம், மாத்ரகாண்டம், ஸ்ரீவிசாலம், சதுர்முகம் ஆகிய 15 வகைகள் பற்றி மயமதம் கூறுகிறது. தமிழகம் என்றாலே வானைத் தொடும் கோபுரங்கள் தான் நினைவுக்கு வரும். தமிழ்நாடு அரசின் அரசு சின்னத்தில்

1, எறும்பூர் - ச. செல்வராஜ் - தொல்லியல் ஆய்வுத் தொகுதி - ப. 48.
2. இராசராசேச்சுரம் - நடன. காசிநாதன் - 1984.
3. சோழமாதேவி திருக்கைலாயமுடையார் கோயில் அமைப்பு முறை - வே. இராமன் - ஸ்தபதி - கல்வெட்டு இதழ்-38.
4. காசியபம் - தஞ்சாவூர் சரசுவதி மஹால் நூலகம் வெளியீடு - ப. 503.

ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்தின் உருவமே இடம்பெற்றுள்ளது. கோபுரத்தையே இறைவனாகக் கருதி மக்கள் வழிபடுவர். இதனால்தான் "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்ற பழமொழி எழுந்தது எனலாம்.[1]

கோயில்கள் பிற்காலத்தில் பல திருச்சுற்றுகள், மண்டபங்கள், சன்னதிகள் ஏற்படுத்தப்பட்டு விரிந்து பரந்து காட்சி தருகின்றன. கோயில்கள் அமைப்பதற்கு பல்வகை வழிமுறைகளை அக்காலத்திய மக்கள் பின்பற்றியுள்ளனர்.

மனை ஆய்வு

வாழ்வதற்கும் வழிபாட்டிற்கும் என தேர்ந்தெடுக்கப்படும் இடங்கள் அதாவது மனைகள் நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டியவையாகும். எனவே நல்ல மனையைத் தேர்ந்தெடுப்பது மிகவும் இன்றியிமையாததாகும். மனையிடத்தின் அமைப்பு, நிலத்தின் உறுதி, சூழ்நிலை, மனைநோக்கு இவைகளை ஆராய்ந்த பின்னரே நல்லதொரு மனையைத் தேர்ந்தெடுத்தனர் நம் முன்னோர்.

மண்ணின் ஓசையால், மணத்தால், உணர்ச்சியால், வளத்தால், சுவையால், அமைப்பால் மற்றும் நிறத்தால் சிறந்த மனையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.[2] மண்ணின் மணம், சுவை மற்றும் நிறம் இவைகள் கட்டடத்திற்கேற்ற நல்ல மண், தீயமண்ணைக் கண்டு கணிக்க இயலும் என்பதனை இலக்கியங்களும் உணர்த்துகின்றன. "நாற்றமும் சுவையு மதுரமுமாய்', என்று கூறுவதை சிலம்பில் காண்கிறோம். "நீங்காத மதுரமும் பரிமளமும் பொருந்திய பூமியில் சகல சாதிகளும் வீடு கட்ட உத்தமம்" என்ற அடிகளும்; "தயிரொடு நெய் தேன் எண்ணெய் தாக்கிய உதிரத்தோடு, மயிர் பல சிறுமீன் பட்சி மற்றும் மோர் பொல்ல நாற்றம் பயிரொடு பலமும் காணார் பாழ்படும் மனை எடுக்கில்" என்ற அடிகளும் இன்னின்ன இயல்புடைய பூமி ஏற்புடையது, இன்ன நாற்றமுடைய நிலம் ஏற்புடையதல்ல எனத் தெளிவாக்குகின்றன.[3]

மேலும் நிலத்தை வன்பால், மென்பால், இடைப்பால் என மண்ணின் இயல்பால் மூன்று வகைப்படுத்தலாம். வன்பாலாவது ஒரு சதுர அடியில் ஒரு குழி தோண்டி அதனைத் தோண்டப்பெற்ற மண்ணினால் நிரப்பும் போது குழியின் மண் மிகுவது, மென்பாலாவது, குறைவது; இடைப்பாலாவது சரிசமமாக இருப்பது என்று கூறலாம். 'வன்பால்' நிலமே கட்டட அடிப்படைக்குச் சிறந்த நிலமாகக் கொள்ளப்பட்டது.

அளந்ததோர் குழியின் மண்ணை அகழ்ந்து அதன் மேலேயிட்டால்
வளர்ந்திடிற் செல்வ முண்டாம் ஒத்திடில் மிகுதி யில்லை
குளந்தனில் குறையு மாகிற் குறைந்திடும் சம்பத்து அன்றே
உளந்தனில் கருதி நல்லோர் உரைத்தனர் புவியின் மாதே.[4]

மேலும் அங்கு இவ்வாறு எடுக்கும் குழியில் அந்திப்பொழுதில் நீர் நிறைத்து, விடியலில் நீரின் அளவு கண்டு பயன் கணித்தலும் கூறப்பெறுகின்றது. தண்ணீர் இருந்தாலும் சேறாய் இருந்தாலும் சுபம் என்பதனை,

---

1. தமிழக கோபுரங்கள் சொல்லும் கதை - கீ. ஸ்ரீதரன் - தினமலர் 14-4-87.
2. மனை ஆய்வு முறை - வே. இராமன் - ஸ்தபதி - தொல்லியல் ஆய்வுத் தொகுதி.
3. தமிழிலக்கியங்கள் காட்டும் கட்டட அடிப்படைகள் - வி. ஐ. சுப்ரமணியம் - அதிட்டானங்கள் கருத்தரங்கு - தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் - 1988.
4, — மேற்படி —

நிறைய நீர் இட்டு வைத்து நீள்கதிர் எழுந்த போது
முறைமையாய் வந்து பார்த்தால் முப்பிடி நீரே நன்றாம்
தரையினில் வற்றியக்கால் தாழ்வுற பிளக்கும் ஆகில்
சிறையொடு நோயாம் என்று தெரிந்தவர் உரைத்த வாறே

என்ற பாடல் விளக்குகின்றது. இதனையும் நல்ல நிலத்தேர்ச்சிக்கு இலக்கணமாகக் கொள்ளலாம்.[1] இங்ஙனம் பல்வேறு ஆய்வுகளைச் செய்து நல்லதொரு மனையைத் தேர்ந்தெடுத்தனர் என்பதுத் தெளிவாகின்றது.

சிற்ப நூல்கள்

தொழில்திறன் படைத்தக் கலைஞர்கள் தாம் கையாண்ட அனுபவங்களைத் தொகுத்து நமக்கு இலக்கண நூல்களாகத் தந்து சென்றுள்ளனர். அந்நூல்களைச் சிற்ப நூல்கள் என்கிறோம். இச்சிற்ப நூல்கள், சிற்பம் மற்றும் கட்டடக் கலையின் அமைப்பை மிக விரிவாகக் கூறுபவைகளாகும். 'மானசாரம்' எனும் சிற்ப நூல் முப்பத்திரண்டு வகையானச் சிற்ப நூல்களின் பெயர்களைத் தருகின்றன. அவை முறையே, 1. விசுவகர்மீயம் 2. விஸ்வம் 3. விஸ்வசாரம் 4. பிரபோதம் 5. விருத்தம் 6. மயமதம் 7. துவஷ்டாதந்திரம் 8. மனுசாரம் 9. நளம் 10. மானவிதி 11. மானகல்பம் 12. மானசாரம் 13. பெகுஸ்ருதம் 14. சிருஷ்டம் 15. மானபோதம் 16. விஸ்வபோதம் 17. ஆதிசாரம் 18. விசாலாக்ஷம் 19. விஸ்வ காஸ்யபம் 20. வாஸ்துபோதம் 21. மகாதந்த்ரம் 22. வாஸ்துவித்யாபதி 23. பாராசரீயகம் 24. காலயூபம் 25. சைத்யம் 26. சித்திரம் 27. ஆவர்யம் 28. சாதக சாரசம்ஹிதை 29. பானுமதம் 30. ஐந்திரமதம் 31. லோகக்னம் 32. சௌரம் ஆகும். அங்ஙனமே 'மனுசாரம்' என்ற சிற்ப-கட்டடக்கலை நூலில் பதினெட்டு சிற்ப நூல்களின் பெயர்களைக் காண்கிறோம். அவை முறையே 1. ஈசானம் 2. சித்ரகாஸ்யபம் 3. பிரயோக மஞ்சரி 4. பெருஹிதம் 5. பௌத்த மதம் 6. கௌதமம் 7. குலாலம் 8. வாசிஷ்டம் 9. மனேகல்பம் 10. பார்க்கவம் 11. மார்க்கண்டம் 12. கோபாலம் 13. நாரதீயம் 14. நாராயணியம் 15. காஸ்யபம், 16. சித்ரயாமளம் 17. சித்ரபாகுல்யம் 18. தேசிகம் ஆகும். இவைகளில் பெரும்பாலானவை இன்றில்லை. இன்று நம்மிடையே கீழ்க்கண்ட நூல்களே காணக்கிடக்கின்றன. அவை முறையே மயமதம், விஸ்வகர்மீயம், மானசாரம், ஐந்திரமதம், மனுசாரம், காஸ்யபம், சாரஸ்வதியம், பிராம்மீயம், சகளாதிகாரம் எனக் கூறலாம்.[2]

கட்டடக்கலை நூல்கள் பற்றிய குறிப்பும், இக்கலை வல்லுநர் பற்றிய செய்திகளும் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இவை நிலத் தேர்ச்சியைத் தொடர்ந்து கட்டடம் கட்டும் முறைகளை அறிய உதவுகின்றன.

நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம், மயன்
பண்டிழைத்த மரபினது தான் . . .
மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத்து இடை நிலத்து இருந்துழி[3] . . .

எனும் இலக்கிய அடிகள் அக்காலத்தில் சிற்ப நூல்களும், சிற்பிகளும் சிறந்திருந்தனர் எனத் தெரிவிக்கின்றன.

இறைவனுக்குக் கோட்டமும், மன்னருக்கு அரண்மனையும், பெருமக்களுக்கு மாட மாளிகையும் நம் முன்னோர் திறம்பட வகுத்துள்ளனர் என்பதனைப் புகார், மதுரை, காஞ்சி போன்ற நகரங்களின் அமைப்பிலிருந்தும் அறியமுடிகின்றது.[4]

---

1. தமிழ் இலக்கியங்கள் காட்டும் கட்டட அடிப்படைகள் - வி. ஐ, சுப்ரமணியம் - அதிட்டானங்கள் கருத்தரங்கு - தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் - 1988.
2. சிற்பச் செந்நூல் - வை. கணபதி, ஸ்தபதி.
3. சிலப்பதிகாரம்.
4. தமிழக கோயிற் கலைகள்.

கலைவல்லுநர்

நிலம் கோணலின்றி அமையவும், அளவு வரையறுக்கவும் இன்றும் நூலிட்டுக் கட்டடப் பணித் தொடங்கப்பெறுகின்றது. நெடுநல்வாடை மனையை வருணிக்கும்போது,

ஒரு திறஞ் சாரா வரைநா ளமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து

எனக் கூறுகிறது. கட்டடக்கலை வல்லார்

மேலோர் விழையு நூனெறிமாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து . . .

எனச் சிலம்பில் சிறப்பிக்கப் பெறுகின்றனர்.

"இப்பெருந் திருநகர் படைப்பான் மயன் முதல் தெய்வத் தச்சரும். . . . " என்று நூலறி புலவர்-தெய்வத்தச்சர் எனவும் போற்றப்பட்டனர். கட்டடக்கலை வல்லாரை, தச்சர், கல்தச்சர், தச்சாசார்யன், சிற்பாச்சாரி, பெருந்தச்சன் என்றெல்லாம் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. சில கோயில்களில் அக்கோயிலைக் கட்டிய சிற்பியின் உருவத்தை அமைத்து சிற்பிக்குப் பெருமை சேர்ந்துள்ளனர் அக்கால அரசர்கள். நாகை காயிதேமில்லத் மாவட்டம் கோனேரிராஜபுரம் கோயிலில், அக்கற்றளியை செய்தவனின் உருவமும் அவன் பெயரும் கருவறையின் சுவரில் காணப்படுகின்றன.

சிதம்பரம் கோயிலின் வடக்குக் கோபுரத்தை கிருஷ்ண தேவராயர் கட்டுவித்தார் அக்கோபுரத்தின் நுழைவுவாயிலின் பக்கச் சுவரில் நான்கு சிற்பிகளின் உருவங்களைக் காணலாம், அவ்வுருவங்களுக்கு மேலே அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இத்தச்சர்கள் தற்காலத்தில் 'ஸ்தபதி' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஒரு குழுவாக இருந்து செயல்பட்டிருக்கின்றனர். இவர்களை ஸ்தபதி, சூத்ரகிராஹு, வர்த்தகி, தக்ஷகன் எனப் பிரிக்கலாம். ஸ்தபதி என்பவர் சிற்பநூல் வல்லுநர்களின் தலைவனாகவும், ஆசானாகவும் கருதப்படுகிறார். குறிப்பிட்ட அளவுகளுக்கேற்ப செதுக்கப்பட்ட கற்களையும், சிற்பங்களையும் உரிய இடத்தில் பொருத்தி கட்டடங்களை எழுப்பவல்லவர் வர்த்தகி எனவும், நூல்பிடித்து கல்லின்மீது வேண்டிய அளவுகளை குறியிட்டு கொடுப்பவர் சூத்ரகிராஹு என்றும் அழைக்கப்படுவர். பல்வேறு உருவங்களைச் செதுக்கும் வல்லமை படைத்தவர் தச்சர் ஆவார்.[1]

ஸ்தபதிகள் கோயிலை எழுப்ப ஓர் அளவுகோலை கையாண்டுள்ளனர். "நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும் கோல் இருபத்தி நான்கு விரலாக". . . . என்ற அடிகள் அரங்கத்தின் அளவுகோலை எடுத்துக்கூறும். இன்றைய நாளில் இவ்வளவு முறையினை அடி, மீட்டர் என அழைக்கின்றோம்.

8 அணு	—	1 தேர்த்துகள்
8 தேர்த்துகள்	—	1 இம்மி
8 இம்மி	—	1 எள்ளு
8 எள்ளு	—	1 நெல்
8 நெல்	—	1 விரல் என அளவீடு[2]

செய்து முழ அளவை கணித்துள்ளனர். அதாவது,

24 விரல்	கொண்ட	முழம்	—	கிஷகு
25 ,,	,,	,,	—	பிராஜாபத்தியம்
26 ,,	,,	,,	—	தனுர்முஷ்டி

1. தமிழக வரலாறு காட்டும் கோயில் திருப்பணிகள் - கி. ஸ்ரீதரன்.
2. சிலம்பு - அடியார்க்கு நல்லார் உரை.

27	விரல்	கொண்ட	முழம்	—	தனுர்கிரஹம்
28	''	''	''	—	பிராச்யம்
29	''	''	''	—	வைதேகம்
30	''	''	''	—	வைபுல்யம்
31	''	''	''	—	பிரகீர்ணம்[1]

என்று எட்டு விதமான முழக்கோல்களை கையாண்டுள்ளனர். 24 விரல்களைக் கொண்ட கிஷ்கு முழம் 33 அங்குல ஆங்கில அளவிற்குச் சமமானதாகும்.

சிதம்பரம் கோயிலில் கிழக்கு கோபுரத்தில் இரு சிற்பிகளின் சிற்பங்கள் காணப் படுகின்றன. அவர்களின் அருகில் அளவுகோல் ஒன்றும் காணப்படுகிறது. இந்த அளவு கோலைக் கொண்டே இக்கோபுரம் கட்டப்பட்டது எனக்கூறலாம். இதே போன்று காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயிலின் சுவரில் 'தச்ச முழம்' என்று பொறிக்கப் பட்டுள்ளதைக் காணலாம்.

கல் தேர்ந்தெடுத்தல்

கோயிற்கட்டடமும், வழிபாட்டிற்குரிய சிற்பங்களும் நீண்டகாலம் நிலைத்து நிற்க வேண்டியவைகளாகும். எனவே தேர்ந்தெடுக்கப்படும் கற்களை நன்கு பரிசோதித்து எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதில் கற்களின் நிறம், ஓசை, வடிவம், உற்பத்தி முதலானவற்றை ஆதாரமாகக் கொண்டு தேர்ந்தெடுத்தல் முறையாகும். மலைகள், கடற்கரை, தீர்த்தக்கரை, நதிக்கரை, பால்மரத்தடி, வனங்கள் ஆகியவிடங்களில் உற்பத்தி யாகியிருக்கும் கற்களே சிறந்தவையாகக் கருதப்படுகின்றது. கற்களை அதன் நிறத்தைக் கொண்டு வெள்ளை, சிவப்பு, கருப்பு, மஞ்சள், பச்சை என ஐந்து வகைப்படுத்துவர். கற்களில் ரேகைகள், புள்ளி, களங்கங்கள் இல்லாதவாறு தேர்ந்தெடுத்தல் முறையாகும் என சிற்ப நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. கற்களின் பலத்தையும், உறுதியையும் கொண்டு ஆண் கல், பெண் கல், அலி கல் எனப் பிரித்து எந்த கற்களில் என்ன வடிவங்கள் வடிக்கலாம் என்பதனை அச்சிற்ப நூல்கள் வலியுறுத்துகின்றன.[2]

ஆயாதிப் பொருத்தம்

கோயில்களை நிர்மாணித்து அங்கே இறைவனின் திருமேனிகளை முறைப்படி அமைத்து வழிபடுவதன் மூலம் மனிதன் அநேக நன்மைகளைப் பெறமுடியும். ஒரு கோயிலைக் கட்டுவதற்கு முன்பாக ஆயாதி இலக்கண விதிப்படி அளவு முறையைக் கணக்கீடு செய்வர். ஒரு கோயிலை எத்தனையோ அளவுகளில் எடுப்பிக்கலாம். ஆனால் அவை யெல்லாம் வழிபடுவோர்க்கு நன்மையைத் தரும் என உறுதியாகக் கூற இயலாது. அவற்றில் ஒரு சில நன்மைகள் தரும் என்றும், மற்றவை தீமைகளைத் தரும் என்றும் உறுதி யாகக் கூறலாம். ஓர் ஆண் மகனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியை பொருத்தம் பார்த்து தேர்ந்தெடுப்பது போல், ஊர் மக்களுக்கு நன்மையை நல்க கட்டட அளவினை ஆயாதி இலக்கணப் பொருத்தம் பார்த்துத் தேர்ந்தெடுப்பது முறையாகும். இதனையே ஆயாதிப் பொருத்தம் என்பர்.

ஆயாதிப் பொருத்தங்கள் பலவகைப்படும். ஆறு வகையான பொருட்களை மட்டும் ஆராய்வதை 'ஷடாயாதி' என்றும், பத்து பொருட்களை மட்டும் ஆராய்வதை 'தசாயாதி' என்றும், பதினாறு பொருட்களை ஆராய்வது 'ஷோடச ஆயாதி' என்றும், 'பூர்ண ஆயாதி' என்றும் கூறுவர். ஷடாயாதியில் அடங்கிய ஆறு பொருட்கள் முறையே ஆயம், வியயம், யோனி, தினம், வாரம், அம்சம் ஆகும். இவை ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகள் உண்டு. இவைகளையெல்லாம் முறையாகக் கணித சோதனைச் செய்து நன்மை தரும் அளவினைத் தேர்ந்தெடுப்பது தொன்றுதொட்ட வழக்கமாகும்.[3]

1. காசியபம் - தஞ்சாவூர் சரசுவதி மஹால் நூலக வெளியீடு – ப. 196.
2. கல் தேர்ந்தெடுத்தல் – தொல்லியல் கருத்தரங்கு தொகுதி – ச. குருசுவாமி, ஸ்தபதி.
3. சிற்பச் செந்நூல் – வை. கணபதி, ஸ்தபதி.

பதவின்யாசம்

திருக்கோயில் அமையும் இடத்தை 'வாஸ்து' எனக் கூறுவர். பிரதான மூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடத்தைக் 'கருவறை' என்றும் 'மூலஸ்தானம்' என்றும் கூறுவர். கருவறையை இயந்திர ஸ்வரூபமாகக் கொண்டு அதன் பிந்து ஸ்தானத்தில் நாதம்-பிந்து வடிவமான சிவலிங்கத்தை ஸ்தாபிப்பார்கள். மேலும் சில பிம்பங்களையும் இவ்விடத்தில் வைப்பதுண்டு. இவ்விடத்தை விடுத்து கருவறைக்குள் எவ்வெவ்விடங்களில் எந்தெந்த வழிபடு படிமங்களை ஸ்தாபித்தல் வேண்டும் என்றெல்லாம் சிற்ப நூல்கள் வரையறுத்துக் கூறுகின்றன. கருவறையின் உட்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் தளவரிசையின் மீது கிழக்கு மேற்குத் திசையைக் காட்டும் மைய ரேகையையும், தெற்கு வடக்குத் திசையைக் காட்டும் மையரேகையையும், நூலால் குறியீடு செய்வர். கிழக்கு மேற்கைக் காட்டும் மைய நூலுக்கு 'பிரும்ம சூத்திரம்' என்றும், தெற்கு வடச்கைக் காட்டும் மைய நூலுக்கு 'சோம சூத்திரம் என்றும் பெயர்.

இத்தள வரிசையில் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் சம இடைவெளி கொண்டதாய் ஒரு குறிப்பிட்ட அளவில் பல பகுதிகளாக - கட்டங்களாகப் பிரித்து குறியீடு செய்வர். இத்தகைய கட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் 'பதம்' என்று பெயர். அங்ஙனம் கருவறை பல பதங்களாகப் பிரிக்கும் முறையையே 'கருவறை பதவிந்யாசம்' என்பர். கருவறைப் பகுதியை இரு சமபாகங்களாகப் பிரித்து, வாயிலுக்கு அருகில் உள்ள முற்பாதியை விலக்கி பின்பகுதியையே பிம்ப ஸ்தாபனத்திற்கு உரியதாக எடுத்துக்கொள்வர். சோம சூத்திரமும், பிரம்ம சூத்திரமும் வெட்டிக் கொள்ளும் இடமான மையப்புள்ளி 'பிரம்ம ஸ்தானம்' என்று சொல்லப்படும். இம் மையத்திலேயே இலிங்கமும், ஆவுடையாரும் சேர்ந்த நிஷ்களத்ருமேனியை ஸ்தாபித்தல் வேண்டும்.[1]

மேலும் பின்சுவரையொட்டியமைந்த பதத்தை 'முதற்பதம்' என்று கொண்டு அதிலிருந்து முன்னோக்கி,

ஒன்பதாவது	பதத்தில்	-	பிரம்மா
எட்டாவது	பதத்தில்	-	சுப்பிரமணியர்
ஆறாவது	பதத்தில்	-	சரஸ்வதி
ஐந்தாவது	பதத்தில்	-	சூரியன்
நான்காவது	பதத்தில்	-	விநாயகர்
மூன்றாவது	பதத்தில்	-	பைரவர்
இரண்டாவது	பதத்தில்	-	தேவியர் படிமம் மற்றும் சாமுண்டி முதலிய தாமசப் பிம்பங்கள்
முதலாவது	பதத்தில்	-	கணங்கள் மற்றும் சிறுதேவதைகள்

ஸ்தாபிப்பது முறையாகும்.[2]

49	பதங்கள்	கொண்ட	பதத்திற்கு	'ஸ்தண்டிலம்'	என்றும்,
64	பதங்கள்	கொண்ட	பதத்திற்கு	'மண்டுகம்'	என்றும்,
81	பதங்கள்	கொண்ட	பதத்திற்கு	'பரமசாயிகம்'	என்றும்,
256	பதங்கள்	கொண்ட	பதத்திற்கு	'திரியுதம்'	என்றும் பெயர்.[3]

1. சிற்பச் செந்நூல் – வை. கணபதி, ஸ்தபதி.
2. — மேற்படி —
3. — மேற்படி — (வைணவ மரபு)

திருப்பணி

இவ்வாறு உரியமுறையில் கட்டப்படும் கோயில்களுக்கு அவ்வப்போது திருப்பணி செய்து பராமரிக்கப்படவேண்டியது அவசியமாகும். கோயிலுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணி செய்யவேண்டும் என்பது மரபு. எனவே திருப்பணியின் அவசியத்தை உணர்ந்த மன்னர்கள் அக்காலத்தில் பூசைக்காக தானம் அளிக்கும்போது திருப்பணிக்காகவும் சேர்த்துத் தானம் அளித்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு அளிக்கப்பட்ட நிலம் 'திருப்பணிப்புறம்' என்றும், 'புதுக்குப்புறம்' என்றும் அழைக்கப்பட்டு வந்தது. சில கோயில்களில் திருப்பணிகளைச் செய்வதற்கு சிற்பிகளும் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம் சிற்பவிருத்தி, சிற்பக்காணி, தச்சாச்சார்யக்காணி என்று அழைக்கப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்களின் கலைச்சிறப்பு மற்றும் பண்பாட்டுச் சிறப்பினை அறிந்துகொள்ளும் வகையில் மத்திய, மாநில தொல்பொருள் ஆய்வுத்துறையினர் உரியமுறையில் கோயில்களை மட்டுமல்லாமல் கோட்டை, அரண்மனை மற்றும் சத்திரம் போன்றவற்றைப் பழுதுபார்த்து பாதுகாத்து வரும் அரிய பணியை இங்கு சிறப்பாகக் குறிப்பிடலாம்.[1]

முடிவுரை

பண்டைக்காலத்தில் திருப்பணிக்கென்று நிலம் ஒதுக்கப்பட்டது போலவே இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் திருக்கோயில் வாரியம் ஒன்றினை அமைத்து, வரலாற்றுச்சிறப்பு மிக்க கோயில்களைத் திருப்பணி செய்ய போதுமான நிதி ஒதுக்கீடு செய்திருப்பது, எல்லோராலும் போற்றுதற்குரியதாக அமைகிறது.

---

1. தமிழக வரலாற்றுச் சின்னங்கள் – நடன. காசிநாதன் – தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.

ஓவியமும் காவியமும் 2

பண்டைய மனிதன் தன் வாழ்வோடு பின்னிப் பிணைந்த இயற்கை எழிலையும், காடு, மலை, விலங்கு, பறவை போன்றவற்றையும் நேரில் கண்டு, உணர்வால் உந்தப்பட்டு பெருமலைகளிலும், சிறு குன்றுகளிலும், இயற்கைக் குகைகளிலும் உருவாக்கிய வண்ணக் கோடுகளே உன்னத ஓவியங்களாயின. இவையே ஓவியக் கலையின் தொடக்கச் சான்றுகளாக அமைந்துள்ளன. இது மனித இனம் நாகரிகத்தின் தொடக்க நிலையில் இருந்த நாளிலிருந்து நடைபெற்று வந்துள்ளது.

கடந்த கால் நூற்றாண்டுக்குள் தமிழகத்தில் 25-க்கும் மேற்பட்ட இடங்களில் வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய பாறை ஓவியங்கள் கிடைத்துள்ளன. இவை விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், வடஆர்க்காடு அம்பேத்கார், திண்டுக்கல் அண்ணா, மதுரை, சேலம், தருமபுரி, நீலகிரி, கோவை ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன. மல்லப்பாடி கீழ்வாலை, செத்தவரை, பாடியேந்தல், கொல்லூர், ஆலம்பாடி, நாயனூர், சிறுமலை, திருமலை, கிடாரிப்பட்டி அழகர்மலை, வேட்டைக்காரன் மலை, தாளப்பள்ளி, சையது பாஷா மலை, மல்லசமுத்திரம், மகாராஜகடை, கொணவக்கரை, மாசினக்குடி சீகூர், சந்திரபுரம், இரத்தினகிரி, சென்னராயன் பள்ளி, நெகனூர்பட்டி ஆகிய ஊர்களிலுள்ள குகை மற்றும் பாறைகளில் இவை தீட்டப்பட்டு உள்ளன. வடக்கு ஸ்பெயினில் 1879-இல் கண்டுபிடிக்கப் பட்ட உலகப் புகழ்பெற்ற ஆல்டமிராவில் ஓவியங்களின் தரத்தினைத் தரத்தக்கனவல்ல எனினும், இவையனைத்தும் பண்டைய மக்களின் அளவிட முடியாத ஓவிய ஆற்றலை அறிந்து கொள்வதற்கான அடிப்படைச் சான்றுகளாக அமைந்துள்ளன. அவர்கள் தெரிந்தெடுத்த, வெள்ளை, செங்காவி, மஞ்சள் காவி போன்ற வண்ணங்களும், சித்தரிக்கப்பட்டுள்ள மனிதன், விலங்கு, பறவை முதலியவற்றின் இயக்கங்களும், அவ்வோவியங்களில் ததும்பும் உயிர்த் துடிப்பும் நம்மை வியப்பிலாழ்த்துவன. இத்தொல்லோவியங்கள் முற்கால மனிதனின் பண்பாட்டை, வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்தியாவில் எ. கார்லைல், ஜெ. காக்பர்ன் போன்ற தொல்லியல் ஆய்வாளர்கள் மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முதன்முதலாக கற்கால மனிதர்களின் ஓவியங்களைக் கண்டறிந்தனர். தொன்மையான குகை ஓவியம் 'பிம்பெட்கா' என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

மல்லப்பாடி

தமிழகத்தில் முதன்முதலாக 1980-இல் மல்லப்பாடியில் ஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டன.[1] பேராசிரியர் டாக்டர் கே. வி. இராமன் அவர்கள் இவ்வோவியம் குறித்து ஆய்வு செய்துள்ளார்.[2] குதிரை மீது அமர்ந்திருக்கும் மனிதன் கையில் எறிவேல் ஒன்றை ஏந்தி எதிரே உள்ளவனைக் குறி வைப்பது போன்று ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.[3] இதனை வேட்டைக் காட்சி என்றும் போர்க் காட்சி என்றும் கூறுவர்.[4] இப்பாறை ஓவியங்களுக்கு

---

1. இவ்வோவியங்களை 1980-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை கண்டுபிடித்தது.
2. 'Ancient Cave Paintings in Tamilnadu' — K. V. Raman — Man and Environment V. 1981.
   The Pre-historic Beginnings — K.V. Raman — Tamil Civilization - Vol. I.
3. Pre-Historic Paintings in Tamilnadu — Natana. Kasinathan — நுண்கலை, மலர்-9 இதழ்-7, பக்-47.
4. இரா. பவுன்துரை — தமிழகப் பாறை ஓவியங்கள்

அருகில் நடந்த அகழாய்வில் புதிய கற்கால கருவிகள் (Neolithic Stones) கிடைத்துள்ளன எனவே இவ்வோவியங்கள் புதிய கற்காலத்தைச் சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

கீழ்வாலை

விழுப்புரத்திலிருந்து சுமார் 23 கி. மீ. தொலைவில் உள்ள ஊர் கீழ்வாலை. இங்கு ரத்தப்பாறை என்னுமிடத்தில் ஓவியங்கள் உள்ளன. இவ்வோவியங்களை 1982-ஆம் ஆண்டு அனந்தபுரம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முதலில் கண்டுபிடித்தார்.[1] இங்குள்ள ஓவியங்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

முதல் பிரிவில் குதிரை மீது அமர்ந்த மனித உருவமும், அதனருகில் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்த நிலையில் உள்ள மற்றொரு மனித உருவமும், அதன் அருகில் முதல் மனிதனுடன் கைகளை இணைத்த நிலையில் உள்ள மற்றொரு மனித உருவமும் தீட்டப் பட்டுள்ளன. முதலிருவரின் இடையில் குறுவாள் காணப்படுகின்றன. எனவே இவ்வோவி யங்கள் இரும்பு காலத்தைச் சார்ந்தவையாகக் கருதப்படுகிறது. காலம் சுமார் கி. மு. 1000.[2]

இரண்டாவது பிரிவில் படகில் நான்கு மனித உருவங்கள் பயணம் செய்வது போலக் காணப்படுகின்றன. இவர்களில் நீண்ட துடுப்பை ஏந்தி நிற்பவன், தலைமை ஏற்றுப் படகை ஓட்டிச் செல்பவனாக இருத்தல் வேண்டும். இம்மனித உருவங்கள் தலையில் கொம்புகளும், நீண்ட மூக்குடன் கூடியனவாகவும் தோற்றமளிக்கின்றன.

மூன்றாவது பிரிவில் ஐந்து குறியீடுகள் ஒரே வரியில் உள்ளன.[3] ஏணி, உடுக்கை, சீப்பு, மத்தளம், நான்கு கோடுகள் கொண்ட ஒரு வட்டம் குறியீடுகளாகக் காணப்படுகின்றன. இந்த குறியீடுகள் சிந்துவெளி நாகரிக முத்திரையில் காணப்படுகின்றன. கீழ்வாலை ஓவியத்தில் காணப்படும் குறியீடுகள் மற்ற ஓவியங்களில் காணப்படுவதால் அவ்வோவியத்தை எழுதியவருடைய பெயராக இருக்கலாம் என்பர் சிலர்.[4] இதனை அறிஞர் சிலர் ஹரப்பன் காலத்ததாகக் கருதுவர்.

செத்தவரை

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் கீழ்வாலைக்கு அருகில், செத்தவரை அய்யனார் மலையில் பாறை ஓவியங்களைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. கீழ்வாலை ஓவியங்களில் மனித உருவங்களும், செத்த வரையில் விலங்கினங்களும் சிறப்புப் பெறுகின்றன.

செத்தவரையில் காணப்படும் ஓவியங்களில் அழகிய மானின் ஓவியமும், நீண்ட கோலும், மீன் வடிவமும் குறிப்பிடத்தக்கவை. அதன் கீழ் தீச்சுவாலையும் காட்டப் பட்டுள்ளது. இது மானின் இறைச்சியைக் கோலில் மாட்டித் தீயில் வாட்டுவது போல உள்ளது. மேலும் எருமை, காட்டுப்பன்றி போன்ற விலங்கினங்களும் மற்றும் சில குறியீடு களும் இங்கு தீட்டப்பட்டுள்ளன. மனிதனின் கை போன்ற ஓவியங்கள் பலவும் இங்கே உள்ளன. தமிழகத்தில் கிடைக்கப் பெற்ற பழமையான ஓவியங்களில் இங்குதான் மீன் வடிவ ஓவியங்கள் காணப்படுகின்றன.[5] மான், மீன் உருவம் போன்ற உருவங்களில்

---

1. தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம் — பி. எல். சாமி – பக். 35.
2. Pre-Historic Paintings in Tamilnadu — Natana. Kasinathan – நுண்கலை, மலர் 9, இதழ்-1, பக்-47.
3. Ibid. பக்-49.
4. தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம் – பக் 65–9.
5. தமிழகப் பாறை ஓவியங்கள் – பக் 79.

வெளிக்கோடுகள் செங்காவி வண்ணத்திலும், உட்புறம் வெள்ளை வண்ணத்திலும் தீட்டப்பட்டுள்ளன. காட்டெருமையின் உருவம் முழுவதும் செங்காவி வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் கீழ்வாலை ஓவியத்தை விடக் காலத்தால் முற்பட்டதாக எளிதில் கருதலாம். இவ்வோவியத்தின் காலம் கி.மு. 1500 என்பர்.[1] இதுவே எமது கருத்துமாம்.

ஆலம்பாடி

இவ்வூர் திருக்கோயிலூரிலிருந்து சுமார் 18 கி. மீ. தொலைவில் உள்ளது. ஆலம்பாடியில் மிகுதியாகக் காணப்படுவது விலங்கின ஓவியங்களே. அவற்றுள் மான், மாடு, காட்டுப்பன்றி போன்ற ஓவியங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. மற்றும் மனிதனின் முகமூடி போன்ற கோட்டோவியமும், மிருகங்களின் தோலை உரித்து உலர்த்துவது போன்ற ஓவியங்களும் உள்ளன. இங்கு இரண்டு அடுக்கு வண்ணப்பூச்சு காணப்படுகின்றது.[2] தொன்மையான ஓவியங்களின் எஞ்சிய தடயங்கள் மீது மீண்டும் மீண்டும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுவர்.

இங்கு ஒரு பசுவின் உடலில் குடல் தெரியும் வண்ணம் தீட்டப்பட்டுள்ள ஓவியம் சிறப்பு வாய்ந்தது. இத்தகைய எக்ஸ்ரே ஓவியங்கள் காலத்தால் தொன்மை மிக்கவை. தொன்மை மிக்க இவ்வோவியங்கள் உலோக காலத்தைச் சார்ந்தவையாகக் கருதலாம். இவை சதுர்பேட் நத்தல்லா[3] ஓவியங்களுடன் ஒப்பிடத்தக்கன.

கொல்லூர்

இது திருக்கோயிலூருக்கு அருகில் அமைந்துள்ள இடமாகும். இங்குள்ள பாறையில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களின் வடிவத்தைக் குறித்துத் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. இங்கு மிகப் பெரிய பல்லியின் வடிவத்தைக் காணமுடிகிறது. சிலர் இதனை உடும்பு என்றும் கூறுவர். உடும்பு வேட்டைக்கு உரிய விலங்காகும். தமிழகத்தில் காணப்படும் முதல் உடும்பு ஓவியம் இதுதான்.[4] கொல்லூர்ப் பகுதியில் புதிய கற்காலத்திற்குரிய பல தடயங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் கற்கருவிகள் குறிப்பிடத்தக்கவை. எனவே இவ்வோவியங்களை புதிய கற்காலத்தின் இறுதிப் பகுதியைச் சார்ந்தவையாகக் கருதலாம்.

பாடியேந்தல்

திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள பாடியேந்தல் அருகில் ஒரு குன்றின் மீது பல ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்கு முறுக்கேறிய குதிரை ஒன்றும், அடையாளம் காண முடியாத விலங்கின் மீது விங்கம் போன்ற உருவம் ஒன்றும், குறுவாள் ஒன்றும் காணப்படுகின்றன. மான் தோல் போன்ற வடிவுடைய விரிப்பையும் இங்கு காணமுடிகிறது. இது வரலாற்றுக் கால ஓவியமாகக் கருதப்படுகிறது.

நாயனூர்

திருக்கோயிலூர் வட்டம் தேவனூரை அடுத்துள்ள நாயனூர் மலையில் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியத்தைத் தொல்பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் கண்டுபிடித்தார்.[5] செங்காவி வண்ணத்தில் தீட்டப்பட்ட இவ்வோவியத்தில் பெரிய ஆடு ஒன்றின் உருவம் காணப்படுகின்றது. ஆடு பக்கவாட்டில் திரும்பிய நிலையில் செம்மாந்து நிற்கின்றது. இது மலைப்

1. Pre-Historic Paintings in Tamilnadu — Dr. Avvai. Natarajan, Natana. Kasinathan — Art Panorama of Tamils - p. 31.
2. தமிழகப் பாறை ஓவியங்கள் – பக் 95.
3. Pre-historic Indian Rock Paintings — Erwin Newmayer - p. 148.
4. தமிழகப் பாறை ஓவியங்கள் – பக் 96.
5. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் கண்டுபிடிப்பு - தினமணி 9-5-94

பகுதியில் வளரும் மலையாடு அல்லது வரையாடு என்னும் வடிவத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. குறிப்பாக செத்தவரையில் மான், மீன், எருமை, புலி, கரடி போன்ற விலங்குகளின் உருவங்கள் மட்டுமே உள்ளன. கீழ்வாலையிலும் மல்லப்பாடியிலும் குதிரையின் உருவங்களை ஓவியமாகக் காண்கிறோம். ஆலம்பாடியில் பசுவும் கன்றும் தீட்டப்பட்டுள்ளன. கோவை மாவட்டம் வேட்டைக்காரன் மலையில் யானையின் ஓவியம் கிடைத்துள்ளது. கிருஷ்ணகிரி வட்டம் சையது பாஷா மலையில் சேவல் - கோழிகளின் ஓவியங்கள் உள்ளன. ஆனால் இது காறும் ஆட்டின் ஓவியம் நாயனூரில் மட்டுமே கிடைத்துள்ளது. இவ்வகையில் நாயனூர் ஓவியம் தமிழகப் பாறை ஓவியங்களில் சிறப்பிடம் பெறுகிறது எனலாம்.[1] இங்கு ஆட்டின் உடற்பகுதி செங்காவி நிறத்தில் கோட்டோவியமாகவும், உட்பகுதி வெள்ளை நிறத்திலும் தீட்டப்பட்டுள்ளது. மேலும் ஆலம்பாடி, கொல்லூர், புறாக்கல், செத்தவரை ஆகிய ஓவியங்களும் இம்முறையிலேயே வரையப்பட்டுள்ளன. இது பண்டைய நாளில் இருந்த ஓவிய முறையை அறிந்து கொள்ள உதவுகிறது.

வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் அருகில் சென்னராயன் பள்ளியிலும்[2], சந்திர புரத்திலும்,[3] இரத்தினகிரியிலும்,[4] பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சென்ன ராயன் பள்ளியில் வேட்டையாடும் காட்சியும், குதிரை மீது அமர்ந்த மனித உருவமும் காணப் படுகின்றன.

இங்கு அடர்த்தியான வண்ணப்பூச்சு முறையோ, செந்நிறமான வலிமை மிக்க விலங்கின ஓவியங்களோ அதிகம் இல்லை. எனவே இவற்றைத் தொல்பழங்கால ஓவியங்களாகக் கூற இயலாது.

கோவை மாவட்டம் வேட்டைக்காரன் மலையில் மான், யானை, குதிரை போன்ற வன விலங்குகள் குழுவாக இடம்பெற்றுள்ளன. விலங்குகள் மட்டுமின்றி மனித உருவங்களும் வரையப்பட்டுள்ளன. எழுவர் ஒன்று சேர்ந்து கைகோர்த்து வரிசையாக செல்வது போன்ற ஓவியம் குறிப்பிடத்தக்கது.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே அமைந்துள்ள கொணவக்கரையிலும்[5] ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் மசினக்குடியில் வெள்ளை வண்ணத்தில் தீட்டப் பட்டுள்ள ஓவியங்கள் காணப்படுகின்றன. இவற்றில் யானை, புலி, மான், மயில் மீது அமர்ந்து வரும் மனித உருவங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை இவ்வாகனங்களுக்குரிய தெய்வ உருவங்களாகக் கருதப்படுகின்றன. எனவே இவை கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த வையாகக் கருதப்படுகின்றன.[6] இவை வேட்டைக்காரன் மலை ஓவியங்களை ஓரளவு ஒத்துள்ளன எனினும் காலத்தால் அவற்றைவிட பிற்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது.

---

1. 'நாயனூர்ப் பாறை ஓவியங்கள்' – மா. சந்திரமூர்த்தி, விழுப்புரம் இராமசாமி படையாட்சி யார் மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கில் 27–5–94 அன்று படிக்கப்பட்ட கட்டுரை.
2. தமிழகப் பாறை ஓவியங்கள் – பக் 94.
3. இவ்வோவியத்தை 1989–ஆம் ஆண்டு அச்சிறுபாக்கம் தாமரைக்கண்ணன் கண்டுபிடித் தார். தினமணி, 8–5–1989
4. இவ்வோவியத்தை 1994–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் ஆர்க்காடு அகழ்வைப்பகக் காப்பாட்சியர் திரு. மா. கலைவாணன் மற்றும் ஆசிரியர் திரு. ப. வெங்கடேசன் இருவரும் கண்டுபிடித்துள்ளனர்.
5. தமிழகத்தில் பெருங்கற்கால ஓவியங்கள் – கே. எஸ். சம்பத் - தொல்லியல் ஆய்வுத் தொகுதி - பக் 57-62.
6. Art Panorama of Tamils – p. 32

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரிக்கு அருகே உள்ள மகாராஜக் கடை, அங்கணநாச்சி மலையில் பண்டைய ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.[1] இவை பெருங்கற்காலக் கல்திட்டைகளின் பலகைக் கற்களில் காணப்படுகின்றன. இவற்றில் குதிரையில் சவாரி செய்யும் வீரர், வில் ஏந்திய வீரன், இடுப்பில் குறுவாள் ஏந்திய வீரன், காட்டுக் கோழி ஆகியன குறிப்பிடத்தக்கவை. மல்லசமுத்திரத்திலும் சில பழைய ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள. இவையும் வெள்ளை வண்ணத்தில் கல்திட்டைகளின் மீது தீட்டப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் தாளப்பள்ளியிலும் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பாண்டி மண்டலத்தில் திண்டுக்கல் அருகில் உள்ள சிறுமலைப்பகுதியில் பல ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியங்களை மதுரைப் பேராசிரியர். டாக்டர். விஜய வேணு கோபால் அவர்கள் கண்டுபிடித்தார். இவ்வோவியங்களில் வேட்டையாடுதல், விலங்குகளின் சண்டை, மனிதர்கள் சமய சடங்குகளில் ஈடுபட்டிருத்தல், காட்டுப் பூனை ஒன்றைப் பலியிடல் போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இங்குள்ள மானின் உருவ அமைப்பு பிற குகை ஓவிய அமைப்பினை ஒத்துள்ளது. இக்கண்டுபிடிப்பினைத் தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் கிடாரிப்பட்டி, அழகர் மலை, திருமலை, கருங்காலக்குடி, திருவாதவூர், நாகமலை, திருமயம் கோட்டை போன்ற பகுதிகளில் குகை ஓவியங்களும், பாறை ஓவியங்களும், குகைத்தள ஓவியங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[2]

தமிழகத்தின் தொல்மாந்தர் தம் பண்பாட்டு வரலாற்றை இவ்வோவியங்கள் வெளிப் படுத்துகின்றன என்பதோடு பண்பாட்டுப் பாதையில் அடியெடுத்து வைத்த நம் முன்னோர் ஓவியத்தின் வழியேதான் முதன் முதலில் தம் உணர்வுகளை வெளிப்படுத்தினர். அந்த வெளிப்பாடே அவர்களை நாம் உணர சிறந்ததோர் சான்றாக அமைந்துள்ளது என்பது சிறப்பிற்குரியது.

சங்க இலக்கியங்களில் ஓவியம்

சங்க இலக்கியங்கள், ஓவியக் கலையின் சீர்சான்ற மரபினை நமக்கு எடுத்தியம்பு கின்றன. ஓவியம், ஓவியன் அவை தொடர்பான செய்திகள் ஆகியவை இக்கால இலக்கியங் களில் நிரம்பக் காணப்படுகின்றன.

ஓவியன்

வண்ணங்களின் துணை கொண்டு எண்ணங்களுக்கு உயிர் கொடுப்பவன் ஓவியன் என்றழைக்கப்பட்டான். இவனே கண்ணுள் வினைஞர், வித்தகர், சித்திரக்காரர் என்று அழைக்கப்பட்டதையும் காண்கிறோம். ஓவிய நூலில் புலமை பெற்றவன் 'ஓவியப் புலவனென்றும்', அக்கலைஞர் குழாம் 'ஓவியமாக்கள்' என்றும் சங்க இலக்கியங்களில் கூறக் காண்கிறோம். இத்தகைய கண்ணுள் வினைஞரை "நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்" என்று நச்சினார்க்கினியர் கூறுவர்.

ஓவியம்

பல வண்ணக் கலவையால் துகிலிகைக் கொண்டு படைக்கப்பட்ட கண்கவர் காட்சி ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், பாடாம், வட்டிகைச் செய்தி என்றும் அழைக்கப்பட்டன.

ஓவியத்தின் வாயிலாகத் தொல் மாந்தர் கருத்துக்களைப் புலப்படுத்தினர். காலப் போக்கில் இவ்வோவியங்களே வரிவடிவானமையை வரலாறு காட்டும். இவற்றை ஓவிய எழுத்துக்களென்பர். இவ்வகையில் எழுத்து என்ற சொல் சங்க இலக்கியங்களில் ஓவியம் என்ற பொருளிலும் வழங்கப்பட்டமையையும் அறியமுடிகிறது.

1. இதனைச் சிதம்பரம் தொல்பொருள் அலுவலர் திரு.சா. கிருஷ்ணமூர்த்தி கண்டுபிடித்தார். கல்வெட்டு இதழ் 20 – பக். 32.
2. பாண்டிமண்டலத்தில் குகை ஓவியங்கள் - நா. சுலைமான் – நுண்கலை, மலர் 7 – இதழ் 2 பக் 26,32

ஓவியங்கள் மாடத்திலும், கூடத்திலும், மண்டபத்திலும், அம்பலத்திலும் தீட்டப் பெற்றிருந்தன என்பதைச் 'சித்திரக் கூடம்', 'சித்திரமாடம்', 'எழுத்து நிலை மண்டபம்,' எழுதெழில் அம்பலம் என்ற சொற்களால் அறிகிறோம். கலையுள்ளங் கொண்ட பாண்டிய மன்னனொருவன் சித்திர மாடத்தில் இறந்து பட்டான் என்பதைச் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று புறநானூறு குறிக்கிறது. அதுபோன்று அரசர் தம் அரண்மனை அந்தப்புரங்களிலும் பலவண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன என்பதை நெடுநல்வாடை வரிகள் நமக்குத் தெளிவாக்குகின்றன. மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் திருக்கோயில் சுவர்களில் பலவகைச் சித்திரங்கள் வரையபெற்றிருந்தன என்பதை,

இருசுடர்நேமி
ஒன்றிய சுடர்நிலையுள் படுவோரும்
இரதிகாமன் இவனிவன் எனா அ
விரகியர் வினவ வினாவிறுப்போரும்
இந்திரன் பூசை இவளகலிகை யிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென்றுரைசெய்வோரும்
இன்ன பல பல எழுத்து நிலை மண்டபம்[1]

என்ற பாடல் வரிகளால் அறிகிறோம், மேலும் மணிமேகலையில்,

சுடுமண் ணோங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியங் கண்டு நிற்குநரும்

என்று செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும், மாடங்கள் மீதும் வானவர் முதல் எல்லா உயிர்களையும் குறிக்கத்தக்க ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன என்பதை அறிகிறோம். சுடுமண் சுவர்கள் மீது வெண்சுதை பூசினர். வெண்சுதை மீது செஞ்சாந்து கொண்டு பூசினர். இதன் மேல் அழகிய பூங்கொடிகளை ஓவியமாகத் தீட்டினர் இத்தகைய சுவர்கள் செம்பைப் போன்று உறுதி படைத்ததும், கலையழகு கொண்டதுமாக அமைந்திருந்தன.

சுவர்களில் மட்டுமல்லாது திரைச் சீலைகளிலும் கிழிகளிலும் கவின்மிகுக் காட்சிகள் தீட்டப்பட்டன. நாடக அரங்குகளில் திரைச் சீலைகளில் பல வண்ணங்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டன. இதனை 'ஓவிய எழினி' என்று இலக்கியம் கூறும். மணிமேகலை ஆசிரியர்,

செருந்தியும் வேங்கையும் பெருஞ் சண்பகமும்
எரிமல ரிலவனும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கை படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்

(மணி. மலர்வனம்: 165-69)

என்கிறார்.

---

1. பரிபாடல் 19 : 46-53

புனையா ஓவியம்

வண்ணங் கலவாமல் வடிவம் மட்டும் கரித்துண்டுகளால் கோடுகளாகக் காட்டப் படுதலைப் புனையா ஓவியம் என்பர். கி பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் பின் பற்றப்பட்ட இம்முறை (கரித்துண்டு ஓவியம்) இன்றைய 20-ஆம் நூற்றாண்டில் 'மென் கோட்டு ஓவியம்' என்ற பெயரில் நடைமுறையில் இருத்தல் குறிப்பிடத்தக்கது.[1] பொது வாக ஓவியன் தான் எண்ணிய படத்தை வண்ணம் புனைந்து தீட்டுவதற்கு முன் கற்பனை ஓவியத்தைப் புனையா ஓவியமாகத் தீட்டுதல் பண்டைய வழக்கம். இத்தகைய புனையா ஓவியத்தைப் 'புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்' என நக்கீரரும், புனையா ஓவியம் போல நிற்றலும்' எனச் சாத்தனாரும் கூறியுள்ளமை இங்கு நோக்கத் தக்கது.

சங்ககால மக்கள் வீட்டையும் ஓவியங்கொண்டு அலங்கரித்தனர். 'ஓவத்து அன்ன வினைபுனை நல் இல்' (அகம் 98:11) என்று செல்வர் தம் இல்லம் சிறப்பிக்கப்பட்டிருத்தல் காணலாம். 'ஓவத்தன்ன இடனுடைவரைப்பிற் புறம்' என்று புறநானூறும் புகழ்ந்து கூறும். மேலும் சங்ககால ஓவியர்கள் இயற்கைக் காட்சிகள், சமுதாய வாழ்க்கை என்றிவற்றை மட்டுமன்றி, சோதிட, வானநூல் மற்றும் புராண இதிகாசங்களையும் கற்றறிந்து அழகுறத் தீட்டினர். ஆடு முதலான பன்னிரண்டு ராசிகளையும், விண் மீன்களையும் வரைந்ததை,

புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பி னாடு தலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி, நெடிதுயிரா[2]

என்று நெடுநல்வாடை கூறுகிறது.

சங்ககாலச் சாதாரண நிலையில் இருந்த மகளிரும், பெருங்குடிப் பெண்டிரும், ஆடல் அணங்குகளும் ஓவியந் தீட்டினர். நாட்டிய மகள் மாதவி ஓவியக் கலையை நன்கு அறிந் திருந்தாள் எனச் சிலம்பு செப்பும்.

பல்லவர் ஓவியங்கள்

தென்னிந்திய முற்கால அரச பரம்பரையினரில் பல்லவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள். இந்த வழியினரில் சிறந்தவன் சிம்ம விஷ்ணுவின் பேரனான முதலாம் மகேந்திரவர்மன் ஆவான். அவன் விசித்திர சித்தன், சித்திரகாரப்புலி, மத்த விலாசன், சேத்தகாரி[3] போன்ற பல விருதுகளைக் கொண்டிருந்தான். விருதுகளில் சில அவனது கவின்கலை உணர்வைச் சுட்டிக் காட்டுவன. அவன் கட்டடக்கலை வல்லுநன், கவி, ஓவியன், உரையாசிரியன், சகல கலா வல்லுநன். அவன் 'தக்ஷிண சித்திரம்' எனும் ஓவிய நூலுக்கு உரை எழுதினான் என மாமண்டூர்க் கல்வெட்டுக் கூறும். (வ்ருத்திம் தக்ஷிண சித்ராக்யம்)[4]

பல்லவர் காலப் பழைய கோயில்களுக்கு வண்ணம் தீட்டப் பெற்றிருந்தன என்பதற் கான சான்றுகளை மாமண்டூர், மாமல்லபுரம் முதலிய இடங்களிலுள்ள குடைவரைக் கோயில்களில் காணலாம்.[5] ஆங்காங்கே சிறு வண்ணப் பகுதிகள் அவைகளில் தென் படுகின்றன.

---

1. சங்க காலக் கலைகள் – மா. சந்திரமூர்த்தி – தமிழகக் கோயிற் கலைகள், பக். 11
2. நெடுநல்வாடை வரிகள் 159 – 62
3. Cave temples of the Pallavas – K. R. Srinivasan, Archaeological Survey of India, p. 5
4. பல்லவ மகேந்திரவர்மன் - தி. நா. சுப்பிரமணியன், அல்லயன்ஸ் கம்பெனி, பக். 78.
5. - மேற்படி - பக். 103

எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராஜசிம்ம பல்லவன் என்னும் மற்றோர் அரசனால் தரையிலும், கடற்கரையிலும் மலையிலுமாக மூன்று பெருங்கோயில்கள் எடுக்கப் பட்டன. அவை காஞ்சி, மாமல்லை, பனைமலை ஆகிய ஊர்களில் மாபெரும் கலைச் சிகரமாக விளங்கிவருகின்றன. காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தை உருவாக்கும்போது அவன் அரசி ரங்கபதாகையும் அவனுக்கு உறுதுணையாக நின்றாள். அக்கோயில் முழுதும் ஓவியம் தீட்டப்பெற்று ஓவியச் சிகரமாகத் திகழ்ந்தது. தமிழகத்தில், இன்று எஞ்சியுள்ள ஓவியங்களில் உன்னத படைப்பு என்று போற்றத் தக்கவை, இம்மன்னன் காலத்து ஓவியங்களே எனலாம்.

புகழ்மிகு ஓவியங்கள்

இவ்வோவியங்கள் காஞ்சி கைலாசநாதர் கோயில் திருச்சுற்றில் எடுப்பிக்க பெற்றுள்ள சிற்றாலயங்களில் ஒரு சிலவற்றில் மட்டுமே முன்பு காணப்பட்டன. இவற்றைப் பேராசிரியர் மூவோ துப்ராய் அவர்கள் முதலில் கண்டுபிடித்தார்.[1] தொடர்ந்து டாக்டர் எஸ். பரமசிவம் அவர்கள், இங்கு ஓவியம் தீட்டுவதற்கு எவ்வகை பொருட்களையும் முறைகளையும் கையாண்டனர் என ஆய்வு செய்தார்.[2] தொடக்கத்தில் அவர்களுக்கு இங்கு கிடைத்த ஓவியத் தடயங்கள் மிகமிகக் குறைவே.

1964-ஆம் ஆண்டு முதல் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர், இங்கு இரசாயன முறையில் பல இடங்களைத் தூய்மை செய்யத் தொடங்கினர். அதனால் இக் கோயில் எடுப்பிக்கப் பெற்றபோது கோயில் முழுவதும் அழகிய வண்ணங்களால் ஓவியம் தீட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து உறுதிப்பட்டது.[3] இதன் பயனாகப் பல சிற்பங்களின் மேல் எஞ்சியுள்ள ஓவியங்களும் சுவரில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் வெளிக் கொணரப்பட்டுள்ளன. சிற்பங்கள் மீதும் சிற்றாலயச் சுவர்கள் மீதும் ஓவியம் தீட்டும் வழக்கம் இருந்ததை அறிய முடிகிறது.[4] கொற்றவை, இலக்குமி முதலிய எழிலார்ந்த சிற்பங்கள் மீது தீட்டப்பட்ட வண்ணங்கள் இப்போது தெளிவாகத் தெரிகின்றன. தென் புறத்தும், மேற்புறத்தும் உள்ள சிற்றாலயங்களின் சுவர்களில் தீட்டப்பட்ட ஓவியங்களும் நன்கு தூய்மை செய்யப்பட்டுள்ளன. தூய்மை செய்யப்பட்டதால் பல்லவர் காலத்திலிருந்து இன்றுவரை நான்கு முறை இக்கோயிலில் ஓவியப் பணி நடந்திருக்கிறது என்றும்; முன்னர் இருந்த ஓவியங்களின் மேல் மீண்டும் ஓவியங்கள் தீட்டியிருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது. தற்போது நான்கு அடுக்கு ஓவியங்கள் கிடைத்துள்ளன.[5]

இவற்றில் மேற்குப் புறத்தே இருக்கும் சிற்றாலயங்களின் அடிப்பகுதியில் பல்லவர் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்கள் மிகவும் எழில் வாய்ந்தவையாக விளங்குகின்றன.

எழில் வாய்ந்த சோமாஸ்கந்தரின் உருவம் ஒன்று *41*-வது சிற்றாலயத்தில் தீட்டப்பட்டுள்ளது.[6] இவ்வோவியத்தில் சிவனும் உமையும் அமர்ந்த கோலத்தில் உள்ளனர். இருவருக்கும் நடுவே குழந்தை முருகன் காட்டப்பட்டுள்ளான். உமையின் அருகில் அவளது அழகிய பணிப்பெண். இவை யாவும் ஓவியச் சிதைவுகளாக இருப்பினும் இராஜசிம்மன் காலத்து ஓவியக் கலையை உலகோர்க் குணர்த்தும் உறுதியான சான்றுகளாக உள்ளன.

---

1. On his Discovery of Paintings in the Kailasanatha Temple - The Hindu, Illustrated Weekly - Feb. 8, 1931.
2. An Investigation into the Methods of the Mural Paintings - S. Paramasivam, Jour. Ind. Soc. Ori. Art. VII.
3. Mural Paintings at Kailasanatha temple work under progress - A. K. Gupta and V. Ramasubramanian, South Indian Studies II, pp. 141-46
4. Tamil Paintings - R. Nagaswamy - Splendours of Tamilnadu - p. 2, MARG Publications
5. தமிழ்நாட்டு ஓவியங்கள் - மா. சந்திரமூர்த்தி – தமிழகக் கோயிற் கலைகள், பக். 103
6. South Indian Paintings – C. Sivaramamurti, pp. 64, 65, fig. 18, 19

இங்கு பாசமிகு பெற்றோரின் இடையே தோன்றும் குழந்தை கந்தன், தன் குறுந் தலையில் சிறிய கிரீடம் அணிந்து தாயின் மடியில் சாய்ந்து கொண்டு, தந்தையை அர்த்த பாவம் நிரம்பிய பார்வையுடன் பார்க்கிறான். அருகே அழகே உருவாகத் தோன்றும் அன்னையின் வலக்கரம் அக்குழவியை அன்போடு அணைக்கிறது. இது குழந்தைப் பருவத்தின் மகத்தான சித்தரிப்பாக அமைகிறது. இந்திய ஓவியக்கலைப் படைப்புகளில் குழந்தை கந்தன் இங்குதான் முதன்முதலில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளான். இங்கு இறைக் குடும்பமாகத் தோன்றும் அன்னையும் அத்தனும் தம் மரபுக் கொழுந்தின் மீது வாரிச் சொரியும் பாசம் முழுவதையும் நேர்த்தியான கோடுகளைக் கொண்டு மிக மென்மை யாகவும் இனிமையாகவும் வெளிப்படுத்தியுள்ள ஓவியனின் தூரிகை ஆற்றலை அதி அற்புதம் என்றே கூறலாம்.

பல்லவர் கலையில் சோமாஸ்கந்த உருவம் தனி விருப்பத்துக்குகந்த பொருள் என்பதையும், ஓவியத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கும் உருவம் இது ஒன்றுதான் என்பதையும் நாம் கண்ணுறும்போது பல்லவர் காலக் கலை பற்றிய ஆராய்ச்சிக்கு இது எவ்வளவு இன்றியமையாதது என்பதைச் சரியாக மதிப்பிடலாம்.

பனை மலை

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் பனைமலை தாளகிரீசுவரர் கோயில், பல்லவ மன்னன் இராஜசிம்மனின் மற்றொரு மாபெரும் படைப்பு.[1] இக்கோயிலில் உள்ள பார்வதியின் ஓவியம் உலகப் புகழ் பெற்றது. தலையிலே கிரீடமும், தலைக்கு மேலே வண்ணக் கவிகையும் கொண்ட வனப்புமிக்க தேவி இங்கு வலக் காலை ஊன்றி, இடக் காலை எழிலாக மடித்து வைத்து ஒயிலாக நிற்கும் காட்சி இது.

உமையன்னையின் நேர்த்தியான உடல்வாகும், ஆடும் அண்ணலின் அழகைக் கண்டு மெய்மறந்து லயித்து நிற்கும் பெண்மையின் பேரழகும், பல்லவர் கால ஓவியர்களின் அற்புத ஆற்றலை வெளிக்காட்டும் அளவீடாகக் கருதலாம். இப்பனைமலைப் பார்வதியின் ஓவியம், காஞ்சி கைலாசநாதர் கோயில் சிற்பத்தை ஒத்துள்ளது. மற்றும் அஜந்தா, சிகிரியா (இலங்கை) ஆகிய இடங்களில் உள்ள பூங்கொடி போன்ற பெண்களின் சாயலை நினைவூட்டுகின்றன. இவ்வோவியம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. சுமார் 1250 ஆண்டு கட்கு முன்னர் தீட்டப்பட்ட இவ்வோவியம் பல்லவர்களின் ஓவியக் கலைக்கு மகுடமாகத் திகழ்கிறது.

ஆர்மாமலை

வடஆற்காடு மாவட்டம் ஆம்பூருக்கு அருகில் மலையாம்பட்டு என்ற ஊரிலிருந்து 1.5 கல் தொலைவில் உள்ளது ஆர்மாமலை. இம்மலையின் இடைப்பகுதியில் ஓர் இயற்கையான பெருங்குகைத்தளம் உள்ளது. இங்கு சமணப் பெரியார்கள் தங்கியிருந்த சான்றுகள் உள.

இக்குகையினுள் சுவரோவியங்கள், ஒரு மண் சுவராலான சமணப் பள்ளியின் சிதை பாடுகள் ஆகியவை காணப்படுகின்றன. இங்குள்ள ஓவியத் தடயங்களைப் பற்றிய குறிப்பினை நமக்கு முதலில் தந்தவர்கள் ராபார்ட்சிவல் மற்றும் பிரஞ்சு பேராசிரியர் மூவோ துப்ராய் ஆகியோர். தொடர்ந்து டாக்டர். சி. மீனாட்சி[2] அவர்களும் ஆர்மாமலை

---

1. South Indian Paintings - C. Sivaramamurthi.
2. Administration and Social life under Pallavas - Dr. C. Meenakshi, p. 288

பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வோவியங்கள் 1970-இல் முழுமையாக வெளிக் கொணரப் பட்டு முக்கியத்துவம் பெற்றன.[1] டாக்டர். எட்வர்ட் மாண்ட் கோமெரி, எஸ். டி. பாஸ்கரன், ஆகியோர் பல்லவர், சாளுக்கியர், இராட்டிரகூடர், சோழர் ஆகியோரின் கலைப்பாணிகளின் பாதிப்பு ஒரு தனிக் கலைப்பாணியையே தொண்டை மண்டலத்தில் தோற்றுவித்தது என்பர். கட்டட, சிற்பக்கலையில் இத்தனித்துவத்திற்கு உதாரணங்கள் பல உணடு. ஓவியத்தைப் பொறுத்தமட்டில் ஆர்மாமலை மட்டுமே. எல்லோராவின் கலையம்சங்களும் (இராட்டிர கூடர்) சித்தன்னவாசலின் பிரதிபலிப்பும் (பாண்டியர்) ஒன்று சேர்ந்த அந்த உன்னத காலக் கட்டத்தை அழியாமல் காப்பாற்றியது ஆர்மாமலைக் குகை'' என்பர்.[2] டாக்டர். இரா. நாகசாமி, பல்லவர், கங்கர் கலைப்பாணி என்று கருதுகிறார்.[3]

இங்குள்ள குகைத் தளத்தின் மண்சுவரில் ஓவியங்கள் ஆங்காங்கே தென்படுகின்றன. ராபர்ட் சீவல் என்பார் 1882-ஆம் ஆண்டு இங்கு ஓவியச்சுவடுகள் இருப்பதாகத் தெரி வித்தார்.[4] ஆயினும் நல்ல ஓவியங்கள் குகைத்தளத்தின் மேல்விதானத்தில் காணப் படுகின்றன. ஒரு பகுதியில் கொடிகளும், இலைத்தளிர்களும் தீட்டப்பட்டுள்ளன, மற்றொரு பகுதியில் அழகிய அன்னங்கள் காணப்படுகின்றன. மற்றும் சுற்றிலும் எட்டு சதுரமாகவும் நடுவில் ஒரு சதுரமுமாகக் கட்டம் அமைத்துத் தீட்டப்பட்டுள்ள ஓவியம் குறிப்பிடத்தக்கது. இவற்றில் தற்போது இரண்டு கட்டங்களில் உள்ள ஓவியங்களே எஞ்சியுள்ளன. ஒன்று தென் கிழக்கு மூலையில் ஆட்டின் மேல் அமர்ந்து சுடர்முடி தரித்துத் தன் தேவியுடன் தோன்றும் அக்னிதேவனின் ஓவியமாகும். அக்னியின் வலக்கரம் மரம் தரித்து, இடக்கரம் விஸ்மய முத்திரையில் வியக்கும் கரமாக உள்ளது. இவ்வுருவம் பறந்து வருவதுபோல சித்தரிக்கப்பட்டுள்ளது. தென் திசையில் உள்ள மற்றொரு கட்டத்தில் எமதேவனது வாகனமான எருமைக்கடா காணப்படுகிறது. எமனது உருவத்தைக் காட்டும் மேல்பாதி சிதைந்துவிட்டது. ஆயினும் இவை திசைக் காவலர்களின் உருவங்கள்தாம் எனத்தெளிவாக உணரலாம். ஏனைய சட்டங்களில் முறையே இந்திரன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலிய திசைக் காவலரின் உருவங்கள் உரிய வாகனங்க ளோடு தீட்டப்பட்டிருக்க வேண்டும். அவை முற்றிலும் அழிந்து போயிற்று.

குகைத் தளத்தின் வலது பக்கம் மேற்புறத்தில் 'சமவசரண' தாமரைப் பொய்கை ஓவியம் ஏழு அடி நீளத்தில் உருக்குலைந்து காணப்படுகிறது. ஆர்மாமலையில் முக்கியமான சித்திரம் இப்பொய்கையே. இது 'காடிகாபூமி' எனப்படும் தாமரைப் பொய்கை. இதில் மொட்டுக்களும் தாமரை மலர்களும் காற்றிலாடிக் கொண்டிருக்கின்றன. ஒரு யானையின் உருவம் சிதைந்து காணப்படுகிறது. இந்திய ஓவிய வரலாற்றில் ஆர்மாமலையின் முக்கியத் துவத்தை நிர்ணயிப்பது இவ்வோவியமாகும். இவ்வோவியங்களின் கோடுகளும், வண்ணங் களும் சித்தன்னவாசல் ஓவியங்களை ஒத்துள்ளன.

இங்குள்ள கல்லில் கி. பி. 8-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களில் 'கடைக் கோட்டு ருத்த நந்தி படாரர் மாணாக்கர்' என்று எழுதப்பட்டுள்ளது. எனவே இப்பெரியார் காலத்தில் இக்குகையில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கலாம். சமண சமயத்தைச் சார்ந்த இவ்வோவியங்கள் கி. பி. 8—9-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவையாகக் கொள்ளலாம்.

---

1. 30–4–1970–இல் தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத் துறையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு விரிவுரைக் கூட்டத்தில், ஆர்மாமலை பற்றிய முக்கியக் குறிப்புகள் வெளிக்கொணரப் பட்டன.
2. ஆர்மாமலை ஓவியங்கள் – S. T. பாஸ்கரன், கல்வெட்டு இதழ் 7, பக் 6 & The Armamalai Paintings - Edward Montgomery and S. T. Baskaran, Lalitkala, No. 16. pp. 22-7.
3. இரா. நாகசாமி - ஓவியப்பாவை, பக். 87
4. List of Antiquarian Remains in the Presidency of Madras – Robert Sewell, Vol. I, p. 160.

பாண்டியர் ஓவியங்கள்

மதுரை மாவட்டம் சிறுமலையில் டாக்டர். விஜயவேணுகோபால் அவர்களால் சில ஆண்டுகட்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியங்கள்[1] பாண்டிய நாட்டின் தொன்மை வாய்ந்த ஓவியக் கலை மரபைக் காட்டும் சான்றாக அமைகின்றன. இவை கிறித்துவ சகாப்தத்திற்கு மூன்று நூற்றாண்டுகட்கு முற்பட்டவை. தொடர்ந்து சங்க காலத்தில் பாண்டிய நாட்டில் ஓவியக்கலை சிறந்திருந்தது என்பதை நெடுநல்வாடை, பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்கள் வழி அறிகிறோம்.

பாண்டி நாட்டுச் சமணர் குன்றுகளிலும், குடைவரைக் கோயில்களிலும் முற்காலப் பாண்டியர் ஓவியங்கள் எஞ்சி நிற்பதைக் காணலாம். மதுரைக் கருகில் ஆனைமலை, கீழ வளவு,[2] கீழக்குயில்குடி ஆகிய இடங்களிலுள்ள சமணர் குன்றுகளில் செதுக்கப்பட்டிருக்கும் தீர்த்தங்கரர் உருவங்கள் மீதும் இயக்கர், இயக்கி உருவங்கள் மீதும் சுதை பூசப்பட்டு அவற்றின் மீது ஓவியந் தீட்டப்பட்டுள்ளன. ஆனைமலையில் தீர்த்தங்கரரின் அருகே கைவேலைப்பாடமைந்த ஒரு குத்து விளக்கும், இருமருங்கும் தாமரைகளும் ஓவியமாகத் தென்படுவது பாண்டியர் காலத்தில் சமணர் இருக்கைகள் அனைத்திலும் ஓவிய வல்லுநர்கள் பலர் ஓவியந்தீட்டி அழகுபடுத்தியுள்ளனர் என்பதையே காட்டுகிறது.

அப்பரால் மதமாற்றம் செய்யப்பட்ட மகேந்திரவர்மன் போன்று ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டிய மன்னன் அரிகேசரி பராங்குசன் சமண மதத்திலிருந்து திருஞான சம்பந்தரால் மீட்கப்பட்டான். புதிதாக மதமாற்றம் பெற்ற இம்மன்னன் காலந்தொடங்கிச் சமணசமயம் மட்டுமன்றிச் சைவ வைணவ சமயக் கோயில்களும் பாண்டி நாட்டில் எண்ணிக்கையில் மிகுந்தன. இக்குடைவரைக் கோயில்களிலும் பல்லவர்களைப் போன்று பாண்டியர்களும் தம் ஓவியச் சுவடுகளை விட்டுச் சென்றுள்ளனர். இவற்றைத் திருமலை புரம், சித்தன்னவாசல், சித்தியன்கோட்டை போன்ற ஊர்களிலுள்ள குடைவரை மற்றும் கட்டடக் கோயில்களில் காணலாம்.

திருமலைபுரம்

நெல்லை மாவட்டம் கடையநல்லூருக்கருகில் உள்ள வர்ணச்சிமலை என்ற திருமலைபுரம் குகைக் கோயிலில் முற்காலப் பாண்டியர் ஓவியங்கள் உள்ளன.[3] பேராசிரியர் ழுவோ துப்ராய் அவர்களால் 1936-இல் இக்குகையிலுள்ள ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்குள்ள ஓவியங்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டாலும், விதானத்திலும் தூணிலுமுள்ள அன்னம், வாத்து மற்றும் அரும்பு முதல் அலர் ஈறாக உள்ள தாமரை போன்ற எஞ்சி யுள்ள சில ஓவியங்கள், ஓவியனின் கைத்திறனைக் காட்டுகின்றன. குகையின் ஓரிடத்தில் நடமாடும் மங்கையும், மத்தளம் வாசிக்கும் மற்றோர் உருவமும் உள்ளன. சில இடங்களில் பூவேலைப்பாடமைந்த அலங்கார ஓவியங்கள் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன. பாசிபடிந்த ஓரிடத்தில், பயங்கர தோற்றத்துடன் கூடிய சிங்கத்தின் மேல் அமர்ந்துள்ள தேவதையின் உருவம் தீட்டப்பட்டுள்ளது. அடுத்துள்ள பகுதியில் தாடியுள்ள ஆண்கள் சிலரும் அருகில் சில அணங்குகளும் காட்டப்பட்டுள்ளனர். அவை வேடர்களும் அவர்தம் மனைவியருமாக இருத்தல் வேண்டும். ஏனெனில் அவர்களுள் ஒருவன் வேட்டைக்குப்பின் காட்டுப் பன்றியைத் தோளில் தூக்கிச் செல்வது போன்றுள்ளது. இக்கோயிலில் ஸ்ரீவல்லபன்

---

1. பாண்டிய மண்டலத்தில் குகை ஓவியங்கள் - நா. சுலைமான் - நுண்கலை, மலர் 7 இதழ் 2 பக். 27.
2. தமிழிகல்வெட்டுகள் - இரா. நாகசாமி - கல்வெட்டியல் - பக். 61.
3. Cave Temples near Tirumalaipuram and their paintings - Jour. Ind. Soc. Ori. Art. IV. A note on the paintings from Tirumalaipuram Jour. Ind. Soc. Ori. Art. IV.

காலத்தியக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. கோயில் ஏழாம் நூற்றாண்டில் குடைவிக்கப் பட்டிருப்பினும் இங்குள்ள ஓவியங்களின் கலையமைதியைக் கொண்டு சித்தன்னவாசல் ஓவியங்களின் காலத்தோடு ஒப்பிடலாம். எனவே இதனை கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

சித்தன்னவாசல்

பாண்டியர் கால வரலாற்றுக்கும், தமிழகக் கலை வரலாற்றுக்கும் ஒரு மைல் கல்லென விளங்குவது சித்தன்னவாசல் ஓவியங்கள். உயர்ந்த மலையின் இடையே அமைந்துள்ள குடைவரைக் கோயில் இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இக்குடைவரைக் கோயிலில் ஓவியக் கலையின் உன்னத நிலையைக் காட்டி நிற்கும் ஓவியங்கள் கால வெள்ளத் தையும் கடந்து நம்மை வியப்பிலாழ்த்தி நிற்கின்றன. இவை முன்னர் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் தீட்டப்பட்டவை என்று கருதப்பட்டது.[1] தற்போது இக்கருத்து மாற்றம் பெற்றுள்ளது.[2] இக்குடைவரைக் கோயிலின் தென்புறப் பாறையில் உள்ள சிறப்பு வாய்ந்த கல்வெட்டொன்று இக்குடைவரை ஓவியப்பணி பாண்டியப் பெருமன்னன் அவநிபசேகரன் எனும் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் என்பான் காலத்தில் நிகழ்ந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.[3] குடைவரைக் கோயிலின் கருவறை விதானத்திலும், முன் மண்டபப் பகுதியிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. மேல் விதானத்திலும் தூண்களிலும், போதிகைகளிலும், கொடுங்கைப் பகுதிகளிலும் ஓவியங்கள் உள்ளன. மண்டபத் தூண் களில் வெளிப்புறம் எழில் ததும்பும் ஆடல் மகளின் ஓவியம் கற்பகத்தின் பூங்கொம்போ ? காமன்தன் பெருவாழ்வோ? என்றெண்ணும் வகையில் எழிலாகத் தலை சாய்த்து வலக் கரத்தினைப் பதாகை முத்திரையில் கொண்டு இடக்கரத்தைக் கொடிபோல் நீட்டிக், கயல் விழிகளைக் காட்டிக் காவியம் பாட வைக்கிறது. ஆடும் இவ்வணங்கின் கை முத்திரை காட்டுவது பரதர் கூறும் லதாவிருச்சிகமாக இருக்கலாம் என்பர் தி. நா. இராமச்சந்திரன்.[4] மற்றொரு தூணிலும் எழில் மங்கையின் நடனம் தீட்டப்பட்டுள்ளது. இப்பெண்ணின் உருவிலும் இடுப்புக்கு மேல் பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. ஆனந்தத் தாண்டவம் புரியும் ஆடவல்லான் போல இப்பெண்ணும் இடது கரத்தை மடித்து வலது கரத்தில் பதாகை காட்டித் தலையை இடப்புறம் பெருமிதமாய்த் திருப்பி நோக்குகிறாள். இவ்வெழில் நல்லாள் ஓவியத்துக்கு இலக்கணமா? நடனத்துக்கு இலக்கணமா? அன்றி அழகின் இலக் கணமா? வியப்பே மேலிடுகிறது. இந்நடனமாதர்களின் கொண்டை, முகத்தின் மெய்ப் பாடுகளைக் காட்டும் கோடுகள், அழகிய வளைவுகளையுடைய உடமைப்பு, மென்மையான சாயல், நளினத்துடன் கூடிய நடன வேகத்தைக் காட்டும் கைகளின் பாவ நிலை யாவும் பாண்டியர் கால ஓவியனின் படைப்புத் திறனைப் பறைசாற்றுவதாகக் கொள்ளலாம். இவ்வாடல் அணங்குகள் பாண்டியன் ஆடலரங்கினை அலங்கரித்தவர்களாக இருக்கலாம்.

தென்புறத் தூணின் மறுபுறம் மூன்று உருவங்கள் தென்படுகின்றன. மகுடந்தரித்துச் செம்மாந்த பார்வையுடன் காணப்படும் அரசனின் தோற்றம்; அவனுக்குப் பின்னே தமிளம் என்ற வகையில் கொண்டை முடிந்து மலர் சூடி அழகு மயில் போல் தெரிவது அவன் தேவி. இவர்களெதிரே காவியுடுத்த துறவி. இவை இவ்வோவியத்தைத் தீட்டக் காரணமா யிருந்த ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனும்[5] அவன் தேவியும் மற்றும் சமணத் துறவியான மதுரை ஆசிரியர் இளங்கௌதமன் ஆகியோர் என்றும் அறிஞர்கள் கருதுவர். இது உடன்பாடான கருத்தாகவே உள்ளது.

---

1. Fresco Painting at Sittannavasal – Pudukkottai 1920. Jouveau Dubreuil – "Pallava Paintings" Indian Antiquary Vol.LII - 1923 pp. 45-7.
2. Cave temples and Paintings of Sittannavasal - T. N. Ramachandran - Lalit Kala Vol. 9. pg.34.
3. ஓவியப்பாவை - இரா. நாகசாமி - 89-90.
4. 'Cave temples and Paintings at Sittannavasal - N. R. pg. 47. Pl. D.
5. Ibid. - pg. 50.

அடுத்து மண்டபத்தின் நடுவே மேல் விதானத்தில் உள்ள தடாகத்தைச் சித்தரிக்கும் ஓவியம். நீர் நிரம்பிய வளமான தடாகத்தில் தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கத், துள்ளிக் குதித்து நீந்தும் மீன்கள். இடையிடையே அன்னங்கள், யானைகள், எருமைகள், மனிதர்கள் என்று சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. பிடியொடு களிறு இணைந்து நீரில் இறங்கி மலர் களைப் பறிக்கின்றன. எந்தச் சலனத்திற்கும் ஆட்படாதவை போன்று எருமைகள் அசை யாது நிற்கின்றன. மற்றும் இடைவரை அணிந்த ஆடைகளுடன் தாமரை மலர்க் கொய்யும் ஒருவரும், பின் செல்லும் ஒருவரும் காட்டப்பட்டுள்ளனர். மூன்றாவது மனிதர் அல்லியும் தாமரையும் ஏந்தி வருகிறார். இவ்வாறு மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் இத்தடாகம் எதனைக் குறிக்கிறது என்பது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் உள. பிரெஞ்சுப் பேராசிரியர் ழுவோ துப்ராய் இது ஒரு சமணக் காட்சியாக இருக்குமென்றார்.[1] ஆனால் என்ன காட்சி யெனக் கூறவில்லை. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் வேறான கருத்தைக் கூறினார். அவர் மகாவீரரை வயிற்றில் கருவாய்ச் சுமந்தபோது அவர் தாய் கண்ட 14 நல் நிமித்தங்களுள் தாமரைப் பொய்கையும் ஒன்று. அப்பொய்கையாக இது இருக்கலாம். அல்லது மகாவீரர் அறம் போதித்த ஒரு கதையின் விளக்கமான தாமரைப் பொய்கையாய் இருக்கலாம் என்பர்.[2] இவர் குறிக்கும் பொய்கைக்கும் இப்பொய்கைக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. சமண நூல்கள் குறிப்பிடும் ''அண்ணல் அறம்போதிக்கும் காட்சியான சமவசரணம், என்று திரு. இராமச்சந்திரன்[3] அவர்கள் குறித்துள்ளதைத் தற்போது அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சித்தன்ன வாசலில் உள்ள இவ்வோவியத்தைக் கலை நூலாசிரியர்கள் பலவகை கருத்துக்கள் கூறினாலும் இவை சமயத் தொடர்புடையவை என்பதை மறுப்பார் இலர். இந்தியக் கலைப் படைப்புகளில் தாமரையின் வடிவங்கள் பலவகையிலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் அத்தாமரைத் தடாகம் இலக்கியங்களில் குறிக்கப்படினும் அவற்றினை விதானங்களில் ஓவியமாகத் தீட்டும் முயற்சி, இந்திய ஓவியங்களில் அரிதாகவே காணப்படு கின்றன.[4] அவ்வகையில் சித்தன்னவாசல் ஓவியம் மிகச் சிறப்புவாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இவ்வோவியங்கள் சுதை ஓவிய முறையில் (Fresco technique) தீட்டப்பட்டுள்ளன. இம்முறையில் முதலில் சுவர்ப்பகுதி மேடு பள்ளம் இல்லாமல் சமமாக இருப்பதற்காகச் சுவர் மீது நெல் அளவுக்குச் சுண்ணாம்புச் சாந்தைப் பூசுவர். சலித்து எடுக்கப்பட்ட பூமணல், வைக்கோல், கடுக்காய் முதலியவற்றுடன் கலந்து வெல்லத் தண்ணீர் அல்லது பனஞ்சாற்றுடன் அரைத்த இச்சாந்து சுவரில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடும். ஈரம் காய்வதற்கு முன்னரே, மஞ்சள் கிழங்கைக் கொண்டு ஓவியத்திற்கான கோடுகள் வரைந்து கொள்வான் ஓவியன். சுண்ணாம்புடன் கலந்த மஞ்சள் நிறம் மாறிச் சிவப்பாகத் தோன்றுவதுடன், பின்னாளில் அழிந்து போகாமல் விளங்கும் தன்மையையும் பெற்றுவிடும். புனையா ஓவியம் என்ற இந்தக் கோடுகளை முதலில் வரைந்து கொண்டுதான் பிறகு வண்ணங்களைத் தீட்டுவான். சிவப்பு, மஞ்சள், வெள்ளை, நீலம், பச்சை, கறுப்பு ஆகிய நிறங்களைக் கொடுக்கும் பச்சிலை வண்ணங்களையே உபயோகிப்பர்.

சித்தையன் கோட்டை

சீவல்லபன் காலத்துக்குப் பின்னர் பாண்டியர்கள் விட்டுச் சென்றுள்ள ஓவியங்கள் என்றுரைக்க அதிகம் ஏதுமில்லை. இருப்பினும் அண்மையில் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட

---

1. "Pallava Paintings" Jouveau Dubreuil.
2. 'A note on the Fresco Paintings at Sittannavasal' - S. R. Balasubramaniyam.
3. Cave Temple and Paintings of Sittannavasal - T. N. Ramachandran - Lalitkala - No. 9. pp. 42-5.
4. Studies in Early Indian Painting - Moti Chandra, - Bombay, 1970 - p. 124.

சித்தையன் கோட்டை ஓவியம் பிற்காலப் பாண்டியர் காலத்ததாகக் கருதப்படுகிறது. திண்டுக்கல் அண்ணா மாவட்டம் செம்பட்டிக்கு அருகில் உள்ள ஊர் சித்தையன் கோட்டை. இதைச் சார்ந்த அழகர்நாயக்கன்பட்டி வயலில் பிற்காலச் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் தேவகோட்டங்களில் நடராஜர், சிவகாமி, தட்சிணாமூர்த்தி ஆகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.[1]

இவை மாடத்தை அலங்கரிக்கும் சிலைகளுக்கு பதிலாகச் சித்திரமாகக் காணப்படு கின்றன. பெரும்பாலும் பிற்காலப் பாண்டியர் கோயில் தேவகோட்டங்களில் சிலைகள் அமைக்கப்படுவதில்லை. இவை பொதுவாகப் பொய்மையான கோட்டமாக இருக்கும். இந்நிலையில் சிலைகளில்லாத மாடத்தை ஈடு செய்யும் வகையில் இவ்வோவியங்கள் தீட்டப்பட்டிருப்பது ஒரு புதுமையாகத் தென்படுகிறது.

சோழர் ஓவியம்

சங்ககாலச் சோழர்களுக்குப் பிறகு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலய சோழன் முத்தரையர்களை வெற்றி கொண்டு தஞ்சையைக் கைப்பற்றினான். விஜயாலயன் தன் வெற்றியின் நினைவாக நிசும்பசூதனிக்கு எடுத்த கோயில் இன்று தஞ்சையில் இல்லை. அச்சிலை மட்டும் தற்போதுள்ள நிசும்பசூதனியின் சிற்பமாக இருக்கலாம் எனக் கருதப்படு கிறது.[2] இவன் பெயரில் புதுக்கோட்டைக்கு அருகில் நார்த்தாமலைக் குன்றில் கோயில் ஒன்று உண்டு. இது விஜயாலய சோழன் பெயரால் ஏற்பட்ட சிறந்த கோயிலாகும்.

விஜயாலயசோழீச்வரம் என்ற இக்கற்றளியின் அர்த்தமண்டபச் சுவர்களில் நடனமாடும் காளியின் ஓவியமும் ஆடை அணியா அழகரான பைரவரின் உருவமும், இடைக் கழியின் கூரையில் கந்தருவர்களின் ஓவியச் சிதைவுகளும் காணப்படுகின்றன.

இக்கோயில் பெருமழையாலும், இடியாலும் இடிந்து விழுந்து விட்டது என்றும்; அதனை மல்லன் விடுமன் என்பான் மீண்டும் புதுப்பித்தான் என்றும் இங்குள்ள துவார பாலகர் சிலைக்கு அடியிலுள்ள கல்வெட்டு கூறுகிறது. எனவே இப்போதுள்ள ஓவியத்தை மல்லன் விடுமன் புதுப்பித்த காலமான கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம் என டாக்டர். நாகசாமி கருதுகிறார்.[3] இதுவே எமது கருத்துமாகும்.

விஜயாலயன் மகன் ஆதித்தனும், பேரன் பராந்தகனும் பல கோயில்களைக் கட்டினர். தில்லையில் பொன் வேய்ந்த காவலன் என்று புகழப்பெற்ற பராந்தகனின் மகனான கண்டராதித்தனின் தேவி செம்பியன் மாதேவி எடுத்த கோயில்கள் எண்ணிக்கையும் எழிலும் மிக்கன. இவற்றில் ஓவியங்கள் இல்லாமலா இருந்திருக்கும்? கால வெள்ளத்தில் அவை அழிந்து இன்று காணக் கிடைக்கவில்லை எனலாம்.

இன்று நாம் காணுமாறு இருப்பது தஞ்சைப் பெருங்கோயிலிலுள்ள ஒப்பற்ற ஓவியங்களே. கலைகளுக்கெல்லாம் இலக்கணங் கண்ட மாமன்னன் இராஜராஜனால் எழுப்பப் பெற்ற தஞ்சைப் பெருங்கோயில் – ஓவியத்திற்கும் இலக்கணமாய் அமைந்துள்ளது. கல்விலும் செம்பிலும் உருவங்கள் படைத்துக் கலை வண்ணங்காட்டி உலகோரை வியப்பிலாழ்த்திய இம்மன்னன் ஓவியத்தையும் காவியமாக்கியுள்ளான். அவை தஞ்சைப் பெரிய கோயிலின் உண்ணாழியை அடுத்த உள்திருச்சுற்றுச் சுவர்களில் வரையப்பட்டுள்ளன. நாயக்கர் கால

1. பாண்டியர் கால ஓவியங்கள் - நடன. காசிநாதன் - தினமணி 3-2-1989.
2. Nisumbhasudani installed by Vijayalaya Chola in Tanjore. - R. Nagaswamy - Lalitkala No. 18 - Pl. XVIII - Fig. 1 pp. 39 – 40.
3. ஓவியப்பாவை – இரா. நாகசாமி - பக். 101.

ஓவியங்களால் மறைக்கப்பட்டிருப்பினும் பல நூற்றாண்டுகட்குப் பிறகு 1930-ஆம் ஆண்டு இவ்வோவியங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ். கே. கோவிந்தசாமி[1] அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுச் சோழர் கால ஓவியத்தின் உன்னத நிலை உலகிற்கு வெளிச்சமாயிற்று.

இங்கு தீட்டப்பட்டுள்ள கயிலைக் காட்சியும், சுந்தரர் தடுத்தாட்கொண்ட வரலாறும் நாட்டிய மகளிர் உருவங்களும் நம் எண்ணத்தில் நிழலாடுபவை. தேவரும், பூதகணங்களும் சூழ்ந்திருக்க, சிவபெருமான் புலித்தோலில் அமர்ந்திருக்க, அதன் கீழ் சுந்தரர் வெள்ளானை மீதும், சேரமான்பெருமான் புரவியின் மீதும் ஏறி, கயிலைச் செல்லும் காட்சி மிக அழகாகத் திட்டப்பட்டுள்ளது. அடுத்து சிவபெருமான் கிழவேதியராக வந்து மணமண்டபத்தில் வாது செய்து மணமகன் சுந்தரரின் திருமணத்தைத் தடுக்கும் காட்சியும் மனங்கவர் காட்சியாய் அமைய, இக்காட்சியில் கரணத்தான் கையிலுள்ள ஓலையில் 'இப்படி அறிவேன் (இர) வேளைப் பகலாக' என்று சோழர்கால எழுத்தில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஓவியத் திலுள்ள எழுத்துக்களை இயக்குநர் நடன. காசிநாதன் அவர்கள் முதலில் படித்து உணர்த்தி னார்கள்.[2]

முதலாம் இராசராசன் தான் கட்டிய பெருங்கோயிலுக்கு நாட்டிய மகளிரைத் தெரிந் தெடுத்து ஆடல்புரியச் செய்தான். அழகிலும் ஆடற்கலையிலும் இவர்கள் மிகச்சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதை நமக்கு நேரே உணர்த்தி நிற்பவை, இங்குள்ள ஆடல் மகளிர் உருவங்கள். இவை தவிர இராசராசனும் அவனுடைய இராஜகுரு கருவூர்த் தேவரும் எனக் கருதத் தக்க ஓவியத்தொகுப்பொன்றும் இங்குள்ளது. வடக்குச் சுவர் முழுவதும் விரிசடைக் கடவுள் திரிபுரமெரித்த காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. சித்தன்னவாசல், பனைமலை, காஞ்சி இவற்றில் காணப்படும் முதல் தர ஓவியத்தின் நயம் இந்த அழகிய ஓவிய வரிசையில் தொடரப் பட்டுள்ளது. ஒன்பான் சுவைகளோடு சோழர் கால வாழ்க்கை, பண்பு ஆகியவற்றையும் சேர்த்துத் தீட்டப்பெற்றுள்ள பாங்கினை இங்கு நாம் காண்கிறோம். 'இங்கே வண்ணங்கள் மென்மையாகவும், இளகியும், கோடுகள் உறுதியாகவும், திண்ணியதாகவும் முகபாவம் உண்மைக்கு ஒத்ததாகவும் உள்ளன.[3]

தஞ்சையில் இராசராசன் தோற்றுவித்த பெருங்கோயிலைப் போலவே அவன் மகன் இராசேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் தோற்றுவித்த பெருங்கோயிலின் விமானத்திலும், தெய்வீக உருவங்களின் மீதும் ஓவியப் பூச்சுகளின் எச்சங்கள் ஆங்காங்கே எஞ்சி நிற்பதைக் காண முடிகின்றது. இவனையடுத்து வந்த பிற்காலச் சோழர் காலத்திலும் ஓவியக்கலை கணிசமாக வளர்ந்திருக்கவேண்டும் எனக் கருதலாம். பட்டீஸ்வரம் கோயிற் கோபுரம், துக்காச்சி சிவன் கோயில் மண்டபத் தூண்களின் மீதுள்ள ஓவியங்களின் எச்சங்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

போசளர் கால ஓவியங்கள்

மைசூர்ப் பகுதியினை ஆண்ட போசள வம்சத்தினரில் வீரராமநாதன் என்னும் மன்னன் குறிப்பிடத்தக்கவன். திருவரங்கத்திலுள்ள குழலூதும் பிள்ளைக் கோயில் இவனால் எடுக்கப் பட்டது. தற்போது வேணுகோபாலசாமி சன்னதி என்ற பெயரால் அழைககபபட்டு வரும்

1. On his discovery of Chola Painting - Hindu, April 11, 1933 & Madras Mail, April 16, 1931.
   Cola Painting - Govindaswami S.K. - J I SOA, pp. 73-80. 1933.
2. தஞ்சை ஓவியமும் தடுத்தாட்கொண்ட புராணமும் - நடன. காசிநாதன் - கல்வெட்டுக் காலாண்டிதழ் 1 – பக்.121, 1974.
3. இந்திய ஓவியம் – க. சிவராமமூர்த்தி - பக்.80.

இக்கோயில், திருவரங்கப் பெருமான் கோயிலின் வளாகத்தினுள்ளே உள்ளது. இக்கோயிலின் முன் மண்டப விதானத்திலுள்ள ஓவியங்களைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருளாய்வுத்துறை கண்டறிந்தது. முன்னர் இவ்வோவியங்கள் விஜயநகரர் காலத்தியது என்று கருதப்பட்டது.[1]

குழலூதும் பிள்ளைக்காகப் போசள மன்னன் எடுத்த இக்கோயிலில் உள்ள ஓவியத்துள் சிறப்பாகவும் பெரிதாகவும் வரையப்பட்டுள்ளது வேணுகோபாலனின் ஓவியமே. கோயிலும், கோயிலில் உள்ள ஓவியமும் இம்மன்னன் காலத்தது என்றும் கருதலாம். மேலும் கருநாடக மாநிலத்தில் உள்ள லேபாக்ஷி ஓவியத்தை இவை ஒத்து இருப்பினும், காலத்தால் அதற்கும் முன்னோடியாகக் கருதலாம்[2] என்பதாலும், இவ்வோவியங்களை போசளர் காலத்தியதாகக் கொள்வதில் இடர்ப்பாடு ஏதுமில்லை.

இங்குள்ள குழலூதும் வேணுகோபாலனும் அண்ணலைச் சூழ்ந்த ஆநிரைகளும் கோகுலனைச் சூழ்ந்த கோகுலத்து கோபியரின் எழிற் கோலங்களும் எண்ணத்தில் நிறைந்தவையாம். இவை காலத்தின் கோலத்தால் மிக மங்கிய நிலையிலும், சிலவிடங்களில் சிதைந்து காணப்படினும் ஓவியக்காட்சிகள் மிகத்தெளிவாகவே உள்ளன. விதானத்தின் ஒரு பகுதியிலுள்ள கண்ணனின் உருவமும், ஆயர் குலத்து அணங்குகளின் உருவங்களும் இங்கு காணத் தக்கவை. இவர்கள் உடுத்தியுள்ள சேலைகளும் அவற்றில் தீட்டப்பட்டுள்ள பொட்டுகளும், பூக்களும், கொடிகளும், கோடுகளும், கோலங்களும் நம் மனத்தை எளிதில் கவர்வன. அம்மகளிர் அணிந்துள்ள ஆபரணங்களை நோக்கின்,

சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றினைய பல்கலனும் யாமணிவோம்

என்று பாவையர்கள் பாடும் பாசுரங்களை நினைவூட்டுகின்றன. இவ்வோவியத்தின் மற்றொரு பகுதியில் கண்ணன் ஆயர்குலப் பெண்ணை இறுக அணைத்து ஆசனத்தில் அமர்ந் திருக்கின்ற நிலையும் காணத்தக்கது. இங்கு காணப்படும் ஆயர்குல அணங்குகளின் தலையின் பக்கவாட்டில் காணப்பெறும் சரிந்த கொண்டை குறிப்பிடத்தக்கது. அவர்களது நெடிய உருவமும், உடல் வளைவும், கொண்டையழகும் முகத்தின் பொலிவும், கால்களைப் பக்க வாட்டில் நிறுத்தியுள்ள பாங்கும், கைகளின் லாவகமும் காண்போரை மகிழ்வூட்டுவன.

இம்மண்டப விதானத்தின் நடுவேயுள்ள வேணுகோபாலனின் ஓவியம் எழிற்படைப் பாகும். கோபாலனின் வேணுகானத்திற்கு மயங்கிய பறவைகள் கூடுதுறந்து பறந்து வந்து அருகே மெய்மறந்து நிற்கின்றன. ஆவின் கூட்டம் மேய்தொழில் மறந்து கடைவாய் நுரை சேரக் கால் பரப்பிட்டுத் தலைநிமிர்ந்துக் குழலோசையில் லயித்து நிற்கின்றன.

ஒன்றே சான்றாயினும் நன்றே சான்று என்றாற் போல் போசளர் தம் ஓவியத் தூரிகையின் அழகிய படைப்பிற்கு மிகச் சிறந்த சான்றாக இதனைக் கொள்ளலாம்.

விஜயநகரர் கால ஓவியங்கள்

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டுத் தென்னகத்தின் தென் பகுதியில் முதன்மை வல்லரசாயிற்று. கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் ஆகியவற்றிலுள்ள விஜயநகரர் பாணி பிற்காலச் சோழர், பாண்டியர் மரபின் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. தெலுங்கு, கன்னட நாடுகளில் அதற்கு முன்பிருந்த சாளுக்கிய மரபுகளைச் சிலவகையில் இது இணைத்துக் கொண்டது.[3] மேலும் மைசூரின் மேற்குப் பகுதியை ஆண்ட போசள மன்னர் களின் கலைப்பாணியும் இவர்கள் கலையில் இழையோடுவதைக் காணலாம்.

1. தமிழ்நாட்டு ஓவியங்கள், - மா. சந்திரமூர்த்தி, - தமிழகக் கோயிற் கலைகள் – பக். 118.
2. ஓவியப்பாவை - பக்.122
3. இந்திய ஓவியம் - பக்.88.

தமிழ்நாட்டில் பல இடங்களிலும் இவர் தம் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. காஞ்சிபுரம், திருவீழிமிழலை, திருவரங்கம், திருவண்ணாமலை, திருவலஞ்சுழி, திருமலை, திருவெள்ளறையிலும் இன்னபிற இடங்களிலும் விஜயநகரர் கால ஓவியங்கள் காணப் படுகின்றன.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதாவது கி.பி. 1365-இல் குமார கம்பணன் சம்புவராயர்களைத் தோற்கடித்துக் காஞ்சியைக் கைப்பற்றினான். தொடர்ந்து மதுரையும் அவன் வசமாயிற்று. கி.பி. 1387-இல் விஜயநகரப் பேரரசன் புக்கணன் என்பானின் அமைச்சன் இருகப்பன் என்பான் காஞ்சிக்கு அருகிலுள்ள திருப்பருத்திக்குன்றம் ஜினாலயத்தில் சங்கீத மண்டபத்தைத் தோற்றுவித்தான்[1] என்று கல்வெட்டுக் கூறுகிறது. இம்மண்டபத்தில் அழகிய ஓவியங்களும் தீட்டப்பட்டன. இவ்வோவியங்களே விஜயநகரர் காலத்து ஓவியங்களுள் காலத்தால் முற்பட்டவை. இவ்வோவியங்கள் பிற்கால ஓவியங்களால் மறைக்கப்பட்டுவிட்டன. எனினும் பல்லவர் பாண்டியர் சோழரைத் தொடர்ந்து விஜயநகரர் காலத்திலும் ஓவியக்கலை சிறப்புற்றிருந்தது என்பதை இவ்வோவியங்கள் பறைசாற்றுகின்றன. ஆங்காங்கே எஞ்சி நின்று எழில் காட்டும் இவ்வோவியங்களில் ஆண் பெண் உருவங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று ஒருவருக்கு முடிசூட்டுவது போலவோ, நீராட்டுவது போலவோ காட்டப் பட்டுள்ளது. மற்றோர் ஓவியம் கருவுற்றிருக்கும் பெண்ணின் தோற்றத்தைச் சித்தரிக்கிறது. இவற்றில் பல்லவ, பாண்டியர், சோழரின் காலத்து மென்மைச் சாயலைக் காணமுடியவில்லை எனினும் ஒருவிதத் தனித் தன்மையோடு அமைந்துள்ளது.

அடுத்து இவ்வம்சத்தின் மிகச்சிறந்த மன்னர்களுள் ஒருவரான கிருஷ்ணதேவராயர் சிறந்த அரசியல் ஞானி, அருங்கலை வினோதர், ஓவியருங்கூட. தமிழ்நாட்டில் காஞ்சி, திருவண்ணாமலை, தில்லை, திருவரங்கம் ஆகிய ஊர்க் கோயில்களிலுள்ள வானோங்கி நிற்கும் கோபுரங்கள் யாவும் இவர் காலத்தவை. இக்கோபுரங்களில் இம்மன்னன் காலத்திய எழிலார்ந்த ஓவியங்களைக் காணலாம். இக் கோபுரங்கள் அனைத்தும் இராயர் கோபுரம் என்ற பெயரிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. இராயர் என்றாலே கிருஷ்ணதேவராயரையே குறிக்கும். இவர் கி.பி. 1509 முதல் கி.பி. 1529 வரை ஆட்சி புரிந்தார். இவராட்சியில் கலை, இலக்கியம், சமயம் ஆகிய துறைகளுக்கு ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. இவர் எழுப்பிய கோபுரங்கள் அனைத்திலுமே அழகு வண்ண ஓவியங்களைக் காணலாம். காலத்தாலும், கவனக் குறைவாலும் அழிந்தது போக எஞ்சியுள்ளவை நமக்குக் கிடைத்த கலைக் கருவூலங்களாகும்.

திருவண்ணாமலை

அண்ணாமலையார் கோயிலின் முன்னுள்ள பதினோரு நிலைக் கோபுரம் கிருஷ்ண தேவராயரின் ஆணையின் பேரில் செல்லப்ப நாயக்கர் என்பவர் கட்டினார். இக்கோபுர விதானத்தில் ஓவியம் தீட்டப்பட்டிருந்ததைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்தது. இங்கு விஜயநகர வீரர்கள் கஜவேட்டை கண்ட காட்சி எழிலோவிய மாகக் காட்டப்பட்டுள்ளது. வீரர் இருவர் அணிகலன்கள் பூண்ட பெரிய களிற்றினைப் பிடிப்பது போன்ற காட்சி மிகப் பெரிய அளவில் தீட்டப்பட்டுள்ளது. விஜயநகர மன்னர்கள் தங்களுடைய மெய்க்கீர்த்தியில் ‘கஜவேட்டை கண்டருளின’ என்ற செய்தியைத் தவறாமல் குறிப்பிடுகின்றனர். இது அவர்களுக்கு யானை வேட்டையிலிருந்த பெருவிருப்பினைக் காட்டுகிறது. இதனை மெய்ப்பிக்கும் வகையில் கஜவேட்டை இங்கு ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளது எனலாம். நடுவேயுள்ள இவ்வோவியத்தைச் சுற்றி மற்றோர் ஓவியத் தொடர் உள்ளது. அதில் நீண்ட முடி தரித்த அழகிய ஆண் மகனின் உருவமும் அதற்கு முன்னும் பின்னும் ஆடல் மகளிர் ஆடும் காட்சியும் காணப்படுகின்றது. இவ்வாண் மகன் செல்லப்ப நாயக்கனாக இருக்கலாம் எனக் கருதுவர்.[2]

---

1. ஓவியப்பாவை - பக். 123.
2. மேற்படி - பக். 125.

திருவண்ணாமலை அடிவாரத்தைச் சுற்றிப் பின்புறம் உள்ள மண்டபம் ஒன்றினை எழுத்து மண்டபம் என்பர். இம்மண்டப விதானத்தில் பல ஓவியங்கள் உள்ளன. இதில் நான்கு கதைகள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றில் சிவபெருமான் பார்வதியை மணக்கும் காட்சியும் அடுத்து இராமாயணத்திலிருந்து ஒரு பகுதியும் தீட்டப்பட்டுள்ளன. மேலும் ஆயர் குலத்து அணங்குடன் கோகுலத்துக் கோபாலன் கொஞ்சி விளையாடும் கோலமும், வள்ளிக் கொடியின் அடியில் குழந்தையாகத் தோன்றி வேடனின் மகளாய் வளர்ந்து, தினைப்புனம் காத்து, வேலனை மணந்த வள்ளியின் திருமணமும் அரிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.[1] கிருஷ்ணதேவராயர் காலத்து ஓவியக் கலைக்குச் சிறந்த சான்றாய்த் திகழும் இவ்வோவியங்கள் ஹம்பி விருபாஷர் கோயில் ஓவியங்களுடன் ஒப்பிடத்தக்கவை.[2]

காஞ்சிபுரம்

வரதராஜப் பெருமாள் கோயிலில் அருளாளப் பெருமாள் கருவறையைச சுற்றி, சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்கு வைணவத் தலங்களான 108 திவ்ய தேசங்களும் அவற்றில் உறையும் பெருமாளின் உருவங்களும் தீட்டப்பட்டு அவற்றின் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பகுதி மறைந்து விட்டாலும் நல்ல நிலையில் உள்ள ஓவியங்களுள் அஹோபிலம் நரசிம்மர் உருவங்களும் ; திருமகள் நிலமகள் சூழத் திருமால் தோன்றும் காட்சி, விஜயநகரர் காலத் தொப்பியணிந்து தம்பூரா ஏந்தி நிற்கும் அடியார்களின் உருவங்கள், நல்லெருது ஒன்றின் உருவம், சாமரம் ஏந்தி நிற்கும் வனிதையின் உருவம் ஆகியவை காணத்தக்கவை. திருச்சுற்றின் மேற்குச் சுவரில் அழிந்தும் அழியாமலும் எஞ்சி நிற்கும் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின் தோற்றம் குறிப்பிடத்தக்கது. இங்கு ரங்க மன்னாரும், வலதுபுறம் கோதையும், அருகே பெரிய திருவடியான கருடனும் உள்ள அழகிய தொகுப்பு ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோயிலில் உள்ள தெய்வ உருவங்களின் வரிசை மரபினை நினைவூட்டுகின்றன. ஹயக்கிரீவர் ஓவியம் ஒன்றும் இங்கு காணப்படுகிறது. தமிழகத்தில் ஹயக்கிரீவரின் சிற்பங்களும் சிலைகளும், சித்திரங்களும் மிகக் குறைவாகவே காணப் படுகின்றன. அவ்வகையில் காஞ்சியிலுள்ள ஹயக்கிரீவரின் ஓவியம் முக்கியத்துவம் வாய்ந்த தெனலாம்.

கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அச்சுத தேவராயர் காலத்தியதாக இவ்வோவியங்கள் இருத்தல் வேண்டுமென்பர்.[3]

திருவீழிமிழலை

இவ்வூர்ச் சிவன் கோயில், அப்பர், ஞானசம்பந்தரால் பாடப் பெற்றச் சிறப்புடையது. சோழர் காலக் கல்வெட்டுகளும், சிற்பங்களும் நிறைந்த இக்கோயிலில் உள்ள மண்டப மொன்றில் ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்கள் 1971-ஆம் ஆண்டு மா. சந்திர மூர்த்தி அவர்களால் கண்டறியப்பட்டது.

இம்மண்டபம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருப்பினும் இதிலுள்ள ஓவியங்கள் காலத்தால் பிற்பட்டவை என்பதை அழகு, அமைப்பு கொண்டு உணரலாம்.

இங்கு குழலூதும் வேணுகோபாலனையும், காளியன் எனும் நஞ்சுண்ட நாகத்தின் மேல் நடமாடும் நாயகனாகக் கிருஷ்ணனையும் சித்தரிக்கும் ஓவியம் புகழ்வாய்ந்தவை. காளிங்க மர்த்தனின் இருபுறமும் ருக்மணி, சத்யபாமா ஆகிய தேவியரும், அழகிய கொடிப் பெண்கள் இருவரும் காட்டப்பட்டுள்ளனர். வேணுகோபாலனின் ஓவியத்தில் கண்ணனின் ஒருபுறம் குழலோசையில் மயங்கி நிற்கும் கோபியர் காட்டப்பட்டுள்ளனர். மறுபுறம் ஆயர்குலத்து

---

1. இவ்வோவியம் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்களால் 1972-இல் கண்டறியப்பட்டது.
2. ஓவியப்பாவை - பக். 126.
3. மேற்படி. - பக். 130.

அணங்கு ஒருத்தி நெஞ்சிலும் நிறைவயிற்றிலும் சுமையோடு இருப்பினும் தாதியர் இருவரை இருபுறமும் தழுவிய வண்ணம் குழலோசையில் மயங்கித் தளர்ந்து, தன்னை மறந்து நிற்கிறாள் — இது தமிழகத்தின் சிற்ப, சுதை உருவங்களில்[1] காணப்படும் கருவுற்ற பெண்ணின் தோற்றத்தோடு ஒப்பிடத்தக்கது.

இவ்வோவியங்களிலுள்ள கொடிப் பெண்களும் அவர்களின் தலையலங்காரமும் ஆடை அணிகளும் வேணுகோபாலன், காளிங்கமர்த்தனன், சத்யபாமா, ருக்மணி இவர்களின் எழிலுருவங்களும் இவை லேபாக்ஷி ஓவியங்களை ஒத்த விஜயநகரர் காலக் கலைப்பாணியைப் பறைசாற்றுகின்றன. இக்கோயிற் கல்வெட்டுகள் மூலம், விஜயநகர மன்னன் விருப்பண உடையார் இக்கோயிலுக்குப் பல தானங்கள் செய்துள்ளார் என்று அறிய முடிவதால், கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இம்மன்னன் காலத்தில் மேற்கூறிய ஓவியங்கள் வரையப் பட்டிருக்கலாம் என்று கருத இடமுள்ளது.[2] இதுவும் முந்தைய விஜயநகரர் காலத்து ஓவியங் களுக்குச் சீரிய சான்றாகும்.

திருமலை

சோழமாதேவிகளில் செம்பியன் மாதேவியை அடுத்துப் புகழ் பெற்றவர் குந்தவைப் பிராட்டி. இவர் இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனுக்கும் வானவன்மாதேவிக்கும் பிறந்தவர். முதலாம் இராஜராஜனின் தமக்கை. வல்லவரையன் வந்தியத்தேவனின் மாதேவியார். ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் எனப் போற்றப்படும் இவர் விழுப்புரம் இராம்சாமி படையாச்சியார் மாவட்டம் தாதாபுரத்திலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் திருமலையிலும் குந்தவை ஜினாலயம் என்னும் சமணப் பள்ளியை எடுப்பித்தார். திருமலையில் உள்ள குந்தவை ஜினாலயம் இன்றும் சமணத் தலமாகவே திகழ்கிறது.

இம்மலையின் அடிப்பகுதியில் உள்ள கோயிலில்தான் ஓவியங்கள் இருந்து பின்னர் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இயற்கையாக அமைந்த மேல் விதானத்தில் ஓவியங்கள் உள்ளன. அவை பூ வேலைப்பாடு மிக்க திரைச்சீலை விரிப்புப்போல அல்லது மேற்கட்டிபோல வனப்புடன் அமைந்துள்ளன. அடுத்த அறையில் திகம்பர சமணத் துறவியர் உருவங்களும் சில பெண்களின் உருவங்களும் ஓவியங்களாக இடம் பெற்றுள்ளன. மறுபுறத்தில் உள்ள அறையில் சமவ சரணத்தைக் குறிக்கும் ஓவியம் ஒன்று உளது. இதைவிடச் சிறந்த ஓவியம் செங்கற் கட்டடத்தின் புறத்தே தீட்டப்பட்டுள்ள மூன்று பெண்களின் முகங்களாகும். இவை கி. பி. 15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரர் கால ஓவியங்களாகும்.

திருவெள்ளறை

திருச்சி மாவட்டம் திருவெள்ளறை புண்டரீகாக்ஷர் கோயிலில் சித்திர மண்டபம் எனும் மண்டப விதானத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. முன்பு இக்கோயிற் திருச்சுற்றுச் சுவரிலும், விதானங்களிலும் கருவறையைச் சுற்றி வரும் உள்சுற்றிலும் ஓவியங்கள் இருந்து அழிந்து போயுள்ளன. சித்திர மண்டபத்திலுள்ள ஓவியங்களில் பெரிய தொடராக இராமாயணக் கதை, மற்றும் அழகிற்காகத் தீட்டப்பட்டுள்ள பூ வேலைப்பாடுகள் என்பனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.[3] பூ வேலைப்பாடுகள் என்றாலே விஜயநகரர் கலைப்பாணி என்று கருதுமளவு சிறப்பாகக் கூறத்தக்கவை. இவ்வோவியங்களின் காலம்

---

1. Delivery system in ancient Tamilnadu - Natana. Kasinathan - கல்வெட்டு காலாண்டிதழ் எண். 35 - பக். 34.
2. Vijayanagar paintings at Thiruvilimilalai - M. Chandramoorti, Professor. K. A. Nila kanta Sastri - *Felicitation Volume*, pp. 472-73.
3. இவ்வோவியங்கள் மதுரை, திருமலை நாயக்கர் அரண்மனைக் காப்பாட்சியர் திரு. வெ. வேதாசலம் அவர்களால் 1976 - ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

கி. பி. 1550 என்று கருதுவர்.[1] இரு மீன்கள் ஒரு தலை, காளை, யானை என்று ஈருடலுக்கும் ஒரே தலை, ஒரு மீனுக்கும், ஒரு மனிதனுக்கும் ஒரே தலை என்ற வகையில் ஓவியர் திறனை வெளிப்படுத்தும் காட்சிகளும், அமராவதி பௌத்த ஸ்தூபத்தில் உள்ளதற்கு இணையானது போல் அமைந்துள்ள மகுடி ஊதும் பாம்பாட்டியும் அவன் முன் படமெடுத்தாடும் நாகமும் பாம்பாட்டியின் அருகேயமர்ந்து வேடிக்கை பார்க்கும் குரங்கு ஒன்றும் நோக்கத் தக்கவை. அடுத்து இராமாயணக் கதையில் சீதையைக் கண்டு அனுமன் சூளாமணி அளித்தது வரையில் இங்கு தீட்டப்பட்டுள்ளன. அவற்றுள் மிகக் குறிப்பாகக் குறிப்பிட வேண்டிய ஓவியம் சுக்ரீவ பட்டாபிஷேகம். இவ்வோவியக் காட்சியினை லேபாக்ஷி ஓவியங்களை வரைந்த அதே ஓவியனே வரைந்திருப்பானோ என்று எண்ணத் தோன்றும் வகையில் ஒப்புமையுடைத்தாய் உள்ளது. அரக்கியின் வாயுள் நுழைந்து வயிறு குடைந்து வெளிப்படும் அனுமனின் காட்சி மேலும் வியப்பூட்டுவது. இக்கோயிலில், தாயார் சன்னதியிலும் ஓவியங்கள் உள்ளன.

திருவலஞ்சுழி

தஞ்சை மாவட்டம் குடந்தைக்கு அருகில் உள்ள திருவலஞ்சுழி கபர்தீஸ்வரர் கோயிற் திருச்சுற்றில் சில ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இவை முன்னர் நாயக்கர் கால ஓவியமாகக் கருதப்பட்டது.[2] தற்போது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணதேவ மகாராயர் காலத்தில் தீட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.[3]

இங்கு பதினாறு கரங்களுடன் தாண்டவமாடும் சிவன், ஆடுகின்ற சிவனுக்குத் தன்னுடலைச் சுழித்து மண்டலமாக்கி நிற்தம் ஐந்தலை நாகம், ஆனந்தக் கூத்தைக் கண்டு களிக்கும் உமை, தாளம் தட்டும் திசைமுகன், மத்தளம் கொட்டும் திருமால், குடமுழா இசைக்கும் சண்டி, பிச்சாடனர். முனிப் பெண்டிர், ரதி, மன்மதன், இடபாரூடர், பெண்டிர், மாலுக்குச் சக்கரம் ஈந்த தேவன், அறிவு புகட்டும் அண்ணல், குருமூர்த்தி ஆகியோரது ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

இவற்றில் சிவனது 25 பேரங்களில் ஒன்றான பிச்சை தேவரின் வடிவம் வனப்பு மிக்கது. இவரது மேற்கரங்கள் இரண்டும் சூலத்தண்டை குறுக்கே பிடித்து நிற்க, கீழ் வலக் கரம் துள்ளிக் குதிக்கும் மானுக்குத் துளிர் ஊட்டும் கரமாக அமைந்துள்ளது. சிவனது இடப்புறம் குள்ளச் சிறுகணமும், அருகில் தாருகா வனத்துப் பெண்டிர் இருவர் ஆடை நெகிழ்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளனர். வலப்புறத்தில் தேவகணங்கள் குடையோடும் கொடியோடும் காத்து நிற்கின்றன.

அடுத்து அழகிய அன்னத்தின் மீது அமர்ந்துவரும் ரதிதேவி எதிரே உள்ள மன்மதன் மேல் மலர்க்கணை ஏவுகிறாள். மன்மதன் கிளிகள் இழுக்கும் தேரில் அமர்ந்தவண்ணம், கரும்பு வில்லைத் தொடுக்கிறான். ரதியின் பின்புறம் வேலைப்பாடு மிக்க சேலை கட்டிய பணிப்பெண்கள் இருவர் காட்டப்பட்டுள்ளனர்.

சங்ககாலம் முதல் காமன்-ரதி இருவரைப் பற்றிய இலக்கியச் செய்திகளும் கலைச் சுவடுகளும் காணக்கிடைக்கின்றன. எனினும் ரதியின் உருவம் சிற்ப, ஓவியங்களில் விஜய நகரர் காலம் தொட்டுத்தான் மிகுதியாகப் படைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வோவியங்களின் அமைப்பும், பகுப்பும், அழகும், அளவும், கோடுகளும். கோணங்களும், வண்ணமும், வடிவமும் விஜயநகரர் கலைப்பாணிக்கு மெருகூட்டுவதாய் அமைந்துள்ளன.

---

1. Thiruvellarai Paintings - V. Vedachalam, - South Indian Studies. Vol. I. pg. 133.
2. South Indian Paintings - pp. 134-5.
3. ஓவியப்பாவை - பக். 159-60.

திருப்புடைமருதூர்

திருநெல்வேலி மாவட்டம் திருப்புடை மருதூர் கோயிற் கோபுரத்தில் விஜயநகரர் கால ஓவியங்களைப் பதிவு அலுவலர் திரு. எஸ் ஹரிஹரன் அவர்கள் கண்டறிந்தார்.[1] இங்கு கப்பலொன்றில் அரேபிய வணிகர்கள் குதிரைகளோடு வந்திறங்கும் காட்சி அழகிய வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் விஜயநகரர் காலத்தில் போர்க்குதிரைகள் அரேபியாவிலிருந்து இறக்குமதியான வரலாற்றுச் செய்தியினை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வோவியம் அமைந்துள்ளது. இங்குள்ள ஓவியங்களில் குதிரைகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வரையப்பட்டுள்ளது என்பதும் புலனாகிறது. போர்க்குதிரைகளின் இயற்கைத் தன்மையினைச் சிறப்பாக சித்தரிக்கும் நிலையினையும் இவ்வோவியங்கள் வழிக் காண்கிறோம். இவ்வோவியங்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரர் கால ஓவியங்களுக்குச் சான்றாகக் கூறலாம்.

மேற்கூறப்பட்ட விஜயநகரர் காலத்து ஓவியங்களைத் தொகுத்து நோக்குங்கால் விஜயநகர மன்னர்கள் இந்து சமய வளர்ச்சிக்கு, குறிப்பாக வைணவ சமய வளர்ச்சிக்கு அளித்திருந்த சிறப்பிடம் புலப்படுகிறது. மேலும் இராமாயணக் காவியத்தில் அவர்களுக்கிருந்த ஈடுபாட்டையும் அறியமுடிகிறது. குறிப்பாகக் கூர்ந்து நோக்குவோமானால் தமிழ்ப் பண்பாட்டில் ஆந்திர - கருநாடகப் பண்பாட்டின் தாக்கத்தால் ஏற்பட்ட மாற்றத்தையும் அறிய இயலுகிறது. கி. பி. 15-16-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழில் கலந்த தெலுங்குச் சொற்களையும், பேச்சு வழக்குகளையும், ஆடையணிகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் நமக்குணர்த்தும் நேரடிச் சான்றுகளாக இவ்வோவியங்களைக் கொள்ளலாம்.

விஜயநகர மன்னர்களது பிரதிநிதிகளாக வந்து, அரச மரபாக ஆளத்தொடங்கியவர்கள் நாயக்கர்கள். மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கர், செஞ்சி நாயக்கர் என்று சொல்லுமளவுக்கு மூன்று இடங்களில் தங்கள் ஆளுகையைச் செலுத்தியவர்கள். இந்நாயக்கர்கள் கால ஓவியங்களும் தமிழ்நாட்டில் பரந்து காணப்படுகின்றன.

மதுரை

மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் ஊஞ்சல் மண்டபத்தின்மேல் விதானத்தில் அங்கயற்கண்ணி அம்மையைச் சுந்தரேசப் பெருமான் மணந்துகொள்ளும் காட்சி மிக அழகாகத் தீட்டப்பட்டுள்ளது.

திருமால் நீர் வார்த்துக் கொடுக்க, ஆலவாய் அண்ணல் அம்மையின் கரம் பற்றும் காட்சி அமரரும் மானிடரும் வியக்கும் காட்சியாக அமைந்துள்ளது. அதன் ஒரு புறத்தில் ராணி மங்கம்மாள், மீனாட்சி திருமணத்தைக் கண்டு போற்றி வணங்குகிறார். அவர் அருகில் 'மகாராஜராஜ ஸ்ரீ மான்ய மகாராஜ ஸ்ரீ மங்கம்மாள் அவர்கள்' எனத் தெலுங்கிலும் தமிழிலும் எழுதப்பட்டுள்ளது.[2]

மங்கம்மாள் அருகில் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் சிறுவனாகக் காட்டப்பட்டுள்ளார். மறுபுறத்தில் தளவாய் இராமப்ப ஐயனுடைய உருவமும் பெயரும் தீட்டப்பட்டுள்ளது. இதைச் சுற்றிலும் மீனாட்சி அம்மன் எண் திசைக் காவலர்களுடன் போரிடும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர அங்கயற்கண்ணி அம்மை அரியணையில் வீற்றிருக்க, அந்தணர் ஒருவர் அம்மையிடமிருந்து செங்கோலை வாங்க, அருகில் ராணி மங்கம்மாளும் பிறரும் வணங்கி நிற்கும் காட்சி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது.[3]

---

1. Tiruppudaimarudur Paintings - S. Hariharan - South Indian Studies II, pg. 176.
2. தமிழ்நாட்டு ஓவியங்கள் – மா. சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற்கலைகள் - பக். 125.
3. மேற்படி. பக். 126.

சித்திரைப் பெருவிழாவின் எட்டாம் நாள் திருமலை நாயக்கர் மீனாட்சியம்மனிட மிருந்து செங்கோலைப் பெறும் வரலாற்று நிகழ்ச்சி இக்கோயிலில் திருவிழா நிகழ்ச்சியாக நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சி ராணி மங்கம்மாள் காலத்திலும் தொடர்ந்து கடை பிடிக்கப்பட்டதை இவ்வோவியக் காட்சி தெளிவுபடுத்துகிறது. இந்த ஓவியம் ராணி மங்கம்மாள் காலத்தது. கி.பி. 1700-இல் தீட்டப்பட்டது.

அழகர்கோயில்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கால ஓவியங்கள் அழகர் கோயிலை அழகுற அலங்கரிக்கின்றன. இவ்வோவியங்கள் திருச்சுற்று மேல் விதானங்களிலும் வசந்த மண்டபத்திலும், கல்யாண மண்டபத்திலும் அமைந்திருப்பதோடு,[1] தந்தச் சிற்பங்கள் மீதும், சோமச் சந்த விமானத்தைச் சுற்றிலும் உள்ள சுதை உருவங்களின் மீதும் அமைந்து நம் கண்களுக்கு விருந்தளிக்கின்றன.

திருமலைநாயக்கர் காலத்தைச் சார்ந்த ஸ்ரீதேவி, பூதேவி, திருமால் ஓவியங்கள் திருச் சுற்றில் அமைந்த ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கவை. நாயக்கர் கால ஓவியத் திறனுக்குச் சான்று பகர்பவை. அழகர் கோயில் கருவறை மூலவர் தோற்றத்தினை அப்படியே ஓவிய மாக்கி, வசந்த மண்டபத்தில் படைத்துள்ளனர். இங்கு பஞ்ச மூர்த்திகளின் உருவங்களை யும் அவர் தம் தேவியரையும் வண்ணத்தில் வரைந்துள்ளமை ஒப்பரிய சிறப்பம்சம் எனலாம். மேலும் இங்கு இராமாயணக் காவியம் முழுவதும் ஓவியமாகக் காட்சியளிக்கிறது. மைய மண்டபத்தின் உள்விதானத்திலும் வெளியிலும் வைணவ சமயச் சார்பான ஓவியங்களைப் பார்க்க முடிகிறது.

வசந்த மண்டபத்தில், உருவங்கள் உயிர் பெற்றதோ என்று வியக்கும் வகையில் அழகுத் தோற்றத்துடன் எழில் வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளமை நாயக்கர் கால ஓவியப் புலமைக்கு நற்சான்றளிப்பதுடன்; சமுதாயக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது அக்கால மக்களின் வாழ்க்கை நிலையை பல்வேறு கோணங்களில் நம் கண்முன் கொணர் வதாக உள்ளது என்றே கூறலாம். இவற்றையெல்லாம் சொற்களால் நூலில் வடிப்பதைக் காட்டிலும், வண்ணத்தால் நம் எண்ணத்தில் நிலைபெறச் செய்திருப்பது அறிந்து இன்புறற்குரியது. வசந்த மண்டபத்தில் அமைந்துள்ள ஓவியக் காட்சிகள் அனைத்திற்கும் அன்றைய பேச்சு வழக்குத் தமிழில் விளக்கம் தரப்பட்டுள்ளன. இம்மரபு இங்கு மட்டு மன்றி ஸ்ரீவில்லிப்புத்தூர், செங்கம், இராமநாதபுரம் போன்ற இடங்களிலும் காணப்படு கின்றன. இதன் மூலம் அன்றைய தமிழ் மக்களின் பேச்சு வழக்கினை நாம் அறிவதோடு பண்பாட்டிலும், மொழியிலும் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களையும், கலப்புகளையும் தெளி வாகப் புரிந்து கொள்கிறோம். நாயக்க மன்னர்கள் தெலுங்கு மொழி பேசுபவர்களாதலின் அவர்தம் மொழியும், பண்பாடும் தமிழோடு எப்படிக் கலந்து செயல்பட்டன என்பதற்கும் மிகச் சிறந்த சான்றுகளை இவ்வோவியங்கள் தருகின்றன என்பதும் மறுத்தற்கியலாது. இதுபோலவே அக்கால ஆடையணிகளின் எண்ணற்ற வகைகளையும் இவ்வோவியங்கள் வழி அறிகிறோம். நவரத்தினங்கள் பதித்த உயர்ந்த அணிகளை இங்கு காண்கிறோம். இரத்தினக் கற்கள் பதித்த கிரீடங்களும், தேவியரும், பெண்களும் அணிந்துள்ள அணிவகைகளும் குறிப்பிடத்தக்கன.

தசரத மன்னரின் தேவியர் பல்லக்கில் ஏறி அயோத்தி செல்லும் காட்சி ஓவியமாக்கப்பட்டுள்ளது. இதில் தீட்டப்பட்டுள்ள "மூடு பல்லாக்கும்" அதனைத் தூக்கிச் செல்லும் பல்லக்குத் தூக்கிகளின் தோற்றமும் நம்மை 17-ஆம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலுக்கே கொண்டு செல்கின்றன. பல்லக்குத் தூக்கிகளின் காதுகளில் அணிந்துள்ள கடுக்கண் குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய தோற்றம் அன்றைய சமுதாயத்தில்

---

1. இவ்வோவியங்களை 1976 - ஆம் ஆண்டு திருவாளர்கள் மா. சந்திரமூர்த்தி, வெ.வேதாசலம், முத்துப்பிச்சை ஆகியோர் கண்டறிந்தனர்.

பணி மக்கள் எத்தகைய ஆடை அணிகலன் அணிந்திருந்தனர் என்பதைக் காட்டுவதாய் உள்ளது. ராமர் முதலானோர் பிறக்கும் காட்சியைச் சித்தரித்திருப்பது இயற்கையாக அமைந்துள்ளது. குழந்தைகளைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் நிகழ்ச்சி ''தூங்கு மஞ்சல்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. ''தெசரதமாராசாவும் விசுவாமித்திரனும் அறுபத்தாறு ராசாக்களும் கூடி கொளுவு சாவடியிலிருந்து கொண்டு ராமசுவாமி பட்டாபிசேகத்துக்கு மந்திரிமாறுடனே கூடி ஆலோசனை பண்ணுவது'' என்று பேச்சுத் தமிழில் அமைந்த இவ்விளக்கக் குறிப்பில் 'கொளுவு சாவடி' என்பது அரசனின் கொலு மண்டபத்தைக் குறிக்கப் பயன்பட்டிருத்தல் காண்க. இன்றும் கிராமங்களில் ''கொளுவு சாவடி'' என்ற சொல் பேச்சு வழக்கில் உள்ளது. பேச்சுத் தமிழில் நாட்டுப்புற இலக்கியம் போல் எழுதப்பட்டிருந்தாலும் தெளிவாக அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதில் நோக்கமுடையோராக இருந்துள்ளனர் என்பதைக் கீழ்க்கண்ட விளக்கத்தினால் அறியலாம்;

யிந்தபத்தி வாசிச்ச பிரகு மேலபத்தி
வாசிச்சு நெடுகிலுபோயி வாசிச்சு இந்த
கீளபத்தி வாசிச்சுக் கொண்டு மூலைவரை
யிலும் போகவும்.

இவ்வோவியங்கள் கண்ணுக்கு விருந்தாக மட்டுமன்றி அவை வரையப்பட்ட காலத்தின் சமய, சமுதாய வரலாற்றுச் செய்திகளைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடிகளாக உள்ளன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

திருவரங்கம்

திருவரங்கத்தில் குழலூதும் பிள்ளைக் கோயிலில் உள்ள ஓவியங்களைத் தவிர இன்னும் நான்கு இடங்களில் பண்டைய ஓவியங்கள் காணப்படுகின்றன. ஒன்று தென்புறத்திலிருந்து கோயிலினுள் நுழையும்போது மூன்றாவது கோபுரத்தின்மேல் விதானத்தில் உள்ளது. மற்றொன்று தாயார் கோயிலில் உட்சுற்று விதானத்திலும் பக்கச் சுவர்களிலும் உள்ளது. மூன்றாவது இராமானுசர் சன்னதி முன் மண்டப விதானத்தில் உள்ளது.[1] அதனை அடுத்து கிளி மண்டபத்திலும் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. இவற்றுள் கோபுரத்தில் உள்ளது 17-ஆம் நூற்றாண்டு ஓவியமாகக் கருதப்படுகிறது. தாயார் கோயிலில் உள்ள ஓவியங்களும், இராமானுஜர் கோயில் ஓவியங்களும் விஜயரங்க சொக்கநாதர் காலத்தவை. இவை 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வளர்ந்த மதுரை நாயக்கர் கால ஓவியத்திற்குச் சான்றாக விளங்குபவை.

ஆழ்வார் திருநகரி

மதுரை நாயக்க மன்னன் விஜயரங்க சொக்கநாத நாயக்கன் (கி. பி. 1725) காலத்து ஓவியங்கள் ஆழ்வார் திருநகரி ஆதிநாதப் பெருமாள் கோயிலில் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டது.[2] இக்கோயிலில் இராமாயணக் கொரடு, கருவறை முன் மண்டபம் மற்றும் நம்மாழ்வார் சன்னதி ஆகிய இடங்களில் இவ்வோவியங்கள் காணப்படுகின்றன. தென்னகத்தி லுள்ள ஒன்பது வைணவத் தலங்களையும் அவற்றில் உறையும் இறைவனையும் வரைந்து பெயர்களையும் தமிழ் எழுத்துக்களில் எழுதி வைத்துள்ளனர். விஜயரங்க சொக்கநாத நாயக்கனுடைய உருவமும் இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

செங்கம்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செங்கம் வேணுகோபால பார்த்தசாரதி ஆலயத்தில் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமாயண ஓவியங்களைப் பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் 1972-இல் கண்டுபிடித்தார். இக்கோயில் சற்றேறக்குறைய கி.பி. 1600-இல் செஞ்சி நாயக்க மன்னனால் கட்டப்பட்டது. கி.பி. 1632-இல் இக்கோயிலில்

1. A Ramanuja Painting - Indian Express - dt. 19-7-1977
2. Nayak Paintings in temple at Alwartirunagari, - Indian Express - dt. 25-11-1976.

உறையும் இறைவன் அர்ச்சுன சாரதியான கோபால கிருஷ்ணசாமி என்று வழங்கப் பட்டுள்ளதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கோயிலை கட்டிய நாயக்க மன்னரின் உருவமும் மகா மண்டபத்தில் காணப்படுகிறது. இம்மண்டப விதானத்தில் இராமாயண ஓவியங்கள் காணப்படுகின்றன. இராமகாதை முழுதும் ஓவியமாகத் தொடக்க முதல் பட்டாபிஷேகம் வரை தொடர்ச்சியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. வெளிப்பகுதியில் இருந்த ஓவியங்கள் மறைந்துவிட்டன. உட்பகுதியில் மட்டும் ஓவியங்கள் நல்ல நிலையில் எஞ்சியுள்ளன. இந்திரஜித்து நிகும்பல யாகம் செய்தல், இலக்குவனோடு போர்புரிதல், அனுமன் சஞ்சீவி மலையைக் கொண்டு வருதல், மேகநாதன்வதம், இராமராவண யுத்தம், இராவண வதம், சீதை அக்கினிப் பிரவேசம், புஷ்பக விமானத்தில் செல்லுதல், பாரத்வாஜ ஆசிரமத்தில் தங்குதல், இராம பட்டாபிஷேகக் காட்சிகள் முதலியன தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளன. இவ்வோவியங்களுக்கு விளக்கங்கள் தமிழ் எழுத்துக்களில் தமிழ் மொழியிலும், சிற்சிலவிடத்துத் தெலுங்கு எழுத்துக்களில் தெலுங்கு மொழியிலும் எழுதப் பட்டுள்ளன.

இவ்வோவியத்தில் காணப்படுகின்ற சில காட்சிகள் வால்மீகி இராமாயணத்திலோ, கம்பனின் காப்பியத்திலோ குறிக்கப்படவில்லை. சான்றாக யுத்த சாண்டத்தில் போரின் நடுவில் அனுமன் மண்டோதரியை அடிக்கிறான். அங்கதன் மண்டோதரியின் தலை மயிரைப் பிடித்து இழுக்கிறான். இராவணன் அங்கதன் மீது சக்திப்படையை ஏவி மண்டோதரியை விடுவிக்கிறான். இது போன்ற காட்சி மேற்கூறிய இராமாயணங்களில் இல்லை. இவ்வோவியக் காட்சிகள் சில தெலுங்கு மொழியில் இருப்பதாக முன்னர் கண்டோம். தெலுங்கு மொழியிலுள்ள ரங்கநாதர் இராமாயணத்தில் இராவணன் புரிந்த பாதாள ஹோமம், அனுமனும் அங்கதனும் மண்டோதரியை அடித்ததும், குத்தியதும் இடம்பெற்றுள்ளன. எனவே தெலுங்கு இராமயணத்தை அடிப்படையாகக் கொண்டு தெலுங்கு மரபு தமிழில் இடம் பெற்றுள்ளதை இவ்வோவியங்கள் தெளிவுறுத்துகின்றன. மேற்கு பகுதி முழுதும் சீதாராம பட்டாபிஷேகம் மிகப் பெரிய அளவில் இடம் பெற்றுள்ளது. நாயக்கர் கால ஓவியங்களுக்கு மிகச் சிறந்த சான்றாகச் செங்கம் ஓவியங்கள் உள்ளன.

தஞ்சாவூர்

தஞ்சைப் பெரிய கோயிலின் உட்சுவற்றில் சோழர் கால ஓவியங்கள் உள்ளதெனக் கண்டோம். அதன்மீது நாயக்சர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. இவற்றில் கண்ணப்பர், சக்ரதானமூர்த்தி, எண்டிசைக் காவலர் ஆகிய ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை.[1] இவை தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்கர் காலத்தவை. இவற்றைக் கி. பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கொள்ளலாம்.

கும்பகோணம்

குடந்தை இராமசாமி கோயிற் திருச்சுற்றின் உட்சுவரில் இராமாயண ஓவியங்கள் பெரிய அளவில் தீட்டப்பட்டிருந்தன. தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கர் இக்கோயில் இறைவனிடம் மிகவும் ஈடுபாட்டுடன் இருந்தார். எனவே இவ்வோவியங்களை அம்மன்னர் காலத்ததாகக் கொள்வதில் தவறேதுமில்லை. இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த திருப்பணிகளில், இவ்வோவியங்கள் முழுதும் மறைக்கப்பட்டு அதன் மேல் புதிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. முன்பிருந்த பழைய ஓவியங்கள் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வரையப்பட்டிருக்கலாம்.

பட்டீஸ்வரம்

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பட்டீஸ்வரம் கோயிற் திருச்சுற்றிலும் அம்மன் கோயில் முன்மண்டப விதானத்திலும் ஓவியங்கள் உள்ளன. சிவன் கோயிற் திருச்சுற்றில் தலபுராண ஓவியம் இடம் பெற்றுள்ளது. தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கரின்

1. ஓவியப் பாவை - பக். 160.

அமைச்சர் கோவிந்த தீக்ஷிதர் இக்கோயில் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்தார். எனவே கி.பி 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவ்வோவியங்களை இரகுநாத நாயக்கர் காலத் தவையாகக் கொள்ளலாம்.

திருவாரூர்

திருவாரூர்த் தியாகேசர் கோயிலில் தேவாசிரியரின் மண்டபம் என்ற பெரிய மண்டபத்தின் விதானத்தில் அழகிய ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை திருவாரூர்க் கோயிற் தல வரலாற்றைச் சித்தரிக்கின்றன. ஓவியக் காட்சிகளின் கீழே விரிவான விளக்கங் கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வோவியத்தில் முசுகுந்தச் சக்கரவர்த்தி குரங்கு முகத்துடன் காட்டப்பட்டுள்ளார்[1]. திருமாலின் மார்பில் தியாகேசர் இருப்பதில் தொடங்கி, இந்திரன் அசுரர்களுடன் போரிடுவது, முசுகுந்தன் இந்திரனுக்கு உதவியாகப் போரிடுவது, முசுகுந்தன் தியாகேசரைக் கேட்பது, ஒன்று போலவே ஆறு உருவங்களைக் காட்டுவது, முசுகுந்தன் அதில் உண்மை உருவைக் காட்டித் தியாகேசரைப் பெற்றுத் திருவாரூர்க்குக் கொணர்ந்து பிரதிட்டை செய்து வழிபடுவது ஆகிய காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இந்த ஓவியங்கள் தஞ்சை நாயக்கர் பாணியில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் கி.பி 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை எனலாம்,

தஞ்சை நாயக்க மன்னர்கள் தங்களாட்சி முழுமையும் விஜயநகரப் பேரரசிற்குக் கட்டுப்பட்டவர்களாக, நெருங்கிய நண்பர்களாக, அவர்களோடு மண உறவு கொண்டவர் களாகத் திகழ்ந்துள்ளனர். எனவே இத்தகைய அரசியல், பண்பாட்டு உறவால் நாயக்கர் காலக் கலைகளில் விஜயநகரர் கலைப் பாணியின் தாக்கம் நன்கு பரவிக் கிடப்பதைக் காணமுடிகிறது.

மராட்டியர் கால ஓவியங்கள்

தஞ்சை நாயக்கர் கால இறுதியில் மராட்டியர் ஆட்சி நிறுவப்பட்டது. மராட்டிய மன்னர்களுள் சரபோஜி மன்னர் புகழ்பெற்றவர். கட்டடக் கலையும், கவின்கலையும் இவர் காலத்தில் சிறப்பெய்தின. இவர்களாட்சி நாயக்கர் ஆட்சியின் தொடர்ச்சியே எனினும்; அரசியல், மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், ஆடையணிகள், அழகுக்கலைகளான இசை, ஓவியக்கலை, கிராமியக்கலை ஆகியவற்றில் சிறு வேறுபாட்டையும் காண இயலும். அவை காலப்போக்கில் தமிழக மக்களிடையே பரவின. அவற்றுடன் மேலைநாட்டு நாகரிகமும் கலைமரபும் இணையத் தொடங்கின. அவற்றின் சாயலை மராட்டியர் காலக் கலைப்படைப்பு களில் காணலாம். மராட்டியர் காலத்து ஓவியங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. சுவரோவியங்கள், 2. தஞ்சைக் கண்ணாடி ஓவியங்கள், 3. சுவடி ஓவியங்கள்.

மராட்டியர் காலச் சுவரோவியங்கள் தஞ்சாவூர், வெண்ணாற்றங்கரை, கரந்தை, குறிச்சி, திருமங்கலக் குறிச்சி, கோனேரிராஜபுரம், நெய்தவாசல் ஆகிய இடங்களில் காணப் படுகின்றன.

தஞ்சாவூர்

தஞ்சைப் பெரிய கோயிலின் திருச்சுற்று மாளிகையிலும், அம்மன் கோயில் முன் மண்டப விதானத்திலும், சுப்பிரமணியர் கோயில் முன் மண்டபத்திலும் சரபோஜி மன்னன் (கி. பி. 1800) கால ஓவியங்கள் காணப்படுகின்றன. சுப்பிரமணியர் கோயில் முன் மண்டபத் தில் சரபோஜியின் உருவமும், துக்கோஜி சுஜான்பாயி பிரதாபசிங், துளஜா, இரண்டாம் சரபோஜி, சைதாப் பாபாயி சாகேப், ஏகோஜி, ஷாஜி மன்னர்களது உருவங்கள் மிகப் பெரிய அளவில் தீட்டப்பட்டுள்ளன. சரபோஜி மன்னரது உருவம் எடுப்பாகவும் கம்பீர மாகவும் உள்ளது.

---

1. South Indian Paintings.

அம்மன் கோயிலில் உள்ள ஓவியங்கள் தேவீ மகாத்மியக் கதையைச் சித்தரிக்கின்றன.[1] சும்பன் நிசும்பனை தேவி அழித்தது தொடங்கிக் காட்சிகள் அமைந்துள்ளன. மற்றொரு பகுதியில் தக்ஷ யக்ஞக் கதை இடம் பெற்றுள்ளது. சக்தி வழிபாட்டில் தக்ஷயக்ஞம் மிகச் சிறப்பிடம் வாய்ந்தது. இங்கு அம்மன் கோயிலில் அக்காட்சிகளைத் தீட்டியுள்ளது சக்தி தத்துவத்தோடு இணைந்ததாகும்.

இதைத்தவிர இருபக்கச் சுவர்களிலும் ராதா கல்யாணம், வள்ளி கல்யாணம், மீனாட்சி கல்யாணம், சூரியன் கல்யாணம், சந்திரன் கல்யாணம் முதலிய பல்வேறு தெய்வங்களின் திருமணக் கோலங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை மராட்டியர் காலத்தவையாய் இருப்பினும் கலை வளங்குன்றியிருப்பதைக் காணமுடிகிறது.

தஞ்சை அரண்மனை

மராட்டிய மன்னர்களின் தஞ்சை அரண்மனையிலும் பல இடங்களில் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. அரண்மனை வளாகத்திலுள்ள தர்பார் மண்டபத்தின் பின்புறச் சுவரிலும் வடக்குப் பக்கச் சுவரிலும் இக்கால ஓவியங்கள் உள்ளன. இவை மிகவும் தொன்மை வாய்ந்தவை. இவற்றில் மராட்டிய மன்னர்கள் பலரின் உருவங்கள் தீட்டப் பட்டிருந்தன. தற்போது இவற்றின் சிதைவுகளே காணப்படுகின்றன. வடக்குப் பக்கச்சுவரில் பிற்கால நாயக்கர்கால ஓவியங்களின் மீது மராட்டியர் கால ஓவியம் தீட்டப்பட்டிருக்கிறது. சரஸ்வதி மகாலுக்கு செல்லும் வழியிலுள்ள இராமர் பட்டாபிஷேகக் காட்சி போன்ற ஓவியங்கள் மராட்டியர் காலக் கலை வரலாற்றை அளவிட உதவுகிறது.

வெண்ணாற்றங்கரை

தஞ்சைக்கருகிலுள்ள வெண்ணாற்றங்கரை ஆனந்தவல்லியம்மன் கோயிலில் உட் சுவரில் மராட்டியர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன.[2] இங்குள்ள சரஸ்வதி ஓவியம் குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற தஞ்சாவூர் வீணையினை இவ்வோவியத்தில் காணலாம். பிற தெய்வ உருவங்களும் இசைக் கலைஞர்களும் நாட்டிய மகளிரும், தும்புரு, நாரதர் கிளிமுகங் கொண்ட சுகமுனிவர் ஆகியோரின் உருவங்களும் இங்கு காணத்தக்கவை. இவை கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டை சார்ந்த மராட்டியர் கலை மரபை வெளிப் படுத்துபவை.

குறிச்சி

நாகை காயிதே மில்லத் மாவட்டம், திருப்பனந்தாளுக்கு அருகே குறிச்சி என்னும் ஊர் உள்ளது. இவ்வூர்க் கோயிலில் முன்மண்டப விதானத்தில் இராமாயண ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை இயக்குநர். நடன. காசிநாதன் அவர்கள் தெரிவித்தார். இவ்வோவியத்தைத் தீட்டிய ஓவியன் வீழ்ந்து வணங்குவது போலக் காட்டப் பட்டுள்ளது.[3] அவன் பெயரும் அங்கு எழுதப்பட்டுள்ளது. ஓவியனின் பெயரும் உருவமும் உள்ளது இவ்விடமேயாம். திருச்சியைச் சார்ந்த ஆச்சி என்பாள் பொருள் கொடுத்து இவ் வோவியங்களைத் தீட்டச் செய்துள்ளாள். அவருடைய உருவமும் பெயரும் இங்கு இடம் பெற்றுள்ளது. இவ்வோவியங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

---

1. ஓவியப்பாவை – பக். 171.
2. இவ்வோவியங்களை 1975-ஆம் ஆண்டு திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் கண்டு பிடித்தார்.
3. Worshipful painter- Natana. Kasinathan - Indian Express - dt. 27-11-76.

நெய்தவாசல்

பூம்புகாருக்கருகிலுள்ள நெய்தவாசல் சிவன் கோயிலில் மராட்டியர் ஓவியங்கள் உள்ளன.[1] மகாமண்டப விதானத்தில் தீட்டப்பட்டுள்ள இவ்வோவியங்கள் உறுமி மேளக் களியாட்டத்தினையும், ஊர்வல நிகழ்ச்சியொன்றினையும் மையமாகக் கொண்டு தீட்டப் பட்டுள்ளன. இவை பிற்கால மராட்டியர் கால ஓவியமாகும்.

கோனேரிராஜபுரம்

தஞ்சை மாவட்டம் நன்னிலத்திற்கருகிலுள்ள கோனேரிராஜபுரம் சிவன் கோயிற் சுவரில் மராட்டியர் கால ஓவியங்கள் உள்ளன.[2] இங்கு கோயிலுக்கு வருகை தந்த ஐரோப்பியப் பிரபுக்களை வரவேற்று மகிழ்விக்கும் அரசர், அந்தணர், ஆடலணங்குகள் நட்டுவாங்கம், மேளக்காரர், நாதஸ்வர வித்துவான், ஒத்து ஆகியோரின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் நாட்டிய மகளிர் அணிந்துள்ள ஆடைகளும் அணிகளும் காணத் தக்கவை. ஐரோப்பியப் பிரபுக்களின் நவீன ஆடைகளும் எளிதில் மனதைக் கவரத்தக்கவை. மராட்டியர் கால இவ்வோவியங்களில் மேலைநாட்டுச் சாயல் படிந்திருப்பதைக் காண லாம். இதன் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி எனலாம்.

இக்காலத்தில் வரையப்பட்ட தஞ்சைக் கண்ணாடி ஓவியங்கள் புகழ்பெற்றவை. இவற்றில் ஆலிலைக் கண்ணன், வெண்ணைக் கண்ணன், யசோதா கண்ணன், இராமர் பட்டாபிஷேகம், அரச மரபினரின் ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை. இவர்கள் காலத்தில் சித்திரக்காரன் வேங்கடப்பெருமாள், வேங்கட நாராயணப்பையா, சாரங்கபாணி, சித்திரக் காரன் சின்னசாமி, சித்திரம் கோவிந்தசாமி போன்ற ஓவியர்கள் குறிப்பிடத்தக்கோர்.[3] மேலும் இவர் காலத்தில் சித்திரம் வரைவதில் பெண்களும் வல்லவர்களாய் இருந்துள்ளனர். இவர்களில் சித்திரக்காரி செங்கம்மாள் குறிப்பிடத்தக்கவர்.[4] இவர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்களாவர்.

தஞ்சை சரஸ்வதி மகாலிலுள்ள பாகவதம் போன்ற சுவடிகளில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டு வனப்புடன் காணப்படுகின்றன. மேலும் தாவர, விலங்கியல், மானிடவியல் தொடர்பான கண்கவர் ஓவியங்களும் சரஸ்வதி மகால் சேகரிப்பில் உள்ளன.

சேதுபதிகள் ஓவியம்

நாயக்கர்களின் கீழ்ச் சிற்றரசர்களாய் இருந்து, தமிழகத்தின் புகழ்மிக்க தீவான இராமேஸ்வரத்தைக் காத்துச், 'சேது காவலர்' என்றும் 'சேது காத்த தேவர்' என்றும் விருதுகள் பெற்று தமிழ் மண்ணில் வீர மணங்கமழச் செய்தவர்கள் சேதுபதிகள். தென் தமிழ் நாட்டு அரண்மனைகளுள் புகழ் பெற்று விளங்குவது இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்கவிலாசம். இது சேதுபதிகளின் கலைக்கொடை. இப்பெருமாளிகை கி.பி. 1700 வாக்கில் கிழவன் சேதுபதி யால் கட்டப்பட்டது.[5] இது ஓர் அழகிய சித்திரக் கூடமாகும். இராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட முத்து விஜய ரகுநாத சேதுபதி, இராமலிங்கவிலாசத்தின் கருவறையில் இராமாயண ஓவியங்களை வரையச் செய்துள்ளார். இங்குள்ள இராமாயண ஓவியங்கள்

1. இவ்வோவியத்தை 1975 – ஆம் ஆண்டு திரு, மா.சந்திரமூர்த்தி அவர்கள் கண்டறிந்தார்.
2. இவ்வோவியங்களை திரு. கி. ஸ்ரீதரன் அவர்கள் கண்டுபிடித்தார்.
3. சரபோஜி மன்னர் வளர்த்த ஓவியக் கலை – ம. சா. அறிவுடைநம்பி - தினமணி 14–1–1990.
4. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் - கே.எம். வேங்கட ராமையா – தமிழ்ப் பல்கலைக் கழகம், 1984, பக். 419.
5. இராமலிங்க விலாசம் அரண்மனை அகழ்வைப்பகம் கையேடு - மா. கலைவாணன் தொ.பொ.ஆ. துறை, 1989, பக். 213.

தெலுங்கு இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆங்காங்கே ஓவியக் குறிப்புகள் பேச்சுத் தமிழ் வழக்கிலேயே உள்ளன.[1] 'வால்மீகி ஆசிரமத்துக்கு நாரதர் வந்தவுடனேயே பூசை பண்ணி, புண்ணியக் கதை சொல்லச் சொல்லி கேட்டதற்கு இராமசுவாமி புண்ணிய புருஷனென்று இராமாயணம் சொன்னது' எனப் பாலகாண்டம் தொடங்கி பரதன், இலக்குவன், சத்ருக்கனன் திருக்கல்யாணம் வரை ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.[2] அடுத்து மேற்சுவரில் பாகவத ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இவை கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. தவிர, பெண்கள் பலரையுமே தொகுத்து யானை போன்ற உருவமாகக் காட்டி, அதன்மேல் அரசர் அமர்ந்து கரும்பு வில்லில் மலர்க்கணை தொடுக்க, எதிரே அது போலவே பெண்கள் பலரையும் தொகுத்துக் குதிரை உருவமாகக் காட்டி அதன்மேல் அரசி அமர்ந்து மலர்க்கணை தொடுப்பது போன்று தீட்டப்பட்டுள்ள ஓவியம் சிறப்பிற்கும், ஓவியனின் கற்பனைத் திறனுக்கும் சான்று. இவை தரங்கம்பாடி அகழ்வைப்பகம் மற்றும் கருநாடக மாநில அருங்காட்சியகத்திலும்[3] உள்ள ஓவியங்களோடு ஒப்பிடத்தக்கவை. இவை தவிர சேதுபதிகளின் அரசியல் நிலைமை, போர் முறை, பொழுதுபோக்கு, அந்தப்புர வாழ்க்கை முதலியவற்றைச் சித்தரிக்கும் ஓவியங்களும் கண்டுகளிக்கத் தக்கவை.

இராமநாதபுரம் அருகேயுள்ள உத்தரகோசமங்கை[4] கோயிற் கோபுரத்திலும், நடராஜர் சன்னதியின் விதானத்திலும், இராமேஸ்வரம் கோயிலிலும், தேவதானம் நச்சாடை தவிர்த்த நாயனார் கோயிலிலும்[5] சேதுபதி கால ஓவியங்கள் உள்ளன.

சிவகங்கை மன்னர் ஓவியம்

சேதுபதிகளுடன் நெருங்கிய நட்புறவும் மணவுறவும் கொண்டு மறவர் சீமையை ஆண்டவர்கள் சிவகங்கை அரசர்கள். இவர்கள் காலத்து ஓவியங்களை சிவகங்கை, திருக்கோஷ்டியூர், காளையார் கோயில்,[6] திருமலை[7] ஆகிய இடங்களில் காணலாம். இவை கி. பி. 18-19ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

உடையார்பாளையம் ஓவியங்கள்

திருச்சி மாவட்டத்திலுள்ள முக்கியமான ஜமீன்களில் இதுவுமொன்று. இவ்வூரில் பயற்ணீஸ்வரர் கோயில் என்ற சிவன் கோயிலும், வரதராஜப் பெருமாள் கோயிலும் உள்ளன. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பெருமாள் கோயிலின் சுற்று மண்டபத்தில் இராமாயண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் குறிப்பிடத்தக்கவை அயோத்தி மாநகரின் வடிவமும், அந்நகரின் நான்கு மூலைகளிலும் நான்கு பீரங்கிகள் வைக்கப்பட்டுள்ள காட்சியும் ஆகும். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பீரங்கி பயன்பாட்டில் வந்ததை இவ்வோவியங்கள் தெளிவுறுத்துகின்றன. இதுபோன்ற பீரங்கிகளை இராமநாதபுரம் ஓவியத்திலும் காண்கிறோம். இவ்வோவியங்களைப் பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் 1981-ஆம் ஆண்டு கண்டறிந்தார்.

மேலும் பாண்டிய நாட்டில் பாளையக்காரரது ஓவியங்களும் காணக்கிடைக்கின்றன. மதுரை மாவட்டம் போடிநாயக்கனூர் மற்றும் காமராஜர் மாவட்டம் பாலவநத்தம் சிவாலய ஓவியமும் குறிப்பிடத்தக்கவை.

---

1 இராமலிங்கவிலாசம் இராமாயண ஓவியக் குறிப்புகள் – தொகுப்பாசிரியர் இரா.ப.கருணானந்தன், காப்பாட்சியர் – பதிப்பாசிரியர் நடன. காசிநாதன் - பக். 2,3.

2. Ibid. p. 14-25.

3. S.R. Rao & B. V. K. Sastry. Traditional Paintings of Karnataka - Plate. 43-44

4. இங்குள்ள ஓவியம் மா. சந்திரமூர்த்தி அவர்களால் 1976-இல் கண்டறியப்பட்டது.

5. நச்சாடை தவிர்த்தருளிய நாயனார் - மா. சந்திரமூர்த்தி – தினமணிச்சுடர் 6-11-1977

6. இக்கோயில் ஓவியங்களை 1976 - ஆம் ஆண்டு, மா. சந்திரமூர்த்தி, காப்பாட்சியர் வெ. வேதாசலம் ஆகியோர் கண்டறிந்தனர்.

7. இவ்வோவியம் 1976–இல் மேற்கூறிய இருவருமே கண்டறிந்தனர்.

நகரத்தார் ஓவியம்

மன்னர் பின் வந்தோர் என்று போற்றப்படும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் குலமரபுக் கோயில்கள் ஒன்பது. அவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் இலுப்பைக்குடி, மாத்தூர், நேமம், பிள்ளையார்ப்பட்டி, இரணியூர், சூரக்குடி, வேலங்குடி, வைரவன் கோயில் ஆகிய ஊர்களில் உள்ளன. இவற்றில் இலுப்பைக்குடிக் கோயிலில் திருவிளையாடற்புராணம் விரிவாகத் தீட்டப்பட்டுள்ளது.[1] இரணியூர் ஆட்கொண்டநாதர் கோயிலில் இலட்சுமி மண்டபத்தில் முழுதும் ஓவியங்கள் உள்ளன. சிவபுராணம், நால்வர் மற்றும் பன்னிரண்டு இராசிகள் ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.[2] இவை கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவை ஆத்தங்குடிக் கோயிலில் திருச்சி கோபால் ராஜு (1928) தீட்டிய ஓவியங்களுடன் ஒப்பிடத்தக்கன.[3] இரணியூர்க் கோயிலி லுள்ள பிற்பட்ட கால ஓவியங்கள் மதுரை சித்திரக்காரர் ரா. ம. முத்தளகிரி நாயுடுவால் 1943-44-இல் தீட்டப்பட்டவை. பிள்ளையார்ப்பட்டி கோயில் முன்மண்டபத்தில் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஓவியங்கள் உள. இங்குள்ள பிள்ளையார் ஓவியமும் புகழ்பெற்றது. எந்தக் கோணத்திலிருந்து பார்ப்பினும் நம்மையே பார்ப்பது போன்றுள்ளது தனிச்சிறப்பு. இளையாத்தங்குடி[4] மற்றும் வைரவன் கோயிலிலும்[5] நகரத்தார் ஓவியங்கள் உள்ளன.

நகரத்தார் ஓவியங்கள் நாயக்கர் காலக் கலைப்பாணியில் அமைந்துள்ளன. இலுப்பைக் குடி, இரணியூர் ஓவியங்கள் முந்தைய கலைப்பாணியின் தொடர்ச்சிக்கு ஒரு குறிப்பிடத் தக்க சான்று எனலாம். நகரத்தார் கால ஓவியப்பாணி வளர்வதற்கு இவை ஓர் அங்கமாக அமைந்துள்ளன. இவை பிற்கால விஜயநகர நாயக்க மரபின் தொடர்ச்சி எனலாம். இம்மாவட்டத்தில் அதற்கு முன்பிருந்த சிவகங்கைச் சேதுபதி காலத்திய மரபுகளை சில வகையில் இது இணைத்துக் கொண்டது.[6]

தொல்பழங்கால மனிதன், நாகரிக மனிதனாக மாறத்துவங்கிய முதற்படி தொடங்கித் தற்காலம் வரை ஓவியம் மனிதனின் எண்ணப் பரிமாற்றமாகவும், கலைப் பரிமாற்றமாகவும், வளர்ந்து, காலந்தோறும் தமிழரின் நாகரிகம், பண்பாடு, மற்றும் சமய வளர்ச்சியினை அறிந்து கொள்வதற்கான முக்கிய அடிப்படைச் சான்றுகளுள் ஒன்றாய் அமைந்து விளங்கு கின்றன, எனில் அது மிகையாகா!

---

1. இலுப்பைக்குடி கோயில் – மா. சந்திரமூர்த்தி – பக். 67-80.
2. இரணியூர்க் கோயில் - மா. சந்திரமூர்த்தி - பக். 163 - 174.
3. மேற்படி. பக். 163-164.
4. டாக்டர். வ. தேனப்பன் - ஒன்பது நகரக் கோயில்கள் - பக். 140.
5. மேற்படி.
6. இரணியூர்க் கோயில் . பக். 174.

செம்பும் சிலையும் 3

தொல்பழங்காலம்

தமிழ்நாட்டில், வரலாற்றுக் காலத்திற்கு முன்பு வாழ்ந்த பழைய கற்கால மனிதன் கற்களைச் செதுக்கி பல்வகைக் கற்கருவிகளைச் செய்ய கற்றுக்கொண்டதன் மூலம், கல்லில் உருவங்களை உருவாக்கும் கலையின் தொடக்க நிலையில் தம்மை ஆட்படுத்திக் கொண்டான் என்று கூறலாம். புதிய கற்காலத்தில் கற்களை வழவழப்பாக்கும் கலையிலும், நுண்கற்காலத்தில் சிறுசிறு கற்களிலும், தாம் விரும்பிய ஆயுதங்களைச் செய்து கொள்ளக் கற்றுக் கொண்டான். பின்பு பெருங் கற்காலத்தில் முறைப்படி குறிப்பிட்ட உருவங்களை வடிக்கும் கலையில் தேர்ச்சி பெற்று விட்டான் என்று கருதலாம். இதுவே படிமக் கலையின் வளர்ச்சிக்கு முதற்படி எனலாம்.

தாய்த் தெய்வம்

திருநெல்வேலி மாவட்டம் திருவைகுண்டம் வட்டம்,ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப் பெற்ற அகழாய்விலிருந்து செம்பால் செய்யப்பெற்ற தாய்த் தெய்வ உருவமும், கோழி, நாய் போன்ற உருவங்களும் கிடைத்துள்ளன. இவற்றின் காலத்தைத் தொல்லியல் அறிஞர்கள் கி.மு. ஏழாம் நூற்றாண்டு எனக் கூறியுள்ளனர்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், கொடுமணல் என்ற ஊரில் மேற்கொண்ட அகழாய்விலிருந்து பெருங்கற்காலத்தியதான செம்பால் செய்யப்பெற்ற ஒரு சிறிய புலியின் உருவத்தைக் கண்டெடுத்துள்ளது.

பெருங்கற்கால இறைவுரு

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள உடையாநத்தம் என்ற ஊரில் பறவை போன்ற அமைப்புடைய உருவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை விசிறிப்பாறை என்று இவ்வூர் மக்கள் அழைக்கின்றனர். பெருங்கற்கால மக்கள் வழிபாடு செய்த இறைவுருவாக இது இருக்கலாம் என்றும் அல்லது அப்பகுதியில் ஆட்சி செய்த தலைவனின் ஈமச் சின்னமாக இருக்கலாமென்றும் கருதப்படுகிறது. ஒரு சில அறிஞர்கள் இதனைத் தாய்த்தெய்வம் என்று கருதுகின்றனர்.[1] வேறு சிலர் இவ்வுருவம் காடுகாளான கொற்றவையின் முன்னோடி உருவம் என்று கொள்கின்றனர்.[2]

இத்தாய்த் தெய்வம் கி. பி. ஆறாம் நூற்றாண்டில் பல்லவர்கள் வழிபட்ட ஸ்ரீவஸ்தம் எனும் பெண் தெய்வ வழிபாட்டின் முன்னோடியாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். இவ்வுருவத்தைச் சுற்றி வட்ட வடிவமான கல் திட்டைகள் காணப்படுவதிலிருந்து இத்தாய்த் தெய்வம் பெருங்கற்காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. இதுபோன்ற தாய்த் தெய்வம் வடஆற்காடு மாவட்டம் மோட்டூர்[3] என்னும் இடத்திலும் ஆந்திரப்பிரதேசத்தில்

1. History of Mankind - Unesco Vol. I. Fig. 55 A
2. Natana. Kasinathan — "The Concept of Sakti Cult in Tamilnadu" collected papers relating to Tamil Culture
3. Narasimha B., — Neolithic and Megalithic cultures in Tamilnadu - Delhi, 1980 Page 133-202 and 203.

கோதாவரி ஆற்றங்கரையிலுள்ள மல்லூர், கடப்பா, கபெர்லகுரு[1] ஆகிய இடங்களிலும் கேரளாவில் உள்ள வேநாடு பகுதியிலும் காணப்படுகிறது.[2] இதுபோன்ற உருவம் மகாராட்டிரத்தில் அய்கொளே பகுதியிலும் கிடைக்கின்றது.[3]

படிமம், பாவை - இலக்கியச் செய்திகள்

கலைவளர் தமிழகத்தில், பல்வகைக் கலைகள் சங்க காலத்திலிருந்து சிறந்து வளர்ந்து வந்துள்ளன. இவற்றுள் தலைச்சிறந்த கலையாக செம்பிலும், சிலையிலும் உருவங்களை வார்க்கும் கலையைப், 'படிமக்கலை' என்று இத்துறை வல்லுநர்கள் குறிக்கின்றனர். செம்பு, கல் இவற்றால் படிமங்கள் படைக்கும் கலையின் வரலாறு மிகத் தொன்மை வாய்ந்ததாகும்.

சங்க காலத்தில் தமிழ்நாடு வெளிநாட்டு வாணிபத்திலும் சிறந்து விளங்கி இருக்கிறது என்பதை மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்கள் குறிக்கின்றன. பெரிப்ளஸ் என்னும் நூலின் ஆசிரியர், தமிழ்நாட்டுக்கு இறக்குமதியான பொருள்களுள் செம்பு, ஈயம், வெள்ளீயம் ஆகிய உலோகங்களும் அடங்கும் என்று குறிக்கின்றார்.[4] மதுரை அங்காடியில் செம்பை நிறுத்து வாங்கிக் கொள்பவரை மதுரைக் காஞ்சி[5] குறிக்கிறது. இங்கு செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் செய்யப் பெற்ற பொருள்கள் மிகுதியாகக் கிடந்தன என்று சிலம்பு[6] குறிக்கிறது. செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் வேலை செய்பவர்கள் புகாரிலும்[7] வஞ்சி மாநகரிலும்[8] வாழ்ந்துள்ளனர்.

செப்புத் திருமேனிகள் என்று சொல்லும் பொழுது செம்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் செய்யப்பட்ட திருவுருவங்களும் இதில் அடங்கும். இவற்றைப் 'பொன் செய் பாவை' என்றும் பொதுவாகக் குறிப்பர்.[9] பண்டைக் காலத்தில் அனைத்து உலோகங்களும் 'பொன்' என்றே குறிக்கப் பெற்றன. தெய்வத் திருவுருவங்கள், பஞ்சலோகத்தில் செய்யப் பெற்றவை என்பதால் அவற்றை ஐம்பொன் என்றும் கூறுவர். ஐம்பொன் என்பது செம்பு, தரா, வெள்ளி, தங்கம், பித்தளை ஆகியவை கலந்ததாகும்.

படிமம்-வடிவம்

தொல்காப்பியம் அகத்திணை[10] இயல் சூத்திரத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் படிமை என்னும் சொல் ''பிரதிமா'' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு என்று குறிப்பிடுகின்றார். ''படிமம் போன்றிருப்ப நோக்கி'' என்று சீவகசிந்தாமணி குறிக்கும்.[11]

பாவை

'பாவை' என்ற சொல்லும் உருவத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். செதுக்கி அமைத்த அல்லது சுதையால், மண்ணால், தந்தத்தால் செய்தமைத்த உருவங்களைப் பாவை

---

1. Narasimha B., — Neolithic and Megalithic cultures in Tamilnadu - Delhi 1980 Page 133-202 and 203.
2. Ibid.
3. Sundara A., — Megalithics in the Western - Coast regions of Karnataka - A study. Journal of Karnataka University, Vol. X. IV. Fig. 4
4. இராமசாமி மே. சு., — தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள்
5. மதுரைக் காஞ்சி — 514
6. சிலம்பு — 2, 14, 174
7. சிலம்பு — 1, 5, 28
8. சிலம்பு - மதுரைக்காண்டம் — 28, 35
9. நாகசாமி இரா., — ஓவியப்பாவை – பொன்செய்பாவை - பக்கம் 67
10. தொல்காப்பியம் - அகத்தினை இயல் - சூத்திரம் எண். 28
11. சீவக சிந்தாமணி – 26, 42

என்று கூறும் பண்டைய மரபு இலக்கியங்களில் குறிக்கப்படுகிறது. கொல்லிமலையில் தெய்வ உருவச் சிலை ஒன்று இருந்துள்ளது என்பதைக் "கொல்லிப்பாவை அன்னாய்" என்று நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய இலக்கியங்கள் குறிக்கின்றன.[1]

ஓவத்தன்ன விடனுடை வரைப்பிற்
பாவையன்ன குறுந்தொடி மகளிர்

என்று புறநானூறு குறிக்கும்.[2]

செம்பினால் பாவைகள் செய்யப்பட்டதை "எரி எழுகின்ற செம்பினாலியன்ற பாவை" எனப் பெரிய திருமொழி குறிக்கிறது. உருக்கப்பட்டச் செம்பு முதலிய உலோகங்களின் குழம்பைக் குவையினின்றும் அச்சில் ஊற்றிச் செய்யப்பெற்ற படிமங்கள் எனப் பிரம்ம சூத்திரப்பாஷ்யத்தில்[3] சங்கரர் விளக்குவதன் மூலம் இவர் காலத்தில் இக்கலை வழக்கில் இருந்துள்ளதும் தெரிகிறது. இல்லங்களில் மெழுகப்பட்ட அறையில் வணங்கும் தெய்வ உருவங்கள் வைக்கப் பெற்றிருந்ததை பெரும்பாணாற்றுப் படைக்[4] குறிக்கிறது. திருமாலின் அடிகளைத் தலையினால் வணங்கிக் கைகளால் தொட்டு ஒருவன் சூளுரைத்தான் என்பதை கலித்தொகை[5] "மலையோடு மார்பு அமைந்த செல்வன் அடியைத் தலையினால் தொட்டு உற்றேன் சூள்" என்று குறிக்கிறது.

நன்னன் தம் மரத்திலே இருந்த மாங்காய் ஆற்றில் விழுந்து செல்ல, அதை அறியாது ஒரு பெண் எடுத்து உண்ண, அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். அந்த பெண்ணின் தந்தை அப்பெண்ணின் எடைக்கு ஏற்ற 'பொன் செய் பாவையைக்' கொடுக்கிறேன் என்ற போதும் கேளாது அப்பெண்ணைக் கொலை புரிந்தான் என்பதை,

ஒன்பதிற்கு-ஒன்பது களிற்றோடு அவள் நிறை
'பொன் செய்பாவை' கொடுப்பவும் கொள்ளான்

என்று குறுந்தொகை குறிக்கிறது.[6] 'செய்வுறு பாவை அன்ன' என்றும்[7] 'தண்டொடு பிடித்த தாழ்க மண்டலத்துப் படிவ' என்றும், மேலும் சில குறுந்தொகைப்[8] பாடல்களில் குறிப்புக்கள் உள்ளன. அரசன் ஆணையை மீறியவர்கள் பொன்னால் செய்யப் பெற்ற பாவையை தண்டனையாக இடுதல் வேண்டும் என்ற குறிப்புள்ளது.[9]

சேரலாதன் முசிறியை வென்று அங்கிருந்த பொன் செய் பாவையை வைரமொடு கவர்ந்தான் என்று அகநானூறு குறிக்கிறது.[10] "படிமம் ஓம்பு" என்றும் மற்றொரு அகநானூறு பாடலில் குறிப்புள்ளது.[11]

பொன்னால் செய்யப்பட்ட பாவையை மதுரைக் காஞ்சியும்[12] குறிக்கிறது. ஈசன் பொன்னடிக்குக் காரைக்காலம்மையார் பூமாலை புனைந்து அணிந்தார்.[13] என்று அபிராமி

1. நற்றிணை ப. 185, 192, 701 - குறுந்தொகை 89, 100: அகநானூறு 35, 62, 201
2. புறநானூறு - 251
3. பிரம்ம சூத்திரப் பாஷ்யம் - 1: 1: 12
4. பெரும்பாணாற்றுப் படை பாடல் - 298
5. கலித்தொகை – 1085-55, 56
6. குறுந்தொகை : 292-3, 4
7. ,, : 195-6
8. ,. : 156-4
9. பெருங்கதை : 140: 372-73
10. அகநானூறு : 127:8 ; 212:1
11. ,, : செ. 149
12- மதுரைக்காஞ்சி : 410
13. அபிராமி அந்தாதி : 87

அந்தாதிக் குறிக்கும். ''இவர் எம் பெருமான் என்று, சுவர் மிசைச் சார்த்தியும் வைத்தும் தொழுவர்'' என்பது பொய்கையாழ்வார் வாக்கு,[1] திருமூலர்,[2] சிவபெருமானின் திருவடி களைக் காண்பதும், தொடுவதும், தலையிலே சூடுவதும் பற்றி குறிப்பிடுகின்றார். மணி மேகலை, 'யவனர் இயற்றிய வினைமான் பாவை' என்று யவனத் தச்சர்களைக் குறிப்பதோடு தமிழ்நாட்டில் செம்பு, பொன், மரம், மண் ஆகியவற்றால் உருவங்கள் செய்யவல்ல தச்சர்கள் இருந்தனர் என்றும் காட்டுகிறது.[3]

'கைவினை முற்றிய தெய்வப் படிமத்து'[4] என்ற சிலம்பு வரிகளுக்கு அரும்பத உரை யாசிரியர், கைத்தொழில் மிகுந்த படிமம் என உரை எழுதியுள்ளார். சிலப்பதிகாரம், வாழ்த்துச் காதையில் 'நில அரசர் நீண்முடியால் பலர் தொழு படிமம் காட்டி'[5] என்று குறிக்கிறது.

காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயிலில் உள்ள கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த நந்திவர்மனின் கல்வெட்டு, 'பரமேஸ்வர விண்ணகரத்தவர்க்கோராயிரம் பொன் பலித்தாலப் படிவமும் குடுத்தானென்றறி மின்களே' என்று குறிக்கிறது.[6]

காவிரிப்பூம்பட்டினக் கடைத் தெருவில் உள்ள கோயில்களில் முருகப்பெருமானுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் எடுத்த விழாக்களில் மகளிர் மாடங்களின் சாளரங்களுக்குப் பின்னால் நின்று தெய்வங்களைக் கைகூப்பி வணங்கினர் என்று பட்டினப்பாலைக் குறிக்கிறது. பொதுவாகத் திருவிழாக்களின் போது தெய்வத் திருவுருவங்களை வீதி உலாவாக எடுத்து வருகின்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது என்பது தெளிவு.

பல்லவர் காலச் செப்புத் திருமேனிகள்

பல்லவர் காலத்திற்கு முன்பே செப்புப் படிமங்களை வார்க்கும் கலை தமிழ்நாட்டில் சிறந்து விளங்கி வந்திருக்கிறது என்ற போதிலும் அவ்வகைச் செப்புப் படிமங்கள் ஆதிச்ச நல்லூர், கொடுமணல் போன்ற ஊர்களில் ஒருசிலவே நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. நாயன்மார்களும், ஆழ்வார்களும் நிகழ்த்திய பக்திப்புரட்சியால் இந்து சமயம் புத்துயிர் பெற்றது. இதனால் வழிபடும் முறைகளும் பெருகின. வழிபாட்டிற்காக இறைவனின் பல்வேறு வடிவங்களைச் செய்து மகிழும் நிலை ஏற்பட்டது. இதுவரையிலும் கருவறையில் பூசை பெற்று வந்த இறை உருவங்கள் வீதி உலாவாக எடுத்து வரப்பெற்றன. இதனால் தெய்வத் திருமேனி களை உலோகங்களில் வார்க்கும் கலை வளரத் தொடங்கியது எனலாம். பல்லவர் காலத்தில் அழகு வாய்ந்த பல செப்புப் படிமங்கள் செய்யப்பெற்றன. சைவ, வைணவ, பௌத்த, சமண மதங்களின் சமயக் கோட்பாட்டிற்கு ஏற்ப செப்புத் திருமேனிகள் வார்க்கப் பெற்றன.

காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் மேலையூர் என்ற இடத்தில் கிடைக்கப்பெற்ற தங்க முலாம் பூசப்பெற்ற 'மைத்ரேயர்' செப்புத் திருமேனி கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. தற்பொழுது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. பல்லவர் காலக் கலைப்படைப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக 'பெருந்தோட்டம்' திருமாலின் செப்புத் திருமேனி விளங்குகிறது. தற்பொழுது தஞ்சைக் கலைக்கூடத்தில் வைக்கப் பெற்றுள்ள இச்சிலை மண்டகப்பட்டு, வல்லம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள பல்லவர் காலச் சிற்பங்களை ஒத்துள்ளது. திருச்சி மாவட்டம் வழுதுடையூர், கோவை மாவட்டம் கொடுமுடி ஆகிய ஊர்களில் உள்ள திருமால் செப்புத்திருமேனிகளின் அழகே தனி.

---

1. நாலாயிரத்திவ்விய பிரபந்தம் - இயல் 14
2. திருமந்திரம் பாடல் - 1479
3. மணிமேகலை 28 : 35–37
4. சிலப்பதிகாரம், நாடு காண் காதை : 225
5. சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை
6. S.I.I. Vol. IV, 131

பல்லவர் காலத்துக் கலைப்படைப்புகளில் கூத்தபிரானின் திருமேனிகள் அழகு வாய்ந்தவை. காஞ்சிபுரத்தை அடுத்த கூரம் சிவன் கோயிலில் உள்ள நடராசர், தாண்ட வங்களில் ஒன்றான ''ஊர்த்துவ ஜானு'' என்னும் ஆடலைக் காட்டி விளங்குகிறார். கீழப் புதனூரிலிருந்து கிடைத்துள்ள 'நஞ்சனி' கண்டரின் செப்புப்படிவமும். வடக்காலத்தூர் மலைமகள் மணாளர் செப்புத் திருமேனியும் உயிரோட்டத்துடன் விளங்குகின்றன. கோவை மாவட்டம் 'சிங்காநல்லூர்' ஓங்கி உலகளந்த உத்தமனாகிய 'திருவிக்கிரமனின்' செப்புத் திருமேனியும் சிறப்புடையது.

பல்லவர் காலத்திற்கு முன், சிவன், முருகன், சக்தி வழிபாடு தனித்தனியாக இருந்தது. பல்லவர் காலத்தில் சிவன், முருகன், பார்வதி ஆகிய மூவரையும் ஒரே பீடத்தில் இணைத்து வழிபடுகின்ற வழக்கம் ஏற்பட்டது. இதுவே சோமாஸ்கந்தர் வழிபாடாக மாறியது. கோயில்களில் கருவறையின் பின்பக்கச் சுவற்றில் 'சோமாஸ்கந்தர்' உருவத்தை வைத்து வணங்குவது பல்லவர்களுக்கே உரிய சிறப்பாகும். தொடக்கக் காலத்தில் சுதையிலும், பின்னர் கருங்கல்லிலும் அடுத்து செம்பிலும் வடிக்கப் பெற்றது. திருவாலங்காட்டிலிருந்து கிடைத்துள்ள 'சோமாஸ்கந்தர்' திருமேனி மிகவும் கலை அழகு வாய்ந்தது.

முத்தரையர் காலச் செப்புத்திருமேனி

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் நியமம், செந்தலை ஆகிய ஊர்களைத் தலைநகரங்களாகக் கொண்டு முத்தரையர்கள் ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் காலத்தில் அதிக அளவில் செப்புத் திருமேனிகள் எடுக்கப் பெறவில்லையாயினும் எடுக்கப் பெற்ற ஒருசில திருமேனிகள் கலை அழகு மிக்கவை. 'பொன்விளைந்தான்பட்டி' என்ற இடத்திலிருந்து கிடைத்துள்ள திரிபுராந்தகர் செப்புத் திருமேனி முத்தரையர் கலைப் பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்திருமேனி தற்பொழுது தஞ்சைக் கலைக்கூடத்தை அழகு செய்கிறது.

சோழர் காலச் செப்புத்திருமேனிகள்

முத்தரையர்களிடமிருந்து விஜயாலய சோழன் தஞ்சையைக் கைப்பற்றினான். முற்காலச் சோழர்தம் ஆட்சிக்கு வித்திட்டவன் இவனே. இவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆதித்தன், பராந்தகன் ஆகிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பல கோயில்கள் எடுக்கப் பெற்றன, இதில் வழிபாட்டிற்காக செப்புத் திருமேனிகள் செய்தளிக்கப் பெற்றன. பல்லவர்கள் காலச் செப்புத் திருமேனிகளுக்கும், ஆதித்தன், பராந்தகன் காலத்தைச் சார்ந்த சிற்பங்களுக்கும் அதிக வேறுபாடு காணப்படவில்லை. மொத்தத்தில் செப்புத் திருமேனிகள் அக்காலச் சிற்பங்களைப் போன்று காணப்படுகின்றன. சோழர்கள் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலமாகும்.

முதலாம் ஆதித்தன்

சோழ மன்னன் முதலாம் ஆதித்தன் ''கோதண்டராமன்'' என்ற பட்டப் பெயரை உடையவன் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்துச் சிற்பிகளின் சிறந்த கைவண்ணத்திற்கு எடுத்துக்காட்டாக இவன் காலத்தில் எடுக்கப் பெற்ற செப்புத்திருமேனிகள் விளங்குகின்றன. சோழர் காலத் திருமேனிகளில் காலத்தால் முந்தியது கும்பகோணத்தை அடுத்து திருச்சேறைப் பெருமாள் கோயிலில் உள்ள சேனைமுதலி[1] திருமேனியைக் குறிக்கலாம். இதனை ஸ்ரீநாராயணதாசன் என்பவன் செய்தளித்ததாக பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்தமைதியின் மூலம் இச்சிலை கி.பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். பருத்தியூர் இராமர், இலக்குவன், சீதை, அனுமன், விஷ்ணு, வடக்குப்பனையூர் இராமர், இலக்குவன், சீதை, அனுமன் ஆகியத் திருமேனிகள் தற்போது சென்னை அரசு அருங்காட்சியத்தில் வைக்கப் பெற்றுள்ளது. கப்பலூர் இராமர் முதலிய செப்புத் திருமேனிகளும் இக்காலத்தியதே.

---

1. நடன. காசிநாதன் – தொல்லியல், பக்கம் 82

முதலாம் பராந்தகன்

முதலாம் பராந்தகன் காலத்திலும் அரிய செப்புத்திருமேனிகள் வடிக்கப் பெற்றுள்ளன. தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி மருந்தீஸ்வரர் கோயிலில் உள்ள உமாபரமேஸ்வரி யின்[1] பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்தமைதியினைக் கொண்டு இச்சிலை கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். இதே மாவட்டம் கரைவீரம் என்ற இடத்தில் கிடைத்துள்ள முதலாம் பராந்தகனின் ஆட்சிக்காலத்தில் வடிக்கப்பட்டுள்ள உமாபட்டாரகி[2] (சிவகாமி) செப்புத்திருமேனி மிகவும் அழகு வாய்ந்தது. இத்திருமேனியின் பீடத்தில் முதலாம் பராந்தகனின் பதினோராவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் காணப்படுவதிலிருந்து, இத்திருமேனி இவன் காலத்தில் எடுக்கப்பெற்றது என்பது வெளிப்படை. இது இங்குள்ள நடராஜர் செப்புத் திருமேனியுடன் ஒப்பு நோக்கத் தக்கது.

நல்லூர் நடராஜர், காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்துள்ள பல்லவனேஸ்வரம் சேயுடைச் செல்வி ஆகிய திருமேனிகள் அழகு வாய்ந்தவை.

இராமேஸ்வரம்,[3] இராமநாத சுவாமி கோயிலில் உள்ள கணேசர், இராமர், இலக்குவன், சீதை, அனுமான் திருமேனிகள் முற்காலச் சோழர்கள் காலத்தைச் சார்ந்தவை. (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு). இத்திருமேனிகளில் இராமர், இலக்குவன், சீதை, அனுமன் திருமேனிகள் வடக்குப் பனையூர், பருத்தியூர் செப்புத் திருமேனிகளுடன் ஒப்புநோக்கத்தக்கது.

இங்குள்ள கணேசர் செப்புத் திருமேனி ஈடு இணையற்றதாகும். இடது காலை நேராக வைத்து வலது காலைச் சற்று சாய்த்து நின்று தன்னுடைய முழுத் தோற்றத்தையும் வெளிப்படுத்துகின்ற வகையில்உள்ளது. நிற்பதற்கு வசதியாக, நீண்ட அங்குசத்தை இடது முன்கையில் ஏந்தி, அதைப் பீடத்தில் ஊன்றி நிற்பதாக வடிக்கப்பட்டுள்ள அழகே தனி இது. ஸ்தபதியின் கலைத் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. இந்த வலம்புரி வினாயகரின் மேல் வலது கையில் ஒடிந்த கொம்பு உள்ளது. மேல் இடது கையில் உள்ள அணி சிதைந்து விட்டது. கீழ் வலது கையில் மோதகம் காட்டப்பட்டுள்ளது. இது கோநேரிராஜபுரம், செம்பியன் மாதேவி, கி.பி. 970) கணேசரை விட காலத்தால் முந்தியதாகும். இராமேஸ்வரம் கணேசர் 10-ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் வாழ்ந்த முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்தது.

அனுமன்

பொதுவாக அனுமன் மிகவும் பணிவாக இராமன் முன்பு காட்டப்படுவது வழக்கம். ஆனால் இராமேசுவரம் அனுமன் இரண்டு கைகளிலும் 'குழவி போன்ற' ஒரு பொருளை தாங்கி நிற்கின்றார். இது என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. இது இராமாயணத்தில் பேசப்படுகின்ற சஞ்சீவி மலையாகவும் தெரியவில்லை. இராமன், இராவணனைக் கொன்று, அயோத்திக்குச் செல்லும்பொழுது, பாவ விமோசனமாக இராமேசுவரத்தில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வதற்காக, வாரநாசியிலிருந்து சிவலிங்கத்தைக் கொண்டு வரும்படி அனுமனுக்கு ஆணையிட்டார் என்பது புராண வரலாறு. அதன் அடிப்படையில் அனுமன் கொண்டு வந்த 'இலிங்க' உருவமாக இது இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. தலையில் மணிமாலை, மார்பில் சன்ன வீரம், ஆகியவை மிகவும் வனப்புடன் வடிக்கப் பட்டுள்ளன.

---

1. நடன. காசிநாதன் – தொல்லியல், பக்கம் 123.
2. A Nataraja Bronze and inscribed Uma from Karaiviram Village, Lalitkala, No. 19, p. 17.
3. Dr. Nagaswamy – South Indian Studies, Vol. II p. 160 · Early Chola Bronzes from Rameswaram, p. 38

செம்பியன் மாதேவி

சிறந்த சிவ பக்தராகவும், சிவனடியாராகவும் திகழ்ந்த கண்டராதித்த சோழனின் இரண்டாவது மனைவியும் மழவரையர் மகளுமான செம்பியன் மாதேவியார் சைவப்பற்று மிகுந்தவர். 'கலையரசி' என்று போற்றப் பெற்றவர். பல கோயில்களுக்கு அறச்செயல்கள் செய்துள்ளதால் 'மாதேவடிகள்' என்று புகழ்பெற்றவர். சிறந்த சிவபக்தரான இவ்வம்மையார் செங்கற் கோயில்களைக் கற்றளியாக்கியவர். திருநல்லம் என்னும் கோனேரி ராசபுரத்து பெருங்கோயிலைக் கற்றளியாக்கினார். இக்கோயிலுக்கு 'ஸ்ரீ கண்டராதித்தம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார். செம்பியன் மாதேவியார் தன்னுடைய பெயரிலேயே அமைந்த செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் ஸ்ரீகயிலாயம் என்ற கோயிலை கற்றளியாக்கினார். திருமுதுகுன்றம், திருவாரூர்அரநெறி, திருமணஞ்சேரி, தென்குரங்காடுதுறை, திருக்கோடிகா, ஆநாங்கூர், திருத்துருத்தி, திருவக்கரை, திருச்சேலூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களைக் கற்றளியாக்கினார்.[1] பல சிவன் கோயில்களுக்கு திருப்பணிச் செய்துள்ளார். பல கோயில்களுக்குத் தங்கக் குடங்களும், வெள்ளிக் கலன்களும் செய்தளித்துள்ளார். கோயில்களில் வழிபாட்டிற்காக பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் திருமேனிகளைச் செய்தளித்துள்ளார் என்பதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. செம்பியன் மாதேவி, கோனேரி ராஜபுரம் ஆகிய இடங்களில் ஸ்தபதி குடும்பங்களை நிலைபெறச் செய்து செப்புத் திருமேனிகளை வார்க்கும் கலையை வளம்பெறச் செய்தார்.

தொடக்க காலத்தில் சிறிய அளவில் செய்யப் பெற்ற திருமேனிகள் பின்னர் பெரிய அளவில் செய்யப் பெற்றன. கோனேரி ராஜபுரம் கோயிலில் உள்ள பெரிய நடராசர், சிவகாமி, பிடாரி, திரிபுரசுந்தரி, பிரதோஷ நாயகர், விநாயகர், திருஞானசம்பந்தர், அப்பர், போகசக்தி அம்மன் ஆகிய திருமேனிகள் செம்பியன் மாதேவியார் காலத்தைச் சார்ந்தவை. இராசராசனின் 12-ஆம் ஆட்சி ஆண்டில் இராசராசத் தெரிஞ்ச கைக்கோளர் என்ற படைப் பிரிவைச் சேர்ந்தவரும், அந்தப்புரத்துப் பணிப் பெண்ணுமான நக்கன் நல்லத்தடிகள் கோனேரி ராஜபுரத்துக் கோயிலுக்கு உமாபரமேசுவரர் செப்புத்திருமேனியை செய்தளித்துள்ளார். நல்லூர் பார்வதி, திருவரங்குளம் நடராஜர், (தற்பொழுது தேசிய கலைக்கூடத்தில் உள்ளது) ஆகிய திருமேனிகளும் இக்காலக் கலைப்பாணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

செம்பியன் மாதேவியார் காலத்தைச் சார்ந்த திருமேனிகள் "பெண்தன்மை" சாயலை மிகுதியாக உடையவை. அழகான உடற்கட்டும் புன்சிரிப்பு தவழும் முகமும் உடைய இக்காலத் திருமேனிகள் திரிபங்க நிலையில் அமைந்தவை. தமிழ்நாட்டில் உள்ள செப்புத் திருமேனிகளில் மிகவும் எழில் வாய்ந்தவை செம்பியன் மாதேவியார் செய்தளித்தவையேயாகும்.

இராசராசன்

இராசராசன் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற அடிகளுக்கு ஏற்ப தஞ்சையில் பெரிய கோயிலை எடுத்தான். அதுவே திராவிடக் கலைப்பாணிக்குச் சிகரமாக அமைந்தது. இக்கோயில் வழிபாட்டிற்காக அரிய பல செப்புத்திருமேனிகளைச் செய்தளித்துள்ளதை தன்னுடைய கல்வெட்டுக்களிலே பொறித்து வைத்துள்ளான். இவன் காலத்தில் ஏராளமான செப்புத்திருமேனிகள் வடிக்கப்பெற்றுள்ளன.

முதலாம் இராசராசன் செப்புத்திருமேனிகள் செய்வதில் ஸ்தபதிகளுக்கு நல்ல ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து, படிமக்கலையில் சிறந்து விளங்கிய ஸ்தபதி குடும்பங்களைத் தஞ்சையில் குடியேறச் செய்தான். உலகமே கண்டு வியக்கும் வண்ணம் திராவிடக் கலைப்பாணிக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக "தட்சிணமேரு" என்று போற்றப்படுகின்ற பெரிய கோயிலைச் சிவபாத சேகரனான முதலாம் இராசராசன் பெருவுடையாருக்கு எடுத்துள்ளான். இக்கோயிலில் வழிபாட்டிற்காக இவன் செய்தளித்துள்ள செப்புத் திருமேனிகளைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

---

1. Balasubramaniam S. R., - Early Chola Temples, p. 39.

இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குப் பொன்னால் செய்யப் பெற்ற கொள்கை தேவர், க்ஷேத்திர பாலர் திருமேனியையும், வெள்ளியினால் செய்யப் பெற்ற வாசுதேவரின் மூன்று உருவங்களையும் பஞ்சலோகத்தால் செய்யப் பெற்ற ஆடவல்லான், உமாபரமேஸ்வரி, தட்சிணமேரு விடங்கர், தஞ்சை விடங்கர், மகாமேரு விடங்கர் திருமேனி களையும் செம்பால் செய்யப் பெற்ற யகாதேவர், சண்டேஸ்வரர், பஞ்சதேகமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, பிள்ளையார் ஆகிய திருமேனிகளையும் கொடையளித்துள்ளதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

இராசராசனின் தமக்கையான குந்தவைப் பிராட்டியார், தேவியரான லோகமாதேவி, திரைலோக்கிய மாதேவி ஆகியவர்களும், இவனுடைய அதிகாரிகளும் செப்புத் திருமேனிகளைச் செய்தளித்துள்ளனர்.

தமிழகம் தோற்றுவித்துள்ள சிறந்த கலைப்படைப்புகளில் சிறந்தது ஆடவல்லார் எனக் கூறப்படும் ஒப்பற்ற தத்துவ உருவமேயாகும். இந்த ஆடவல்லாரே ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்து தத்துவங்களின் தலைவனாக விளங்குகின்றார். உலகமே இவர் அழகைக் கண்டு வியக்கிறது. தில்லையில் ஆடுகின்ற ஆனந்தத்தாண்டவம் மிகவும் அழகு வாய்ந்தது. சிக்கல், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் அழகு வாய்ந்த நடராஜர் திருமேனிகள் உள்ளன. கோனேரி ராஜபுரத்தில் உள்ள பெரிய நடராஜர் திருமேனி தமிழகத்தில் உள்ள நடராஜர் திருமேனிகளில் மிகவும் பெரியதாகும். திருவேள்விக்குடி, நல்லூர், கிளாக்காடு, மாயவரம், கும்பகோணம் ஆகிய இடங் களில் உள்ள திருமேனிகளும் சிறப்புப் பெற்றவை. திருவிடைமருதூர், கீவளூர், வாய்மேடு ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பெற்று தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ள நடராஜர் திருமேனிகள் அற்புதக் கலைப்படைப்புகளாகும்.

இராசராசனின் ஆறாவது ஆட்சியாண்டில் திருவெண்காடு கோயிலுக்குச் செம்பியன் மாதேவி பொன்னாலான சந்திரசேகரர் திருமேனியைச் செய்தளித்துள்ளார். திருவெண்காடு கோயிலின் கோலக்காவனால் எழுந்தருளிவிக்கப்பட்ட ரிஷப வாகன தேவருக்கு, அணிகலன் களுக்காகவும், பூசைக்காகவும் பணம் அளித்ததை இராசராசனது 26-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக் குறிக்கிறது. தலையில் தலைப்பாகைப் போன்று சுற்றிய சடைமுடியுடன், திரிபங்க நிலையில் இவ்வுருவம் மிகவும் அழகாகக் காட்டப் பெற்றுள்ளது. இத்திருமேனியின் அழகிற்கு ஈடு இணையாக வேறு எந்தத் திருமேனியையும் சொல்லமுடியாது. இராசராசனின் 27-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இராசராசன் பரிவாரத்தார் ரிஷப வாகன தேவரது பிராட்டியின் செப்புத் திருமேனியை எழுந்தருளிவித்தது பற்றிக் குறிப்பிடுகிறது.

திருவெண்காடு கோயிலில் உள்ள சிறிய நடராஜர்[1] செப்புத் திருமேனியின் பீடத்தில் ''ஸ்வஸ்திஸ்ரீ தேசி அபயநிதியாபரணநாயகர்'' என்று பொறிக்கப்பட்டுள்ளது. 'தேசி' என்பது உள்நாட்டைச் சார்ந்த ஒருவகைக் கூத்தினைக் குறிப்பதாகும். இத்திரு மேனியில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்தமைதியினைக் கொண்டு பார்க்கும்பொழுது இது இராசராசன் காலத்தைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். இத்திருமேனி இக்கட்டுரையாசிரியர் திரு. கு. தாமோதரன் அவர்களால் கண்டறியப்பட்டதாகும்.

திருவெண்காடு கோயிலில் உள்ள ஏறு ஊரும் பெருமாள் ஆன ரிஷப வாகன தேவர், தேவி, உமாபரமேஸ்வரி திருமேனிகளும் அழகு வாய்ந்தவை. மலைமகள் மணவாளர், பிச்சை உகுக்கும் பெருமான், கரியகஞ்சுகன் ஆன பைரவன், சண்டேசர், ஆடவல்லான், கண்ணப்பர், வெண்காட்டில் உறையும் பெண்காட்டும் உருவான் முதலிய திருமேனிகள் முதலாம் இராசேந்திரன் காலத்தைச் சார்ந்தவை.

1. Dr. Nagaswamy R., - South Indian Studies, Vol I; Radhakrishnan V., - An Inscribed South Indian Bronze of 13th century A.D.; Page 86

கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலில் உள்ள முருகப் பெருமான் திருமேனியும். கீழையூர், வடபாதி மங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள முருகன் திருமேனிகளும் அழகே உருவானவை. இவை முதலாம் இராசேந்திரன் காலத்தைச் சார்ந்தவை. இவனுடைய பட்டத்தரசியான அரிந்தவன் மகாதேவி, க்ஷேத்திரபாலர் திருமேனியைச் செய்தளித்துள்ளார்.

திருமீய்ச்சூர் திரிபுராந்தகர் செப்புத் திருமேனி முதலாம் குலோத்துங்கன் காலத்தில் 'சோழப்பேரரையன்' என்பவனால் செய்யப்பெற்றது என்று அதன் பீடத்தில் பொறிக்கப் பட்டுள்ள எழுத்துக்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டில் சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனிகள் மிகுதியாகவே செய்யப்பெற்று வழி பாட்டில் இருந்திருக்கிறது. நீடாமங்கலத்தை அடுத்த முல்லைவாசல் சிவன் கோயிலில் உள்ள சோமாஸ்கந்தர் திருமேனியின் பீடத்தில் 'உமாஸ்கந்ததேவர்' என்று குறிக்கப் பட்டுள்ளது. இந்த எழுத்தமைதியினைக் கொண்டு பார்க்கும் பொழுது இது கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது என்று கூறலாம். இத்திருமேனி, இக்கட்டுரை ஆசிரியர் திரு. கு. தாமோதரன் அவர்களால் இப்பகுதியில் களஆய்வு செய்த பொழுது கண்டறியப்பட்டதாகும்.

இரண்டாம் இராசராசன் காலத்திலும் செப்புத் திருமேனிகள் செய்யப்பெற்றன. கும்பகோணத்தை அடுத்த தாராசுரம் கோயில், பாபநாசத்தை அடுத்த திருப்பாலத்துறை ஆகிய கோயில்களில் உள்ள செப்புத் திருமேனிகள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

காடவர் செப்புத்திருமேனிகள்

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரத்திலிருந்து 40 கி. மீ. தூரத்தில் உள்ள "தீர்த்த நகரி" என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலில் "பிரதோஷ மூர்த்தியின்"[1] செப்புத் திருமேனி யின் பீடத்தில் "ஸ்வஸ்திஸ்ரீ சகலபுவன சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கன்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர்கள் ஆட்சிக் காலத்தில் சிற்றரசனாக விளங்கிய "காடவர் தலைவன்" கோப்பெருஞ்சிங்கனால் இத்திருமேனி எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

தருமபுரி மாவட்டம் நடுசாலை சிவன் கோயிலில் உள்ள சண்டேசுவரர்[2] செப்புத் திருமேனி சாளுக்கியக் கலைப் பாணியை ஒத்து காணப்படுகிறது. கி.பி. 13-14-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த இத்திருமேனி இக்கட்டுரை ஆசிரியரால் கண்டறியப்பட்டதாகும்.

பாண்டியர் காலச் செப்புத்திருமேனிகள்

பாண்டியர்கள் காலத்தில் அதிக அளவில் செப்புத் திருமேனிகள் உருவாக்கப் பெற வில்லையாயினும் கிடைத்துள்ள செப்புச் சிலைகள் பாண்டியர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்துபவைகளாக விளங்குகின்றன. மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் பொருப்புமேட்டுப்பட்டியிலிருந்து கிடைத்துள்ள சிவபிரானின் "கால்மாறி ஆடிய,' கோலத் தைக் காட்டும் செப்புத்திருமேனி அழகு வாய்ந்தது. இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசிக்கு அருகில் உள்ள திருத்தங்கல்[3] என்ற ஊர், 108 வைணவப் புண்ணியத் தலங்களுள் ஒன்றாகும். பாண்டிய நாட்டில் உள்ள ஐந்து வைணவப் பதிகளில் திருத்தங்கலும் ஒன்றாகும். இங்குள்ள திருநின்ற நாராயணப் பெருமாள் கோயிலில் கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருமங்கை ஆழ்வார் செப்புத்திருமேனி முற்காலப் பாண்டியர் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இதே கோயிலில் வழிபாட்டில்

1. Damodaran. K., - Nunkalai - A unique Chandikesvara bronze
2. Chandramurti. M., - An early Pandya Bronze from Tiruttangal, South Indian Studies Vol. II, Dr. Nagaswamy R., p. 186
3. இராமசாமி, மே.சு. தமிழ்நாட்டுச் செப்புத்திருமேனிகள்

உள்ள திருத்தங்கல் அப்பன் திருமேனி, பிற்காலப் பாண்டியர்க் காலத்தைச் சார்ந்ததாகும். திருநெல்வேலி மாவட்டம் கொற்கையை அடுத்துள்ள ஆத்தூரில் உள்ள சோமேஸ்வரர் கோயிலில் அழகு செய்யும் கூத்தபிரான், சிவகாமி ஆகிய திருமேனிகள்; திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள கங்காளமூர்த்தி; சேரன்மாதேவி ராமசுவாமி கோயிலில் உள்ள இராமன், இலக்குவன், சீதை, அனுமன் ஆகிய திருமேனிகள்; இராமநாதபுரம் மாவட்டம் உத்தரகோசமங்கையில் ஆனந்ததாண்டவம் செய்யும் கூத்தபிரானின் திருமேனி ஆகியவை எழில் வாய்ந்தவை.[1] மன்னார் கோயில் இராஜகோபால சுவாமி கோயிலில் உள்ள ஆண்டாள் திருமேனியும் திருபுள்ளாணி ஜெகநாதப்பெருமாள் கோயில் இராமன், இலக்குவன் சீதை. பரதன் ஆகிய திருமேனிகளும் அழகு வாய்ந்தவை.

திருச்சி மாவட்டம் தெக்கத்தூர்[2] கிராமத்தில் உள்ள திரு அகஸ்திஸ்வரர் கோயிலில் கி. பி. *11 - 12*-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீணாதர தக்ஷிணாமூர்த்தி செப்புத்திருமேனி பாண்டியர் காலச் செப்புத் திருமேனிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சிற்ப சாஸ்திரத்தில், தியான, யோக, வீணா, வியாக்யான மூர்த்தி ஆகிய நான்கு விதமான தக்ஷிணாமூர்த்தித் திருமேனிகள் குறிக்கப்படுகின்றன. இந்த வகையில் இத்திருமேனி வீணாதர தக்ஷிணாமூர்த்தி வகையைச் சார்ந்ததாகும். இக்கோயிலிலுள்ள ஸ்ரீவல்லபனுடைய மூன்றாவது ஆட்சியாண்டு (கி.பி. *1094*) கல்வெட்டு, இத்திருமேனியினை இக்கோயிலுக்கு செய்தளித்ததைக் குறிக்கிறது.

திருச்சி மாவட்டம் திருவெள்ளறையிலிருந்து எடுத்து வரப்பெற்று தற்பொழுது திருவரங்கம் கோயிலில் வைக்கப் பெற்றுள்ள செந்தாமரைக் கண்ணன், செந்தாமரைச் செல்வி ஆகிய செப்புத்திருமேனிகளும் சுந்தரபாண்டியபட்டினம் நடராஜர்; திருக்குற்றாலம் கோயிலில் உள்ள ஆடவல்லான்; மதுரையில் உள்ள சோமாஸ்கந்தர் ஆகிய செப்புத் திருமேனிகளை முற்கால பாண்டியர்களின் கலைப்படைப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு களாகக் கொள்ளலாம்.

பிற்கால பாண்டியர்களின் கலைப் படைப்பிற்கு எடுத்துக்காட்டாக பிள்ளையார்பட்டி,[3] நடராசர், சிவகாமி, இலுப்பைக்குடி[4] வீணாதரமூர்த்தி, இரணியூர்[5] ஆடவல்லான் ஆகிய திருமேனிகளைக் கூறலாம். கடைப் பாண்டியர் காலத்திலும் செப்புத் திருமேனிகளை வடிக்கும் கலை சிறந்து விளங்கியிருக்கிறது என்பதற்குச் சான்றாகத் தென்காசியிலுள்ள கி.பி. *14*-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ''ஆடவல்லான்'' திருமேனி விளங்குகிறது. சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம், ஆறகளூர்[6] என்ற ஊரிலிருந்து கி.பி. *10*-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமண இயக்கியின் செப்புத் திருமேனியும், கி. பி. *11*-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தீர்த்தங்கரர் திருமேனியும் கிடைத்துள்ளன.

விஜயநகர் செப்புத்திருமேனிகள்

விஜய நகர அரசர்கள் காலத்திலும் செப்புப் படிமக்கலை தலைச்சிறந்து விளங்கி யிருக்கிறது. இவர்கள் காலத்திய செப்புத்திருமேனிகள் தமிழகத்தில் பரவலாகக் கிடைக் கின்றன. திருமுல்லைவாசல், மேலையூர் ஆகிய இடங்களில் உள்ள அதிகார நந்தி

---

1. Ramanathapuram Archaeological guide;Nagaswamy R., / Ramasamy N.S.,
2. Balasubramanyan. S.R., - A Pandya Bronze from Tekkattur, Lalitkala No. 10 October 1961 p. 58.
3. பிள்ளையார்பட்டி - மா. சந்திரமூர்த்தி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 1992 பக். 74-76.
4. இலுப்பைக்குடி கோயில் – மா. சந்திரமூர்த்தி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் (1988) பக். 48-49.
5. இரணியூர் கோயில் - மா. சந்திரமூர்த்தி - மணிவாசகர் பதிப்பகம், 1990 - பக். 110-113.
6. Poongunran - Jain Bronzes from Aragalur - South Indian Studies II.

திருமேனியும், பட்டீசுவரம் விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி திருமேனிகளும், தானிக்கோட்டம் ஞானசம்பந்தர், சோமாஸ்கந்தர் திருமேனிகளும் அழகு வாய்ந்தவை. விசய நகர காலத்தில் தவழும் கிருஷ்ணன் திருமேனி மிகுதியாகச் செய்யப்பட்டன. இவர்கள் காலத்தில் அரசர் அரசமாதேவியின் உருவங்களும் செம்பில் வடிக்கப்பட்டுள்ளன. கிருஷ்ண தேவராயர் தன்னுடைய மனைவிமார்களுடன் செப்பு திருமேனியாக திருப்பதி கோயிலில் காட்சி யளிப்பதை இன்றும் காணலாம். இராமேசுவரம் இராமநாத சுவாமி கோயிலில் விஜய நகர் காலத்தைச் சார்ந்த எட்டு கைகளுடன் கூடிய 'துர்க்கை'[1] செப்புத்திருமேனி வழி பாட்டில் உள்ளது,

தஞ்சை நாயக்கர் செப்புத்திருமேனிகள்

மதுரை, தஞ்சை, செஞ்சி, நாயக்க மன்னர்கள் காலத்திலும் விஜய நகர அரசர் காலத்திய கலைப்பாணியைப் பின்பற்றிச் செப்புத்திருமேனிகள் செய்யப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தை அடுத்த திருவிடைமருதூர் "மத்தியார்சுன" சேவப்ப நாயக்கரின் உறவினர்களான முர்த்திஅம்மாள், சிறுமல்லப்ப நாயக்கர் ஆகியோர் செப்பு உருவச் சிலைகளும், நாயக்கர் கால கலைப்படைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கு கின்றன. தஞ்சை மாவட்டம் திருவலாங்காடு வடவாரண்யேஸ்வரர் கோயில் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை மற்றும் ஐயனார், பூரணி புஷ்கலை செப்புத்திருமேனிகள்[2] கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் செய்யப் பெற்றவை என்பதற்கு பீடத்தில் பொறிக்கப் பட்டுள்ள எழுத்துக்கள் சான்றாக விளங்குகின்றது. தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ள விஜயராகவ நாயக்கரின் செப்புத்திருமேனியும் கலைச் சிறப்போடு காட்சித் தருகிறது.

தஞ்சை மராட்டியர் செப்புத்திருமேனிகள்

தஞ்சை மராட்டியர் காலத்திலும் ஓரளவிற்கு செப்புத்திருமேனிகள் வடிக்கப் பெற்றன. இவர்கள் காலத்து திருமேனிகள் இதற்கு முன்னர் எடுக்கப் பெற்ற செப்புத் திருமேனிகள் அளவிற்கு அழகு வாய்ந்தவை. இதில் குறிப்பிடத்தக்கது சென்னையில் இத்துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்களால் கண்டுபிடிக்கப் பெற்ற சிறிய அளவிலான சரபோஜியின் செப்புச் சிலையாகும்.

செப்புத்திருமேனிகள் செய்யும் முறை[3]

தியானச் செய்யுட்களும் தேவார திவ்விய பிரபந்தப் பாடல்களும் தெய்வ உருவங் களை அமைக்க மிகவும் உதவியாக விளங்கின. காராணாகமமும், சுப்பிரபேதாகமமும். உலோகங்களில் உருவங்கள் செய்வதில் தேன்மெழுகு பயன்படுத்தப்பட்டதைக் குறிப்பிடு கின்றன. மானசாரம், விஷ்ணு சங்கிதை ஆகிய நூல்கள் செப்புத் திருமேனி செய்யும் முறையைப் பற்றி விவரிக்கின்றன. கனப்பொள்ளலான உருவம் வார்க்கும் முறையை 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீ குமாரர் தாம் எழுதிய சில்பரத்தினத்தில் விரித்துக் கூறுகிறார்.

தமிழ்நாட்டில் தெய்வப் படிமங்கள் கனப்பொள்ளலாகவே செய்யப்பட்டன. இப்படிமங் களை தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களினால் செய்வது வழக்கம். செம்பினால் பெரும்பான்மையானப் படிமங்கள் செய்யப்படுவதால் இவை 'செப்புத் திருமேனிகள்' என்று அழைக்கப்படுகின்றன.

---

1. Dr. Nagaswamy R., - South Indian Studies Vol. II Early Chola Bronze from Rameswaram.
2 Nagaswamy R., - Tanjore Nayak Bronzes-Page 164.
3. திரு. கணபதி, ஸ்தபதி அவர்களின் சிற்பச் செந்நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றது.

தமிழ்நாட்டு சிற்பிகள் வார்க்கப்பட வேண்டிய உலோகப் படிமங்களை தேன் மெழுக்கு முறையில் வடிப்பதற்கான செயல்முறையினை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். மெழுகு பிடித்தல், கருகட்டுதல், வார்த்தல், வெட்டி ராவி சீவுதல், தீர்மானம், செய்தல் ஆகியவை. மெழுகினால் படிமங்களை உருவாக்குவதற்குத் தேன் மெழுகு, குங்குலியம், கடலை எண்ணெய் ஆகிய மூலப்பொருட்கள் தேவைப்படுகின்றன. குங்கிலியக் கலவை தயார் செய்துகொண்டு அத்துடன் தேன் மெழுகினைச் சேர்த்தல் வேண்டும். தேன் மெழுகின் எடையும் குங்கிலியத்தின் எடையும் சமமாக இருத்தல் வேண்டும். குங்கிலியமும் தேன் மெழுகும் உருக்கப்படுவதால் இரண்டும் ஒன்றாகி குளிர்ச்சியினால் கெட்டியாகிறது. உருக்கப்பட்ட மெழுகினைக் கொண்டு தேவையான மெழுகு படிமத்தை மணல் படுக்கையின் மீது லேசாக வைத்து அசைவின்றி பதித்தல் வேண்டும். படிமத்தின் பின்புறம் மணல் படுக்கையில் பதிந்திருக்க வேண்டும். முன்புறமும் முன் உறுப்புக்களும் வான் நோக்கி அமைந்து இருக்கும்.

இதன் மீது வண்டல் மண்ணுடன் பசும் சாணத்தை நாலுக்கு ஒன்று என்ற விகிதத்தில் சேர்த்துக் கையால் பிசைந்து முதல் பூச்சு மண்ணைத் தயாரித்தல் வேண்டும். இது 'பூச்சு மண்' அல்லது 'கட்டு மண்' எனப்படும். இக்கலவையை விரல்களினால் எடுத்து மெழுகு படிமத்தின் மீது வைத்து சந்து பொந்துகள் அடையுமாறு மெதுவாக ஊற்றியும் தடவியும் அம்மெழுகு படிவத்தை முற்றிலும் பூசிவிட வேண்டும். இது "பூச்சு மண் கட்டுதல்" எனப்படும். பூசப்படுகின்ற மண்ணின் கனம் படிமத்தின் சிறிய பெரிய அளவிற்கு ஏற்ப இருக்கலாம்.

இரண்டாவது பூச்சுக்கு படிமண் கட்டுதல் என்று பெயர். மெழுகு படிமத்தின் மீது முதல் பூச்சை பூசி அது அரைகாச்சல் நிலையை அடைந்து பின், படிமண் கட்டுதல் வேண்டும். களிமண் ஒரு பகுதியும் மணல் இருபகுதியும் சேர்த்து நன்கு கிளறி தண்ணீர் விட்டு மணலும் களிமண்ணும் நன்கு சேர்த்து கலக்குமாறு செய்ய வேண்டும். அரைக் காய்ச்சல் உள்ள கருவின் மீது சுமார் ஒரு அங்குலத்திற்கு குறையாமல் கருவின் பருமனுக்கு ஏற்றவாறு கனமாக இப்பூச்சைப் பூச வேண்டும். இக்கருவை வெய்யிலில் வைத்து நன்றாக உலர்த்த வேண்டும். மெழுகு படிமத்தின் முன்பகுதி செய்தவாறே பின்புறத்திலும் பூச்சு மண்ணையும், படிமண்ணையும் கட்டுதல் வேண்டும். இனி கருவிற்குள்ளிருக்கும் மெழுகு படிமத்தைச் சூடேற்றி மெழுகை வடித்துக் 'கருவை' தயாரிப்பர்.

தரையில் பள்ளம் வெட்டி அதற்குள் வாய் அகன்ற பாத்திரம் ஒன்றை பதித்து நன்றாய் உலர்ந்த கருவினை அப்பாத்திரத்தில் வாய் கீழ்நோக்கி அமையுமாறு அமைத்தல் வேண்டும்.

பிறகு கருவின் அடிப்பகுதியைச் சுற்றி தீ மூட்டி சூடேற்றிட வேண்டும். இப்படிச் செய்தால் கருவில் தாள்வாயின் அருகே உள்ள மெழுகு வடியத் துவங்கும். மேலும் கருவை சிறுகச் சிறுக சூடேற்றிட வேண்டும். இறுதியில் கரு முழுவதையும் வரட்டியினால் மூடி சூடேற்றி எல்லா மெழுகையும் வடித்தல் வேண்டும். இனி கரு முற்றிலும் குளிர்ந்த பிறகு மிகுந்த கவனத்துடன் அக்கருவை அவ்விடத்திலிருந்து நகர்த்தி பாதுகாப்பான இடத்தில் அசைவின்றி வைத்திட வேண்டும்.

இங்ஙனம் தயாரித்த மண் கருவிற்குள் செம்பு, பித்தளை, ஈயம், வெள்ளி, தங்கம் ஆகிய இவ்வைந்தும் சேர்ந்த பஞ்சலோகக் கலவையை ஊற்றுவர். இதற்கு 'பஞ்சநாக' என்று பெயர், கருவிலிருந்து வடித்து எடுக்கப்பட்ட மெழுகின் எடையைப் போல் பத்து மடங்கு உலோகக் கலவையின் எடை இருத்தல் வேண்டும். கருவின் அடியில் இரண்டு புனல் வாய்கள் அமைக்கப்பட்டு இருக்கும். அதில் ஒன்று வழியாக உருக்கிய உலோகத்தை ஊற்றுவதற்கும், இரண்டாவது புனல்வாய் கருவில் ஊற்றப்பட்ட திரவத்தைப் பரவிய

நிலையில் திரவ மட்டத்தையும் எளிதில் கண்டுகொள்ளவும் புனல்வாய் பயன்படுகிறது. எஞ்சி இருக்கும் காற்று வெளியேறுவதற்கும் இது பயன்படுகிறது. முதல் வாய் ஊற்றுவாய் என்றும் இரண்டாவது வாய் காற்று வாய் என்றும் பெயர் கூறப்படுகிறது.

கருவும், உலோகமும், இயல்பாகவே நன்கு ஆறும்படி செய்யவேண்டும். நன்றாக குளிர்ந்த உடன் கருவை உடைத்து கருவில் உண்டான 'சிசு' போன்ற படிவத்தைப்பெற வேண்டும். இப்படி உருவத்தில் கண், மூக்கு, வாய் ஆபரணங்கள் துவக்கமின்றிக் காணப் படும். இதனை தக்க கருவிகளைக் கொண்டு செதுக்கி ராவி, சீவி, மெழுகி ஏற்றி நகாசு வேலைகள் செய்து அப்படிமத்தில் தீர்மானம் செய்தல் வேண்டும். இங்ஙனமே படிமத்திற்கு ஏற்ற பீடத்தையும் அளவிட்டு, மெழுகினால் பிடித்து கருக்கட்டி வார்த்து சுத்தம் செய்து படிமத்தின் ஐடியோடு பிணைத்தல் வேண்டும். இதனை 'ஐடி பந்தனம்' என்பர். பீடத்தின் மேல் மட்டத்தில் நவரத்தினங்களை முறைப்படிப் பதித்து அதன்மீது ஐடியை வைத்து இரண்டையும் சேர்த்து மறுவி பிணைத்து முடித்தல் வேண்டும். இதற்கு 'இரத்தின நியாசம் செய்தல்' என்று பெயர். இதன்பிறகு உருவத்தைத் தெய்வமாக மாற்ற கண் திறப்பதாகும். ஸ்தபதி உளியால் கண்ணைச் செதுக்கியவுடன் அச்சிலை தெய்வமாகிறது. கண்திறப்பது சிறந்த விழாவாகக் கொண்டாடப்படுகிறது. மேற்கண்ட முறையில் படிமத்தை வார்த்தலுக்கு, "கனமாக" வார்க்கும் முறை அல்லது "தேன்மெழுக்கு முறை" என்று பெயர்.

வட இந்தியாவில் செப்புப் படிமங்கள் கனப்பொள்ளலான முறையில் வார்க்கப்படு கின்றன. இந்த முறையில் படிமத்தை மண்ணால் செய்து அதன்மீது தகடுபோல் மெழுகை ஒட்டி அதன்மீது பூச்சி மண், படிமண் ஆகியவற்றை முன்போல் கட்டி அமைத்து இடையி லுள்ள மெழுகை உருக்கி வெளியேற்றி உள்ளீடற்ற மண் கரு தயாரிக்கப்படுகிறது. இங்ஙனம் கிடைத்த கருவில் உட்கட்டில் உலோகத்தை ஊற்றி முன்போல் கட்டை உடைத்து படிமம் வெளியேற்றப்படுகிறது. வெளியே எடுக்கப்பட்ட படிமத்தை, கருவி களைக் கொண்டு வெட்டி, ராவி, சீவி, சீர் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 'வாகனங்கள்' மட்டும் இந்த முறையில் செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு உருவத்திற்கும் தனித்தனியாக அச்சு செய்வதால் இது சிறந்த கலையாகப் போற்றப்பட்டு வருகிறது. இன்றும் சுவாமிமலை, கும்பகோணம், நாச்சியார் கோயில், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் செப்புத்திருமேனிகள் வடிக்கும் 'வார்ப்புக்கலை' சிறந்து விளங்குகிறது.

சிலை

மண், மரம், கல், உலோகம் இவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு ஒரு பொருளின் உருவத்தை அதன் தன்மை மாறாது நகல் செய்துவிட்டால், அவ்வாறு செய்யும் வித்தையைச் 'சிற்பம்' என மக்கள் கருதினார்கள். இதனையே வெகு தெளிவாகவும் சுருக்கமாகவும் அறுதி யிட்டுக் கூறுகிறது 'சதபதப்பிராம்மணம். எது, ஒன்றின் பிரதி ரூபமாக இருக்கிறதோ அதுவே சிற்பமாகும் என்கிறது. கல்லிலே உருவம் செதுக்குபவர்களும், வண்ணம் தீட்டிச் சித்திரம் எழுதுபவர்களும், சிற்ப வித்தையில் வல்லவர்களும் சிற்பிகள் என அழைக்கப்பட்டனர்.

தெய்வ உருவங்களைப் பல்வேறு நிலைகளில் சிற்பங்களாகச் செதுக்குவதற்கும், சுதையினால் செய்வதற்கும், வண்ண ஓவியங்கள் வரைவதற்கும் வழிகாட்டியாக விளங்கியவை சிற்ப நூல்களாகும். காசியபம், சாரஸ்வதம், ப்ராம்மீயம் முதலிய சிற்ப நூல்களை நன்கு கற்றுத் தேர்ச்சி அடைந்தவர்களே சிற்பிகள் ஆவார்கள்.[1]

---

1. திரு. கணபதி ஸ்தபதி - சிற்பச் செந்நூல்.

மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் சுவரிலும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க

என்ற மணிமேகலை[1] அடிகள் மூலம், தெய்வ உருவங்கள் மண்ணாலும், கல்லாலும், மரத்தாலும் செய்யப் பெற்றன என்பதை அறிய முடிகிறது

மண் சிற்பங்கள்

தமிழகத்தில் மண்ணால் சிற்பங்கள் செய்யும் கலை சங்க காலத்தில் சிறந்து விளங்கியுள்ளது. இச்சிற்பங்கள் மண்ணையிட்டு செய்யப்பட்டதால் 'மண்ணீடு' என்று பெயர் பெற்றது. மண்ணீட்டில் அழகிய சிற்பங்களைச் செய்தவர்களை 'மண்ணீட்டாளர்கள்' என்று இலக்கியங்கள் கூறுகின்றன. இவர்கள் பூம்புகார், மதுரை ஆகிய நகரங்களில் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதைச் சிலப்பதிகாரம் குறிக்கிறது. பூம்புகாரில் அமைந்திருந்த மாளிகையினை சுதை உருவங்கள் அழகு செய்ததை இந்திர விழாவின் போது, வெளிநாட்டிலிருந்து வந்த மன்னர்கள் கண்டுகளித்தார்கள் என்பதை அறியமுடிகிறது. சம்பாபதி அம்மன் கோயிலில் காணப்படும் உருவங்கள் சுதையினால் செய்யப்பட்டவை என்று மணிமேகலைக் கூறும்.

சுடுமண் பொம்மைகள்

மண்ணீடு என்பது களிமண்ணால் பாவை செய்து தீயிலிட்டு சுடப்பட்டதையும் குறிக்கும். காவிரிப்பூம்பட்டினம், உறையூர், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பெற்ற அகழாய்வில் அழகு வாய்ந்த சுடுமண் பாவைகள் கிடைத்துள்ளன.[2]

சுடுமண்ணால் பொம்மைகள் செய்யும் கலை பெருங்கற்காலம் முதல் வளர்ந்து வந்துள்ளது. கோயம்புத்தூர், தர்மபுரி, இராமநாதபுரம், தஞ்சாவூர், காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து சுடுமண் பொம்மைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. போளுவாம்பட்டியிலிருந்து பல்லவர் காலத்தைச் சார்ந்த சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. தர்மபுரி மாவட்டத்திலிருந்து குஷானர் அல்லது அவர்களோடு தொடர்புடைய பாவைகள் கிடைத்துள்ளன. இராமநாதபுரம் கொற்தகையில் இருந்து கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பொம்மைகளும், தஞ்சையில் இராஜாளி விடுதியிலிருந்தும் கிடைத்துள்ளன.[3] அய்யனார் கோயிலில் குதிரை, யானை ஆகிய உருவங்களை செய்து வைத்து வழிபடுவது பண்டைய மரபு. இன்றும் ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில் அய்யனாருக்கு யானை, குதிரை பாவை ஆகியவற்றை சுடுமண்ணால் செய்து வைத்து வழிபடுகின்ற வழக்கம் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது.

மரச்சிற்பங்கள்

தமிழகத்தில் மரச்சிற்பங்கள் செய்யும் கலை தொன்று தொட்டு வளர்ந்து வந்துள்ளது. சிறந்த மரங்களைக் கொண்டு மரத்தேர் செய்யவல்ல தச்சர்கள் இருந்தனர் என்பதைச் சங்கப் பாடல் குறிக்கிறது. பெருங்கதை[4] இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மரயானையையும், மிகுந்த தொழில் நுட்பத்துடன் செய்யப் பெற்றவண்டியினையும் குறிக்கிறது. வைணவக் கோயில்களில் மூலத்திருமேனிகள் அத்தி மரத்தால் செய்யப் பெற்று தைலக் காப்பு பூசியுள்ளனர். கிராமப் புறங்களில் கிராமத் தெய்வங்கள் மரத்தால் செய்ய பெற்று வண்ணம் பூசி வழிபடுகின்ற பழக்கம் இன்றும் நிலவி வருகிறது. திருக்கோயிலூர் திருவிக்கிரம பெருமாள் கோயிலில் உள்ள திருவிக்கிரமன், மகாலக்ஷ்மி ஆகிய உருவங்கள் மரத்தால் செய்யப் பெற்று தைலக் காப்புப் பூசப்பட்டுள்ளது. இது கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

---

1. மணிமேகலை 21 : 125-26
2. நாகசாமி இரா. - தமிழகக் கோயிற் கலைகள்
3. நாகசாமி இரா. - ஓவியப்பாவை - பக். 79.
4. பெருங்கதை

தென்பாண்டி நாட்டு மரச்சிற்பங்கள் புகழ் வாய்த்தவை, திருவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோயிலில் மரக்கூரையால் மூடப்பட்டுள்ள மண்டபம் ஒன்று உள்ளது. இதில் விஷ்ணுவினுடைய பல்வகை அவதாரங்கள் மரச்சிற்பங்களாகச் செதுக்கப் பெற்றுள்ளன· இலக்குமி நரசிம்மர், இலக்குமி, வராக மூர்த்தி, விஷ்ணு, இலக்குமி, ஆதிசேஷன், கஜலட்சுமி ஆகிய உருவங்கள் குறிப்பிடத்தக்கவை.

திருநெல்வேலி, திருக்குறுங்குடி ஆகிய ஊர்களில் உள்ள மரச்சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. திருவட்டாறு பகுதியில் மரச்சிற்பங்களின் மீது வண்ணம் பூசும் அழகினை இன்றும் காணலாம்.

மரத்தேர்

தமிழ்நாட்டில் மரத்தேரின் மீது தெய்வத் திருவுருவங்களை வைத்து வீதி உலா வாக வடம் பிடித்து இழுத்து வரும் தேர்த்திருவிழா இன்றும் திருவாரூர், திருவில்லிப் புத்தூர், மயிலை, திருவண்ணாமலை, நெல்லை, சிதம்பரம் ஆகிய ஊர்களில் நடைபெற்று வருகிறது. இத்தேர்களில் சைவ, வைணவ சமயங்களின் பல்வேறு நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்ற உருவங்கள் அலங்கரிக்கின்றன.

கோயிலின் கோபுரக் கதவுகளில் அழகிய மரச்சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளதை அழகர் கோயில், மதுரை, திருவரங்கம், ஆகிய ஊர்களில் காணலாம். சிவகங்கை, இராமநாதபுரம், செட்டிநாடு ஆகிய பகுதிகளில் கோயில்களில் தூண், போதிகை, மேல் விதானங்களில் மரச்சிற்பங்கள் அமைக்கப் பெற்று காணப்படுகின்றன. சிவகங்கை அரண்மனையில் மரப்பாவைகள் வண்ணம் பூசப்பெற்று காட்சி அளிக்கின்றன. சென்னை அருங்காட்சியகத்தில் கி. பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விநாயகர், ஆறுமுகன், ஆகிய எழில் வாய்ந்த மரச்சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.[1]

தந்தச் சிற்பங்கள்

தந்தத்தில் சிற்பங்கள் வடிக்கும் கலை சங்ககாலந் தொட்டு தமிழ்நாட்டில் வளர்ந்து வந்துள்ளது என்பதை நெடுநல்வாடையின்[2] மூலம் அறிய முடிகிறது. பாண்டிமாதேவி படுத்திருந்த கட்டில் பல போர்களில் வெற்றி கண்ட முதிர்ந்த யானையின் தந்தத்தால் செய்யப்பட்டதாகும். இதில் பெரிய இலை போலும், கொடி போலும் சித்திரங்களைச் செதுக்கியுள்ளனர். இதில் சிங்கம் முதலியவற்றை வேட்டையாடுவது போல் தகடுகளை வெட்டிப் பதித்துள்ளனர். இவ்வாறு பல்வேறு வேலைப்பாடுகள் மிகுந்த இக்கட்டில் கச்சுக்கட்டில் என்று அழைக்கப்பட்ட இவ்வகை வேலைப்பாட்டில் சிறந்து விளங்கிய தச்சர்கள் தந்தச் சிற்பிகள் என்று போற்றப்பட்டனர்.

தமிழ்நாட்டில் தந்தச் சிற்பங்கள் செய்யும் கலை பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ள போதிலும், நேரிடைச் சான்றுகளாக கி. பி. பத்தாம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய கங்கைகொண்ட சோழனின் மாளிகையிலிருந்து சில அலங்காரப் பொருட்களைக் கூறலாம்.

திருமலை மன்னர்

பிறகு கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர், மதுரையில் கோபுரங்களையும், மண்டபத்தினையும் அமைத்து, அதில் சிற்பங்களை வடித் துள்ளார். இத்தகைய பெருமன்னன் தந்தத்திலும் சிற்பங்களை வடித்துள்ளது சிறப்புடைய தாகும். அவற்றுள் ஒரு சில மதுரைக் கோயிலிலும், திருவரங்கம் கோயிலிலும் காட்சியகத்தில்

---

1. நாகசாமி இரா. - ஓவியப்பாவை - பக். 77.
2. நெடுநல்வாடை.

வைக்கப் பெற்றுள்ளன. சிவபெருமான், திருமால், முருகன் ஆகிய தெய்வங்களின் பல்வேறு தோற்றங்களும், கண்ணன், இராமன் முதலிய உருவங்களும் உள்ளன. நாயக்க அரசர்கள் தங்கள் மகளிரைப் பல்வேறு கோலங்களில் அணைந்து இன்பம் துய்க்கும் உருவங்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் முக்கியமானது, திருமலை நாயக்கரின் உருவம் கலையழகு வாய்ந்த உருவமாகும். இங்கு சில ஐரோப்பிய உருவங்களும், விண்ணோர் மற்றும் மேலைநாட்டு தேவதைகளின் (ஏஞ்சல்ஸ்) சிற்பங்களும் காணப்படுகின்றன. இவற்றுள் ஒரு சில வண்ணம் பூசப்பட்டும் ஒரு சில வண்ணம் பூசப்படாமலும் உள்ளன. முத்து விஜயரங்க சொக்கநாத நாயக்கர் திருவரங்கத்து எம்பெருமான் மீது அளவிலாத பக்தி கொண்டு இறைவனுக்குப் பல அணிகளை அளித்துள்ளார். இவர் தந்தத்தில் தன் உருவச்சிலையுடன் தன் தேவி, மகள் ஆகியவர்களின் உருவச் சிலைகளையும் செய்து வைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.[1]

தமிழகச் சிற்பிகள் இந்தியாவின் வடபகுதிக்குச் சென்று தமிழில் நூற்களை இயற்றியுள்ளனர். தமிழ்நாட்டிற்கும் மகதம், அவந்தி, மராட்டியம் ஆகிய நாடுகளிலிருந்து சிற்பிகள் வந்துள்ளதை மணிமேகலைக்[2] குறிக்கிறது.

கற்சிற்பங்கள்

போரில் விழுப்புண் ஏற்று வீரமரணமடைந்த வீரனுடைய உருவத்தைக் கல்லில் செதுக்கி அவனுடைய பீடும் பெயரும் பொறித்தனர் என்று தொல்காப்பியம் குறிப்பதிலிருந்து சிற்பக் கலையின் தொன்மையினை அறிய முடிகிறது.

பௌத்தச் சிற்பங்கள்

கி. பி. முதல் - இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த, பௌத்த ஸ்தூப சிற்பங்களைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை இராயப்பேட்டையில்[3] கண்டு பிடித்துள்ளது. அதில் இரண்டு ஸ்தூபங்களும் புத்தரின் இரண்டு உருவங்களும், பணிமக்கள் உருவங்களும் காணப்படுகின்றன. திருவல்லிக்கேணி[4] எல்லையம்மன் கோயிலில் இருந்தும் பௌத்தச் சிற்பத் தொகுதி கண்டறியப்பட்டுள்ளது. இரண்டு வரிசையில் மக்கள் புத்த ஸ்தூபத்தை வணங்கச் செல்வது போல இச்சிற்பத் தொகுப்பு உள்ளது. மேல் வரிசையில் ஆண்கள் உருவங்களும், கீழ் வரிசையில் பெண்கள் வணங்கிய கோலத்திலும் காட்டப் பட்டுள்ளனர். இவர்கள் காதுகளில் வட்டக் குழைகள் அணிந்துள்ளனர்.

காவிரிப்பூம்பட்டினம் அகழாய்வில் புத்தருடைய பாதம் கிடைத்துள்ளது. மணிமேகலை, புத்தர் பாதங்கள் உள்ள பீடங்களைச் "சுடரொளி விரிந்த தாமரைப் பீடிகை" தரும பீடிகை, புத்த பீடிகை, மாமணிப் பீடிகை என்று குறிக்கிறது.

தமிழ்நாட்டில் புத்தர் சிலைகள் திருவதிகை, மதுரை, இளையான்குடி, இராமேஸ்வரம், மானம்பாடி, நாகப்பட்டினம், வலையமாபுரம் ஆகிய இடங்களில் காணக் கிடைக்கின்றன.

வலையமாபுரத்திலிருந்து சிறிய அளவிலான புத்தர் சிலை ஒன்றும் இக்கட்டுரை ஆசிரியர் திரு கு. தாமோதரன் அவர்களால் கள ஆய்வின் பொழுது கண்டறியப்பட்டு தற்போது கங்கைகொண்ட சோழபுரம் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

---

1. நாகசாமி இரா. – ஓவியப்பாவை – பக். 64.
2. மணிமேகலை.
3. திரு. நடன. காசிநாதன் இயக்குநர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது – தொல்லியல் செய்திமடல் 5
4. திருமதி. வசந்தகல்யாணி ஆர்., கல்வெட்டாய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி.

பல்லவர் காலச் சிற்பங்கள்

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தைச் சிறப்புடன் ஆண்ட பல்லவ மன்னர்களின் கலைத்தொண்டு போற்றுதற்குரிய ஒன்றாகும். இக்கால கட்டத்தில் அரிய பல சிற்பங்கள் வடிக்கப் பெற்றுள்ளன.

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம், இருளப்பட்டி[1] என்ற ஊரிலிருந்து கி.பி. நான்கு - ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள இரண்டு நடுகற்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் வடிக்கப் பெற்றுள்ள சிற்பங்களின் ஆடை அணிகலன்கள் உருவ அமைதியைக் கொண்டு இவை பல்லவர்களின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தவைகளாகக் குறிப்பிடலாம்.

காஞ்சிபுரம் தான்தோன்றீஸ்வரர்[2] கோயிலில் இருந்து பல்லவர் காலத்தைச் சார்ந்த புடைச் சிற்பங்கள் கண்டறியப்பெற்றுள்ளன. இப்புடைச் சிற்பங்கள் வரிசையில் ஆண் பெண் உருவங்கள் சேர்ந்து கூத்தாடுவது போன்று வடிக்கப்பட்டுள்ளது. இவை அகக்கூத்துச் சிற்பங்களாகும். பெண்கள் சிறிய துண்டு (உத்தரியம்) தோலால் செய்யப் பெற்ற பந்து அல்லது பையை கைகளில் ஏந்தி உள்ளனர். இடுப்பில் குட்டையான ஆடையினையும். இடுப்பைச் சுற்றி ஆடைக்கட்டும் காணப்படுகிறது. இச்சிற்பங்களின் அணிகலன்களையும் உடல் அமைப்பினையும் பார்க்கும் பொழுது இவை அமராவதி, நாகார்ஜுனகொண்டா சிற்பங்களை நினைவூட்டுகின்றன. பல்லவ மன்னர்களின் ஆட்சி, அமராவதி வரைப் பரவியிருந்ததால், பல்லவர் கால சாதவாகனர்களுடன் தொடர்புடையதாக விளங்குகிறது. இச்சிற்பங்கள் அமராவதி - பல்லவர் கால மரபினைத் தொடர்பு படுத்துவதாக அமைந்துள்ளது, இச்சிற்பங்கள் கி.பி, ஆறாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தை சார்ந்ததாகக் கொள்ளலாம். இச்சிற்பங்கள் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்திற்கு முற்பட்டவைகளாகும்.

வேலஞ்சேரித் திருமகள்

வேலஞ்சேரியின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கிராம தேவதைக் கோயிலில் இருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ஸ்ரீவஸ்தம்' என்ற சிற்பம் கண்டுபிடிக்சப் பட்டுள்ளது. தாமரை மலரில் அமர்ந்த நிலையில், கால், கைகள் வட்டமாகக் காட்டப்பட்டு திருமகள் உருவமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இரண்டு பக்கங்களிலும் குத்துவிளக்கும், விளக்கின் கீழ்ப்பகுதியில் சங்கநிதி, பத்மநிதி ஆகிய உருவங்களும், யானையின் உருவங்களும் அழகு செய்கின்றன.[3]

காவேரிபாக்கம், மணிமங்கலம், தென்னேரி ஆகிய ஊர்களில் ஸ்ரீதேவியின் உருவங்களைக் காணலாம்.[4] கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து 'ஸ்ரீவஸ்தம்' [திருவுரு] மனிதஉருவச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மாமல்லபுரத்தில் உள்ள ஸ்ரீதேவி சிற்பத்தைக் கூறலாம்.

புடைச்சிற்ப வரிசை

தொண்டை மண்டலப் பகுதியில், புடைப்புச் சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பொதுவான பீடத்தின் மீது பிரம்மா, உமா மகேஸ்வரர், இலக்குமி நரசிம்மர், சுப்பிரமணியர் ஆகிய சிற்பங்கள் வரிசையாக அமர்ந்த நிலையில் வடிக்கப்பெற்றுள்ளனர். இது பொதுவான

---

1. நாகசாமி இரா. – இருளப்பட்டி நடுகற்கள், தமிளிகா, தொகுதி ஒன்று, பக். 95.
2. நாகசாமி இரா. – தமிளிகா தொகுதி ஒன்று, பகுதி 3
3. Natana. Kasinathan, Panel Sculptures in Tamilnadu Art Panorama of Tamils
   ஸ்ரீதரன் கி. - திருமரு - கல்வெட்டு இதழ்-18.
4. நாகசாமி இரா. – தமிளிகா, தொகுதி ஒன்று, பக். 1 முதல் 5 வரை.

அமைப்பாகும். சிலவற்றில் சிவபிரான் லிங்க வடிவத்திலும், உமா மனித வடிவத்திலும் அருகில் காட்டப்பட்டுள்ளனர். இலக்குமி காட்டப்படுகின்ற இடங்களிலெல்லாம் 'ஶ்ரீவத்ச' வடிவில் பாதி மனித உருவிலும் மற்ற பாதி திருவுருவாகவும் காட்டப்பட்டுள்ளது. ஜேஷ்டா சிற்ப வரிசையும் உள்ளது. இவ்வகைச் சிற்பங்கள் முன்னூர், மணிமங்கலம், வேலஞ்சேரி, தென்னேரி, மதுராந்தகம், உத்திரமேரூர், உக்கல், பிரம்மதேசம் ஆகிய இடங்களில் காணப் படுகின்றன.[1]

திரிமூர்த்தி

விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம், விழுப்புரம் வட்டம், திருவாமாத் தூர் அபிராமி ஈசுவரர் கோயிலில் திரிமூர்த்தியின்[2] சிற்பம் உள்ளது. நடுவில் சிவபெருமான் லிங்க வடிவிலும், இடப்புறம் திருமாலும், வலப்புறம் பிரம்மனும் வடிக்கப் பெற்றுள்ளனர். சிவனுக்குச் சிறப்புக் கொடுத்து லிங்கோத்பவராகக் காட்டப்பட்டுள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தச் சிற்பத்தில் படைத்து, காத்து, அழிக்கும் தொழில் புரியும் மும்மூர்த்திகளான பிரம்மன், திருமால், சிவன் ஆகியோரைச் சமமாக வடித்திருப்பதாகத் தெரிகிறது.

முதலாம் மகேந்திரவர்மன்

முதலாம் மகேந்திரவர்மன் காலம் முதல் பல்லவர் சிற்பக்கலை சிறந்து வளரத் தொடங்கியது எனலாம். இதே மாவட்டத்தில் மண்டகப்பட்டு என்ற இடத்தில் பிரம்மா, சிவன், திருமால் ஆகிய தெய்வங்களுக்கு இவனால் எடுக்கப்பெற்ற குடவரைக் கோயில் செங்கல், மரம், சுதை, உலோகம் இன்றி எடுக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுக்கள் வாயிலாக அறிய முடிகிறது. இதற்கு முன்னர் இப்பொருள்களால் கோயில் எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. பல்லவர் காலக் கட்டடக் கலைக்கு இதுவே தொடக்கம் எனலாம். மகேந்திரவர்மனால் தோற்றுவிக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயில் களில் வாயிற்காவலர்களின் சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. திருச்சி மலையின் மேலுள்ள குடைவரைக் கோயிலில் உள்ள கங்கைவார் சடைக் கரந்தாராகக் காணப்படும் சிவபெருமான் சிற்பம் கலை அழகு வாய்ந்தது.

வடஆற்காடு மாவட்டம், வந்தவாசிக்கு அருகில் உள்ள பொன்னூர் என்ற ஊரிலிருந்து பல்லவர் காலத்தைச் சார்ந்த (கி.பி. ஏழாம் நூற்றாண்டு) அரிய தத்தாத்ரேயர் சிற்பம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. இச்சிலை தலையில் கிரீடமகுடம், கணுக் கால் வரை ஆடை, மேல்வலக்கரத்தில் அக்கமாலை, மேல் இடக்கரத்தில் மழு ஆகியவற்றுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது.[3]

ஆரணிக்கருகில் உள்ள வலையாத்தூர் என்ற ஊரில் இருந்தும் துர்க்கைச் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், விழுப்புரத்திற்கு அருகில் உள்ள கண்டம்பாக்கம் என்ற ஊரிலிருந்து பல்லவர் காலத்தைச் சார்ந்த வினாயகர், சண்டிகேஸ்வரர் திருக்கோயிலூர் வட்டம், எரளூர் என்ற கிராமத்திலிருந்து துர்க்கை ஆகிய சிற்பங்கள் இக்கட்டுரை ஆசிரியர் திரு. கு. தாமோதரன், அவர்களால் கண்டறியப்பட்டதாகும். ஆனாங்கூர் முருகன், துர்க்கை ஆகிய சிற்பங்களும் குறிப்பிடத்தக்கன. இச்சிற்பங்கள் கோ. முத்துசாமி அவர்களால் கண்டறியப்பட்டதாகும்.

---

1. நாகசாமி இரா. – தமிளிகா, தொகுதி ஒன்று, பக். 1 முதல் 5 வரை.
2. நடன. காசிநாதன், தினமணி.
3. தினமணி 26-5-89, தினமலர் 29-5-89.

செஞ்சியை அடுத்த சிங்கபுரம் என்ற ஊரில் வயல்வெளியிலிருந்து கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த துர்க்கைச் சிற்பம் அண்மையில் இத்துறையினரால் கண்டறியப் பட்டுள்ளது. பல்லவர் ஆட்சியின்பொழுது சமண சமயம் வளர்ந்துள்ளது என்பதற்கு உதாரணமாக தொண்டூர், ஐம்பை, பறையன்பட்டு, தளவானூர், திருநறுங்கொண்டை, மேல்கூடலூர், சோழபாண்டிபுரம் ஆகிய ஊர்களில் உள்ள சமணச் சிற்பங்களைக்[1] கூறலாம். திருநாதர்குன்றில் உள்ள தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. ஆலக்கிராமம் இயக்கி அம்மன் சிற்பமும் சிறப்பு வாய்ந்தது.

இராசசிம்மன்

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அத்யந்தகாமன் என்று புகழ்பெற்ற இரண்டாம் நரசிம்மனாகிய இராசசிம்ம[2] பல்லவன் சிற்பக் கலைக்கு பெருந் தொண்டாற்றியுள்ளான். இவனால் எடுக்கப்பெற்ற சிற்பங்களை, குடைவரைக் கோயில், இரதக் கோயில், பாறைகள், கட்டடக் கோயில்கள் ஆகியவற்றில் வடிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்

மகிஷாசுரமர்த்தினி குகையில் உள்ள சிற்பங்கள் பல்லவர் கால கலைப்படைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். கொற்றவை சிங்கத்தின் மீதமர்ந்து கையிலே வாள் ஏந்தி கணங்கள் சூழ மகிஷாசுரனைப் பாய்ந்து வீழ்த்துகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இதன் எதிரில் அமைதியே உருவாக ஆழ்கடலில் அரவணையில் படுத்துறங்கும் எம்மான். நடுவில் சோமாஸ்கந்த மூர்த்தியாக விளங்குகின்ற "சிவபெருமான்" கருவறை, யில் ஆதிமுன் ஏனப் பெருமாளாக விளங்கிய பன்றி முகத்தோன் சிலை அருகில் திருமகள் கொற்றவை, நான்முகன், கங்காதரர் சிற்பங்கள், இரு மன்னர்களின் (தேவியர்களுடன்) சிற்பங்கள் ஆகியவை அழகு செய்கின்றன. வராகக் குகையில் உள்ள திருவிக்கிரம மூர்த்தி, வராக மூர்த்தி, கொற்றவை, திருமகள் சிலைகளும் அழகு வாய்ந்தவை. மும்மூர்த்தி குகைச் சிற்பங்களும் மிகவும் வனப்புடையவை. அர்ச்சுன இரதம், தர்மராஜ இரதம் ஆகிய இரதங்களில் உள்ள பெண் உருவங்களும் தெய்வ உருவங்களும் கலையழகு மிக்கவை.

மாமல்லபுரத்தில் உள்ள பாறைச் சிற்பங்கள் உலகப்புகழ் வாய்ந்தவை. வானத்தி லிருந்து விழும் கங்கையாற்றின் கரையில் பார்த்தனுக்குப் பாசுபதம் அளிக்கும் பரமன், விண்ணில் உலவும் தேவர், கந்தர்வர், இயக்கர், கின்னரர், கிம்புருடர், சித்தர், சாரணர் விண்ணில் பறந்து வரும் காட்சியும், களிறும், பிடியும், நகர், விலங்குகள் மிகச் சிறப்பாக வடிக்கப்பெற்று பல்லவர் சிற்பக்கலைக்குச் சிகரம் வைத்தாற்போன்று அமைந்துள்ளது.

காஞ்சி கைலாசநாதர் கோயிலை எடுப்பித்தவன் பல்லவன் இராசசிம்மன். இக் கோயிலில் சிவபெருமானின் பல்வகைத் தோற்றங்கள் - தேவியர், திருமால், நான்முகன், முருகன், கொற்றவை, பல்வேறு நிலைகளில் சிவபிரான் புரிந்த ஆடல்கள் ஆகியவற்றைத் தாங்கி நிற்கும் கைலையங்கிரியைக் காட்டிலும் சிறந்ததாகத் தோற்றுவிக்கப்பட்டது இக் கோயில் என்று அங்குள்ள கல்வெட்டுக் குறிக்கிறது.

காஞ்சி - வைகுந்தப்பெருமாள் கோயிலில் பல்லவர்களது வரலாறு முழுவதும் சிற்ப மாக செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்களின்மீது சுண்ணாம்பு சாந்து பூசி அழகிய வண்ணம் தீட்டப்பட்டிருந்தது. தற்பொழுது சிதைந்து காணப்படுகிறது.

அதியர்

சேலம் மாவட்ட்ம் நாமக்கல்லில்[3] தகடூர் அதியமான் நெடுமானஞ்சியின் வழிவந்த அதியேந்திரன் என்பவன் நரசிம்மர் குகை, அனந்தசாயி குகை ஆகிய இரண்டு குடைவரைக் கோயில்களை எடுத்துள்ளான். இவற்றுள் நரசிம்மர் குகையில் உள்ள நரசிங்கப்

---

1. டாக்டர் ஏகாம்பரநாதன் – தொண்டை நாட்டுச் சமணக் கோயில்கள்.
2. நாகசாமி இரா. - மாமல்லை, பக். 61.
3. Dr. Vidya Dehejia - Namakkal Caves

பெருமாள், பூமகளை ஏந்திய ஏனப்பிரான், உலகளந்தபிரான் ஆகிய சிற்பங்கள் கலையழகு மிக்கவை. அனந்தசாயி குகையில் பள்ளிகொண்ட பெருமாள் துயில் கொள்ளும் அழகே தனி. இதன் காலம் கி.பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டாகும்.

முத்தரையர், இருக்குவேளிர், பழுவேட்டரையர் காலத்திலும் அரிய சிற்பங்கள் வடிக்கப் பெற்றுள்ளன.

பாண்டியர் கலை

பல்லவர்கள் கோயிற் கலைகளில் சிறந்து விளங்கியதைப் போன்றே தமிழகத்தின் தென் பகுதியில் ஆட்சி செய்த பாண்டியர்களும் கலைத்தொண்டு புரிந்துள்ளனர். பாண்டிய நாட்டில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில் கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

கழுகுமலை ஒற்றைக் கற்கோயில் பாண்டியர்களின் சிற்பக் கலைக்கு ஒரு மைல்கல் எனலாம். பல்லவர்களின் பாணிக்கு மாறாக அமைக்கப்பட்டுள்ள கோயில் இது. இராசாக்கள் மங்கலம், திருச்சுழியல் சிற்பங்களும், திருப்பரங்குன்றம், ஆனைமலை, திருமெய்யம், குடுமியான்மலை, குன்றக்குடி போன்ற இடங்களில் உள்ள குடைவரைச் சிற்பங்களும் பாண்டியர்களின்[1] சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

பாண்டி நாட்டில் சமணச் சிற்பங்கள்[2]

தொண்டை நாட்டில் சமண சமயம் பரவியிருந்த அளவிற்கு தமிழகத்தின் தென்பகுதி யாகிய மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சமண சமயம் பரவியிருந்ததற்கு அடையாளமாக தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் கிடைக்கின்றன. இவ்வகைச் சிற்பங்களை அம்பலப்பசாமி, அமணஞ்சாமி, சமணஞ்சாமி ஆகிய பெயர்களில் மக்கள் வழிபட்டு வருகின்றனர். இப்பகுதியில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கின்றன.

இராமநாதபுரம் மாவட்டம், கோவிலாங்குளம், இளையாங்குடி. பெரியபட்டினம், கிடாரம், மஞ்சியூர், செழவனூர் முதலிய இடங்களிலும் கோவிலம்பட்டி, புலியூரான், பாலவநத்தம், தவிசிக்குறிச்சி, குமாரக்குறிச்சி, சித்தை, இடைக்காட்டூர், ஏழாயிரம் பண்ணை, நத்தம்பட்டி ஆகிய ஊர்களிலிருந்தும் தீர்த்தங்கரர் சிற்பங்கள் கிடைக்கின்றன.

திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம், ஆழ்வார் திருநகரி ஆகிய ஊர்களிலும் இவ்வகைச் சிற்பங்கள் கிடைக்கின்றன.

விசையாலயன்

தஞ்சை கொண்ட கோப்பரகேசரி என்று போற்றப் பெற்ற விசையாலய சோழன் தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றி சோழப் பேரரசை நிறுவியதின் நினைவாக தஞ்சையில் நிசும்பசூதனியைப் பிரதிட்டை செய்தான். இச்சிலை இன்றும் வழிபாட்டில் உள்ளது. தஞ்சை பெரிய கோயிலில் தென்பக்கத் திருச்சுற்றில் உள்ள வாராகி சிற்பமும் விசையாலயன் காலத்திய சிற்பமாகக் கருதப்படுகிறது.

முதலாம் ஆதித்தன்

விசையாலயன் மகன் ஆதித்த சோழன் சிவபிரானுக்கு காவேரிக்கரையில் கோயில் களை எடுப்பித்து அவற்றில் கலை அழகு வாய்ந்த சிற்பங்கள் வடித்துள்ளான். குறிப்பிடத் தக்க கோயில் வரிசையில் முதலாவதாக நிற்பது கும்பகோணத்தில் அமைந்துள்ள நாகேசுவர

1. நாகசாமி இரா., சந்திரமூர்த்தி மா. - தமிழகக் கோயிற் கலைகள்
2. திரு. வேதாசலம் - கல்வெட்டு இதழ்

சுவாமி கோயில் என்று வழங்கும் குடந்தைக் கீழ்க்கோட்டமாகும். இதிலுள்ள அழகு வாய்ந்த பெண் சிற்பங்கள், தேவதைகளோ தேவலோகக் கன்னிகளோ என்று வியக்க வைக்கிறது. இவ்வளவு அழகான பெண்களை இதுவரை யாரும் கண்டிருக்க முடியாத அளவுக்கு காட்சி யளிக்கின்றனர். அரசமாதேவியர்களா? அல்லது நாட்டிய மகளிரா என்பதை இதுவரை யாரும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இக்கோயில் உண்ணாழியின் கிரீவப் பகுதியில் பல்வகை நாட்டியச் சிற்பங்களும், இசைக்கருவிகளை வாசிக்கும் சிற்பங்களும் உள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீநிவாச நல்லூரிலுள்ள குரங்கநாதர் கோயிலில் உள்ள புகழ் பெற்ற இரண்டு பெண் உருவங்களும், அரசனின் தோற்றமும் சிறப்புடைய தாகும். விழுப்புரம் நகரத்தில் உள்ள வாலீஸ்வரர் கோயில் சிற்பங்கள் குறிப்பாக தக்ஷிணாமூர்த்தி, பிரம்மா, கைலாசநாதர் கோயிலில் உள்ள பிச்சைப்புகும் பெருமான் ஆகிய சிற்பங்கள் சிறப்புடையன. இச்சிற்பங்கள் இக்கட்டுரை ஆசிரியர் திரு கு. தாமோதரன் அவர்களால் கள ஆய்வின் போது கண்டறியப்பட்டவையாகும்.

முதலாம் பராந்தகன் காலத்திலும் பல கோயில்கள் எடுக்கப் பெற்று அவற்றில் அழகு வாய்ந்த சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. தஞ்சை மாவட்டம் புள்ளமங்கை, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள திருநாவலூர்[1] கிராமம், சித்தலிங்கமடம், திருவாமாத்தூர் ஆகிய கோயில்களில் உள்ள சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. ஆதித்தன், பராந்தகன், இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன் ஆகிய மன்னர்கள் காலத்தில் எடுக்கப் பெற்ற கோயில்களில் அழகிய சிற்பங்கள் அணி செய்கின்றன.

செம்பியன் மாதேவியார் சைவப் பற்று மிகுந்தவர். இவர் பல செங்கற்கோயில்களைக் கற்றளிகளாக எடுத்து சிவத்தொண்டு புரிந்துள்ளார். அவற்றுள் மிகவும் முக்கியமானவை கோனேரிராஜபுரம், செம்பியன் மாதேவி, திருவாரூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோயில்களின் மிகச் சிறந்த சிற்பங்களாகும்.

திருவாரூர்த் தியாகராஜ சுவாமிக் கோயிலில், அசலேஸ்வரர்[2] சந்நிதியில் அழகு வாய்ந்த உயிரோட்டமுள்ள சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலின் கோட்டங்களில் வைக்கப்பட்டுள்ள ஆண் உருவங்கள் மனித வளர்ச்சியினைச் சித்தரிக்கின்ற வகையில், சிறு பிள்ளையாகவும், இளைஞனாகவும், உடற்கட்டு மிகுந்த அழகுமிகு வாலிபனாகவும், வயதான உருவமாகவும் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் அரச குடும்பத்தைச் சார்ந்தவைகளா, தெய்வ உருவங்களா அல்லது ஏதாவது சமய தத்துவங்களை விளக்குகின்ற வகையில் அமைக்கப்பட்டனவா என்பது தெரியவில்லை. தியாகராஜசுவாமி கோயில் கோபுர நாட்டியச் சிற்பங்கள், அசலேஸ்வரத்தில் உள்ள கோட்டச் சிற்பங்கள், துர்க்கை, கங்காள மூர்த்தி, பிரம்மா, அகஸ்த்தியர், கணேசர், இரண்டு நடராஜர் ஆகிய சிற்பங்கள் முக்கியமானவை. கும்பகோணம் நாகேஸ்வர சுவாமிக் கோயிலில் உள்ள சிற்பங்கள், சீனிவாசநல்லூர் கொரங்கநாதர் சுவாமிக் கோயிலில் உள்ள சிற்பங்கள், ஆகியவற்றைத் திருவாரூர் சிற்பங்களுடன் ஒப்பிட்டு ஆய்வுச் செய்யும்போது திருவாரூர் சிற்பங்கள் சற்று அழகு குறைந்தவையாகக் காணப்படுகின்றன.

முதலாம் இராசராசன் இளைஞனாக இருந்த பொழுது செம்பியன் மாதேவியிடம் சைவ சமயக் கோட்பாடுகளை நன்கு கற்று அறிந்திருந்த காரணத்தால் உலகமே கண்டு வியக்கும் வண்ணம் 'தஷிணமேரு' என்று போற்றப்படுகின்ற பெருங்கோயிலைத் தஞ்சை யில் எடுப்பித்தான். கோயிலின் நுழைவாயிலில் மிகப்பெரிய அளவில் வாயில் காப்பாளர் களின் சிலைகளை நிறுவியுள்ளான். கோயிலின் கோட்டங்களில் சிவபிரானின் முப்புரம்

1. திரு. தாமோதரன் கு., விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்ட வரலாறு
2. Ponnusamy S., Sri Thiyagarajar temple of Tiruvarur - Asaleswaram Portrait Sculpture - p. 90

எரித்த கோலத்தைச் சிற்பமாக எடுத்துள்ளான். அத்துடன், தென்பக்க வாயிலில் திருமகள் சிற்பத்தினையும், வடபக்க வாயிலில் கலைமகள் உருவத்தையும் செதுக்கி வைத்துள்ளான். கோயில் விமானத்தின் முதல் தளத்தில் பல்வகை நாட்டியக் கரணங்களை விளக்குகின்ற வகையில் புடைச்சிற்பங்களை அமைத்துள்ள அழகே தனி. அது மட்டுமல்லாமல் ஓவியங்கள் அமைந்துள்ள பகுதியில் மிகப்பெரிய அளவில் மேற்குப் பகுதியில் ''ஆடவல்ல பெருமானின் சிற்பத்தை வடித்து அதன்மீது சுதைப் பூசி வண்ணம் தீட்டியுள்ளது காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் உள்ளது. இதே பகுதியில் வடக்குப் பக்கத்தில் திருமகள், கலைமகள் ஆகிய இருவரையும் ஒரே சிற்பத்தில் காட்டியுள்ளதைக் காணலாம். பெரிய கோயிலின் விமானப் பகுதியில் சிற்பங்களை வடித்துள்ள பாங்கு இராசராசனுக்கே உரிய சிறப்பாகும்.

தந்தைக்கு ஏற்ற தமையனாக முதலாம் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழ புரத்தில் ஒரு பெருங்கோயிலை எடுத்துள்ளான். இக்கோயிலில் ஆடும் ''ஐங்கரன்'', உமையொருபாகன், ஹரிஹரன் ஆகிய சிற்பங்களை எடுத்துள்ளான். இவன் இக்கோயிலில் எடுத்துள்ள அம்மையப்பனாக அமர்ந்த சிவபெருமானாகிய சண்டிக்கு மாலை சூட்டும் சண்டேச அனுக்கிரக மூர்த்தி, திருமகள், கலைமகள் ஆகிய சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. இக்கோயிலில் நுளம்பர் கலைப்பாணியைச் சேர்ந்த சனீஸ்வர பகவான் மேடை சிறப்புடையதாகும்.

துவாரபாலகர்

விசயராசேந்திரன் (முதலாம் இராசாதிராசன்), (கி.பி. 1018-1054) கி.பி. 1048-ல் மேலைச் சாளுக்கிய மன்னவன் முதலாம் சோமேசுவர ஆகவமல்லனை கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள பூண்டி என்ற இடத்தில் வெற்றி கொண்டு, அதன் தலைநகரான கல்யாணபுரியை எரித்து அதன் அடையாளமாக 'துவாரபாலகர்' சிற்பத்தினை, வெற்றிச் சின்னமாகக் கொண்டு வந்துள்ளான். இதில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, ''ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விசயராசேந்திர தேவர் கல்யாணபுரம் எரிந்து கொடு வந்த துவார பாலகர்'' என்று உள்ளது.

நுளம்பச் சிற்பம்

தஞ்சாவூர் மாவட்டம் திருவாஞ்சியம் வாஞ்சிநாத சுவாமி கோயிலிலும், தஞ்சை, அம்மன்குடி, திருவையாறு ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களிலும் நுளம்பர் சிற்பங்கள் உள்ளன. திருவையாறு தென் கயிலாயத்தில் முதலாம் இராசேந்திரன், நுளம்ப நாட்டை வெற்றி கொண்டு அதன் நினைவாகக் கொண்டு வந்த நாற்பத்தியாறு நுளம்பர் கலைப் பாணியைச் சார்ந்த தூண்களைக் கொண்டு கோயில் எடுத்துள்ளான்.[1] திருவதிகை, வீரட்டானேஸ்வர் கோயிலில் உள்ள மகிஷாசுரமர்த்தினியின் சிற்பமும் நுளம்பர் காலத்தைச் சேர்ந்தது.

கலிங்கச் சிற்பம்

கங்கைகொண்ட சோழபுரத்தில் செங்கமேட்டில் கிடைத்துள்ள வைரவர் சிற்பம், முதலாம் இராசேந்திரன் கலிங்கத்தை வெற்றி கொண்டதன் நினைவாக அந்நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சிற்பமாகும். சிதம்பரத்திற்கு அருகிலுள்ள கீழக்கடம்பூரில் கிடைத்துள்ள வங்கநாட்டுப் பாலர் சிற்பமான 'தாண்டவப்பிரான்' பாலர் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.[2]

இராஜராஜபுரம் என்று சிறப்புற்று விளங்கிய இவ்வூர் தற்பொழுது ''தாராசுரம்'' என்று வழங்குகிறது. இங்கு ''இராஜராஜேஸ்வரம்'' என்ற ஒரு கோயில் எடுக்கப்பட்டு அதில்

1. முனைவர் திருமதி மார்க்கிய காந்தி - திருவதிகை வீரட்டானம் ப.
2. நாகசாமி இரா. - கல்லும் சொல்லும்.

பெரிய புராணத்தில் குறிக்கப்படுகின்ற திருத்தொண்டர் கதைகளெல்லாம் காட்சியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதைப்பற்றிய விளக்கக் குறிப்புகளைக் கல்லிலே பொறித்து வைத்துள்ளது சிறப்பிற்குரியதாகும். இங்கிருந்து தற்போது தஞ்சை கலைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள திரிபுராந்தகர், கஜசம்ஹாரமூர்த்தி, கங்காளமூர்த்தி ஆகிய சிற்பங்கள் மிகவும் எழில் வாய்ந்தவை. இக்கோயிலில் உள்ள ராஜகம்பீர மண்டபத்தில் எடுக்கப் பெற்றுள்ள இரண்டு சிற்பங்கள் சமய வரலாற்றுக்குப் பெரிதும் துணை புரிகின்றன. அன்னை பராசக்தி மஹாமாயையாகக் காட்சி அளிக்கின்றாள் அருளினை அமுதமாகப் பொழியும் மோகினியின் உருவமும் அழகு வாய்ந்ததாகும்.[1]

இரண்டாம் ராசராசன் சிலைகளையும் செப்புத்திருமேனிகளைப் போன்று வழவழப் பாகச் செய்து மகிழ்ந்துள்ளான், என்பதைப் பார்க்கும் பொழுது சோழர் காலத்தில் கல்லில் சிற்பங்களை வடிக்கும் கலை எந்த அளவிற்குச் சிறப்புற்று வளர்ந்து வந்துள்ளது. என்பது தெரிகிறது. இதற்கு உதாரணமாகத் திகழ்பவை தாராசுரம் சிற்பங்களாகும்.

மூன்றாம் குலோத்துங்கன்

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திரிபுவனத்தில் தனது பெயரால் திரிபுவன வீரேஸ்வரம் என்னும் கம்பகரேஸ்வரர்[2] கோயில், திரிபுவன வீரதேவன் என்ற பட்டப் பெயரைப் பூண்ட மூன்றாம் குலோத்துங்கனால் எடுக்கப் பெற்றதாகும். இக்கோயில் தமிழ்நாட்டில் உள்ள தஞ்சை பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில் ஆகிய முக்கிய கோயில்கள் வரிசையில் (திரிபுவனம் கம்பகரேஸ்வரர் கோயில்) கடைசியாக எடுக்கப் பெற்றக் கோயிலாகும். இந்த நான்கு கோயில்களும் முக்கிய விமான அமைப்பைக் கொண்டவைகளாகும். இவை ஒன்றுக் கொன்று மாறுபட்டவைகளாகும். இக்கோயிலில் உள்ள கோட்டச் சிற்பங்கள் மிகத் தடித்த தோற்றத்துடன் அமைக்கப் பெற்றவையாகும். இக்கோயிலில் இராமாயணக் கதையை புடைச் சிற்பங்களாக வடித்துள்ள அழகே தனி. புடைச் சிற்ப வரிசையினை, இராமாயணக் காட்சிகள், புராணக்காட்சிகள், மிருகங்கள் ஒன்றுக்கொன்று சண்டையிடுகின்ற காட்சி, பரத நாட்டியத்தைச் சித்தரிக்கின்ற நாட்டியச் சிற்பங்கள் ஆகியவை அழகு செய்கின்றன. நான்முகன், அடிமுடிகாணா அண்ணல், போர்வீரன், துர்க்கை, சாலபஞ்சிகா (கொடிப் டிபெண்) ஆகிய சிற்பங்கள் இக்கோயில் தேவக்கோட்டங்களை வனப்பூட்டுகின்றன.

கொடிப்பெண்

இடதுகாலை மடக்கி வைத்து, வலதுகாலை ஊன்றி, மார்பகம் காட்டி, கண்ணழகைக் காண்பவர் வியக்க, பத்ர குண்டலம், உடுக்கைப் போன்ற கொண்டை அலங்காரம், சாலா மரத்தின் கொம்பினை இடக்கையால் பிடித்து. வலது பக்கம் பணிப்பெண் நின்ற நிலை யிலுள்ள கொடிப்பெண், தன்னுடைய மொத்த அழகை வெளிக்காட்டி ஒயிலாக நிற்கும் காட்சி இக்காலச் சிற்பங்களின் கை வண்ணத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

போசளர்கள்

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் போசளர்கள் திருவரங்கத்திற்கருகிலுள்ள கண்ணனூரைத் தலைநகராகக் கொண்டு ஆளத்தொடங்கினர். இவர்களில் வீரசோமேஸ்வரன், வீரராமநாதன் ஆகியவர்கள் சிறப்புடையவர்களாவார்கள். கி.பி. 1270-இல் வீரராமநாதன் திருவரங்கத்தில் குழலூதும் பிள்ளைக் கோயிலை[3] எடுத்துள்ளான். இது போசளர் கலைப் பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இக்கோயிலின் கோட்டங்களில் குழலூதும் பிள்ளை

---

1. இரா. நாகசாமி - கல்லும் சொல்லும்
2. H. Sarkar - Kambhakareswara temple - Tribhuvanam
3. இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி - தமிழகக் கோயிற் கலைகள்

நாரதர், தும்புரு ஆகிய சிற்பங்கள் உள்ளன. இவைகளுக்கு மேலாக ஆடியைக் கையில் ஏந்திய உருவமும், கையிலே தாமரை மலரை ஏந்திய பெண் ஒருத்தியும், வீணை இசைக்கும் பெண் ஒருத்தியும், உயிரோவியமாக வடிக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கெல்லாம் மேலாக இங்கு எழுந்தருளியுள்ள இறைவன்பால் தீராத அன்பு கொண்டு அவர் பால் தன்மனதைப் பறி கொடுத்து தன்னையே மறந்து பிறந்த மேனியராக நிற்பதையும் இக்கோயிலில் காணலாம்.

அரங்கத்து அம்மான் மீது மனம் லயித்து, ஆடை, அணிகலன்கள் நெகிழ மனம் நெகிழ்ந்த நிலைலுள்ள ஒரு பெண் தன் அன்னை தன்னை நோக்கினால் என்ன நினைப்பாள் என நினைத்துப் பயந்ததை திருமங்கை மன்னன்,

என்னையும் நோக்கி என் அல்குலும் நோக்கி
ஏந்து இளங் கொங்கையும் நோக்குகின்றார்
அன்னை என் நோக்கும் என்று அஞ்சுகின்றேன்
அச்சோ, ஒருவர் அழகிய வா

என்று பாடிய இப்பாடலுக்கு உருவமாக வடிக்கப்பட்டுள்ள சிற்பமும், கையிலே கிளியை வைத்துக்கொண்டு கொஞ்சும் இளநங்கையின் சிற்பமும் சிறப்பானவை.

விஜயநகர, நாயக்க மன்னர்கள்

விஜயநகர மன்னனான குமார கம்பணன் மதுரை வரை வெற்றி கண்டு கோயில் வழிபாட்டிற்கு வகை செய்தான். இவர்கள் ஆட்சியை நிறுவுவதற்கு முன்னர், தமிழகத்தில் போசளர், காகதிய மன்னர்களின் ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்ட கலையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, விஜயநகர கலையின் கலைப்பண்பு வெளிப்பட்டது எனலாம். விஜயநகர மன்னர் களில் ஈடு இணையற்று விளங்கிய கிருஷ்ண தேவராயர் காலத்தில், கோயில்களில், கல்யாண மண்டபங்கள் கட்டப்பட்டு சிற்பங்கள் நிறைந்து விளங்கின. கிருஷ்ண தேவராயரின் உருவச் சிலை தில்லை வடக்குக் கோபுரத்தில் உள்ளது. இதே கால கட்டத்தில், விசயநகர அரசர்களின் பிரதிநிதிகளாக நாயக்க மன்னர்கள், செஞ்சி, தஞ்சை, மதுரை ஆகிய மூன்று இடங்களில் அமர்த்தப்பட்டனர். இவர்களுடைய கலைப்பணிகள், திருவண்ணாமலை காஞ்சிபுரம், வேலூர், விரிஞ்சிபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், மதுரை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கன் கும்பகோணத்தில் இராமர் கோயிலை எடுத்துள்ளான். இதில் இராமர்பட்டாபிஷேகக் காட்சியும், ரகுநாதன்தம் மனைவி மக்களுடன் காட்சி அளிக்கும் சிற்பங்களும், அனுமான், ரகுநாதன், சுக்ரீவ விபீடணன் பட்டாபிஷேகமும் சிறப்புடையன.[1] தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்திலும் சிற்பக் கலை ஓரளவிற்கு வளர்ந்துள்ளது. ஆனால் இவர்கள் காலச் சிற்பங்கள் வனப்பு குன்றியவை யாகும்.

---

1. நாகசாமி இரா. – கல்லும் சொல்லும் பக். 116

ஆடலும் பாடலும் 4

ஒரு சமுதாயத்தின் திருந்திய வாழ்க்கையினையே நாகரிகம் என்ற சொல் குறிக்கும். இச்சொல் ஓரின மக்கள் சமுதாயத்தில் ஊர்ப்பெருக்கமும், நிலையான குடியிருப்பும், அமைந்து வேளாண்மையும் வணிகமும் வளர்ந்த நிலையில், மாளிகைக் குடியிருப்பு, பட்டாடைகள், அணிகலன்கள், அறுசுவையுண்டி, கைத்திறனால் வினைமாண் பொருட்களைச் செய்தல், இன்பமாய்ப் பொழுது போக்குதல் ஆகிய பல்வேறு வாழ்க்கைக் கூறுகளினால் வரும் சிறப்பினைக் குறித்து நிற்கிறது. எனவே உயர் நாகரிக வாழ்வின் ஒரு பகுதியே ஆடலும் பாடலும் ஆகும் இதனைக் 'கூத்தும் இசையும்' என்றும் கூறுவர். தமிழ்ச் சமுதாயம் ஆடலுக்கும் பாடலுக்கும் கொடுத்த சிரிய இடத்தினையும், இத்துறைகளில் அது பெற்றிருந்த ஏற்றத்தினையும் வரலாற்றுக் கண்ணுடையோர் யாராலும் குறைத்து மதிப்பிட இயலாது.

பாடல் தோன்றுவதற்கு முன்பே ஆடல் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் மொழி தோன்றுமுன்பே மகிழ்ச்சியையும், வேதனையையும் மனிதன் ஆடியும், சைகைகளினாலுமே வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும். தொடக்கக் காலத்தில் குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டதாக அவ்வாட்டம் இல்லாமல் இருந்திருக்கலாம். எனினும் மொழி மேம்பாடுற்று நாகரிகம் எய்தியபின் தமிழ்ச் சமுதாயம், குறிப்பிட்ட காலத்திலும்' குறிப்பிட்ட சூழ்நிலையிலும், குறிப்பிட்ட வடிவத்திலும் இணைந்தும் தனித்தும் ஆடிய ஆடலையும், பாடலையுமே இங்கு "கூத்தும் இசையும்" என்று குறிக்கின்றோம். எனவே ஆடலையும் பாடலையும் காலமுறையிலும், சூழ்நிலை வகையிலும், வடிவ முறையிலும் ஆராய்வது இதன் வரலாற்றினைச் சரியான முறையில் புரிந்து கொள்ள உதவும்.

முத்தமிழ்ப் பாகுபாடு

மேற்சொன்ன அடிப்படையில் நோக்குகையில் 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்ற பரிபாடல் திரட்டின் அடிகளில்இருந்து இயல் (உரைநடையால் எழுதுதல்), இசை (பண்ணமைத்து மிடற்றாலும், இசைக்கருவிகளாலும் பாடுவதற்கேற்ப எழுதுதல்), நாடகம் (தாள அடிப்படையில் அடியெடுத்து ஆடுவதற்கேற்ப எழுதுதல்) ஆகிய மூன்று பயன்பாட்டுக்கும் ஏற்ப எழுதப்பட்ட சீர்மையைப் பெற்றிருந்தது தமிழ்மொழி என்பது பெறப்படுகின்றது. 'மும்மை' என்ற தொகுப்புமுறை பரிபாடல் காலத்ததாயினும் (கி.பி. ஏழு எட்டாம் நூற்றாண்டு) இசையிலும் நாடகத்திலும்[1] தமிழர் கொண்டிருந்த நீண்ட கால வழக்குகளையும், அவற்றில் அவர் பெற்றிருந்த வளர்ச்சியினையும், தெளிவினையும் சங்கத் தொகுப்புப் பாடல்களும், இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் மிகச் சிறப்பாக நமக்குத் தெரிவிக்கின்றன.[2] குறிப்பாக இசைத்துறையில் தமிழர் மிகப்பழங்காலத்திலேயே பெற்றிருந்த முதிர்ச்சி வியக்கத் தக்கது.

---

1. நாடகம் என்ற சொல், நாட்டிய வடிவான ஆடலையே குறிக்கிறது. பிற்காலத்தே உரையாடல் வடிவிலான இலக்கியம் என்ற பொருள் வரலாயிற்று.

2. இசை என்பது முழுவதுமாக எழுதி வைத்துக் கற்கத்தக்கதாகவும், நாடகம் என்பது செய்முறையாகக் கற்கத்தக்கதாயும் அமைந்ததால், இசைபற்றிய செய்திகள் மிக நுண்ணிய முறையிலும், அதிக அளவிலும் இலக்கியங்களில் பொதிந்து வைக்கப் பெற்றுள்ளன. நாடகத்துறை பற்றிய நுட்பங்கள் இசை பற்றிய அளவு இடம் பெறவில்லையெனத் தோன்றுகிறது.

தாய்ப் பண்பாட்டில்

தமிழர்களின் தாய்ப்பண்பாடாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொகஞ்ச தாரோ, ஹரப்பாப் பண்பாட்டுத் தொல்பொருள்களுள் நரம்பிசைக் கருவியாகிய யாழின் உருவம் ஒன்றும், ஒரு மனிதனின் கழுத்தில் மாட்டித் தொங்கவிடப்பட்டு இசைக்கும் தோற் கருவியாகிய மத்தளம் ஒன்றும் இடம் பெற்றிருப்பது (முத்திரையில்) குறிப்பிடத்தக்கது. நிறைந்த வளையல்கள் அணிந்து இடுப்பில் கையை ஊன்றி, காலைச் சிறிது மடக்கிய நிலையில் நிற்கும் மங்கையொருத்தியின் வெண்கலச் சிலையொன்றும், தலையுடைந்த - ஆனால் இடக்காலை முன்வைத்துச் சுழன்றாடும் நிலையில் அமைந்த ஆணின் உருவம் ஒன்றும் ஆடல் வகையினதாகக் குறிப்பிடத்தக்கன. இவை நரம்பு மற்றும் தோற்கருவிகள் இசைப்பதிலும், நடனத்திலும் அவர்கள் கொண்டிருந்த மேம்பாட்டினை எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்.

இயற்கை தந்த பரிசு

'செந்தீத் தொட்ட கருந்துளைக்குழலில் (பெரும்பாண்: 174) இருந்து குழலோசையைக் கற்றுக், குழலை ஐம்புழையாகவும், ஏழ்புழையாகவும் உருவாக்கும் வளர்ச்சியைத் (பரி 8:23) தமிழன் அடைந்திருக்கிறான். அக்காலத்திலேயே கொன்றை, ஆம்பல்; முல்லை ஆகிய பொருட்களினாலும் குழல் செய்யும் திறம் பெற்றிருந்தான் என்பது கொன்றயந் தீங்குழல், ஆம்பலந் தீங்குழல், முல்லையந் தீங்குழல் ஆகிய சொற்களால் புலனாகிறது. வில்லின் நாணேறிய நிலையில், அம்போடு சேர்ந்து பிறந்தது 'யாழ்' ஒலி. நரம்புக் கருவி களின் அடிப்படையான யாழ், முதன்முதலில் 'வில் யாழே'. 'வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சி' (பெ.பா. 183) எனக் கூறப்பட்டது.

வாழ்வின் கருப்பொருள்

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இசையை ஏற்றவன் தமிழன். எனவே வாழ்வின் கருப்பொருள்களுள் இரண்டாக யாழையும், பறையையும் கூறுகிறது தொல்காப்பியம். 'யாழ்' என்ற கருவிப்பெயர் ஆகுபெயராய் நின்று நானிலத்திற்கும் உரிய பண்ணையும் குறித்து நின்றது. நால்வகைப் பெரும்பண்களையும் அவைகளினின்று 'பண்ணுப் பெயர்ப்பின்' மூலம் 'யாழின் பகுதி'களாகப் பல்வேறு பாலைப் பண்களையும் (கிளைப் பண்கள்) தோற்றுவித்தனர்[1] தமிழர் என்பதைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங் களும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. நானிலத்தின் பண்களைக் கூறுவதோடு, அப்பண் களுக்குரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுதுகள் எவையெவை என்பதையும் வரையறுத் திருந்தனர் தமிழர் (தொல்: அகத். 6-12).

அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப **இசையொடு சிவணிய**
நரம்பின் மறைய என்மனார் புலவர் (தொல்: நூன்: 33)

என்ற நூற்பா, இசைக்கு அடிப்படையான ஓசை நீட்சியினைச் சுட்டுகிறது. இவ்வோசை நீட்சி இசைக்கே உரியது. வாய்ப்பாடல் மட்டுமின்றி இசைக்கருவிகட்கும் உரியது என்ற பொருள்படும் வகையில் 'நரம்பின் மறைய' என்ற சொல் விளங்குகிறது. இவ்வகைகளில் இசைப் புலமையுடையோராய்ச் சிறந்து விளங்கிய, பாணர், பொருநர், கூத்தர், விறலியர், கோடியர், வயிரியர், கண்ணுளர், அகவுநர் ஆகிய பல்வேறு பிரிவினரைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.[2] இவர்கள் உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇப் (ம. கா. 616) பல நிகழ்ச்சி களை நடத்தினர். இவர்களைச்,

---

1. இவற்றின் விரிவான ஆய்வுகளை அறிய, 'தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள்' எனும் முனைவர். வீ.ப.கா. சுந்தரம் அவர்கள் நூலினைக் காண்க.
2. இவ்விசைக் கலைஞர்கள் அவர்களது இசைப்புலமை ஆகியன பற்றி விரிவாக அறிய திரு. கைலாசபதி அவர்களின் The Tamil Heroic Poetry மற்றும், திரு. சிவதம்பி எழுதிய Drama in Ancient Tamil Society ஆகிய நூல்களைக் காண்க.

செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர்

என்று, யாழின் இசையால் செவியினை ஈர்ப்போராயும் (திருமுருகு : 140-42),

மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை
வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரோடு சிதறியும்

எனப் போர்க்களம் பாடும் பொருநராகவும் (பொ. ஆற். 22-24)

'பொன் வார்ந்தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை

யினைக் கடனறிந்தியக்கும் கைவல் பாணமகனாகவும் (சி.பாண் 34-38).

அமிழ்து பொதிந்திலிற்றும் அடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்விக்
கூடுகொள் இன்னியங் குரல் குரலாக
நூல்நெறி மரபிற்'

பண்ணியற்றுவோராகவும் (சிறு. பா. 227-30) காட்டுகின்றன. இத்தகையஇசைக் கலைஞர்கள்

'கைவைத்து இமிர்பு குழல் காண்குவோரும்
யாழினிளி குரல் சமங்கொள்வோரும்'

ஆகப் பலர் கூடியதைப் பரிபாடல் (19 : 43-44) காட்டும். மேற்குறித்த ஒரு சில சான்றுகள் இசைத்துறையில் இவர்கட்கு இருந்த ஆழ்ந்த புலமையினையும், நுட்பத் திறனையும் காட்டுவனவாகும். இதுபோன்ற பாடற்பகுதிகள் சங்கத் தொகுப்பு முழுவதிலும் பல்கிப் பரவிக் கிடக்கின்றன.

இசையிற் சிறந்தோர்களுள் விறலியென்னும் பிரிவினர் ஆடலிலும் மிகச்சிறந்த தேர்ச்சி பெற்றோராய்த் திகழ்ந்தனர். பல்வேறு இசைக் கருவிகள் முழங்க ஆடல் நிகழ்ந்தது என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டு ஒன்றால் தெளிவு பெறலாம்.

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடைய வ்வளி குழலிசையாக
பாடின்னருவிப் பனிநீரின்னிசை
தோடமை முழவின் துதைகுரலாகக்
கணக்கலை இகுக்கும் கருங்குரல் தூம்பொடு
மலைப் பூஞ்சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
விழவுக்கள விறலியிற் தோன்று நாடன் (அகம் : 82)

இயற்கையின் காட்சியினைப் புலவர், குழல், முழவு, யாழ், தூம்பு ஆகிய இசைக்கருவிகள் முழங்க ஆடும் விறலிக்கு ஒப்பிடுவதன் மூலம் ஓரரங்கில் ஆடும் ஆடுமகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். ஆடுகளப்பறை (அகம் : 45, 364), ஆடு களவயிர் (அகம் : 378) ஆகியனவும் ஆடுகளம் இருந்ததை வலியுறுத்தும்.

ஆடல் பாடல் நிகழ்வுக்குரிய இடங்கள்

இனி இத்தகைய இசையும் நடனமும் எத்தகைய சூழ்நிலைகளில் நடந்தன என்பது அறித்து கொள்ளற்குரியது. பல்வேறு வகையான விழாக்களில் இவை நடத்தப்பட்டன.

அரிக்கூடின்னியங் கறங்க தேர்நிறுத்துக்
கார்மலர்க்குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப் பிணையூஉ
மன்று தொறும் நின்ற குரவை சேரிதொறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கியதை

பேரிசைமன்னன் பெரும்பெயர் நன்னாளில் (மன்னனின் பிறந்த நாள் விழவு) நிகழ்ந்ததாக மதுரைக் காஞ்சியும் (611-619), தம் கணவர் போரில் புண்ணுற்று வேதனையால் துன்புற்ற போது அதைத் தணிக்க இறைவனை பாடிப் பரவியதைத்,

கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென
அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்

என்று மலைபடுகடாமும் (301-304), பல்வேறு விழாக்களில் பாடி ஆடியதை,

'முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் தீந்தொடை யோர்க்கும்
பெருவிழா' (பட்டி 253-55),
'விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்
கோடியர் முழவின் முன்னராடல்' (பதி. 56:1-2)
'விழாவிற் கோடியர் நீர்மைபோல
முறைமுறை ஆடுநர்' (புறம்: 29)

ஆகியன போன்ற அடிகளும் சுட்டுகின்றன. 'விழவாடு மகளிர்' என்றே அகம் சுட்டுகிறது அன்றியும் சமுதாயத்தின் உயர்குடிமக்கள், தத்தம் மாளிகைகளில் இன்பப் பொழுது போக்காகவும் இந்நிகழ்ச்சிகளை நடத்தினர் என்பதைப்,

பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்
வெண்ணிலவின் பயன் துய்த்தும் (பட்டி: 113-114)

என்ற அடிகள் தெளிவாக்குகின்றன. மேலும் நெல், தினை போன்றவற்றைக் குற்றும் போது வள்ளைப்பாட்டுப் பாடியதையும் (கலி. 41, 42, 43; மலை: 321), தினைப்புனம் காக்கும்போது 'கிளிகடி பாடல்' பாடியதையும், மஞ்சளும் இஞ்சியும் முதிர்ந்தபோது பன்றியினைக் கடிய 'பன்றிப்பறை முழக்கிக் குன்றகச் சிலம்பு' பாடியதையும் (மலை: 342-44), அறிகிறோம். கடவுளை வணங்கும் நிலையில் குறிஞ்சிபாடி, ஆடல் பாடல் நிகழ்த்தியதை,

பாடுவார் பாடல் பரவல் பழிச்சுதல்
ஆடுவார் ஆடல் அமர்ந்த சீர்ப்பாணி (பரி 116-117)

என்ற அடிகள் புலப்படுத்தும். மணவிழாவிலும், இறப்பின் போதும் இசைக்கருவி களிசைக்கப்பட்டதை,

ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி தூங்க (புறம் 194)

என்ற அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

எனவே வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் பாடியாடுவதும், பல்வேறு இசைக்கருவிகளை முழக்குவதும் ஆகிய வழக்கினைத் தமிழர் சமுதாயம் கொண்டிருந்ததாலேயே, கருப்பொருள் களாக யாழும் (பண்) பறையும் (கருவி) இலக்கணத்தில் இடம் பெற்றன.

பாடுபொருள்

ஆடல் பாடல் நிகழ்ச்சிகளைச் சிந்திக்கும்போது அக்கால கட்டத்தில் தமிழ்ச் சமுதாயம் எதனைப் பாடுபொருளாக எடுத்துக்கொண்டது என்றறிவது இன்றியமையாதது. புறத்திலும் அகத்திலும் பல்வேறு திணைகளையும், துறைகளையும் தமிழ் இலக்கண நூல்கள் குறித்திருப்பது அனைவரும் அறிந்ததே.[1] இத்திணை, துறைகள் மற்றும் ஒழுக்கங்களே ஆடலுக்கும் பாடலுக்கும் பாடுபொருளாய் அமைந்திருத்தல் வேண்டும். முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை, வாளமலை, கழல்நிலை, வாடாவள்ளி, வெறியாடல், உவகைக் கலுழ்ச்சி' துடியாடல் போன்ற தொல்காப்பியத் துறைகள் மேலெழுந்தவாரியாய் இதனைப் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன. இயற்றமிழில் பாடுபொருளாக அமைந்த இத்துறை நிலைகளிலேயே இசையோடும், இசைக் கருவிகளோடும் மேற்குறித்த கலைவல்லுநர்கள் செய்முறையாக்கி ஆடல்களை நிகழ்த்தியிருத்தல் வேண்டும். பெரும்பாலும் ஆடலும் பாடலும் நிகழ்ச்சிகளாக நிகழ்ந்த இடம், பொதுவாக ஆட்சித் தலைவர்களின் நாண்மகிழிருக்கை யாகவும், சிறப்பாக வெற்றிக் களங்களாகவும் அமைந்தன. விழவுக்களங்களும் சிறந்த இடத் தினைப் பெற்றன. இத்தகைய விழவுகள் ஊர்ப்பொதுவான மன்றுகளில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். எனவேதான் பாணர் முதலான இசை வல்லுநர்கள் மன்றிற் கூடுதல் மரபாக இருந்திருக்கின்றது,

குறிஞ்சிநிலப் பண்பாடுகளான தினைப்புனங்காவல், அருவிநீர் விளையாட்டு, களவுப் புணர்ச்சி போன்றனவும், முல்லை நிலப்பண்பாடுகளான ஆய்ச்சியர் குரவை, மணவாழ்க்கை கொல்லேறு தழுவுதல், புதுப்புனலாட்டம், பரத்தையர் வசை போன்றனவும், மருதநிலப் பண்பாடுகளான நகர வாழ்க்கை, அரண்மனை மற்றும் அரசவாழ்க்கை, உழவுச் சிறப்பு, ஊடல் நிகழ்ச்சிகள், பெருந்திணைக் காமம் போன்றனவும், நெய்தல் நிலப்பண்புகளான நாவாய்ச் செலவு, மீன்பிடித்தல், உப்புவணிகம், முத்துக்குளிப்பு, கடலாடுதல், காதல் மற்றும் உடன்போக்கு, சுறாமீன் கொம்பு வழிபாடு போன்றனவும், பாலை நிலப்பண்புகளான இழப்பு, வழிப்பறி, கொடுமைத்தன்மை ஆகியவற்றோடு, அக்காலத்திற்கே உரிய வீரப் பண்புகளான நடுகல், வீரவணக்கம், வெற்றிச்சிறப்பு போன்றனவும் அவர்தம் பாடலுக்கும், ஆடலுக்கும் அடிப்படைக் கருத்துக் களன்களாக அமைந்திருத்தல் வேண்டும்.[2]

ஆடல் பாடல் வகைகள்

ஆடலுக்கும் பாடலுக்கும் ஏற்பத் தாளத்தோடும், இசையோடும் ஒன்றியவையாக எழுதப்பட்டன இசைப்பாடல்கள். தொல்காப்பியம் 'பண்ணத்தி' என்ற சொல்லுக்கு,

'பாட்டிடைக் கலந்த பொருளவாகி
பாட்டின் இயல பண்ணத்தியாகும்'

என்று விளக்கம் தருகிறது. இதனை இசைப்பாடல்கள் என்றும், 'பண்ணின் நீர்மைகளை (இராக லட்சணங்கள்) காட்டுவதற்காகவே, இசை உருவை அமைத்துப் பண்ணுக்கே உரிய சிறப்பான ஓசைகளைக் கொண்டு அவ்வவ் நிலத்திற்குரிய பாடுபொருட்களின் அடிப்படையில்

---

1. தொல்காப்பியத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மற்றும் புறப்பொருள் வெண்பா மாலையில் இத்துறைகள் பற்றிய விளக்கம் மிகவிரிவாகக் கூறப் பெறு கின்றது. புறத்திணைகள் 7 என்றும் அவை ஒவ்வொன்றிக்கும் உட்பட்டதாகப் பல்வேறு துறைகளையும், அகத்திணையின் ஒழுக்கங்களையும் இவை அட்டவணைப் படுத்துகின்றன.

2. Drama in Ancient India, மற்றும் சிலப்பதிகாரக் கூத்து, டாக்டர் புரட்சிதாசன் பக். 83-84

அமைந்த சிறுபாடல்கள்' என்றும் அருமையாக விளக்குவர் இசையறிஞர்.[1] இசைப்பாடலுக்கு மிகமிகத் தேவையாகக் கருதப்படுவன சந்தங்கள். இதனைத்தொல்காப்பியம் 'வண்ணம்' என்று குறிக்கிறது. தொல்காப்பியச் செய்யுளியல் (203) வண்ணங்களை இருபது வகையாகப் பாகுபாடு செய்கிறது. இவ்வண்ணங்கள் அனைத்தும் எழுத்துகளின் வன்மை. மென்மை யாகிய தன்மை, தொடைகளின் ஓசை ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்யப் பெற்றுள்ளன.[2] இவையன்றியும் கலிப்பாவும், பரிபாடலும் இசைக்கே உரிய தனிச்சிறப்புப் பாடல் வகைகள். வெள்ளை, அகவல், தூங்கல், துள்ளல் என்னும் ஓசைகளும் இசைப்பாடல் களாகப் பாடுதற்குரிய அடிப்படைகளே. குறிப்பாகக் கலிப்பாவில் வரும் தரவு, கொச்சகம், அராகம், சரிதகம், எருத்து, தனிச்சொல் ஆகிய உறுப்புகள் நாட்டிய வகைக்கெனவே அமைந்தவை என்பது நுணுகி அறிந்து கொள்ளத்தக்கது.[3]

இசைக்கருவிகள்

தோல், துளை, நரம்பு மற்றும் கஞ்சக்கருவிகள் பல இருந்தன. கூத்தராற்றுப்படை

'திண்வார் விசித்த முழவொடு ஆகுளி
நுண்ணுருக்குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுத் தூம்பின்
இளிப்பயிரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ
நடுவு நின்றிசைக்கும் அரிக்குரற் தட்டை
கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்' (3-11)

என்ற வரிகளில் ஒன்பது கருவிகளைப் பட்டியலிட்டது போலக் காட்டுகின்றது. கருவியின் (யாழ்) ஒவ்வொரு பகுதிக்கும் திவவு, நரம்பு, துளை, பத்தல், ஆணி, யாப்பு, உந்தி, மருப்பு எனத் தெளிவாகப் பெயர்களைக் குறித்திருப்பது இக்கால கட்டத்திலேயே தமிழர் பெற்றிருந்த புலமையையும் நுட்பத் திறனையும் காட்டும்.

நாடகம் என்ற சொல் ஆடலையே குறித்து நின்றது. ஆடலைத் தனித்தாடல், குழுவாக ஆடல் என்று இருபிரிவுகளாகவும், பாடுபொருளுக்கு ஏற்ப வரிகள், கூத்து, நாட்டியம் என்று பலவகைகளில் பிரித்தும் இலக்கணம் கூறினர் பழந்தமிழர். குரவை, துணங்கை, வள்ளை, வள்ளி ஆகியன சங்க காலத்தே குழுவாக ஆடும் வகையால் பெயர் பெற்றவை. தனியாக ஆடும் மரபும் அக்காலத்து இருந்ததற்குப்,

'பிணையல் அந்தழைத் தழைஇத் துணையிலள்
விழவுக்களம் பொலிய வந்து நின்றனள்' (நற் : 170)

என்ற அடிகள் மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. எந்தெந்த சூழ்நிலைகளில் குழுவாக ஆடல் இடம் பெற்றதென்பதை முன்னரே கண்டோம்.

இசைத்துறையில் சமணர்

சங்கப்பாடல்களின் வழி நாம் காணும் சமுதாயத்தின் இறுதி சமண, பௌத்த மதங் களின் ஆதிக்கமாக அமைந்தது. இக்கால கட்டத்தில், இம்மதங்கள் சார்பான பள்ளிகள். பல்வேறு சமுதாயப் பணிகளைச் செய்தன. நிறுவனப்படுத்தப்பட்ட சமயங்களாக விளங்கிய

1. தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள் - முனைவர் வீ. ப. கா. சுந்தரம், பக். 29–30
2. மேற்படி. பக். 46
3. கா. சிவத்தம்பி - மேற்படி. பக். 266-68

இவைகள், பல்வேறு துறைகளையும் ஆழ்ந்து சிந்தித்தன. முறையான இலக்கண நூல்களையும், நீதி நூல்களையும் எழுதியவர்கள் சமணர்கள். அனைத்துத் துறைகளிலும் அறிவு மேம்பாட்டினை அவ்வக்கால நிலையில் நிலைநிறுத்தியவர்கள் அவர்கள். இவ்வாறு செய்வதில் ஆழ்ந்த பயிற்சியும், கருத்தூன்றும் திறனும் தருவதாக அமைந்தன, அவர்களது சமய ஒழுக்கங்கள். தனிமையில் வாழ்ந்த துறவிகளுக்கு இவ்வாறு அறிவுசார் பணிகளைச் செய்வது இனிய பொழுது போக்காயிற்று என்றே கூறலாம். ஆடலும் பாடலும் சமணர்களால் வெறுத்தொதுக்கப் பட்டன என்பதே பொதுவான கருத்தாயினும், அவை இன்பநுகர்ச்சிக்கு அடிகோலும் என்ற அடிப்படையிலேயே அதனை விலக்கிக் கூறினர். எனினும் அத்துறையினையும் அறிவுபூர்வமாக அவர்கள் சிந்தித்தனர் என்று கூறவேண்டியுள்ளது.[1] இத்துறையில் தமிழகத்தைப் பொறுத்த வரை ஒரு சிறந்த வளர்ச்சிக்கு வித்திட்டனர் அவர்கள். இந்தியா முழுவதும் அவர்கள் பரவி இருந்த போதிலும், இந்த அறிவு மேம்பாட்டினை அவர்கள் அடைவதற்கான சூழலை, நடைமுறையில் ஆடல் பாடலை வாழ்வின் பகுதியாகக் கொண்டிருந்த தமிழ்ச் சமுதாயமே அவர்கட்கு வழங்கியது.

தமிழக இசைக்கலையில் தொடக்க காலத்தில் அ, இ, உ, எ, ஒ என்ற குற்றெழுத்துகள் ஐந்தும், பிற உயிர் நெட்டெழுத்துகள் ஏழுமே இசைக்கும் அடிப்படை அலகுகளாக அமைந்திருந்தன.[2] இவையே பிற்காலத்தில் சரிகமபதநி என்று ஏழு சுரங்களாக மாற்றம் பெற்றிருக்கின்றன.[3] இவ்வாறு மாற்றம் பெற்றது அடியார்க்கு நல்லாருக்குச் சற்று முன்பின்னாகச் சுமார் 10-12 நூற்றாண்டுகளில்தான் எனத்தோன்றுகிறது. தொடக்க காலத்தில் இருந்த குற்றெழுத்து நெட்டெழுத்துகளுக்குப் பதிலாகக் குறியீட்டெழுத்துகளை இட்டு வழங்கிய வளர்ச்சி இசைத்துறையில் பெரும் புரட்சிக்கு வித்திட்டது. இவ்வளர்ச்சிப்படி நிலையில் குறியீடுகளாலான சொற்கட்டுகள் (தனியாக இச்சொற்கட்டுகளுக்குப் பொருள் இல்லை) இசை, நடனம் (நாடகம்) இரண்டுக்கும் பொதுவானதாகவும், மிடற்றுப்பாடலுக்கும் நால்வகைக் கருவிகளுக்கும் பொதுவானதாகவும், மொழிகளைக் கடந்ததாகவும் அமைந்தன. இந்த இசைத்துறைக் கண்டுபிடிப்பின் வெளிப்பாடே சமண முனிவர்கள் தங்கிய குகைத்தளங்களில் — கொங்குநாட்டு அறச்சலூர் மலையில் கல்லில் பொறித்த 'சொற்கட்டுகள்' ஆன கல்வெட்டுகள் ஆகும். சங்க இலக்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் காணப்படாத இசைக் குறியீடுகளை முதன் முதலாக இங்கு காண்கிறோம். கி.பி. 2-3-ஆம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்ட அச்சொற்கட்டுகள் கீழ்வருமாறு:

(i)					(ii)				
த	தை	தா	தை	த	கை	த	தை	த	கை
தை	தா	தே	தா	தை	த	தை	—	தை	த
தா	தே	தை	தே	தா	தை	த	தை	த	தை
தை	தா	தே	தா	தை	த	தை	—	தை	த
த	தை	தா	தை	த	[கை	த	தை	த	கை]

இச்சொற்கட்டுகள் (இவை தவ்வினத்தில் அமைந்துள்ளதைக் காண்க) தமிழக இசை நடனக் கலை வரலாற்றில்- ஏன் இந்திய இசை நடனக் கலை வரலாற்றிலேயே முதன்

---

1. நாட்டியதர்ப்பணம் என்ற நூலினை யாத்த ராமச்சந்திரரும், குணசந்திரரும் சமண சமயத்தவர்களே.
2. தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள் மு. சுந்தரம் பக். 62, 63. மற்றும் அடி. நல் சிலம்பு உரை பக். 104, 105 காண்க.
3. குழலாசிரியனின் அமைதி கூறவந்த அடியார்க்கு நல்லார், 'எழுத்துகள் சிதையாமல் எழுத்தெழுத்தாக இசைத்தல்' என்று கூறி, ''அன்றியும் சரிகமபதநி என்பாரும் உளர்'', என்று எழுதுகிறார். மேலும் ஆளத்தி (இன்றைய ஆலாபனம்) பற்றிக் கூறுகையில் பண்ணாளத்தி கூறுமிடத்து 'தவ்வினம் தமிழ்க்குரித்து' என்று எழுதுகிறார். இவை சிந்திக்க வாய்ப்பாகின்றன.

முதலாகக் கல்லில் பொறித்து வைக்கப்பட்ட பெருமைமிகு சான்றுகள். இதனைத் தமிழகச் சமண முனிவர்களே யாத்தனர்.

பரதரின் நாட்டிய சாத்திரமும் தமிழகக் கலைகளும்

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆடலுக்கும் பாடலுக்கும் அடிப்படையாக அமைந்தவை சங்ககாலத்தினின்றும் தொடர்ந்து வந்த மிகப்பண்பட்ட நால்வகை ஓசைகளும், எழுவகைப் பண்களும், நாடகவடிவங்களும், துணையாய் நின்ற கருவிகளுமே ஆகும். உண்மையில் இவ்விசை வடிவங்களும், தொழில் நுட்ப முறைகளும், நாடக (ஆடல்) வடிவங்களும் ஆகிய அனைத்தும் பின்வந்த நூல்களில் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை என்றே கூறலாம். ஒருவேளை மறைந்து போனவையாகக் கருதப்படும் நூல்களில் அவை இருந்திருக்க வாய்ப்புண்டு. மேலும் பிற்காலத்தில் ஏற்பட்ட பிறமொழி மற்றும் பண்பாட்டுத் தாக்கத்தால் சில மாற்றங்களும் எதிர்பாரா வகையில் ஏற்பட்டிருக்கின்றன. "இந்தியப் பண்பாட்டில் பிற துறைகளைப் போல் இசைத்துறையிலும் ஆரியரல்லாதாரின் கலைச்செல்வங்கள் நெசவில் உள்ள பாவு போலவும், ஆரியரின் அறிவுத்திறம் ஊடுபோலவும் கலந்துள்ளன. பல வடிவங்களில் இந்நாட்டில் இருந்த கலைச்செல்வங்கள் சமஸ்கிருத மயமாகிவிட்டன. எனவே அவை ஆரியர் பண்பாடாய்க் காட்சியளிப்பதாயிற்று"[1]

இவ்வகை நூல்களில் ஒன்றே பரதரின் 'நாட்டிய சாத்திரம்' ஆகும். வட இந்தியாவில் முதன்முதலில் எழுச்சி பெற்ற பேரரசான குப்தர்கள் காலத்தில்தான் இந்நூல் எழுதப் பட்டிருத்தல் வேண்டும். இந்தியாவெங்கும் நிலவிய இசை, நாடக வழக்குகளைத் திரட்டிப் பரதரின் 'நாட்டிய சாத்திரம்' பொதிந்து வைத்துள்ளது.[2] அவற்றில் தமிழக இசை, நடன கலைக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு என்பதற்கு அவரே கூறும் கூற்று :

'தத்ர தக்ஷிணாத் யாஸ்தாவத் பஹுவ
  நிருத்த கீத வாத்யா ;
கைசிகிப் பராயா ; சதுர மதுர லலிதாங்கா
  பினயாச்ச
தக்ஷிணஸ்ய சமுத்ரஸ்ய ததா
  விந்த்யஸ்ய சாந்தரே,' (ப. நா. சா. அத் : 14)

தென்னக மக்கள் பற்பல நடனங்களிலும், இசையிலும், இசைக்கருவிகளிலும் திறமையாக இருக்கிறார்கள்; அவர்தம் கலைகளுக்கு நுட்பமும், இனிமையும், அழகும் உறுப்புகளாய் அமைந்துள்ளன; அப்பகுதி விந்தியமலை மற்றும் முப்புறமும் கடலால் சூழப்பட்டுள்ளது. எனவே தமிழக இசை மற்றும் நடனத்தின் பல்வேறு நுட்பங்களும், வடிவங்களும் பரதரின் நாட்டிய சாத்திரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

சமுதாய மாற்றம்

முன்னரே குறிப்பிட்டபடி, வாழ்க்கையினின்று பிரிந்து நிற்காது, வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆடலும் பாடலும் அமைந்து, சமுதாயத்தின் அனைத்து மக்களும் பங்கெடுத்துக் கொள்வதாகவும், அனைவராலும் துய்க்கப்பட்டதாகவும் இருந்த நிலையிலிருந்து சமுதாயம் மாற்றம் பெறத் துவங்கியது. இச்சமுதாய மாற்றத்தில் பண்டைய சங்ககால அரசர்களும், குறுநிலத் தலைவர்களும் வீழ்ந்தனர். பாடுநரும், பாடுநர்க்கு ஈயுநரும் இல்லையாயினர். 'பாண் கடன்' மறந்த ஒன்றாயிற்று. ஆடலும், பாடலும், செல்வச் செழிப்பும் மங்கின.

---

1. Goswami - The story of Indian Music p. 17
2. இக்கால கட்டத்தில் சமயத் தொடர்பாக ஆங்காங்குள்ள வழக்குகளும், வழிபாட்டு நெறிகளும், தெய்வங்களும் ஒன்று திரட்டப்பட்டு பல்வேறு புராணங்களாக வகைப்படுத்தி எழுதப்பட்டது நினைவிற் கொள்ளத்தக்கது.

மீண்டும் எழுச்சி பெற்ற தமிழகத்தில் கி.பி. ஐந்து, ஆறாம் நூற்றாண்டில் வேளாண்மைப் பொருளாதாரத்தின் மீதமைந்த அரசுகள் தோன்றத் தொடங்கின. அப்போது அரசும் சமயமும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் நிலைக்களன்கள் ஆயின. எனவே இவ்விரண்டையும் சார்ந்து அனைத்து மக்களின் வாழ்க்கையும் நிலைபெறலாயிற்று. இந்நிலையில், சமயத்தின் ஓர் அங்கமாக - சமயவழிபாட்டின் ஓர் அங்கமாக ஆடல் பாடலும் நிலைபெற்றது. அதேபோல அரசவையிலும், மேட்டுக் குடியினராக விளங்கிய செல்வந்தர் இல்லங்களிலும் ஆடல் பாடல் இடம் பெற்றன. எனவே உடைமையாளர்கள் ஆடல் பாடலைத் தனிக் 'கலைகள்' ஆக்கினர். அது தனித்துறையாக வளரவும் நிலைபெறவும் ஏதுவாயிற்று. அக்கலைகளைத் தொழில் முறையாகச் செய்யும் கலைஞர்கள் உருவாயினர். கலைகளை ஆதரிக்கவும், தாமே துய்க்கத்தக்க வகையில் அறிந்துகொள்ளவும், முறைப்படியாக இத்துறையினை வளர்க்கவும் மன்னரும், கலைக் குலத்தினரும் முயற்சிகளை மேற்கொண்டனர். இம்முயற்சியின் வெளிப்பாடாகவே இசை, நாடகத்திற்கெனத் தனிநூல்கள் எழுதப்பட்டன எனலாம். இவற்றிற்குத் தெய்வத்தன்மை கற்பிக்கப்பட்டது. எனவே இசைநூல்களும், கருவிகளும் தெய்வத்தன்மை உடையனவாகக் கருதப்பட்டன. இசைக்கலைஞர்களும் தெய்வத் தொடக்கம் உடையோராக மதிக்கப்பெற்றனர். இசையையும், இசைக்கருவிகளையும் சிவபெருமான் படைத்தார் என்றும், நாரதர் யாழையும், நந்திதேவன் முழவினையும் படைத்து உலகிற்கு அளித்தனர் என்பன போன்ற கதைகள் உருவாயின. இசைக் குடும்பங்களுக்குக்கூடத் தெய்வத்தொடக்கம்[1] கூறப்பட்டது. இவ்வாறு உரமிட்டு வளர்க்கப் பெற்ற இசை, நடனக் கலைத்துறையில், இயல்பாக வளர்ந்த நிலைக்கும், திட்டமிட்டு வளர்க்கப்பட்ட நிலைக்கும் பாலமாய் அமைவன தமிழகத்தின் தனிப்பெருஞ்செல்வங் களான மூவரின் தேவாரப் பாடல்கள் ஆகும். சங்க இலக்கியம் சுட்டிய இக்கலை களுக்கான தொல்லியற் சான்றுகள் ஏதும் இதுகாறும் கிட்டவில்லை. ஆனால், பல்லவர் காலந்தொடங்கி மேற்குறித்த சமுதாய மாற்றத்தினைத் தொடர்ந்து இக்கலைக்குரிய தொல்லியற் சான்றுகளை இலக்கியங்கட்கும் இணையாய், கல்வெட்டுக் குறிப்புகளாகவும், சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் தமிழகம் முழுவதிலும் காண்கிறோம்.

I. இலக்கியம் மற்றும் உரைகள்

தேவாரம் - ஓர் இணைப்புப் பாலம்

மூவர் முதலிகளான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் வைதிக, ஆகம, புராண சைவத்திற்குத் தமிழகத்தில் வித்திட்டு, உரமிட்டு வளர்த்தவர்கள் ஆவர். தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று, காடுகளிலும், சோலைகளிலும், துறைகளிலும், பள்ளி களிலும், குடியிருப்புகளிலும், மலைகளிலும், குளக்கரைகளிலும் சிவனை நீடு நினைந்து பதிகங்கள் பாடி வழிபட்டனர். அவ்வாறு செல்கையில் தமிழக மக்கள் அறிந்த, வழிபாட்டு நெறிகளைக் கடைப்பிடித்தனர். மக்களை ஒற்றுமைப்படுத்த அவர்கள் வாழ்க்கையில் பின்னிப் பிணைத்திருந்த இசையும், கூத்தும் மிகச்சிறந்த கருவிகளாக அமைந்தன. தமிழில் இருந்த இயல், இசை, நாடக அறிவினை முழுவதும் பயன்படுத்தித் தம் பாடல்களை யாத்தனர். இவர்களது பதிகங்கள் அனைத்தும் தமிழகப் பண்முறையில் அமைந்தவை. இவை இன்றுள்ள நிலையில், 24 பண்களுடையவையாய்த் திகழ்கின்றன. (அட்டவணை I) இவற்றில் இரவுப் பண்களாக ஒன்பதையும், பகற்பண்களாக பன்னிரண்டினையும், பொதுப் பண்களாக மூன்றினையும் பாகுபாடு செய்கின்றனர். இவற்றுள் அடங்கிய காந்தாரம், குறிஞ்சி, கொல்லி, சீகாமரம், புறநீர்மை போன்ற பண்கள் சங்க காலத்திலேயே வழக்கி லிருந்தவை என்பது கருதத்தக்கது. இன்றும் கேரளத்தில் இந்தளம், புறநீர்மை ஆகிய பண்கள் வழக்கில் உள்ளனவாம்.[2] இத்தகைய பண்களைப் பாடுவோனாகவும், இவற்றுக்கு

1. மாதவியின் குலம் தேவர்கள் வழிவந்ததாகக் கூறப்படுகிறது. இசைக்கு அடிப்படை ஒலியினை அளிக்கும் மத்தளம், 'நான்முகன்' என்று பெயர் பெற்றது.
2. Dr. Nagasamy R., - Siva Bhakti, p. 140

ஆடுவோனாகவும், இவற்றை உகப்போனாகவும், இப்பண்களைப் பாடுவோருக்கு அருள்வோனாகவும், சிவனடியார்களும், ஆடல் மகளிரும் இப்பண்களைப் பாடியும், இசைக்கருவிகளில் இசைத்தும் வழிபாடு நடத்துவதாகவும் இப்பதிகங்கள் குறிப்பிடுகின்றன. சங்க கால முதல் தொடர்ந்து வரும் இசைக்கருவிகளும் மிகப்பலவாய் இப்பதிகங்களில் இடம் பெறுகின்றன. (அட்டவணை II) இக்காலகட்டத்தே புதியவாகிய கருவிகளும், பண்களும் தோன்றின. கல்லவடம், கொடுகொட்டி, ஆகியவை சிறந்த எடுத்துக்காட்டுகள்.[1] மேலும் இக்காலத்தே சில சொற்கள், தாளம், நடனவகை, இசைக்கருவி, பாடல்வகை ஆகிய அனைத்தையும் குறிப்பனவாய் அமைவதைக் காண்கிறோம். சான்றாக கொடுகொட்டி, பாணி ஆகியவற்றைக் குறிக்கலாம்.[2] பண்ணினுள் பிரிந்தவையாய் இராகங்கள் அமைந்தன. இதனைத் திறல் எனக் குறிக்கின்றன பதிகங்கள்[3] இவ்வாறு சிவனை இசையாய், இசைப்பயனாய்க் கண்டனர் தேவார மூவரும்.

சிவன் ஆடுவதாகவும், ஆடல் மகளிர் ஆடுவதாகவும் பதிகங்கள் குறிக்கின்றன. இக்கால கட்டத்தே புராணச் செய்திகளோடிணைத்துச் சிவனின் கோலங்களும், நடனங்களும், விளையாடல்களும் உருவகிக்கப்பட்டன. கூத்தர், மாநடத்தர், நடமிடுவார், ஆடவல்லார் போன்ற பெயர்கள் சிவனுக்குச் சிறப்பாயின.

காடுதானரங்காகவே கைகள் எட்டினோடிலயம்பட ஆடுவார் (சுந் 33-8)

கூடிய இலயம் சதி பிழையாமைக் கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகர் (சுந் 69-2)

தக்கை தண்ணுமை தாளம் வீணை தகுணிச்சம் கிணை சல்லரி
கொக்கரை குடமுழவி னோடிசை கூடிப்பாடி நின்றாடுவீர் (சுந் 36-9)

என்பன போன்ற அடிகள் இலயம், சதி ஆகிய வடமொழியாக்கம் செய்யப்பெற்ற கருத்துகளைத் தமிழிற் கூறுகின்றன. அன்றியும் புராண நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப இறைவன் ஆடிய ஆடல்கள் பலவற்றைப் புதியதாக இங்குக் காண்கிறோம். எரியாடல், பாண்டரங்கம், கொடுகொட்டி, புயங்கராக மாநடம், வட்டணை ஆடல், பிச்சாடல் போன்றவை இவ்வகையில் குறிக்கத் தக்கவை ஆகும். சொக்கம் (கரணம்) நிருத்தம் ஆகிய நடன வகைகளும் இறைவன் ஆடியனவாகக் குறிக்கப்படுகின்றன. இவ்வாடல்களை மீண்டும் மீண்டும் குறிக்கின்றன பதிகங்கள்.

இப்பதிகங்களின் வழி, நடனமாதர் கோயில்களில் வழிபாட்டின் போது ஆடியதையும், தேர்த் திருவிழாக்களில் இறைவன் முன் ஆடியதையும் அறிகிறோம். தேவூர், கடம்பூர் போன்ற ஊர்களில் நெடுமாடங்களில் மாதர் தம் கலையொலியும், சங்கொலியும் பறையொலியும் முழங்கின என்றும், கூடலில் அரசர் வருகையின்போது மணி, சங்கு, முரசொலிகள் முழங்கின என்றும் சம்பந்தர் பாடுகிறார். இவை மேற்சொன்ன கருத்தினை வலியுறுத்தி நிற்கின்றன.

சிலப்பதிகார உரை :- ஓர் இசை நாடகத் தமிழ்க் கருவூலம்

இத்துறையில் மிகுந்த குறிப்புகளைத் தந்து நிற்கும் ஒப்புயர்வில்லாக் கருவூலம் சிலப்பதிகாரம். இதனைப் பிற்கால அரும்பதவுரை மற்றும் அடியார்க்கு நல்லார் உரைகளில் இருந்தே உணர்ந்து கொள்ளும் நிலையில் இருக்கிறோம். கி. பி. 12-ஆம் நூற்றாண்டு

---

1. சுலைக்கோவன் இரா., - 'முதல் திருமுறையில் ஆடற்குறிப்புகள்' வரலாறு (இதழ்) v. 105
2. Dr. Nagaswamy R., - Siva Bhakti, pp. 144, 145.
3. சங்கம் குறிக்கும் பாவை பண்களோ; பண்ணவன் காண் பண்ணின் திறல்வன் காண்'– 'திருவீழிமிழலைப் பதிகம்'

வரை (அடியார்க்கு நல்லார் காலம்) தமிழகத்தில் இத்துறையில் இருந்த புலமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்துவதாய் இதிலுள்ள சான்றுகள் அமைகின்றன. தமிழில் அவருக்கு முன்னிருந்த பெரும்பாலான இசை, நாடகத்தமிழ் நூல்களை அவரே நமக்குத் தெரிவிக்கிறார்.[1] [அட்டவணை III] அழிந்து கொண்டிருந்த இத்துறை அறிவினை அக்கால நிலையில் நிறுத்தி வைத்த பெருமைக்குரியவர் அடியார்க்கு நல்லாரே. பன்னிரு சாண் அளவுள்ள கோடும் ஒரு சாண் அளவுள்ள வணரும், பன்னிரு சாண் அளவுள்ள பத்தரும், அவ்வளவுக் கேற்ப ஆணிகளும், திவவும், உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்து இயன்ற பேரியாழை' அடியார்க்கு நல்லார் மூலம் மட்டுமே அறிய முடிகிறது. இவரது பதிக உரையும், அரங்கேற்றுக் காதை (கானல் வரியுட்பட) உரையும் மிகச்சிறந்த இசை, நாடகக் கருவூலங்களாய்த் திகழ் கின்றன. இசை பிறக்குமிடங்களாகிய நெஞ்சு, மிடறு, நாக்கு, அண்ணாக்கு, உதடு, பல், மூக்கு, தலை என்னும் எட்டும் பெருந்தானங்கள் என்றும், எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய அதற்குரிய வினைகள் (கிரியை) என்றும் முறைப்படி இசை பற்றித் தொடங்கும் இவர், ஆளத்திவகை (ஆலாபனம்), பண், தாளம் ஆகிய மிடற்றுப் பாடற் கருத்துக்களையும், தண்ணுமை வகைகளையும் (தோற்கருவிகள்) யாழ், (நரம்புக் கருவி), குழல் (துளைக்கருவி) ஆகியவற்றையும் பற்றி மிகமிக விரிவான குறிப்புக்களைத் தருகிறார். எடுத்துக் காட்டுகளாகச் சில: "குழல் என்பது வங்கியம். அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என்ற ஐந்தும்; இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம், வெண்கலம் மத்திமம், ஏனைய அதமமாம். மூங்கில் பொடிது செய்யும்; வெண்கலம் வலிது. மரம் எப்பொழுதும் ஒத்து நிற்கும்." "இக்காலத்துக் கருங்காலி வேண்டுமென்பது பெருவழக்கு, இவை கொள்ளுங்கால், ஒத்த நிலத்தில் பெருக வளர்ந்து நாலு காற்று மயங்கின் நாதமில்லையாதலான், மயங்கா நிலத்தின் கண், இளமையும் நெடும் பிராயமு மின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி, ஒரு புருடாகாரமாகச் செய்து, அதனை நிழலிலே இட்டு வைத்துத் திருகுதல், பிலித்தல், போழ்ந்து படுதலின்மையையறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கண வகையான் வங்கியஞ் செய்யப்படும்."

இதுபோல, தண்ணுமை பற்றிக் கூறுமிடத்து, 'பேரிகை, பாடகம், இடக்கை, இடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடு, தூம்பு, நிசாளம், துடுகை, சிறுபறை, துடி, பெரும்பறை எனத் **தோலாற் செய்யப்பட்ட தாழ்ந்த குரலினை யுடைய கருவிகள்** என்று கூறுவதோடு, இத்தண்ணுமைகளுக்கெல்லாம் 'நான்முகன், அதாவது இசைக் கருவிகள் அனைத்திற்கும் தளமாய் அமைவது மத்தளம் என்றும்; 'இது பல கூத்துகளுக்குரியது. பாடல் எழுத்தான் இதனுள்ளே பிறத்தலானும், முழவுகளெல்லாம் இதில் பிறத்தலானும்' என்றும் கூறுகிறார். இக்கருவிகள் இசைக்கப்படும் சூழ்நிலை அடிப்படையில், அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவுகள், பண்ணமைகள் (வீரமுழவுகள்), நாண் முழவு, காலை முழவு என்னும் வகைப்படுத்துகிறார்.

யாழ்

'செம்பாலை படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை எனப்பட்ட ஏழுபாலையினையும், இணை நரம்பு தொடுத்து நிரம்ப நிறுத்திக் காட்டல் காரணமாக' என்று கூறியதன் வழி, 'யாழ்' என்ற கருவியின் பெயர் ஆகுபெயராய் அதன்வழி பிறக்கும் பண்ணினைக் குறிப்பதறிகிறோம். இவற்றுள், வட்டப் பாலையின் முடிவுதானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம் பெற்ற இரண் டலகில் ஓரலகையும், இப்பாலையின் முதல் தானமாய் மெலிவினிற்கும், குரல் நரம்புபெற்ற

1. பெருங்குருகு, பெருநாரை முதலாயின சில நூல்களை இறையனார் களவியலுரை குறிப்பினும் அவை இசைத் தமிழ் நூல்கள் என்ற குறிப்பு அடியார்க்கு நல்லார் மூலமே அறியப்படுகிறது.

நாலலகில் இரண்டலகையும் தார நரம்பில் அந்தரக் கோலிலே கைக்கிளையாக நிறுத்தத் தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்த நரம்பில் ஒழிந்த ஓர் அலகையும், பண்டை விளரியிலே கூட்ட அவ்விளரி துத்த நரம்பாயிற்று. இப்படிப் பன்னிருகால் திரிக்கப் பன்னிருபாலையும் பிறக்கும். பன்னிரு பாலையினுரு தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய் பணிகள் நூற்று மூன்றாதற்குக் காரணமாமெனக் கொள்க' 'கைக்கிளை குரலாகப் படுமலைப்பாலையும், துத்தம் குரலாகச் செவ்வழிப்பாலையும், குரல் குரலாக அகும பாலையும் தற்கிழமை திரி'யும் என்றும், 'தாரம் குரலாகக் கோடிப்பாலையும், விளரிகுரலாக விளரிப்பாலையும், இளிகுரலாக மேற்செம்பாலையுமாய், மேற்செம்பாலை இளிநரம்பு இரட்டித்த நிலமையினையுடைத்தாய்' இவ்வாறாகப் பதினாற்கோவைப் பாலை நிலைகள்' பிறக்கும் என்றும் பாலைகள் (பிறழ்வுப் பண்கள் - சங்க காலப் பண்ணுப் பெயர்ப்பு) பற்றிய மிக விரிவான விளக்கத்தினைத் தருகிறார்.

கூத்து

'இருவகைக் கூத்து' என்ற சிலம்புத் தொடருக்கு, அரும்பத உரைகாரர் தேசி, மார்க்கம் என்று இருவகை கூறினார். ஆனால் அடியார்க்கு நல்லாரோ, வசை - புகழ், வேத்தியல் - பொதுவியல், வரி - வரிசாந்தி, சாந்தி - விநோதம், ஆரியம் - தமிழ், இயல்பு - தேசி என்று பல இருவகைகளைக் கூறுகிறார். 'பல்வகைக் கூத்து' என்பதற்கு 'நகைக்கூத்து முதலான புறநடங்கள்' என்று அரும்பத உரைகாரர் கூற, அடியார்க்கு நல்லாரோ, வென்றி வசை, விநோதம் என்று கூறுகின்றார். கடலாடு காதையில் அல்லியம், கொட்டி, கொடு கொட்டி, குடை, பாண்டரங்கம், மல்லாடல், துடி, குடம், கடையம், பேடியாடல், மரக்காலாடல், பாவையாடல் என்று பதினோரு வகை ஆடல்கள் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் நின்றாடுபவை ஆறு என்றும், வீழ்ந்தாடுபவை ஐந்து என்றும் பாகுபாடு செய்யப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் இருப்பது சாந்தி - விநோதம் என்று கூறும் அடியார்க்கு நல்லார்,

சாந்திக் கூத்தே தலைவனின்பம்
ஏந்தி நின்றாடிய ஈரிரு நடம்அவை
சொக்கம் மெய்யே அவிநயம் நாடகம்

என்று கூறிச் **சொக்கம்** என்பது சுத்த நிருத்தம், 108 கரணங்கள் கொண்டது என்றும், மெய்க்கூத்து தேசி, வடுகு, சிங்களம் என்று மூவகைப்படும் என்றும் **அவிநயம்** என்பது கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக்கூத்து என்றும், **நாடகம்** என்பது கதை தழுவிவரும் கூத்து என்றும் விளக்குகிறார். **விநோதம்** என்பதில் குரவை, கலிநடம், குடம், கரணம், நோக்கு, தோற்பாவை, நகைச்சுவை (வசை) வெறியாட்டு என்றுபலவகைப்படும் என்கிறார். இவற்றை 'இழி குலத்தோரையாட வகுத்தனன் **அகத்தியன்**' என்றும் குறிப்பிடுகிறார். மேலும் இக்கூத்திற்குத் தொடர்புடையனவாக 14 விலக்குகளையும் அவற்றின் விளக்கங்களையும் விரித்துரைக்கிறார். இவற்றை நுணுகி ஆராய்வதன் மூலம், உயர்குலத்தோரிடங்களிலும், கோயில்களிலும், அரண்மனைகளிலும் ஆடப்பட்டவை **சாந்திக் கூத்து** என்றும், சாதாரண மக்கள் வாழ்வில் நிகழும் கூத்து வகைகள் **விநோதம்** என்றும் பெயர் பெற்றன என்று கருத இடமாகின்றது. மற்றொரு குறிப்பிடத்தக்க பிரிவாக அடியார்க்கு நல்லார் கூறும் வேத்தியல் பொதுவியல் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. சாதாரண மக்களிடையே பொழுதுபோக்காக நிகழ்த்தப்பெற்ற கூத்துகளே பொதுவியல்; அவையே விநோதம் என்று கருதலாம். 'கொடித்தேர் வேந்தரும், குறுநில மன்னரும் பகை வென்றிருந்தவிடத்து விநோதம் காணும்' என்ற அடியார்க்கு நல்லார் கூற்று, சாதாரணமக்களும், வீரர்களும் இணைந்து காணும் அல்லது ஆடும் கூத்துகளாக இவை அமைந்தனஎன்று தெளிவாக்குகின்றது. இவை சாதாரண மக்கள் 'நூல்நெறிமரபு' இன்றி வழிவழியாக ஆடிய கூத்துகளாக ஒருவேளை ஆங்காங்கு இருந்த சிறுசிறு அரசியல் தலைவர்கள், சேனைத் தலைவர்கள் பற்றி வேடிக்கை, நகை, வசை, புகழ் போன்ற வகைகளில் அமைந்தவையாக இருந்திருத்தல் வேண்டும் எனலாம்.

கலித்தொகையும் பரிபாடலும் :- நாடகத்தின் முன்னோடி

கலிப்பாவும் பரிபாட்டும் நாடகத்திற்கேயுரிய பாவினங்கள் என்பது முன்னரே சுட்டப்பட்டது. நாடகம் என்ற சொல் நடனத்தைக் குறித்து நின்றது. இருப்பினும் கலிப்பா மற்றும் பரிபாடலில் அமைந்த சங்க இலக்கியத் தொகுப்பு நூல்கள் இரண்டும், நடனமான நாடகத்தினை மிகச்சிறப்பாகத் தெரிவிக்கின்றன. இதிலும் அதனை நுணுகி ஆராயின் அதில் வரும் தனிச்சொல் போன்ற உறுப்புகளே பின்னர் நடனத்தினிடையே வரும் உரைநடைக்கு வித்திட்டன என்று கருதத் தோன்றுகிறது. சிலம்பு போன்ற உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களும், தகடூர் யாத்திரை, பாரதம் போன்ற பெரும்பான்மை உரைநடையும், சிறுபான்மைப் பாடல்களும் கொண்ட இலக்கியப் படைப்புகளும் நாடக வகைக்கு, அதாவது உரையாடல்களை இடையிட்டுத் தொடுத்த நாடக நாட்டிய வகைக்கு வழிகோலியது. அடியார்க்கு நல்லார் கூத்தின் விலக்குறுப்புகளில் 'சொல்' என்பதற்கு உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல் என்று கூறும் விளக்கமும் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. எனவே பிற்காலத்து சமயமும் அரசும் அடிப்படையாயின காலத்து இது 'கதை தழுவிய நடனம்' ஆயிற்று. இதனைச் சாந்திக் கூத்து வகைகளில் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். உடையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளைப் பற்றிக் கூறும் பேராசிரியர், வஞ்சிப்பாட்டு, மோதிரப்பாட்டு, கடகண்டு ஆகிய பண்ணத்தி வகையின என்றும், அவை நாடகச் செய்யுள்கள் என்றும் கூறுகிறார். பரிபாடலின் பாடல்கள் பல, இறைவனின் திருவிளையாடல்களையும், அகப்பொருள் கருத்துக்களையும் மையமாகக் கொண்ட நாடகங் களாகவே அமைந்துள்ளதை அறியலாம். கலித்தொகை பெரும்பாலும் அகப்பொருள் அடிப்படையின ஆயினும், முதன்முதலாக பல புராணச் செய்திகளையும், பல குறிப்பிட்ட விழவுகளையும் தெரிவிக்கின்றன. எனவே ஆடல், பாடல் வரலாற்றில் இவ்விரு நூல்களுக் கும் மிகச்சிறந்த இடம் உண்டு. விழாக்களின்போது, 'கதை தழுவிய நடனங்'கள் நடிக்கப் பட்டன. அவையே பின்னர் 'நாடகம்' என்று பெயர் பெறலாயிற்று. இந்த அடியார்க்கு நல்லார் விளக்கத்திற்குச் சான்றுகளாய்ப் பல நாடகங்கள் கல்வெட்டுகளில் குறிக்கப்படு கின்றன. முதற்பராந்தகனின் காலத்துத் திருவாரூர்க் கோயிலில் 'வீரணுக்க விஜயம்',[1] என்ற நாடகம் நடைபெற்றது. இராஜராஜேஸ்வர விஜயம்,[2] இராசராஜேஸ்வர நாடகம்[3] பூம்புலியூர் நாடகம், திருமூலநாயனார் நாடகம் ஆகியன முறையே தஞ்சைப் பெரிய கோயில், திருப்பாதிரிப்புலியூர், திருவாவடுதுறை ஆகிய கோயில்களிலும் நடிக்கப்பட்டன. நெல்லை மாவட்டம் ஆத்தூர் சோமநாதர் கோயிலில் 'திருநாடகம்' என்ற ஒரு நாடகம் நடிக்கப்பெற்ற தாக அறிகிறோம்.[4] இவையெல்லாம் கதை தழுவிய, வரலாற்று நாயகர்களின் வெற்றி மற்றும் பக்தியினை அடிப்படையாகக் கொண்டு பாடல் வடிவில் எழுதப்பட்டன நாடக நடனங்கள் ஆகும்.

கல்வெட்டுகளில்

இலக்கியங்களாலும், உரைகளாலும் பெறும் ஆடல் பாடலாகிய கலைகளை, அவற்றுக்குச் சமகாலத்தனவாகிய பல்லவர், பாண்டியர், சோழர் காலக் கல்வெட்டுகளின் மூலம் அறிகிறோம். அவற்றுள் சில.

ஆடல்: காஞ்சிபுரம் முத்தீஸ்வரர் கோயிலிலும், திருவொற்றியூர்க் கோயிலிலும் நாட்டியமாட மகளிரை ஏற்பாடு செய்ததைப் பல்லவர் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதலாம் பராந்தகன் காலத்திலும் பின்னரும் சுடலையூரைச் சேர்ந்த சாக்கைக் கூத்தாடும் கலைஞர்கள் குறிப்பிடப்படுகின்றனர். உத்தம சோழனின் காலத்துத் திருவிடைமருதூரில் தேசிக் கூத்தாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆதித்த கரிகாலனின் கல்வெட்டு திருவிடை

1. S.I.I. Vol. IV No. 5
2. A.R.E. 1931-32 No. 120
3. S.I.I. Vol II, No. 67
4. A.R.E. 1929-30 No. 444-5

மருதூரில் தைப்பூச நாளிலும், வைகாசித் திங்களிலும், 'நிருத்தம்' ஆடவும், அதன்பின்னர் **சாக்கைக் கூத்து** ஏழங்கம் ஆடவும் ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.[1] தஞ்சை இராசேசுவரத்தில் 400 பெண்கள் நாட்டியமாட நிலையாகப் பணியமர்த்தப்பட்டனர்.[2] மானம்பாடியில், முதலாம் குலோத்துங்கன் காலத்தில் விக்கிரமாதித்தன் முதுகுன்றனென்பான் ஐந்து முறை தமிழ்க்கூத்து ஆடியதையும்[3] இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் **'அகமார்க்கம்'** என்ற கூத்தினைத் திருவொற்றியூர்க் கோயிலில் நாட்டிய மகள் நிகழ்த்தியதையும் அறிகிறோம். நல்லூரில் பொற்கோயில் நங்கை மகள் பூமாழ்வி என்பாள் **சாக்கைக் கூத்தாடியதையும்**,[4] தஞ்சை மாவட்டம் காமரச வல்லியில் மார்கழி மற்றும் வைகாசித் திங்கள் திருவாதிரை நாளில் சாக்கை மாராயன் என்பான் மூன்று முறை **சாக்கைக் கூத்து** ஆடியதையும், கீழப் பழுவூரில் ஐப்பசி அஸ்வினி நாளன்று மூன்று அங்கம் **சாக்கைக் கூத்து** ஆடப்பட்டதையும்[5] திருவாவடுதுறையில் குமரன் ஸ்ரீகண்டன் என்ற சாக்கைக் கூத்தன் **ஆரியக் கூத்து** ஏழு அங்கம் ஆடியதையும்[6], திருவொற்றியூரில் சம்புவராயர் காலத்தே பதியிலார் **'சொக்கம்'** ஆடியதையும், இஷபத்தளியிலார் **அகமார்க்கத்தோடு வரிக்கோலம்** ஆடியதையும், கல்வெட்டுகள் காட்டுகின்றன. இலக்கியம், மற்றும் அடியார்க்கு நல்லார் கூறும் **தேசி, அகமார்க்கம், சொக்கம், ஆரியம், தமிழ்** ஆகிய கூத்து வகைகள் (நடன வகைகள்) நடைமுறையில் இருந்ததை இக்கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.

ஆடற்கலையில் சாந்திக் கூத்தின் ஒருபிரிவாகச் சொக்கம் வகைப்படுத்தப்பட்டதை முன்னரே கண்டோம். சொக்கம் என்பது சுத்த நிருத்தமான 108 கரணங்களைக் குறித்து நின்றது. கையும், காலும், உடலும் இருக்க வேண்டிய நிலைகளின் அடிப்படையில் ஆடல் நிலைகளை இவை குறிக்கின்றன. பரதரின் நாட்டிய சாத்திரத்தில் இந்த 108 கரணநிலைகளையும் குறிக்கும் சூத்திரங்கள் உள்ளன. முறையான நாட்டிய நன்னூல்களைக் கற்கும் வழக்கம் சோழர் காலத்தே மேலோங்கி நின்றது. [பரதரின் நாட்டிய சாத்திரத்திற்கு அபிநவகுப்தர் உரை எழுதியது கி. பி. 10-ஆம் நூற்றாண்டில்தான் என்பது நினைவு கொள்ளற் குரியது]. சிதம்பரம் கிழக்குக் கோபுரத்தில், 'பரத மல்லன்' 'பரதம் வல்லான்' என்ற பட்டப் பெயர்களைப் பூண்டு பரதநாட்டியத்தில் வல்லானாயிருந்த காடவகுல மன்னன் கோப்பெருஞ்சிங்கனால், இந்த பரதநாட்டிய 108 கரணச் சூத்திரங்கள், கல்லில் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாடல்: இசைக்கலையில் குறியீடுகளை முதன்முதலாக அறிமுகப்படுத்தியதற்கு அறச்சலூர்க் கல்வெட்டினை எடுத்துக்காட்டாகக் கண்டோம். இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் இசையில் பல புதுமைகள் செய்யப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. இதனைத் தெரிவிக்கும் அடுத்த கல்வெட்டுச் சான்று குடுமியாமலை, திருமெய்யம் ஆகிய ஊர்களில் உள்ளன. 'சங்கீர்ண ஜாதி' என்ற இசைத்துறைப் பட்டப்பெயர் ஒன்றினைப் பெற்றிருந்தவனும், 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற வடமொழி நாடக நூலை இயற்றியவனுமான பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்துக் கல்வெட்டு இது. ஜாதி என்ற சொல் இசைத்துறையில் இராகத்தினைக் குறித்தது. தமிழர் 'இசை' என்ற சொல்லாலேயே இதனைக் குறித்தனர். ஏழு பேரிசையும், ஐந்து சிற்றிசையுமாக பன்னிரு இசையினையும், ஏழ்வகைப் பண்களையும் தமிழர் கண்டிருந்தனர்; மேலும் வட்டம், திரிகோணம், சதுரம் ஆகிய வகைகளில் பண்ணுப்பெயர்ப்பு செய்ததன் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலைப் பண்களை உருவாக்கியிருந்தனர்; எழுவகைத் தாளங்களையும், கால

1. S.I.I. Vol. XIX, No. 718
2. Ibid., Vol. II, No. 66
3. A.R.E. 1932 No. 90
4. Ibid., 1940-41 No. 161
5. S.I.I. Vol. XIX, No. 175
6. A.R.E. 1925, No. 120; வேதாசலம், வெ. - திருவெள்ளறை

அளவு அடிப்படையில் அமைந்த ஐந்து வகைகளில் (லகு) உறழ் (பண்ணுப்பெயர்க்க) 35 தாளங்கள் பிறக்கின்றன. இவ்வாறு உறழ்வால் பிறக்கும் ஒரு இராகத்தினை மகேந்திரன் உருவாக்கினான் என்பதையும், அந்த வாய்ப்பாட்டின் (notation) ஓசையினை நரம்புக் கருவியில் இசைக்கும் வகையில் 'பரிவாதினி' என்ற வீணையினை உருவாக்கினான் என்றும் அறிகிறோம். அதனைத் தெரிவிக்கும் கல்வெட்டு :

'குணசேனப் பிரமாணம் செய்த வித்தியா பரிவாதினி கற்க'. மேலும் இக்கல்வெட்டில், 'மத்யமக்கிரமே சதுஷ்ப்ரகார ஸ்வராமஹ' என்றும், 'ஐட்ஷக் கிரமே சதுஷ்ப்ரகார ஸ்வராகமஹ' என்றும் இருவரிகள் இருப்பதும், ஷட்வ, சாதாரித, பஞ்சம, கைசிகி, மத்யம என்று தொடங்குவதாகிய மேலும் ஐந்து இராகங்கள் பற்றியும், அவைகளுக்குரிய பண் திறங்கள் பற்றியும் முழுவிவரங்களும் பொறிக்கப்பட்டு இருந்திருக்கின்றன. பிற்காலத்தே இக்கல்வெட்டின் பெரும்பகுதி சிதைக்கப்பட்டுவிட்டது. இதனையடுத்து இவன் பெயரனாகிய இராசசிம்மன் **ஸ்ரீ வாத்யவித்யாதரன், ஸ்ரீ ஆதோத்ய தும்புரு, ஸ்ரீ வீணாவினோதன்** ஆகிய பட்டங்களைக் கொண்டிருந்தானென்பது காஞ்சி கைலாசநாதர் கோயிற் கல்வெட்டால் புலப்படுகின்றது. இப்பெயர்கள் இவனுக்கு இசையிலும், இசைக்கருவிகளிலும் இருந்த வல்லமையைப் புலப்படுத்துகிறது. ஆதோத்யம் என்ற சொல், வீணை, முரசு, குழல், தாளம் ஆகிய நால்வகைக் கருவிகளையும் குறிக்கும் சொல் என்று அமரகோஷத்தினின்று அறிகிறோம்.[1]

சோழர் காலத்தைப் பொறுத்தவரை இசைநுட்பத்தினைக் கூறும் கல்வெட்டுகள் என்று எதையும் கூற இயலாவிடினும், சில குறிப்பிட்ட இசை வகைகளைப் பற்றிக் குறிப்பிடு வனவாகச் சில கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம் அவற்றுள் குறிப்பிடத்தக்கது திருப்பதியம் பாடப் பலரைக் கோயில்களில் பணியமர்த்தியது ஆகும். உத்தம சோழன் காலம் முதலே திருப்பதியம் பாடுவோர் கோயிலிற் பணியமர்த்தப்பட்டனர். முதலாம் இராசராசன் காலத்தில், 'ஆரியம் பாடுவார் மூவர், தமிழ்பாட ஒருவர்' பணியமர்த்தப்பட்டுள்ளனர். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், இவர்களன்றிப் பாடுவோராகக் 'கந்தர்விகள்' குறிக்கப் படுகின்றனர். திருவையாறுக் கல்வெட்டு 'காமரப் பேரையன்' ஒருவனைச் சுட்டுகிறது. 'காமரம்' என்பது முன்னரே கூறியபடி தேவாரத்திற் குறிக்கப்பட்ட பண்ணாகும். இவனும் 'தமிழ்பாடுவோனாகவே' குறிக்கப்படுகிறான். மதுரைக் கோயிலில் மார்கழி மாதத்தில் திருவெம்பாவையினைச் சாதாரிப்பண்ணில் பாட நிவந்தம் அளிக்கப்பட்டுள்ளது.[2] இக் கோயிலில் சிம்மநந்தன தாளம், சப்தசூளாதி தாளம் ஆகிய தாளப்பெயர்கள் கல்வெட்டு களாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

இசைக்கருவிகள்

சோழர் காலக் கல்வெட்டுகளில் மிக அதிகமான குறிப்புகள் இசைக் கருவிகள் பற்றியனவாகவே அமைந்துள்ளன. இசைக்கருவிகளைக் கொடையாகக் கொடுத்ததையோ, அல்லது அவற்றை இசைக்கக் கொடுத்தக் கொடையையோ குறிப்பவை இவை. [அட்டவணை IV]. அளித்தவரின் பெயர் பொறித்த இசைக்கருவிகள் பலவற்றை இன்றும் தமிழகக் கோயில்களில் காணலாம். தமிழ் கல்வெட்டுகள், உடுக்கை, கண்டிகை, மத்தளம், தாளம், கரடிகை. டமருகம், தவில், திமிலை, தாரணி, படகம், முரசு, மேளம், காளம், தட்டளி, சங்கு, தாரை, வீணை, குழல், பணை, கொம்பு, மணி, சகடை, கெண்டை, குடமுழா போன்ற பல இசைக்கருவிகளைக் குறிப்பிடுகின்றன. நடனத்துக்கும், பாடலுக்கும், இசைக்கும் இசைக்கருவிக் கலைஞர்களைப் 'பக்கவாத்யர்' என்றே கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. நால்வகை இசைக் கருவிகளும், மிடற்றிசையும் இணையின், அது 'பஞ்சமகா சப்தம்' என்று வழங்கப் பெற்றது. இம்முறையில் இசைக்க ஒன்பது பேரை நியமித்ததைத் திருச்செங்கோட்டு

---

1. Dr. Meenakshi C., - Administration & Social life under pallavas. p. 266
2. A.R.E. 1943 - 44; No. 187

செப்பேடு கூறுகிறது. மேலும், திருச்செந்துறை, பூவாலைக்குடி, திருமெய்யம், சோழமாதேவி ஆகிய ஊர்களிலும் பஞ்சமகா சப்தத்திற்கு ஏற்பாடு செய்ததை இவ்வூர்களில் உள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சிற்பங்களில்

ஆடல் : கோயிற் கட்டட அமைப்பில் கோஷ்டங்களிலும், உப பீடங்களிலும், தூண்களிலும் இறைவன் மற்றும் ஆடற் கலைஞர்களின் சிற்பங்கள் அமைப்பது மரபாயிற்று. இவை ஆடற் கலையின் பல்வேறு தோற்றங்களையும், நிலைகளையும் கண்முன் கொணரும் புகைப் படங்களாக அமைகின்றன எனலாம். எனவே இலக்கியங்கள் மூலம் நாம் அறியும் பல நடன வகைகளைச் சிற்பங்களாகக் காணும் பேறு பெறுகிறோம். காஞ்சிபுரத்தில் உள்ள மதங்கேசுவரர், முக்தேசுவரர், தான்தோன்றீசுவரர், கைலாசநாதர். ஐராவதீசுவரர் ஆகிய கோயில்களில் சிவனின் ஆடற்கோலங்களைச் சிற்பங்களாகச் செதுக்கியுள்ளனர். காஞ்சிக் கைலாசநாதர் கோயிலிலுள்ள சிற்பங்களைப், பதாகை நடனம், லதாவிருச்சிக நடனம், ஊர்த்துவ நடனம் மற்றும் ஆனந்த தாண்டவம் என வகைப்படுத்துவர் அறிஞர்.[1] காஞ்சி தான்தோன்றீசுவரர் கோயிலில் இணைந்தாடும் நிலையில் பல சிறுசிறு தனிச் சிற்பத் தொகுதிகள் கிடைத்துள்ளன. வைகுந்தப்பெருமாள் கோயிலில் உள்ள சிற்பக் காட்சிகளுள் நந்திவர்மனின் அரசவையில் ஆண்களும் பெண்களுமாக ஆடற் கலைஞர்கள் ஒன்பதின்மர் உள்ள காட்சியொன்றும், மூன்று ஆண்களும், இரண்டு பெண்களுமாக ஆடற் கலைஞர்கள் இடம்பெறும் காட்சியொன்றும் உள்ளன.[2] ஆடற்கலை பல்லவர் அரசவையில் பெற்றிருந்த இடத்தினை, இவை தெளிவாக்கும்.

பல்லவர்களுக்குச் சமகாலத்தில் மதுரையில் ஆட்சிபுரிந்த பாண்டியர்தம் ஆதரவில் தோன்றிய திருப்பரங்குன்றத்துக் குடவரையில் சிவன் சதுர நடனமும் (மண்டல ஸ்தானிகம்), அதே நிலையில் தாய்மார் எழுவர் நடனமும் சிற்பமாகச் செதுக்கப்பெற்றுள்ளன. நெல்லை மாவட்டம் திருமலைப்புரத்திலும் நடன வடிவங்கள் சில ஓவியமாக வடிக்கப்பட்டுள்ளன. கழுகுமலையில் அமைந்த வெட்டுவான் கோயிலில் தென்முகக் கடவுள் தன் மடியில் மத்தளத்தினை வைத்து இசைப்பது போன்ற காட்சி வடிக்கப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் பல்வேறு வகையான கரணநிலைகளும் சிற்பங்களாகச் செதுக்கப் பெற்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானத்தின் மேல்தளத்தில் 81 கரணங்கள் முழுமை பெற்றும், மீதமுள்ள 27 கரணங்களுக்குக் கற்பலகைகள் பதித்த நிலையிலும் உள்ளன. குடந்தைச் சாரங்கபாணி கோயில் கோபுரத்திலும், தில்லையில் கிழக்கு, மேற்கு, தெற்குக் கோபுரங்களிலும், திருவண்ணாமலை, திருமுதுகுன்றம், திருவதிகை கோயிற் கோபுரங்களிலும் பரதர் குறித்த 108 நாட்டிய கரணங்களும் சிற்பங்களாகச் செதுக்கப் பெற்றுக் காட்சியளிக்கின்றன. மேலும் தில்லை, சிவனின் ஆடல்வல்ல தோற்றத்தின் இருப்பிடமாகக் கருதப்பட்டதால், அங்குச் சிவகாமி அம்மன் கோயிலிலும், நடராசர் கோயிலின் முதற்சுற்றிலும், ஆயிரங்கால் மண்டபத்திலும் அதிஷ்டானப் (கட்டட அமைப்பின் அடிப்பகுதி) பகுதிகளில் இசைக்கருவிகளை இசைப்போரின் சிற்பங்களும், தனியாகவும், இணைந்தும் ஆடுவதாக அமைந்த சிற்பங்களும், நிறைந்த அளவில் காணப்படுகின்றன. இவையன்றிப் பல கோயில்களில் தூண்களிலும் ஆடற் சிற்பங்கள் காணப்படுகின்றன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதத்தக்கச் சாக்கைக் கூத்துச் சிற்பம் ஒன்றினைத் திருவொற்றியூர்த் தூணொன்றிலும், கொற்றமங்கலம், கீழப்பழுவூர், திருவல்லம், திருத்துடையூர் ஆகிய ஊர்களில் குடக்கூத்துச்[3] சிற்பங்களையும் காண்கிறோம்.

1. Dr. Meenakshi C., - Administration & Social life under Pallavas
2. Ibid. pp. 313 - 4
3. டாக்டர். கலைக்கோவன் இரா., - சிலம்பின் வரிகளுக்குச் சிற்பச் சான்றுகள் – Seminar on Marine Archaeology, p.76

இசைக்கருவிகள்: இசைக் கருவிகளைப் பொறுத்தவரை, திருமெய்யம், நாமக்கல் குடைவரைக் கோயில்களில் தும்புரு, நாரதர் உருவங்கள் கையில் யாழுடனும், வீணையுடனும் காட்சியளிக்கின்றன. மாமல்லையில் உள்ள அருச்சுனன் தவக்காட்சியில், கின்னர, கின்னரியர் இசைக்கருவிகளை ஏந்திய வண்ணம் பறந்து செல்கின்றனர். கைலாசநாதர் கோயிலில் பூத கணங்கள்பல்வேறு இசைக்கருவிகளை இசைப்பதைச் சிற்பமாகக் காணலாம். திருக்கோலக்காக் கோயிலில் தாளக்கருவியொன்றினையும்' திருஎருக்கத்தம்புலியூர்க் கோயிலில் உள்ள திருநீல கண்ட யாழ்ப்பாணரின் சிற்பத்தில் யாழின் உருவத்தையும், பல்வேறு கோயில்களிலும் உள்ள இராமாயணச் சிற்பங்களில் முரசின் தோற்றத்தையும், குமரி மாவட்டம் சுசிந்திரம் கோயிலில் மத்தளம், பம்பை. செண்டை, முழவு போன்ற கருவிகளின் சிற்பங்களையும், திருவாட்டாறு ஆதிகேசவப்பெருமாள் கோயிலின் சித்திரமண்டபத் தூணில் உள்ள குழலூதும் கண்ணனின் கையில் புல்லாங்குழலின் வடிவினையும், நடராசர் சிற்பங்களில் நந்தி குடமுழா வாசிப்பதையும், கங்கைகொண்ட சோழபுரம் கோயிலில் யாழ், குழல், தாளம் உடுக்கை, முழவு போன்ற சிற்பங் களையும் போளூரில் உள்ள இராமாயணக் காட்சிகளில் பலவகையான இசைக்கருவி களையும் மற்றும் நடனச்சிற்பங்களையும் காண்கிறோம்.

விஜயநகரர், நாயக்கர் காலச் சிற்பங்கள் அளவில் பெரியனவாக பெரிய தூண்களின் அளவிற்கு இடம்பெற்றுள்ள ஒய்யாரமாய் நிற்கும் ஆடல் அழகியர், இசைப்பெண்கள், ஆடவர் சிற்பங்களில் மிகப் பெரிய தெளிவான இசைக்கருவிகளின் வடிவங்களைக் காணலாம். மதுரைப் புதுமண்டபம், ஆயிரங்கால் மண்டபம், கிருஷ்ணாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் தென்காசி போன்ற எத்தனையோ இக்காலக் கோயில்களில் பல்வகையான இசைக் கருவிகள் சிற்பங்களில் வாழ்கின்றன. திருத்துறைப் பூண்டியில், சோழர் காலத்தில் பெயர் பொறிக்கப்பட்ட குடமுழா ஒன்றும், திருவிடைவாசல், திருவதிகை ஆகிய இடங்களில் கொடுத்தார் பெயர் பொறிக்கப்பட்ட சங்குகளும், கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலில் கல்லால் ஆன நாதசுரம் ஒன்றும், சேதுபதி காலத்து நரம்புக்கருவியும், தோற்கருவியும் இணைத்துச் செய்யப் பெற்ற வீணையொன்றும் தமிழர் இசைக்கருவிப் புலமையினை இன்று நின்று காட்டும் சான்றுகள் ஆகும்.

ஓவியங்களில்

ஓவியத்தின் மூலம் நாம் காணும் ஆடற்கலைக்குக் காலத்தாற் பழமையான சான்றாய் நிற்பது சமணர்தம் குடைவரைக் கோயிலான சித்தன்னவாசலில் தூணில் காணப்படும் ஆடலழகியின் ஓவியமே ஆகும். பாண்டிய மன்னன் சீமாறன் சீவல்லபனால் புதுக்கப் பெற்ற இவ்வோவியத்தின் அழகு எழுத்தில் வடித்தற்கரியது. இதனை அடுத்ததாக நம் கண்முன் காணத்தக்கவை, தஞ்சைப் பெரிய கோயிலின் விமானத்தின் மேல் முதல் நிலையில் உள்ள ஓவியத்தில் உள்ள ஆடல் அழகியர் உருவங்கள் ஆகும். மிகவும் எழிலான படைப்பு இது. வீசியாடும் அந்தரத்து அரம்பையர் போலக் காட்சியளிக்கும் இவர்தம் ஓவியத்தில், தலைக்கோலியர் ஆடும் ஆட்டத்தின் வேகத்தினையும், நளினத்தையும், அவிநயத்தினையும், ஆடை அணிகலன்களின் கவர்ச்சியினையும் ஒருசேரக் காண்கிறோம்.

விசயநகரர் காலம் தொடங்கி இராமாயணம், மகாபாரதம் மற்றும் பாகவத கதை களைக் கோயில்களின் மண்டபச்சுவர்களிலும், விதானங்களிலும் ஓவியமாகத் தீட்டும் மரபு எழுந்தது. அந்தந்த ஊர்களின் தலவரலாற்றுக் கதைகளும் இடம் பெற்றன. அவ்வாறு ஓவியங்கள் எழுதும் போது திருமணக்காட்சிகள், அரசரின் அவைகள், விழாவில் இறை வனின் திருவீதி ஊர்வலம் ஆகியவற்றில் ஆடற்காட்சிகளும், இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டுச் செல்வதும் இடம் பெறுகின்றன. அவ்வகையில் இவ்வாடல் பாடற் காட்சிகளில் பல வகையான ஆடல்களையும், பல்வகையான இசைக்கருவிகளையும் காணமுடிகிறது.

காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் மேல்தளத் திருச்சுற்றில் உள்ள நரசிம்மப் பெருமானின் முன்னர் தம்புரா ஏந்தி நிற்கும் அடியவர்களைக் காண்கிறோம். திருவரங்கத்தில், திருஅரங்கநாதர் திருவீதி எழுந்தருளும் போது, அவர் முன்னே கொம்பும், பறையும்

இசைக்கப்படும் காட்சியை ஓவியத்தில் உள்ளது. குடந்தைக்கருகில் உள்ள திருவலஞ்சுழியில் 16 கைகளையும் வீசி ஆடும் ஆடல்வல்லானின் அருகே நான்முகன் தாளம் இசைப்பதையும், திருமால் மத்தளம் கொட்டுவதையும், மற்றொருவர் குடமுழா வாசிக்கும் காட்சியையும், தஞ்சைக்கருகில் உள்ள வெண்ணாற்றங்கரையில் தேர்விழாவில் இறைவன் முன்னர் நடனம் ஆடிச்செல்லும் நடனமகளிரையும் காண்கிறோம். சமணக் கோயிலான திருப்பருத்திக் குன்றத்தில் சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாறு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு மாளிகை ஓவியத்தின் முன்னர் மகளிரின் நடனமும், கோலாட்டமும் மிகச் சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளன. மேலும் அரச மகளிர் இருப்பிடத்தின் சுவர்களில் ஆடலழகியரின் பல்வேறு நாட்டியக் கரணங்களும், அவிநயத் தோற்றங்களும் மிக அருமையாக எழுதப்பெற்றுள்ளன.[1] செங்கத்தில் தீட்டப்பட்டுள்ள இராமாயண ஓவியங்களில், இராமன் வெற்றிக்குப் பின்னர், அனுமன் சீதையை இராமனிடம் அழைத்துச் செல்லும் காட்சியில், கொம்பு, குழல், மத்தளம் இவற்றை இசைத்துச் சிலர் செல்வதாகக் காண்கிறோம்.

இவ்வாறு சமய அடிப்படையினதாக அமைந்த ஓவியங்களின்று மாறுபட்டதாக, இராமநாதபுரம் இராமலிங்க விலாச ஓவியங்களைக் கூறலாம். சேதுபதியின் வாழ்க்கை, மற்றும் அக்கால சமுதாயத்தினைப் பிரதிபலிக்கும் ஓவியங்கள் இங்கு இடம் பெறுகின்றன. முத்து விஜயரகுநாத சேதுபதியின் காலத்தில் எழுதப்பட்ட இவ்வோவியங்களின் மூலம் பலவகையான இசை நடனக்குறிப்புகளை அறிகிறோம். இக்கால கட்டத்தில், வட இந்தியாவில் இருந்த மொகலாயப் பேரரசின் தாக்கமும் இருந்தது. ஐரோப்பியர்களின் தொடர்பு வந்து விட்டதை ஓவியங்களில் பார்க்கிறோம். மொகலாயர் பாணியில் உடையணிந்து அமர்ந்த சேதுபதியின் முன்னே மொகலாயப் பாணியில் உடையணிந்தாடும் ஆடல் மகள்; ரகுநாத சேதுபதியைப் பல்லக்கில் தூக்கிச் செல்லும் போது இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டும் ஆடிக் கொண்டும் செல்லும் கலைஞர்கள்; மற்றோரிடத்தில் மூவர் வீணைகளை வாசிக்க, அவ்விசையைச் சேதுபதி துய்க்கிறார். சேதுபதியின் முன்னர் இருபெண்கள் நாட்டியம் ஆட, பிறபெண்கள் இசைக்கருவிகளை இசைப்பது போல ஒரு காட்சியுள்ளது. அடுத்ததாகக் குறிப்பிடத்தக்கவை தஞ்சைப் பெரிய கோயிலில் சுப்பிரமணியர் சன்னதிச் சுவரில் உள்ள சரபோஜி மன்னர் ஆதரவில் எழுதப்பெற்ற ஓவியங்கள் எனலாம். அரசர்களின் உருவங்களை அடுத்து, இருமகளிரின் ஆடல்காட்சிகள் இடம்பெறுகின்றன. ஒருத்தி அக்கால நிலையில் இருந்த 'பரதநாட்டியம்' என்று, இன்று அழைக்கப்படும் வகையில் அமைந்த ஆடை அணிகளுடன் ஆடுகிறாள். மற்றொருத்தி மராட்டியப் பாணியில் அமைந்த ஆடை அணிகளுடன் ஆடுகிறாள். சரபோஜி மன்னரின் காலத்து மராட்டிய இசையும், நடனமும் தமிழகத்தில் சிறப்பிடம் பெற்றதை இவை விளக்கி நிற்கின்றன.

திருக்கடவூர் மயானம் கோயிலின் அர்த்தமண்டபத்தின் வாயிலை அடுத்துள்ள மகா மண்டப விதானத்தில் ஆடல் மகளும், இசைக் கருவிகளை இசைப்போரும் ஓவியத்தில் தீட்டப்பட்டுள்ளனர். அவ்விடத்தில்தான் அவர்கள் நாள்தோறும் நின்று இசைத்தும், ஆடியும் வழிபடுவது முறையாக இருந்திருக்கும். கோனேரிராசபுரத்தில் ஐரோப்பியர் ஒருவர் வருகையின் போது தந்த வரவேற்புக் காட்சி ஓவியத்தில் இடம் பெற்றிருக்கிறது. அதில் ஆடல்மகள், நிறைகுடத்தினை ஏந்தி நிற்கிறாள். இவ்வோவியங்களிலும், திருப்பருத்திக் குன்றத்தே உள்ள ஓவியத்திலும், ஐரோப்பியர் பாணியில் அமைந்த தோல்பை, குழல், இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழர் நாகரிகத்தில் காலந்தோறும் பல்வேறு கலைகளின் தாக்கமும் ஏற்பட்டது என்பது உண்மை.

பாடுபொருளும், முறையும்

ஆடலும் பாடலும் அரசினையும், சமயத்தினையும் அடிப்படையாக்கிக் கொண்ட இக்காலத்தில், அவையே பாடுபொருளாக அமைந்தன. சிலம்பு குறிக்கும் பதினோராடல்

1. Dr. Mahalingam, T.V., So & Ad. life under Vijayanagar, p. 339

களுக்கும் புராணக் கதைகளே பாடுபொருளாய் அமைந்தன. சிவன், திருமால், முருகன், இந்திரன், மன்மதன். மாயவள், திருமகள் ஆகியோர் இவ்வாடல்களில் உருவகிக்கப்படுகின் றனர். இவைகளை விழாக்காலங்களிலும், அரசவைகளிலும் தொழில் முறை ஆடலழகியர் அவ்வவ்விறைவர்களின் வடிவாகத் தம்மைப் புனைந்து கொண்டு ஆடியிருக்கின்றனர் என்பதை மாதவி இந்திரவிழாவில் இவற்றையாடினாள் என்ற செய்தி உறுதிப்படுத்துகின்றது. சாந்திக் கூத்தென்பது, தலைவனின்பம் ஏந்தி நின்றாடியது; 'உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருண்மேல் செய்தலும், இல்லோன் தலைவனாக உள்ளதோர் பொருண் மேற் செய்தலும், உள்ளோன் தலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தலும்' என்று கூறும் யோனிக்குரிய விளக்கமும் (கூத்தின் விலக்குறுப்புகளுள் ஒன்று), 'அறம் பொருளாகத் தெய்வ மானிடர் தலைவராக வருதல், பொருள் பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருதல், காமப் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருதல், கூத்தன் தலைவனாக நடன்நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருதல்' என்ற விருத்திக்குரிய விளக்கமும், 'ஆரியத் திலும் தமிழிலும் ஆதிக்கதையை அவற்றிற்கொப்பச் சேதித்திடுதல்' என்ற சேதத்திற்குரிய விளக்கமும், 'மண்டலமாக்கள் பிறிதோருருவம் கொண்டுங் கொள்ளாதும் ஆடுதல்' என்பது தொடங்கி எட்டுவகை வரிகளுக்குமுரிய விளக்கமும் அக்கால கட்டத்தே ஆடல் பாடலுக்குரிய பாடுபொருளாய் எவை அமைந்தன என்பதைக் காட்டி நிற்கின்றன. பல்வேறு தலைவர்களின் வெற்றி, காதல், பக்தி ஆகியவை அடிப்படையாய் இவைகட்கு அமைந்தன. இலக்கியங் களிலும், சிற்பங்களிலும், கல்வெட்டுகளிலும், ஓவியங்களிலும், இவ்வடிப்படையில் அமைந்த ஆடல், பாடற்கலையே நிறைந்து நிற்கிறது. தமிழ்ச் சமுதாயத்தில் இக்கால கட்டத்தில் மேலோங்கி நின்ற உணர்வுகளை இவைகளில் காணமுடிகிறது.

ஆடரங்கு

சங்க காலத்தே விழவுக்களங்களே ஆடரங்குகளாக விளங்கின. அடுத்து, இறைவனும் இறைவியும் ஆடுவதாகவும்' அவர்களை வழிபடும் ஆடல்மங்கையர் ஆடுவதாகவும் கூறும் இலக்கியங்களின் வழி, சுடலை, அம்பலம் ஆகியவற்றில் இறைவன் ஆடுவதாகவும், மணி யரங்குகளில் ஆடல்மகளிர் ஆடுவதாகவும் அறிகின்றோம். சிவனாடும் இடம் பெரும்பாலும் இடுகாடே ஆகும். நடன உருவான ஆடல்வல்லானின் சிறப்புமிகு கோயிலான தில்லை, சிற்றம்பலம் எனப்பட்டது. 'அம்பலம் ஆடரங்காகவும்,' 'தில்லைக் கூத்தாடரங்காகவும்' பாடுகின்றனர் மூவரும். கோவை மாவட்டப் பேரூர் குடகத்தில்லை என்றும், அங்குள்ள ஆடரங்கு அம்பலம் என்றும் பெயர் கொண்டிருந்தது. (சம். 10-12) அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்தினை இறைவன் ஆடினான். ஆனால் ஆடல்மகளிரோ,

> காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதி
> தேந்தா மென்றரங்கேறிச் சேயிழையார் நடமாடினர்
> 'மண்ணார் முழவும் குழலும் இயம்ப
> மடவார் ஆடும் மணியரங்கு'கள் (சுந் : 42-4)

பல கோயில்களில் இருந்தன.

> விழவொடொலி மிகு மங்கையர் தகுமாடக சாலை
> முழவோடிசை நடமுன் செயுமுதுகுன்றத்தைக்

காண்கிறோம். எனவே கோயில்களில் ஆடக சாலைகளும், அரங்குகளும் இருந்தன என்றறிகிறோம். தேரோடும் வீதிகளில், சந்திகளில், மண்டபங்கள் விளங்க, அதில் இறைவனை அமரச்செய்து, அரம்பையர் தெருவே விழவரங்காக ஆடியிருத்தல் வேண்டும். 'அரங்கிடை நூலறிவாளர்' என்ற சொல், 'அரங்கத்தினையும் அதில் ஆடப்படும் நடனங் களையும் பற்றிய நூல்களில் புலமையுடையோர்' என்ற பொருள் தந்து நிற்றலின் அக்காலத்தே இதற்கெனத் தனிநூல்கள் இருந்தன என்று ஊகிக்க இடம் தருகின்றது.

ஆடரங்குக்கு உரிய இலக்கணத்தினைச் சிலப்பதிகாரம் குறிக்கிறது.

நூல்நெறி மரபினரங்க மளக்கும்
கோலள விருபத்து நால் விரலாக
எழுகோலகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோலு யரத்து உறுப்பினதாகி
உத்திரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோலாக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோற்றிய அரங்கு

என்றும்,

பூதரை எழுதி மேனிலை வைத்துத்
தூண் நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்து வரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழிலரங்கம்

என்றும், மாதவி ஆடிய அரங்கினை விளக்குமுகமாக, மிக அருமையான அரங்கு அமைத்தல் பற்றிய செய்திகளைத் தருகிறது சிலப்பதிகாரம். எனினும் இது நிலையான அரங்காக அன்றித் தற்காலிக அரங்காக அமைக்கப்பட்ட அரங்காக இருத்தல் கூடுமோ என்ற ஐயத்தினை 'விருந்துபடக் கிடந்த' என்ற சொல்லும், அதற்கு 'அழகினாற் புதுமைத்தாகச் சமைத்த அரங்கு' என்று அரும்பத உரைகாரர் தரும் விளக்கமும் அமைகிறது. எனினும், 'எண்ணிய நூலோர் இயல்பினில் வழாது' என்ற இதன் முந்தைய அடிக்குப் பொருள் எழுதுகையில், நிலச் சோதனைச் செய்த பின்பே அரங்கமைத்தனர் என்று கூறப்படுதலின் நிலையான அரங்குகளும் அக்காலகட்டத்தே அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதலாம்.

மேற்குறித்த அடிகளில் மிக நுண்ணிய குறிப்புகள் அடங்கியுள்ளன. அரங்கின் நீளம், அகலம், உயரம், இருவாயில்கள் ஆகியவை அளவுகளுடன் முறையாகக் கூறப்பட்டுள்ளன. மேடையின் விதானங்களில் பூதத்தின் உருவங்கள் எழுதப்படுதல் வேண்டும்; தூண்களின் நிழல், மேடையிலும் அவையிலும் விழுதல் கூடாது; மூவகைத் திரைச் சீலைகள் அமைக்கப்படுதல் வேண்டும்; மேற்கட்டியில் (விதானம்) ஓவியங்கள் எழுதப்படுதல் வேண்டும்; முத்துகளும், மாலைகளும், வளைகளும் தொங்க விடப்படுதல் வேண்டும்; என்று விளக்குகிறது சிலம்பு. சிதம்பரத்தின் சிற்றம்பல விதானத்தே ஓவியங்கள் தீட்டப்பெற்ற பொன் தகடுகள் வேயப்பட்டிருந்தன என்பதை,

முழுதும் வானுலகத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூய செம்பொன்னினால்
எழுதி மேய்ந்த சிற்றம்பலம்

என்று அப்பர் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. வாயில்களுள் வலப்புற வாயிலின் வழியே ஆடல் மகளும், இடப்புறவாயிலின் வழியே பாடும் தோரிய மடந்தையரும் அரங்கினுள் புகுந்தனர். ஆடல் அரங்கு 'நாயகப்பத்தி' என்றழைக்கப்பட்டது. இருக்கைகள், அவ்வவர்களுக்கு உரிய வகையில் அமைக்கப்பட்டிருந்தன. கோயிலில் உள்ள ஆடற்களம், 'கூத்தம்பலம்' என்றும், அரண்மனையில் உள்ளது 'கூத்துப்பள்ளி' என்றும், நடிகர் தங்குமிடம் 'கண்ணுளர் குடிஞை' என்று பெயர் பெற்றது என்றும் கூறுவர்.[1] கேரளத்தில், கூடியாட்டத்திற்குரிய அரங்குகள் இன்றும் 'கூத்தம்பலம்' என்றே பெயர் பெறுகின்றன.

1. திரு. அழகப்பன் ஆறு; தமிழ் நாடகம் - தோற்றமும் வளர்ச்சியும், ப. 122

கல்வெட்டுகளும் அரங்குகள் இருந்ததைக் காட்டுகின்றன. 'நிருத்த மண்டபம்' என்றும் 'நாடக சாலை' என்றும் இவை குறிக்கப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டம் திருப்பெருமாண்டார் கோயிலின் முற்றத்தே 'நிருத்த மண்டபம்' இருந்தது.[1] தென்னார்க் காடு மாவட்டம். ஜம்பையில் ஒரு 'நிருத்த மண்டபம்' செய்யப்பட்டிருந்தது. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் 'நானாவித நாடக சாலை' ஒன்று திருவாவடுதுறையில் இருந்தது.[2] திருவதிகையில் 'நாடக சாலை மண்டபம்' ஒன்று உத்தமசோழன் காலத்தில் அமைக்கப் பட்டது.[3] திருவாரூர் ஓவியத்தில், முசுகுந்தன் அரசவையில் அமர்ந்து, ஆடல்பாடல்களைத் துய்க்கும் காட்சியின் கீழே 'முசுகுந்த சக்கரவத்தியினுடைய நட்டுவர் முட்டுக்கார நாடக சாலை' என்று எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.[4]

ஆடற் கலைஞர்கள்

சங்க காலத்தே பாடினியர், விறலியர், பாணர், கூத்தர், பொருநர் என்றிருந்த நிலை அரசுகள் தோன்றிய காலத்து மாறியது. கேள்வி வழியும், செய்முறை வழியுமாக வந்த இவர்களது ஆடலும் பாடலும், தொழில்முறை மற்றும் அரசவை, கோயிற்பணிகள் காரண மாக நூற்பயிற்சியுடையதாய், வகைமுறைப்படுத்தப்பட்ட ஆடல் பாடல்களாய் மாறின. தொழில் முறையினராகிய நிலையில் (அதுவே பின்னர் குலமாயிற்று) பயிற்சிக்காலம், பயிற்சி முடித்தோர் பெறும் பட்டம், ஆடலாசிரியர், இசையாசிரியர், இசைக்கருவியாசிரியர்தம் இலக்கணம், ஆடல் வகைகள் ஆகிய அனைத்தும் இத்துறை நூல்களில் இடம் பெற்றன. இக்கூறுகளைச் சிலப்பதிகாரத்தினின்றும் தெளிவாக அறிகிறோம். 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து' ஆடிய மாதவியைச் சிலம்பும்,

நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறை போகிய' (உ. காண்டம் 118)

பொற்றொடி நங்கையரைப் பெருங்கதையும், 'ஆடல் புணர்க்கும் அரங்கியன் மகளிரை' மணிமேகலையும் காட்டுகின்றன வகைப்படுத்தப்பட்ட கலைகளில் வல்லுநராய் இவர்கள் திகழ ஏழாண்டுப் பயிற்சி; ஈராறாண்டில் தலையரங்கு ஏற்றம்; எனவே ஆறாம் ஆண்டிலேயே ஆடல், பாடலுக்குரிய பயிற்சி தொடங்கியதென அறிகிறோம். இவ்வாறு கலை வல்லாராய்த் தேறும் மகளிர்க்கு அளிக்கப்பட்ட பட்டம் 'தலைக்கோலி' என்பது, தலைக்கோல் பற்றி மிகவிரிவாகக் கூறுகிறது சிலம்பும், அதன் உரையும். இவ்வாறு தலைக் கோல் பெற்றோர் ஆடற்கலையில் ஆசானாகும் தகுதியுடையர் என்ற குறிப்பினை,

அரங்கியன் மகளிற்கு ஆடல் வகுக்கும்
தலைக்கோற் பெண்டிருள் தவ்வையொருமகள்
நாடகக் கணிகை (பெருங்கதை : உஞ்சைக்காண்)

என்ற அடிகள் மூலம் உணர்கிறோம். இத்தகைய ஆடல் வல்ல மகளிர் பலர் தமிழக மெங்கும் பல்வேறு கோயில்களிலும் பணிபுரிந்தனர். அவர்களில் இருந்து 400 பேரை, தான் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இராசராசன் பணியமர்த்தினான். இவர்கள் முறைப்படி கலைகளில் வல்லவராய் இருத்தல் வேண்டும் என (யோக்யராய் இருப்பார்) வரையறை செய்யப்பட்டது. இவர்களை இஷபத்தளியிலார், பதியிலார், தளிச்சேரிப் பெண்டுகள், தேவரடியார், கூத்தியர் எனப் பலபெயர்களால் சுட்டுகின்றன கல்வெட்டுகள்.

---

1. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள். எண். 105
2. A. R. E. 1925, No. 152
3. Ibid. 1921. No. 398
4. குடவாசல் திரு. பாலசுப்பிரமணியன்: திருவாரூர்த் திருக்கோயில்

இவர்களுக்கு ஆடல், இசை, மற்றும் இசைக் கருவிகளைப் பயிற்றுவிப்போராகப் பெரும்பாலும் ஆண்களே கல்வெட்டுகளில் சுட்டப்படுகின்றனர். எனவே ஆண்களும் இக் காலத்தே நடனக் கலையிற் சிறந்திருக்கின்றனர். எனினும், அவர்கள் தமிழ் மற்றும் சாக்கைக் கூத்து தவிர பிற ஆடல்களை ஆடியதாகக் குறிப்புகள் இல்லை. இவர்களுக்கு நட்டுவம் செய்வார்,[1] நாடக மாராயர்,[2] நிருத்த மாராயர்,[3] நிருத்தப் பேரரையர்[4] போன்ற பட்டங்கள் அளிக்கப் பெற்றிருந்தன.

இவ்வாறு மிகச்சிறந்த நிலையில் இருந்த ஆடற் பாடற்கலைஞர்களின் நிலை குறைவ தாயிற்று. அரசர்கள் ஆட்சி முடிவுற்றபோது; வடமொழி நூல்கள் இவ்வாடற்கணிகையரை ஏழுவகையாகத் தத்தை, விக்ருதை, பிருத்யை, பக்தைஹ்ருகை, அலங்காரை, ருத்ரகணிகை அல்லது கோபிதை என வகைப்படுத்துகின்றன.[5] இப்பிரிவுப் பெயர்கள் தமிழகத்தில் இல்லையாயினும், இப்பிரிவுகளுக்குப் பாகுபாடாய் அமைந்த காரணங்களான, தன்னைத் தானே கோயிலுக்குக் கொடையாக்குதல், தன்னைக் கோயிலுக்கு விற்றுக் கொள்ளுதல், தன் குடும்பச் சூழல் காரணமாகக் கோயிற்பணியேற்றல், பக்தி காரணமாகக் கோயிற் பணி ஏற்றல், மாற்றார் நாட்டிலிருந்து பிடித்து வரப்பட்டுக் கோயிலுக்குக் கொடையாக்கல்' அரசனாலும், பிறராலும் தேர்ந்தெடுக்கப் பெற்றுக் கோயிலுக்குக் கொடையாக்கல்' கோயிலில் ஊதியம் பெற்றுப் பணிபுரிதல் ஆகிய நிலைகளில் தமிழக ஆடல் மகளிரையும் கல்வெட்டுகள் காட்டுகின்றன. அவர்கள் ஒரு குலத்தினராகித் தம் நிலையில் பொருளாதாரத்தால் தாழும் நிலையும் ஏற்பட்டது. மேலும் ஆடலழகியராதலின், சமுதாயத் தின் மேல்தட்டு மக்களின் வாழ்க்கைத் துணையாகும் நிலையும் அவர்களுக்கு வந்தது. இறைவன் பணியோடு இருந்த இவர்களது வாழ்க்கையில் இத்தகைய சமுதாயப் பாதிப்பும் தன் முத்திரையினை இட்டது. பெரும்பாலும் அணுக்கியராகவும், போகியராகவும் வாழ்க்கை நிலை அமைந்ததாலேயே பரம்பரைச் சொத்து உரிமைகள் கூட இவர்களைப் பொறுத்த மட்டில் தாய்வழியே நிலவுவதாயிற்று.

தமிழிசை, ஆடற்கலையின் சரிவு

பெரிய அரசுகளான பாண்டியர், சோழராட்சிக்குப் பின்னர், பல குறுநில மன்னர்கள் தமிழகத்தினை ஆண்டனர். முகமதியப் படையெடுப்பின்போது, கோயிலின் அன்றாடச் செயல்களே தடம் புரண்டன. அப்போது ஆடல் பாடலும் இணைந்து தடைப்பட்டன.[6] விசயநகர அரசு மீண்டும் நிலைப்பட்டாலும், தொடர்ந்து வந்த காலங்களில் நாயக்கர் களும், மராட்டியர்களும், சேதுபதிகளும், சமீன்தார்களும் கோயிற்பணிகளை ஓரளவு நிறைவேற்றினர் எனலாம். அரசுகள் தரும் ஊதியமன்றி, கோயில்களில் சீவிதக்காணி பெற்றிருந்ததாலும், தொடர்ந்துவந்த பக்தி அடிப்படையிலும், இக்கலைஞர்கள் தம் பணி யினை ஒரு சடங்களவிலேனும் செய்து வந்தனர் என்று கருதத் தோன்றுகிறது. இக்காலத்தே சில மன்னர்கள் தாமே இசையிலும், ஆடலிலும் ஈடுபாடு கொண்டு இக்கலை வளர ஏற்பாடு செய்துள்ளனர். அவர்களுள், சேதுபதி மன்னர்களுள் முத்து விசயரங்க ரகுநாத சேதுபதியும், மராட்டிய மன்னர்களுள் சரபோஜியும் குறிப்பிடத்தக்கவர்கள். முன்னவர், மொகலாய ஆடல் வகைகளையும், பின்னவர் மராட்டிய நடனவகைகளையும் தமிழகத்திற்கு அறிமுகம் செய்தனர். தமிழகத்திற்கேயுரிய பொதுவியல் நடனவகையில் பல பிரபந்தங்களை

1. S.I.I. Vol. II, No. 66; Vol. V, No. 579
2. Ibid., No. 66; Vol. VIII, No. 644
3. Ibid., No. 66
4. Ibid., Vol. V, No. 706
5. Dr. Avvai. Natarajan & Natana. Kasinathan; "Artists of Ancient Tamilnadu", Art Panorama of Tamils-1992
6. Dr. Meenakshi, C.; Social and Administration life under Pallavas

அடிப்படையாகக் கொண்டு இசை, நடன நிகழ்ச்சிகள் நடந்திருக்கவேண்டும். குறவஞ்சி, நொண்டி, காவடி ஆகிய ஆடல்வகைகள் இக்காலத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளன. அண்மைக் காலம் வரை 'திருவாரூர்த் தியாகேசர் குறவஞ்சி' அக்கோயிலில் நடிக்கப் பெற்றதாக அறிகிறோம்.

இவ்வாறு தேய்ந்து கொண்டிருந்த தமிழிசைக்கு, மீண்டும் புத்துயிர் ஊட்டும் வகையில், 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சீர்காழி முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், தில்லைவிடங்கன் மாரிமுத்தாபிள்ளை ஆகிய மூன்று பெரும் இசைவாணர்களும், தமிழில் இசைப்பாடல்களை எழுதினர். இவர்கள் எழுதிய பாடல்களே பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற வடிவில் முதன்முதலாக அமைந்தன. முத்துத் தாண்டவர் இசைப் பாடல்கள் மட்டுமன்றி, நடனத்துக்குரிய பதங்களையும் இயற்றினார். இவர்களுக்குப் பின்னர் தமிழிசையில் பயின்று ஊறிய தியாகேசர், சியாமா சாஸ்திரி, முத்துசாமி தீட்சதர் ஆகியோரும் இசைப் பாடல்களைப் பாடினர். அடிப்படை தமிழிசை ஆயினும், இவர்தம் பாடல்கள் பெரும்பான்மை தெலுங்கிலும், வடமொழியிலும், சிறுபான்மை தமிழிலும் அமைந்தன.

20-ஆம் நூற்றாண்டில்

நெல்லை மாவட்டம், சாம்பவர் வடகரையைச் சேர்ந்த கிறித்துவ மதத்தைச் சார்ந்த 'ஆபிரகாம் பண்டிதர்' தமிழிசை ஆய்விற்கு அருந்தொண்டாற்றினார். 1912 முதல் 1917 வரை ஏழு இசை மாநாடுகளைத் தஞ்சையில் நடத்தியதோடு, 'கருணாமிர்த சாகரம்' என்ற இசையாராய்ச்சி நூலையும் வெளியிட்டார். ஈழத்திற் பிறந்த விபுலாநந்த அடிகள், சிலப்பதிகார இசையின் நுட்பத்தினையும், பொருளினையும் ஆராய்ந்து பழந்தமிழ்ப் பண்களுக்கு மீட்டும் உயிர்கொடுத்து இசைக்கென உரைநடை இலக்கணமாகத் தம் 'யாழ்நூலி'னை யாத்தார். இவரது நூலின்றேல் பெரும் இசைப் பேரறிஞர்கள் கூட, பண்டைய தமிழ்ப் பண்களைப் புரிந்து கொண்டிருத்தல் இயலாது. திரு. பொன்னுசாமிப் பிள்ளையவர்களின் 'பூர்வீக சங்கீத உண்மை' என்ற நூலும், திரு. இராமசந்திர அய்யர் எழுதிய 'கர்நாடக சங்கீத ராகங்கள்' என்ற நூலும், திரு. மு. அருணாசலம் அவர்கள் எழுதிய 'கர்நாடக சங்கீதம் - தமிழிசை ஆதிமும்மூர்த்திகள்' என்ற நூலும், திரு. கு. கோதண்டபாணி பிள்ளை எழுதிய 'தமிழிசை தந்த பெருவளம்' என்ற பெரிய ஆய்வுக் கட்டுரையும், திரு. க. பொன்னையா பிள்ளை எழுதிய இசையியல் நூலும், திரு. எஸ். இராமநாதன், குடந்தை திரு. ப. சுந்தரேசனார், முனைவர் வி. ப. கா. சுந்தரம் ஆகியோரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், நூல்களும் தற்காலத்தே தமிழிசை பற்றி அறிய, அரிய கருவூலங்களாய்த் திகழ்கின்றன. தில்லையில் உள்ள பரதரின் 108 கரணச் சூத்திரங்களைப் பதிப்பித்ததோடு, கரணங்கள் பற்றிய ஆய்வுநூலாக டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடுவும் பிறரும் வெளியிட்ட 'தாண்டவ லக்ஷணம்' என்ற நூலும் குறிப்பிடத்தக்கது. நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் தமிழ்த்தொண்டின் பகுதியாக 'இராஜா அண்ணாமலை மன்றம்' அமைந்து தொடர்ந்து தமிழிசைப் பணியாற்றி வருகிறது.

முடிவுரை

தமிழர் நாகரிகத்தில் ஆடலும் பாடலும் மிகப் பழங்காலத்திலேயே உன்னத நிலையினை அடைந்திருந்தது. தொடக்க காலத்தே அது தமிழ் மக்களின் இயற்கையான வாழ்வினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அடிப்படைக் கூறான மனிதனின் காதலையும், வீரத்தையும் நிலைக்களன்களாகக் கொண்டதாக, நிலமும் பொழுதுமாகிய கூறுகளோடு இணைந்ததாக இலங்கியது. ஆனால் அத்தகைய இயல்பான வாழ்க்கை, பல்வேறு சூழ்நிலைகளினாலும், தாக்கங்களாலும் மாறியது. புதிய சமுதாயமாக மலர்ந்தபோது, இயற்கைத் தன்மை சிறிது குன்றி, செயற்கையாக மனிதனால் உருவாக்கப்பட்ட சமயமே ஆடல், பாடற்கலையின் அடித்தளமாக அமைந்துவிட்டது. எனினும் இசையினைப் (பாடல்) பொறுத்தவரை தமிழர் இட்ட அடிப்படையே (ஏழிசை) இன்றுவரை திகழ்கின்றது. பாடு

பொருளும், ஆடல்வகைகளும் மாறிவிட்டபோதிலும், இசை நிலைத்துவிட்டது. இடைப்பட்ட காலவளர்ச்சி மிகமிக ஆழ்ந்து சித்திப்பதற்கும், ஆராய்வதற்கும் உரியது. எவ்வளவோ வளர்ச்சி; மாற்றம்; பிற கலைமரபுகளின் தாக்கம், இந்த பெரிய வளர்ச்சியில், நம் பட்டறிவில் பிறந்து உயிர்மூச்சாக விளங்கிய எத்தனையோ பண்களை நாம் மறந்துவிட்டோம். அவற்றை இசைத்ததற்கு அமைத்திருந்த இசைக்கருவிகளைப் பயனற்றதாக்கிவிட்டோம். எனினும், அவ்வக்காலங்களில் அவர்கள் விட்டுச் சென்றுள்ள சான்றுகளும், இருக்கின்ற ஆடல் பாடல் வகைகளும் தமிழகத்தின் மிகநீண்ட, பண்பட்ட இசை நாடக வரலாற்றினை எடுத்துக் கூறும் வரலாற்றுச் சான்றுகளாக நின்று நிலவுகின்றன.

அட்டவணை I

தேவாரப் பண்கள்

அப்பர்

1. இந்தளம்
2. காந்தாரம்
3. காந்தார பஞ்சமம்
4. சீகாமரம்
5. குறிஞ்சி
6. கொல்லி
7. சாதாரி
8. பழந்தக்கராகம்
9. பழம் பஞ்சுரம்
10. பியந்தைக் காந்தாரம்

சுந்தரர்

1. இந்தளம்
2. காந்தாரம்
3. காந்தார பஞ்சமம்
4. சீகாமரம்
5. குறிஞ்சி
6. கொல்லி
7. கொல்லிக் கௌவாணம்
8. கௌசிகம்
9. செந்துருத்தி
10. தக்கராகம்
11. தக்கேசி
12. நட்டபாடை
13. நட்டராகம்
14. பஞ்சமம்
15. பழம்பஞ்சுரம்
16. பியந்தைக் காந்தாரம்
17. புறநீர்மை

சம்பந்தர்

1. அந்தாளிக்குறிஞ்சி
2. இந்தளம்
3. காந்தாரம்
4. காந்தாரபஞ்சமம்
5. குறிஞ்சி
6. கொல்லி
7. கொல்லிக் கௌவாணம்
8. கௌசிகம்
9. சாதாரி
10. சீகாமரம்
11. செவ்வழி
12. தக்கராகம்
13. தக்கேசி
14. நட்டபாடை
15. நட்டராகம்
16. பஞ்சமம்
17. பழம்பஞ்சுரம்
18. பழந்தக்கராகம்
19. பியந்தைக்காந்தாரம்
20. புறநீர்மை
21. மேகராகக்குறிஞ்சி
22. வியாழக் குறிஞ்சி
23. யாழ்மூரி

அட்டவணை II

பதிகங்களில் இடம் பெறும் இசைக் கருவிகள்

1. இடக்கை
2 உடுக்கை
3. கத்தரிகை
4. கல்லவடம்
5. கிணை
6. கின்னரம்
7. குடமுழவு
8. குழல்
9. கொக்கரை
10. கொட்டு
11. கொடுகொட்டி
12. சங்கு
13. சல்லரி
14. தக்கை
15. தகுணிச்சம்
16. தண்டு
17, தண்ணுமை
18. தத்தளகம்
19. தமருகம்
20. தாளம்
21. துடி
22. துந்துபி
23. துத்திரி
24. படகம்
25. பறை
26. பரண்டை
27. பேரி
28. மணி
29. முரசு
30. முழவு
31. மொந்தை
32. யாழ்
33. வீணை

அட்டவணை III

இசை, நாடகத் தமிழ் நூல்கள்

1. **அகத்தியம் :** இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூலாகத் திகழ்ந்தது. நச்சினார்க்கினியர் உரைமூலம் இந்நூல் பற்றி அறிகிறோம் சில சூத்திரங்கள் பழைய உரைகளில் கிடைக்கின்றன என்று அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடுகின்றார். *(அ.ந. ப. 7-9)*

2. **இசை நுணுக்கம் :** பாண்டியன் ஒருவனுக்கும், வானரமகள் திலோத்தமை என்பாளுக்கும் பிறந்த சார அல்லது சயந்த குமாரன் இசையறிந்து கொள்ளும் பொருட்டு, அகத்தியரின் மாணாக்கர் சிகண்டி என்பவரால் இந்நூல் இயற்றப்பட்டது; வெண்பாவினால் யாக்கப்பெற்றது; இக்குறிப்புகளை இறையனார் களவியலுரையாலும், அடியார்க்கு நல்லார் உரையாலும் அறிகிறோம். *(அ ந. ப. 7, 10, 104)*

3. **இந்திர காளியம் :** இது யாமளேந்திரர் என்பவரால் இயற்றப்பட்டது. இஃது இசைத்தமிழ் நூலாகும். அடியார்க்கு நல்லார் தான் உரையெழுதப் பயன்படுத்திய நூல்களில் இதுவும் ஒன்று. *(அ.ந.ப. 10)*

4. **குணநூல் :** இது ஒரு நாடகத்தமிழ் நூல். இதிற் சில சூத்திரங்களே எஞ்சியுள்ளன என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். *(அ.ந.ப. 9, 80)*

5 **கூத்த நூல் :** இது ஒரு நாடகத்தமிழ் நூலாதல் வேண்டும். பதினெண்வகைக் கூலங்களுக்கு இந்நூலில் இருந்து மேற்கோள் காட்டுகிறார் அடியார்க்கு நல்லார். *(அ.ந.ப. 29, 154)*

6. **சயந்தம்.** இஃதும் நாடகத்தமிழ் நூலேயாகும். இதில் சில சூத்திரங்கள் மட்டுமே தன் காலத்து உளதாகவும்; நூலின் முதல், நடு, இறுதி காணாமையின் இந்நூல் அழிந்து விட்டது போலும் என்று அடியார்க்கு நல்லார் உரையிற் குறிப்பிடுகின்றார். *(அ.ந 9, 80)*

7. **செயிற்றியம் :** செயிற்றியனார் என்னும் ஆசிரியரால், சூத்திர வடிவில் அமைக்கப் பெற்ற நாடகத் தமிழ் நூல் என்றும்; சில சூத்திரங்களே வழக்கில் உளதாகவும், நூலின் முதல், நடு, இறுதி காணாமையில் இறந்தது போலும் என்று அடியார்க்கு நல்லார் உரையிற் குறிப்பிடுகிறார். *(அ.ந. 9)*

8. **தாளவகை ஒத்து :** தாள இலக்கத்தினைக் கூறும் நூல் என்பதை அடியார்க்கு நல்லார் குறிப்பிலிருந்து அறிகிறோம். 'இசைத்தமிழ் பதினாறு படலம்' என்ற நூலொன்று இருந்ததாகவும், அவை ஒத்து என்ற பிரிவுகளைக் கொண்டிருந்ததாகவும், கரணஒத்து என்ற பகுதி அடியார்க்கு நல்லார் உரையுள் இந்நூலகத்ததாக அறியப்படுதலின் அடியார்க்கு நல்லார் கூறும் 'தாளவகை ஒத்து'ம் இந்நூலின் பகுதி ஆகலாம் என்றும் இலக்கிய வரலாற்றுப் பேரறிஞர் திரு. மு. அருணாசலம் அவர்கள் தம் நூலில் இருந்து அறிகிறோம். (இலக்கிய வரலாறு 12-ஆம் நூற்றாண்டு)

9. **பஞ்சபாரதீயம் :** இசைத்தமிழ் நூலாகும் இது. தேவவிருடி நாரதர் செய்த இசைத்தமிழ் நூல் என்றும், தம் காலத்திலேயே இந்நூல் இறந்து போயிற்றென்றும் அடியார்க்கு நல்லார் கூறுகிறார். *(அ.ந.ப. 9, 231)*

10. பஞ்சமரபு : இசைத்தமிழ் நூல்; அறிவனார் இயற்றியது; அடியார்க்கு நல்லார் உரையெழுதப் பயன்படுத்திய நூல்களில் ஒன்று. தற்போது இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

11. பரத சேனாபதீயம் : நாடகத்தமிழ் நூல்; ஆதிவாயிலார் என்பாரால் இயற்றப் பட்டது. வெண்பாவில் இயன்றது; சிலப்பதிகார உரையெழுத அடியார்க்கு நல்லார் பயன் படுத்திய நூல்களுள் ஒன்று. (அ.ந.ப. 10)

12. பரதம் : நாடகத்தமிழ் நூல் என்றும், தன் காலத்திலேயே இறந்துபட்ட நூலென்றும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். (அ.ந.ப. 9)

13. மதிவாணனார் நாடகத்தமிழ் நூல் : சூத்திரப்பாவானும், வெண்பாவானும் இயன்றது. மதிவாணனார் என்றும் பாண்டிய மன்னராற் செய்யப்பட்டது. இவர் 'புகழ்க் கூத்து' வகையினை இந்நூலில் எழுதியுள்ளார் எனத் தெரிகிறது. பெருந்தேவபாணி, சிறுதேவபாணி என்னும், இறைவனைத் துதிப்பதாக வரும் பாடற்பகுதிகட்கு அடியார்க்கு நல்லார் இந்நூலை எடுத்தாள்கிறார். (ப. 10, 154)

14. முறுவல் : இது நாடகத்தமிழ் நூல்; தன் காலத்திலேயே இறந்துபட்டதாக அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். (அ.ந.ப. 9)

15. முதுகுருகு அல்லது பெருங்குருகு : முதற்சங்க நூலாக இதனை இறையனார் களவியலுரை உரைக்கிறது. தம் காலத்திற்கு முன்பே இறந்த நூலாக அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடுகிறார். இது இசைத்தமிழ் நூலென அவரே குறிப்பிடுகிறார். (அ.ந.ப. 9)

16. முதுநாரை அல்லது பெருநாரை : இதனையும் முதற்சங்க நூலாக இறையனார் களவியலுரை கூற, அடியார்க்கு நல்லார் இசைத்தமிழ் நூலது என்றும், தம் காலத்திற்கு முன்பே இறந்ததென்றும் கூறுகிறார். (அ.ந.ப. 9)

கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை ஆகிய மேலும் நான்கு நூல்களின் பெயர்களை இறையனார் களவியலுரை குறிப்பிடுகிறது. [இ.க. உரை. கழக வெளியீடு. ப. 6]

அட்டவணை IV

கல்வெட்டுகளில் காணப்படும் இசைக்கருவிகள்

1.	உடுக்கை	உடுக்கை வாசிக்கும் பாவை நிலையாய் உடுக்கை வாசிப்பான்	SII. Vol. II, No. 65; 254
2.	கரடிகை	கரடிகையொன்றும்	பார்த்திவசேகரபுரச் செப்பேடு
3.	காளம்	காளம் ஒன்று	SII. Vol. II, No. 91 ARE. 1920 No. 617; 1912 No. 144
4.	காகளம்	தாளம் காகளம் ஏற்றி	பார்த்திவசேகரபுரச் செப்பேடு
5.	காசை	—	ARE. 1941-42 No 277
6.	குடமுழா	—	திருத்துறைப்பூண்டிக் குடமுழா
7.	குழல்	குழலால் சுத்தப்பாடுவார்	பொன்விளைந்த களத்தூர்
8.	கொட்டி மத்தளம்	கொட்டி மத்தளம் ஒன்றுக்குப் பங்கு	SII. Vol. II, No. 66
9.	சகடை	சகடை கொட்டிகள்	SII. Vol. II, No. 66
10.	சங்கு	சங்கூதுவார்	கோனேரிராசபுரம் உமா மகேஸ்வரர் கோயில் கல்வெட்டு
		முத்திரைச்சங்கு	SII. Vol. II, No. 66
		நக்கனாதித்தன் கொடுத்த சங்கிரண்டு	ஓடவனேஸ்வரர் கோயில் கல்வெட்டு

11.	செண்டை	நாலு செண்டையும்	திருப்பழனம் கல்வெட்டு
12.	செகண்டிகை	செகண்டிகை - உவச்சன் கொட்டுவதாக செயகண்டிகை கொட்டுவானுக்கு	SII. Vol XII, No. 114 SII. Vol. V, No. 660 ARE 1941-42 No. 277
13.	சேமக்கலம்	பள்ளற்குத் தவிலும் முரோசும் சேமக்கலமும்	IPS. No. 956 TDI. Vol. II, No. 135
14.	டமருகம்	க்ஷேத்ரபாலர் பிடித்தருளின டமருகமும்	SII. Vol. II, No. 1
15.	தட்டழி	அடுத்தன தட்டழி தட்டழி கொட்டிகளுக்கு பங்கு	பார்த்திவசேகரபுரச் செப்பேடு SII. Vol. II, No. 99
16.	தவில்	பள்ளற்குத் தவிலும் முரோசும் சேமக்கலமும்	IPS. No. 956 TDI. Vol. II, No. 135
17.	தாளம்	தாளம் ஒன்று	பார்த்திவசேகரபுரச் செப்பேடு
18.	திருச்சின்னம்	—	ARE. 1941-42 No. 277
19.	திமிலை	திமிலை ஒன்று	IPS. Nos. 85, 277
20.	நகரா	திருக்கடவூர் மயானத்தில் உள்ள முரசின் மீது எழுதப்பட்டுள்ளது.	தொல்லியல் செய்திமடல்: 4
21.	தாரணி படகம்	திருஉவச்சர்கட்குத் தாரணி படகத்துக்கு கால் நிலம்	SII. Vol. XIX, No. 69

22.	பணை	பணை வாசிப்பானுக்கு நிலம் ஒன்றே நான்கு மா	
23.	பறை	பறையறைய	SII. Vol. II, No. 67
24.	பஞ்சமுறை	—	TAS. Vol. VII, p. 22
25.	பாரிநாயனம்	திருவாரூரில் இன்றுமுள்ள கருவி	—
26.	மத்தளம்	மத்தளம் கொட்டுகிற பாவை மத்தளம் எட்டும்	SII. Vol. XVII, No. 684 ARE. 1941-42 No. 277 SII. Vol. V, No. 52
27.	மல்லாரி	வெற்றி முரசும், ஹீன வீரபத்திர மல்லாரி முதலிய மேளங்களும்	பத்மநாபபுரம் ஓலை
28.	மணி	—	ARE. 1922 No. 262
29.	முரோசு வெற்றிமுரசு	பள்ளற்குத் தவிலும் முரோசும்	IPS. No. 956 பத்மநாபபுரம் ஓலை
30.	மேளம்	மல்லாரி முதலிய மேளங்கள்	,,
31.	வங்கியம்	வங்கியம் வாசிக்க	SII. Vol. II, No. 66
32.	வீரமத்தளம்	—	ARE. 1941-42 No. 277
33.	வீணை	வீணைக்காரன் வீணை வாசிப்பான்	SII. Vol. II, No. 66 Vol. VII, No. 154 ARE. 1910 No. 47

விழவு ம் சடங்கு 5

விழா என்பது ஓர் ஆண்டின் சமூக வாழ்வின் உச்சகட்ட வெளிப்பாடு, அல்லது சில ஆண்டுகளுக்கு முன் நடத்திய விழாவிற்குப் பின் ஏற்பட்டுள்ள சமூக, சமய வாழ்வுக்கான உச்சகட்ட வெளிப்பாடு, அல்லது எப்போதும் இல்லாத அளவிற்குச் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய நெருக்கடியைச் சமாளிக்க உருவான கூட்டு நடவடிக்கையின் வெளிப்பாடே விழாவாகும். மனிதனின் வாழ்க்கைச் சுழற்சியில் பிறப்பு, இறப்பு போன்ற மிகப் பெரும் தனி மனித நெருக்கடியைச் சமாளிக்கச் செய்யும் செயலே சடங்காகும். சமூகத்தில் நெருக்கடி வரும்போதெல்லாம் கூட்டு வாழ்க்கையைப் புதுப்பிப்பதே விழா எனக்கூறப்பட்டது. பண்பாடு என்னும் முழுமையில் விழா என்பது பல தனிக்கூறுகளை ஒருங்கிணைத்துச் செயல்படும் ஒரு தொகுதி. சமூகத்தில் நிலைபெற்றுள்ள படிநிலையில் உறைந்துபோன அடுக்கு உடைக்கப்பட்டு படிநிலையற்ற தொகுதியாக விழாத் தளத்தில் கூடுகின்றனர். வேறுபட்டு நிற்கும் சமூகக் கூறுகள் வேறுபாடு குறைந்து செயல்படும் தளமாக விழா நிகழ்கின்றது. உள் நிலையில் வேறுபட்ட சமூக இறுக்கம், புற நிலையில் ஒன்றுபட்டுப் புத்தாற்றல் பெறுவது என்ற மாபெரும் இயங்காற்றலை விழா மூலம் சமூகம் பெற்றுக்கொள்கின்றது.[1]

மக்களின் கடும் முயற்சியால் இயற்கை வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் திருவிழா செய்யப்பெற்றது. வீர விளையாட்டுகளும், நாடகங்களும் அவ்வாறே செய்யப் பெற்றன. சடங்குகள் அவற்றின் அடிப்படைச் செயல்பாட்டிற்கும் நோக்கத்திற்கும் அப்பால் சென்று வளர்ச்சியடையும் சூழ்நிலையைத் திருவிழா உருவாக்கியது.[2] தொல் பழங்காலம் முதல் மனித வாழ்க்கையில் சடங்கு நிலை பெற்றுள்ளது. இவற்றைப் டோலி, தொத்து என இரு வகையாகப் பிரிப்பர். சடங்கு - குலத்தளவில் நிலைத்த ஒன்று. இன்றும் தென்னிந்தியா முழுவதுமுள்ள சாதிகள், குல தெய்வ வழிபாட்டில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ளமை இக்கருத்தினை உறுதிப்படுத்துகின்றது. சடங்கு - குழு அளவில் நின்றது. அதே சடங்கு விழாவாக மாறும் போது நாட்டின் நிகழ்ச்சியாக எழுச்சி பெற்றது. தேசியத் தன்மைப் பெற்றது.

சிந்துவெளி நகரங்களில் திருவிழா

சிந்துவெளியில் கிடைத்துள்ள முத்திரைகள் சிலவற்றில் திருவிழா ஊர்வலக் காட்சிகள் சித்திரிக்கப்பெற்றுள்ளன. சிந்துவெளி நாகரிகம் யாருக்குரியது என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்று வரை தொடர்கின்றன; திருவிழா ஊர்வலங்கள் திராவிட மரபிற்குரியவை. ஆகையால் சிந்துவெளி முத்திரைகளில் காணப்பெறும் திருவிழா ஊர்வலக் காட்சிகள் திராவிட மரபுகளைச் சுட்டுகின்றது என்று கொள்ளலாம். அங்கு கிடைத்த முத்திரைச் சிலவற்றில் நான்கு பேர் உயரமான கம்பங்களைத் தூக்கிச் செல்லும் காட்சி சித்திரிக்கப் பெற்றுள்ளது. சில கம்பங்களின் உச்சியில் விலங்கு உருவங்கள் உள்ளன. ஒரு கம்பத்தின் உச்சியில் 'புனிதத் தீச்சட்டி' உள்ளது. இரண்டாவது கம்பத்தின் உச்சியில் ஒற்றைக் கொம்பு விலங்கு நிற்கின்றது. மூன்றாவதில் கொடி உள்ளது. நான்காவது கம்பம்

---

1. பக்தவத்சல பாரதி சீ., - நாட்டார் திருவிழாவில் அமைப்பியல், நாவாவின் ஆராய்ச்சிக் காலாண்டிதழ், எண்கள் 44-45, பக். 175-76
2. Briffault, Encyclopaedia of Social Sciences

சிதைந்துள்ளது.[1] இந்த முத்திரையைப் பற்றி ஜான் மார்ஷல் அவர்கள், ''இங்குக் காட்டப் பெற்றுள்ள விலங்கு, கடவுளாக வழிபடப் பெற்றிருக்க வேண்டும்... அல்லது கடவுளின் அவதாரமாக வழிபடப் பெற்றிருக்கவேண்டும்', என்று கருத்துக் கூறியுள்ளார்.[2] அதனால் சிந்துவெளி நகரங்களில் திருவிழாக்களும், ஊர்வலங்களும் நடந்தன என்று கொள்ளலாம். ஒரு சில முத்திரைகளில் தீச்சட்டி மட்டும் காட்டப்பெற்றுள்ளது. அவை, தமிழகத்தில் தற்காலத்திலும் நிகழும் தீச்சட்டி ஊர்வலத்தை நினைவுபடுத்துகின்றதல்லவா?

இங்கு ஒரு செய்தியை விதந்து கூறவேண்டும். அங்கு கிடைக்கும் முத்திரைகளில் 92 விழுக்காடு ஒற்றைக் கொம்பு காண்டாமிருக உருவத்தினைக் கொண்டுள்ளன. அதனால் அவ்விலங்கினைக் குலச் சின்னமாகக் (Totem) கொண்டு விளங்கிய குலம் அங்கு ஆட்சி நடத்தியது என்றும், அதனால் குலச்சின்ன வழிபாடு காலப்போக்கில் அரசு விழாவாக உருவாயிற்று என்றும் கருதுகின்றனர்.[3] குலச்சின்னத்தை அரசுச் சின்னமாகவும், கடவுளாகவும் கருதும்போக்கு எகிப்திய நாகரிகத்தில் நிலை பெற்றிருந்தது.[4] மத்திய ஆசிய, சீன நாகரிகத்திலும் இம்முறை வழக்கிலிருந்திருக்கிறது.[5] உலகம் முழுவதும் காணப்பெறும் இம்மரபு, சிந்துவெளி நகரங்களிலும் நிலைபெற்றிருந்தது எனலாம். இத்தகைய குலச்சின்ன விழாவின் எச்சமாக வினாயகச்சதுர்த்தி விழா கொண்டாடப் பெறுகின்றது என்றும் கருதப் படுகிறது.[6]

தொல்பழங்காலம்

சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் மக்கள் சிறுசிறு குடிகளாக வாழ்ந்தபோது விழாக்கள் நடைபெற்றிருக்க வேண்டும். அதுபற்றி தொல் பழங்கால ஓவியங்களில் சில காட்சிகள் வரையப் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் கூறப்பெறும் குரவைக்கூத்து, வரிக்கூத்து, நடனங்கள், தொல் பழங்கால ஓவியத்தில் வரையப்பெற்று காணப்படுகின்றன.[7] இவை பற்றிய கருத்துக்களை வெறும் யூகமாகக் கொள்ள முடியுமே தவிர, உறுதியான கருத்துக்களாகக் கொள்ள முடியாது. ஆனால் தொல் பழங்கால ஓவியங்கள் சடங்குப் பின்னணி கொண்டவை என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை[8]

சங்ககாலம்

சங்க காலத்தில் பல விழாக்கள் நடைபெற்றன. அவற்றில் சில தேசிய விழாக்கள்; பல உள்ளூர் விழாக்கள். பொதுவாக விழவு என்றும், விழா என்றும் சங்க இலக்கியங் களில் கூறப்பெறும் போது அவற்றை சிறு குடிவிழாக்களாகவே கொள்ள முடியும், விழா என்று பொதுவாகக் கூறும்போது அது அந்நாளைய தமிழகத்தில் நடைபெற்ற சிறப்பு

---

1. Shereen Ratnagar, Enquiries into the political organisation of Harapan Society, p. 148
2. John Marshall, Mohenjodaro and the Indus-civilizations, p. 384
3. Shereen Ratnagar, op. cit. pp. 152-53
4. Debiprasad Chattobadhyaya, Lokayata; A study in Ancient Indian Materialism, pp. 144-45
5. Shereen Ratnagar, op. cit. p. 151
6. Debiprasad Chattobadhyaya, of cit. p 145
7. வெள்ளருக்கம்பாளையம் (கோவை மாவட்டம்) தொல் பழங்கால ஓவியத்தில் பத்துக்கும் மேற்பட்ட நடனக் குழுக்கள் வரையப் பெற்றுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் (ஆண் - பெண்) ஏழு பேர் கை கோர்த்து நிற்கின்றனர். இது குரவைக்கூத்தில் நிற்கும் ஏழு பேருடன் ஒப்பிடத்தக்கதாயுள்ளது.
8. Sankaliya H.D, - Prehistoric art in the India, pp. 93-94

விழாவைக் குறிக்கவில்லை. விழித்திருந்து பார்த்ததால் விழா என்று பெயர்பெற்றது என்பர். அதுவும் பெரும்பாலும் நிறைமதி நாளில் அது நடந்தது. 'மூதூர் விழாவின் றாயினும் துஞ்சாதாகும்' (அகம். 122) என்று கூறுவதால் விழா நேரத்தில் மக்கள் உறங்காமலிருந்தனர் என்பது புலப்படும். இதுவும் மேலே கூறிய கருத்துக்கு அரண் செய்கிறது. மக்கள் விழைந்து கொண்டாடியதாலும் 'விழைவு' என்று வழங்கி பின்னர் 'விழவு' என்றாகியிருக்கலாம்.

சிறப்பு விழாக்கள்

'பூந்தொடைவிழா', 'நீர்விழா', 'உள்ளிவிழா', 'பங்குனிமுயக்கம்', 'நெடுவேள்விழா'' 'திருமால்விழா,' 'காமவேள்விழா', 'இந்திரவிழா', 'ஓணவிழா', 'சுடர்விழா', 'வேனில்விழா,' (பல்பூவிழா) எனப் பல விழாக்கள் சங்க இலக்கியங்களில் கூறப்பெறுகின்றன. முந்நீர் விழா என்றொரு விழா சங்க இலக்கியத்தில் கூறப்பெறுகின்றது.

பூந்தொடை விழா : மறவ சிறுவர்கள் விற் பயிற்சியின் இறுதியில் நடைபெறுவது பூந்தொடை விழா.[1] இவ்விழாவில் மறவச் சிறுவர்கள் தாங்கள் கற்ற கல்வியின் பலனைக் காட்டுவர். இவ்விழா சில நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இது ஒருவகையில் மறவச் சிறுவர்கள் வில்லேர் உழவர்களாக வாழ்க்கையைத் தொடங்கும் நிலையைக் குறிக்கும் விழாவாகும்.

உள்ளி விழா : கருவூரில் நடைபெற்று வந்ததாகச் சங்க இலக்கியமும், பிற்காலத்தில் எழுதப்பெற்ற இறையனார் களவியல் உரையும் குறிப்பிட்டுள்ளன.[2] 'உள்ளி விழா'வில் கொங்கர்கள் மணியை இடையில் கட்டிக்கொண்டு ஆடுவர் என்ற செய்தி மட்டும் கூறப் பெறுகிறது.[3] கருவூரில் உள்ள ஒரு கல்வெட்டு உள்ளி விழாவைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.[4] உள்ளி விழா எதற்காக நடந்தது என்பது பற்றிய செய்தி ஏதும் கிடைக்கவில்லை.

நீர் விழா : 'நீர்விழா' என்றும், 'முன்னீர்விழா' என்றும் கூறப்பெறும். இவ்விழா கடல் தெய்வத்திற்குச் செய்யப்பெற்ற விழா என்று கருதப்பெறுகின்றது. பதிற்றுப்பத்தில் (48) கூறப்பெறும் நீர்விழா, காஞ்சி ஆற்றில் வந்த புதுப்புனல் பற்றிய விழாவாகும். நீர்விழா என்பது ஆற்றில் புதுப்புனல் வருவதையொட்டி நடைபெறுவது. ஆனால் முந்நீர் விழா கடற்கரையில் நடைபெறுவது.

அகநானூற்றில் கடல் தெய்வத்திற்குப் பரதவப் பெண்டிர் படையல் செய்வது கூறப் பெறுகிறது.[5] பட்டினப்பாலையில், சினைச்சுறாவின் கோடுநட்டு வழிபாடு செய்வர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் கடல் தெய்வ வழிபாட்டினைச் சுட்டுகிறது.

காமன் விழா : 'காமன் விழா' வேனில் காலத்தில் நடைபெற்றது. அதனால் அதற்கு 'வேனில் விழா' என்றும் பெயர். மக்கள் இவ்விழாவின்போது நீர்க்குழலின் மூலம் நீரை ஒருவர்மீது ஒருவர் பீச்சி விளையாடுவர். கலித்தொகை 35, 92 பாட்டுகளில் காமன் விழா பற்றிப் பேசப்பெறுகின்றது. அந்நூலின் 36-ஆம் பாட்டு வேனில் விழாவைப் பற்றி பேசு கின்றது. அந்த விழாவும் காமன் விழா என்றே கருதப் பெறுகின்றது. காமன் விழாவின் போது புதுப்புது பாடல்கள் இயற்றப் பெற்றுப் பாடப்பெறும் என்று கலித்தொகை 35-ஆம் பாட்டு பேசும். தமிழகத்தில் தற்காலத்தில் கொண்டாடப்பெறும் காமன் பண்டிகை பண்டை நாளைய காமன் விழாவின் தொடர்ச்சியே ஆகும். அப்பண்டிகையில் சிவன் காமனை எரித்த நிகழ்ச்சி விவரிக்கப் பெறுகின்றது.

---

1. அகநானூறு, 187
2. இறையனார் களவியல், 16–ஆம் நூற்பா உரை
3. அகநானூறு, 368
4. கருவூர் பசுபதீசுவரர் முழுக்காட்டு மலர், 1978, கரூர், ஆனால் உள்ளி விழா பற்றிய கல்வெட்டு ஏதும் அங்கு கிடைக்கவில்லை.
5. அகநானூறு, 201

காவிய காலத்தில் விழா

இறையனார் களவியல் உரையாசிரியர், உறையூர் பங்குனி உத்திரம், கருர் உள்ளிவிழா, மதுரை ஆவணி அவிட்டம் ஆகியவற்றை மட்டும் தமிழ்நாட்டுத் தேசிய விழாக்களாகக் குறிப்பிடுகிறார்.[1] ஆனால் புகாரில் நடைபெற்ற இந்திரவிழா பற்றி ஏதும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று தலைநகரங்களான மூவேந்தர் நகரங்களில் நடைபெற்ற விழாக்களை மட்டும் களவியல் உரையாசிரியர் கூறிச் சென்றார் போலும். காவிய காலத்தில் புதுப்புது விழாக்கள் தோன்றி சிறப்புற்ற போதிலும் அவை களவியற் காரரால் குறிக்கப்பெறாமல் விட்டதற்குக் காரணம் இருந்திருக்க வேண்டும்.

காவியங்களில் இந்திர விழா, பத்தினிவிழா போன்ற விழாக்கள் கூறப்பெறுகின்றன. ஆனால் சங்க இலக்கியங்களில் கூறப்பெறும் பல விழாக்கள் காவியங்களில் கூறப்பெற வில்லை என்றுதான் கூறவேண்டும். அந்நூலில் இந்திர விழாவின்போது தலைவன், பல பெண்களுடன் தேரில் செல்வான் என்று மட்டும் குறிக்கப்பெற்றுள்ளது. ஆனால் காவியங் களில் நகர மாந்தர்கள், நாட்டிய மகளிர், அரசர், பட்டிமண்டபம் பேசும் அறிஞர்கள் ஆகியோர் மட்டும் கலந்து கொண்டதாகக் கூறப்பெற்றுள்ளன.

இந்திர விழா : இந்திரவிழா பற்றி சங்க இலக்கியங்களில் ஒரேயொரு குறிப்பு காணப் பெறுகின்றன. ஐங்குறுநூற்றில் மருதத்திணை 62ஆம் பாடலில் இவ்விழா பற்றிய குறிப்பு உண்டு. அதற்குப்பின் காவியங்களில் (இரட்டைக் காப்பியம் மட்டும்) இந்திரவிழா பேசப் பெறுகின்றன. வடநாட்டில் இந்திரவிழா நடந்தது பற்றி இரண்டு கல்வெட்டுக்களும், புராணங்களும் பேசியுள்ளன. கி. பி. 404-ஆம் ஆண்டைச் சேர்ந்த மாண்டசோர் கல்வெட்டு இந்திர விழா பற்றிக் குறிப்பிடுகின்றது.[2] இக்கல்வெட்டில் மழைக்காலத் தொடக்கத்தில் இந்திர விழா கொண்டாடப்பெற்றது என்று கூறப்பெறுகின்றது. இவ்விழா பண்டு தொட்டே நடைபெறுகின்றது என்பதையும் அக்கல்வெட்டு சுட்டியுள்ளது. வீஷ்ணு தர்மோத்திர புராணமும், பிருஹத் சம்ஹிதையும் இந்திர விழா பற்றி வேறுபட்ட கதைகளைச் சுட்டி யுள்ளன.[3] அசுரர்களுடன் நடத்திய போர்களில் இந்திரன் பலமுறை தோற்றபின் திருமாலிடம் வெற்றி பெற வழி கேட்டான். திருமாலும் தன்னுடைய கொடியை அளித்து வெற்றிக்கு வழி செய்தார். அந்தக் கொடியினால் இந்திரன் வெற்றி பெற்றதால் அந்தக் கொடியினை, இந்திரவிழாச் செய்ய எந்த அரசன் உயர்த்துகிறானோ அந்த அரசன் எதிரி களை வெல்வான் என்று அந்தக் கதைகள் கூறுகின்றன. அதனால் இந்திரவிழா அரசர்கள் தங்கள் வெற்றி கருதி செய்தனர் என்று கொள்ளலாம். காவியங்களில் பேசப்பெறும் இந்திரவிழா வளமைக் கருதிச் செய்ய பெற்றதாக அறிகிறோம். இரட்டைக் காப்பியங்களில் அது தெளிவாகப் பேசப்பெற்றுள்ளது.

சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதை முழுமையும் இந்திர விழா பற்றியே ஆகும். அவ்விழா சித்திரா பௌர்ணமி அன்று தொடங்கும். நகரத்தைக் காக்கும் சதுக்க பூதத்தின் முன் உள்ள பலிபீடத்தில் வேகவைத்த கொள், எள் உருண்டைகளும், கறி, அரிசி, பூக்கள், பொங்கல் ஆகியவற்றை நறுமணப் புகையுடன் பூதத்திற்குப் படைப்பர். வழிபாட்டோடு மறக்குடி மகளிரின் துணங்கை, குரவை ஆகிய நடனங்களும் நடைபெறும். நடனத்தின் போது அவர்கள் ‘பசியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க’ என்று வாழ்த்திப் பாடுவர்.[4]

---

1. இறையனார் களவியல், 16-ஆம் நூற்பா உரை
2. Suvira Jaiswal, The origin and development of Vaisnavism, p. 91
3. Ibid. pp. 91-92
4. சிலப்பதிகாரம், 5: 72-73

மருவூர் மறவர்கள், பட்டினத்துப் படைமாக்கள் ஆகியோர் சதுக்க பூதத்தின் முன் சென்று அரசன் வலிமையும், வெற்றியும் பெறுக என வாழ்த்தித் தன் தலையை அறுத்துப் பீடிகையின் மேல் வைத்து வணங்கி நிற்கும் கவந்தங்களின் காட்சியும்,[1] மன்னர்க்குற்ற குற்றத்தை ஒழிப்பாயாக என்றும் கூறி நவகண்டம் தரும் காட்சியும், பண்டைய நாளைய மறக்குடிப் பண்பினை வெளிப்படுத்தியுள்ளன.

இலஞ்சிமன்றம், நெடுங்கல்மன்றம், பாவைமன்றம், வெள்ளிடைமன்றம், பிறவாயாக்கைப் பெரியோன்கோயில், வச்சிரகோட்டம், முருகன் கோயில், பலதேவன் கோயில், திருமால் கோயில் எனப் பல கோயில்களில் விழா செய்யப் பெற்றது.[2] அவ்விழா அந்நாளைய நகரங்களில் வாழ்ந்த பல்வேறு குழுக்களி(குடிகளி)ன் பலதிறப்பட்ட வழிபாட்டுக் கூறுகளைக் கொண்டு விளங்கியது.

விழா நடந்த முறை

வச்சிரக் கோட்டத்தில் உள்ள வச்சிராயுதம் யானை மீது வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பெற்று, இந்திரன் ஊர்தியான ஐராவதம் கோயில்முன்வைக்கப்பெற்று வழிபாடு செய்வர். விழா, கற்பகத் தரு எழுதிய கொடியை உயர்த்துவதுடன் தொடங்கப் பெறும். 'ஐம்பெருங்குழுவும்', 'எண் பேராயமும்' கூடி காவிரிக் கரையை அடைந்து 1000 இளவரசர்கள் குடங்களில் நீர்க் கொண்டு வந்து வச்சிரத்திற்கு நீராட்டு செய்வர். சிவன், முருகன், பிரம்மன், திருமால் ஆகிய தெய்வங்களுக்கும் பூசை செய்வர். சமண, பௌத்தப் பள்ளிகளிலும் வழிபாடு நடைபெறும்.[3] இது மட்டுமின்றி அரசன் புகழும் வெற்றியும் பெறுக என்று வாழ்த்துவர்.

இந்திரன் விழா இருவேறு உலகத்து இயல்பினை இணைக்கும் பெருவிழாவாகக் கொள்ளப் பெறுகின்றது. பழங்குடி வாழ்க்கையைச் சுட்டும் பூத வணக்கம், நகர நாகரிக வாழ்க்கையைச் சுட்டும் பெருந்தெய்வ வணக்கம், ஆகிய இரு வழிபாடுகளும் புகாரில் வாழ்ந்த மக்களின் வேறுபட்ட நிலையினைச் சுட்டுகின்றன.

பத்தினி விழா

பத்தினி வழிபாடு சங்க காலத்திலிருந்து வழக்கில் உள்ள வழிபாடு. காவிய காலத்தில் பெருமை பெற்றது. கண்ணகிக்குக் கல்லெடுத்துப் பெருமைப்படுத்திய செய்தியைக் காவிய மாக்கித் தந்துள்ளார் இளங்கோ அடிகள். 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்' என்று அவர் போற்றியுள்ளார்.

பாமரர் செய்த பத்தினி வழிபாடு

தமிழ்நாட்டிலும், கருநாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலும் பத்தினி வழிபாடு பாமர மக்களிடம் நிலை பெற்றிருந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் முன்னூர், மணிமங்கலம் போன்ற இடங்களிலும்,[4] ஆந்திரத்தில் கடப்பை, குண்டூர் மாவட்டங்களிலும், பலகைச் சிற்பங்கள் கிடைத்துள்ளன.[5] அவற்றில் சிவலிங்கம், நரசிம்மன், பிரம்மன், இலக்குமி, கொற்றவை, ஏழுகன்னியர், முருகன், விநாயகர், சேட்டை ஆகிய உருவங்கள் வடிக்கப் பெற்றுள்ளன. சில சிற்பங்களில் இவ்வுருவங்களுடன் வளையுடைய இரண்டு கைகளும் வடிக்கப் பெற்றுள்ளன. இக்கைகள் பத்தினித் தெய்வத்தை

1. சிலப்பதிகாரம் 5: 84-86
2. மேலது, வரி 110-34
3. மேலது, வரி 179-80
4. Damilica, Vol.I, p. 2-3
5. Sarma, I.K., - The Development of early saiva art and architecture. p. 148

குறிக்கும்.[1] பத்தினித் தெய்வம் அறுசமயக் கடவுளர்களுடன் வைத்துப் போற்றப் பெற்றதையேச் சுட்டுகின்றது. அதனால் பத்தினித் தெய்வம் தமிழ் மக்களிடையில் பெற்றிருந்த செல்வாக்கினை அறிய முடியும். கருநாடக மாநிலத்தில் பத்தினிக்காக நடப்பெற்ற கல்லினை, 'மாசதிக்கல்' என்றும், 'சதிக்கல்' என்றும் வழங்கினர்.[2] இன்றும் அக்கற்கள் வழிபாட்டில் உள்ளன.

பத்தினிவிழா, புத்த சமயத்தினர் போற்றிய பத்தினி வழிபாட்டிலிருந்து உருவாயிற்று என்பர். இவ்வழிபாடு தென்னிந்தியா முழுவதும் மட்டுமின்றி, இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளிலும் பரவியிருந்தது.[3] இலங்கையில் இன்றும் பத்தினி விழா சிறப்புறக் கொண்டாடப் பெறுகின்றது.[4] கண்ணகி, பத்தினி வழிபாட்டின் சின்னமாகக் கருதப் பெறுகின்றாள். சிலப்பதிகாரம் கூறும் பத்தினிக் கோயில் விழாவில், இலங்கை மன்னன் கயவாகு, கொங்கர், ஆரியமன்னர், மாளுவவேந்தர், தமிழகத்து வேந்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.[5] அதனால் பத்தினி விழா, அந்நாளைய அகில இந்திய விழாவாகக் கொண்டாடப் பெற்றது என்று சிலப்பதிகாரம் கூறும். கொடுங்கல்லூர் பகவதி விழா பத்தினி விழாவின் வேறுபட்ட வடிவமாகக் கருதப்பெறுகின்றது. ஆனால் அவ்விழாவினை வேறு நோக்கில் பார்க்க வேண்டும். பகவதி அம்மன் விழா சிறு தெய்வ வழிபாட்டின் எச்சமாகும். பத்தினி விழாவை நகர நாகரிகத்தின் கூறாகக் கொள்ளலாம்.

பக்தி இயக்கம் முன் இடைக் காலத்தில் சிறப்புற்று விளங்கியது. பக்தி இயக்கம் தென்னிந்தியா, இந்தியாவிற்கு அளித்த கொடை என்றும் கூறுவர்.[6] அத்தகைய சிறப்பு வாய்ந்த பக்தி இயக்கம் தந்த மூவர் முதலிகளில் ஞானசம்பந்தர், தாம் பாடிய மைலாப்பூர் பதிகத்தில் திருவிழாக்கள் பற்றிக் கூறியுள்ளார். அவர் பத்து விழாக்களை மட்டும் சுட்டியுள்ளார். அட்டுஇடல், ஓணம், கார்த்திகை, ஆதிரை, தைப்பூசம், கடலாட்டு, பங்குனி உத்திரம், அட்டமி, பொற்றாம்பு, பெருஞ்சாந்தி ஆகிய பத்து விழாக்கள் மட்டும் குறிக்கப் பெறுகின்றன.[7] ஞானசம்பந்தர் பாடல்களில் பயின்று வரும் விழாக்களில், கார்த்திகை விளக்கீடு, மார்கழி ஆதிரைநாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும் தமிழ்நாடெங்கும் கொண்டாடப் பெறுவதால் மயிலையிலும் சிறப்புற்றிருந்தன. இன்றும் சிறப்பாக நடைபெறுகின்றன. பிற விழாக்கள் பற்றி பல்வேறு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. பண்டை நாளில் ஆண்டில் பத்து மாதங்கள் சிறப்புடைய மாதங்களாகக் கருதி, விழா நடத்தப் பெற்றது போலும். அல்லது ஓராண்டில் பத்து மாதங்களே கணக்கிடப் பெற்றது போலும். எது எப்படியிருந்த போதிலும் பத்துத் திருவிழாக்களில் ஐந்து திருவிழாக்கள் மயிலாப்பூருக்கே உரிய திருவிழாக்கள்.

புரட்டாதித் திங்கள் விழாவை ஏன் முன் வைத்துப் பாடினார் என்பதும் புலப்படவில்லை. கார்த்திகைத் திருவிழா சங்க காலத்தில் சுடர்விழா என்று கூறப்பெற்றது.[8] சங்க காலம் முதல் இன்று வரை நிலைத்துள்ள இவ்விழாவை ஞானசம்பந்தரும் 'விளக்கீடு' என்று பெயர் சூட்டியுள்ளார்.[9] அதனால் ஞானசம்பந்தர் காலத்திலும் விளக்கீடு பண்டைய

1. Kosambi D.D., - Myth and Reality, p. 87
2. கேசவராஜ் கோ., தென்னிந்திய வீரக் கற்கள் - ஓர் ஆய்வு, (பி. எச். டி. ஆய்வேடு, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், 1985) ப. 360
3. Gananath Obeyesekere, The cult of the Goddess pattini, pp. 3-4
4. Ibid
5. சிலப்பதிகாரம், 30: 158-162
6. Romilla Thapar, History of India, Vol.I p.172
7. திருஞானசம்பந்தர், தேவாரம், மைலாப்பூர் பதிகம்
8. நற்றிணை, 202
9. திருஞானசம்பந்தர் முன்னரே கூறியபடி

நிலையிலேயே செய்யப்பெற்று வந்தது எனலாம். 'தொல் கார்த்திகை நாள்[1] என்று கூறுவதும் இந்த விழாவின் பழமையைச் சுட்டுகின்றது. தையலார் கொண்டாடும் விளக்கீடு என்று கூறுவது இவ்விழாவில் பெண்களே பங்கு கொண்டனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இன்றும் தமிழகமெங்கும் கார்த்திகைத் திருநாள் கொண்டாடப் பெறுகின்றது.

பொறி பறக்கும் மாவொளி சுற்றப் பெறுகின்றது.[2] இதனை கொங்கு நாட்டில் 'சூந்து' என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.[3] சூந்து சுற்றும் போது காமம் கண்ணிய கொச்சைப் பாடல்களும் பாடப்பெற்றன.[4] இப்போது அவை அருகியே காணப் பெறுகின்றன. பண்டை நாளில் கார்த்திகை விழா ஒரு தேசிய விழாவாகச் சமயஞ் சாராத நிலையில் கொண்டாடப்பெற்றது. பின்னாளில் எல்லாச் சமயங்களும் கார்த்திகைத் திருவிழாவினைக் கொண்டாடி வருகின்றன. இந்நாளில் திருவண்ணாமலை கார்த்திகைத் திருவிழாவிற்குரிய இடமாகக் கருதப் பெறுகின்றது. அங்கு நடைபெறும் கார்த்திகைத் தீபம், விழாவின் எச்சமாகக் கொள்ளலாம். தீ விழா என்று தனி விழா தமிழகத்தில் கொண்டாடினாலும், தீ விழாவின் எச்சங்கள் கார்த்திகைத் தீப விழாவில் நிலை பெற்றுள்ளன. தீ விழா புதிய கற்கால மக்கள் கொண்டாடிய மூல முதல் விழாவாகும். அதுவும் கால்நடைச் சமூகத்திலிருந்து முகிழ்த்தது.[5]

ஓணவிழா

ஐப்பசி ஓணவிழா சங்க காலத்தில் கொண்டாடப் பட்டதற்கு மதுரைக் காஞ்சி சான்று பகர்கின்றது. ஓணம் மாயோனுடைய பிறந்தநாள் என்பது புராண வரலாறு. அவ்வரலாற்றினை மதுரைக் காஞ்சி செப்புகின்றது.

கணங்கொள் அவுணர்க் கடந்து பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாள்
கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறா துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கன்னிப் பெறாம்புகன் மறவர் *(590-96)*

மேலே கூறப்பெற்ற பாட்டினடிகள் திருமாலின் பிறந்தநாள் என்று பொதுவாகக் கூறாமல் அவுணரைச செற்ற திருமாலின் பிறந்தநாள் என்று கூறுவது எடுத்துக்காட்டத் தக்கது. அந்நாளில் மறவர்கள் சேரிதொறும், நாடகப்போர் நடைபெறும் என்றும், அப்போர்களில் மறவர்கள் பங்கேற்று வடுப்பட்ட முகத்தராய்க் காட்சி அளிக்கின்றனர் என்றும் மதுரைக் காஞ்சி கூறுகின்றது. ஓணநாளில், திருமால் அவுணர் போர் நாடகமாக நடிக்கப் பெற்றதோ என்று கருத வேண்டியுள்ளது. மைலாப்பூரில் ஐப்பசி ஓணநாளில் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் கொண்ட விழாவாக நடைபெற்றது என்கிறது தல வரலாறு.[6] இவ்விழாவில் தபசிகளுக்கு அமுது செய்தல் சிறப்புச் செயல்.[7]

---

1. திருஞானசம்பந்தர், முன்பே காட்டிய பரிகம்.
2. தொண்டை மண்டலத்தில் நேரில் கண்ட செய்தி
3. கல்வெட்டு, காலாண்டிதழ், எண். 14, ப. 3
4. மேலது
5. Allchin F.R., - Neolithic cattle keepers of South India, pp. 175-76
6. சுப்ரமணிய முதலியார் C.K., - பூம்பாவை, ப.63
7 மேலது

திருவாதிரை

மார்கழி மாதத்து மதி நிறைந்த நன்னாளில் ஆதிரைத் திருநாள் கொண்டாட்டம் தொடங்கப்பெற்றது என்பது இலக்கியங்களாலும், கல்வெட்டுக்களாலும் உறுதி பெறுகின்றது.[1] ஆதிரை, சிவன் பிறந்த நாள் என்று கருதப் பெறுகின்றது. அதனால் ஆதிரையில் சிவனுக்கு நாள் மங்கலம் கொண்டாடப் பெற்றது என்று கொள்ளலாம். தென்னகத்துச் சிவன் கோயில்களில் இக்காலத்தில் விழா எடுக்கப்பெறுகின்றது. அவற்றில் சிதம்பரத்தில் நடைபெறும் ஆதிரைத் திருநாள் உலகப்புகழ் பெற்றது. உலகமெங்கும் வாழும் தமிழர்கள் திருவாதிரையில் நடைபெறும் விழாவில் பங்கு கொள்கின்றனர்.

தைப்பூசம்

தைப்பூசம், தைத்திங்களில் முழு நிலாவன்று நடைபெறும் திருவிழாவாகும். இவ் விழாவும் தமிழகம் எங்கும் கொண்டாடப் பெறுகின்றது. முருகன் கோயிலிலும், சிவன் கோயிலிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. இவ்விழாவிற்கென அரசர்களும், மக்களும் பல்வேறு கொடைகளை அளித்துப் போற்றியுள்ளனர். தைப் பூசத்தையும் வளமை விழாவாகக் கொள்ள வாய்ப்புண்டு.[2]

கடலாட்டு

மாசி மாதத்தில் கடலாட்டு விழா நடைபெற்றது என்பதை ஞானசம்பந்தர் பாடல் மூலம் அறிகிறோம்.

> மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
> கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்

என்று பாடுவதிலிருந்து ஞானசம்பந்தர் காலத்தில் மாசிக் கடலாட்டு நிகழ்ந்ததை அறிகிறோம். இன்றும் தமிழகத்தில் கடற்கரைப் பகுதிகளில் கடலாட்டுவிழா நடைபெறுவதைக் காணலாம். ஆனால் சிலப்பதிகாரத்தில் இந்திர விழா நடைபெறும் சித்திரை மாதத்தில் கடலாட்டு நிகழ்வதாகக் கூறியுள்ளார். இந்த வேறுபாட்டிற்குரிய காரணம் தெரியவில்லை. ஞானசம்பந்தர் சுருங்கக் கூறிய கடலாட்டு விழா சிலப்பதிகாரத்தில் விரிவாக கூறப்பெறுகின்றது.

மாமல்லபுரத்தில், ஆட்டைத் திருவிழாவாக மாசி மாதத்தில் கொண்டாடப் பெறும். பெருமாள் கோயில் விழாவினிறுதியில் இறைவன் கடற்கரைக்கு எடுத்துச் செல்ல பெற்றுக் கடலில் நீராடும் நிகழ்ச்சி இன்றும் நடைபெறுகின்றது. இது பண்டைய கடலாட்டின் தொடர்ச்சியோ என்று கருத வேண்டியுள்ளது.

பங்குனி விழா

பங்குனி உத்திரம் பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரமும் பௌர்ணமி நிலவும் சேர்ந்திருக்கும் நன்னாளில் கொண்டாடப் பெறுவது.

சங்க இலக்கியத்தில் அகநானூற்றில் இவ்விழாவைப் பற்றி குறிக்கப் பெறுகின்றது அந்நூலில் 'பங்குனி முயக்கம்' என்று கூறப்பெறுகின்றது.[3] நற்றிணையில் 'பங்குனி விழா' என்று கூறப்பெறுகின்றது.[4] பங்குனி முயக்கம் என்பது பண்டை நாளில் நடைபெற்ற

---

1. திருப்பாவை
2. கருவூர் வேலாயுதம்பாளையம் தைப்பூசத் திருவிழாவின்போது மண்ணில் ஆண்-பெண் சேர்ந்திருப்பது போன்ற உருவம் செய்யப்பெற்று வழிபாடு செய்யப் பெறுகின்றது.
3. அகநானூறு, 137
4. நற்றிணை, 234

வளமைச் சடங்கினையே சுட்டி நிற்கின்றது. திருமணச் சடங்கு வளம் பெற வேண்டிச் செய்யப் பெறுவது. பண்டை நாளைய மனிதன், ஆண் பெண் சேரும் நிலையில் வளனும் வசியும் பிறக்கும் என்று கருதினான். இதுபோன்ற திருமணச் சடங்குகள் உலகம் முழுவதும் வழக்கில் உள்ளன. இது மனித வாழ்க்கையின் தொடக்க காலத்தில் உருவான நம்பிக்கை. அது தொடர்ந்து இன்று வரை நிலைப்பெற்று வருகின்றது. ஞானசம்பந்தர்,

பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்

என்று பாடுகின்றார். இங்கு பலி என்பதற்கு வளம் என்றும் பொருள். அதாவது பங்குனி யுத்திரம் வளம் வேண்டி செய்யப் பெற்றதோ என்று கருத வேண்டியுள்ளது.[1]

அட்டமி விழா

அட்டமி நாள் விழா இன்று வழக்கில் இல்லை. ஆனால் ஞானசம்பந்தர் பாடலில் அட்டமி நாள் பற்றிய குறிப்பு காணப்பெறுகின்றது.

பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்

என்று பாடுகிறார். வைகாசி அட்டமி நாளில் செய்யப்பெறுவது. இது சைவ விரதங்கள் எட்டனுள் ஒன்று. ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு பக்ஷத்தில் இரண்டு அட்டமி, அமாவாசை, பூரண ஆதிரை ஆகிய ஐந்துமே சிவாலயங்களில் பஞ்ச பருவ விழாக்கள் என்று வழங்கப் பெற்றிருக்கின்றன' எது எப்படியிருந்த போதிலும் வைகாசி மாதம் சுக்கில பக்ஷம் அஷ்டமி நாளையே பதினென் கணங்கள்தம் அட்டமி நாள் என்று சம்பந்தர் கூறியுள்ளார்.[2]

பொற்றாம்பு

ஞானசம்பந்தர் காலத்தில் பொற்றாம்பு (பொன்தாம்பு - பொன் ஊசல்) மார்கழி மாதத்தில் பல சிவாலயங்களில் நடைபெறுவதுண்டு. மூன்று முதல் பத்து நாட்கள் வரை ஊஞ்சல் திருவிழா நடப்பதுண்டு. பெருமாளையும், பிராட்டியையும் ஊசலில் வைத்துப் பொன்னூசல், திருவெம்பாவை பாடுவதுடன் நடைபெறுகின்றது.[3] இன்று தமிழகத்தில் இவ்விழா சில கோயில்களில் மட்டும் நடைபெறுகின்றது.

தீ விழா

இவ்விழா நெருப்புத் திருவிழா என்றும், குண்ட திருவிழா என்றும் அழைக்கப் பெறுகிறது. தொண்டை மண்டலத்தில் பாரதம் படிக்கும் விழாவுடன் இணைக்கப்பெற்று துரியோதனன் மாண்ட நாளில் தீ விழா கொண்டாடப் பெறுகின்றது. தமிழகத்தின் சில பகுதிகளில் ஆடித்திங்களில் மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று மாரியம்மன் கோயில் முன்பாகத் தீ வளர்த்து 'தீ மிதிவிழா' என்று கொண்டாடுகின்றனர். கொங்கு நாட்டில் கிராம தேவதை திருவிழாவுடன் இணைக்கப் பெற்று 'குண்டம்' என்றபெயரில் கொண்டாடப் பெறுகின்றது. இவ்விழா நீண்ட நெடிய வரலாறு கொண்டது. கால்நடை மேய்ப்பவர் களுடன் தொடர்புடையது. புதிய கற்காலத்தில் தெக்கணத்தில் வாழ்ந்த முல்லை மக்கள் கால்நடைகளின் சாணத்தைக் குவித்து வைப்பர். குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒரு முறை அவ்வாறு குவிக்கப் பெற்ற சாணக் குவியலைத் தீயிட்டு கொளுத்திவிட்டு அத்தீயின்

1. நடன. காசிநாதன் - ''திங்கள் தோறும் திருவிழா'' தொல்லியல் நோக்கில், 1993 பக். 102-110
2. சுப்பிரமணிய முதலியார் C.K., - முன்பே காட்டிய பக்கம்
3. மேலது, ப. 69

மேல் மக்களும், மாக்களும் நடந்து செல்வர். இன்றும் பண்டையத் தொல் பழங்காலத் 'தீ விழா' பழைய வடிவில் மலையக மக்களிடம் நிலை பெற்றுள்ளது.[1] நீலமலை கால்நடை மேய்ப்பர்கள் தீவிழாவின் போது கால்நடையையும் தியின் மேல் நடக்க செய்வர்.[2] சங்க இலக்கியத்தில் கூறப்பெறும் 'சுடர்விழா' என்பது இதுதானோ என்று கருத வேண்டியுள்ளது. தீ விழாவும் தேசவரம்பற்று உலகம் முழுவதும் சமய வேறுபாடின்றிக் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் வாழ்ந்த தொல் பழங்காலக் கால்நடை மேய்ப்பவர்கள் திக்கு நோய் போக்கும் சக்தி உண்டு என்றும், கெட்ட ஆவிகளை விரட்டும் சக்தி உண்டு என்றும் நம்பினார்கள்.[3] அதனால் தீ விழாவினை உளப்பூர்வமாக நடத்தினர்: இன்றும் நடத்துகின்றனர்.

சங்கரன் கோயில் ஆடித்தபசு

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோயிலில் ஆடி மாதத்தில் நடைபெறும் 'ஆடித்தபசு' என்னும் விழா, ஆண் பெண் சேர்ந்திருப்பதையேச் சுட்டுகின்றது. அவ்விழா பற்றிய புராணக் கதைகள் எவ்வாறாக அமைந்திருப்பினும் சிவனை அடைய பார்வதி செய்யும் தபசு என்று கூறப்பெறுகின்றது. தபசின் முடிவில் சிவன் சங்கர நாராயணனாகப் பார்வதி முன் தோன்றுகிறார். இங்கு சங்கரநாராயணன் வடிவம் சைவ, வைணவ ஒற்றுமையை உருவாக்கக் கூறப்பெற்ற வடிவமாகக் கொள்ளலாம்.[4] மேலும் ஆண் தெய்வமும் பெண் தெய்வமும் இணைந்து நிற்கும் காட்சியைச் சுட்டி நிற்கின்றது.

கள்ளழகர் விழா

சித்திரை முழுமதி (பௌணர்மி) நாளன்று நடைபெறும், இவ்விழாவிலும் சிவன் பார்வதி திருமணம் மைய நிகழ்ச்சியாகச் செய்யப்பெறுகின்றது. நாயக்கர் காலத்தில் இவ்விழா உருவாகிச் சிறப்புப் பெற்றிருக்க வேண்டும். திருமால் பார்வதியை சிவனுக்கு மணம் முடிக்கும் நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. இதுவும் வைணவம், சைவம், சாக்தம் ஆகிய சமயங்கள் இணைவதைச் சுட்டி நிற்கின்றது. நாயக்கர் காலத்தில் சமய முரண்பாடுகளும், பூசல்களும் மிகுந்து வந்தன. நாயக்க மன்னர்கள் பல்வேறு சமயங்களுக்கிடையில் சமய நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் உருவாக்கக் கள்ளழகர் விழாவினைப் பெருமைபடுத்தினர். அது மட்டுமின்றி பல்வேறு சமூகத்தினர் ஒற்றுமையுடன் இணைந்து வாழவும் இவ்விழா கொண்டாடப்பெற்றது. மதுரையைச் சுற்றியுள்ள பல்வேறு ஊர்களில் இறைவர் திருமேனிகள் நாட்கணக்கில் (மாதக்கணக்கில்) உலா வருவது இக்கருத்தினை உறுதிப்படுத்துகின்றது.

வைகுண்ட ஏகாதசி

மார்கழித் திங்களில் வளர்பிறைப் பகுதியில் அத்திங்கள் 11-ஆம் நாள் வைகுண்ட ஏகாதசி விழா நடைபெறும். ஏகாதசி நாளன்று திருமாலின் அம்சமாகத் தோன்றிய ஏகாதசி அம்மன், உலகத்தை அலைக்கழித்த அரக்கனைக் கொன்ற நாளாகக் கொண்டாடப் பெறுகின்றது. இவ்விழாவில் முத்தங்கி சேவை நாயக்கர் காலந்தொடங்கி இன்றுவரை நடைபெறுகின்றது. தமிழகம் முழுவதும் உள்ள திருமால் கோயில்களில் வைகுண்ட ஏகாதசி விழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. இவ்விழாவினிறுதியில் திறக்கப்பெறும் சொர்க்கவாசல் சிறப்பு நிகழ்ச்சியாகக் கொள்ளப் பெறுகின்றது.

---

1. Frazer, J.G., - The Golden Bough, pp. 805-06
2. நீலகிரி மாவட்டத்தில் வாழும் படுகர்கள் செய்யும் தீ விழாவில் மாட்டினை முதலில் தீயின் மேல் ஓட்டுவர். பிறகு மக்கள் தீ மீது நடந்து செல்வர்.
3. Allchin, F.R. - op. cit. p. 140
4. Kosambi, D. D. - op. cit. pp. 30-3I

அரவான் விழா

இவ்விழா வட தமிழ்நாட்டிலும், மேற்குப் புறத் தமிழகத்திலும் நடைபெறுகின்றது. இவ்விழாவில் அரவான் களப்பலியாக அளிக்கப்படுகிறான். இது மகாபாரதத்தில் நடந்த தாகக் கூறப்பெறுகின்றது.

பொங்கல் விழா

இன்று தமிழர்களின் திருநாளாகப் பொங்கல் விழா கொண்டாடப் பெறுகின்றது. இவ்விழா தைந்நீராடல், எருது வணக்கம், வேளான் விழா ஆகியவற்றை உள்ளடக்கி நிற்கின்றது. சூரிய வழிபாடும் இவ்விழாவில் கலந்துள்ளது. இவ்விழாவில் கலந்துள்ள பல்வேறு கூறுகள் இவ்விழாவின் தேசியத் தன்மையை நிலை நிறுத்தியுள்ளது. பொங்கல் விழா பற்றி பண்டைய இலக்கியங்களிலோ, கல்வெட்டுகளிலோ குறிப்பேதுமில்லை. மிகவும் பிற்காலத்தில்தான் இவ்விழா பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் இவ்விழாவில் கலந்துள்ள கூறுகள் பண்டைய விழாவின் எச்சங்கள்.

சடங்கு-வழிபாடு

இங்குச் சடங்கு என்பது வழிபாடு என்ற சொல்லாலும் சுட்டப்பெறுகின்றது. தமிழ் மரபில் சடங்கு, வழிபாடு ஆகிய சொற்கள் சில நேரங்களில் ஒரே பொருளில் பயன்படுத்தப் பெறுகின்றன. அதனால் இப்பகுதியில் சடங்கு, வழிபாடு ஆகிய சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. இரண்டும் ஒரு பொருள் கருதிய சொற்களாக இங்கு கொள்ளப் பெறுகின்றது.

சந்தியில் சடங்கு

சந்திச் சடங்கு இன்றுவரை உலகம் முழுவதும் நிலைபெற்றுள்ளது. பண்டைய நாகரிகம் செழித்த கிரேக்கம், எகிப்து, ஈரான், ஈராக் முதலிய நாடுகளில் இந்தச் சடங்கு இன்றுவரை நிலைபெற்றுள்ளது.[1] வடமேற்குத் தக்கணத்தில் சந்தி வழிபாடு சிறப்புற்றது பற்றி டி. டி. கோசம்பி அவர்கள் விரிவாக ஆய்வு செய்துள்ளார்.[2] தமிழ் இலக்கியத்தில் 'கல்லேசு கவலை'[3] என்றும் 'கவலை காக்கும்'[4] என்றும் பயின்றுவரும் குறிப்புகள் சந்தி வழிபாட்டினைக் குறிக்கும். குறுந்தொகை 263-ஆம் பாட்டில்,

> மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇ
> செல்லாற்றுக் கவலைப் பல்லியம் கறங்கத்
> தோற்றும் அல்லது நோய்க்குமருந்து ஆகா
> வேற்றுப்பெருந் தெய்வம், பலவுடன் வாழ்த்தி

என்று கூறப்படுவதில் 'செல்லாற்றுக்கவலை' என்பது பெருவழிச் சந்திப்பினைக் குறித்தது. அங்கு தெய்வத்திற்கு மறிக்குட்டியை அரிந்து அதன் இரத்தத்தை தினைமாவுடன் பிசைந்து பலி கொடுத்தனர் என்பதை மேலே உள்ள பாட்டால் அறிய முடியும். திருமுருகாற்றுப்படையிலும் 'சதுக்கமுஞ் சந்தியும்' என்று கூறப்பெறுவதும் நாற் சந்தியையும் ஐந் சந்தியையும் குறிக்கும் எனலாம். தொல் பழங்காலந் தொட்டு இன்றுவரை சந்தி வழிபாடு நடைபெறுகின்றது. சேலம் பகுதி சந்தியப்பன் என்ற தெய்வ வழிபாடு, கொங்குநாட்டு வழிபாடு,[5]

---

1. Hastings J., Encyclopaedia of Religion and Ethics, see cross road
2. Kosambi DD., - op. cit. p. 95
3. மலைபடு கடாம், வரி - 389
4. அகநானூறு, 343
5. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆறகளூர், தலைவாசல், அம்மம்பாளையம், தத்தாய்யூர், பெத்தநாயக்கன்பாளையம் போன்ற ஊர்களில் கள ஆய்வு செய்த போது கேட்டறிந்த செய்தி.

தொண்டை நாட்டுச் சிறுவர்களுக்குத் தெருச் சந்திப்பில் செய்யும் சடங்குகள்[1] போன்றவை முன்னாளைய சந்தி வழிபாட்டின் எச்சங்கள் எனலாம்.

வெறியாட்டு

அகத்தினைச் சார்ந்த வேலன் வெறியாட்டு, சங்க இலக்கியத்திலும், தொல்காப்பியத்திலும் விரிவாகப் பேசப்படுவது. வெளிறிய உடலும், மசக்கையும் கொண்ட தலைவியின் நோய் முருகனால் வந்தது என்று கருதி முருகனுக்கு வழிபாடு செய்ய வேலன் வெறியாட்டினை நிகழ்த்தச் செய்வாள் தாய்.[2] வெறியாட்டு நிகழுமிடமாக மன்று, சந்தி (கவலை), ஆற்றங்கரை, வீட்டு முற்றம் ஆகியவை சுட்டப் பெறுகின்றன.[3] இவற்றில் மன்று, சந்தி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தொல் பழங்காலம் முதல் மன்று, சந்தி ஆகியவை சடங்கு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகக் கொள்ளப் பெற்றன. இதனால் சில வெறியாட்டுகள் பெருவழிச் சந்திப்பிலும், நகரத் தெரு சந்திப்பிலும் நிகழ்ந்தன என்று கொள்ளமுடியும். வேலன்' முருகனைக் கருதிச் செய்யும் சடங்குகளில் முருகன் மெய்நின்ற வேலன், சில செய்திகளைக் கூறுவான். அது முருகன் வாக்கு என்றே அந்நாளைய மக்கள் கருதினர். அவன் தலைவிக்கு வந்த நோய் முருகனால் வந்தது என்று கூறி முருகனுக்கு மறிக்குட்டியறுத்துத் தினை மாவுடன் அதன் குருதியைப் பிசைந்து பலியாகத் தருவதுடன் வெறியாட்டு நிறைவுபெறும்.[4] வேலன் வெறியாடிக் கூறும் வார்த்தைகளைப் 'பெரிய கூறல்' என்று அந்நாளில் கருதினர்.[5] அகஞ்சார்ந்த வெறியாட்டு மட்டுமின்றிப் புறஞ்சார்ந்த வெறியாட்டும் அந்நாளில் நிகழ்த்தப் பெற்றது அதற்குக் காந்தள் என்று பெயர்.

காந்தள்

தொல்காப்பியம் புறத்திணையில் நூற்பா ஐந்தில் காந்தள் என்னும் வெறியாட்டு பற்றிக் கூறப்பட்டுள்ளது. அது வென்றி வேண்டி நிகழ்த்தப் பெறுவது. காதலில் தோல்வியுற்ற தலைவன் மடலேறும்போது காந்தள் பூவினைச் சூட்டிக் கொள்வான்.[6] வென்றி வேண்டிச் செய்யும் வெறியாட்டின்போது வேலன் காந்தள் மலரைச் சூடிக் கொள்வான். அதனால் 'வெறி அறிசிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டயர்ந்த காந்தளும்' என்று தொல்காப்பியர் கூறிச் சென்றார். இந்நூற்பாவிற்கு உரையெழுதிய இளம்பூரணர் 'வெறியாடுதலை அறியும் சிறப்பினை உடைய வெவ்விய வாயினையுடைய வேலன் வெறியாடிய காந்தளும்' என்று பொருள் கூறியுள்ளார்.[7] மேலும் அவர் கூறுகிறார்; 'அன்றியும் காந்தள் என்பது மடலேறுதலான் அத்துணை ஆற்றாளாகிய பெண்பால் மாட்டு நிகழும் வெறி காந்தள் எனவும் பெயராம். இதனாலே காம வேட்கையினால் ஆற்றாளாகிய பெண்பாற் பக்கமாகிய வெறியும், அந்நிலத்துள்ளார் வென்றி வேண்டி ஆடும் வெறியும் கொள்ளப் படும். அதனால் சங்க காலத்தில் வேலன் ஆடிய 'காந்தள்' என்பது வெற்றி கருதிச் செய்யப்பெற்ற புறம் சார்ந்த வெறியாட்டு என்று கருதலாம். புறத்திணைச் சார்ந்த இந்தக் காந்தள் பற்றிச் சங்க இலக்கியத்தில் சான்று ஏதுமில்லை. அதுகொண்டு இவ்வெறியாட்டு சங்க காலத்தில் நடைபெறவில்லை என்று கூறிவிடமுடியாது. வெறியாட்டு மனித வாழ்க்கையில் நெருக்கடியான காலகட்டங்களில் நிகழ்த்தப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.[8]

---

1. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டம், திருமலை என்ற ஊரில் கண்ட செய்தி.
2. அகநானூறு, 98
3. மதுரைக் காஞ்சி, வரி 610-15, புறநானூறு 366, நற்றிணை 138.
4. அகநானூறு, 138
5. குறுந்தொகை 248
6. தொல்காப்பியம் புறத்திணையியல் நூற்பா - 5 இளம்பூரணர் உரை
7. மேலது
8. Sivathamby K., Op. cit. p. 189

நடுகல் வழிபாடு

தமிழகத்தில் நடுகல் வழிபாடு தொல் பழங்காலம் முதல் வழக்கிலிருக்கும் வழிபாடு. இதுவும் சடங்கின் பாற்பட்டது. தொல் பழங்கால ஓவியங்களில் மாடுபிடிச் சண்டையையும், அச்சண்டையில் மாண்ட வீரர்களையும் வரைந்து வைத்திருப்பதைப் பார்க்க முடியும். இது நடுகல் வழிபாட்டின் தொடக்கம் என்று கொள்ளலாம்.[1] பெருங்கற்காலத்தில் குத்துக்கல்லை நட்டு வழிபட்டுள்ளனர். தொல்பழங்காலத்தில் போரில் மாண்டவர்களுடைய ஆவியை ஒரு மரத்திலோ, சந்தியிலோ, மலை முழைஞ்சுகளிலோ நிலைநிறுத்தி வைக்க முடியும் என்று நம்பினர். இன்றும் பழங்குடிகளிடையில் இந்த நம்பிக்கை நிலைபெற்றுள்ளது.[2] அவ்வாறு ஆவியை நிறுத்த முடியும் என்ற நம்பிக்கையில் கல்லில் நிறுத்தத்தலைப்பட்டனர். அதன் விளைவே குத்துக்கல் வழிபாடு, நடுகல் வழிபாடு ஆகியவை.

நடுகல் வழிபாடு பற்றி சங்க இலக்கியத்தில் பல்லாற்றாலும் பயின்று வருகிறது. புறம், மூதின்முல்லைத்துறைப் பாடல் ஒன்றில் 'நெல்லுகுத்துப் பரவும் தெய்வமாக' நடுகல் கூறப்பெறுகிறது.[3] மறிக்குட்டியை அறுத்து நடுகல்லுக்குப் பலியிட்டுப் படைப்பர். கள்ளையும் வைத்துப் படைப்பர்.[4] இன்று வரை நடுகல் வழிபாடு பழமை மாறாமல் நிலை பெற்றுள்ளதை தருமபுரி மாவட்டத்தில் காணலாம். அங்கு ஆடி மாதத்திலும், தை மாதத்திலும், மாசி மாதத்திலும், நடுகல்லுக்கு வழிபாடு செய்யப் பெறுகின்றது.[5]

தற்காலத்தில் நடைபெறும் நடுகல் வழிபாட்டில் ஆட்டுப் பலியும், கள் படைத்தலும் உண்டு.[6] மழை வேண்டி நடுகல் வழிபாடு செய்யப்படுகிறது.[7] நடுகல் வழிபாட்டில் வளம் வேண்டுவதே குறிக்கோள். நீத்தார்க்குச் செய்யப் பெறும் வழிபாடுகள் அனைத்தும் குலத்தின் வளம் வேண்டியும், நாட்டின் நலம் வேண்டியும் செய்யப் பெற்றன. தருமபுரி மாவட்டத்தின் மந்து கூடுதல் என்ற வழிபாடும் நடுகல் வழிபாட்டின் எச்சமாகவே கொள்ள வாய்ப்பு உண்டு.[8]

நவகண்டம்

தாங்கள் கருதியது நிறைவேறியதற்காக மறவர்கள் தங்கள் தலைகளை அறுத்துப் பலிபீடத்தின் மேல் வைத்த காட்சியை சிலம்பும், மேகலையும் செப்புகின்றன.[9] அதற்கான சிற்பச் சான்றுகளும், கல்வெட்டுச் சான்றுகளும் தென்னிந்தியா முழுவதும் கிடைத்துள்ளன.

பிடாரிக்கு நவகண்டங் குடுத்து
குன்றத்தலை அறுத்துப் பிடலிகைமேல்
வைத்தானுக்கு திருவான்மூர் ஊரார் வைத்த
பரிசாவது ....[10]

---

1. பூங்குன்றன் ஆர்., - செங்கம் நடுகற்களில் தொறுப்பூசல், தொல் குடிகள், அரசியல் (எம்ஃபில் ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம், 1989) அவ்வாய்வேட்டில் நடுகல் தெய்வம் என்ற இயலைப் பார்க்க.
2. மேலது
3. புறநானூறு 335
4. அகநானூறு 35
5. தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், மொண்டுகுழி, பாய்யம்பாடி ஆகிய ஊர்களில் நடைபெற்ற சடங்கினை நேரில் பார்த்தறிந்த செய்தி.
6. செங்கம் பகுதியில் நேரில் கண்டறிந்த செய்தி.
7. சந்திரமூர்த்தி. மா., – நடுகல் உள்ளும் புறமும், நடுகல் கருத்தரங்கு, (பதி. இரா. நாகசாமி)
8. சாந்தலிங்கம் சொ., - மன்று — ஒரு வரலாற்றுப் பார்வை, தொல்லியல் கருத்தரங்கு, பக். 32 தொகுதி-2, ப. 149
9. சிலப்பதிகாரம், 5 : 76–80
10. நாகசாமி இரா., – மற்றும் மூவர், கல்வெட்டியல், பக். 154-55

கம்பவர்மன் காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டுபோல் பல கல்வெட்டுகள் உள்ளன. இருப்பினும் தலையறுத்துத் தரும் வழக்கம் தொல்பழங்காலத்திலிருந்து வழக்கத்திலிருந்திருக்க வேண்டும். செங்கம் அருகில் தொல்பழங்காலக் குத்துக்கல் (தலையற்றது) ஒன்று கண்டறியப் பெற்றுள்ளது.[1] அது 2500 ஆண்டுகட்கு முற்பட்டது. அதனால் இவ்வழக்கம் தொல் பழங்காலம் முதல் வழக்கிலிருந்தது எனலாம். தன்னையே பலியிடுவதால் தன்குலம் தழைக்கும் என்று ஆதிமனிதன் நம்பினான். அதனால் இவ்வழக்கம் ஏற்பட்டது. இவ்வழக்கம் கால மாறுபாட்டினால் அரசன் நன்மைக்காகச் செய்யும் சடங்காக உருவாயிற்று. அந்த மாற்றத்தினைத்தான் சிலம்பும், மேகலையும் காட்டுகின்றன.

மரவழிபாடு

தமிழ்நாட்டில் காவல் மரம் என்றும், கடிமரம் என்றும், மனைமரம் என்றும் கூறப் பெற்றுத் தெய்வமாக வழிபடப் பெற்றது.[2] அவ்வாறு வழிபாடு செய்யப் பெற்ற மரங்கள் பின்னாளில் 'தல விருட்சம்' என்ற பெயரில் போற்றப் பெற்றது. தமிழகத்தின் பல பகுதிகளில் பல்வேறு மரங்கள் தல விருட்சங்களாக நிலைபெற்றன. மரத்தடியில் சிவலிங்கம் வைத்து வழிபடப் பெற்றதையே சிவன் கோயில்களாக மாற்றப் பெற்றது என்று கருதப் பெறுகின்றது.[3] ஆலமரம், மாமரம், புன்னை, பனை, வேங்கை, மகிழம், மருதம், ஆச்சா முதலிய மரங்கள் தலவிருட்சங்களாக வழிபடப் பெறுகின்றன. அவற்றை அழிக்கக் கூடாது, வெட்டக் கூடாது. அதற்குக் கல்வெட்டுச் சான்றும் உள்ளது.[4]

தைந்நீராடல்

சங்க இலக்கியத்தில் தைந்நீராடல் என்றொரு சடங்கு குறிப்பிடப்பெறுகின்றது. இந்தச் சடங்கில் கன்னிப் பெண்களே பங்கேற்பர். சங்க காலத்தில் தையில் நிகழ்ந்த நீராடல் பக்தி இயக்க காலத்தில் மார்கழித் திங்களில் நடைபெற்றது என்று கூறப்பெறு கின்றது.[5] அதைப் பாவை நோன்பு என்றும் கூறுவர். முப்பது நாட்கள் நோன்பு இருந்த தைப் பாடிப்பரவவே திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய பாவை நூல்கள் தோன்றின. சமணத்திலும் திருவெம்பாவை உண்டு. முன் சங்க இலக்கியங்களில் கன்னிப் பெண்கள் மட்டும் பங்கேற்றதாகக் கூறப்பெறுகின்றது.[6] ஆனால் பிற்சங்க நூல்களில் அந்தணர் எரியோம்ப கன்னியரின் தாய்மார் அருகே நிற்க தைந்நீராடல் நிகழ்ந்தது. இதனை 'அம்பா ஆடல்' என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது.[7] இவ்வழிபாடும் வளம் நோக்கிச் செய்யப் பெற்றது. மழை வேண்டிச் செய்யப் பெற்றது. மழையைப் பெண்தான் தருவாள் என்ற நம்பிக்கை உலகம் முழுவதும் இருந்ததைப் போலவே தமிழ்நாட்டிலுமிருந்தது.[8] அதிலும் கன்னிப் பெண்கள் இவ்வழிபாட்டில் மையமாக நிற்பதைப் பார்க்கும்போது அது கன்னியின் சக்தி (ஆற்றல்) பற்றிய நம்பிக்கையைக் குறித்து நிற்கின்றது.[9] இன்றும் தமிழகத்தில் இவ் வழிபாடு தொடர்ந்து நடைபெறுகின்றது. தைத் திங்களில் மூன்றாம் நாள் இவ்விழா கொண்டாடப் பெறுகின்றது.

சங்க இலக்கியங்களில் தைந்நீராடல் என்றும் பிற்கால இலக்கியங்களில் மார்கழி (ஆதிரை) நீராடல் என்றும் கூறப்பெறுகின்றது. அதற்கும் காரணம் இருந்திருக்கவேண்டும். அந்நாளில் மாதங்கள் அமாவாசைத் தொடங்கி, பௌர்ணமியில் முடிந்ததால் மார்கழி, தை எனப் பெயர் பெற்றது என்று கருதப்பெறுகின்றது.[10]

1. சுப்ரமணியம் தி.,-கூவாகம் அரவான் களப்பலி - ஓர் ஆய்வு, ஆவணம், இதழ். 5 ப. 56
2. Subrahmaniya Pillai, G., – Tree worship and ophiolatry, p. 2
3. Ibid. pp. 2-3
4. ARE, 246 of 1906
5. திருப்பாவை, 1
6. இராகவையங்கார் மு., – ஆராய்ச்சித் தொகுதி, ப. 194
7. பரிபாடல், 11:81
8. மழை வேண்டி தமிழ்நாட்டில் நடைபெறும் சடங்குகளில் இளம் வயது பெண்களும், வயதான மூதாட்டிகளும் கலந்து கொள்வர்.
9. இராகவையங்கார் மு.,- மி.கு.நூ. ப
10. மேலது, பக். 195-6

கன்னி வழிபாடு

கன்னி வழிபாடு தொல் பழங்காலந் தொட்டு இன்றுவரை நடைபெற்று வருகின்றது. கன்னி வழிபாடு பழங்குடிகளிடையில் வழக்கிலிருந்தது. சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் கன்னி வழிபாடு பற்றி விரிவாகப் பேசப் பெறுகின்றது. இந்திய இலக்கியங்களில் கன்னி வழிபாடு பற்றிய சிலப்பதிகார குறிப்புதான் காலத்தால் முற்பட்டது.[1] கன்னியாகுமரி முனையில் நிலைபெற்றுள்ள பெண் தெய்வமும் கன்னி வழிபாட்டின் வடிவமே. இத்தெய்வம் பற்றி கி. பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பெரிப்புளூஸ் என்ற நில நூலில் குறிப்புகள் உள்ளன.[2] கன்னி வழிபாடு பற்றி பல அறிஞர்கள் ஆய்ந்துள்ளனர். அவர்களில் ஜியார்ஜிஸ் டுமிஸில் கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது.

கற்புடைமைச் சிறந்தது. அதைவிடச் சிறத்தது கன்னித்தன்மை. கன்னிப் பெண்ணிடம் பயன்படாத சக்தி உள்ளது. அவள் சக்தி, ஆற்றல் மிக்கது. எதையும் சாதிக்க வல்லது. தாய் தெய்வத்தின் மானுட வடிவமாகவே கன்னிப்பெண் கருதப் பெறுகின்றாள். அதனால் அவள் மனிதர்களால் தெய்வமாகப் போற்றப் பெறுகின்றாள்.[3]

இந்த கருத்து இந்திய சமய வரலாற்றிலும் நிலைபெற்றுள்ளது. இந்தியாவில் பெண் தெய்வங்களில் பல கன்னியாகவே கருதப்பெறுகின்றன. கன்னிப் பூசைக்கென கொடை அளித்தது பற்றி இடைக்காலக் கல்வெட்டுகள் பல செய்திகளைத் தருகின்றன. கருநாடகம் கோலார் மாவட்டத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள் கன்னிப்பூசை பற்றிய பல அரிய செய்தி களைத் தருகின்றன.[4] கன்னிப் பூசையில் படையல் பொருட்கள் பற்றி விரிவாகப் பேசப்பெறு கின்றன. தமிழ்நாட்டிலும், திருவெண்காட்டில் அண்மையில் படியெடுக்கப் பெற்ற கல்வெட்டு ஒன்றிலும் கன்னிப் பூசை பற்றி விரிவான செய்திகள் உள்ளன.[5] கன்னிப்பூசை மனித வளத்திற் காகவும், இயற்கை வளத்திற்காகவும் செய்யப் பெற்றது. தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கும் பெண் தெய்வங்கள் கன்னித் தெய்வங்களே. அதனால் கன்னி வழிபாடு தமிழகத்தில் சிறப்புற்ற தன்மை புலப்படும்.

அவ்வை நோன்பு

தமிழகத்தில் அவ்வை நோன்பு தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. இதில் பெண்கள் மட்டும் கலந்து கொண்டு வழிபாடு செய்வர். இது இரகசியமாக செய்யப் பெறும். நோன்பின் போது மகளிர் ஆடையின்றி இருக்கவேண்டும். இந்தச் சடங்கு நடைபெறும்போது ஆண்கள் அந்தப் பக்கம் போகக் கூடாது. ஆண்குரலே கேட்கக் கூடாது.[6]

கொற்றவை வழிபாடு

சிலப்பதிகார வேட்டுவ வரியில் கொற்றவை வழிபாடு பற்றி விரிவாகப் பேசப்படு கின்றது. வரிப் பாடல்கள் வெற்றி வேண்டி பாடப்படுவது.[7] அதற்கான சான்றுகள் சங்க இலக்கியத்திலும் காவியத்திலும் மிகுதியும் கிடைக்கின்றன. சங்க இலக்கியத்தில் கொற்றவைப் பற்றியும், கொற்றவை வழிபாடு பற்றியும் பேசப் பெற்றுள்ளது.[8] வேட்டுவ வரியில் பேசப்படும்

---

1. Ramendranath Nandi, Religious, Institutions and cults in Deccan
2. ராகவன் அ., - பெரிப்ளூஸ், ப. 254
3. Georges Dumizel The Desting of a King, p. 122
4. Ramendranath Nandi, op. cit. p.
5. துறையின் கல்வெட்டுப் பிரிவு அண்மையில் திருவெண்காட்டில் கண்டுபிடித்த கல்வெட்டு, இக்கல்வெட்டு, வீரராசேந்திரன் காலத்தைச் சேர்ந்தது.
6. தண்டபாணி தேசிகர் ச., – விநாயகர்
7. சிலப்பதிகாரம், 8: 74-7, அடியார்க்கு நல்லூர் உரை
8. திருமுருகாற்றுப்படை, வரி, 258 தொல்காப்பியம், புறத்திணையியல், நூற்பா, 5

கொற்றவை வழிபாடு கன்னி வழிபாட்டின் மறுவடிவமாகவே கருதப்பெறுகின்றது. கொற்றவையாக வேடமிடப் பெற்ற பெண் இளவயது சிறுமியே.[1] அதனால் இவ்வழிபாடு கன்னி வழிபாட்டின் எச்சமாகக் கருத வாய்ப்புண்டு. அவ்வழிபாட்டில் படைக்கப் பெறும் பொருள்களும் வேட்டுவ வாழ்க்கையிலிருந்து முகிழ்ந்தவை.[2] வேட்டுவர்களின்பொருளாதார நடவடிக்கையில் கிடைத்த பொருட்களே கொற்றவைக்குப் படையல்பொருட்களாக உள்ளன. இது குறிப்பிடத்தக்கது. வேட்டுவ வரியில் கூறப்பெறும் செய்திகள் சங்க காலத்திலும் அதற்குப் பின்னும் முன்னும் நடைபெற்றிருக்க வேண்டும். அதனால் வேட்டுவ வரி தொல்பழங் காலத்திலிருந்து வந்த வழக்கமாகக் கொள்ளலாம்.

வேட்டுவ வரிப் பாடல்கள் சிற்ப வடிவங்களைப் பற்றிக் குறிப்பிட்டபோதிலும் பிராமணிய மரபே அதில் நிலைபெற்றுள்ளது.[3] அதற்கு முன்பு கொற்றவையின் வடிவம் எப்படியிருந்தது என்பது பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள அன்னைத் தெய்வம் கொற்றவையின் வடிவத்தைச் சுட்டுகின்றது என்றும் கொள்ளலாம்.[4] அவ்வுருவத்துடன் எருமை, கோழி போன்ற உருவங்கள் கிடைத்துள்ளதால் இக்கருத்து உறுதிப்படுகிறது. அவ்வுருவம் சாதாரண ஆடை அணிகலன்களையும், இரண்டு கைகளையும் பெற்றுள்ளது. அதனால் அவ்வுருவம் கொற்றவையின் மூலவடிவம் (Proto form) என்று கொள்ளலாம் வேட்டுவ வாழ்க்கையில் முகிழ்த்த தாய்த் தெய்வம் கால கதியில் பிராமணிய ஆதரவு பெற்று அதனுடைய பல கூறுகளை பெற்றுத் திகழ்வதை, சிலப்பதிகாரக் காலத்து வளர்ச்சி பெற்ற படிமக்கலையை நினைவுபடுத்துகின்றது. சிலம்பு, வேட்டுவரி வாழ்க்கையின் வளர்ச்சி பெற்ற நிலையைச் சுட்டுகின்றது என்று கொள்வதில் தவறில்லை.

அய்யனார் வழிபாடு

தமிழ்நாட்டுக் கிராமங்களில் அய்யனார் காவல் தெய்வமாகப் போற்றப் பெறுகின்றார். நீர்நிலை அருகிலும், ஆற்றங்கரை ஓரத்திலும் அய்யனார் கோயில்களும், அத்தெய்வத்திற்குரிய வாகனங்களாகிய குதிரை, யானை ஆகியவற்றின் பெரிய உருவங்களும் வைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு ஊரிலும் உள்ள அய்யனார்க் கோயிலுக்கு ஒவ்வொரு விதமான கதை வழங்கி வருகின்றது. இக்கதைகளைத் தொகுத்துப் பார்க்கும் போது அத்தெய்வம் காவல் தெய்வம் என்பது உறுதிப்படும். அய்யனார் சாத்தன் என்ற பெயரில் வழங்கப் பெறுவதைக் காணலாம். சாத்தன் என்ற பெயர் சங்க இலக்கியத்தில் பலகாலும் பயின்று வரும் பெயர்.[5] அதனால் சாத்தன் என்ற சிறு தெய்வம் சங்க காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கியது எனலாம். அப்பெயர் வடமொழி சாஸ்தா என்ற பெயரின் திரிபு என்பர்.[6] ஆனால் அப்பெயர் சாத்து என்ற வாணிகக் குழுவின் பெயரின் அடிப்படையில் உருவாயிற்று என்ற கருத்தே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.[7]

அத்தெய்வப் பெயர் வேட்டுவ வாழ்க்கையிலிருந்து முகிழ்ந்த பெயர். அய்யன் என்ற பெயரை தலைவன் என்றோ சிறப்புடையவன் என்றோ பொருள் கொள்ள முடியும். அய்யை என்ற பெண் பால் பெயருக்கான ஆண்பால் பெயர் அய்யன் என்றாகும்போது பழங்குடி வாழ்க்கையில் முகிழ்ந்த தெய்வம் அய்யனார் என்று கொள்ளலாம். அய்யனார் பழங்குடி தெய்வத்திற்குரிய இயல்புகளைப் பெற்று விளங்கியது. பழங்குடிகள் தங்கள் தெய்வத்திற்குக் கறியும், கள்ளும் வைத்துப் படைப்பர். ஆனால் தற்காலத்தில் அய்யனார்க்கு அவ்வாறு

1. சிலப்பதிகாரம், 12:21
2. மேலது. அவிப்பலி, பாடல்கள், 18-23
3. மேலது, வரிகள் 21-35
4. Natana. Kasinathan, 'The concept of Sakti in Tamilnadu, 'Collected Papers - relating to Tamil Culture', pp.
5. வையாபுரிப்பிள்ளை எஸ்., - சங்க இலக்கியம், இரண்டாம் தொகுதி, பக். 1426-27
6. மயிலை. சீனி. வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், ப. 175
7. தேவநேயன் ஞா., - தமிழர் மதம், ப. 37

வைத்துப் படைக்கும் பழக்கும் இல்லை. இருப்பினும் பண்டை நாளில் கறியும் படைக்கும் வழக்கம் இருந்தது எனபதற்குத் தக்கையாகப் பரணியே சான்று பகர்கின்றது.[1] அந்நூலில் அய்யனார் சிவனுக்கும் திருமாலுக்கும் மகனாகப் பிறந்தவன் என்றும், மிடாக்கள்ளும், மிக்க கறியும் விரும்பி உண்பவன் என்றும் பாடப் பெற்றுள்ளதைக் காணலாம். இன்று அய்யனார் பிராமணிய கோட் பாட்டிற்குள் கொண்டு வரப்பெற்று 'சைவ' தெய்வமாகப் போற்றப் பெற்றாலும், பண்டை நாளில் பழங்குடிகள் வழிபடும் சிறு தெய்வமாகப் போற்றப் பெற்றவர். பழங்குடிகளைப் பெருந்தெய்வ சமயங்கள் தங்கள் சமயத்துடன் இணைத்த போது அவர்கள் வணங்கிய சிறு தெய்வங்கள் பெருந்தெய்வ சமய தெய்வக்குழாத்துடன் சேர்த்துக் கொள்ளப் பெற்றதை தேவாரப் பாடலும்,[2] பௌத்த சமய வரலாறும்,[3] சமண சமய வரலாறும்[4] உறுதிப்படுத்துகின்றன. அய்யனாரும் அவ்வாறு பெருந்தெய்வ சமயங்களில் இணைத்துக் கொள்ளப் பெற்றவர்.

மல்லாண்டை வழிபாடு

கொங்கு நாட்டில் அறுவடை முடிந்து களத்தில் உள்ள விளை பொருட்களை வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு முன் மல்லாண்டை என்ற தெய்வத்திற்கு வழிபாடு செய்யப்பெறும். அதற்கு ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிட்டு வழிபாடு செய்வர். மல்லாண்டை என்பது மல் ஆண்டை என்று பிரித்துப் பொருள் கொள்ள முடியும். மல் என்பது வளம் என்று பொருள். அதனால் மல்லாண்டை என்பது வளத்தின் தெய்வம் (தலைவன்) என்று கொள்ளலாம். அதனால் மல்லாண்டை வழிபாடு வளத்திற்காக செய்யப் பெறும் வழிபாடு என்று கொள்ளலாம். நாயக்கர் காலக் கல்வெட்டுகளில் மல்லாயி அவ்வை மகமை என்றொரு வரி கூறப்பெறுகின்றது.[5] இது மல்லாயி அவ்வை என்ற தெய்வத்திற்குச் செய்யபெற்ற வழிபாட்டில் அளிக்கப்பெறும் காணிக்கை என்றும் கொள்ளலாம்.

முடிவுரை

தமிழர் வாழ்வில் இரண்டாயிரம் ஆண்டுகளில் பல விழாக்கள் தோன்றின. பல நூறு சடங்குகள் செய்யப் பெற்று வந்துள்ளன. அவற்றை முழுமையாக தொகுத்தளிப்பது கடினமான செயல். சிந்துவெளி நாகரிகம் தமிழ் வரலாற்றோடு கொண்டுள்ள தொடர்பு பற்றி வேறுபட்ட கருத்துக்கள் இருந்த போதிலும் அங்கு சிறப்புற்ற குலச் சின்ன வழிபாடு, மர வழிபாடு போன்றவைத் தமிழகத்தில் இன்று வரை போற்றப் பெறுவதால் அந்நாகரிகத்தில் பயின்றுவரும் இவ்விரு வழிபாடுகள் பற்றி விளக்கப்பெற்றது. சங்க காலந்தொட்டு இன்று வரை பல்வேறு சடங்குகளும், விழாக்களும் தோன்றிச் சிறப்புற்று வந்துள்ளன. சில சடங்குகள் காலத்தின் தேவைக்கேற்ப விழாவாக விரிவடைந்தது. பங்குனி முயக்கம் என்பது தொடக்கத்தில் சடங்காக உருவாகிப் பின்னாளில் விழாவாக எழுச்சி பெற்றது. அதுவே பங்குனி உத்திரம். சில சடங்குகள் பெருவிழாக்களில் கலந்தன. சதுக்கப் பூதத்திற்குச் செய்யப்பெற்ற சடங்கு இந்திரவிழாவில் கலந்தது. சங்க காலத்தில் நிலைபெற்றிருந்த சில விழாக்கள் பக்தி இயக்க காலத்திலும், பின் வந்த காலங்களிலும் செல்வாக்கிழந்தன. இதற்கு பூந்தொடைவிழா, உள்ளி விழா ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாம். சமய வளர்ச்சிக் காரணமாகவும், பழங்குடி மக்கள் செல்வாக்கு காரணமாகவும் புதுப்புது விழாக்கள் தோன்றின. பழைய விழாக்கள் புதிய கூறுகளைப் பெற்று புதுவடிவம் பெற்றன.

---

1. தக்கயாகப் பரணி, தாழிசை 230
2. திருநாவுக்கரசு, தேவாரம், திருப்பயற்றூர் பதிகம், 4
3. மயிலை, சீனி. வேங்கடசாமி
4. சமணர் படிமக்கலையில் யானை மீதமர்த்த உருவத்தை பிரும்ம சாஸ்தா என்றழைக் சின்றனர். அச்சிற்பம் திருமலையில் (தி.ச.மா.) உள்ளது.
5. Noburu Karashima, Towards a New formations, p.148

காடுகளிலும், மலைகளிலும் தனித்திருந்து வாழ்ந்த பழங்குடிகள் பல்லவர்காலந் தொட்டுச் சமூக வாழ்வில் இணைக்கப்பெற்றனர். அப்பணி சோழர் காலத்தில் மிகுதியாயிற்று. அதன் விளைவுதான் இடங்கை வலங்கை பிரிவுகள் சமூக நீரோட்டத்தில் இணைக்கப்பெற்ற மக்கள் பின்பற்றிய சமயக்கோட்பாடுகள், சிறு தெய்வ வழிபாடுகள், சடங்குகள் ஆகியவை பிராமணிய ஆதரவு பெற்று பெருந் தெய்வ சமயத்தில் இணைக்கப் பெற்றன. அதனால் அவை பற்றி இலக்கியங்களும், சாசனங்களும் குறிப்பிடும் தகுதி பெற்றன. தக்கயாகப் பரணி, தாராசுரம் சக்கராயி சிற்பம், கொங்கு நாட்டுச் சிற்பங்கள், மல்லாயி அவ்வை மகமை பற்றிய கல்வெட்டுக் குறிப்பு முதலியவற்றை இதற்குச் சான்று காட்டலாம். நவகண்டம் பற்றி இரட்டைக் காப்பியங்களும், கல்வெட்டுகளும் குறிப்பிடுவதையும், இப்பின்னணியில்தான் பார்க்கவேண்டும். விஜயநகரர் காலத்திறுதியிலும், நாயக்கர் காலத்திலும் சமூகத்தில் சாதி முரண்பாடுகளும், சமய முரண்பாடுகளும் கூர்மையடைந்தன. அவற்றால் சமூகத்தில் கடும் விளைவுகளும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டன. அவற்றைத் தணிப்பதற்கு விஜயநகர மன்னர்களும், நாயக்க மன்னர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலப்பல. நாயக்கர் காலத்தில் உருவான கள்ளழகர் விழாவும், சங்கரன் கோயில் ஆடித்தபசும் சைவ வைணவ ஒற்றுமையை வளர்க்கவே என்று கொள்ளலாம். தமிழகத்தில் பண்டை நாள் தொட்டு நடைபெற்ற விழாக்களும், சடங்குகளும் பல திறப்பட்ட மக்கள் பகை மறந்து ஒன்றிணைவதற்கு என செய்யப்பெற்றவை என்பது காலந்தோறும் உருவான தமிழ் இலக்கியங்களாலும், சாசனங்களாலும் உறுதிப்படுகின்றது.

அடுகலனும் பரிகலனும் 6

கலன்களின் தோற்றம்

உலக வரலாற்றில் மனிதன் நிலையாக ஓரிடத்தில் தங்கி உணவை உற்பத்தி செய்யத் தொடங்கிய புதிய கற்காலத்திலேயே தனக்கு வேண்டிய கலன்களைச் செய்யக் கற்றுக் கொண்டான்.[1] புதிய கற்காலத்திலேயே உற்பத்தி செய்த உணவையும் பிற பொருட்களை யும் சேமித்து வைக்கவும், உண்ணவும், பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லவும், கலன்கள் மனிதனுக்கு வேண்டியிருந்தது. இதனால் முதலில், இயற்கையில் கிடைத்த செடி, கொடி, பட்டைகளைக் கொண்டு செய்தான். பின்னர் கையால் வனையப்பெற்ற சுடப்படாத மட் கலன்களை உருவாக்கினான். அதன் பின்னர் அவற்றைத் தீயில் சுட்டு நிலையான அடுகல னாக மாற்றினான். தமிழ்நாட்டில் பையம்பள்ளி அகழாராய்ச்சியில் புதிய கற்கால மனிதன் பயன்படுத்திய மட்கலன்கள் கிடைத்துள்ளன.[2]

தொடக்கக் காலத்தில் மனிதன் கையாலும், பின்னர் கையால் சுழற்றும் சக்கரத்தின் துணையாலும் மட்கலன்களைச் செய்யக் கற்றுக் கொண்டமையைத் தமிழ்நாட்டு அகழாராய்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. புதிய கற்காலத்திலும் அதற்குப் பின்னர் வந்த சங்ககாலத்திலும் சமையலுக்கு உதவும் அடுகலன்களைச் செய்த குயவர்களுக்குச் சமுதாயத்தில் அதிக மதிப்பு இருந்து வந்தது. இதனால் சங்ககாலத்தில் குயவன் 'வேட்கோ' 'கலஞ்செய்கோ' என்று அழைக்கப்பட்டான்.[3] சங்ககாலத்திற்குப் பின்னர் மதிப்பு குறைந்து ஊர்பணியாள னாகவும் கோயில் பணியாளனாகவும் வாழ நேரிட்டது.

கலன்களின் வளர்ச்சிப் போக்குகள்

சங்ககாலத்தினைப் பொறுத்தமட்டில் மக்கள் பலவகையான மட்கலன்களையே அதிக அளவில் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பதை இதுவரை நடைபெற்ற அகழாராய்ச்சிகள் காட்டுகின்றன. இவற்றில் உட்புறம் கறுப்பாகவும் வெளிப்புறம் சிவப்பாகவும் உள்ள கறுப்பு சிவப்புக் கலன்களே (Black and Red ware) சங்ககால மட்கலம் என்று சிறப்பித்துச் சொல்லும் அளவிற்கு அக்காலத்திற்குரிய மட்கலமாக விளங்கிற்று.[4] இவற்றோடு தனித்த நிலையிலுள்ள சிவப்பு, கறுப்பு வண்ணக்கலன்களும் வழக்கில் இருந்துள்ளன. மேலும் வெளிப்புறம் வெண்மைக்கோடுகள் இட்டு வரைந்து அதன்மேல் 'ரசட்' என்ற சிவப்பு வண்ணம் பூசப்பட்ட கலன்களும் (Russet coated and painted ware) கிடைத்துள்ளன.[5] இவை தவிர வணிகத்தொடர்பால் வட இந்தியாவிலிருந்து வந்த வட இந்திய கருமை வண்ண வழவழப்பான அடுகலன்களும் (NBP ware) ரோமானிய நாட்டிலிருந்து வந்த அரிடைன், ரௌலட்டட், ஆம்பொரா போன்ற உயர்வகை அடுகலன்களும் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்தன என்பதை அழகன்குளம், கொற்கை, கரூர், அரிக்கமேடு போன்ற இடங்களில் நடைபெற்ற அகழாய்வின் முடிவுகள் காட்டுகின்றன. 'அழகன்குளம் மட்கலன்' என்று

---

1. தொல்பழங்காலம், தமிழ்நாடு அரசு, சென்னை, ப.191–192
2. Narasimhaiah - B., Neolithic and Megalithic cultures in Tamilnadu, Delhi, 1980, p. 31-59.
3. புறநானூறு, பா. 228, 296.
4. Ramachandran - K. S., Archaeology of South India, Tamilnadu, Delhi, 1980, pp.60-61,
5. Gurumurthy S., – Ceramic Traditions in South India, University of Madras, Madras, 1981, pp. 254-255.

சொல்லத்தக்க வகையில் இராமநாதபுரத்திற்கு அருகிலுள்ள அழகன்குளத்தில் 'இளஞ்சிவப்பு வண்ணக்கலன்கள்' எனப்படும் தனித்தன்மையுடைய மட்கலன்கள் செய்யப்பட்டிருக்கின்றன.[1]

அகழாய்வுகளில் கிடைத்த சில கலன்களில் அதனைப் பயன்படுத்தியோர் பெயரும், அக்கலத்தின் பெயரும், பண்டைத் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. கரூர் அகழாய்வில் குறுகிய அகல், "குறகல்" என்றும்;[2] கொடுமணலில் "களந்தை வம்பன் அகல்" என்றும் எழுதப்பட்ட மட்கலன்கள் கிடைத்துள்ளன. சங்ககாலத்தில் கொடுமணலில் செய்யப்பட்ட மட்கலன்கள் புகழ்பெற்று விளங்கியுள்ளன.[3] இவ்வினைமாண் நன்கலன் களைச் சேரமன்னர்கள் புலவர்களுக்குப் பரிசாக அளித்தார்கள் என்று பதிற்றுப்பத்து கூறுகிறது.[4]

சங்ககால மக்கள் நாகரிக வளர்ச்சியினால் உலோகத்தினாலும், அடுகலன்களையும் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் பரிகலன்களையும் புனையக் கற்றுக் கொண்டார்கள் என்பதைச் சங்கவிலக்கியங்கள் காட்டுகின்றன

பொன், வெள்ளி, இரும்பு, செம்பு போன்ற உலோகங்களினால் செய்த கலன்கள் சங்ககாலத்தில் புழக்கத்தில் இருந்திருக்கின்றன.[5] ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளிலிருந்து செம்பினால் செய்த பல பரிகலன்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை இலக்கியங்களில் கண்ட செய்திகளை உறுதிப்படுத்துகின்றன.[6]

சங்ககாலத்திற்குப் பின்னர் பல்லவர் காலத்தில் பல்வகை உலோகங்களால் ஏராள மான கலன்கள் செய்யப்பட்டன. மட்கலன்கள் செய்யும் முறை செல்வாக்கு இழந்தது இருந்தபோதிலும் ஏழை மக்கள் அதனைப் பயன்படுத்தி வந்தனர். உலோகத்தினால் கலன்களைச் செய்யும் வழக்கம் உச்சகட்டத்தினை எட்டியது. (பார்க்க பட்டியல்-இரண்டு) இக் காலத்தில் தோன்றிய சேந்தன்திவாகர நிகண்டு என்னும் நூல் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு ஈயம், தரா, கஞ்சம் என்ற ஏழுவகை உலோகங்களை எடுத்துக்கூறி அவற்றில் செய்யப்பட்ட கலன்கள் பற்றிக் கூறுகிறது.[7] சோழர் கல்வெட்டுகளில் பொன், வெள்ளி, பித்தளை, தரா, வெண்கலம், செம்பு, முதலியவற்றால் செய்த அடுகலன் பரிகலன் பற்றிய குறிப்புக்கள் பல காணக்கிடைக்கின்றன.[8] முதலாம் இராசராசன் தஞ்சைக் கோயிலுக்கு விலைமதிப்பற்ற பல அடுகலன்கள், பரிகலன்களை அளித்துள்ளதைத் தஞ்சைக்கோயில் கல்வெட்டுகள் தெரிவிக் கின்றன.[9] சோழர்காலத்தில் ஏற்பட்ட அரசியல், வணிகம், சமயம், முதலியவற்றின் வளர்ச்சி பல்வகைக் கலன்களின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது எனலாம். வெளிநாட்டவர் தொடர்பும் இவ்வளர்ச்சிக்கு மற்றொரு காரணமாக அமைந்தது. சீனநாட்டுத் தொடர்பால் இக்காலத்தில் 'செலடான் கலன்' (celedon ware) என்ற உயர்வகை பீங்கான் கலன்

1. Abdulmajeed A., Thulasiraman D., Vasanthi S., and Natana. Kasinathan General editor - Alagankulam Excavation - A Preliminary Report, State Department of Archaeology, Madras, 1992, p.19.
2. கரூர் கள ஆய்வில் கட்டுரையாசிரியர் மற்றும் திரு. க. ஸ்ரீதரன். பதிவு அலுவலர் அவர்களுடன் இணைந்து கண்டெடுக்கப்பட்டது.
3. சுப்பராயலு எ., - கொடுமணல் அகழாய்வு, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், வெளியிடப்பெறாத தட்டச்சுப்படி.
4. பதிற்றுப்பத்து, பாடல் 67, 74; நியுசென்சுரி புக் ஹவுஸ், சென்னை.
5. பொருநராற்றுப் படை, வரி. 84-85 மதுரைக்காஞ்சி 514, பெரும்பாணாற்றுப்படை 222
6. Archaeology of South India - Tamilnadu, pp. 49-51.
7. சேந்தன்திவாகரம், கழக வெளியீடு, சென்னை
8. SII. XIX 237, 357; SII. VII 411, 891; SII. II. 91, 115.
9. SII. Vol. II, 91-115.

தமிழ்நாட்டில் இறக்குமதியாகிப் புழக்கத்திற்கு வந்துள்ளது.[1] தமிழ்நாட்டில் சோழர் காலத்திலும் அதனை அடுத்து பல்லவர் காலத்திலும் உலோகத்தால் செய்த கலன்கள் உயர்மட்ட வளர்ச்சி நிலையை எட்டின. இதனைக் கலன்களின் காலவாரியான பட்டியல் ஆய்வு காட்டுகின்றது. (பார்க்க பட்டியல் - இரண்டு)

கலன்களின் பெயர்கள், வகைகள்

ஒரு நாட்டின் நாகரிகத்தின் வளர்ச்சியைக் காட்டும் ஆதாரங்களில் ஒன்றாகக் கலன்களின் வளர்ச்சியைக் கூறலாம். தமிழ்நாட்டு மக்கள் அன்றாடத் தேவைக்குத் தகுந்த கலன்களை வகைப்படுத்தி அவற்றினைப் பல்வேறு வடிவங்களில் வடித்து அவற்றிற்கு வேறுவேறு பெயர்களையும் வழங்கியிருக்கின்றார்கள்; (பார்க்க பட்டியல் - ஒன்று) கலன்களைப் பயன் படுத்துவதன் அடிப்படையில் உண்கலம், அடுகலம், சேமகலம், கொள்கலம் என்று வகைப்படுத்தியுள்ளனர்; (சேந்தன்திவாகரம்) வடிவத்தினைக் கொண்டும் (எ. கா. குடுவை, வட்டம், மூக்குவட்டகை) பெயரிட்டுள்ளனர். குறிப்பிட்ட செயலுக்கு என்ற அடிப்படையில் (எ. கா. ஈயோட்டி, திருமஞ்சனக்குடம்) விரித்துக் கூறினர். பொதுவாகக் கலன், அகல், பாத்திரம், பாண்டம் என்ற சொற்கள் கலன்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றில் கலன், அகல் என்ற சொற்கள் சங்ககாலத்தில் தோன்றியவை. மண், உலோகம் என்ற இருவகை கலன்களையும் குறிக்க இச்சொற்கள் ஆளப்பட்டுள்ளன. பாத்திரம், பாண்டம் என்ற சொற்கள் பிற்காலத்தில் தோன்றியவை. தமிழ்நாட்டில் மட்டும் அடுகலன், பரிகலன் ஆகியவற்றினைக் குறிக்க நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் இருந்திருப்பதை கல்வெட்டுகள், இலக்கியங்கள் வாயிலாக உணர முடிகின்றது. இதன்மூலம் தமிழ்நாட்டு மக்கள் கலன்கள் செய்யும் கலையில் கைதேர்ந்தவர்களாக இருந்திருக்கின்றனர், நாகரிக வளர்ச்சியின் எல்லையை எட்டினர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இக்கலன்களின் பெயர்களில் பெரும்பகுதியை இன்றைய தமிழ்நாட்டு மக்கள் மறந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் பண்டு தொட்டு வழங்கி வந்த கலன்களைக் கீழ்க் கண்டவாறு பட்டியலிட்டு ஆய்வு செய்யலாம்.

அகல் : வாயகன்ற கலன். மண்ணாலும் பொன்னாலும் இது செய்யப்பட்டு மண்ணகல், பொன்னகல் என்று வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கொடுமணல், கரூர், அரிக்கமேடு போன்ற இடங்களில் கிடைத்த மண்பாண்டங்களில் 'அகல்' என்ற சொல் பண்டைத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது.[2] உலோகத்தால் ஆன அகலில் அப்பம் சுட்டது குறித்து பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கிறது.[3]

அகளம் : பெரிய பானையாகியத் தாழியைக் குறிக்க வழங்கிய பெயராகும். நீர் சாலையும் குறித்தது.[4]

அம்பணம் : நெல்லை அளப்பதற்குரிய அளவையாகப் பதிற்றுப்பத்தில் இது குறிப்பிடப்படுகிறது.[5]

---

1. சோழநாட்டுக் கடற்கரைப் பட்டினங்கள், பாண்டிநாட்டு கடற்கரைப் பட்டினங்கள் முதலியவற்றில் இவ்வகைப் பானையோடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இராமேசுவரம் அருகிலுள்ள பெரியபட்டினத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அகழாய்வு செய்தபோது இவ்வகைப் பானையோடுகள் கிடைத்துள்ளன. சீனநாட்டுத் தொடர்பைக் காட்டும் வகையில் சீனநாட்டுக் காசுகள் தரங்கம்பாடிப் பகுதியில் தொல்லியல் துறையால் சேகரிக்கப்பட்டுள்ளன.
2. இக்கலன் குறித்து கள ஆய்வில் அறியப்பட்டது.
3. பெரும்பாணாற்றுப்படை வரி. 377
4. சேந்தன்திவாகரம்
5. பதிற்றுப்பத்து, பா.71.

அரிவாணம் : அகன்ற தட்டினையும் அரிக்கும் சட்டியினையும் குறிக்க இச்சொல் வழங்கப்பட்டது.[1] காஞ்சிபுரத்துக் கல்வெட்டு ஒன்று (கி.பி. 1532) கோயிலுக்கு அமுது செய்வதற்கு அரிவாணம் (தட்டு) அளித்ததைத் தெரிவிக்கிறது.[2]

ஆரியச்செப்பு : வடநாட்டுச் செப்புக் கலன்.[3]

ஆலாத்தித்தட்டம் : கோயில்களில் ஆலாத்தி எடுக்கும் தட்டு. இது திருவாலத்தி, திருவாலத்தித்தட்டி என்றும் வழங்கப்பட்டது. வெள்ளியாலும் செய்யப்பட்டது.[4]

இடங்கர் : குடத்திற்குரிய பெயர்.[5]

இடா : நீர் இறைக்கும் கூடைக்குரிய பெயர்.[6]

இலைச்செப்பு : பூசைக்குரிய கலன் இலை வடிவில் அமைந்தது என்றும் கருதுவர்.[7] பொன்னால் செய்த இலைச் செப்பினை தஞ்சைக்கோயிலுக்கு முதல் இராசராசன் அளித்துள்ளான்.[8] இதனை வெற்றிலை வைக்க பயன்பட்ட செப்பு என்றே கூறலாம்.

இலைத்தட்டு : பூசைக்குரிய கலன். வெற்றிலை வைக்க பயன்பட்ட தட்டு இதுவாகும். முதல் இராசராசனால் வெள்ளியால் செய்த இலைத்தட்டு தஞ்சைக்கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டுள்ளது.[9]

ஈச்சொப்பிகை (ஈயோட்டி) : கை போன்ற பிடியுடைய பூசைக்குரிய கலன். மரியாதைக்குரிய கவரி போன்ற சின்னம் என்றும் கருதுவர்.[10] ஆனால் இச்சொல்லே ஈயோட்டி என்று வழங்குவதால் இது ஈயோட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.[11] பொன்னாலும் இது செய்யப்பட்டிருக்கிறது. பொன்னால் ஆன கையுடைய ஈச்சொப்பி ஒன்று முதல் இராசேந்திரன் காலத்தில் திருக்கோயிலூர்க் கோயிலுக்குத் தானமாகத் அளிக்கப் பட்டுள்ளது.[12]

உழக்கு : அளப்பதற்குரிய அளவையாகக் கலித்தொகையில் குறிப்பிடப்படுகிறது.[13] கல்வெட்டுக்களில் அதிக அளவில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது.

ஒட்டுட்டி : சமைப்பதற்குரிய பாத்திரம். மதுரைக்கு அருகில் அமைந்த ஆனை மலையிலுள்ள முதலாம் பராந்தகனின் கல்வெட்டு வேதபிராமணர் உணவுண்ண சமைப்பதற்குரிய கலனாக ஒட்டுட்டி அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.[14]

---

1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பக். 1394.
2. SII. VII 53.
3. பெருங்கதை, உ.வே.சா. பதிப்பு, பக்.7
4. SII. VII 537; SII. VIII 77.
5. சேந்தன்திவாகரம்
6. மேலது.
7. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பக். 1400.
8. SII. II, 91, 115.
9. மேலது.
10. கோவிந்தராசனார் சி,, - கல்வெட்டு கலைச்சொல் அகராதி, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1987, பக். 62.
11. தேவாரம், 692-7.
12. SII. VII 888.
13. கலித்தொகை, பா. 96.
14. SII. III, p. 240

ஒலோமி : அடுகலனுக்குரிய பெயர். திருச்செந்தூருக்கு அருகிலுள்ள பதினோராம் நூற்றாண்டு ஆத்தூர் கல்வெட்டு, திருவமுது செய்வதற்காக அளிக்கப்பட்ட கலன்களில் ஒன்றாக இதனைக் குறிப்பிடுகிறது.[1] ஒலம்படி அல்லது உலைமூடி என்று தற்காலத்தில் வழங்கும் கலனாக இது இருக்க வேண்டும்.

கச்சோளம் : பூசைக்குரிய கலன். முதல் இராசராசன் காலத்தில் வெள்ளியால் செய்த 'கச்சோளம்' ஒன்று தஞ்சைக் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.[2]

கஞ்சனை : கலசப்பானைக்குரிய பெயர்.[3]

கடகம் : பெட்டிவடிவில் அமைந்த கலன், ஒருவகைப்பெட்டி இதுவாகும்.[4]

கடாரம் : நீர் வைத்திருக்கவும் நீராடவும் பயன்படுத்தப்படும் கொப்பரை.[5]

கடிஞை : இரப்போருக்குரிய பிச்சைப்பாத்திரம்.[6]

கடிப்பம் : கொள்கலம், பேழைக்குரிய பெயர்.[7]

கடையால். பால் கறப்பதற்குரிய பாத்திரம்[8] நெல்லை மாவட்டத்தில் இச்சொல் இன்றும் வழங்கிவருகிறது.

கண்டிகை : கொள்கலனுக்குரிய பெயர்[9]

கரகம் : பேழைக்குரிய பெயர்[10] நீர்வைக்க உதவும் பாத்திரம் இதுவாகும். அந்தணர் இதில் நீர் வைத்திருந்ததாகக் கலித்தொகை தெரிவிக்கிறது.[11]

கரண்டம். சிறிய கலனுக்குரிய பெயர்.[12]

கலசம் : பானை வகையினுள் ஒன்றாகும். கலசப்பானை என்றும் அழைக்கப்பட்டது.[13] (செப்பு, பொன், வெள்ளி முதலிய உலோகங்களால் செய்யப்பட்டது.[14] கோயில்களில் இறைவனை நீராட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது [15]

கலன் (கலம்) : பரிகலனையும் அடுகலனையும் குறிக்க சங்ககாலத்திலிருந்து வழங்கப்பட்டு வந்த சொல் இதுவாகும். மண்ணாலும் உலோகத்தாலும் கலன்கள் செய்யப்பட்டு அவை மண்கலம் என்றும் வெண்கலம் என்றும் அழைக்கப்பட்டன.[16] மேலும்

---

1. SII. XIV. 192.
2. SII. II. 91.
3. சேந்தன்திவாகரம்.
4. சீவகசிந்தாமணி, பா. 863, 2197.
5. பெரியாழ்வார் திருமொழி. 18.
6. சேந்தன்திவாகரம்.
7. மேலது.
8. திருவாய்மொழி, 4, 5, 8.
9. சேந்தன்திவாகரம்.
10. மேலது.
11. கலித்தொகை, 9, 193.
12. சேந்தன்திவாகரம்.
13. SII. XIX 303.
14. SII. XXII. 24; SII. XXIII. 340; SII. XIX. 45
15. SII. XIV. 192.
16. SII. VII. 291.

பொலங்கலம், வான்கலம், உருள்கலன், மணிக்கலம் என்றும் பலவாறாக அழைக்கப்பட்டன.[1] மண்ணாலான கலம் குசக்கலம் என்றும் அக்காலத்தில் அழைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[2]

கழை : மூங்கில் குழாய். எருமைப்பாலை இதில் ஊற்றி வைத்ததாக மலைபடுகடாம் தெரிவிக்கிறது.[3] மண்கலன் வருவதற்கு முன்னர் இதுபோன்று இயற்கையில் கிடைத்த பொருட்களையே பரிகலனாக மக்கள் பயன்படுத்தினர்.

கன்னல் : பொழுதையளக்க நீர் ஊற்றிவைத்திருந்த சிறிய கலன் இதுவாகும். குவிந்த வாயுடைய நீருண்ணும் பாத்திரத்திற்கும் இப்பெயர் சங்ககாலத்தில் இருந்திருக்கிறது.[4] பிற்காலத்தில் குடத்திற்குரிய பெயராகவும் இது விளங்கியிருக்கிறது.[5]

கரண்டிகைச்செப்பு : கைப்பிடியுடன் கூடிய செப்பு இதுவாகும்.[6]

காக்காழி : கால்களையுடைய கலன்களைத் தாங்கும் தாங்கியாக இருக்கும். சோழர் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.[7]

காளாஞ்சி : பக்தர்களுக்குக் கோயில்களில் பிரசாதம் அளிக்கும் கலன். தாம்பூலம் எடுக்கும் கலத்தினையும், தாம்பூலம் துப்பும் கலத்தினையும் இது குறித்தது. இராசராசன் காலத்தில் பொன்னால் செய்த காளாஞ்சி தஞ்சைக்கோயிலுக்கு அளிக்கப் பட்டுள்ளது.[8] வெள்ளிக் காளாஞ்சி ஒன்று திருக்கோயிலூர் கோயிலுக்கு இராசேந்திரன் காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.[9]

காண்டம் : கொள்கலத்திற்குரிய பெயர்.[10]

காரகம் : அப்பஞ்சுடும் சட்டியாக மணிமேகலையில் குறிப்பிடப்படுகிறது.[11]

கிட்டி : கொள்கலத்திற்குரிய பெயர்.[12]

கிண்ணம் : சிறிய கலன், சிறிய வட்டிலின் பெயர், கொள்கலன்.[13]

குடம் : நீர், பால், நெய் போன்ற திரவப்பொருள்களைச் சேமித்து வைப்பதற்காகப் பயன்பட்ட கலன். அடி அகன்று சிறிய குவிந்த வாயினை உடையது. மண், வெள்ளி, பொன், செம்பு ஆகியவற்றால் செய்யப்பட்டது.[14] சங்ககாலத்தில் கள்ளும் பிறபொருளும் இதில் வைக்கப்பட்டன.[15]

---

1. பதிற்றுப்பத்து, பா. 18; பெரும்பாண், வரி. 477-88; கலி. 81; குறுந். 193.
2. SII. VII. 409.
3. மலைபடுகடாம், வரி. 523.
4. நெடுநல்வாடை, வரி. 64-66.
5. சேந்தன்திவாகரம்.
6. SII. II. 91.
7. SII. XXII. 272.
8. SII. II. 91.
9. SII. VII. 891.
10. சேந்தன்திவாகரம்.
11. மணிமேகலை.
12. சேந்தன்திவாகரம்.
13. மேலது.
14. SII. XVII. 638; SII. XXIV. II; பெரியாழ்வார் திருமொழி. பிரபந். 157, 204; நாச்சியார் திருமொழி, பிரபந். 556.
15. பெரும்பாண். வரி. 380-2.

குடாரம் : தயிர் கடையும் தாழிக்குரிய பெயர்.[1]

குடுவை : சுரைக்குடுவை போன்று அமைந்த கலன்; குண்டத்திற்குரிய பெயர். கோயில்களுக்கு இது குசவரால் அளிக்கப்பட்டுள்ளது.[2]

குண்டம் : குடுவைக்குரிய பெயர்.[3]

குண்டிகை : நீர் வைத்திருக்கும் பாத்திரம், கமண்டலம், பேழைக்குரிய பெயர். பெருங்கதையில் வளைந்த கால்களையுடைய குண்டிகை 'கொடுங்காற்குண்டிகை' என்று குறிப்பிடப்படுகிறது.[4]

குதிர் : தானியங்கள் சேமித்து வைப்பதற்குரிய மண்ணாலான சேமக்கலமாக இது சங்ககாலத்திலிருந்து வழங்கி வந்திருக்கிறது. இதில் நெல், வரகு, சேமித்து வைத்ததைப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.[5] தற்காலத்தில் சில பகுதிகளில் தாழி என்று வழங்கப் படும் கலனாக இருக்கலாம்.

கும்பம் : குடத்திற்குரிய பெயர்.[6]

முழிசி : பானைக்குரிய பெயர். சோறு சமைக்கும் பானையாக இது விளங்கிற்று. சங்க காலத்தில் தயிர் போன்ற திரவப்பொருள்களும் இதில் சேமித்து வைக்கப்பட்டன.[7]

கூடை : நாரால் செய்யப்பட்டது. பிற்காலத்தில் உலோகத்தினால் கூடை செய்தனர். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் நாயக்கர் காலத்தில் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடலுக்காகப் பொன்னால் செய்யப் பெற்ற கூடை செய்தளிக்கப்பட்டிருக்கிறது. இது இன்றும் அக்கோயிலில் இருந்து வருகிறது.

கெண்டி (கெண்டிகை) : குழாயுடன் கூடிய குவளை; சிறிய கலனாக விளங்கும் இதன் பக்கவாட்டில் நீர் வெளியேற குழாய் போன்ற தூம்பு அமைக்கப்பட்டிருக்கும்.[8]

கொட்டம் : சிறியபெட்டி.[9] பிற்காலத்தில் உலோகத்தினாலும் இதனைச் செய்தனர். தற்போது கொட்டான் என்று வழங்குகின்றனர்.

கொப்பரி : வாயகன்ற நீர் சேமித்து வைக்கும் அண்டா.[10] தற்போது கொப்புரை என்று அழைத்து வருகின்றனர்.

கொம்பு : நீரை வீசும் கொம்பு இதுவாகும்.[11] கொம்பு இசைக்கருவியினையும் குறிக்க அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.[12]

கோடிகம் : தட்டிற்குரிய பெயர்.[13]

---

1. சேந்தன்திவாகரம்.
2. SII. XIX. 238.
3. சேந்தன்திவாகரம்.
4. பெருங்கதை, உ.வே.சா, பக். 176.
5. பெரும்பாண். வரி. 186.
6. சேந்தன்திவாகரம்
7. பெரும்பாண். 98, 156, 366.
8. சேந்தன்திவாகரம்; SII. II. 91, 115.
9. சேந்தன்திவாகரம்.
10. மேலது.
11. மணிமேகலை. 28:10.
12. SII. VII. 1020.
13. சீவகசிந்தாமணி, பா. 352.

கோரம் : வட்டிலின் பெயர்.[1]

கைவட்டகை : கைப்பிடியுடன் விளங்கும் கிண்ணம்.[2]

சட்டுவம் : சமையலுக்குரிய கலன்.[3]

சட்டி : சமையல் சட்டி, சட்டிசோறு என்ற பெயரில் குறிப்பிட்ட அளவுள்ள சாப்பாடு, சட்டியில் வைத்து கோயில் யாத்திரிகர்களுக்கு பழங்காலத்தில் வழங்கப்பட்டது.[4] இதற்காகக் குயவர் மண்சட்டிகளை (கலன்களை) செய்து அளித்தனர். காய்கறிகள் சமைக்க இது பயன்படுத்தப்பட்டது.

சருவம் : வாயகன்ற பாத்திரம்.[5] சருவச்சட்டி, சருவப்பானை என்று இன்று வழங்கப் பட்டிருக்கிறது. தராவில் செய்த சருவம் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டது.[6]

சாடி : பெரிய பானை, தாழிக்குரிய பெயர். கள் ஊற்றி வைக்கப்பட்ட பானையாகப் புறநானூற்றில் இது குறிப்பிடப்படுகிறது,[7]

சுட்டி : சிறிய கலன். சுட்டிகலன் என்று பெருங்கதையில் இது குறிப்பிடப்படுகிறது.[8] சுண்ணம் வைக்க இது பயன்படுத்தப்பட்டுள்ளது.[9]

சுருக்கு (சுருவம்) : நெய்துடுப்பின் பெயர்.[10]

செப்பு : பல்வகைப் பொருட்கள் வைக்கப் பயன்படுத்தப்பட்ட சேமகலன், சாந்து பெய்த செப்பு, சுண்ணச்செப்பு, நானச்செப்பு, குலிகச் செப்பு, பவளச்செப்பு, வெற்றிலைச் செப்பு, முகவாசச் செப்பு, இந்திரநீலச் செப்பு என்று இலக்கியங்களில் பல்வகைச் செப்புகள் குறிப்பிடப்படுகின்றன.[11] இது சங்ககாலத்தில் தண்ணீர் அருந்த பயன்படுத்தப்பட்ட சிறிய கலனாக குறுந்தொகையில் குறிப்பிடப்படுகிறது [12] வடநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த செப்பு ஆரியச்செப்பு எனப்பட்டது.[13]

செம்பு : செப்புக்கலனே, செம்புகலன் என்று பிற்காலக் கல்வெட்டுகள், செப்பேடு களில் குறிப்பிடப்படுகிறது. பிடிசெம்பு என்ற ஒருவகைப் பாத்திரம் நாயக்கர் காலத்தில் இருந்திருக்கிறது.[14] 'பன்னீர்செம்பு' ஒன்று காஞ்சிபுரத்திலுள்ள கி.பி. 1532-ஆம் ஆண்டு கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

சேதிகை : மூங்கில் உழக்கிற்குரிய பெயராகக் கலித்தொகையில் குறிப்பிடப் படுகிறது.[15]

---

1. சேந்தன்திவாகரம்.
2. SII. II. 91.
3. SII. III. p. 240.
4. SII. XXII. 486; SII. VIII. 677.
5. இன்றும் வழக்கிலுள்ளது. பித்தளைக்குரிய பெயர்.
6. SII. XIX. 357.
7. புறநானூறு, பா. 258.
8. பெருங்கதை, உ.வே.சா. பக். 106.
9. மேலது. பக். 136, 159.
10. சேந்தன்திவாகரம்.
11. பெருங்கதை, பக். 43; சீவகசிந்தாமணி, பா. 24, 558, 838, 2198, 3047.
12. குறுந்தொகை, பா. 277.
13. பெருங்கதை, பக். 7; சீவகசிந்தாமணி, பா. 1146.
14. திருமலைநாயக்கர் காலச் செப்பேடுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு.
15. கலித்தொகை, பா. 96.

தசும்பு : கொப்பரைக்குரிய பெயர். பெரிய பாத்திரமாக இது இருந்திருக்கிறது. சங்ககாலத்தில் கள்ளை இதில் ஊற்றிப் புளிக்க வைத்திருக்கின்றனர். தயிரும் இதில் வைக்கப்பட்டிருக்கிறது.[1]

தட்டம் : உண்கலம். தட்டு என்று தற்காலத்தில் வழங்கப்படுகிறது. சோழர் காலக் கல்வெட்டுகளில் பொன்தட்டம், வெள்ளித்தட்டம் என்று பல்வகை உலோகத்தாலான தட்டுகள் குறிப்பிடப்படுகின்றன.[2]

தட்டி : தாம்பாளம்; அரைசல்லடத்திற்குரிய பெயர். சோழர் காலக் கல்வெட்டு ஒன்று 'திருவாலத்தி தட்டி' பற்றித் தெரிவிக்கிறது.[3]

தட்டு : உண்கலம்.

தடா : நெய் அக்கார அடிசில் வைக்க பயன்படுத்தப்பட்ட பாத்திரம்.[4] பானைக்குரிய பெயர்.[5]

தலா : பாக்கு போன்ற பொருட்கள் வைக்க உதவும் சிறிய கலன். இது பாக்குத் தலா என்று சோழர்காலக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.[6]

தவ்வி : அகப்பை[7] சட்டுவத்திற்குரிய பெயராக வழங்கப்பட்டது.[8]

தாலம் : உண்கலம். வேதபிராமணர் உண்பதற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.[9] கோயில்களில் ஸ்ரீபலி அளிப்பதற்குப் பொன், வெள்ளியில் தாலம் அளிக்கப்பட்டுள்ளது.[10]

தாழி : பெரிய மண்கலம். சங்ககாலத்தில் இறந்தவரைப் புதைக்க பயன்படுத்தப்பட்டது.[11] முதுமக்கள் தாழி என்று தற்காலத்தில் இது வழங்கப்படுகிறது. இதனை நீர் ஊற்றி வைக்கவும் பயன்படுத்துகின்றனர். இது சாடி என்றும் அழைக்கப்பட்டது.[12]

தளிகை : உண்கலத்தின் பெயர்.[13] வெண்கலம், வெள்ளி, பொன் போன்ற உலோகங்களில் செய்து கோயில்களுக்குப் பழங்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.[14] நாயக்கர் காலத்தில் கோயில்களில் பிரசாதம் வழங்கும் அளவுக் கலனாகவும் இது பயன்படுத்தப்பட்டது.[15]

துடுப்பு : மரக்கரண்டி

தூங்கல் : காய்கறி வகைகள் சேமித்து வைக்கும் தூக்கு. இது பித்தளையால் செய்யப்பட்டிருந்தது.[16]

---

1. புறம். 33.
2. SII. XIX. 23; SII. II. 91, 115.
3. SII. VII. 537.
4. பெரியாழ்வார். நாலாயிர. 26; நாச்சி. திருமொழி. நாலாயிர. 592.
5. சேந்தன் திவாகரம்
6. SII. XXVI. 278.
7. தெய்வீக உலா. வரி. 176.
8. சேந்தன் திவாகரம்.
9. SII. III. p. 240.
10. SII. XXIII. 576, SII. XIV. 46; SII. II. 91.
11. புறம். 228, 238.
12. சேந்தன்திவாகரம்.
13. மேலது.
14. SII. II. 91, 115; SII. VII. 891; SII. XXVI. 278.
15. SII. VI. 62.
16. SII. XXVI. 437.

தூபபாத்திரம் : புகையிடுவதற்குப் பயன்படுத்தும் பாத்திரம்.[1]

தூமானம் : கொள்கலத்தின் பெயர்.[2]

நாழி : அளவை, கல்வெட்டுகளில் அதிக அளவில் குறிப்பிடப்படுகிறது. கலித்தொகையில் முதன் முதலில் வருகிறது.[3]

நிறை : நீர்காலுக்குரிய பெயர்.[4]

பதலை : தாழிக்குரிய பெயர்.[5] சங்ககாலத்தில் விறலியர் போன்றவர்கள் இதனைக் காவடியில் தூக்கி ஊர் ஊராகச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது.[6] சேகரித்த பொருளைச் சேமித்து வைக்கும் கொள்கலமாக இது இருந்திருக்கவேண்டும்.[7]

படலிகை : வெற்றிலை, பூ போன்றவை வைக்கும் பெட்டி. வெள்ளியால் ஆன தட்டினை வெண்படலிகை என்று சிந்தாமணி கூறுகிறது.[8]

படிமகலம் . உருவத்துடன் கூடிய பாத்திரம், ஆதிச்சநல்லூரில் உருவங்களுடன் கூடிய செம்பு போன்ற உலோகங்களாலான பாத்திரங்கள் கிடைத்துள்ளன.[9]

படிக்கம் : தாம்பூல எச்சில் உமிழும் பாத்திரம். வெள்ளியாலும் பொன்னாலும் செய்யப்பட்டதை தஞ்சைக் கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது.

பாலிகை : பயிர் வளர்க்கும் தட்டு. திருமுளை வளர்க்க கோயில்களுக்குக் குயவரால் சோழர் காலத்தில் அளிக்கப்பட்டுள்ளது.[10]

பாத்திரம் : கலன்களைக் குறிக்கும் பொதுச்சொல். பத்தாம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.[11] பித்தளையில் தீபபாத்திரம் ஒன்று செய்து சித்தலிங்க மடம் கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது.[12]

பாண்டம் : கலன்களைக் குறிக்கும் பொதுச்சொல். கொள்கலம்.[13]

பானை : சங்ககாலத்திலிருந்து வழக்கில் இருந்துவரும் வாய்விரிந்து அடி குவிந்த கொள்கலம். திரவப்பொருள், திடப்பொருள் சேமித்து வைக்கும் சேமகலமாக இருந்து வந்துள்ளது, சங்ககாலத்தில் கம்மியர் செம்பு வைப்பதற்குரிய பாத்திரமாக இதனைப் பயன்படுத்தினர்.[14]

---

1. SII. XXVI. 732.
2. சேந்தன் திவாகரம்.
3. கலித்தொகை. 96.
4. சேந்தன் திவாகரம்.
5. மேலது.
6. இரவலர்கள் பரிசில் பெற்ற பொருட்களை இதில் வைத்து தூக்கிச் செல்வது வழக்கமாக இருந்திருக்க வேண்டும்.
7. புறம். 64, 103.
8. சீவகசிந்தா. பா, 826, 1209, 3031.
9. Ramachandran K.S., - Archaeology of South India, pp. 49-51.
10. SII. XVII. 222.
11. Ibid. XXVI. XXVI. 732.
12. Ibid. XXVI. 437.
13. சேந்தன் திவாகரம்.
14. நற்றிணை. பா. 153.

பிடவு : பானைக்குரிய பெயர்.[1]

பிழா : பூப்போன்று மலர்ந்த (விரிந்த) வாயுடைய கொள்கலம். இதனைச் சங்க காலத்தில் அரிசியைக் கொண்டு கள் தயாரித்தவர் தம் தொழிலுக்குப் பயன்படுத்தினர்.[2] இதனை 'படுவாய்கொள்கலம்' என்று சேந்தன்திவாகரம் குறிப்பிடுகிறது.

பிழார் ' நீர் இறைக்கும் கூடை[3]

பிங்காளம் : உலோகத்தாலான புதுவகைக் கலன். தஞ்சாவூர்க் கோயில் இராசராசன் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.[4] பொன், வெள்ளி முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட பிங்காளம் பாக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.[5]

புட்டி . நீர் இறைக்கும் கலன். புட்டியில் சேறும் புழுதியும் எடுத்து வந்ததாகப் பெரியாழ்வார் பாடல் ஒன்று தெரிவிக்கிறது.[6]

புட்டில் ; நீர் இறைக்கும் பாத்திரமாக இதனைச் சேந்தன்திவாகரம் குறிப்பிடுகிறது. கலித்தொகை காலத்தில் இது வேலைப்பாடு கொண்ட ஓலைப்பெட்டியையும் குறித்திருக்கிறது.[7]

பெட்டி ; சேமக்கலம்.

பேழை : சேமக்கலம். பேழையைக் குறிக்கக் காண்டம், கரகம், கமண்டம் குண்டிகை, கறப்பம், கெண்டிகை போன்ற சொற்களும் வழங்கப்பட்டதாகச் சேந்தன் திவாகரம் தெரிவிக்கிறது.

மஞ்சிகை - நெல், அரிசி போன்ற தானியங்கள் சேமித்து வைக்கப் பயன்படுத்தப் பட்ட பெட்டி.[8]

மந்திகி : தயிர் கடையும் தாழி[9]

மடல் : திருநீறு, சந்தனம், வைக்கும் கலம்.[10] பொன், வெள்ளி போன்ற உலோகங்களால் இது செய்யப்பட்டிருக்கிறது.

மடா : மடிப்புடைய பெரிய பாத்திரமாக சங்க இலக்கியத்தில் குறிப்பிடப் படுகிறது.[11]

மண்டை : மண்டையோடு வடிவில் அமைந்துள்ளது. சங்ககாலத்தில் புலவர், பாணர், உழவர் போன்றோர் இதனை உண்கலமாகவும் கொள்கலமாகவும் பயன்படுத்தியுள்ளனர்.[12] சிலப்பதிகாரத்தில் மதுரையில் கண்ணகிக் கோயிலுக்கு சால் சுத்தம் செய்ய

1. சேந்தன்திவாகரம்.
2. பெரும்பாண், 276.
3. சேந்தன்திவாகரம்.
4. SII. II. 91.
5. Ibid. XIX. 260.
6. நாலாயிரத் திவ்யபிரபந்தம், பா. 79.
7. கலித்தொகை, 80, 117.
8. பட்டினப்பாலை, வரி. 163.
9. சேந்தன்திவாகரம்.
10 சீவகசிந்தாமணி, பா. 1147
11. பதிற்றுப்பத்து, பா. 24.
12. புறம், 103, 119, 125

சுடுமண் மண்டையில் நீர் அளித்ததாக வருகிறது. இதுவே வடமொழியில் கபாலம் என்று வழங்கப்படுகிறது. சோழர் காலத்தில் பொன், வெள்ளி, அச்சு முதலியவற்றால் செய்யப்பட்டுள்ளது.[1]

மானயவட்டில் : முகத்தல் அளவைக் கலன். தஞ்சைக்கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.[2]

முட்டை : நெய் ஊற்ற உதவும் சிறு கரண்டி.[3]

மிடா : சமையலுக்கு உதவும் பெரிய கலன்.[4] பானைக்குரிய பெயர். கொள்கலமாகவும் அளவையாகவும் பயன்பட்டது.[5]

முகவாசச்செப்பு : சிந்தாமணியில் செப்பு வகையில் ஒன்றாகக் குறிப்பிடப் படுகிறது.[6]

மூக்குவட்டகை : மூக்கு போன்ற வாயுடைய வட்டக்கிண்ணம். நெய்யிடுவதற்கு இருந்த கலன் மூக்கு மத்தளிகை என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.[7]

மூழி : அகப்பை[8]

மூழிவாய் : பூப்பெட்டி, பூக்கூடை[9]

மூழை : அகப்பை[10]

யவனச்செப்பு : யவனநாட்டுச் செப்புக்கலன்[11]

யவனப்பேழை : யவனநாட்டுப் பெட்டி[12]

வட்டகை : கூடை, தட்டு, சிறுகிண்ணம் என்பதைக் குறிக்க வழங்கப்படுகிறது.[13] இதில் கைவட்டகை, மூக்கு வட்டகை என்று பலவகைக் கலன்கள் இருந்திருக்கின்றன.[14]

வட்டம் : நீர்க்காலுக்குரிய பெயர்[15]

வட்டி : பெட்டியைக் குறிக்க வழங்கப்பட்ட சொல். படியளவு கொண்ட அளவை யைக் குறிப்பதாகத் தொல்காப்பியத்தில் வருகிறது.[16] பிற்காலத்திலும் வட்டி அளவையாக

1. SII. XXIII. 1, 229, 576.
2. Ibid. II. 91, 115.
3. மேலது.
4. சேந்தன்திவாகரம்.
5. SII. XXII. 10.
6. சீவகசிந்தாமணி, பா. 838.
7. SII. XXVI. 742.
8. சேந்தன்திவாகரம்.
9. மேலது, சீவகசிந்தாமணி, பா. 533.
10. சேந்தன்திவாகரம்.
11. சீவகசிந்தாமணி, பா. 1146.
12. மேலது. 114, 557.
13. சேந்தன்திவாகரம்; சீவகசிந்தாமணி, 938.
14. SII. XXVI. 742; SII. II. 91, 115.
15. சேந்தன்திவாகரம்.
16. தொல்காப்பியம்.

இருந்திருக்கிறது.[1] சங்ககாலத்தில் தானியங்களைச் சேமிக்கவும் மீன், நிணம் போன்றவற்றை வைத்திருக்கவும் இது பயன்படுத்தப்பட்டது.[2] குறுவட்டி, பெருவட்டி என்று இது அளவை வைத்துப் பெயரிடப்பட்டது.[3] வட்டியில் பொருளைச் சுமந்து வாணிபம் செய்வாரை 'வட்டி வாணிபம் செய்வார்' எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[4]

வட்டு : உண்கலம்.

வட்டில் : கிண்ணம். நீர் உண்ண பயன்படுத்தப்பட்டது. பொன், வெள்ளி போன்ற உயர்ந்த உலோகங்களாலும் செய்யப்பட்டது.[5] தாரைதாள் வட்டில், மாயை வட்டில் என்று இவ்வட்டிலில் பலவகை இருந்திருக்கிறது.[6]

வள்ளம் : சிறிய கிண்ணத்தின் பெயர். சங்கப்பாடல் ஒன்று இதில் பால்கிழங்கு வைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடுகின்றது.[7] எனவே பால் போன்ற உயர்ந்த திரவங்கள் அருந்த இக்கலனைப் பயன்படுத்தியிருக்கலாம்.

---

1. SII. VIII. 491; SII. XVII. 304.
2. புறம். 33.
3. குறுந்தொகை, 156
4. SII. XIX. 22.
5. SII. XXII. 275
6. SII. II. 91, 115.
7. நற்றிணை, 297.

கலன்களின் பெயர்கள் - பட்டியல் ஒன்று

அகல்	காக்காழி	தசும்பு	மஞ்சிகை
அகளம்	காளாஞ்சி	தட்டம்	மந்திநி
அம்பணம்	காண்டம்	தட்டி	மடல்
அரிவாணம்	காரகம்	தட்டு	மடா
ஆரியச்செப்பு	கிட்டி	தடா	மண்டை
ஆலாத்திதட்டம்	கிண்ணம்	தலா	மத்தளிகை
இடங்கர்	குடம்	தாலம்	மானயவட்டில்
இடா	குடாரம்	தவ்வி	முட்டை
இலைச்செப்பு	குடுவை	தாழி	மிடா
இலைத்தட்டு	குண்டம்	தளிகை	முகவாசச்செப்பு
ஈச்சொப்பிகை	குண்டிகை	துடுப்பு	மூக்குவட்டகை
(ஈயோட்டி)	குதிர்	தூங்கல்	மூழி
உழக்கு	கும்பம்	தூபபாத்திரம்	மூழிவாய்
ஒட்டுட்டி	குழிசி	தூமானம்	மூழை
ஓலோமில்	கூடை	நாழி	யவனச்செப்பு
கச்சோலம்	கெண்டி	நிறை	யவனப்பேழை
(கச்சோரம்	(கெண்டிகை)	பதலை	வட்டகை
கச்சோளம்)	கொட்டம்	படலிகை	வட்டம்
கஞ்சனை	கொப்பரி	படிம கலம்	வட்டி
கடகம்	கொம்பு	படிக்கம்	வட்டு
கடாரம்	கோடிகம்	பாலிகை	வட்டில்
கடிஞை	கோரம்	பாத்திரம்	வள்ளம்
கடிப்பம்	கைவட்டகை	பாண்டம்	
கடையால்	சட்டுவம்	பானை	
கண்டிகை	சட்டி	பிடவு	
கரகம்	சருவம்	பிழா	
கரண்டம்	சாடி	பிழார்	
கலசம்	சட்டி	பிங்காளம்	
கலம்	சுருக்கு (சுருவம்)	புட்டி	
கழை	செப்பு	புட்டில்	
கன்னல்	செம்பு	பெட்டி	
கறண்டிகைச்செம்பு	சேதிகை	பேழை	

கலன்களின் பெயரும் காலமும் - பட்டியல் இரண்டு

பெயர்கள்	கி.பி. 350-க்கு முன் (1)	கி.பி. 350-900 (2)	கி.பி. 900-1400 (3)	கி.பி. 1400-க்கு பின் (4)
அகல்	V	—	—	—
அகளம்	—	—	—	—
அம்பணம்	V			
அரிவாணம்				
ஆரியச்செப்பு		V		
ஆலாத்தித்தட்டம்			V	
இடங்கர்		V		
இடா		V		
இலைச்செப்பு			V	
இலைத்தட்டு			V	
ஈச்சொப்பிகை (ஈசொப்பி)		V	V	
உழக்கு	V			
ஒட்டுட்டி			V	
ஒலோமில்			V	
கச்சோலம் (கச்சோரம்)	V			
கஞ்சனை	V			
கடகம்			V	
கடாரம்	V			
கடிஞை	V			
கடிப்பம்	V			
கடையால்	V			
கண்டிகை		V		

	(1)	(2)	(3)	(4)
கரகம்	V			
கரண்டம்		V		
கலசம்		V		
கலம்	V			
கழை	V			
கன்னல்	V			
கறண்டிகைச்செப்பு		V	V	
காக்காழி			V	
காளாஞ்சி			V	
காண்டம்		V		
காரகம்		V		
கிட்டி		V		
கிண்ணம்		V		
குடம்		V		
குடாரம்		V		
குடுவை		V		
குண்டம்		V		
குண்டிகை	V			
குதிர்	V			
கும்பம்		V		
குழிசி	V			
கூடை		V		
கெண்டி (கெண்டிகை)		V		
கொட்டம்		V		
கொப்பரி		V		

	(1)	(2)	(3)	(4)
கொம்பு			V	
கோடிகம்		V		
கோரம்		V		
கைவட்டகை			V	
சட்டுவம்		V		
சட்டி			V	
சருவம்			V	
சாடி	V			
சுட்டி		V		
சுருக்கு (சுருவம்)		V		
செப்பு	V			
செம்பு				V
சேதிகை	V			
தசும்பு	V			
தட்டம்		V		
தட்டி				V
தட்டு			V	
தடா		V		
தலா			V	
தாலம்		V		
தவ்வி		V		
தாழி	V			
தளிகை		V		
துடுப்பு		V		
தூங்கல்			V	
தூபபாத்திரம்			V	

	(1)	(2)	(3)	(4)
தூபமானம்		V		
நாழி	V			
நிறை		V		
பதலை	V			
படலிகை		V	V	
படிம கலம்			V	
படிக்கம்			V	
பாலிகை		V		
பாத்திரம்			V	
பாண்டம்		V		
பானை	V			
பிடவு		V		
பிழா	V			
பிழார்		V		
பிங்காளம்			V	
புட்டி		V		
புட்டில்	V			
பெட்டி		V		
பேழை		V		
மஞ்சிகை	V			
மடல்		V		
மடா	V			
மண்டை	V			
மத்தளிகை			V	
மானயவட்டில்			V	
மிடா		V		

	(1)	(2)	(3)	(4)
முட்டை		V		
முகவாசச்செப்பு			V	
மூக்குவட்டகை			V	
மூழி			V	
மூழிவாய்			V	
மூழை			V	
யவனச்செப்பு		V		
வட்டகை			V	
வட்டம்		V		
வட்டி	V			
வட்டில்			V	
வட்டு			V	
வள்ளம்		V	V	

அகழாய்வில், களஆய்வில் கண்டறிந்த கலன்கள்

புதியகற்காலம் முதல் நாயக்கர் காலம் முடியவுள்ள கலன்கள் தமிழ்நாட்டில் அகழாய்விலும் களஆய்விலும் கண்டறிந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் காலவாரியான ஆய்வு தமிழ்நாட்டில் கலன்கள் வளர்ந்த வரலாற்றைத் தெளிவாக உணர்த்துகிறது.

புதிய கற்காலக் கலன்கள்

தமிழ்நாட்டில் புதிய கற்காலப் பண்பாடு கி. மு. இரண்டாயிரம் அளவில் நிலவியிருக்கிறது[1] தமிழ்நாட்டின் வடபகுதியிலேயே இப்பண்பாட்டைச் சார்ந்த மக்கள் பயன் படுத்திய கலன்கள் கிடைத்துள்ளன. இவை மனிதன் மட்கலன்களைச் செய்யக் கற்றுக் கொண்ட காலத்தினைச் சார்ந்தவை ஆகும். இதனால் இவை மிக எளிமையாகவும் மிகுந்த வேலைப்பாடும் தொழில்நுட்பமும் அற்றவையாயும் திகழ்கின்றன. பையம்பள்ளி, முள்ளிக் காடு, தலைமலை, பன்னிமருவு, பெத்தல்மலை போன்ற இடங்களில் இக்கலன்கள் கிடைத் துள்ளன.[2] சாம்பல்வண்ண மட்கலன்கள், மங்கலான தோற்றம் கொண்ட மட்கலன்கள், சிவப்புநிற மட்கலன்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆகும் இவை கையாலும் மிக மெதுவாகச் சுற்றும் சுழல்மேடையாலும் உருவாக்கப்பட்டவையாகும். இக்கலகன்ளில் சிறுவாய் உடைய கிண்ணங்கள் அதிக அளவில் கிடைக்கக்கூடிய முக்கிய கலன்கள் ஆகும். பக்கவாட்டில் குழாயுடன் கூடிய கலன்களும் புதிய கற்காலத்தில் செய்யப்பட்டுள்ளன[3] சாம்பல்வண்ணக் கலன்களின் விளிம்பில் செங்காவியினால் வண்ணம் தீட்டிப் புனைவு செய்துள்ளனர். பையம்பள்ளி அகழாய்வில் புதிய கற்கால மனிதன் வீட்டின் உட்புறம் தானியங்களைச் சேமித்து வைக்க மண்ணாலான பெரிய சாடிகளையும் செய்து வைத்திருந்த தைப் பையம்பள்ளி அகழாய்வு வெளிப்படுத்தியுள்ளது.[4]

பெருங்கற்படைச் சின்னங்களில் மட்கலன்கள்

புதிய கற்காலத்தினை அடுத்து வந்த பெருங்கற்படை காலப்பண்பாட்டு ஈமச் சின்னங்கள் கி. மு. 500க்கும் 200க்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாடெங்கும் காணப் படுகின்றன. இவை சங்ககால மக்களால் தோற்றுவிக்கப்பட்டவை ஆகும். இவ்வீமச் சின்னங்களில் ஏராளமான மட்கலன்கள் கிடைத்துள்ளன. இவை மட்கலன்கள் செய்வதில் மனிதன் உயர்நிலையினை எட்ட முனைந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. மண்ணை மட்டுமல்லாமல் இரும்பு, வெண்கலம், தங்கம் போன்ற உலோகங்களையும் பயன்படுத்தி மக்கள் இக்காலத்தில் கலன்கள், கருவிகள் முதலியவற்றைச் செய்திருக்கிறார்கள்.

இக்காலத்தில் ஈமப்பொருட்களை வைத்து புதைப்பதற்கென்று பெரியமண் தாழிகளை உருவாக்கியிருக்கின்றனர். பல்வேறு வண்ணம், வடிவம் கொண்ட மட்கலன்கள் இக் காலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. இவை தலைகீழாகக் கவிழ்த்திச் சுடப்பட்டதால் உட்புறம் கருமையாகவும் வெளிப்புறம் சிவப்பாகவும் உள்ளன. இக்கறுப்பு சிவப்பு மட்கலன் களே இக்கால மக்கள் மட்கலப் பண்பாட்டின் வெளிப்பாடாகும். அவர்களது சிறப்பிற்குரிய கலன்களுமாகும். இதைத்தவிர சிவப்புமட்கலன், கறுப்புமட்கலன், செம்பழுப்பு வண்ணப்பூச்சு மட்கலன் (Russet coated ware) ஆகியவையும் இக்காலத்திற்குரிய கலன்களாக விளங்கு கின்றன.

இக்கலன்கள் குன்னத்தூர், சானூர், அமிர்தமங்கலம், கோவலன்பொட்டல், கொடு மணல் போன்ற பல இடங்களிலுள்ள சங்ககாலப் பெருங்கற்படை ஈமச்சின்னங்களிலிருந்து

1. தொல்பழங்காலம், பக். 196-197.
2. Neolithic and Megalithic cultures in Tamilnadu, pp. 31-59.
3. Gurumurthy, Ceramic Tradition in South India, p. 47.
4. தொல்பழங்காலம், 218-220.

வெளிப்படுத்தப்பட்டன.[1] இவையனைத்தும் வேகமாகச் சுழலும் சக்கரங்களைக் கொண்டு செய்யப்பட்டவையாகும். மென்மையாகவும் பளபளப்பாகவும் இவை காணப்படுகின்றன.

கோவை, தருமபுரி, ஈரோடு மாவட்டங்களில் கிடைத்த மட்கலன்களின் மீது வெண்மையான கோடுகளால் அலங்காரம் செய்து அவற்றின்மீது செங்காவிப் பூச்சும் அளிக்கப்பட்டுள்ளன (Russet coated and painted ware). மேலே கண்ட கலன்களில் மண்டைகள், தட்டுகள், மூடிகள் ஆகியவற்றின் வடிவங்களே அதிக அளவில் காணப்படுகின்றன. மண்டை வடிவக் கலன்களில் பல்வேறு வடிவங்கள் உள்ளன. அவற்றின் அடிப்பகுதி வட்டமாகவும் தட்டையாகவும் கூம்பிய நிலையிலும் வடிக்கப்பட்டுள்ளன.[2]

கலன்கள் வைப்பதற்கென்று மண்ணாலான நிலைகள் (பிரிமனை) உடுக்கை வடிவில் இக்காலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று, நான்கு கால்களையுடைய நீள்வடிவக் குடுவைகளும் இக்காலத்தில் வழக்கில் இருந்துள்ளன. பல கால்களையுடைய விலங்குகளின் வடிவங்கொண்ட ஈமப்பேழையும் (Sarcophagus) முதுமக்கள் தாழிகளோடு இக்காலத்தில் இருந்துள்ளன.[3]

ஆதிச்சநல்லூர், நீலகிரி பெருங்கற்சின்னங்களில் வெண்கலத்தாலானப் பரிகலன்களையும் பிற பொருட்களையும் கண்டறிந்துள்ளனர். மண்டை, சாடி, குவளை, பிரிமனை ஆகிய வடிவங்கள் வெண்கலப் பரிகலன்களில் குறிப்பிடத்தக்கவையாகும். இக்கலன்களின் மீதுள்ள மூடிகளில் ஆடு, மாடு, எருமை, மான், புலி போன்ற விலங்குகளின் உருவங்களும் சேவல் போன்ற பறவையினங்களின் உருவங்களும் பொருத்தப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூரில் மட்டும் நூற்று இருபத்து மூன்று வெண்கலன்கள் தோண்டி எடுக்கப்பட்டு அவை தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன.[4] ஆதிச்சநல்லூரில், கிடைத்ததைவிட நேர்த்தியான வெண்கலத்தாலான கலன்கள் நீலகிரியில் கிடைத்துள்ளன. இங்கும் விலங்குகளின் உருவங்கள் கொண்ட கலன்களின் மூடிகள் கிடைத்துள்ளன. ஆனால் இவை மண்ணால் செய்யப்பட்டவையாகும். இவற்றோடு செம்பினாலும் செய்யப்பட்ட கலன்கள் இங்கு கண்டறியப்பட்டுள்ளன. இங்கு கிடைத்த கலன்கள் வெளிநாட்டுக் கலன்களோடு ஒப்பிடத்தக்க வேலைப்பாடு கொண்டவையாய் விளங்குகின்றன.[5]

வரலாற்று நகரங்களில் கிடைத்த கலன்கள்

தமிழ்நாட்டில் நாகரிக வளர்ச்சியடைந்த ஆற்றங்கரை நகரங்கள் துறைமுகப் பட்டினங்கள் ஆகியவற்றில் நடைபெற்ற அகழாய்வுகளில் நேர்த்தியான உள்நாட்டு, வெளிநாட்டு மட்கலன்கள் கிடைத்துள்ளன. பெருங்கற்படை சின்னங்களில் கிடைத்துள்ள அனைத்து வகைக் கலன்களும், சங்ககால மக்கள் வாழ்விடங்களில் செய்யப்பட்ட அகழாய்விலும் மேற்பரப்பு ஆய்விலும் கண்டறியப்பட்டுள்ளன. கறுப்பு சிவப்பு மட்கலன்கள் மீதும் சிவப்புகலன்கள் மீதும் ரசட் வண்ணம் பூசப்பட்டு மதுரை, திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் மேற்குமலைத் தொடரையொட்டியுள்ள ஊர்களிலும் கிடைக்கின்றன.

கோவைக்கு அருகிலுள்ள வெள்ளலூரில் சங்ககாலத்தினைச் சார்ந்த தங்கத் தாம்பாளம் ஒன்று கிடைத்துள்ளது. அவிநாசியில் ரோம்நாட்டு செப்புச்சாடி ஒன்று கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.[6]

---

1. Archaeology of South India - Tamilnadu, pp. 99, 100. Ceramic Tradition in South India, pp. 106-107, கள ஆய்வில் அறியப்பட்டது.
2. தொல்பழங்காலம், 218-220
3. Archaeology of South India - Tamilnadu, p. 57
4. Ibid. p. 65.
5. Ibid. p. 65-66.
6. கருணானந்தன் இரா. ப., - தமிழ் நாட்டுப் பாத்திரங்கள், வளரும்தமிழ், மார்ச். 1990.

வெளிநாட்டு மட்கலன்கள்

ரோமானியரது மட்கலன்களும் சீனநாட்டு மட்கலன்களும் தமிழ்நாட்டில் கிடைக்கும் வெளிநாட்டு கலன்களில் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகப் பட்டினங்களிலும் உள்நாட்டு நகரங்களிலும் இவை கிடைத்துள்ளன. ரோம்நாட்டு மட்கலன்களின் தாக்கத்தால் அதேபோன்ற கலன்களும் தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ளன. வடஇந்திய மௌரியர் காலத்து கலன்களும் வணிகத் தொடர்பால் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளன.

ரோமானியர் கலன்கள்

ரோமானியரது மட்கலன்கள் மிக உயர்தரம் படைத்தவை. பளிச்சிடும் வண்ணமும் மிருதுவான தன்மையும் கொண்டு இவை அமைந்திருக்கின்றன. இவற்றில் அரிட்டைன் கலன் (Arretine ware), ரௌலட்டட் கலன் (Rouletted ware), அம்பொரா (மதுக் குடுவை-Amphorae) என்ற மூவகைக் கலன்கள் குறிப்பிடத்தக்கவையாகும். அரிட்டைன் வகை மட்கலம் இளஞ்சிவப்பு வண்ணத்தில் மிளிரும் தன்மையுடையது. இக்கலன்கள் பெரும்பாலும் கிண்ணம், தட்டு வடிவங்களில் அமைந்திருக்கின்றன. அரிக்கமேட்டில் அரிட்டைன் கலன்கள் பல கிடைத்துள்ளன. அவற்றின் அடியில் குயவர்கள் பொறித்த எழுத்துக்கள் உடைய முத்திரைகள் காணப்படுகின்றன. இவற்றின் காலம் கி பி. 20-50 எனக் கணித்துள்ளனர்.[1] இவற்றில் சில கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்திருக்கலாம் என்று விமலா பெக்லி கருதுகிறார்.[2]

ரௌலெட்டட் கலன்கள் தட்டு வடிவம் கொண்டவையாக அமைந்துள்ளன. இத்தட்டுகளின் உட்புறம் புள்ளிகளை வட்டவடிவில் பல வரிசைகளில் பதித்து அணி செய்துள்ளனர். இவ்வலங்கார புனைவின் பெயராலேயே இக்கலம் இப்பெயரிடப்பட்டுள்ளது. இவற்றின் காலம் கி. மு. 200 - கி. பி. 300க்கும் இடைப்பட்டதாகும்.[3] அரிக்கமேடு, காஞ்சிபுரம் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், அழகன்குளம் போன்ற பல இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் ரௌலட்டட் கலன்கள் கண்டறியப்பட்டுள்ளன. இளஞ்சிவப்பு கலந்த சாம்பல் வண்ணம், சாம்பல் வண்ணம், கறுப்பு வண்ணம் ஆகிய நிறங்களில்; பல வேறுபாடுகளுடன் விளங்கும் ரௌலட்டட் மட்கலன்கள் கிடைத்துள்ளன. அழகன்குளம் அகழாய்வில், எட்டு வகையான ரௌலட்டட் கலன்கள் கண்டறியப்பட்டுள்ளன.[4]

அம்பொரா வகைக் கலன் தடித்த முறையில் உருவாக்கப்பட்ட ரோம்நாட்டு மதுசாடியாகும். வசவசமுத்திரம் அகழாய்வில் ரோம்நாட்டு மதுசாடியின் கழுத்துப் பகுதி முழுமையான நிலையில் கிடைத்துள்ளது.[5] அரிக்கமேடு, காஞ்சிபுரம் முதலிய இடங்களிலும் இக்கலன் கிடைத்துள்ளது. இக்கலன் மதுவை ஊற்றிப் புளிக்க வைப்பதற்காகப் பூமியில் புதைக்கப் பயன்பட்டிருக்கிறது. இது அடிப்புறம் கூம்புடன் பக்கவாட்டின் இருபுறமும் பிடிகளுடன் அமைந்திருக்கும். யவனர் (ரோமானியர்) இக்கலன்களிலேயே ரோம்நாட்டு மதுவை நிறைத்துத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்திருக்கின்றனர். இம்மதுவை (தேறல்) தமிழ்நாட்டு மன்னர்கள் பொற்கிண்ணங்களில் ஊற்றிப் பருகியிருப்பதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.[6] யவனரது அம்பொரா கலன்களைப் போன்றே தமிழ்நாட்டிலும் மதுக் குடுவைகள் செய்யப்பட்டு பூமிக்கடியில் வைத்துப் புதைக்கப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரம்

1. Ceramic Tradition in South India, pp. 298-300.
2. Dr. Vimala Begley, Rome and India - The ancient Sea Trade, pp. 176-188.
3. Ibid; pp. 300-302.
4. Ibid.
5. Nagaswamy R., Abdul majeed A., Vasavasamudram Excavation, State Department of Archaeology, Madras.
6. இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்ற பாண்டிய மன்னன், யவனர் கொண்டு வந்த தேறலைப் பொற்கிண்ணத்தில் மகளிர் கொடுக்க அருந்தியதாகப் புறநானூறு தெரிவிக்கிறது.

அகழாய்வுக் குழியில் மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட சங்ககாலத்தினைச் சார்ந்த நம்நாட்டு மதுச்சாடிகள் கண்டறியப்பட்டுள்ளன.

முத்திரைப் புனைவு கலங்கள்

இவ்வகைக் கலமும் வெளிநாட்டிலிருந்து வந்த கலங்களில் ஒன்றாகும். ரோம்நாட்டு உயர்கலையின் தரத்தினைக் காட்டும் வகையில் இவை அமைந்துள்ளன. இக்கலன்களை மண்ணால் செய்த பிறகு, அவை சுடப்படாமல் பச்சையாக இருக்கும்போதே அவற்றின் மீது பல்வகை உருவங்கள் உடைய முத்திரைகளைப் பதித்து அணி செய்துள்ளனர். இவ்வுருவங்கள் புடைப்பு நிலையில் காண்பதற்குக் கவினுறக் காட்சியளிக்கும். இவ்வகைக் கலன்கள் தமிழ் நாட்டில் அரிக்கமேடு, அழகன்குளம் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. மயில், மீன், இலை வடிவ உருவங்கள் பதித்த முத்திரைப் புனைவு கலன்கள் அழகன்குளத்தில் கிடைத்தன. இது தவிர உட்புறம் குழிவாகப் பதிவு செய்து உருவாக்கிய கலன் ஒன்று கிடைத்துள்ளது. இதில் வெளிநாட்டுக் குதிரை வீரனின் உருவம் ஒன்று காணப்படுகிறது.[1]

அழகன்குளம்

ரோம்நாட்டு மட்கலத்தின் தாக்கம் அழகன்குளத்தில் புதுவகை கலன் ஒன்றை உருவாக்குவதற்குக் காரணமாக அமைந்தது. ரோம்நாட்டு கலன் போன்றே சிறந்த தொழில் நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட கலமாக இளஞ்சிவப்பு வண்ணத்தில் இது திகழ்கிறது. இதன் தோற்றத்தினை அறிய முடியாத நிலையில் இதனை ஆப்கன் நாட்டுக் கலன், ஆப்பிரிக்க நாட்டுக் கலன் என்று முதலில் அழைத்தனர். ஆனால் இவற்றில் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் சுடப்படாத நிலையிலேயே பொறித்திருப்பதைக் கொண்டு இவை அழகன்குளம் பகுதியிலேயே உருவாக்கப்பட்ட கலனாக இருக்க வேண்டும் என்று தற்போது முடிவு செய்துள்ளனர். இவ்வகைக் கலன்கள் தமிழ்நாட்டில் வேறு எவ்விடத்திலும் கிடைக்காத காரணத்தினால் இது கிடைத்த இடத்தினை வைத்து இதனை 'அழகன்குளம் கலன்' என்று அழைக்கின்றனர். அழகன்குளம் பகுதியிலிருந்து இவை பிறநாட்டுப் பகுதி களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றும் கருதுகின்றனர்.

வடஇந்திய கறுப்புவண்ணக் கலன்கள் (Northern Black Polished ware)

மௌரியர் காலத்துக் கலன்கள் என்று வரையறுத்துக் கூறப்படும் காக்கைப்பொன் போன்று மின்னும் வடஇந்திய கருமைநிற கலன்களும் தமிழ்நாட்டு அகழாய்வில் கொற்கையில் முதன்முதலில் கிடைத்தது.[2] அது குறித்து ஐய்ப்பாடு அறிஞர்களிடையே நிலவியது. ஆனால் இவை வடஇந்திய கருமைநிறக் கலன்களே என்பதை உறுதிப் படுத்தும் முறையில் அழகன்குளம் அகழ்வாய்வில், இவ்வகைக் கலன்கள் பல கிடைத் துள்ளன. இவற்றை மௌரியர் காலத்ததே (கி.மு. 400) என்று கணித்துள்ளனர்.[3] தமிழக வரலாற்றில் மௌரியர் தொடர்பைக் காட்டும் மிக இன்றியமையாத சான்றாக இவை திகழ்கின்றன.

சீனநாட்டு மட்கலன்கள்

செலடான் கலன் (celedon ware), போர்சிலின் கலன், (porcelin ware), என்றழைக்கப் படும் சீனநாட்டு இருவகைக் கலன்கள் தமிழ்நாட்டில் அகழாய்விலும் மேற்பரப்பு ஆய்விலும் கிடைத்துள்ளன. செலடான் வகைக் கலன் சோழர் காலத்திலும் பிற்காலப் பாண்டியர்

---

1. Ceramic Tradition in South India, pp. 303-304.
2. நடன. காசிநாதன், அழகன்குளத்து அரிய பானையோடுகள், மதுரை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, மதுரை 20-9-92, தட்டச்சுப்படி Alagankulam Excavation - A Preliminary Report.
3. Damilica vol. I, State Department of Archaeology, Madras. Dr. B. B Lal, the eminent Archaeologist who examined the sherds had confirmed that these are NBP ware.

காலத்திலும் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது. அதற்குப் பின்பே வெண்மை வண்ணம் கொண்ட போர்சிலின் வகை வந்துள்ளது. செலடான் வகைக் கலன் கடற்பாசி நிறத்தில் கரும்பச்சையாகவும் இளம்பச்சையாகவும் காட்சியளிக்கும். மேலும் அடிப்பகுதியின் சுற்று வளையத்தில் இளஞ்சிவப்பு வண்ணக் கோடு காணப்படும். சிறியதாகவும், பெரியதாகவும் கிண்ணங்களாவும் குடுவைகளாகவும் இக்கலன்கள் அமைந்திருந்தன.[1] அரிக்கமேடு, தரங்கம்பாடி, பெரியபட்டினம், பழைய காயல்பட்டினம் போன்ற கடற்கரைப் பட்டினங்களிலும் சில உள்நாட்டு நகரங்களிலும் செலடான் வகைக் கலன்கள் கிடைத்துள்ளன.[2] பெரியபட்டினத்தில் நடைபெற்ற அகழாய்வில் பல்வகையான செலடான் கலன்கள் வெளிப்பட்டன.[3] இராசபாளையம் அருகிலுள்ள மலைப்பகுதியில் சீனநாட்டு எழுத்துடன் கூடிய சிறிய செலடான் கலன் ஒன்று கிடைத்துள்ளது.[4] பாஞ்சாலங்குறிச்சி அகழாய்வில் போர்சிலின் வகை சீனநாட்டுப் பீங்கான்கள் கிடைத்துள்ளன.[5] வெண்மையான இக்கலன்கள் மீது நீலநிறத்தில் வண்ண ஓவியப் புனைவுகள் காணப்படுகின்றன. இவ்வகை கலன்கள் தமிழ்நாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன. திருவாரூர் கோயிலில் பெரிய வடிவில் அமைந்த இக்கலன்கள் பல உள்ளன.[6]

கலை வரலாற்றில் கலன்கள்

தமிழ்நாட்டில் காணப்படும் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றின் மூலமும் சிலவகைக் கலன்களைப் பற்றி அறியமுடிகிறது. இவை அவ்வடிவத்தினை நன்கு அறிந்து கொள்ள துணை நிற்கின்றன.

பல்லவர் காலத்தினைச் சார்ந்த நடுகற் சிற்பங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் இறந்த வீரனின் சிற்பத்தின் காலடியில் அவனுக்குப் படைக்கப்பட்ட கள் நிறைந்த கலயமும் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.[7] இவை குடுவை வடிவில் வேலைப்பாடு கொண்ட மூடியுடன் விளங்குகிறது. சங்ககாலத்தில் வீரமுடன் இறந்துபட்ட வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லுக்குக் கள் வைத்துப் படைத்து வழிபடும் மரபு இருந்திருப்பதைப் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.[8] எனவே இக்கலயம் கள் வைத்து வழிபடப்பட்ட கலயமாக இருக்க வேண்டும். இக்கலயத்தின் பக்கவாட்டில் கள்ளை ஊற்றுவதற்கென்று அமைக்கப்பட்ட சிறிய தூம்பு வடிவிலுள்ள குழாயும் உள்ளது என்பதை மகேந்திரவர்மனின் எடுத்தனூர் நடுகல் புலப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் திருமகளுக்கென்று எடுக்கப்பட்ட பல்லவர் காலப் புடைப்புச் சிற்பங்களிலும் தனித்த நிலையிலுள்ள சிற்பங்களிலும் அவளை யானைகள் (பொற்)குடம் கொண்டு நீராட்டுவது போன்ற காட்சியினைக் காணலாம். மாமல்லபுரத்து வராக மண்டபத்திலுள்ள திருமகளை இரண்டு யானைகள் குடம் கொண்டு நீராட்டுவதைப் போன்று சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்து கிருஷ்ணமண்டபத்திலுள்ள சிற்பங்களில் ஆயர்கள் பயன்படுத்தும் அடுகலன்களைப் பார்க்கமுடிகிறது. கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து

---

1. Alagankulam Excavation - A Preliminary Report.
2. R.E.M. Wheeler, Arikamedu An Indo-Roman Trading-Station on the East coast of India. Ancient India, 2, pp. 17-124.
3. கள ஆய்வில் அறியப்பட்டது.
4. மதுரை அரசு அருங்காட்சியகத்தில் தற்போது இக்கலன் உள்ளது. இது குறித்து தகவல் தந்தவர் நா. சுலைமான், காப்பாட்சியர் ஆவார்.
5. Damilica vol. I.
6. இது குறித்து தகவல் தந்தவர் தொல்லியல் துறை பதிவு அலுவலர், திரு. மா. சந்திரமூர்த்தி ஆவார்.
7. தொல்லியல் துறை பதிவு அலுவலர் திரு. க. குழந்தைவேலன் இது குறித்து கருத்தளித்தார்.
8. அகநானூறு, பா. 35.

நிற்கும் கண்ணனின் காலடியில் காட்டப்பட்டிருக்கும் ஆயர்களின் அமைதியான வாழ்க்கைச் சித்தரிப்பில் ஆயன் ஒருவன் தனது கால்களுக்கு இடையே பாத்திரம் ஒன்றைக் கிடுக்கிப் பிடித்துக்கொண்டு பால் கறக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. இப்பாத்திரம் திவ்யப் பிரபந்தத்தில் குறிப்பிடப்படும் 'கடையால்' என்ற பால் வைத்திருக்கும் கலனாகவே இருக்க வேண்டும். இது தவிர ஆயர்களின் உறியிலும் சில சேமகலன்கள் இருப்பதை இச்சிற்பக் காட்சி காட்டுகிறது.

திருவெள்ளறை போன்ற இடங்களிலுள்ள பல்லவர் காலத்துச் சிற்பங்களில் கண்ணன் 'குடம்' கொண்டு ஆடும் வரிக்கூத்து இடம்பெற்றுள்ளது. மூவுலகையும் அளக்க வாமனனாக வந்த திருமாலின் கரத்தில் 'கமண்டலம்' (கரகம்) இருப்பது போன்ற சிற்பங்கள் பல்லவர் காலத்திலிருந்து தமிழகச் சிற்பக்கலை வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கதாக நாமக்கல் அதியமான் வழியினர் எடுத்த குடைவரைக் கோயிலிலுள்ள வாமனனைக் கூறலாம். திருவெள்ளறையிலும் இச்சிற்பம் இடம்பெற்றுள்ளது. சோழர், நாயக்கர் காலத்தினைச் சார்ந்த கல்யாணசுந்தரர் திருமணக்காட்சியிலும் இக்கமண்டலம் நீர்வார்த்துக் கொடுக்கும் கலனாக இடம்பெற்றுள்ளது. பிரம்மா, சரசுவதி ஆகியோரது சிற்பங்களிலும் அவர்களுக்குரிய கலனாக இக்கமண்டலம் அவர்களது கரங்களில் திகழ்கின்றது.

தெய்வத்திருவுருவங்களின் கரங்களில் தவழும் மற்றொரு குறிப்பிடத்தக்க பாத்திரம் 'மண்டை' என்று வழங்கப்பட்ட கபாலம் ஆகும். சோழர் காலத்தினைச் சார்ந்த சிற்பங்களாகவும், செப்புத் திருமேனிகளாகவும் விளங்கும் பிட்சாடனர், கங்காளமூர்த்தி, பைரவர் ஆகியோரின் கரங்களில் அழகிய வடிவில் கபாலம் இடம்பெற்றிருக்கின்றது. தஞ்சையிலுள்ள சோழர் காலத்தைச் சார்ந்த பிட்சாடனர் செப்புத் திருமேனியில் குள்ளச் சிறுபூதம் ஒன்று பிச்சைபுகும் வட்டில் ஒன்றினைத் தலையில் சுமந்திருப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. திருவலஞ்சுழி, கி.பி 16-ஆம் நூற்றாண்டு ஓவியத்திலும் இக்காட்சி உள்ளது. தாராசுரம் சோழர் கோயிலில் அமுதகலசம் ஒன்றினை ஏந்தி நிற்கும் தேவியின் உருவம் இடம் பெற்றுள்ளது. சிற்பங்களில் அன்னபூரணியின் கரங்களில் அடிசில் கலயமும் கரண்டியும் இடம்பெற்றிருக்கும்.

தஞ்சை அருங்காட்சியகத்தில் சோழர் காலத்தினைச் சார்ந்த கைப்பிடியுடன் நாழி, செப்புக்குடுவை, மலர் வடிவிலமைந்த விரிந்த தட்டு, மூக்குக்கெண்டி, குடுவைச்செப்பு, முக்காலி, விரிந்த மலர், வாய்க் குடுவை போன்ற பரிகலன்கள் (திருவெண்காடு) பல இடம் பெற்றுள்ளன.[1] உலகாபுரத்துக் கோயிலில் திருப்பணி செய்யும்போது செம்பினால் செய்த சிறிய முக்காலிகள் இரண்டு கிடைத்துள்ளன. சோழர் காலத்தினைச் சார்ந்த நாணய உண்டியல்களும் சில இடங்களில் கிடைத்துள்ளன. கலை வேலைப்பாடு கொண்டு எழிலுறக் காட்சிதரும் இக்காசுக் கலயங்கள் தஞ்சை, மதுரை அகழ்வைப்பகங்களில் உள்ளன. உத்தமபாளையம் பகுதியில் 'லத்தராயன்' என்று பெயர் பொறிக்கப்பட்ட நாயக்கர் கால காசுக் கலயம் ஒன்று கிடைத்துள்ளது.[2]

சோழர் காலத்தில் திருமணச் சமையலுக்குரிய அடுகலன்கள் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை தஞ்சைக்கோயிலிலுள்ள முதல் இராசராசன் காலத்து சுந்தரர் திருமணக்காட்சி ஓவியம் காட்டுகிறது. இவ்வோவியக் காட்சிகளில் ஆடவர், பெண்டிர் இருபாலாரும் சமையலில் ஈடுபட்டுள்ளனர். மூன்று கால்களையுடைய முக்காலிகளின் மீது கலன்கள் சில வைக்கப் பட்டிருக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளன. இப்பாத்திரங்களைப் பிடித்துத் தூக்குவதற்கு

---

1. சந்திரமூர்த்தி மா., ஸ்ரீதரன் கி., கருணானந்தன் இரா பா., இராசராசசோழன் வரலாற்றுக்கூடம், 1985, பக். 44-45.
2. கள ஆய்வில் அறியப்பட்டது. இக்கலன் போடிக்கு அருகிலுள்ள குரங்கணி என்ற இடத்தில் கிடைத்தது.

ஏற்ற முறையில் பக்கத்திற்கொன்றாக இரண்டு வளையங்கள் அவற்றில் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் அண்டா, கிண்ணம், குவளை போன்ற கலன்கள் இடம்பெற்றுள்ளன.[1] குவளை ஒன்றில் இனிப்பு நீரினை ஒரு பெண் ஊற்ற மற்றொரு பெண் அதனை அருந்துவது போல ஒரு காட்சி இதில் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சோழர் கால செப்பு விளக்குகள், தட்டுகள், மணிகள், பதினாறு வகை உபசாரப் பரிகலன்களில் சில ஆகியவை எசாலத்தில் ஒரு புதையலில் கிடைத்துள்ளன சென்னை அரசு அருங்காட்சியகத்தில் சோழர்கால எழுத்துப் பொறித்த நாழி ஒன்று காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

நாயக்கர், சேதுபதி காலத்து ஓவியங்களிலும் அடுகலன், பரிகலன் ஆகியவற்றின் வடிவங்களைக் காணமுடிகிறது. அழகர்கோயில் வசந்தமண்டபத்திலுள்ள நாயக்கர்கால இராமாயண ஓவியத்தில் இறந்தவரின் உடலைப் பாதுகாத்து வைக்கும் எண்ணெய் கொப்பரை ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் தயரதனின் உயிரற்ற உடல் வைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரத்திலுள்ள சேதுபதி அரண்மனை இராமலிங்கவிலாச ஓவியத்தில் இராணியுடன் விளங்கும் சேதுபதி மன்னரைச் சூழ்ந்து பல்வகை வடிவில் அமைந்த ஏராளமான மதுக்குடுவைகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

நாயக்கர் காலத்தினைச் சார்ந்த பரிகலன்கள் மதுரைப்பகுதியில் கிடைத்துள்ளன. முத்துவிசையரெங்க சொக்கநாத நாயக்கரின் பெயர் தெலுங்கு எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட பொற்கிண்ணம் ஒன்று மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ளது. மேலும் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடலை நடத்துவதற்காகப் பொன்னால் செய்த கூடை ஒன்றும் நாயக்கமன்னரால் மதுரைக் கோயிலுக்குத் தானமாகத் தரப்பட்டு இன்றும் மதுரைக்கோயிலில் உள்ளது. நாயக்கர் காலத்தினைச் சார்ந்த வெற்றிலைப் பெட்டிகளும் சுண்ணாம்பு அடைத்து வைத்திருக்கும் செப்புகளும் மதுரை அரசு அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. மராட்டியர் பாணியில் உருவாக்கப்பட்ட வேலைப்பாடுமிக்க பாத்திரம் ஒன்றும் தஞ்சை தொல்லியல் துறை அருங்காட்சியகத்தில் உள்ளது. இதில் திருமாலின் பத்து அவதாரங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

விசயநகரவேந்தர், நாயக்கர் காலச் சிற்பங்களிலும் அடுகலன்கள், பரிகலன்கள் இடம் பெற்றுள்ளன. சென்னை - வண்டலூரையடுத்துள்ள மண்ணிவாக்கம் கோயிலில் விஜயநகரக் கலைவடிவில் வடிக்கப்பட்டுள்ள பதினாறுவகை உபசாரப் பரிகலன்கள் இன்றும் காணப்படுகின்றன. அவிநாசிக்கு அருகிலுள்ள அபிசேகபுரம் சிவன் கோயில் சுவரில் கி.பி பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பத்தொகுதியில் பரிகலன்கள் பல இடம்பெற்றுள்ளன, அவிநாசிக் கோயில் கொடுங்கைச் சிற்பங்களில் குடம், தட்டு, வட்டில் முதலிய கலன்கள் காணப்படுகின்றன.[2] இன்றும் தமிழ்நாட்டிலுள்ள சிறுகோயில்களிலும் பெருங்கோயில்களிலும் நாயக்கர் காலத்தினைச் சார்ந்த அடுகலன், பரிகலன், ஆகியவற்றைப் பார்க்க முடிகிறது. இவற்றில் சில இதற்கும் முந்திய காலத்தினைச் சார்ந்தவையாக இருக்கலாம்.

தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள், அருங்காட்சியகங்கள், தனியார் சேகரிப்பு ஆகியவற்றிலுள்ள பரிகலன்கள், அடுகலன்கள், ஆகியவற்றை முழுமையாக ஆய்வுசெய்தால் பல உண்மைகள் வெளிப்பட வாய்ப்புள்ளது. நாட்டுக்கோட்டை நகரத்தார் வீடுகளில் சென்ற நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் செய்யப்பட்ட அடுகலன்களும் பரிகலன்களும் கணிசமான அளவில் உள்ளன. இவற்றின் பெயர், வடிவம் ஆகியவற்றையும் முற்கண்ட கலன்களோடும் கல்வெட்டு, இலக்கியம், அகழாய்வுச் செய்திகளோடும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் பண்டைத் தமிழரின் வாழ்வியல் கூறுகள் பலவற்றை நாம் அறிந்துகொள்ள ஏதுவாக அமையும்.

---

1. நடன. காசிநாதன், இராசராசேச்சுரம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை
2. இரா. ப. கருணானந்தன், தமிழ்நாட்டுப் பாத்திரங்கள்.

7 போரும் அமைதியும்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் போர்கள்

தொல்பழங்காலத்தில் பழைய கற்கால மக்கள் மலைகளிலும், காடுகளிலும் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்தனர். சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இவர்கள் தங்களுடைய உணவுப்பொருட்களை விலங்குகளுடன் போரிட்டே பெறவேண்டிய நிலையிலிருந்தனர். இவ்வாறு தொடங்கிய போராட்டம், காலச்சூழல்களில் பல்வேறு மாறுதல்களுக்குட் பட்டது. கூட்டங்கூட்டமாக வாழ்ந்த இப்பழைய கற்கால மக்கள் போராடி பெற்ற உணவுப் பொருட்களைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதிலும் பல பூசல்கள் ஏற்பட்டன. உணவுப் பொருட்களான விலங்குகள், காய்கனிகள் போன்றவை எங்கு அதிக அளவில் கிடைத்ததோ அவ்விடங்களைத் தேடிச் சென்றனர். ஆனால் ஏற்கனவே அந்தப்பகுதியில் இருந்த கூட்டத்தார் இவர்களுடைய வருகையால் தமக்குக் கிடைக்கும் உணவுப்பொருட்கள் குறைந்துவிடுமோ என்ற அச்சத்தில் இவர்களை எதிர்த்து போரிட்டார்கள். இப்போராட்டத்தில் வெற்றி பெற்ற கூட்டத்துடன் தோல்வியுற்ற கூட்டத்தினர் இணைந்து பெருங்கூட்டமாயினர். இத்தகைய போராட்டங்கள் உணவுப்பொருட்களுக்கு மட்டுமின்றி காமக்களியாட்டத்திற்காகவும் ஏற்பட்டிருக்கலாம்.

பழைய கற்காலத்தில் உணவுப்பொருட்களைத் தேடித்திரிந்த மக்கள் புதிய கற்காலத்தில் உணவுப் பொருட்களை உற்பத்திச் செய்ய முற்பட்டனர்; வட்டவடிவில் குடிசைகளைக் கட்டிக்கொண்டு ஓரிடத்தில் கூட்டமாக வாழத் தொடங்கினர். கால்நடைகளை வளர்த்தல், மட்கலங்கள் செய்தல் ஆகிய புரட்சிகரமான மாறுதல்களை இக்காலமக்கள் ஏற்படுத்தியதால், புதிய கற்கால காலத்தை மறுமலர்ச்சிக் காலம் என்று தொல்லியல் வல்லுநர் கூறுவர். பயிர்த் தொழிலில் கிடைத்த மிகுதியான தானியங்களை இவர்கள் சேகரித்து வைத்தனர். கால்நடைகளையும் மிகுந்த அளவில் வளர்த்தனர். இத்தகைய செல்வங்களைப் பிற கூட்டத்தினர் வந்து கவர்ந்து செல்ல முற்படுகையில் அதனைத் தடுக்கும்போது பெரும்போர்கள் ஏற்பட்டன. புதிய கற்காலத்தை அடுத்து வந்த பெருங்கற்காலத்திலும், இத்தகைய போர்கள் தொடர்ந்து இருந்ததற்கான சான்றாதாரங்கள் கிடைக்கின்றன. குறிப்பாகச் சங்க காலத்தில் ஓர் அரசன் மற்ற அரசன்மீது போர் தொடுப்பதற்கு அடையாளமாக ஆநிரைகளைக் கவர்தல் என்னும் வழக்கம் தொடர்ந்து இருந்துள்ளது. இதனுடைய வளர்ச்சியே நாளடைவில் அரசர்களுக்கிடையில் ஏற்பட்ட நாடுபிடி சண்டையாக மாறியது.

சங்ககாலத்தில் போர்கள்[1]

சங்ககால இலக்கியங்கள், போர்முறைகளைப் பற்றி பரவலாகப் பேசுகின்றன. இக்காலத்தில் நிகழ்ந்த போர்களை ஏழு வகையாகப் பிரித்துள்ளார்கள். அவைகளாவன: வெட்சிப்போர், கரந்தைப்போர், வஞ்சிப்போர், நொச்சிப்போர், தும்பைப்போர், வாகைப் போர் பற்றும் உழிஞைப்போர்.

வெட்சிப்போர்

மாற்றான் நாட்டை ஒரு மன்னன் கைப்பற்றுவதற்கு முன்னர் அந்நாட்டு ஆநிரைகளைக் கொள்வது வழக்கம். வீரர்கள் அவ்வாறு பிறநாட்டு ஆநிரைகளைக் கவரச் செல்லும்போது

1. தொல்காப்பியப் புறத்திணையியல் மற்றும் புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய இரு இலக்கண நூல்களின் அடிப்படையில் எழுதப்பட்டது.

'வெட்சி' என்னும் பூவை அணிந்து செல்வார்கள். இதை 'வெட்சித்திணை' என்று கூறுவர். போர் நடக்கும்போது பல அழிவுகள் ஏற்படும். ஆநிரைகளும், அந்தணர்களும், நோய்வாய்ப் பட்டோரும், பெண்டிரும் காக்கப்படவேண்டும் ஆநிரையைக் காப்பது மன்னனின் தலையாய கடமையாகும். வெட்சி என்பது ஒருவகை மரம் இதன் பூக்கள் செந்நிறமுடையன. வெட்சிப்பூ அணிந்த வீரர்களை 'வெட்சியர்' என்று அழைப்பர். இவர்கள் ஆநிரையை கவர்ந்து வந்து, ஊர் மன்றங்களில் நிறுத்தி வீரர்களின் தகுதிக்கு ஏற்ப பகிர்ந்தளிப்பார்கள். பின்னர் மதுவை உண்டு வெற்றிக் களியாட்டம் ஆடுவார்கள்.

கரந்தைப்போர்

பகையாளர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளை, 'கரந்தை' மலரால் ஆன பூமாலையை அணிந்து மீட்டு வருவார்கள். இந்த வகைப்போர்முறை 'கரந்தைப்போர்' என்று அழைக்கப் படுகின்றது.

பகைவர் தம் நாட்டின் பசுநிரையை கவர்ந்து சென்றதை, அரசர் இட்ட கட்டளைப்படி முரசு அறிவிப்பால் வீரர்கள் அறிந்தவுடன், தாம் எத்தொழில் புரிந்தாராயினும் அதனை நிறுத்திவிட்டு, கரந்தையைச்சூடி வீரக்கழலினை அணிந்து வில்லைக் கையில் ஏந்தி கூட்டம் கூட்டமாகக் கூடி ஆநிரையைக் கவர்ந்து சென்ற வழியில் பெரும் முழக்கத்தோடு சென்று, பகைவரைச் சூழ்ந்து போர் புரிந்து நிரை மீட்கப்படும்.

வஞ்சிப்போர்

பகைவருடைய நாட்டை கைக்கொள்ளக் கருதி 'வஞ்சிப்பூ'வால் ஆன மாலையைச் சூடி போருக்குச் செல்வர். இதுவே வஞ்சிப்போர் எனப்படும். வஞ்சி என்பது ஒருவகைக்கொடி.

வீரர்கள் பகைவர்மேல் போர்த்தொடுக்கக் கருதி முரசை முழக்குவர். பகைவர் நாட்டை எரியூட்டுவர். அங்குள்ள பொருட்களைக் கொள்ளை கொள்வர் அங்கணம் கொணர்ந்த பொருட்களைப் பாணர் போன்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

காஞ்சிப்போர்

தம் நாட்டின்மீது பகை அரசர் படையெடுத்து வந்த காலத்தில் அரசன் தன் படைவீரர் களோடு 'காஞ்சிபூ'வாலான மாலையை அணிந்து எதிரிகளோடு போரிடுவான். இதுவே காஞ்சிப் போர் எனப்படும். காஞ்சி என்பது ஒருவகை மரம். பகையரசன் அறைகூவியபின், காஞ்சியை அணிந்த மன்னன் தன் வாளையும், குடையையும் முன் அனுப்பி வீர சபதம் செய்வான். பகைவர்களை எதிர்த்துப் போரிடும் காலத்தில் பகை வீரனுடைய தலையை அறுப்பர். அப்படி அறுத்த தலையைக் கொண்டு வருபவர்களுக்கு அரசன் பரிசு வழங்குவான். அவ்வாறு கொண்டு வரப்பட்ட தலையைக் கண்டவுடன் அத்தலைக்குரிய வீரனின் மனைவி உயிர்நீப்பாள்.

இதுமட்டுமின்றி ஒரு மன்னனின் மகளை மற்றொரு மன்னன் தமக்கு மணம் செய்து கொடுவென்று கேட்க, பெண்ணின் தந்தை மறுத்தால் பெண் கேட்ட மன்னன் அவனுடன் போரிட்டு முறியடித்து வருவதும் காஞ்சியின் பிற இலக்கணங்கள் ஆகும்.

நொச்சிப்போர்

பகையரசர், தன்னுடைய மதிலை முற்றுகைச் செய்யும் காலத்தில் அரசன் 'நொச்சிப்பூ' வினால் ஆன மாலையை அணிந்து தம்முடைய மதிலினைக் காத்தலே நொச்சிப்போர் எனப்படும். நொச்சிப்படையினர் மதிலைச் சுற்றிய படையை எதிர்க்கும்போது வீரர் சிலர் வீர சுவர்க்கம் அடைவதும் உண்டு. அகழியையும் காவற்காட்டையும் சிதையாமல் பாது காத்துப் பகைவருடன் போர் தொடுத்து வெற்றி பெறுவர்.

உழிஞைப்போர்

பகைவருடைய மதிலை கொள்ளகருதி மன்னர் உழிஞைப்பூவை மாலையாகச் சூடி போர் செய்வார். உழிஞை என்பது ஒருவகை கொடி. மன்னன் யானைப் படையை ஏவி அதன் கொம்பால் மதிற்கதவை பிளக்கச் செய்து மதிலைக் கைக்கொள்வான். காவற்காட்டைக் கவர்ந்து, பின்னர் அகழியின் அருகில் தங்கி, அகழியைக் கடந்து வீரர் போர் புரிவர். மதிலை கைக்கொண்டபிறகு அதனுள் கழுதையைக் கொண்டு, உழுவித்து, கவடியை விதைப்பர். மதிலை கைக்கொண்ட வெற்றியைப் புகழ்வர்.. பகை மன்னனின் மகளை மணம்கொள்ள முற்றுகை இடுதலும் உண்டு.

தும்பைப்போர்

போர்புரியத் தொடங்குகையில் அரசர்கள் 'தும்பை' மாலையைச் சூடி போர் புரிவார்கள். தும்பை ஒருவகைச் செடி. இதன் நிறம் வெண்மை. இந்தப் போரின்போது இரண்டு அரசர்களும் படைகளும் அழிவதுண்டு. வெற்றிபெற்ற வேந்தனது தேரின்முன் வீரர்கள் ஆடுவார்கள். அத்தேரின்பின் வீரர்களும் விறலியர்களும் ஆடுவர். அதற்கு முன்னும் பின்னும் பேய்கள் ஆடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வாகைப்போர்

வாகை என்னும் மாலையைச் சூடி பகைவரைப்போரில் வெற்றிகொள்வார்கள். இது அரசர், போர்வீரர்களுக்கு மட்டுமின்றி, இசைப்பாடுதல், யாழ்வாசித்தல், நாட்டியமாடுதல், சேவல் போர், காடைப்போர், தகர்ப்போர், முதலியவற்றிற்கும் பொதுவானதாகும்.

இந்தப்போர் முறைகள் மட்டுமின்றி வேறு, சில போர்முறைகளும் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

இக்காலத்தில் வாள், அம்பு, ஈட்டி போன்ற போர்க்கருவிகளே பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை ஆகியவை ஒவ்வொரு மன்னனிடமும் இருந்ததாகவும் அறிய முடிகிறது போருக்குப் புறப்படுவதற்கு, பறை அறைந்து அழைப்பு விடுவது வழக்கமாக இருந்திருக்கிறது. ஆண்கள் மட்டுமே போரில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

நடுகல் காட்டும் வீரம்

போரில் வீர மரணம் எய்திய வீரர்களின் நினைவாகவோ, அரிய வீரச்செயல் புரிந்து உயிர் துறந்தவர்களின் நினைவாகவோ கல்நட்டு அதில் அவர் பெயரையும் பெருமையையும் பொறித்து வைப்பது பண்டைய வழக்கம். இதனை வீரக்கல், நடுகல் என்று பல பெயர்களில் அழைத்துள்ளனர். இத்தகைய நடுகற்கள் தருமபுரி, வடார்க்காடு அம்பேத்கர் திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் அதிக அளவிலும், சேலம், கோவை மாவட்டங்களில் குறைந்த அளவிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மதுரை, நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் மிகக்குறைந்த அளவில் கிடைத்துள்ளன. இவை கி.பி. 5-6-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்தைச் சார்ந்தவையாகும்.

சங்ககாலத்தில் நிலவிய போர்முறைகள் பிற்காலத்திலும் வழக்கில் இருந்தன என்பதை இந்நடுகற்கள் வாயிலாக அறியமுடிகின்றது. சங்ககாலப் போர்முறைகள் ஒவ்வொன்றுக்கும் நடுகற்களுள் சில உதாரணங்களாக அமைந்துள்ளன. வெட்சித்திணையான ஆநிரைக் கவர்தலைக் குறிக்கும். நடுகல் ஒன்று திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்கம் வட்டம் தா. வேளூரில் கிடைத்திருக்கிறது. இது இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தைச் சார்ந்தது.

1. கோவிசைய நரசிங்க பருமற்கு இரண்டா
2. வது வாணகோவ அதிரைசர் சேவகர் மீ கொன்
3. றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பனையமா
4. ரியார் இவ்வூர்த் தொறுக் கொண்ட ஞான்று பட்டார்.

(செங்கம் நடுகற்கள் : 1971/54)

இந்நடுகல்லின் காலம் கி.பி 8-ஆம் நூற்றாண்டு. மீகொன்றை நாட்டு மேல்வேளூரை ஆண்ட பனையமாரியார் தொறு கவர்ந்தபோது வீரமரணம் எய்தியதை குறிக்கிறது.

ஆநிரைகளைக் கவர்ந்த மன்னரை எதிர்த்துப் போரிட்டு நிரையை மீட்டு வந்த கரந்தைத் திணையைக் குறிக்கும் நடுகல் ஒன்று செங்கம் என்ற ஊரில் கிடைத்துள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ தொக்கைபாடி
2. இரையமன் மகன் கத்தைய
3. ன் தொக்கைபாடி தொறு மீட்டு
4. ப் பட்டான்.

(செங்கம் நடுகற்கள் - 2971/79)

தொக்கைப்பாடியைச் சேர்ந்த கத்தையன் என்பவன் தொறு மீட்கையில் இறந்ததைக் கூறுகின்றது.

பகையரசன்மேல் போர்தொடுத்ததைக் குறிக்கும் வஞ்சித்திணையைச் சேர்ந்த நடுகற்களும்; போர் தொடுத்து வந்த மன்னனின் படையை எதிர்த்து ஊரைக் காத்ததைக் குறிக்கும் காஞ்சித்திணை நடுகற்களும் கிடைத்துள்ளன. தருமபுரி மாவட்டம் கடலாடி என்ற ஊரில் கிடைத்த வஞ்சித்திணையைச் சேர்ந்த கல்வெட்டு இது.

1. மாந்த பருமருக்குப் பதினொன்றாவது கொங்கனி
2. அரைசரு படை ஒடு சிரிகங்கரைசரு
3. சங்கம[ங்] கலத் தெறிந்த ஞான்று சிரி கங்கரைசரு
4. சேவகரு விசைய கொற்றடையா(ரு)
5. எறிந்து பட்ட கல்

(செங்கம் நடுகற்கள் - 1971/124)

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் சாத்தனூர் மல்லிகாபுரத்தில் காஞ்சித்திணையைச் சேர்ந்த கல்வெட்டு கிடைத்துள்ளது. அக்கல்வெட்டாவது:

1. கோவிசைய மசிந்திரபரு
2. மற்கு முப்பத்தொன்பதாவது
3. வாணகோ அரைசரு மருமக்கள் பொ
4. ற்றொக்கையார் சருக்கிருந்த ஊர் போ
5. ந்தை மேற் சக்கரவரு படை வந்த ஞா
6. ன்று ணாக்கையார் இளமகன் வத்தாவ
7. ன் மகன் னந்
8. தி எறிந்து பட்டா
9. ன் கல்

(செங்கம் நடுகற்கள் - 1968/35)

மேற்கண்ட நடுகற்களுடன் புலி குத்திப்பட்டான் நடுகல், யானையுடன் போரிட்டு உயிர் நீத்த வீரனின் நடுகல், பன்றி குத்திப்பட்டான் நடுகல், ஊர்பூசலில் உயிர் நீத்த வீரனின் நடுகல், போன்ற நடுகற்களும் கிடைத்துள்ளன. இவற்றுள் புலியை எதிர்த்து போரிட்டு உயிர் நீத்த வீரனின் நடுகற்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. உதாரணமாக தருமபுரி மாவட்டம் அரூர்வட்டம் கடத்தூரில் ஒரு நடுகல் காணப்படுகின்றது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சார்வ பௌமசக்கர
2. வத்தி ஸ்ரீ போசள வீரராமனாத
3. தேவற்கு யாண்டு ௩௰௩வது
4. ஆடிமாதம் பதினேழாந்தி
5. யதி மங்கத்திந[ா]ன்று கடத்தூர்
6. நாட்டு நாயகஞ் செய்வான் ஆ
7. ரோதன் இருகன் பெருமாள்
8. மகன் ஆண்பிள்ளைப் பெருமா
9. ள் புலியைக் கொன்று வீர
10. சுவர்க்கம் பெற்றான். (தருமபுரி கல்வெட்டுகள் - 1973/10)

தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் ரெட்டியூரில் பன்றிகுத்திப்பட்டான் நடுகல் ஒன்று உள்ளது. இது கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

கல்வெட்டு வாசகம் :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ அய்யப்ப தேவன்
2. நாடாள வேணாடுடைய இறாசப்பை
3. யனூர் அடியான் அரையகுட்டி ப
4. ன்றி குத்திப்பட்டான். (தருமபுரி கல்வெட்டுகள் - 1972/26)

இந்நடுகல்லில் வீரன் ஒருவன் கையில் குறுவாளுடன் பாய்கின்ற தோற்றத்தில் புடைப்புச் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளான். வீரனின் முன்பாக ஒரு பன்றி இறந்து கிடக்கிறது. மேலும் இரு பன்றிகள் வீரனை நோக்கிப் பாய்ந்து வருகின்றன. பாய்ந்து வருகின்ற காட்சி தத்ரூபமாக வடிக்கப்பட்டுள்ளது.

யானையுடன் போர்ச்செய்யும் காட்சி

யானை என்பது காட்டு விலங்குகளில் மிகப் பெரிய உருவம். இந்த மிருகத்தை எதிர்த்து தனியாக ஒரு வீரன் போரிடும் காட்சி ஒன்று தருமபுரி மாவட்டம் ஒசூரில் உள்ளது. இந்த நடுகல்லில் வீரனின் கையில் குத்துவாள் ஒன்றும் யானையின் மேல் ஒரு கையும் காணப்படுகின்ற நிலையில் உள்ளது. யானைத் தன் தும்பிக்கையை தூக்கிக் கொண்டு நிற்கின்றது இந்த வீரனது தலையில் தலைப்பாகைக் கட்டப்பட்டுள்ளது போல் உள்ளது.

குதிரை குத்திப்பட்டான் நடுகல்

தருமபுரி மாவட்டம். அரூர் வட்டம், நவலையில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகல் ஒன்று குதிரையைக் குத்தியபோது வீரன் இறந்து பட்ட விவரத்தைக் கூறுகின்றது. இந்நடுகல்லின் கீழ்பகுதியில் வீரன் ஒருவன் வலதுகையில் குறுவாளை ஏந்திய நிலையிலும் இடது கைகளில் வில்லைப் பிடித்தநிலையிலும் காணப்படுகின்றான். முன்புறம் குதிரையைத் தாக்கியதற்கு அடையாளமாகக் குதிரை காட்டப்பட்டுள்ளது.

ஊர்ப்பூசல்

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்திலுள்ள சிந்தல்பாடியில் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சுபதொங்க தேவரின் 5-ஆம் ஆட்சியாண்டுக்கல்வெட்டில் எதிரிகளால் ஏற்பட்ட ஊரழிவினை எதிர்த்து, புறமலை நாட்டு வீரன் காமுண்டன் அளப்பமாரன் கண்ணையன் என்பவன் போரிட்டு இறந்தான். இந்நடுகல்லில் வீரனின் இரண்டு கைகளிலும் குறுவாளும் வில்லும் காட்சி தருகின்றன

வீரப்பெண்ணின் நடுகல்

தருமபுரி வட்டத்தில் இன்னேரிமேட்டுப்பட்டியில் ஒரு நடுகல் உள்ளது. இதில் வீரன் ஒருவன் மற்றொரு வீரனை விற்போரில் வீழ்த்துகிறான். இந்த வீரனின் அருகில் போர்புரிய உதவுகின்றாள் ஒரு வீரப்பெண். வீரன் அம்புகளைச் சரமாரியாக எய்தவண்ணம் இருக்க சளைக்காது சரங்களை எடுத்துக் கொடுத்தவண்ணம் நிற்கிறாள் ஒரு பெண். கடும்போரில் வீரச் சமர் புரிந்த அவ்விருவர் மார்பிலும் மாற்றான் அம்புகள் ஒருங்கே பாய்ந்து துளைத்து வீழ்த்துகின்றன. அவனும் வீழ்ந்தான். அவளும் வீழ்ந்தாள். இந்நடுகற் காட்சி, நடைபெற்ற போர்களத்தை நம் கண் முன் காட்டுகின்றது.

(கல்வெட்டு இதழ் எண். 3)

வரலாற்றுச் சிறப்புமிக்க போர்கள்[1]

சேரன் செங்குட்டுவனின் வடதிசைப்போர்

இப்போருக்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று கண்ணகிக்கு சிலை வடிக்கக் கல் கொண்டு வருதல். மற்றது, தமிழர்களை ஏளனம் செய்த வட திசையரசர்கள் கனக விசயரை வீழ்த்துதல். சேரப்படைகள் கங்கையைக் கடந்து அதன் வடகரையிலுள்ள உத்தரை நாட்டையடைந்தனர். குயிலாலுவம் என்ற இடத்தில் கனகன், விசயன் ஆகிய ஆரிய அரசர்களை எதிர்த்துப் போரிட்டனர். இங்கு நடைபெற்ற பெரும்போரில் சேரன் வென்றான். இமயத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கல்லை கனக விசயர் தலைமீது ஏற்றி தமிழகம் கொண்டு வந்தான்.

நெடுஞ்சேரலாதனின் கடம்பப்போர்

தமிழகத்திலிருந்த நால்வகைக் குடிகளில் குறிப்பிடத்தக்கது கடம்பர் குடி. இந்தக் கடம்பர்கள் வாழ்ந்த நாடு கடம்பர்நாடு என்று அழைக்கப்பட்டது. கடம்பர்நாடு என்பது வட கொங்கணப் பகுதியின் ஒரு பகுதி ஆகும். இவர்கள் கி. பி. 3 முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை தனி அரசர்களாகவும், சிற்றரசர்களாகவும் இருந்துள்ளனர். முதலில் கடம்பர்கள் கடற்கொள்ளைக்காரர்களாக இருந்தனர். இவர்களை எதிர்த்து நெடுஞ்சேரலாதன் போர் தொடுத்தான். கடம்பரை வென்று அந்நாட்டைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான்.

தலையாலங்கானத்துப்போர்

சங்ககாலப் போர்களில் தலைச்சிறந்த பெரும்புகழ் பெற்ற போர் தலையாலங்கானத்துப்போரேயாகும். தலையாலங்கானம் என்பது சோழநாட்டில் உள்ள ஓர் ஊர் அப்போரில் வெற்றியடைந்த மன்னன் புகழையும், அதன் வியத்தகு வீரக்காட்சிகளையும் அதன் பேராரவாரத்தையும், அதன் பின் ஏற்பட்ட அமளிதுமளிகளையும் கண்டும், கேட்டும் அவற்றை வருணனைகளாகவோ, உவமை, அடைமொழிகள் வாயிலாகவோ எடுத்துரைக்காத புலவர் அந்நாளில் இல்லை எனலாம்.

---

1 பன்மொழிப் புலவர் அப்பாதுரை கா., அவர்களின் "தென்னாட்டுப் போர்க்களங்கள்" என்ற நூலின் அடிப்படையில் எழுதப்பட்டது.

அரசுரிமைப் பெறும் சமயம் பாண்டிய நெடுஞ்செழியன் வயது முதிரா இளைஞனாயிருந்தான். பாண்டியநாட்டைக் கைப்பற்றிட இதுவே தக்க தருணம் என மற்ற ரசர்கள் எண்ணினார்கள். அவர்கள் ஒருவர் இருவராகத் தாக்கவில்லை. இரண்டு பேரரசர்களும், ஐந்து வேளிர்களும் சேர்ந்து ஒருங்கு திரண்டு தாக்கினார்கள். எதிர்த்த வேளிர்கள் திதியன், எழினி, எருமையூரன் இளங்கோவேண்மான், பொருநன் ஆகியவர்களாவர். பேரரசருள் சேரன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை மற்றும் சோழன் கிள்ளிவளவன் ஆகியோராவர்.

எதிரிகள் பல திசையினர் ஆதலால் சோணாட்டில் தலையாலங்கானத்திலேயே அவர்கள் ஒருங்கே கூடிப் புறப்பட ஏற்பாடு செய்திருக்கவேண்டும். அவர்கள் கூடுமிடத்திலேயே நெடுஞ்செழியன் அவர்களைத் துணிவுடன் சென்றெதிர்த்து வென்றான்.

திருக்கோவலூர்ப்போர்

சோழன் கிள்ளிவளவனுக்கும், மலையமான் திருமுடிகாரிக்கும் இடையே நடந்த போரில் காரி கொல்லப்பட்டான். காரியின் சிறுவர் இருவரை, கிள்ளிவளவன் தனது யானையின் காலிலிட்டு இடறி அழிக்கும்படி கட்டளையிட்டான். ஆனால் கோவூர்க்கிழார் என்ற புலவர் அரசனிடம் சோழமரபின் பெருமையையும் காரிமரபின் வள்ளன்மையையும் எடுத்துரைத்து இதைத்தடுத்தார்.

தகடூர்ப் பெரும்போர்

அதியமான் நெடுமானஞ்சி, கொல்லிமலைத்தலைவன் ஓரி ஆகியோர் ஓரணியிலும், சேரன் பெருஞ்சேரல் இரும்பொறையும், மலையமான் திருமுடிக்காரியும் சேர்ந்து ஓரணியிலும் நின்று தகடூரில் (தருமபுரியில்) போரிட்டனர். இப்போரில் அதியமான் நெடுமான் அஞ்சி இறந்தான். இந்நிகழ்ச்சியை ஔவையார் புறநானூற்றில் பாடியுள்ளார்.

கழுமலப்போர்

சங்க காலத்திறுதியில் இருந்த சோழன் செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையுடன் கழுமலம் என்னுமிடத்தில் போர் புரிந்தான். இப்போரில் தோல்வியுற்ற கணைக்கால் இரும்பொறை, சோழனது குடவாயிற் கோட்டத்தில் சிறைபடுத்தப் பட்டான். அப்போது உண்ண நீர்க்கேட்டபோது சிறைக்காவலர் அவனை மதியாது காலந் தாழ்த்தியதால் அவன் தன்மான உணர்ச்சிகொண்டு உணவு, நீர் ஆகியவற்றை ஏற்க மறுத்து உயிர்விட்டதைப் புறப்பாடல் விவரிக்கிறது.

புள்ளலூர்ப்போர் (கி. பி. 610)

புள்ளலூர் என்பது காஞ்சிபுரத்துக்கு 15 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு ஊர். இங்கு நடைபெற்ற பெரும்போரில் பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மன், சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்து, தான் இழந்த பல்லவப் பேரரசின் வடபகுதியை மீட்டான்.

மணிமங்கலப்போர் வாதாபிப்போர் (கி. பி. 642)

பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தலைவர் பரஞ்சோதியார் தலைமையில் ஒரு பெரும் படை சாளுக்கிய தலைநகரான வாதாபி வரைச் சென்று தாக்கியது. பல்லவப் படையினர் வாதாபியைக் கைப்பற்றி அதை மண்ணோடு மண்ணாக்கி அதன் எல்லையில் தம் வெற்றித் தூணை நிறுவினர். பல தலைமுறைகளாகச் சாளுக்கியர் சேகரித்து வைத்திருந்த பெரிய செல்வக் குவியலையும், பொன்னையும் பரஞ்சோதியார் கைப்பற்றி அவற்றைத் தம் பேரரசன் நரசிம்மவர்மன் முன் கொண்டு வந்து குவித்தார்.

நெல்வேலிப்போர் (கி.பி. 675)

வாதாபி அழிவால் சாளுக்கிய மரபுக்கு ஏற்பட்ட திண்ணிய கறையைப் புதுவெற்றிகளால் போக்க வீரனான விக்கிரமாதித்தன் துடித்தான். கடல் போன்ற தன் படைகளுடன் பல்லவ நாட்டில் காட்டாறுபோல் பாய்ந்து சூறாவளி போல் சுழன்றடித்தான் பின் தமிழகம் முழுவதிலும் தன் புகழ்நாட்ட எண்ணி, பல்லவப் பேரரசின் எல்லையைக் கடந்து சோழ நாட்டிலும் புக முனைந்தான். தமிழரசர்கள் அனைவரையும் துச்சமாக மதித்த விக்கிரமாதித்தன்மீது பாண்டியன் அரிகேசரி நெடுமாறன் கொதிப்படைந்து அவன் மீது தன் படைகளுடன் சோழன் துணைப்படைகளையும் சேர்ந்துக் கொண்டு சீறிப்பாய்ந்தான். நெல்வேலி என்னுமிடத்தில் நடைபெற்ற இப்போரில் தமிழ் மன்னர்கள் வெற்றி பெற்றனர். இவ்வெற்றி ஒருவனுடைய வெற்றியன்று. தமிழ் மன்னர்கள் அனைவருடைய வெற்றி என்பதைச் சாளுக்கியர்களின் கேந்தூர் பட்டயம் எடுத்தியம்புகின்றது. தோல்வி கண்ட சாளுக்கிய விக்கிரமாதித்தன் தன் நாட்டுக்குத் திரும்பி ஓடினான்.

பெருவளநல்லூர்ப்போர் (கி.பி. 675)

பெருவளநல்லூர் என்பது பண்டைய உறையூர் அல்லது திருச்சிக்கு அருகில் 15 கி.மீ. தூரத்தில் உள்ள ஒரு ஊராக இருந்திருக்க வேண்டும். இங்கு நடைபெற்ற போரில் பல்லவ மன்னன் முதலாம் பரமேஸ்வரவர்மன் சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தனோடு போரிட்டான். இப்போர் நெல்வேலிப் போருக்குச் சற்று முன்னரோ அல்லது பின்னரோ நடைபெற்றிருக்கலாம். விக்கிரமாதித்தனின் திடீர்த் தாக்குதலை சமாளிக்க முடியாத பல்லவப் படைகள் பின்னடைந்தன. சாளுக்கியப் படைகள் பெருவளநல்லூரை நோக்கி முன்னேறின என்று சாளுக்கியரின் கத்வல் பட்டயம் கூறுகிறது. ஆனால் உதயேந்திரம் பட்டயம் பெருவள நல்லூர்ப் போரில் விக்கிரமாதித்தன் தோற்று தன் தாயகத்திற்கே திரும்பி ஓடி விட்டான் என்று கூறுகிறது.

தெள்ளாற்றுப்போர் (கி. பி. 834)

தெள்ளாறு என்னும் ஊர் தற்போது திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் வந்தவாசிக்கு அருகிலுள்ளது. இங்கு பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனை எதிர்த்து பாண்டியன் சீர்மாறன் சீரிவல்லபன் சேரசோழ படைகளின் துணைகொண்டு போரிட்டான். இப்போரில் வெற்றி பெற்ற பல்லவ மன்னன் 'தெள்ளாறெறிந்த நந்திவர்மன்' என்ற சிறப்புப் பெயரையும் பெரும் புகழையும் பெற்றான்.

திருப்புறம்பியப்போர் (கி.பி. 880)

திருப்புறம்பியம் என்பது கும்பகோணத்துக்கு அருகிலுள்ள ஓர் ஊர். இங்கு கி.பி. 880-ல் நடைபெற்ற பெரும்போர் தமிழகத்து வரலாற்றிலேயே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது என்று கூறலாம். உண்மையில் அது பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடையே இருநூறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த தமிழக முதன்மை போட்டியாகிய சதுரங்கத்தின் இறுதியாட்டமாகும். போட்டியில் பாண்டிய பல்லவப் பேரரசுகள் இரண்டு பெரிய மத யானைகள் போல் சண்டையிட்டு தளர்வுற்றன.

பல்லவப் பேரரசன் நிருபதுங்கவர்மன் கங்கமன்னன் பிருதிவிபதி, ஆதித்த சோழன் ஆகியோருடன் ஒன்று சேர்ந்து பாண்டிய நாட்டு மன்னன் இரண்டாம் வரகுணனை எதிர்த்துப் போரிட்டான். பாண்டியன் இப்போரில் ஒப்பற்ற வீரம் காட்டினான். ஆனால் கங்கன் பிருதிவிபதி, கண்டவர் வியக்கும்வண்ணம் பாண்டியர் படைகளைக் கொன்று குவித்தான். சீற்றம் கொண்ட பாண்டியன் அவன்மீது பாய்ந்து அவனைக்கொன்று வீழ்த்தினான். இறுதியில் பல்லவரே பெரும் வெற்றிபெற்றனர். போரில் உதவியதற்குப் பரிசாக ஆதித்த சோழனுக்குத் தஞ்சையைச் சூழ்ந்த பகுதி பரிசாக அளிக்கப்பட்டது. அதையே

அடிப்படையாகக் கொண்டு பெரும் சோழப் பேரரசு உருவாயிற்று. இப்போரில் வீரமிகு சாகசங்கள் புரிந்து வீரமரணம் எய்திய கங்கமன்னன் பிருதிவிபதிக்கு இங்கு நினைவுச் சின்னம் எடுத்து சிறப்பித்துள்ளதாக வரலாறு கூறுகிறது.

காந்தளூர்ப்போர் (கி.பி. 988)

முதலாம் இராசராசனின் வெற்றிகளிலே மிகவும் சிறப்பித்துக் கூறப்படுவது 'காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளிய' செயலேயாகும். காந்தளூர்ச் சாலை அந்நாளில் சேர மன்னனின் படைவீரர்களுக்குப் பயிற்சியளிக்கும் கல்விச் சாலையாக இருந்திருக்கலாம் என்னும் கருத்து வலுப்பெற்றுள்ளது. இராசராசன் காலத்துச் சேரமன்னன் பாஸ்கர இரவிவர்மன் என்பவனாவான்.

காந்தளூர் வெற்றி முதலாம் இராசராசனின் கன்னி வெற்றியாகும். இப்போர் அவனுடைய மெய்கீர்த்தியில் "காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி" என்று குறிக்கப்படுகிறது. காந்தளூர்ப் போரில் சோழனுடன் பாண்டியன் அமரபுயங்கனும் போரிட்டான். முடிவில் இவ்விரண்டு அரசர்களும் தங்கள் முடிகளையும், பெரும் செல்வத்தையும் இழந்தனர். எனவே இராசராசன் 'மும்முடி சோழன்' என்ற பட்டம் பெற்றான். தமிழகத்தின் முழுமுதல் அரச னாகவும், தென்னாட்டின் தலைசிறந்த அரசராகவும் இராசராசனை மாற்றியதற்கு இப்போரே தலையாய காரணம் என்றால் அது மிகையாகாது.

கங்கைப்போர் (கி.பி. 1022-23)

முதலாம் இராசேந்திரன் பெரும்படையுடன் வடதிசையில் கங்கைக்கரை வரை சென்று போரிட்டு வெற்றிகள் பல பெற்று கங்கை நீருடன் திரும்பி, அவ்வெற்றியின் நினைவாகக் கங்கைகொண்ட சோழபுரம் என்னும் பெருநகரை நிறுவி, அதனைத் தன் தலைநகராகக் கொண்டான். மேலும் 'சோழ கங்கம்' என்னும் ஏரியை அமைத்துத் தம் வெற்றியின் அடையாளச் சின்னமாக ஆக்கினான். வடதிசைப் போரில் வெற்றி பெற்ற நாடுகளின் பட்டியல் கீழ் வருமாறு:

I	சக்கரக்கோட்டம்	—	விசாகப்பட்டினத்திற்கு மேற்கே உள்ள ஒரு நகரம்
II	ஒட்டரதேசம்	—	ஒரிசா
III	கோசலம்	—	கங்கையின் தென்புற நாடு
IV	தண்டபுத்தி	—	வங்காளத்தின் மிதுனாபுரி மாவட்டம்
V	தக்கணலாடம்	—	பீகாரின் ஒரு பகுதி
VI	உத்திரலாடம்	—	கங்கையின் தென்புறத்திலுள்ள ஒரு பகுதி
VII	வங்காளதேசம்	—	தற்கால வங்காளம்

கடாரப்படையெடுப்பு (கி.பி. 1025)

முதலாம் இராசேந்திரன் தம் கடற்படையை, கடல்நடுவில் செலுத்தி கடல் கடந்த பல நாடுகளையும் வென்றுள்ளான். இவன் வெற்றி பெற்ற பகுதிகள் கீழ்வருமாறு:

I	ஸ்ரீவிசயம்	—	சுமத்ரா
II	பண்ணை	—	பனி - சுமத்ரா தீவின் கீழ்கரைப்பகுதி
III	மலையூர்	—	சுமத்ராவின் ஒரு பகுதி
IV	மாயிருடிங்கம்	—	மலாய் தீவின் ஒரு பகுதி
V	இலங்காசோகம்	—	மலாயாவின் கீழ் பகுதி
VI	மாபப்பாளம்	—	மலாயாவின் பகுதி

VII	தலைத்தக்கோலம்	—	தகூவாபா
VIII	தமாலிங்கம்	—	மலாயாவின் தெமிலிங் ஆறு கடலுடன் கலக்கும் இடம்
IX	இலாமுரிதேசம்	—	மலாயாவின் வடபகுதி
X	மாநக்கவாரம்	—	நிக்கோபார் தீவுகள்

வடகலிங்கப்போர் (கி.பி. 1112)

வடகலிங்கத்தை ஆண்ட மன்னன் அனந்தவர்மன், இரண்டு தவணை திறை கொடாததே இப்போருக்குரிய காரணம் என கலிங்கத்துப்பரணி கூறுகிறது. இப்போரில் சோழர் படைகளுக்குத் தலைமையேற்று நடத்திச் சென்றவன் கருணாகரத் தொண்டைமான் என்பவனாவான். சோழப்படைகள் காஞ்சியிலிருந்து புறப்பட்டு காடுகள், மலைகள், நாடுகள் பல கடந்து, கலிங்க நாட்டினுள் புகுந்து பல நகரங்களை தீயிட்டுப் பொசுக்கின. அனந்தவர்மனும் மிகுந்த வலிமையுடன் பெரும்படைகொண்டு எதிர்த்தான். கடலுடன் கடல் மோதினாற் போன்ற பெரும் ஆரவாரத்துடன் இரு படைகளும் மோதின. ஒன்றை யொன்று வளைத்து மொய்த்தன. நீண்ட போராட்டத்திற்குப் பின் கலிங்கப் படை நாற்புறமும் சிதறி ஓடியது

தொண்டைமான் பல யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், தேர்கள், மணிக் குவியல்கள் ஆகியவற்றுடன் சோணாடு திரும்பினான் முதலாம் குலோத்துங்கன், தனது வெற்றித் தளபதியை எதிர்கொண்டழைத்துப் பரிசில்கள் பல வழங்கிப் பாராட்டினான். ஆயிரம் யானைகளைப்போரில் வென்ற வீரனைப் புகழ்ந்து பாடுவது பரணி. இக்கலிங்கப்போரில் வெற்றிபெற்ற குலோத்துங்கனின் வீரச் செயல்களைப் பாராட்டி கலிங்கத்துப்பரணியைச் செயங்கொண்டார் பாடினார்.

தஞ்சைப்போர் (கி பி. 1219)

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்தான். தஞ்சையில் நடைபெற்ற போரில் மூன்றாம் இராசராசன் படைகள் வெருண்டோடின. பாண்டியன் வெற்றி வெறியுடன் தஞ்சையையும், உறையூரையும், செந்தணல் கொண்டு எரியூட்டி பாழாக்கினான். மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் தவிடுபொடியாக்கப் பட்டன.

பின் புதுக்கோட்டைக்கருகிலுள்ள பொன்னமராவதியில் பாண்டியன் அரியணையில் வீற்றிருந்த சமயம் மூன்றாம் இராசராசன் அவனைப் பணிந்து வேண்ட, அவனும் சோழநாட்டை மீண்டும் சோழனுக்கே அளித்தருளினான்.

தெள்ளாற்றுப்போர் (கி.பி. 1232)

தெள்ளாற்றுப் போரில் மூன்றாம் இராசராசனை கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவர்குலத் தோன்றல் தோற்கடித்தான். பின் மூன்றாம் இராசராசனையும் அவன் குடும்பத் தாரையும், கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்துக் கோட்டையில் சிறை வைத்தான். போசளமன்னன் வீரநரசிம்மனின் படைத்தலைவர்களான அப்பண்ணனும், சமுத்திர கொப்பையனும் பெரம்பலூர் என்னும் ஊரில் நடைபெற்ற போரில் கோப்பெருஞ் சிங்கனை முறியடித்து சோழ மன்னனை விடுவித்தனர்.

மாலிக்காபூர் படையெடுப்பு (கி.பி. 1309)

கி பி. 1309-ல் அலாவுதீன் கில்ஜியின் படைதலைவனான மாலிக்கபூர் தெற்கே படையெடுத்தான். அவன் பாண்டியனின் உள்நாட்டு கலகத்தைப் பயன்படுத்தி, தமிழகத்தில் தம் ஆட்சியை நிறுவ விரும்பினான். பாண்டியருள் சுந்தரபாண்டியனும் அவன் சிறிய தந்தையான விக்கிரம பாண்டியனும், கபூரை எதிர்த்து நின்று வெற்றி பெற்று

மதுரையைக் காத்தனர். ஆனால் சோழநாட்டுப் பகுதியில் வீரதவளப்பட்டினத்திலிருந்து ஆண்ட பாண்டியன் தலைநகரைவிட்டு ஓடிவிட்டான். அவனுடைய செல்வத்தையும், இராமேஸ்வரத்தில் நிகழ்த்திய கொள்ளையின் போது கைப்பற்றிய பொருள்களையும் எடுத்துக் கொண்டு மாலிக்காபூர் தில்லியை அடைந்தான்.

மூக்கறுப்புப்போர் (கி.பி. 1656-59)

திருமலை நாயக்கர் ஆட்சியின் இறுதியில் அவன் உடல்நலம் குன்றி படுக்கையில் இருந்தான். இச்சமயம் பார்த்து மைசூர் அரசன் முதலாம் கண்டீரநரசன் மதுரை அரசைத் தாக்கும்படி ஒரு படையை அனுப்பினான். இப்படை முதலில் சத்தியமங்கலத்தைப் பிடித்துக் கொண்டு தடையில்லாமல் மதுரையை நோக்கி வந்தது. இடையில் வழியெங்கும் மைசூர் மன்னனின் கட்டளைப்படி ஆண், பெண், குழந்தைகளை ஆயிரக்கணக்கில் பிடித்து மூக்கறுத்து மைசூருக்கு அனுப்பியது. இதனைக் கேட்ட திருமலைநாயக்கன், தன் நண்பன் ரகுநாதன் சேதுபதியை உதவிக்கு அழைத்தான். ரகுநாதன் சேதுபதி எதிரிகளை எல்லை வரை துரத்தினான். மேலும் மைசூர்வரை சென்று மதுரையில் மைசூர்ப்படை நிகழ்த்திய மூக்கறுப்புப் பணியை மைசூரில் நடத்தி பழிக்குப்பழி வாங்கினான். எனவே இப்போர்[6] மூக்கறுப்புப் போர் எனப்பட்டது.

ஆர்க்காட்டுப்போர் (கி.பி. 1751)

கடல்கடந்த ஆங்கில அரசின் ஒரு வீரக்காவியம் கிளைவின் ஆர்க்காட்டு முற்றுகை என்று சொன்னால் அது மிகையில்லை. திருச்சியில் சந்தாசாகிப்பினால் முற்றுகையிடப் பட்டு, பெரும் அவதிப்பட்டுக்கொண்டிருந்த முகமதுஅலிக்கு உதவ சிறந்தவழி ஆர்காட்டை முற்றுகையிடுவதுதான் என்று கிளைவ் எண்ணினான். சுமார் 500 வீரர்களுடன் ஒரு முழு நிலவில் கிளைவ் ஆர்க்காட்டிற்குள் திடீரென்று புகுந்தான். ஆர்க்காட்டுக் கோட்டையைக் காவல்காத்துக் கொண்டிருந்த சந்தாசாகிப்பின் படைவீரர்கள் கிளைவின் அதிரடித் தாக்குதலைச் சமாளிக்க இயலாமல் எதிர்ப்பு ஏதுமின்றி சரண் அடைந்தனர். இவ்வெற்றி, இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் ஏற்பட அடித்தளமாக அமைந்தது. ஆர்க்காட்டில் பாலாற்றிற்குத் தென்கரையில் தற்போதும் டெல்லிகேட் என்று அழைக்கப்படும் ஒரு கட்டிடம் உள்ளது. ஆர்க்காட்டில் பெற்ற இவ்வெற்றி டெல்லியைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட முதல்முயற்சி என்பதாலேயே இக்கட்டடம் 'டெல்லிகேட்' என்று (டெல்லி வாயில்) என்று கிளைவினால் அழைக்கப்பட்டது.

பாஞ்சாலங்குறிச்சிப்போர் (கி.பி. 1775-1798)

ஆங்கிலேயர் 1781ல் நவாபிடமிருந்து, நாட்டின் வரிவசூலைத் தாங்களே கைப்பற்றிக் கொண்டு தென்தமிழகத்திற்கு ஒரு வரிவசூல் அதிகாரியை நியமித்தனர். அச்சமயம் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட வீரபாண்டிய கட்டபொம்மனை அடக்கி வரிவசூல் செய்யும் பொருட்டு மேஜர்பானர்மேன் என்ற ஆங்கிலேயர் படை, பீரங்கிகளால் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைத் தாக்கியது. கட்டபொம்மனும் வீரத்துடன் போரிட்டான். இறுதியில் பாஞ்சாலங்குறிச்சி எதிரிகளின் வசமாகும் சமயத்தில் கட்டபொம்மன் கோட்டையைவிட்டு தப்பிப் புதுக்கோட்டையை அடுத்த கலியபுரத்தில் தங்கினான். இங்கு ஆங்கிலேயர்கள் கட்டபொம்மனை சிறைப்பிடித்தனர். 1798 அக்டோபர் 16ம் தேதி கயத்தாற்றில் அனைத்துப் பாளையக்காரர்களையும் வரவழைத்து அவர்களின் முன்னிலையில் ஆங்கிலேயப் படைத் தலைவன் ஒரு போலி விசாரணை நடத்தி, கட்டபொம்மனுக்குத் தூக்குதண்டனை விதித்தான். அங்குள்ள ஒரு புளியமரத்தில் தமிழ் தேசிய மாவீரன் தூக்கில் இடப்பட்டான்.

வேலூர்ச் சிப்பாய்க் கலகம் (கி.பி: 1806)

கி. பி. 1806, சூலைத் திங்கள் 10ஆம் நாளில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வேலூரில் படை வீரர்கள் கிளர்ச்சி செய்தனர். சுமார் 600 படைவீரர்கள் இக்கிளர்ச்சியின்போது

அடக்குமுறைகளுக்கு ஆளாகி உயிரிழந்தனர். சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் கிளர்ச்சிக் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். இக்கிளர்ச்சியே இந்தியா முழுவதும் பரவி இந்திய விடுதலை இயக்கத்திற்கு வித்தாக அமைந்தது.

போர்க் கருவிகள்

கற்கால மனிதன் தன் உணவிற்காக விலங்குகளை வேட்டையாட கல்லாலும் எலும்பினாலும் ஆன ஆயுதங்களைப் பயன்படுத்தினான். பெருங்கற்காலத்தில் இரும்பினால் ஆன ஆயுதங்கள் வழக்கத்திற்கு வந்தன. இவ்வாயுதங்கள் வேட்டையாட மட்டுமின்றி போருக்கும் பயன்படுத்தப்பட்டன. குத்துவாள், சூலம், ஈட்டி, அம்பு, கத்தி போன்றவை பெருங்கற்கால ஓவியங்களிலும், அகழாய்வுகளிலும் கிடைத்துள்ளன.

நடுகற்களில் பலவகையான ஆயுதங்கள் காணப்படுகின்றன. கி. பி. 5 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பழமையான நடுகற்களில் குத்துவாள், கேடயம் ஆகியன வடிக்கப் பட்டுள்ளன. குத்துவாள் சற்று வளைந்த நிலையிலும், கேடயம் முன்புறம் நீண்டும் பின் புறம் அகன்றும் உள்ளது. கேடயம் பிற்காலத்தில் வட்ட வடிவில் உருமாற்றம் பெற்றது. பிற்காலத்தைச் சார்ந்த நடுகற்களில் வில்லும் அம்பும் காணப்படுகின்றன. வில், அம்பு போன்றவை நடுகற்களில் அதிக அளவில் உள்ளன. அகழாய்வுகளில் ஈட்டி முனைகள், கத்திகள், அம்பு முனைகள், சூலம், கோடரி போன்ற இரும்பு ஆயுதங்கள் கிடைத்துள்ளன. பல்லவர், சோழர், பாண்டியர், விஜய நகரர், நாயக்கர், மராட்டியர், சேதுபதிகள் ஆகியோர் காலச் சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் மூலமும் அக்காலத்தில் பயன்படுத்திய பல்வகையான போர்க்கருவிகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது. பிற்காலத்தில் வெட்டரிவாள், பிச்சுவா, வளரி, ஜமுதாடு போன்றவையும், ஐரோப்பியர்கள் வருகையால் துப்பாக்கியும், பீரங்கியும் வழக்கத்திற்கு வந்தன.

போர் வீரர்கள் அணியும் உடைகள்

போருக்குச் செல்லும் வீரர்கள் ஒரே மாதிரியான உடையணிந்து சென்றனர். போர் உடைகளை சங்க இலக்கியங்கள் கவசம், மெய்ப்பை, படம் என அழைக்கின்றன. யவனர்கள் அணிந்த கவசம் மெய்ப்பை எனப்பட்டது. படம் என்னும் போருடை மூன்று வகைப்படும். அவை யானைப் படம், கனபடம் மற்றும் இடுக்கின்படம் என்பவை. யாகும். தலையில் வீரர்கள் 'வடி அடைத்துரில் முடி' என்ற தலைப்பாகையை அணிந்தனர். போர் உடைகளுடன் வீரகஞ்சுகம் என்ற அணியையும் அணிந்தனர்.[1]

விளையாட்டுக்கள்

பண்டைக் காலத்தில் விளையாட்டில் மனிதன் அதிக ஆர்வம் காட்டியுள்ளான். 'மனமகிழ்ச்சி ஊட்டும் ஒரு செயலே' விளையாட்டு என்று விளையாட்டுக்கு இலக்கணம் கூறப்படுகின்றது. இந்த விளையாட்டுக்கள் சமயச்சடங்கு, கூத்து, பாட்டு ஆகியவைகள் இணைந்த, ஒரு கூட்டு மூலத்திலிருந்து தோன்றி இருக்கலாம் என மானிடவியலார் கருது கின்றனர். தொடக்கத்தில் தமிழர்களின் விளையாட்டுக்கள் சமயச் சடங்கோடு தொடர்பு உடையதாக இல்லை. பிற்காலத்தில்தான் சமயச் சார்புடையதாக மாறியது. எல்லா பயன் பாடுகளிலும் பொழுதுபோக்கே விளையாட்டின் மிகமுக்கியமான பயன்பாடாகும். இதனைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். மேலும் நாட்டுபுறங்களில் விளையாடும் விளையாட்டுக்களில் போட்டி அம்சமில்லை. எனவே இது தோழமை உணர்வை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டது.

---

1. இராமச்சந்திரன். எஸ்., – தமிழக ஆயுதங்கள் (கல்வெட்டு இதழ் எண்-21)

இந்த விளையாட்டுக்களை மகளிர் விளையாட்டு, ஆடவர் விளையாட்டு, இருபாலரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டு மற்றும் சிறார் விளையாட்டு எனப் பல வகையாகப் பிரிக்கலாம்.

ஆடவர் விளையாட்டுக்கள்

ஏறுதழுவுதல்

புகழும், வீரமும் ஆடவரின் இரண்டு கண்கள், போரில் வெற்றிபெற உடல் வலிமை இன்றியமையாதது.

ஏறுதழுவுதல் என்பது ஆண்களின் வீர விளையாட்டுக்களில் ஒன்று. எருதுகளை ஆயுதங்கள் ஏதுமின்றி தம் உடல் வலிமையை மட்டும் பயன்படுத்தி அடக்குவர். 'மஞ்சு விரட்டு' 'ஜல்லிக்கட்டு' என்று தற்போது கூறப்படும் இந்த வீர விளையாட்டின் பழமையான வடிவமே 'ஏறுதழுவுதல்' ஆகும். ஆயர்குடிப் பெண்கள் தம் திருமணம் கருதி எருதுகளை வளர்ப்பர். இளைஞர்கள் இவ்வெருதை அடக்கி ஆயர்குலப் பெண்களை மணப்பர். இது அவர்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த செயல். இவ்வேறு தழுவுதலை கலித்தொகையிலுள்ள முல்லைக் கலியின் வாயிலாகவும், சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையிலும், சீவகசிந்தாமணி கூறும் ஏறுதழுவிய நிகழ்ச்சி மற்றும் பாகவதம் பகரும் எருது அடக்கிய நிகழ்ச்சி ஆகியவற்றாலும் அறியலாம். சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் கிடைத்த நடுகல் ஒன்று எருது தழுவி இறந்த வீரனைப் பற்றிக் கூறுகின்றது.

1. கோவுரிச் சங்கன்
2. கருவந் துறையி
3. லே எருது விளை
4. யாடி பட்டான்
5. சங்கன் மகன் பெ
6. ரிய பயலு நட்டக
7. ல்லு

கோவுரிச்சங்கன் என்பவன் கருவந்துறை என்ற இடத்தில் நடந்த எருது விளையாட்டில் இறந்தான். அவனுக்கு அவன் மகன் பெரியபயலு (மூத்தமகன்?) என்பவன் நடுகல் எடுத்தான். தற்பொழுது இந்நடுகல் சேலம் அரசு அருங்காட்சியகத்தில் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.[1]

தருமபுரி மாவட்டத்திலுள்ள கூத்தப்பாடியில் எருது விளையாடி இறந்த வீரனின் நடுகல் ஒன்று உள்ளது. இதிலுள்ள வீரனின் மார்பில் எருது ஒன்று தன் கொம்பால் குத்தியுள்ள பாங்கு தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இது இங்குள்ள மன்றில் நடந்த எருது கட்டின் போது இந்த வீரன் உயிர் நீத்தான் என்பதைத் தெரிவிக்கிறது. மேலும் மதுரை இராமநாதபுரம் பகுதியில் உள்ள அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு இன்றும் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருவதைக் காணலாம்.

சிலம்பம்

இவ்விளையாட்டு வயது வந்த இளைஞர்களாலும், நடுத்தர வயதினர்களாலும் விளையாடப்படுகின்றது. இது போர்ப் பயிற்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. மேலும் தற்காப்புக்காகவும், உடற்பயிற்சிக்காகவும், விளையாடப்படுகிறது. இந்த விளையாட்டைப் பற்றி 'தேம்பாவணியில்' பல இடங்களில் பேசப்படுகின்றது. இவ்விளையாட்டில் இருவர்

---

1. அர்த்தநாரீசுவரன். பெ., - எருது விளையாட்டு (கல்வெட்டு இதழ் எண் : 15)

நீண்ட மூங்கில் கம்பைப் பயன்படுத்தி விளையாடுவர். விளையாடும்போது தன்மீது அடி விழாதவாறு தடுத்தாட வேண்டும். இதற்குத் தகுந்த பயிற்சி வேண்டும். இதில் கை, கால், கண் இம்மூன்றும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்.

பழமையான திருவிளையாடற் புராணத்தில் 'செருடி' என்ற சொல் வந்துள்ளது. இதற்கு ஆயுதப் பயிற்சி செய்யும் சாலை என்பது பொருள், பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடல் புராணத்தில் கூடம் என்று மட்டுமே வந்துள்ளது. சிலம்பம் என்ற பெயர் வந்ததற்கான காரணம் அறிய இயலவில்லை.

மற்போர்

தொல்பழங்கால மனிதன் காடுகளில் வாழ்க்கை நடத்தியபோது விலங்குகளுக்கு இரையாகாமல் தப்பியோடிய காலங்கள் உண்டு. என்றாலும் அருகாமையில் அவைகளைச் சந்திக்க நேருகின்றபோது அவற்றை எப்படி பிடிப்பது? எப்படி முறியடிப்பது? எப்படி தடுப்பது? என்ற முறைகளைத் தெரிந்து கொள்ள முயன்றனர். இதற்காகத் தங்கள் குடும்பத்தாருடனும் தோழர்களுடனும் எதிர் எதிர் நின்று ஒருவரை ஒருவர் அழுத்திப் பிடித்து பிடிபோட்டு பழகினர். இதன் தொடர்பே இது போன்ற மற்போர் விளையாட்டு என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.[1]

நுட்பமும், நுணுக்கமும், இடத்திற்கேற்ப வாய்ப்பினைப் பயன்படுத்துகின்ற அறிவுத் திறனும், எளிதாக இயக்குகின்ற உடற்கட்டும், அடிக்கடி முறைமாறும் உடல்வேகமும், உடல் சமநிலையும், நல்ல மனவலிமையும் மற்போருக்கு இன்றியமையாதவைகளாகும்.

சங்ககாலப் புலவர்களில் நான்கு பேர் பெயர்களில் பின்னொட்டாக 'மள்ளன்' என்று அடைமொழி இருப்பதை நோக்கும்போது சங்ககாலத்தில் மற்போரை கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தனர் என உணரலாம். புறநானூற்றுப் பாடல்கள் இதைப்பற்றி விரிவாகப் பேசுகின்றன. பட்டினப்பாலை மறவர்கள் களத்தில் யுத்தம் செய்தனர் என்று கூறுகின்றது மேலும் சிலப்பதிகாரம் பதினொரு வகைக் கூத்துகளில் ஒன்றாக மற்போரைக் குறிப்பிடு கின்றது. பின்னர் 63 கலைகளிலும் ஒன்றாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பல்லவர் காலத்திலும் மற்போர் நன்கு பாராட்டப்பட்டது என்பதை அறிய முடிகின்றது. நரசிம்மவர்ம பல்லவர்க்கு 'மாமல்லன்' என்ற சிறப்புப் பெயர் உண்டு. நந்திவர்ம பல்லவமல்லன் என்ற மற்றொரு அரசனும் இருந்துள்ளான். எனவே பல்லவ அரசர்கள் மற்போரில் சிறப்புற்று விளங்கியுள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மற்போரின் தொடக்கத்தைப் பறை அறிவித்து தொடங்கினர். இதைக் காண அரசரும், வீரர்களும் பெண்களும் கூடினர் என்பதைப் பாகவதம் கூறுகின்றது.

விஜயநகர காலத்தைச் சார்ந்த கோயில்களில் மற்போர்க் காட்சிகள் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இக்காட்சியை ஓவியங்களிலும் காணமுடிகின்றது. நாயக்கர் மற்றும் மராட்டியர் காலத்தில் மற்போர் 'மல்லாட்டம்' என்று பெயர் பெற்றது. இக்கலையை 'மல்லிகைச் செட்டியார்' பிறருக்குக் கற்பிக்கும் தொழிலைச் செய்தனர்.

விற்போர்

விற்போர் சிறுவர் முதல் பெரியவர் வரை விளையாடும் விளையாட்டாகும். டழங் காலத்தில் இது வழக்கில் இருந்தது. வேட்டைக்குப் போன மன்னன் ஒருவன் எய்திய அம்பு, விரைந்தோடி ஒரு யானையைத் துளைத்துச் சாய்த்தது. உடலை ஊடுருவிய அம்பு பாய்ந்து வெருண்டு வந்த புலியுள் புகுந்து வீழ்த்திவிட்டு, வேகம் குறையாத அந்த அம்பு மருண்டு

---

1. நவராஜ் செல்லையா. எஸ்., - "விளையாட்டுகளின் கதைகள்"

நின்ற ஒரு மானையும் தாக்கியது. மானின் ஊனைச் சுவைத்து மீண்டு, மின்னலென விரைந்து பாய்ந்து சென்ற ஒரு பன்றியை குத்திச் சென்று, அப்படியும் வேகம் குறையாத அவ்வம்பு வேகத்துடன் ஓடிக் கொண்டிருந்த உடும்பின்மீது தைத்துக் கொண்டு குத்தித் தரையில் நின்றது. இவ்வாறு ஓரியின் வில்லாற்றலைப் புறநானூறு வியந்து பாடுகின்றது. சீவகசிந்தாமணியிலும், விற்போருக்கு எடுத்துக்காட்டு உள்ளது. திரிபன்றி வீழ்த்து பவனுக்குத் தன் மகளை மணம் புரிவிக்க அரசன் முரசு அறைந்து அறிவித்தான். பல அரசர்கள் கூடினர். போட்டியில் கலந்துகொண்டு தோற்றனர். கடைசியில் மதிநுட்பத் தாலும், விரைந்து செயலாற்றியதாலும் சீவகன் அம்பு எய்தி திரிபன்றியை நிலத்தில் வீழ்த்தினான் என்பது தெரிய வருகின்றது.

பெரிய புராணத்திலும் வில்வித்தையைப் பழக விழா எடுத்த செய்தி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. சில வகையான அடையாளங்களை உருவாக்கிக் கொண்டு அவற்றின் மீது அம்பு தொடுத்ததைப் பல இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. தஞ்சைக்கு அருகிலுள்ள கருந்தட்டான்குடியிலுள்ள சிவன் கோயிலில் முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று அக்காலத்தில் நடைபெற்ற விற்போரினைப் பற்றிக் கூறுகிறது.[1] இரு வீரர்கள் விற்போர் செய்தனர். அவர்களுள் ஒருவன் குதிரை சேவகன். அவன் பெயர் அரங்கன் காரியான் சோழ விச்சாதர முத்தரையன். மற்றொருவன் பெயர் காரிகுளிப் பாகை. இப்போர் இராசராசன் முன்னிலையில் நடைபெற்றது. போரில் சோழ விச்சாதர முத்தரையன் எய்திய அம்பினால் காரிகுளிப்பாகை இறந்துவிட்டான் என்று கல்வெட்டு கூறுகின்றது

நீச்சல் விளையாட்டு

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழியைப் படைத்து உலகெங்கிலும் கலம் செலுத்தி வாழ்ந்த தமிழர்களின் வாழ்வில் நீச்சல் விளையாட்டு நித்தம் நித்தம் நிகழ்ந்த ஒன்றாகும் உயர்ந்தோங்கிய மரத்தில் ஏறி, அங்கிருந்து மின்னலென குளத்தில் குதிக்கிறான் ஓர் இளைஞன். கரையில் இருப்பவர்கள் அஞ்சுகிறார்கள். குளத்தில் திடுமெனப் பாய்ந்த இளைஞன் முக்குளித்து' முழுகி, அடிவரை சென்று தரைமணலைக் கொண்டு வருகிறான். தான் மகிழ்ந்தது போல காண்போரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறான். இவ்வாறு, தான் இளைஞனாக இருந்தபொழுது ஆடிய காலத்தை 'கல்லா இளமை' என்கிறார் சங்கப் புலவர்.[2]

பட்டம்

பட்டம் என்ற சொல் ஒருவகை விளையாட்டை அல்லது விளையாட்டுக் கருவியைக் குறிக்கும் வகையில் முதன்முதலில் சீறாப்புராணத்தில் கூறப்படுகிறது. இதில் 'பட்டங்கள் பறந்ததைப் போன்று' என்று வருகிறது. இதைக் "கதலி" என்ற சொல்லால் கம்ப்ராமா யணமும், 'வானி' என்ற சொல்லால் கந்த புராணமும் கூறுகின்றன. கம்பராமாயணத்தில் அரக்கியால் விழுங்கப்பட்ட அனுமன், வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்து குடலுடன் ஆகாயத்தில் மேலே தாவி பறந்த காட்சியானது, பெருங்காற்று அடித்தால் வடம் அரக்கியின் நிலத்தில் கிடக்க வாலோடு ஆகாயத்தில் பறந்த 'கதலியை'ப் போல் இருந்ததாக கம்பராமாயணம் கூறுகின்றது.

படகுப்போட்டி

படகுப்போட்டி மிகவும் ஆரவாரத்துடன் கலந்துகொள்ளும் அற்புதமான விளையாட்டாகும். இன்றும் கேரளத்தில் ஓணம் திருநாள் அன்று சிறப்பாக நடைபெறுகின்றது.

---

1. மார்க்சிய காந்தி. நா., - இராஜராஜன் கண்ட விற்போர் (கல்வெட்டு இதழ் எண் : 3)
2. பிச்சை. அ., – தமிழர் பண்பாட்டில் விளையாட்டுக்கள்

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் நடைபெற்றுள்ளது என்பதற்குத் தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன. தென்னார்க்காடு மாவட்டம் கீழ்வாலை என்னுமிடத்திலுள்ள பெருங்கற்கால ஓவியத்தில் இரண்டு படகுகளில் மனிதர்கள் துடுப்பின் உதவியால் துளாவிச் செல்வது போன்று காணப்படுகிறது. திருக்காம்புலியூர் என்னும் இடத்தில் நடைபெற்ற அகழாய்வில் குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடுகளில் படகுகளின் உருவங்கள் காணப்படுகின்றன.[1] மேலும் படகுகள் மனிதர்களுடன் உள்ளன இவை படகுப் போட்டியைக் குறிப்பதாகும். விநாயகப் புராணத்தில் படகு விளையாட்டு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இது சிறுவர்கள் விளையாட்டு என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது.

செண்டாடல்

குதிரையின் மீது அமர்ந்து செண்டாடி நகரில் சிலர் பொழுதுபோக்கியதைக் கம்பராமாயணம் கூறுகின்றது. செண்டு என்பது பந்தையும், நீண்ட நுனி வளைந்த கோலையும் குறிப்பதாகும். நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசி மகிழ்ந்ததை பெரிய புராணம் கூறுகின்றது. நிலைச்செண்டு என்பது நின்றபடியே வீசுதல் என்றும், பரிச்செண்டு என்பது குதிரையின் மீது அமர்ந்து ஆடுதல் என்றும் விளக்கிக் கூறியுள்ளனர் புலவர்கள். தணிகைப்புராணம் யானையின் மீது இருந்து பந்து விளையாடினர் என்று கூறுகின்றது. இவ்விளையாட்டை விளையாடும் திடலுக்கு "செண்டுவெளி" என்று பெயர்.

யானை ஏற்றம்

போர்க்காலங்களில் யானைப்படை வலிமை வாய்ந்தது என்று எண்ணினர். எனவே அக்கால வீரர்கள் யானை மீது ஏறி அதை நன்கு பழக்குவதில் விருப்பம் கொண்டனர். மேலும் இரு தனித்தனி யானையின் மீது அமர்ந்த இருவர் ஒருவருடன் ஒருவர் போரிட்டுக் கொள்வர். யானைகளுடன் மோதி சண்டை செய்யும் வீரர்களின் செயலை பெருமைக்குரியதாகக் கருதினர். எனவே 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்று புறநானூற்றுப் புலவர் பொன்முடியார் பாடியுள்ளார்.

பெருங்கற்கால ஓவியத்தில் யானையின் ஓவியம் ஒன்று கோவை மாவட்டம் வேட்டைக்காரன் மலையில் உள்ளது. இதில் மனிதன் ஒருவன் யானையின்மீது அமர்ந்துள்ள காட்சியாக இருப்பதால், இவ்வோவியம் யானை ஏற்றத்தைக் குறிப்பதாகத் தெரியவருகின்றது.

குதிரை ஏற்றம்

குதிரைப்படைகள் போர்க்களத்தில் முக்கியப் பங்கு வகித்தது. எனவே குதிரையின் மீது ஏறுவது, அமர்ந்து சண்டைசெய்வது போன்ற பயிற்சிபெற வேண்டியது அவசிய மாகும். தமிழகத்தில் தொல்பழங்காலம் முதல் குதிரை ஏற்றம் வழக்கத்திலிருந்தது என்பதற்குக் கோவை மாவட்டத்தில் வேட்டைக்காரன் மலையில் உள்ள குதிரை வீரனின் ஓவியங்கள் சான்றாக உள்ளன. தருமபுரி மாவட்டம், மல்லப்பாடியில் உள்ள இதே காலத்தைச் சார்ந்த ஓவியத்தில் இரண்டு வீரர்கள் குதிரையின்மேல் அமர்ந்து போரிடும் காட்சி காணப்படுகின்றது. இவைகளைக் கொண்டு அக்காலத்தில் குதிரையின் மேல் அமர்ந்து போர்புரிய பழகினர் என்பது தெரியவருகின்றது.

மகளிர் விளையாட்டு

பெண்கள் ஆண்களைவிட உடல்வலிமை குறைந்தவர்கள். மென்மையானவர்கள் எனவே இவர்கள் வீரச்செயல்களைச் செய்யாமல் பொழுதுபோக்கு விளையாட்டில் ஈடு பட்டனர். உடலை வருத்தி செய்யும் விளையாட்டில் ஈடுபடவில்லை. இவர்கள் விளை யாட்டுகளில் குறிப்பிடத்தக்கவை கீழ்வருமாறு,

1. Mahalingam T. V., - Excavations in the Lower Kaveri Valley

அம்மானை

அம்மானையின் பழைய பெயர் 'கழங்காடல்' என்பதாகும். தற்காலத்தில் இதை மூன்றாம் கல், ஐந்தாம் கல் மற்றும் பத்தாம் கல் என்று கூறுவர். கழங்கு என்பது உருண்டை வடிவிலான ஒரு விதை. இவ்விதைகளை மேலே எறிந்து புறங்கைகளில் தாங்கி விளையாடியதால் 'கழங்காடல்' என்று பெயர் பெற்றது. மணல்பரந்த இடத்தில் பொன்னால் செய்த கழங்கினைக் கொண்டு விளையாடியதைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஒரே சமயத்தில் பல கழங்குகளைக் கொண்டு விளையாடும் விளையாட்டு ஆதலால் இதற்குக் கண்களின் இயக்கம் மிகவும் இன்றியமையாததாகும்.

ஊசல்

மகளிர் விரும்பி விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று ஊசல். சங்க காலம் முதல் இன்று வரை பொழுதுபோக இந்த விளையாட்டை ஆடுகின்றனர். 'ஊசல்வரி' என்ற பகுதியை சிலப்பதிகாரத்தில் காணலாம். ஊசல் ஆடும்போது பாடியும் உள்ளனர். மரங்களிலும், வீடுகளிலும், உயரமான இடங்களிலும் ஊசல் அமைக்கப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. இதைத் தெய்வீக விளையாட்டாகவும் எண்ணினர்.

பந்தாட்டம்

பருத்திநூலினால் செய்யப்பட்ட உருண்டை வடிவமான பந்தைச் சுற்றிலும் வரிவரியாக பல அழகு வேலைப்பாடுகளோடு செய்துள்ளனர். சங்க இலக்கியமான நற்றிணை, இதனை 'வரியணி பந்து' என்று கூறுகின்றது. சங்ககாலத்தில் இதைக் கையில் பிடித்தும், காலால் உதைத்தும் விளையாடி உள்ளனர். இதை, இக்கால கைப்பந்து, கால்பந்து விளையாட்டுகளுடன் ஒப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் 'கந்துகவரி' இப்பந்தாட்டத்தைக் குறிக்கின்றது.

பெருங்கதையில் பெண்களுக்குள் நடைபெற்ற போட்டி, நாடகக் காட்சிபோல் வர்ணிக்கப்படுகின்றன. பெண்களின் ஆடை, தோற்றம் பந்தைப்பிடிக்கும் தன்மை, விளையாட்டின் உச்சக்கட்டம், அதற்கான விரைவு ஆகியன விளக்கமாகக் கூறப் பட்டுள்ளன. இவ்விளையாட்டு பொதுமக்கள் களிக்கும் வண்ணம் பெரிய அளவில் நடைபெற்றது என்று பெருங்கதை கூறுகிறது.

வீதி உலா போவதையும் விடுத்து, பெண்வேடம் அணிந்து பந்தடி போட்டியைக் காண அரசன் சென்ற செய்தியையும், போட்டியில் ஒரே சமயத்தில் ஏழு பந்துகள் முதல் 21 பந்துக்கள் வரை பயன்படுத்தியதையும் பெருங்கதைக் கூறுகின்றது. போட்டியின் இடையிடையே ஆடையைத் திருத்துதல், பொட்டு வைத்தல், கூந்தலை முடித்தல் போன்ற செயல்களையும் செய்தனர் என்பதை அறிய முடிகின்றது. பந்தடி போட்டி நிலா முற்றத்திலும் நடைபெற்றுள்ளன என்பது தெரியவருகின்றது. பெண்களே விளையாடிய இந்த பந்தாட்டதைப் பிற்காலத்தில் ஆண்களும் விளையாடியுள்ளனர் என்பதைக் கந்த புராணம் விவரிக்கிறது.

ஓரை

பெண்கள் கூடி ஆடும் குழு விளையாட்டான ஓரை பற்றி பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. இது 'ஆயம்' என்ற சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளது. 'பஞ்சாய் பாவைக்கொண்டு மகளிர் விளையாடும் விளையாட்டு' என்று பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இதற்கு விளக்கம் கூறியுள்ளார். அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்கள் இந்த ஓரையை தற்காலத்தில் நீரில் விளையாடும் 'ஓரியாட்டம்' என்ற சொல்லுடன் தொடர்பு படுத்தி பேசுகின்றார்.

வள்ளை

வள்ளை என்பது உரலில் பொருட்களை இட்டு பாடிக்கொண்டே உலக்கையால் குற்றி மகிழும் ஒருவகைச் செயலே என்று கூறுகின்றனர். இது சிலப்பதிகாரக் காலம் தொட்டு காணப்படுகின்றது. பிற்கால இலக்கியங்களில் பெண்கள் மட்டுமின்றி மற்றவர்களும் இதில் பங்கு கொண்டனர்.

மேற்கண்ட விளையாட்டுகளுடன் எண்ணி விளையாடல், எதிரொலி விளையாடுதல், கண்ணாம்பூச்சி, பறவையுடன் எதிர்பாட்டுக் கேட்டல், குற்றை, சிற்றில் செய்தல், சிறு சோறு ஆக்குதல், தற்கால ஹோலிப்பண்டி வகையான வண்ணப்பொடி விளையாட்டைப் போன்ற சுண்ணம் தூவுதல், செடிகொடி வளர்த்தல், பாவை விளையாட்டு, புள் ஓட்டம், மலர்க்கொய்தலும் மலர்த்தொடுத்தலும் போன்ற விளையாட்டுக்களைப் பெண்கள் ஆடியுள்ளனர்.

மேற்கூறிய விளையாட்டுக்களுடன் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடும் விளையாட்டுகளும் இருந்தன. அவைகளாவன அசதி ஆடல், அம்புலி அழைத்தல், உலாவல், சூது மற்றும் ஜலக்கிரீடை போன்றவை ஆகும். ஜலக்கிரீடை விளையாட்டு இராமநாதபுரம் சேதுபதி அரண்மனையில் ஓவியமாகத் தீட்டப்பட்டு காட்சித் தருகிறது.

சிறுவர் விளையாட்டுகள்

1. வட்டாட்டம்

தரையின்மேல் ஒரு பெரிய வட்டம் வரைந்து, அதனைச் சிறுசிறு கட்டங்களாக வகுத்துக்கொண்டு, அதன்மீது நெல்லிவட்டை அல்லது வட்ட வடிவிலான சுடுமண் சில்லைப் போட்டு ஒரு கட்டத்திலிருந்து மறுகட்டத்திற்குத் தள்ளி விளையாடும் விளையாட்டு இது. இதில் குறிப்பிட்ட இடத்தை அடைந்தவர்களே வெற்றி பெற்றவர்கள் ஆவர்.

இந்த விளையாட்டை, பாலை நிலத்தில் வேப்பமர நிழலில் வட்டரங்கு அமைத்து கல்லாச்சிறார் ஆடியதாக நற்றிணைக் கூறுகிறது. திருக்குறளும் இவ்விளையாட்டிற்கு வட்டமான அரங்கு தேவை என்கிறது. சுடுமண் வட்டுகளைக் கொண்டு இவ்விளையாட்டு ஆடப்பெற்றதால் சங்க இலக்கியங்கள் இதனை ‘வட்டாட்டம்’ எனக் குறிக்கின்றன.

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அகழ்வாய்வுகளிலும் வட்ட வடிவ சுடுமண் சில்லுகள் (Hip-Hop) சங்ககாலம் முதல் பிற்காலம் வரையுள்ள மண்ணடுக்குகளில் மிக அதிக அளவில் கிடைப்பதால், வட்டாட்டம் தமிழகத்தில் மிகப்பழங்காலம் முதல் சிறார்களிடையே பெரும் வழக்கத்திலிருந்தது எனலாம்.

இவ்விளையாட்டைப் ‘பாண்டில்’ எனவும் ‘பாண்டி’ எனவும் அழைப்பர். இது தள்ளுகின்ற பொருளுக்கேற்ப சில்லி, எத்து, மாங்கொட்டை என கிராமப்புறங்களில் இன்றும் வழங்கப்படுகிறது.

2. குறும்பு விளையாட்டுகள்

சிறுவர் விளையாடும் விளையாட்டில் பெண்களிடத்திலோ, பிற உயிர்களிடத்திலோ குறும்பு விளைவித்ததாகச் சில விளையாட்டுகள் உள்ளன. சிறுவர் தம் மகிழ்ச்சியின் பொருட்டு இதைச் செய்தனர். இத்தகைய குறும்பு விளையாட்டுகளைப் பொதுவாக பெண்களிடமே விளையாடியுள்ளனர். பீச்சாங்குழலில் நீர் பிடித்து நீரைப் பீச்சு அடித்து விளையாடும் விளையாட்டை உதாரணமாகக் கூறலாம்.

3. சிறுதேர் உருட்டல்

பழங்காலத்தில் மூன்று சக்கரவண்டிகளை உருட்டி சிறுவர்கள் மகிழ்ந்தனர். செல்வந்தர்களின் குழந்தைகள் அகன்ற தெருக்களில் இத்தேரை உருட்டி விளையாடியதைப் பெரும்பாணாற்றுப்படைக் கூறுகின்றது. பனங்குறும்பையால் உருளை செய்து சிறு தேரை மணலில் இழுத்து விளையாடும் சிறுவர்கள், தங்களைக் குதிரைகளாகவும், தலைவன் மகனை அத்தேரில் ஏறிவரும் அரசனாகவும் கற்பித்து விளையாடும் நிகழ்ச்சியை கலித்தொகை விவரிக்கின்றது. சிறுதேரின் வடிவ அமைப்பைக் கலித்தொகையில் காணமுடிகின்றது. பவழத்தால் ஆனபலகையின்மேல் கையில் செய்த யானை தனியாக இருக்கும். மற்றும் இரண்டு கல்யானைகள் சண்டை செய்வது போன்று தனியாக இருக்கும் என்று கூறப்படுகிறது. பட்டினப்பாலையில் இதைப்பற்றியக் குறிப்புகள் உள்ளன.

கிச்சுக்கிச்சுத் தாம்பலம்

மணலைச் சிறுசிறு குன்றுகளாக குவித்து அதனுள் ஏதேனும் ஒரு பொருளை ஒருவர் மறைத்து வைக்க வேண்டும். மற்றவர் அப்பொருளைக் கண்டுபிடிக்க வேண்டும், இவ்விளையாட்டைத் தற்காலத்தில் 'கிச்சுகிச்சுத் தாம்பலம்' என்றும் 'திரித்திரி' என்றும் அழைக்கின்றனர். சங்ககால மகளிரும் இவ்விளையாட்டை விளையாடினர். இந்த விளையாட்டை ஒருத்தி புன்னைக் கொட்டையை வைத்து விளையாடினாள் என்றும், ஆனால் பின்பு மணலிலேயே மறந்துவிட்டுச் சென்று விட்டதால் அது முளைவிட்டு வளரத் தொடங்கியது என்றும் நற்றிணைப்பாடல் ஒன்று கூறுகின்றது.

சிறுவர்கள் இத்தகைய விளையாட்டுகளுடன் பம்பரம், சிறுவறை, சம்பங்கோரைக் கொண்டு விளையாடல், சாமவிளையாட்டு, அம்புலி அழைத்தல், கருவுற்ற பெண்போல நடித்து விளையாடுதல் போன்றவைகளையும் விளையாடியுள்ளனர்.

உள்ளரங்கு விளையாட்டுகள் (Indoor Games)

1. தாயம்

இது தமிழ் மக்களிடைய மிகவும் புகழ்பெற்ற விளையாட்டாகும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் இவ்விளையாட்டை விளையாடினர் இந்த விளையாட்டில் சுடுமண் தாயக்கட்டைகள் மட்டுமின்றி தந்தம் மற்றும் மரக்கட்டைகளினால் ஆன தாயங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரையிலோ அல்லது பலகையிலோ ஆறு அல்லது எட்டு கோடுகளைக் குறுக்கிலும், நெடுக்கிலும் வரைந்து இவ்விளையாட்டை விளையாடுவார்கள் காயாக சோழிகளைப் பயன்படுத்துவார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் அகழாய்வில் சுடுமண்தாயக் கட்டை கிடைத்துள்ளது.[10] அதன் ஒரு பக்கத்தில் நீளக் கோடு ஒன்றும், அடுத்தடுத்த பக்கத்தில் குறுக்குவாக்கில் வரைந்த கோடுகளும், நான்காம் பக்கத்தில் கோடுகள் இன்றியும் காணப்படுகின்றது. இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே இதுவரை கிடைத்துள்ள தாயக்கட்டைகளில் இதுவே பழமையானது. அண்மையில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் படைவீடு அகழாய்வில் தந்தத்தால் ஆன தாயக் கட்டை கிடைத்துள்ளது. இக்கட்டையில் இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து புள்ளிகள் முறையே காணப்படுகின்றன. இது சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனத் தெரிய வருகின்றது.

2. சதுரங்கம்

வரலாற்றுக்காலம் தொட்டு இவ்விளையாட்டு ஆடியதற்கானத் தடயங்கள் கிடைக்கின்றன. திருக்காம்புளியூர், திருக்கோவிலூர், போளுவாம்பட்டி போன்ற இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் சதுரங்கக் காய்கள் கிடைத்துள்ளன.

---

1 Alagankulam - A Preliminary Report (1992)

3. ஆடுபுலிஆட்டம்

இது முழுக்கமுழுக்க அறிவு சார்ந்த விளையாட்டாகும். இதை இருபாலார்களும் விளையாடி உள்ளனர். கோவில்களிலும், சாலைகளிலும் பொது மன்றங்களிலும் இதை விளையாடியதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. கோவை மாவட்டம் வெள்ளரு கம்பாளையத்திலுள்ள குகை ஓவியங்களிலும் இவ்விளையாட்டு விளையாடியதற்கான கூம்பு வடிவமான கட்டங்கள் காணப்படுகின்றன.

4. பல்லாங்குழி

தொடக்கத்தில் பெண்கள் மட்டும் விளையாடிய இந்த விளையாட்டைப் பின்னாளில் இருபாலர்களும் சிறுவர்களும் விளையாடினர். இதைப் 'பல்லாங்குழி' என்றும் 'பண்ணாங் குழி' என்றும் 'பதினாங்குழி' என்றும் பரல்ஆடும் குழியாட்டம், என்றும் பல்வேறு பெயர் களில் வழங்கியுள்ளனர். தரையில் அல்லது மரப்பலகையில் 14 அல்லது 24 குழிகளைச் செய்து புளியங்கொட்டை அல்லது சோழிகளை நிரப்பி விளையாடுவர். ஒரு சமயத்தில் இருவர் மட்டும் விளையாடுவர். இது கணிதமுறையைச் சார்ந்த விளையாட்டாகும். பண்டைத் தமிழகத்தில் ஆண்கள் இரும்புகுண்டு போன்ற கனமான உருண்டைப் பொருட்களை குழியிலிட்டு ஆடியுள்ளனர். பிறகு கனமாக இரும்புக் குண்டுகளை தவிர்த்து பரல்களை பயன்படுத்தியுள்ளனர். இதனால் இதற்கு பரல்ஆடும் குழியாட்டம் என்று பெயர் ஏற்பட்டது.[1] இந்தப் பரல் ஆடும் குழியே மருவி பல்லாங்குழி என்று வழங்கலாயிற்று என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

5. கிட்டிப்புள்

இது ஆடவர்களின் விளையாட்டுகளில் ஒன்று. இது தற்கால கிரிக்கெட் விளை யாட்டின் பழைய வடிவம் என கருதுகின்றனர். தமிழ்நாட்டில் இந்த விளையாட்டைக் 'கிட்டி' என்று சுருக்கமாக அழைப்பர். கன்னியாகுமரி மாவட்டத்தில் 'புள்ளும்தள்ளும்' என்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் 'சில்லாங்குச்சி' என்றும் திருச்சி மற்றும் கோவை மாவட்டத்தில் கிள்ளிதாண்டு என்றும் வழங்கி வருகின்றது. இவ்விளையாட்டை ஆட திறந்தவெளித் திடல் தேவை. இரண்டிற்கு மேல்பட்டவர்கள் அல்லது இரண்டு குழுக்கள் இவ்விளையாட்டில் பங்கு கொள்ளலாம். வெற்றி தோல்வியை நிர்ணயிக்க சில குறிப்பிடத்தக்க விதிகள் பின்பற்றப்பட்டுள்ளன. இந்த விளையாட்டில் பெரியகுச்சியும். சின்னக்குச்சியும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தோடர்கள் சிறுகுச்சிக்குப் பதிலாக கல்லை அடித்து ஆடியுள்ளனர்.

மனிதர்களை மட்டுமின்றி, விலங்குகளையும், பறவைகளையும் ஒன்றோடு ஒன்று மோதவிட்டு, சண்டையிட்டுக் கொள்வதை மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடு கண்டு களித்துள்ளனர் என்பதைப் பல சான்றுகளின் மூலம் அறிய முடிகிறது.

சேவல்சண்டை (அ) கோழிச்சண்டை

கோழிச்சண்டையைப் பற்றி சங்க இலக்கியங்கள் சிறப்பாக இயம்புகின்றன. திருச்சி மாவட்டம் உறையூரில் கோழியும் யானையும் சண்டை செய்ததாக குறிப்புகள் உள்ளன. இந்தச் சண்டையில் யானையைக் கோழி வெற்றி பெற்றது. அதன் பொருட்டு அவ்வூருக்கு கோழியூர் என்று பெயர் வழங்கலாயிற்றென்பர். உறையூரைத் தலைநகராகக் கொண்ட முற்காலச் சோழர்கள் தங்களைக் 'கோழியர்க்கோன்' என்று அழைத்துக் கொண்டனர். முருகப்பெருமானிடம் போரிட்ட பத்மாசூரன், பல உருவங்களாக மாறி போர்செய்து முடிவில் சேவலாக மாறினான். முருகன் இச்சேவலைக்கொன்று தன்னுடைய கொடியாக மாற்றினான். இதுவும் குலக்குறியின் சாயலாக இருக்கலாம். வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம், இப்ரகாம் மலை என்ற மலையில் பெருங்கற்கால ஓவியங்களில்

1 தொ. இரா. நஞ்சுண்டன் – காப்பியங்களில் விளையாட்டுகள (1991)

சேவல்சண்டை மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரத்திற்கு அருகிலுள்ள இடைகால் என்ற ஊரில் உள்ள சிவன்கோவிலில் காணப் பெறும் நாயக்கர் கால ஓவியத்தில் சேவல் சண்டையைக் குறிக்கும் ஓவியம் வெகு அழகாகத் தீட்டப்பட்டுள்ளது.[1] வீரச்செயல் புரிந்து மாண்ட சேவல்களுக்கு நடுகல் எடுத்ததைச் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் அச்சிறுபாக்கத்திற்கு அருகில் இந்தளூரில் உள்ள கோழியின் சிற்பம் காட்டுகிறது. இவ்வூர் மக்கள் இக்கோழி நடுகல்லைத் தெய்வமாகப் போற்றிவழிபாடு செய்து வருகின்றனர். கல்லில் கோழி ஒன்று மிகவும் கம்பீரமாகச் செதுக்கப் பட்டுள்ளது. அவ்வுருவத்திற்கு மேற்பகுதியில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப் பட்டுள்ளது.

கல்வெட்டின் வாசகம்

1. கீழ்சேரிக் கோழி பேடு கொற்றி'' - என்று எழுதப்பட்டுள்ளது. இந்நடுகல் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.[2] விழுப்புரத்தில் அண்மையில் பொதுப் பணித் துறை அலுவலரால் மற்றொரு கோழி நடுகல் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் வாசகம் பின்வருமாறு:

1 ''புகைபுரு மேற் போ

2. ரிட்டு யாடி க்க

3. ருகிய கோழி''[3]

என்று இயம்புகிறது.

அண்மைக்காலம் வரை தமிழகத்தில் பல இடங்களில் சேவல் சண்டையை வீர விளையாட்டாக நடத்தி வந்தனர். இதைப் போன்றே ஆட்டுக்கிடாக்களை வெறியோடு மோதவிட்டு மக்கள் ஆரவாரத்தோடும் மகிழ்ச்சியோடும் பார்த்துள்ளனர். அம்பை வட்டத் தில் உள்ள இடைகால் என்ற ஊரில் உள்ள நாயக்கர் கால ஓவியத்தில் ஆட்டுச் சண்டைக் காட்சியும் வெகு அழகாகத் தீட்டப்பட்டுள்ளது.

---

1. S- Hariharan - Idaikkal Paintings (கல்வெட்டு இதழ் எண் : 15)
2. நடன. காசிநாதன் - தொண்டை மண்டலத்தில் அண்மைகாலக் கண்டு பிடிப்புகள் செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு (1968)
3. இரு கோழி கல்வெட்டுக்களையும் திரு. ஐ. மகாதேவன் அவர்கள் மேற் குறித்தவாறு திருத்தி படித்துள்ளார்கள்.

உழவும் தொழிலும் 8

மனிதனுக்குப் பொருளாதார நோக்கினைக் கற்பித்து, மேம்படுத்தி அவனை நாகரிக வளர்ச்சியை நோக்கி நடை பயிலச் செய்தவை உழவும் தொழிலுமேயாகும். தமிழக வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் இவை ஒன்றினை ஒன்று மிஞ்சியும், ஒன்றோடு ஒன்று இணைந்தும் வளர்ந்துள்ளன. உழவு என்பது நிலம் சார்ந்த உற்பத்தித் திறனாகும். தொழில் என்பது நிலம் சாராத உற்பத்தித் திறனாகும். தொழிலானது கைத்தொழில், இயந்திரத்தொழில், போர்த்தொழில்; கலைத்தொழில் என்று பல்வேறு வகைப்பட்ட போதிலும் அவை உடலுழைப்பு, அறிவாற்றல் என்ற இருவகைகளில் அடங்கிவிடக் கூடியவையே. இங்குத் தொழிலாக உடல் உழைப்புச் சார்ந்த கைத்தொழில் மற்றும் இயந்திரத் தொழில்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

உழவென்பது . . .

'உழைப்பு' என்ற கருத்தின் அடிப்படையில் உழவு என்னும் சொல் பிறந்திருக்க வேண்டும். உழவர், சதுர்த்தர், வளமையர், களமர், மேழியர், வேளாளர், ஏரின் வாழ்நர் காராளர், புனைஞர், பின்னவர், கடையர், தொழுவர், மள்ளர் என்று பல பெயர்களைச் சங்க இலக்கியங்களும், நிகண்டுகளும் உழவர்களுக்குத் தருகின்றன.[1] வேள் ஆளர் - மண்ணை ஆள்பவர் என்ற அடிப்படையிலும், கார் ஆளர் - நீரை ஆள்பவர் என்ற அடிப்படையிலும் அவர்களுக்குப் பெயர்கள் வந்தன. தொடக்கத்தில் வேளாளர் என்ற சொல் பெருந்தகையாளர் என்ற பொருளில் பயன்பட்டுப் பிறகு உழவர்களைக் குறிக்கத் தொடங்கியது. இன்று விவசாயிகள் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் இச்சொல் பயிலப்படவில்லை. எனவே இச்சொல்லைப் பின்னாளில் வழக்கிற்கு வந்ததாகவே கொள்ள வேண்டும்.

உழவின் தொன்மை

'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' என்றொரு புறப்பாடல் கூறும்.[2] மனிதனுக்கு இன்றியமையாத தேவையான உணவு தொடக்க நிலையில் தேடப்பட்டுச் சேகரிக்கப்பட்டது. அடுத்த நிலையில் அது உற்பத்தி செய்யப்பட்டது. தொடக்க நிலையில் இயற்கையாக விளைந்த பழங்கள், கிழங்குகள், வரகு, மூங்கில்அரிசி முதலியவை உட்கொள்ளப்பட்டன. உணவைச் சேமித்து வைத்திருந்து உண்ண வேண்டிய நிலை வந்தபோது உணவு தேடல் நிலையிலிருந்து உற்பத்தி நிலைக்கு மாறியது. இந்நிலையில் கடினமான நிலம் கிளரப்பட்டு வித்திடப்பட்டது. மழைநீர் பயன்படுத்தப்பட்டது. உற்பத்தி அதிக அளவில் தேவைப் பட்டபோது ஆற்றோரப் பகுதிகளுக்குக் குடியேறி உற்பத்தியில் ஈடுபட்டனர் மக்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பையம்பள்ளி என்னும் ஊரில் நிகழ்ந்த அகழாய்வின் மூலம் புதிய கற்காலத்தைச் சேர்ந்த கொள்ளு, பாசிப்பயறு போன்ற தானியங்களின் எச்சங்கள் சேகரிக்கப்பட்டன.[3] பெரியார் மாவட்டம் கொடுமணல் அகழாய்வில் பெருங்கற்

---

1. 'வரலாற்றில் வேளாண்குடிகள்' தொகுப்பாசிரியர் புலவர் மணியன், 1991, கோவை பக்கம் : 1
2. புறம் : 18
3. 'Indian Archaeology A Review', 1967-68, p. 28

காலத்தைச் சேர்ந்த தானியங்கள் கிடைத்துள்ளன. இவ்விடத்தில் ரெலாற்றுக் காலத்தைச் சேர்ந்த வரகு, கம்பு ஆகிய தானியங்களும் வெண்டை, இலந்தை விதைகளும் கிடைத்துள்ளன.[1]

சங்ககால உழவு

சங்ககால நிலவகைகளாகப் புலம், புன்புலம், கரம்பை, வயல், கழனி, செறு, துடவை, பழனம், பணை போன்றவை தெரியவருகின்றன. புன்புலம், கரம்பை முதலியவை கடுமையான நிலங்களாகும். இவை உழுகோல், மண்வெட்டி ஆகியவற்றால் கிளரப்பட்டுப் பண்படுத்தப்பட்டன. கற்காலக் கைக்கோடரிகளின் வளர்ச்சியே உழுகோல் எனலாம். வயல், கழனி, செறு, பழனம் என்னும் நிலங்கள் நாஞ்சில், ஏர், கலப்பை எனும் உழுபடைகளால் பண்படுத்தப்பட்டன. கலப்பையைச் சொல்கின்ற பெரும்பாணாற்றுப்படை இதன் கொழுமுகம் உடும்பின் முகம் போலவும், மேல் பகுதியான கலப்பை யானையின் துதிக்கை போலவும் இருந்தது என்று கூறும்.[2] கொழு என்பது புன்புலக் கருவியான உழுகோலின் வளர்ச்சியே ஆகும். உழுகோல் உழவனை நோக்கி மண்ணைக் கிளர, கலப்பையின் கொழு உழவனுக்கு எதிராக மண்ணைக் கிளருகிறது.[3]

முதலில் நில உற்பத்தி அவரவர் தேவைக்கு மட்டுமே செய்யப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாகவும் 'பொருள் ஈட்டல் நோக்கத்தாலும்' தேவைக்கும் மேலாக வணிக நோக்கில் அதிக உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. வேளிர்களும், வேந்தர்களும் நில உற்பத்திப் பெருக்கத்தில் கருத்தூன்றினர். மேலும் மேலும் நிலங்கள் சாகுபடிக்கு உட்படுத்தப்பட்ட போது நெடுஞ்செழியன் போன்ற மன்னர்கள் நீர்நிலைகளை உண்டு பண்ணினர்.[4]

சங்ககாலத் தமிழகத்தில் காவிரி, வைகை, ஆன் பொருநை, பேராறு, சேயாறு போன்ற ஆறுகள் நீர்ப்பாசன வசதிகளைத் தந்தன. 'சுழி சுற்றிய விளை கழனி' என்னுமளவுக்கு நீர் மிகுதியாகக் கிடைத்தது.[5] கயம், குளம், குட்டம் போன்ற நீர் நிலைகள் ஆறில்லாத பகுதிகளில் பயன்பட்டன. ஏற்றம், அகலாம்பி என்னும் கருவிகள் இறவைப் பாசனத்திற்குப் பயன்பட்டன. நீரில்லாத காலத்தில் கிணற்றில் நீரிறைக்கும் போது முகவைகள், நீரை முகக்காது தொங்கிய நீண்ட கயிரையே முகந்தன என்று ஒரு பாடல் குறிப்பிடுகிறது.[6]

வெண்ணெல், ஐவனநெல், கழைநெல், தோரை, செந்நெல், புதுநெல் என்று நெல் வகைகள் சொல்லப்பட்டுள்ளன.[7] புன்புலத்தில் வெண்ணெல், ஐவனநெல், கழைநெல், தோரை முதலியன விளைந்தன. பாலை நில அரிசி ஈச்சங்கொட்டை போலிருந்தது.[8]

---

1. 'ஆவணம்', இதழ் : 4, சனவரி 1994, பக்கம் 132–134
2. 'பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
   உடும்பு முக உழுக் கொழு மூழ்க' - பெரும்பாண், 199–200
3. Social Life of Tamils, S. Singaravelu, Kulalampur, 1966, pp. 40-41.
4. 'நிலனெளி மருங்கின் நீர் நிலை பெருகத்தட்டோர்' – புறம் : 18, பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியது
5. புறம் : 396
6. பதிற்றுப்பத்து, 22 : 12–15
7. S. சிங்காரவேலு, மேலது, பக்கம், 32
8. 'களர் வளரீந்தின் காழ் கண்டன்ன
   சுவல் விளை நெல்லின் செவ்வவிழ்' – பெரும்பாண், 130–131

வரகு, அவரை முதலியனவும் விளைந்தன. கரும்பு, கழைக் கரும்பு, மஞ்சள், குலைவாழை, தெங்கு, கமுகு முதலியனவும் விளைந்தன.[1] கரும்பாலை மணம் அது அமைந்திருந்த பகுதி யெல்லாம் வீசியது.[2] கழைக் கரும்பு என்பது மூங்கிலைப் போன்ற கரும்பு போலும் (தற்காலத்திய ஆலைக் கரும்பாக இருக்கலாம்) அதியமான் கரும்பினை அறிமுகப்படுத்தினான் என்ற குறிப்பும் உண்டு.[3]

தானியங்கள் போரடித்துக் கதிரிலிருந்து பிரிக்கப்பட்டன. முன்றில்களில் குதிர்களில் நெல் சேமித்து வைக்கப்பட்டது.[4] மூடைகளாக நெருக்கமாக அடுக்கப்பட்டும் நெல் சேமிக்கப்பட்டது.[5] ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது.[6] ஒரு பெண் யானை படுக்கும் அளவுள்ள நிலத்தில் ஏழு ஆண்யானை உண்ணுமளவு நெல் விளைந்தது.[7] வறட்சி ஏற்பட்ட காலத்தில் உழவர்கள் விதை நெல்லை உண்டநிலையும் ஏற்பட்டிருக்கிறது.[8]

ஊர்களைச் சூழ்ந்து விளைநிலங்கள் இருந்தன.[9] 'நாடுகிழவோனே' என்று நில வுடமையாளர்கள் புகழ்ச்சியாக விளிக்கப்பட்டனர். பிராமணர்களுக்குப் பிரமதாயங்களாக நிலக்கொடைகள் வழங்கப்பட்டன. நிலவுடமையாளர்களான வேளிர்கள் வேந்தருக்கும் பெண் கொடுத்து உறவாடினர்.[10] உழுதுண்பவர்களும், உழுவித்துண்பவர்களும் இருந்த சமுதாய மாக சங்ககாலம் விளங்கியது.

கழனிகள் 'விளைவறா வியன் கழனிகளாக'[11] எப்பொழுதும் பயிர்கள் பயிரிடப்பட்டு விளங்கின. ஆண்களோடு பெண்களும் உழுதொழிலில் ஈடுபட்டனர்.[12] பெண் தொழிலாளிகள் உழத்தியர், எயிற்றியர் எனப்பட்டனர்.[13] நாற்று நடும் போதும், நீரிறைக்கும் போதும் பலரும் சேர்ந்து பாடினர். நெற்கதிர்களைக் கொத்தி உண்ணவரும் பறவைகளை விரட்ட

---

1. 'குலைவாழைக் காய்க் கமுகிற் கமழ் மஞ்சள்' S. சிங்காரவேலு, மேலது, பக்கம் 32-33
2. 'விளைவறாவியன் கழனிக்
   கார்க்கரும்பின் கமழாலை' – பெரும்பாண் : 8-9
3. 'அரும் பெறலமிழ்த மன்ன
   கரும்பிவண் தந்தோன்' புறம் : 392 ; 99
4. 'பிடிகணத்தன்ன குதிருடை மூன்றில் - பெரும்பாண் : 186
5. 'மூடைப்பண்டம் மிடை நிறைந்தன்ன' - புறம் : 393
6. 'வேலி ஆயிரம் விளைக நின்வயலே' - புறம் : 391
   'சாலி நெல்லின் சிறைகொள்வேலி
   ஆயிரம் விளையூட்டு ஆக
   காவிரி புரக்கும் நாடு கிழவோனே' - பொருநர். 246–48
7. 'ஒருபிடி படியுஞ் சீறிடம்
   எழுகளிறு புரக்கு நாடு கிழவோயே' - புறம் : 40
8. 'வீழ்குடி உழவன் வித்து உண்டாஅங்கு' - புறம் : 230
9. 'பல்லூர் சுற்றிய கழனி' - புறம் : 387
10. S. சிங்காரவேலு, மேலது, பக்கம் ; 35
11. பெரும்பாண் : 8
12. S. சிங்காரவேலு, மேலது, பக்கம், 35-36
13. மேலது, பக்கம். 36

தட்டை பறை போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன.[1] வாயினாலும் ஒலி எழுப்பி விரட்டினர். பரணைகளில் இருந்து கவண் எறிந்தும் விரட்டியுள்ளனர்.[2]

சங்கம் மருவிய காலத்தில் உழுதொழில் பெருஞ்சிறப்படைந்தது. 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'[3] என்று சொல்லுமளவு உழவே தலையாக இருந்தது. 'உழுவார் உலகத்தார்க்கு அச்சாணியாக'[4] விளங்கினர். மற்றெல்லோரும் அவர்களைத் தொழுது பின் செல்பவராயினர். வள்ளுவர் எருவிடுதல் (உரமிடுதல்) பற்றியும் கூறியுள்ளார்.[5]

பல்லவர் காலத்தில் - உழவு

சிம்மவர்ம பல்லவன் காலத்திலேயே பல்லவர் அரசு காவிரிக்கரை வரை பரவியிருந்தது என்பது பள்ளன்கோயில் செப்பேட்டால் அறியப்படுகின்றது. இச்செப்பேட்டில் காவிரி ஆறு ஒரு பெண்ணாக வருணிக்கப்படுகிறது. பசும் நெல்வயல்களை ஆடையாகவும், கரும்பு, வாழை, கமுகந்தோட்டங்களை அரையிலணியும் ஒட்டியாணமாகவும் அணிந்துள்ளதாகக் காவிரி ஆற்றுப் பாசனப் பெருமை பேசப்பட்டுள்ளது.[6] முதலாம் மகேந்திரவர்மனும் நிர்மலமாக ஓடுகின்ற காவிரியைப் பல்லவனுடைய ஆறு எனச் சொல்லி பெருமைப்படு கிறான்.[7] முதலாம் பரமேஸ்வரனின் கூரம் செப்பேடு பாலாற்றையும், அதனிலிருந்து பரமேஸ்வர தடாகத்திற்கு நீர் கொண்டு சென்ற பெரும்பிடுகு வாய்க்காலையும் குறிப்பிடு கின்றது.[8] நாட்டுக்கால், ஊற்றுக்கால் என்று கால்கள் வகைப்படுத்திப் பேசப்படுகின்றன. கால்களில் குரங்கறுத்தலும், கூடை இறைத்தலும் சொல்லப்பட்டுள்ளன. இதே பரமேஸ்வர வர்மனின் திருவதிகைக் கல்வெட்டு ஊருணி ஒன்றைக் குறிப்பிடுகிறது.[9] தூம்பு, குமிழி, தலைவாய், தலைப்பேழை, ஜலயந்திரம், ஜலதுவாரம் குற்றேத்தம், பேரேத்தம் என்பன போன்ற நீர்ப்பாசன நுட்பப் பெயர்கள் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின்றன.

பொதுவாக பல்லவர் கல்வெட்டுகள் தடாகங்கள், மற்றும் ஏரிகளைப் பற்றிய குறிப்புக்களை மிகுதியாகத் தருகின்றன. மகேந்திரவாடியில் மகேந்திரத் தடாகம் இருந்த தையும், மாமண்டூரில் சித்திரமேகத் தடாகம் இருந்ததையும் அங்குள்ள முதலாம் மகேந் திரனின் கல்வெட்டுகள் கூறுகின்றன. காசாக்குடிச் செப்பேடு திரையனேரியைக் குறிப்பிடு கிறது. தந்திவர்மன் காலத்தில் உத்திரமேரூரில் வயிரமேகத்தடாகம், திருவெள்ளறையில் மார்ப்பிடுகு பெருங்கிணறு, குடிமல்லம் பகுதியில் வெள்ளேரி, தூம்பனேரி ஆகியவை இருந்தமை குறிப்பிடப்படுகின்றன. கம்பவர்மன் காலத்தில் காட்டுத்தும்பூர் அருகில் புனக வல்லித் தடாகமும், தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் காலத்தில் வந்தவாசிப் பகுதியில் மருதாடி ஏரியும் குறிக்கப்படுகின்றன.[10] இன்னும் எண்ணற்ற ஏரிகள் பல்லவர் காலத்தில் இருந்தன.

---

1. Social Life of Tamils, S. Singaravelu, Kulalampur, 1969, pp.45
2. 'நெடுவரை ஆசினிப் பணவை ஏறி
   கடுவிசைக் கவணையில் கல் கைவிடுதலின்' - கலி : 41 : 9-10
3. திருக்குறள், 104 : 1
4. திருக்குறள், 104 : 2
5. 'ஏரினும் நன்றாம் எரு இடுதல் இட்டபின்
   நீரினும் நன்று அதன் காப்பு' – திருக்குறள், 104 : 8
6. 'பல்லவர் செப்பேடுகள் முப்பது, தி. நா. சுப்பிரமணியம், பள்ளன்கோயில் செப்பேடு சமஸ்கிருதப் பகுதி மொழி பெயர்ப்பு, பக்கம். 31
7. S.I.I Vol. I, 33, 34 pp. 28-30
8. 'பல்லவர் செப்பேடுகள் முப்பது' தி. நா. சுப்பிரமணியன், கூரம் செப்பேடு, பக்கம் 60
9. S.I.I. Vol. VIII. 331
10. 'Administration and Social Life Under the Pallavas', C. Meenakshi, 1977, pp. 118-125

உத்திரமேரூரில் இருந்த வயிரமேகத் தடாகம் பற்றி மிகுதியான செய்திகள் கிடைக்கின்றன. இவ்வேரி பராமரிக்கப்பட்ட முறையை அறிந்தாலே மற்ற பேரேரிகளெல்லாம் பராமரிக்கப்பட்ட முறை நமக்குப் புலப்படும். தந்திவர்மனின் ஏழாவது ஆண்டில் உத்திர மேரூர் சபையினர் ஐந்து பாடகம் நிலத்தை சுவாமி குமாரர் என்பவருக்கு விற்றுள்ளனர். அவர் அதில் ஏரி தோண்டலாம். ஆனால் அந்நிலம் எல்லா நிலமும் போல அவரும் அவரது சந்ததியினரும் அனுபவிக்கத் தக்கதல்ல என்ற நிபந்தனையுடன் அந்நிலம் விற்கப் பட்டது[1] இப்படித் தோண்டப்பட்ட ஏரி ஓடங்கள் விடுமளவுக்குப் பெரிதாக இருந்தது. நங்காளி அவ்வடியார் என்ற புத்தடிகள் தாயார் நூறு கழஞ்சு பொன் கொடுத்து ஓர் ஓடம் விடச் செய்துள்ளார்.[2] இவரது மகன் புத்தடிகள் இவ்வயிரமேகத் தடாகத்தில் இரண்டாவது ஓடம்விட நூறு பொன் கழஞ்சு கொடுத்துள்ளார். இதன் வருவாய் மூலம் ஒரு நாளைச்கு ஒரு குழி என்ற கணக்கில் ஆண்டிற்கு 365 குழிமண் இவ்வேரியில் தூர் எடுக்க ஆள்கூலி உள்ளிட்டு சபையார் ஒப்புக்கொண்டுள்ளனர்.[3]

தந்திவர்மனின் ஒன்பதாமாண்டில் உத்திரமேரூரில் உள்ள தொறுக்கள் அனைத்திலும் கிடைக்கக்கூடிய எருவை விலைபெற ஒருவர் இருபது கழஞ்சு பொன் கொடுத்துள்ளார். இவ்வெருவை விற்று வரும் பணத்தால் மாடு வாங்கவும், அம்மாடு மற்றும் அந்தப் பொன் கொண்டு திங்கள் தோறும் ஏரி தூர் எடுக்க ஏரிவாரியத்தினர் ஒப்புக் கொண்டுள்ளனர். எருவை பிறருக்கு விநியோகம் செய்தவர்கள் தண்டனைக்குரியவர்களாகக் கருதப்பட்டனர்.[4]

இதே ஊரில் சுறிகைக்குட்டம் என்ற குளத்தைச் சுற்றி அரைக் கோல் அளவு நிலம் கம்பவர்மன் காலத்தில் விற்கப்பட்டுள்ளது. இது இவ்வேரியின் உள்நிலமாகக் (பஹூர் பூமியாக) கருதப்பட்டது. அதனில் மடமெடுக்கவும் சபையார் ஒப்புதலளித்தனர். இக்கரையில் முள் நட்டவர்கள் முன் சொன்ன வயிர மேகத் தடாகத்தில் வெட்டிவேலை (இலவசக் கட்டாயச் சேவை) செய்யவேண்டுமென எச்சரிக்கப்பட்டனர்.[5]

வயிரமேகத் தடாகத்தைப் பராமரிக்க என்று ஒரு வாரியம் சபையினரால் நியமிக்கப் பட்டது. ஊரில் வரி கொடுக்க முடியாமல் ஓடிப் போனவர்களது நிலம் இவ்வேரிக்காக வாங்கப்படுமளவு ஏரிக்கென தனிமுதல் இருந்துள்ளது. அவ்வாறு வாங்கப்பட்டவர் நிலத்தை மூன்றாண்டளவில் உரிய பொன் கொடுத்துத் திருப்பிக் கொள்ளலாம் எனவும் இல்லையெனில் ஏரிக்கே நிலம் சொந்தமாகிவிடும் எனவும் சுட்டப்பட்டது. இச்சபைத் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் நிலமும் ஏரிக்காகக் கைப்பற்றப்படும் என எச்சரிக்கப்பட்டது.[6] ஆக இவ்வேரி ஒரு நிலவுடைமை நிறுவனம் போல நிருவகிக்கப்பட்டுள்ளது.

பல்லவர் காலத்தில் நிலங்கள் நன்செய், நீர் நிலம், புஞ்சை, களர், கன்று மேய்பாழ், காடு, பீடலிகை, கிடங்கு, மனை, மனைப்படப்பு என்று பல தரங்களில் இருந்தன. நிலங்கள் கோல் (4 சாண்கோல், 12 சாண்கோல்), குழி என்ற அடிப்படை அளவுகளில் பட்டி, பாடகம், வேலி என்ற பெரும் அளவாக அளக்கப்பட்டிருந்தன. விதைப்பாடு என்று விதை விதைப்பு அளவிலும், 'ஹல' (கலப்பை) என்னும் உழும் அளவிலும் நிலப்பரப்புகள் அளக்கப்

1. S.I.I. Vol. VI, 365
2. Ibid., 357
3. Ibid., 353
4. Ibid., 359
5. Ibid., 370
6. Ibid., 344

பட்டன. 'நிவர்த்தனம்' என்று சுற்றளவிலும் அளக்கப்பட்டிருக்கின்றன.[1] காசாக்குடிச் செப்பேட்டில் நிவர்த்தனம், பட்டி ஆகிய இரண்டும் ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது. 240 குழி கொண்டது ஒரு பாடகம் என்று தெரிகிறது. ஏராளமான சதுர்வேதிமங்கலங்களும், பள்ளிச்சந்தங்களும், தேவதானங்களும் இருந்தன. எனவே உழுவார், உழுவிப்பார் என்ற இரு நிலைகள் முறையே காராண்மை, மீயாட்சி என்று இரு உரிமைகளாகச் சொல்லப்பட்டன. நிலங்கள் கொடை கொடுக்கப்பட்டபோது கோவும், பொறியும் மாற்றி குடிநீக்கிக் கொடுக்கப்பட்ட செய்திகளும் காணப்படுகின்றன.[2] எனவே குடி என்ற சாகுபடியாளர்களின் சாகுபடி உரிமை நிலையானதாகவும், மாற்றத் தக்கதாகவும் இருந்திருக்கிறது.

நெல்லும் பிறதானியங்களும் நாழி, மரக்கால், குறுணி பதக்கு, காடி என்ற அளவைகளில் அளக்கப்பட்டன. சில மரக்கால்கள் 'பொற்கால்' என்பது போலத் தனிப்பெயரிட்டும் அழைக்கப்பட்டன. புதாநாழி, வெட்டிநாழி என்று கூடை அல்லது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, நாழி அளவு வரி என்பதாக வரிகளும் வசூலிக்கப்பட்டன.[3] ஈழப்பூச்சி என்ற பெயரில் மரம் ஏறி கள் இறக்குவதற்கான வரியும் அரசால் விதிக்கப்பட்டுள்ளது. நாடுகாவல், ஊடுபோக்கு என்ற பெயர்களிலும் அரசிற்கு நிலவருவாய்கள் இருந்துள்ளன.[4]

பாண்டியர் கால உழவு

பாண்டிய நாட்டில் வைகை, தாமிரபரணி, குண்டாறு, மீகுண்டாறு, சுருளி ஆறு, வெள்ளாறு போன்ற ஆறுகளால் நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கின்றன. ஏழாம் நூற்றாண்டில் வைகையாற்றில் மதகு வைத்து அரிகேசரியான் என்னும் கால் பிரிக்கப்பட்டதை வைகைக் கரைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[5] பாண்டிய அரசர்கள் ஆறுபல தலைக்கண்டவர்கள் என செப்பேடுகளில் புகழப்படுகின்றனர்.[6] பேராறுகளிலிருந்து கால்கள் பிரிக்கப்பட்டு புதிதாகத் தோண்டப்பட்ட பல ஏரிகளை நிரப்பினர். புதிதாகப் பல ஏரிகளின் கரைகள் உயர்த்தப்பட்டதைக் 'கடல் போலக் குளம் பலவின் கரையுயரியும்', 'எண்ணிறந்த தடாகங்களும் இயற்றுவித்தும்' என்று தளவாய்புரச் செப்பேடு[7] குறிப்பிடுகின்றது. ஆறுகளிலிருந்து குளங்களுக்குக் கால்கள் எடுக்கப்பட்டது தவிர மழைநீர் மூலமும் குளங்கள் நிரம்பின.

ஒவ்வொரு குளத்திற்கும் மழைநீர்ப் பிடிக்கும் நிலங்கள், குளத்தின் 'நீர்க்கோள்' என்றும், 'குளவாய்' என்றும் அழைக்கப்பட்டன. குளங்களிலிருந்து வயல்களுக்கு இறைப்பதற்காகப் பாய்கின்ற சிறு வாய்க்கால் என்பதைத் 'துடவைகளுக்கு இறைக்கப் பாய்கிற சிறுகால்' என்று சிவகாசிச் செப்பேடு கூறுவதன் மூலம் அறியலாம்.[8] ஒவ்வொரு ஊரிலும் ஒன்றுக்கு மேற்பட்ட குளங்கள் இருந்தன. பார்த்திப சேகரபுரம் செப்பேடு பசுங்குளம், வெஞ்சைக் குளம், காஞ்சிரங்குளம், கடலங்குளம், இலைஞ்சக்குளம், கீழ்குளம் என்று பல குளங்களைப் பெயரிட்டுச் சொல்கிறது.[9] இருப்பைக்குடிக் கிழவன் பல குளங்களைப் புதுப்பித்துக் 'கிழவனேரி' எனப் பெயரிட்டுள்ளான். மாறனூர் பெருங்குளம், இருப்பைக்குடி வள்ளைக்

1. 'Administration and Social Life Under the Pallavas', C. Meenakshi, pp. 106-110
2. மேலது, பக்கம் 169-70.
3. மேலது, பக்கம். 98.
4. மேலது, பக்கங்கள், 90. 99, 101.
5. கல்வெட்டு இதழ், எண் : 9 பக்கம் 1
6. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக்கம் . 126
7. மேலது.
8. மேலது, பக்கம் 204
9. மேலது, பக்கம் அ 11 - அ 16

குளம், கொழுவூர் அரசங்குளம், நெல்மலி பெருங்குளம், சிறுபுத்தூர் பாழிக்குளம், சாத்தனூர் பெருங்குளம் ஆகிய பல ஊர்க்குளங்களையும் சீரமைத்து அவற்றிற்கெல்லாம் 'கிழவனேரி என்றே பெயர் வைத்துள்ளான்.[1]

ஏரிகளில் மடைகள் அமைக்கப்பட்டன. இம்மடைகள் எண்களாலும் பெயர்களாலும் குறிப்பிட்டு அழைக்கப்பட்டன. மேலே சொன்ன சாத்தனூர் கிழவனேரியில் வேப்பமடை, பொன்னான் மடை, பூங்குழி மடை என்று பெயர்கள் இருந்துள்ளன. முதல்மடை, கடைமடை நடுவில் மடை என்றும் மடைகள் குறிக்கப்பட்டன. குளத்தில் உள்ள நீர்மட்டம், நீரளவு போன்றவற்றிற்கு ஏற்ப மடை, மதகு, தூம்பு, குமிழி ஆகியவை அமைக்கப்பட்டன. 'மடை' என்பது திறந்ததும் நீர்மட்ட அளவில் நீர் வெளியேறும் அமைப்புடையது 'மதகு' என்பதும் திறந்ததும் நீர் வெளியேறும் அமைப்புடையது எனினும் வேண்டிய அளவு உயர்த்தியும், தாழ்த்தியும் நீரினைக் கட்டுப்படுத்தி வெளியேற்ற முடியும். 'குமிழி' என்பது நீர்மட்டத்திற்குக் கீழாக சிறு துளை வழியாக நீர் கரையைக் கடந்து வெளியேறி மீண்டும் மேலெழுந்து செல்லும் அமைப்புடையது. 'தூம்பு' என்பது நீண்ட குழாய் மூலம் தண்ணீர் வெளியேறுவது.[2]

திண்டுக்கல் வட்டம் இராமநாதபுரம் கல்வெட்டில் பாண்டிய மன்னன் மாறஞ்சடையன் காலத்தில் நக்கன்புள்ளன் என்பவன் தன் பேரால் புள்ளனேரி என்ற ஏரி அமைத்து அதனில் கற்களைக் கோதி 'குமிழி' அமைத்தான் என்னும் செய்தி பெறப்படுகிறது.[3] இக்குமுழி செய்த தச்சனுக்கு ஏரிப்பாசனத் தொடக்கத்தில் உள்ள 'தலைநீர்பாடு கால் ஓரயைல்' என்ற நிலம் நல்கப்பட்டுள்ளது. மடைகள் கல்லாலும், செங்கல்லாலும் கட்டப்பட்டன. இருப்பைக்குடிக் கிழவன் செங்கல் (இட்டிகை) மடைகளைச் சருங்கல்லால் கட்டியதையும் அறிகிறோம்.[4] அணைகளும் இருந்தன. தளவாய்புரம் செப்பேடு 'பெருநல்லூர்ச் சிறை'[5] ஒன்றையும், சிவகாசிச் செப்பேடு பேரணை[6] ஒன்றையும் கூறுகின்றன. 'துலா' என்ற பெயரில் கிணற்று நீரை இறைக்க ஏற்றங்கள் இருந்தன. இவை தராசு போல இரு புறமும் ஏறி இறங்குவதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். சிவகாசிச் செப்பேடு 'வடதலைத் துலாச் செய்க்கிறைக்கின்ற தேயாற்பண்ணை' என்று குறிப்பிடுகின்றது[7].

வைகை நீரால் செழித்த பகுதி வேள்விக்குடிச் செப்பேட்டில் 'பழனக்கிடக்கை நீர் நாடு' எனப்படுகிறது. செய், வயல், நீர்நிலம், கொல்லை, திருத்தின நிலம், முதுநிலம், இருபூ விளைவது, பண்ணை, பழனம், கமுகுநந்தாவனம், தெங்கு நந்தாவனம், கமுகந் தோட்டம், ஆற்றுப்படுகை, பூந்தோட்டம் என்று பல பெயர்கள் நிலங்களுக்கு வழங்கப் பட்டன. பிராமணர்கள் பங்கு பெற்ற நிலங்கள் அட்டகம் எனப்பட்டன.

குளங்களின் பாசனத்தில் நிலங்கள் அமைந்திருந்ததால் அவ்வகையே ஊர்களும் அமைந்தன. நாட்டுப் பிரிவுகள் 'மாடக்குளக்கீழ்', 'இராசசிங்கக் குளக்கீழ்' என்று 'குளக்கீழ்'[8]

1. S.I.I., Vol. XIV, 44
2. தூம்பு, மடை, குமுழி, மதகு – திங்கள் சொற்பொழிவு, மே,1984, சு. இராசகோபால் மற்றும் தினமலர் நாளிதழ், கட்டுரைகள் 5-6-1984, 29-6-1984 சு. இராசகோபால்.
3. S.I.I., Vol. XIV, 26
4. மேலது, எண். 44
5. 'பாண்டியர் செப்பேடுகள் பத்து', பக்கம் 128
6. மேலது, பக்கம் 204
7. மேலது.
8. 'குளக்கீழ்', வெ. வேதாசலம், தொல்லியல் ஆய்வுத் தொகுதி 1985, மதுரை, பக்கங்கள் 278-291

அடிப்படையில் அமைந்தன. தேவதானங்கள், சதுர்வேதிமங்கலங்கள் போன்றவை காரண மாக உழுவோர், உழுவிப்போர் என்ற இருவகை அமைப்பு இருந்தது. இவ்வகையில் வேள்விக் குடிச் செப்பேடு, திருநந்திக்கரைக் கல்வெட்டு, சின்னமனூர்ப் பெரிய செப்பேடு, தளவாய் புரம் செப்பேடு போன்றவை 'காராண்மை', 'மீயாட்சி' ஆகியவற்றைக் கூறுகின்றன. சிவகாசிச் செப்பேடு ஊராண்மையிலிருந்து பிரிந்து நாட்டாண்மையோடு கூட்டி, காராண்மை மீயாட்சியைக் குறிப்பிடுகிறது.[1]

சோழர்கால உழவு

சோழர் காலம் தமிழக உழுதொழிலாளர்க்குப் பொற்காலம் என்று சொல்லலாம். பெருநதியான காவிரி, சோழநாட்டை வளப்படுத்தியது. குடகு முதல் பூம்புகார் வரை பாயும் காவிரி நதியைச் சோழர்கள் பெற்றிருந்தனர். கரிகால் சோழன் 'பொன்னிக்கரை கண்ட பூபதி' எனப்படுகின்றான். திருப்பழனம் கல்வெட்டு (கி.பி. 900) கரிகாலக் கரை பற்றிக் குறிப்பிடுகின்றது.[2] மூவருலா, போரிட்டுக் காவிரியைச் சோழ நாட்டிற்குள் தடையில்லாது பாயச் செய்த சோழனைக் குறிக்கின்றது. கல்வெட்டுகளில் காவிரி, பழங்காவிரி, மேற் காவிரி, கொள்ளிடம், பாலாறு, கெடிலம், நோகா ஆறு, வெண்ணாறு, பெண்ணை, தண் பொருநை, வைகை என்று பல ஆறுகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

சோழர் காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் பெரிதும் பேணப்பட்டன. அறங்களைப் பிழைத்தவர்கள் 'காவிரி குலைகுத்தின பாவங் கொள்வார்கள்'[3] என்று ஓம்படைக் கிளவி யாகக் கூறப்படுவதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை அறியலாம். இக்காலத்தில் புதிதுபுதிதாக வாய்க்கால்கள் ஏற்படுத்தப்பட்டன. சோழ மன்னர்கள் ஒவ்வொருவர் பெயரிலும் ஒரு வாய்க்கால் இருப்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.[4] புதிதாக வாய்க்கால் வெட்டும் போது அது எத்தனை கோல் அகலம் வெட்டப்பட்டது என்ற செய்தியும் நமக்குக் கிடைக் கின்றது.[5] தூர்ந்து கிடந்த வாய்க்கால்கள் பற்றிய செய்தியும் கிடைக்கின்றன.[6] நிலங்களில் பாய்ந்து, மிஞ்சிய நீர் வடிகால்கள் மூலம் வெளியேறி, அவை ஒன்று சேர்ந்து மீண்டும் வாய்க்காலாக வேறொரு பகுதிக்குச் செல்வதுண்டு. இப்படிச் செல்பவை வதிவாய்க்கால் என்று அழைக்கப்பட்டன.[7]

ஆறுகள் மற்றும் பெரும் வாய்க்கால்களிலிருந்து வாய்க்கால்கள் பிரிக்கப்படும் இடங்கள் வாய், தலை, வாய்த்தலை, தலைவாய் எனப்பட்டன. வாய்க்கால்களிலிருந்து பிரியும் சிறு கால்கள் சிறகு,[8] உட்சிறுவாய்க்கால்,[9] கண்ணாறு எனப்பட்டன. கண்ணாறுகள் பல கல்வெட்டுகளில் எண்களுடன் மூன்றாம் கண்ணாறு, ஐந்தாம் கண்ணாறு என்பது போல அழைக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து நீர் பாயும் பகுதிகள் 'சதிரம்'[10] அல்லது 'துண்டம்' என்ற பெயரில் எண்ணிடப்பட்டு அழைக்கப்பட்டன.

---

1. 'பாண்டியர் செப்பேடுகள் பத்து', பக்கம் 203
2. S.I.I., Vol. XIII 295
3. தாராசுரம் நடுகல், தகவல், சொ. சாந்தலிங்கம்
4. காண்க பின்னிணைப்புப் பட்டியல்கள் 1, 2, 3, 4.
5. S.I.I. Vol. XIX, 191, XIII, 163.
6. S.I.I. Vol. V, 707.
7. S.I.I. Vol. VII, 156; XIII, 102.
8. 'பருத்தி வயக்கல் மீய்சிறகு', 'பரமேஸ்வர வாய்க்கால் மீய்சிறகு'' S.I.I. Vol. XIX, 312.
9. 'உட்சிறுவாய்க்கால்', S.I.I., Vol. XIII, 325, S.I.I., Vol. XIX, 170
10. 'ஸ்ரீசெம்பியன் மாதேவி வாய்க்கால் மூன்றாம் கண்ணாற்று மூன்றாம் சதிரத்து', S.I.I. Vol. XIII, 511.

ஏரிகளும், குளங்களும், ஆறுகள் இல்லாத பகுதிகளில் அதிகமாகவும், ஆறுகள் உள்ள பகுதியில் குறைவாகவும் பயன்பாட்டில் இருந்தன. ஆறுகளைத் தடுத்து ஏரி எடுத்த செய்தி திருவண்ணாமலைக் கல்வெட்டு ஒன்றால் அறியப்படும்.[1] ஏரிகள் பல, பெரும் பரப்பளவில் அமைந்தன. இராசேந்திர சோழனால் எடுக்கப்பட்ட கங்கை கொண்ட சோழப்பேரேரியின் பெரும்பரப்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும். சில ஏரிகளில் ஓடங்கள் சென்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டம் நங்கவரம் இசக்கி குளத்தில் 'முன் குளத்தில் மண் கொண்டு வந்து கரையில் வரவில் 140 கூடை மண் உச்சங்கரையில் அட்ட 6 ஆட்கள் பணிபுரியவும் ஒரு கண்காணி மேற்பார்க்கவும், ஓடம் பழுது நீக்க தச்சனுக்கும் கொல்லனுக்கும், மரமிடும் வலையனுக்கும் தனித்தனியாக நெல் வழங்கப்பட்ட செய்தி அறியக் கிடைக்கிறது.[2]

மேலும் ஏரிகளைப் பராமரிக்க 'ஏரிவாரியப் பெருமக்கள்' உத்திரமேரூர், காவேரிப் பாக்கம், திருப்பாற்கடல், பராந்தூர் ஆகிய ஊர்களில் இருந்துள்ளனர்.[3] பராந்தூரில் ஏரிக் கணக்கு என்று தனிப்பட்ட கணக்கரும் இருந்துள்ளார். ஏரிகள் பெருமழையின் போது உடைவதுண்டு. இதனால் மடைகளும் அழிவதுண்டு. உடைந்த ஏரிகளைப் பராமரிக்காமல் நீண்டநாள் இருந்துவிடுவதால் விளைநிலங்களில் மணலட்டி புன்செய் ஆவதுமுண்டு [4] திருப் பாற்கடலில் ஏரி உடைப்பை அடைப்பதற்காக, 30 கழஞ்சு பொன் ஏரிவாரியப் பெருமக்க ளிடம் கொடுக்கப்பட்ட செய்தி, முதலாம் பராந்தகன் கல்வெட்டு ஒன்றால் அறியப்படும்.[5] முதலாம் இராசராசன் காலத்தில் கங்கை கொண்டானில் ஏரி உடைந்து காடு கோளாய் கிடந்த செய்தியும் குளத்தின் நீர் கொள்ளளவைப் பெருக்கக் கரை அட்டுவித்து, காடுவெட்டி மடைகள் எடுப்பித்து அதற்குப் பரமேஸ்வர ஏரி என்று பெயரிட்ட செய்தியும் கல்வெட்டால் தெரியவருகிறது.[6]

இதேபோன்று சோமங்கலத்தில் பெருமழை (பெருவர்ஷம்) பெய்து ஏழிடத்தில் பெரு மடையாகக் கரை உடைந்தமையும், இவற்றை அடைத்து மடைகளும் கரைகளும் பருமை செய்யப்பட்டிருக்கிற செய்தியும் உண்டு. ஆண்டு தோறும் 40 குழி மண் கல்லி கரையில் இடப்பட்டு கரையினைப் பலப்படுத்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.[7] திருவண்ணாமலை யிலும் ஏரியில் வளர்ந்திருந்த காடு வெட்டப்பட்டு, அடிவேர்களான கட்டை பறிக்கப்பட்டுச் சீரமைப்பும் நடந்துள்ளது.[8] ஏரிகள் பராமரிப்பிற்காக விடப்பட்ட நிலங்கள் ஏரிப்பட்டி என்றழைக்கப்பட்டன.[9] ஏரி தொடர்பாக ஏரிக்காசு, ஏரியமஞ்சி, ஏரிவாய்ப்பாடிக்காவல், ஏரி ஆயம், ஏரிநீர்க்கோவை முதலிய வருவாய்ச்சொற்கள் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன.[10]

ஆறுகளின் கரைகளும் அவ்வப்போது உடைந்துள்ளன. ஆறுகளின் கரைகள் கல்வெட்டுகளில் 'குலை' எனப்படுகின்றன. அல்லூரில் முதலாம் பராந்தகசோழன் காலத்தில் 'காவிரி பெருகி குலை உடைந்து மணலிட்டு புஞ்சையாய்' விளைநிலங்கள் கிடந்தமையும்,

---

1. S.I.I. Vol. XIII, 151.
2. S.I.I. Vol. VIII, 652.
3. S.I.I. Vol. XIII. 312; S.I.I. Vol. XIX, 160, 353.
4. Ibid, Vol. V, 540.
5. Ibid, Vol. XIX, 179; VIII, 640; V, 811.
6. Ibid, Vol. V, 811.
7. Ibid, Vol. VII, 393.
8. Ibid, Vol. VIII, 151.
9. S.I.I., Vol. VIII, 74.
10. 'The Revenue System of the Cholas', P. Shanmugam, Appendix-3, pp. 214-236.

அவை திருத்திப் பயிராக்கப்பட்டமையும் கல்வெட்டில் செய்திகளாக உள்ளன.[1] மூன்றாம் இராசராசனின் திருவரங்கம் கல்வெட்டும் "ஆற்றுப்படுகையில் ஆறுடைந்து மணலிட்டு பயிர் செய்யப் பெறாத நிலம்" என்று குறிப்பிட்டுள்ளது.[2]

ஏரிகள், ஆறுகளின் கரைகள் உடையும்போது அவை அடுத்த பருவகாலத்திற்குள் உடனடியாகச் சீரமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதற்கு பெரும் அளவில் ஆட்களின் உழைப்புத் தேவைப்படும் வேளைகளில், ஒவ்வொரு குடும்பமும் அல்லது ஒவ்வொரு நில உடைமையாளரும் தாங்களே இலவசக் கட்டாயச் சேவையாக வேலையாட்களை அத்தகைய பணிகளுக்கு அனுப்புவது மரபாகும். இப்படி நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியின் அடிப்படைதான் திருவிளையாடல் புராணத்தில் குறிக்கப்பெறும் பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்ச்சியாகும். கட்டாயமாக இலவசப் பணியாட்களை அனுப்புவது 'வெட்டி' எனப்படும் 'செந்நீர் வெட்டி,' 'அமஞ்சி', 'ஆளமஞ்சி' ஆகிய வருவாய்ச் சொற்களும்[3] இதுபோன்ற பணிகள் தொடர்புடையவையாக உள்ளன.

பருவங்களும், பயிர்களும்

கார், பசானம், ஒருபூ, இருபூ, பெரும்பூ, கடைப்பூ[4] கார்மறு, போகம், கவிரை, அற்பசிக்குறுவை, சித்திரை, கார்த்திகை, நவிரை, கோடை ஆகிய பெயர்களில் உரிய சில பருவங்களிலும், போகங்களிலும் பயரிடப்பெற்றது தெரிய வருகிறது. நிலங்களுக்கு வரி விதிப்புச் செய்யும் போதும், வரிவிலக்குச் செய்யும் போதும் எந்த ஆண்டு முதல் அல்லது எந்த ஆண்டு முடிய என்று சொல்லுகின்றபோது 'ஆண்டு பசான முதல்' 'கார்முதல்' என்று பருவங்களைக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது.

நிலங்கள் பயனற்றுக் கிடக்கும் போது பாழ் எனப்பட்டன. அவை திருத்தப்பட்டுப் பயிர் செய்யப்பட்டபோது 'திருத்தின நிலம்' 'வயக்கின நிலம்' என்று அழைக்கப்பட்டன.[5] நிலங்களின் பயிர் விளைவுக்கு ஏற்ப அவை எண்ணிடப்பட்டு இன்னதரம் என்று பொத்தகங்களில் குறிக்கப்பட்டன. முதல்தரம், தலைத்தரம், கடைத்தரம், தரமில்லாதது என்றும் குறிப்பிடப்பட்டன.[6] நிலங்கள் யாருடையது என்று குறிப்பிடுவதற்காகச் சில பெயர்கள் இட்டும் அழைக்கப்பட்டுள்ளன.

தினை, வரகு, பயறு, கடுகு போன்றவை புன்செய் நிலப் பயிர்களாகும். கரும்பு, வாழை, நெல் முதலியன நன்செய் நிலப் பயிர்களாகும். "தெங்கும், தமனகமும், இருவாசியும், மருவும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும், பலாவும், கமுகும், பனையும் உள்ளிட்ட பல்லுருவில் பயன்மரம்"[7] 'எழுவன முளைப்பன'[8] 'ஓமம் தெங்கும் புளியுமுட்பட்ட பச்சிலை பயன் மரங்கள்',[9] 'கரும்பும், செங்கழுநீரும், கமுகும் கொழுந்தும், மஞ்சள், இஞ்சி உள்ளிட்டு வேண்டும் பயிர்',[10] 'நெற்பயிரும் ஆலைக்கரும்பும் உள்ளிட்டு வேண்டும் பயிர்'[11] போன்ற கல்வெட்டுச் சொற்றொடர்கள், பண்டைக் காலத்தில் பயிரிடப்பட்ட பயிர்கள் என்னென்ன என்பதைப் புரிந்து கொள்ள உதவியாக உள்ளன.

---

1. S.I.I., Vol. VIII, 689.
2. S.I.I., Vol. IV, 511.
3. P. சண்முகம், மேலது, பக்கம் 214-236.
4. S.I.I., Vol. V 554; VIII 217, 223; VI 34.
5. 'காடுவெட்டி வயக்கின நிலம்', S.I.I., Vol. VII, 1028; P. சண்முகம், மேலது, பக்கம் 72–73.
6. 'ஏழாந்தர நிலம்' S.I.I. Vol. VII, 1028; P. சண்முகம் மேலது, பக்கம். 72-73.
7. S.I.I., Vol. XIX 344.
8. S.I.I., Vol. IV 413.
9. S.I.I., Vol. XIII 203.
10. S.I.I., Vol. VI 36.
11. S.I.I., Vol. IV 511.

விசயநகரர் கால உழவு

சோழர் கால உழவு முறைகள் விஜய நகர அரசர்கள் காலத்திலும் பின்பற்றப்பட்டன. எனினும் சோழர் காலத்தில் உழவு, மற்ற வணிகம், தொழில் முதலிய சமுதாயக் கூறுகளை மிஞ்சியிருந்தது. ஆனால் விசயநகரர் காலத்தில் தொழில், வணிகம் முதலியவை உழவினை மிஞ்சியிருந்தன என்று கூறலாம்.

விசயநகர அரசர் காலத்திலும் பெரிய பெரிய ஏரிகள் வெட்டப்பட்டன. இவை சமுத்திரம் என்றும் அழைக்கப்பட்டன. காஞ்சிபுரம் அருகில் தென்னேரியில் தாதாசாரியார் ஒரு பெரிய ஏரியை 'தாதா சமுத்திரம்' என்ற பெயரில் 23 மடைகள் உடையதாக எடுத்துள்ளார்.[1] இவர் இங்கு ஆஞ்சநேயர் கோயில் ஒன்றையும் எடுத்துள்ளார். ஏரிகளைப் பராமரிப்பதற்காக ஏரிக்கடமை, ஏரிகுழி, ஏரி மீன் பாட்டம், ஏரிப்பாசி, வேலிக்குழிப் பணம், வாசல்குழிப் பணம் முதலிய வருவாய்கள்[2] பயன்படுத்தப்பட்டுள்ளன.

குளத்தில் கிடைக்கும் பாசம், பாசிச்செடிகள் நல்ல உரங்களாகும். நாங்குநேரியில் (கி.பி. 1591) இந்த பாசியை எடுத்துக் கொள்ள அனுமதித்துக் குளத்தைத் தூர் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'குளத்திலுண்டான பாசியெல்லாம் துரக்கவார் சுதந்திரம் உள்பட ஆளொன்றுக்கு பதினெட்டடி நீளமும் ஒன்பதடி அகலமும் முச்சாண்மட்டிலே குழியொன்றாக பெரிய குளத்திலே வருஷ வருஷந்தோறும் குழிவெட்டுவிப்போமாகவும்' என்ற கல்வெட்டு வரிகள் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.[3]

மதகுகளிலிருந்து இரவிலும் நீர் பாயும். எனவே இவை இரவிலும் கண்காணிக்கப் பட்டன. 'இரா மதகு காவல் சேரி' என்றொரு குடியிருப்பு கி.பி. 1468ல் ஏற்படுத்தப் பட்டதை மற்றுமொரு கல்வெட்டு எடுத்துச்சொல்கிறது.[4]

திருவரங்கத்தில் ஆற்றுநீர், நிலங்களை அழிக்காமல் இருக்க நாணல் நடப்பட்டது. இதன் காரணமாக ஆற்றின் போக்கு மாறுபட்டு மறுகரையில் உள்ள சிந்தாமணியின் கரைப் பகுதிகளை அழித்துள்ளது. இது தொடர்பாக பிணக்கு எழுந்ததை மற்றொரு கல்வெட்டுக் காட்டுகிறது.[5]

நிலம் தொடர்பான வரிகள்

நிலங்களின் மீதான வரி, மனு, மற்றும் தர்ம சாஸ்திரங்களில் கூறப்பட்டதற்கு இணங்க ஆறில் ஒன்றாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. சோளிங்கரில் உள்ள பராந்தகசோழன் கல்வெட்டு, 'ஆறு கூறினால் புரவுமாயதியும் பொன்னும் பெறுமாறு' என்று குறித்துள்ளது.[6] எனவே விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு என்னும்போது நிலங்களின் விளை தரத்திற்கு ஏற்ப வரியாகப் பெறும் தானியம் அளவில் மாறுபட்டது. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் ஒரு வேலிக்கு 100 கலம் அளவு நெல் வரியாகக் கொண்டதைக் காட்டுகின்றன. அதிகப் பட்சமாக விளைச்சலில் 37.5 விழுக்காடு வரை நன்செய் நிலங்களில் வரி கொள்ளப்பட்டிருக்கிறது.[7] புன்செய் நிலங்களில் அதிகப்பட்சமாக 25 விழுக்காடுவரை

---

1. ARE 1923/434; Administration and Social Life under Vijayanagar, T. V, Mahalingam 1975, Part II pp 89 & 272.
2. Towards A New Formation, Noboru Karashima, Appendix : 1, Table 2.
3. T. V. மகாலிங்கம், மேலது, பக்கம் 85, அடிக்குறிப்பு; ARE, 1927-28 / 262.
4. T. V. மகாலிங்கம், மேலது, பக்கம் 90; ARE 1952 / 257.
5. 'கல்வெட்டு ஓர் அறிமுகம்', நடன. காசிநாதன், கு. தாமோதரன், பக்கம் 81-86.
6. P. சண்முகம், மேலது, பக்கம் 82.
7. மேலது, பக்கம் 81.

வரி கொள்ளப்பட்டுள்ளது. இப்படிப் பெரும் வரிகள் 'கடமை', 'பஞ்சவாரம்' என்ற பெயர்களில் இருந்தன. சாகுபடியாளர்கள் செலுத்த வேண்டியது 'காணிக்கடன்' என்ற பெயரில் இருந்தது. இன்னும் பல்வேறு வகைப்பட்ட பெரிய, சிறிய வரிகள் பின்னிணைப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ளன.[1]

புதிதாகத் திருத்தப்பட்ட நிலங்களுக்கு, தொடக்க ஆண்டில் வரியில்லாமலும் அடுத்தடுத்து கூட்டியும் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிலையானதாகவும் வரி வசூலிக்கப்பட்டது.[2]

நில அளவீடுகள்

வரிவசூலிப்பதற்காக நிலங்களை அளந்த நிகழ்ச்சிகள் முற்காலப் பாண்டியர், பல்லவர் கல்வெட்டுகளில் நேரடியாகத் தெரியவில்லை. நிலவரிகளின் பெயர்களும் நிலங்களின் அளவுகளும் இக்காலத்தில் தெரிய வருவதிலிருந்து நில அளவீடுகள் இருந்திருக்கக் கூடும் என்று கருத முடிகிறது. முதலாம் இராசராசன் காலத்தில் அவனது பதினாறாம் ஆண்டில் (கி.பி. 1001) நாடு முழுவதும் நிலங்கள் அளக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனை இவனது 15க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காட்டுகின்றன. முதலாம் குலோத்துங்க சோழனின் 16-வது ஆண்டிலும் (கி.பி. 1086) அளவீடு நிகழ்ந்ததை, இவனது 22 கல்வெட்டுகள் சொல்கின்றன.[3]

நிலஅளவீடு எப்படி இருந்தது என்பதற்குத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் இராசராசன் கல்வெட்டுகள் நல்ல சான்றாகும். ஒரு ஊரின் மொத்த நிலப்பரப்பும் முதலில் அளக்கப்பட்டது. பிறகு அதனில் நீர் நிலைகள், ஊடோடிய வாய்க்கால்கள், சேரிகள், குடியிருப்புகள், கோயில் பரப்புகள், பள்ளிச்சந்தம் போன்ற வரி விலக்குப் பெற்ற நிலங்கள் கழிக்கப்பட்டு எஞ்சிய நிலத்திற்கு வரி விதிக்கப்பட்டது.[4]

நில அளவுகோல்கள்

நில அளவின் அடிப்படை அளவுகள் பிடி, சாண், அடி முதலியவையாகும். இவை முறையே $4\frac{1}{2}$, 9, 12 அங்குலம் நீளமுடையவை. முழம் என்பது 2 சாண் அளவுடையது. இவற்றை அடிப்படையாகக் கொண்ட கோல்களால் அளக்கப்படும் ஒரு சதுரம், குழி எனப்பட்டது. குறிப்பிட்ட குழிகள் கொண்டது (100, 128, 256, 410) ஒரு 'மா' எனப்பட்டது.[5] 20 மா கொண்டது ஒரு நிலம் அல்லது வேலி எனப்பட்டது. கல்வெட்டுகளில் 50க்கும் மேற்பட்ட அளவுகோல்களின் பெயர்கள் கிடைக்கின்றன. சில ஊர்க்கோயில்களில் அளவு கோல்கள், கோயில் சுவரிலேயே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.[6] கழிகளைக் கொண்டு வந்து இப்பொறிப்புகளோடு வைத்து செதுக்கிக் கொண்டால் வேண்டிய அளவில் கோல் கிடைத்துவிடும்.

சோழர்காலக் கோல்கள்[7]

கோல்களின் பெயர்கள்	காலம் (கி.பி.)
கடிகைக்கோல்	885
பதினாறு சாண்கோல்	885
எண்பிடிக்கோல்	952
கழனிக்கோல்	959

1. காண்க பின்னிணைப்பு பட்டியல், 5, 6.
2. P. சண்முகம், மேலது, பக்கம் 86–87.
3. மேலது, பக்கம் 69-70; 237-40, பின்னிணைப்பு, 4.
4. S.I.I., Vol. II, Part I, 4.
5. P. சண்முகம், மேலது, பக்கம் 70.
6. 'நன்னிலம் கல்வெட்டுகள்', திருச்செங்காட்டாங்குடி மற்றும் திருப்புகலூர்.
7. P. சண்முகம், மேலது, பின்னிணைப்பு எண் : 6, பக்கம் 243-46.

கடிகைக்களத்துக்கோல்	959, 972, 1014
சிற்றையாற்றுக்கோல்	969
இருபதின் காணிக்கோல்	991
வடக்குப் பங்கிட்டகோல்	998
சிற்றம்பலத்துக்கோல்	999, 1016
நாற்சாண்கோல்	1004
நிலமளவுக்கோல் (16')	1004
விளந்தைக்கோல்	1004, 1008
பதினாறுசாணும் ஒருபிடிக்கோல்	1008
பன்னிருசாண்கோல்	1008
மாளிகைக்கோல்	1014
இராஜராஜன் கோல்	1021
ஊர்ாடுகோல்	1035, 1068
ஸ்ரீபாதக்கோல்	1074
இருபதின்சாண்கோல்	1103
பதினாலடிக்கோல்	1124
திருவுலகளந்த பன்னீரடிக்கோல்	1141
இருபத்திரண்டு அடிக்கோல்	1200
வரிசைக்கோல்	1217
ஒன்பதிற்றடிக்கோல்	1217
குடிதாங்கிக்கோல்	1219
மகதேசன் கோல்	1239
வாழவந்தான் கோல்	1300

இவை தவிர கண்டார்கண்டன் கோல், அமைத்த நாராயணன் நிலவளவுக்கோல், மலைகொடி மலைக்கோல், மனைக்கோல் (10½'), பதினாலடி விளந்தைக் கோல், இராஜவிபாடன் கோல், திருமாலிருஞ்சோலை நின்றார் மாவலிவாணராயன் மாந்திராங்குலம், திருவுலகளந்த கோல், வீரராஜன் களத்துக்கோல், வீரமுக்காணி அடிக்கோல் என்று பல அளவுகோல்கள் பிற்காலக் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன.

இன்னும் பலபகுதிகளில் இன்று அறியப்படும் பிற நில அளவுகள் பின்வருமாறு:

அங்கணம்	—	72 ச. அடி உடைய மனை நிலம்
அணு (அல்) அணைப்பு	—	ஒரு நாளில் 2 ஏர் உழக்கூடிய நிலம்
ஏர்	—	ஒரு நாளில் ஒரு ஏர் உழக்கூடிய நிலம்
கலம்பாடு	—	ஒரு கல விதை விதைக்கக்கூடிய நிலம்
காடு	—	4 அணைப்பு அளவு நிலம்
காணி	—	100 குழி அல்லது 1/80 வேலி
குண்டு	—	1089 சதுர அடி நிலம்
குறுணி விரைப்பாடு	—	8 செண்ட் நிலம்
செய்	—	256 குழி அல்லது 1 ஏக்கர் (120 குழி கொண்ட செய்களும் உண்டு)
நெல்பரப்பு	—	12 குழி நிலம்
பட்டி	—	800 (அல்) 1000 குழி நிலம்
பல்லா	—	3·82 ஏக்கர்
மனை	—	4·25 குழி
மா	—	1/20 வேலி (அல்) 1/20 பட்டி
வல்லம்	—	3·82 (அல்) 8·60 ஏக்கர்[1]

1. 'பழந்தமிழராட்சி', ஞா. தேவநேயன், கழகப் பதிப்பு, 1972.

கடிகைக்களத்துக்கோல்	959, 972, 1014
சிற்றையாற்றுக்கோல்	969
இருபதின் காணிக்கோல்	991
வடக்குப் பங்கிட்டகோல்	998
சிற்றம்பலத்துக்கோல்	999, 1016
நாற்சாண்கோல்	1004
நிலமளவுக்கோல் (16')	1004
விளந்தைக்கோல்	1004, 1008
பதினாறுசாணும் ஒருபிடிக்கோல்	1008
பன்னிருசாண்கோல்	1008
மாளிகைக்கோல்	1014
இராஜராஜன் கோல்	1021
ஊர்ரடுகோல்	1035, 1068
ஸ்ரீபாதக்கோல்	1074
இருபதின்சாண்கோல்	1103
பதினாலடிக்கோல்	1124
திருவுலகளந்த பன்னீரடிக்கோல்	1141
இருபத்திரண்டு அடிக்கோல்	1200
வரிசைக்கோல்	1217
ஒன்பதிற்றடிக்கோல்	1217
குடிதாங்கிக்கோல்	1219
மகதேசன் கோல்	1239
வாழவந்தான் கோல்	1300

இவை தவிர கண்டார்கண்டன் கோல், அமைத்த நாராயணன் நிலவளவுக்கோல், மலை கொடி மலைக்கோல், மனைக்கோல் ($10\frac{1}{2}'$), பதினாலடி விளந்தைக் கோல், இராஜவிபாடன் கோல், திருமாலிருஞ்சோலை நின்றார் மாவலிவாணராயன் மாந்திராங்குலம், திருவுலகளந்த கோல், வீரராஜன் களத்துக்கோல், வீரமுக்காணி அடிக்கோல் என்று பல அளவுகோல்கள் பிற்காலக் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன.

இன்னும் பலபகுதிகளில் இன்று அறியப்படும் பிற நில அளவுகள் பின்வருமாறு :

அங்கணம்	—	72 ச.அடி உடைய மனை நிலம்
அணு (அல்) அணைப்பு	—	ஒரு நாளில் 2 ஏர் உழக்கூடிய நிலம்
ஏர்	—	ஒரு நாளில் ஒரு ஏர் உழக்கூடிய நிலம்
கலம்பாடு	—	ஒரு கல விதை விதைக்கக்கூடிய நிலம்
காடு	—	4 அணைப்பு அளவு நிலம்
காணி	—	100 குழி அல்லது 1/80 வேலி
குண்டு	—	1089 சதுர அடி நிலம்
குறுணி விரைப்பாடு	—	8 செண்ட் நிலம்
செய்	—	256 குழி அல்லது 1 ஏக்கர் (120 குழி கொண்ட செய்களும் உண்டு)
நெல்பரப்பு	—	12 குழி நிலம்
பட்டி	—	800 (அல்) 1000 குழி நிலம்
பல்லா	—	3·82 ஏக்கர்
மனை	—	4·25 குழி
மா	—	1/20 வேலி (அல்) 1/20 பட்டி
வல்லம்	—	3·82 (அல்) 8·60 ஏக்கர்[1]

1. 'பழந்தமிழராட்சி', ஞா. தேவநேயன், கழகப் பதிப்பு, 1972.

நில அளவு வாய்ப்பாடு[1]

முந்திரி	=	1/320 வேலி (நிலம்)
வேலி (நிலம்)	=	1
2 முந்திரி	=	½ காணி (1/.60)
3 முந்திரி	=	½ காணி, முந்திரி (3/520)
4 முந்திரி இரு அரைக்காணி	=	1 காணி (1/80)
2 காணி	=	½ மா (1/40)
3 காணி (முக்காணி)	=	½ மா + காணி (1/40)
4 காணி	=	1 மா (1/20)
5 காணி	=	மாகாணி (வீசம்) (1/16)
5 மா	=	¼ வேலி (நிலம்) (1/4)
10 மா	=	½ வேலி (நிலம்) (1/2)
20 மா	=	1 வேலி (1)

தானியங்களை அளக்கப் பயன்படும் அளவு வாய்ப்பாடுகள்[2]

360 நெல்	—	1 செவிடு
5 செவிடு	—	1 ஆழாக்கு
2 ஆழாக்கு	—	1 உழக்கு
2 உழக்கு	—	1 உரி
2 உரி	—	1 நாழி
8 நாழி	—	1 குறுணி (மரக்கால்)
2 குறுணி	—	1 பதக்கு
2 பதக்கு	—	1 தூணி
2 தூணி	—	8 குறுணி (மரக்கால்)
3 தூணி	—	1 கலம்
8 மரக்கால்	—	1 பறை
80 பறை	—	1 கரிசை
32 நாழி	—	1 காடி
3 காடி	—	1 கலம்
168 நாழி	—	1 கோட்டை

நிலவுடைமையாளர்கள்

தமிழக வரலாற்றின் முதற்கட்டத்தில் நில உடைமைப் பொதுவாக இருந்தது. ஊர், நாடு என்ற அமைப்புகளில் பிராமணர் அல்லாதார் நிலங்களும், அகரம், பிரமதேயம், சதுர்வேதிமங்கலம் என்ற அமைப்புகளில் பிராமணர் நிலங்களும் பொதுவாகவே இருந்தன. 'கரை பிரித்தல்' என்ற முறையில் இந்நிலங்கள் வேளாளரிடையே ஆண்டுதோறும் பகுதி பகுதியாக மாற்றிப் பொதுவில் சிறுசிறு குழுக்கள் பயிர் செய்தன. பிராமணர்களிடையே நிலங்கள் பங்குகளாக இருந்தன. அவை குடும்பு பிரித்தல் முறையில் பயிர் செய்யப்பட்டன. சோழராட்சியின் இடைக்காலத்தில் நீண்ட போர்களாலும் பிறவற்றாலும் செல்வம் சேர்த்த அதிகாரிகள் மற்றும் செல்வந்தர்களுக்கு இந்நிலங்கள் தனி உடைமைகளாக மாறின.[3]

1. 'கையேடு' மற்றும் இராசராசன் சிறப்பு மலர், 'துணுக்குகள் எழுபது', 1985.
2. மேலது.
3. நொபுரு கராஷிமா' மேலது, பக்கம் 117-130.

கோயில்களுக்கு நிலங்கள் கொடையாகக் கொடுக்கப்பட்டதால் கோயில்களும் நில உடமை நிறுவனங்களாக மாறின கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏற்பட்ட வணிக வளர்ச்சியின் காரணமாக வணிகர்களும் நில உடைமையாளர்களாக மாறினர். அதே சமயத்தில் வணிகத்தின் பெரும் வருவாயின் காரணமாக நாட்டார்களும் (வேளாண்மக்கள்) வணிகர் களாயினர். இதன் காரணமாகச் 'சித்திரமேழி பெரியநாடு' போன்ற குழுக்கள் ஏற்பட்டன. தனிநபர் நில உடமை மேலும் வளர்ந்தது.[1] அதே சமயம் சமூகப் பொது உடமை நிலங் களும் இருக்கவே செய்தன. பதினெட்டாம் நூற்றாண்டிலும் கூட பசுங்கரை, அறுதிக்கரை கரைமாலை போன்ற முறைகளின் மூலம் ஊர்ப்பொது நிலங்கள் பிரித்துப் பயிர் செய்யப் பட்டதைக் காண்கிறோம்.[2]

சாகுபடியாளர்கள்

பிராமணர்களுக்கு நிலங்கள் இருந்தபோதிலும் அவர்கள் தாங்களே நேரடியாக உழவுத் தொழிலில் ஈடுபடுவதில்லை. வேளாளர்கள் அவர்களே சாகுபடியாளர்களாக இருந்த போதிலும், நிலங்கள் அதிக அளவில் இருந்தாலும் செல்வந்தர்களாக இருந்த காரணத் தாலும் அவர்களே பயிர் செய்யாத நிலை இருந்தது. பிராமணர் நிலங்களைப் பயிர்செய்யப் பிரமதேயங்களின் அருகில் பிடாகை என்ற சிற்றூர்களில் பிராமணர் அல்லாத வேளாண் தொழிலாளர்கள் வசித்தனர். இத்தகு சாகுபடியாளர்கள் குடிகள் எனப்பட்டனர். இவர்கள் நிலங்களை நிரந்தரமாகப் பயிரிடும் உரிமை உடையவர்களாகவும் அவ்வப்போது பயிர் செய்து செல்லும் குடிகளாகவும் (உள்குடி, பரகுடி) இருந்தனர்,[3] கல்வெட்டுகள், 'குடி நீங்கா', 'குடி நீக்கி', 'வேண்டும் குடி ஏற்றி' என்ற சொற்றொடர்களின் மூலம் இச்சாகுபடியாளர் களைச் சுட்டுகின்றன.[4] கோயில் நிலங்கள் காணி என்ற வழிவழி உரிமையில் சாகுபடி செய்யப்பட்டன. இவை கோயில் பணியாளர்களுக்குத் 'தச்சக்காணி', உவச்சக்காணி' என்ற வகையில் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தன. அரசு அதிகாரிகள், அரசு செல்வாக்குடையவர்கள், நல்ல கொடையாளர்கள் போன்றோருக்கும் இவை காணியாகக் கொடுக்கப்பட்டன. விசய நகரர் காலத்தில் 'குத்தகை முறை' ஏற்பட்டது. நாயக்கர்கள், வியாபாரிகள் போன்றோர் கோயில் நிலங்களில் குத்தகை தாரர்களாக இருந்தனர். கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகையைக் கொடுத்தும், அரசிற்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தியும், உழுகுடி களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தும், எஞ்சியதைத் தங்களுக்கும் எடுத்துக் கொண்டனர்.

அடிப்படை விவசாயப் பணியாளர்களாக ஒரு சமூகத்தார் பயன்படுத்தப்பட்டனர். அடிமை முறையும் இருந்தது. எனினும் அவர்கள் கோயில்களுக்கே அதிக அளவில் அடிமை களாக இருந்தனர். விவசாயத்திற்கு அடிமைகள் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டளவில் அதிகம் பயன்படுத்தப்பட்டது தெரியவருகிறது.[5]

தொழிலென்பது . . . .

வண்ணார், மயிர் வினைஞர், செம்மார், குயவர், கொற்றர், சொல்லர், கன்னார் தட்டார், தச்சர், கற்தச்சர், செக்கார், கைக்கோளர், பூக்காரர், கிணையர், பாணர், கூத்தர் வள்ளுவர், மருத்துவர் என்று தொழிலாளர்கள் 'பதினெண் தொழிலாளர்' எனப்பட்டனர்[6] தொழில் என்ற சொல், செயல், ஏவல் என்பனவற்றைக் குறிப்பது ஆகும். 'பிறிது தொழி லறியா வாகலின்' என்ற புறநானூற்று அடியில் 'செயல்' என்ற பொருளிலும்; 'தொன்று மொழிந்து தொழில் கேட்ப' என்ற மதுரைக் காஞ்சியடியில் 'ஏவல்' என்ற பொருளிலும்

---

1. நொபுரு கராஷிமா பக்கம் 131-157, 'Firminger, The Fifth Report' நூலிலிருந்து மேற்கோள்.
2. மேலது, பக்கம் 117-130.
3. மேலது.
4. மேலது.
5. மேலது,
6. 'பழந்தமிழராட்சி', ஞா. தேவநேயன், 1972.

'தொழில்' என்ற சொல் வழங்கியிருப்பதைத் தமிழ்ப்பேரகராதி எடுத்துக்காட்டுகின்றது. திவாகர நிகண்டு சொல்லும் கருமபூமிக்குரிய உழவு, தொழில், வரைவு, வாணிபம், வித்தை சிற்பம் ஆகிய அறு தொழில்களும் இதனில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது மேலும் தமிழ்ப் பேரகராதி படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் தெய்வத்தொழில் என்ற வகையில் சுட்டிக் காட்டுகிறது.[1]

தொல்காப்பியம் வினைச் சொல்லினைக் குறிக்கும் போது 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங்கிசைப்ப' என்று தொழிலை வினையாகக் குறித்துள்ளது[2] சிலப்பதிகாரம் அபி நயங்காட்டும் நாட்டிய முத்திரைகளைத் 'தொழிற்கை' என்று குறிப்பதும் செயலைக் குறிப்ப தாகவே உள்ளது.[3] எனவே எச்செயலும் தொழிலே என்ற போதிலும் ஏற்கனவே குறிப் பிட்டபடி கைத்தொழில், இயந்திரங்களின் உதவியுடன் செய்யும் தொழில் ஆகியவை மட்டும் இக்கட்டுரையில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

தொழிலின் தொன்மை

கையில் கிடைத்த கற்கள், கழிகளைக் கொண்டு வேட்டையாடியும், பிற உணவுப் பொருள்களை சேகரித்தும் உண்ட மனிதன் குறிப்பிட்ட அமைப்பில் அக்கற்களையும், கழி களையும், வடிவமைத்துப் பயன்படுத்தத் தொடங்கிய போது தொழில் தொடங்கி விட்டது எனலாம். தமிழகத்தில் பழையகற்காலக் கருவிகள் குறிப்பிட்ட சில பகுதிகளில் நிறையக் கிடைப்பதைப் பார்க்கின்ற போது அவை ஒரு தொழில் அமைப்பாக உற்பத்தி செய்யப் பட்டிருக்கக் கூடும் என்று கருதலாம். இதே போல் புதிய கற்காலக் கருவிகள் வழவழப் பாகச் செய்யப்பட்டதையும் நுண்கற்கருவிகள் மிகச் சிறிய அளவில் வடிவமைக்கப்பட்டதை யும் சொல்லலாம். இவை கல்தச்சர்கள் அக்காலத்திலேயே உருவாகி விட்டதைக் காட்டு கின்றன. கழிகளை அம்புகளாகப் பயன்படுத்தியதில் மரத் தச்சர்களின் தோற்றத்தைச் சொல்லலாம். புதிய கற்காலக் குடியிருப்பான பையம்பள்ளியில் குடிசைகள் அமைப்புகளில் கழி ஊன்றிய தூண்களுக்கான குழிகள் இருந்ததும் தரைப்பகுதி நல்லதளமாக அமைக்கப் பட்டிருப்பதையும் பார்க்கும் போது[4] கொல்லுப் பணியாளர்களும், தச்சர்களும் தோன்றி விட்டதைக் காண முடிகிறது.

பெருங்கற்கால அகழ்வாய்வுகளில் எண்ணற்ற தாழிகள், கலங்கள் கிடைத்துள்ளன. குயவர்கள் வளர்ச்சியடைந்த நிலையில் இருப்பதை இவை காட்டுகின்றன. ஆதிச்சநல்லூரில் தங்கத்தால் ஆன நெற்றிப் பட்டங்களும், செம்பால் ஆகிய கலன்கள், விளக்குகள் பல்வேறு விலங்குகளின் உருவங்களும் விளக்குகளின் உருவங்களும் கிடைத்துள்ளன.[5] இவை பொற் கொல்லர்கள், கன்னார்கள் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்ததைக் காட்டுகின்றன. கொடுமணல் அகழாய்வில்[6] பெருங்கற்காலக் கல்லறைகளின் அமைப்பைப் பார்க்கும் போது கைதேர்ந்த கல்தச்சர்களைப் பார்க்க முடிகிறது. இங்கு கிடைத்த கலன்களும் நல்ல மண்ணீட் டாளர்களைக் காட்டுகின்றன. அணிகலன்களும், கற்கள் பதித்த விலங்குகளின் உருவங்களும் நல்ல பொற்கொல்லர்களைக் காட்டுகின்றன. கழுத்தணியாக அணிவதற்கென்று சுட்ட மண்ணாலும், பல்வகை உயர்ந்த நடுத்தர விலை மதிப்புடைய வண்ணக் கற்களாலும் செய்யப்பட்ட மணிகளும் கிடைப்பது, அங்கு மணிகள் செய்கின்ற ஒரு தொழிற்சாலை

---

1. தமிழ் பேரகராதி, மேற்படிச்சொல்
2. மேலது.
3. மேலது.
4. Indian Archaeology A Review, 1967-68.
5. 'தொல்பழங்காலம்' தமிழக வரலாற்றுக்கழகம், பெருங்கற்காலம், இரா. நாகசாமி.
6. 1986 அகழாய்வின்போது தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்தி மடல், பக்கம் 4.

இருந்ததையே காட்டுகின்றன. மேலும் இரும்பு உருக்கப்பட்ட தடையங்களும் ஒரு உலையின் சிதைந்த பகுதியும் இங்கு கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பெருங்கற் காலத்தில் நூல் நூற்கும் தக்களிகளும், ஆதிச்சநல்லூரில் துணியின் மக்கிய பகுதியும் கிடைத்துள்ளன. இவை நெசவுத் தொழில் வளர்ந்து விளங்கியதை எடுத்துக்காட்டுகின்றன.

சங்ககாலத் தொழில்கள்

சங்க காலத்தில் மட்கலம் செய்தல், தச்சு, நெசவு, அணிகலன் செய்தல், இரும்பினால் பொருட்கள் செய்தல், தோல் பொருள் செய்தல் ஆகிய பல்வேறு தொழில்கள் சிறந்து விளங்கின.[1]

மட்கலத் தொழில்

'கலஞ்செய்கோ', வேட்கோ' என்று குயவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்களது சிறார்கள் 'வேட்கோச்சிறார்' எனப்பட்டனர்.[2] மலைபடுகடாம் ஆற்றில் ஏற்படும் சுழலைச் சொல்ல வரும் போது 'மட்கலன் செய்யும் சக்கரம்' போன்ற சுழி (திகிரி) என்று குறிப்பிடுகிறது. அதன் சுழற்சியினையும் குறிப்பிட்டுக் கலம் செய்வதை 'வனைதல்' என்று குறிப்பிடுகிறது.[3]

ஈர மண்ணால் கலன் செய்யப்படுவதையும் கலன் செய்யும் போது முழுக்கவனம் வைத்துச் செய்தனர் என்பதையும் சொல்லும் புறப்பாடல்,

"வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போலவன்
கொண்ட குடுமித்தித்தண் பணை நாடே"[4]

என்பதில் ஈரப்பசை உடைய களிமண்ணைப் பசுமண் என்றும், சக்கரத்தைத் தேர்க்கால் என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். கலன்கள் சுடப்பெற்ற சூளையிலிருந்து திரண்ட புகை எழுவதை மற்றொரு புறப்பாடல்,

"இருள் திணிந்தன்ன குரூஉத்திரள் பரூஉப்புகை
அகலிரு விசும்பின் ஊன்றுஞ் சூளை"[5]

என்று கூறுகிறது.

செங்கற்கள் 'இட்டிகை' எனப்பட்டன.[6] மட்கலன்கள் 'சுடுமண் கலன்கள்' என்றும் அழைக்கப்பட்டன.[7] கலன்களின் பெயர்கள் குழிசி, சாடி, கலன், கன்னல், தசும்பு, மண்டை தாழி, குவளை, அகல், காரகல், தடவு என்னும் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.[8] தாழிகள் இறந்தவர்களைப் புதைப்பதற்காகச் செய்யப்பட்டன. இவை ஈமத்தாழி[9] என்று அழைக்கப்பட்டன.

---

1. 'பண்டைத்தமிழர் தொழில்கள்' டாக்டர். சசிவல்லி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1989.
2. புறம் : 32
3. 'வனைகலம் திகிரியின் குமிழி சுழலும்' மலைபடு : 474-75
4. புறம் : 32.
5. புறம் : 228.
6. அகம் : 167.
7. நற்றிணை : 84.
8. டாக்டர் சசிவல்லி, மேலது, பக். 90
9. புறம் : 256.

நெசவு

கி.மு. முதலாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் அழகர்மலைக் கல்வெட்டில் 'அறுவை வணிகர் என்ற குறிப்பு காணப்படுகிறது.[1] இது இக்காலக் கட்டத்தில் தேவைக்கு அதிகமாக வணிகத்திற்கென்று ஆடைகள் நெய்யப்பட்ட அளவினைக் காட்டுகிறது. இதன் மூலம் அக்காலக்கட்ட நெசவின் வளர்ச்சி நிலையை நாம் நன்கு அறிய முடிகிறது. பருத்திச்செடி, இலவமரம், கோங்கு மரம் ஆகியவற்றிலிருந்து பஞ்சு எடுக்கப்பட்டது[2] சங்க இலக்கியங்களில் 'பருத்திவேலிச் சீறூர்', 'பன்னல் வேலியில் பணை நல்லூர்'[3] என்று ஊர்களின் பெயர்கள் பருத்தி விளைவைக் காட்டிப் பேசப்படுகின்றன. பருத்தியைக் கொட்டையிலிருந்து பிரித்தெடுக்க 'வில்' பயன்படுத்தப்பட்டது. அப்பொழுது பஞ்சு பறப்பது 'வெண் மழை' போல் இருந்தது என்பதை ஓர் அகப் பாடல்

"வில்லெறி பஞ்சின் வெண்மழை தவழும்"[4]

என்று குறிப்பிடுகிறது. பெண்கள் பருத்தியில் இருந்த தோல், கொட்டை, தூசி போன்ற குப்பைகளைப் புடைத்து நீக்கியதை,

"சிறையும் செற்றயும் புடையுநள் எழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கம்"

என்று மற்றொரு பாடல் காட்டுகிறது.[5] இதனில் வரும் 'சிறுதீ விளக்கம்' என்ற சொற்றொடர் இரவில் தீயின் ஒளியில் பணி நிகழ்ந்ததைக் காட்டுகிறது.

கலிங்கம், துகில், அறுவை, ஆடை என்று பல பெயர்களில் உடைகள் வழங்கின[6] பஞ்சு மட்டுமின்றி பட்டும் ஆடையாகப் பயன்படுத்தப் பட்டதைப் பொருநர் ஆற்றுப்படை[7]

"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி"

என்று காட்டுகிறது. ஆடை உரோமத்தாலும் அமைந்ததை

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினை காருகர் இருக்கை"

என்று சிலம்பு காட்டுகிறது.[8] இங்கு நெசவாளர்கள் 'காருகர்' எனப்படுகின்றனர். குறவர்கள் மரவுரியை ஆடையாக அணிந்த செய்தி 'மரனாருடுக்கை மலையுறை குறைவர்' என்று நற்றிணைப் பாடலால்[9] அறிய முடிகிறது. துணிகளின் இழைகள் நெருங்கிக் கண் பார்வைக்குத் தெரியாதவாறு இருந்ததையும் 'பாம்புரியன்ன' இருந்ததையும் புறப்பாடலும்,[10]

'நோக்கு நுழைகல்லா நுண்மைய என்றும்
பூக்கணிந்து அரவுரியன்ன அறுவை'

1. கல்வெட்டுக் கருத்தரங்கு, பக். 64.
2. 'நெசவு' அ. அப்துல்மஜீத், ஆய்வுக்கொத்து, 1974. பக். 140.
3. புறம். 299
4. அகம். 133.
5. அகம். 326.
6. கலிங்கம் — புறம். 393; துகில் — பெரும்பாண்: 469; அறுவை — பொருநர், 83; ஆடை — புறம். 274,
7. பொருநர். 152.
8. சிலம்பு, 14: 205-207.
9. நற். 64.
10. புறம். 383.

என்று பொருநராற்றுப் படையும்[1] முறையே காட்டுகின்றன. உடைகள் ஆவி போலவும் புகை போலவும். மூங்கிலின் உள்ளிழை போலவும் இருந்தன என்பதை,

'ஆவியன்ன அவிர் நூற்கலிங்கம்'[2]
'புகைவிரிந்தன்ன தோயப் பூந்துகில்'[3]
'கழைபடு சொலியி னிழையணி வாரா
ஒண்பூங்கலிங்கம்'[4]

என்ற சங்கப் பாடல் அடிகளால் அறியலாம். துணிகள் மடித்து வைக்கப்பட்டமை,

'பகன்றை புதுமலரன்ன
அகன்று மடிகலிங்கம்'

என்று காட்டப்பட்டுள்ளது.[5]

கச்சை, புட்டகம், முதலிய ஆடை வகைகளும் மெத்தைகளும்[6] சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன. துணிகளில் பூ வேலைப்பாடுகள் இருந்ததை 'வான்பூங்கலிங்கம்' 'புன்பூங்கலிங்கம்' என்ற சொற்றொடர்களால், அறிய முடிகிறது[7] நீலக்கச்சை பூவார் ஆடை என்னும் புறப்பாடல் வரி வண்ண ஆடைகள் இருந்ததையும் சாயத்தொழில் இருந்ததையும் காட்டுகிறது.[8] அரிக்கமேடு அகழாய்வில் சாயத் தொட்டிகள் கிடைத்துள்ளன.[9] இவை ஏறத்தாழ சங்க காலத்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தச்சுத் தொழில்

மரங்கொல் தச்சர் என்று இத்தொழில் புரிவோர் அழைக்கப்பட்டனர்.[10] இவர்களது குழந்தைகள் 'தச்சச்சிறார்' எனப்பட்டனர்.[11] தச்சர்கள் மழுவினால் மரங்களை வெட்டிய செய்தி,

"மரங்கொல் தச்சர் கைவல் சிறார்அர்
மழுவுடைக் காட்டகத்து"[12]

என்ற அடிகளால் அறியப்படுகிறது. உளி பயன்படுத்தப்பட்ட செய்தி சிறுபாணாற்றுப் படையில் காணப்படுகிறது. நல்ல தேர்கள், சகடங்கள் மரக்கதவுகள். நிலைக்கால்கள் கட்டில்கள். மரத்தாலான மணிமாலை, கப்பல்கள் போன்று பல பொருட்கள் மரத்தால் செய்யப்பட்டன.[13]

---

1. பொருநர். வரி.82.
2. பெரும்பா. வரி. 459.
3. திருமுருகா. வரி. 15.
4. புறம். 383,
5. புறம். 393.
6. பரிபா. 12:17.
7. நெடுநல்: 131-33, புறம். 383, 397; நற். 90.
8. புறம். 274.
9. அ. அப்துல்மஜீத், மேலது, பக். 144.
10. புறம். 206.
11. பெரும். 248.
12. புறம். 206.
13. டாக்டர் சசிவல்லி, மேலது. பக். 84-86.

தச்சர்கள் ஒரு நாளில் எட்டுத் தேர்களைச் செய்யக்கூடிய அளவு திறனுடையவர்களாக இருந்தனர்.

"வைகல் எண்தேர் செய்யும் தச்சன்"[1]

என்பது நோக்கத்தக்கது. அத்தேர்கள் கண்ணைக் கவருவனவாக இருந்தன.

"கண்ணோக் கொழிக்கும்
பண்ணமை நெடுந்தேர்"[2]

பெரும்பாணாற்றுப்படை ஒரு சகடத்தை விரிவாக விளக்குகிறது. சக்கரத்தில் இருந்த வட்டை, ஆரக்கால்கள், குடம் ஆகியவையும் அச்சு, நீண்ட தூண்கள், ஏணி போன்ற அமைப்புடைய கூரைச்சட்டம் அதனில் வேயப்பட்ட ஆரைப்புல் ஆகியவையும் குறித்த அப்பாடல் சகடத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.[3]

தச்சர்கள் அமைத்த 'நெடுங்கதவம்' நெடுநல்வாடையில் தெளிவாகச் சொல்லப் படுகிறது. கதவின் பளு இரும்பு, ஆணி, அதனில் பூசப்பட்ட செவ்வரக்கு, அதனில் வைக்கப் பட்ட குவளைப் பூக்களின் வடிவங்கள், பூட்டும் தாழ், நெய் தடவிய கீல் ஆகியவையும் விரிவாக இவ்வடிகளில் சொல்லப்படுகின்றன.[4] நெடுநல்வாடையில் அரசமாதேவியின் கட்டிலும் விளக்கப்படுகிறது.[5] இதனில் யானையின் தந்தங்களைக் கொண்டு செய்த அணிவேலைப்பாடு களும் சொல்லப்படுகின்றன.

சங்ககால வணிகம் கடற்கரைச் சார்ந்ததாக இருந்தது. எனவே மரக்கலன்கள் திறம்படச் செய்யப்பட்டவையாக இருந்திருக்க வேண்டும். மதுரைக் காஞ்சி 'பெருநாவாய்' இருந்ததைச் சொல்கிறது.[6] பட்டினப்பாலை, பூம்புகார் முன்துறைகளில் களிறுபோல நாவாய்கள் நின்றதைச் சொல்கிறது.[7]

உலோகத்தொழில்

இரும்பு, செம்பு, பொன், வெள்ளி போன்ற உலோகங்கள்; படைக்கலன்கள், உழுகலன்கள், அடுகலன்கள், உண்கலன்கள், அணிகலன்களாகச் செய்யப்பட்டன. கொல்லர், கம்மியர் இவற்றைச் செய்தனர். கொல்லர்களின் கைகள் பணியின் தன்மை காரணமாகக் காய்ந்து விளங்கியதால் இவர்கள் 'கருங்கைக் கொல்லர்' எனப்பட்டனர். இவர்கள் அதிகாலையில் சேவல் கூவுவதற்கு முன்னதாகவே பணிகளைத் தொடங்கிச் செய்தனர்.[8] இவர்கள் பணிசெய்த இடம் 'கொற்றுறை' (கொட்டில்) எனப்பட்டது. குறுந்தொகைப் பாடல் ஏழு ஊர்களுக்கு ஒரு உலை என்று குறிப்பதன் மூலம், இவர்கள் பணிக்கு அதிக செல்வாக்கு அல்லது தேவை இருந்திருக்க வேண்டும். ஆனால் இவர்கள் குறைவாகவே இருந்தனர் எனக்கருதலாம்.[9] மெல்லிய தோலாலான மிதித்து இயங்கும் துருத்தியைக் கொண்டு தீ வளர்த்தனர் என்பதை

" ...... மென்றோல்
மிதியுலைக் கொல்லர்"

1. புறம். 87.
2. பெரும். 46-50.
3. மேலது.
4. நெடுநல். 79-89.
5. நெடுநல். 115-135.
6. மதுரைக். 83.84.
7. பட்டின. 173-75.
8. பெரும்பாண். 437-40.
9. குறுந். 172.

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகளால்[1] அறிய முடிகிறது. காய்ச்சிய இரும்பைச் சம்மட்டி கொண்டு கொல்லர்கள் அடித்த போது மின்மினிப் பூச்சிகளைப் போலவும், வேங்கைமரத்து மலர்கள் உதிர்வது போலவும் தீப்பொறிகள் பறந்தன என்பதை,

'பொன்னெறி பிதிரிற் சுடர் வாங்கிக்
குறும்பி கொண்டும் பெருங்கை ஏற்றை
இரும்பு செய் கொல்லென',
'...... கொல்லன்
எறி பொற் பிதிரில் சிறுபல்காய
வேங்கை வீழ்கும் ஓங்குமலை'

என்ற அடிகளால் அறிகிறோம்.[2] உலைக்களத்துக்கல், பாறை போல இருந்தது என்பது 'உலைக்கல் அன்னபாறை' என்று குறுந்தொகையில் குறிக்கப்பட்டுள்ளது.[3]

இரும்பினால் விளக்குகள், உழுகொழு, குயம், கத்திரிகை[4] யானைக் கொடுந்தொடி, யானையை அடக்கும் தோட்டி[5] மந்திகை (சம்மட்டி) ஊசிகள், வேல் போன்ற பல பொருள்கள் செய்யப்பட்டமை சங்க இலக்கியங்களால் அறிய முடிகிறது.[6]

செம்பினால் பானைகள் செய்யப்பட்டதைக் 'கம்மியர் செம்புசொரிபானை' என்ற நற்றிணைப் பாடல் வரியால் அறியலாம்.[7] பொன்னாலும் வெள்ளியாலும் கலன்கள் செய்யப்பட்டிருந்தன.[8] 'மணிசெய் மண்டை' என்று மணிகள் பதிக்கப்பட்டிருந்த சிறு கலன் இருந்த செய்தியை ஒரு அகப்பாடல் சொல்கிறது.[9]

பிறதொழில்கள்

சங்கறுத்தல் தொழிலும் சிறப்புற இருந்தது. அகழாய்வுகளில் எண்ணற்ற சங்குவளையல்கள் கிடைத்து வருகின்றன. ஐங்குறுநூறு, 'கடற்கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை' என்று குறிப்பிடும்.[10]

ஓலை முடைதல், குடை, கூடை, ஓலைப்பாய் சுடுமண் பொம்மை ஆகியவை செய்தல் போன்ற கைவினைத் தொழில்களும் சங்க காலத்தில் சிறந்து விளங்கின.[11]

பல்லவர் காலம்

பல்லவர் காலத்தில் கட்டிடக்கலை சிறப்புற்றிருந்ததைப் பார்க்கும் போது மரத்தச்சர்கள் கற்றச்சர்கள் போன்றோர் சிறப்புற்றிருந்ததை அறிய முடியும். செப்புப் பட்டயங்களைப் பார்க்கும் போதும், சிற்பங்களில் உள்ள அணிகலன்களைப் பார்க்கின்ற போதும் கம்மியர்கள், பொற்கொல்லர்கள் புகழோடு விளங்கியதை அறிய முடிகிறது. பல்லவர்கால வருவாய்ச் சொற்களான செக்கு, தறி, தறிக்கூறை, படாம்கழி, புட்டகவிலை, பாறைக்காணம், குசக்காணம், தட்டார் பாட்டம், தட்டுக்காணம், இடைப்பூச்சி, ஈழப்பூச்சி, பட்டிகைக்காணம் முதலிவை, பல தொழில்களை நமக்குத் தெரிவிக்கின்றன.[12]

---

1. பெரும்பாண். 206-07.
2. அகம். 72; நற். 13.
3. குறுந். 12.
4. நெடு. 42; பொருநர், வரிகள். 117, 29, 242.
5. பெரும்பா. 436, திருமுரு. 78
6. முல்லை. 35, 39; அகம். 199; புறம். 312
7. நற். 153
8. சிறுபாண். 241-44
9. அகம். 105
10. ஐங்குறு. 194
11. சசிவல்லி, மேலது. பக். 138-146
12. C. மீனாட்சி, மேலது, பக்கம்: 88-105

செக்கு, எண்ணையாட்டுபவர்கள் மீது விதிக்கப்பட்ட வரியாகும். இது செக்கிறை என்று குறிக்கப்படும். பிரம்மதேய ஊர்கள் ஏற்படுத்தும் போது செக்குகள் வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்படுவதைப் பார்க்கும் போது இது ஒரு பெரிய அளவிலான தொழில் எனலாம்.[1] நாயன்மார்கள் வரலாற்றில் கலியனார் செக்காட்டி எண்ணெய் யெடுத்து விளக்கேற்றி தெய்வத் தொண்டு செய்தவராவார்.

தறி, தறியிறை ஆகியவை நெசவுத்தறிகளின் மீது விதிக்கப்பட்ட வரிகளாகும். படாம் கழி, தறிக்கூறை, புட்டகவிலை முதலியவை துணிகளின் மீது விதிக்கப் பட்ட தீர்வைகளாகும்.[2] சிற்பங்களில் காணப்படும் ஆடைகள் இக்காலத்தில் மிகப் பருமனாகக் காட்டப்பட்டுள்ளன.

குசக்காணம் குயவர்கள் மீது விதிக்கப்பட்டதாகும். நாயன்மார்களில் திருநீலகண்ட நாயனார் குயவராவர். இவர் கலன்கள் செய்வதோடு சிவத்தொண்டர்களுக்குத் திருவோடு களும் செய்தளித்திருக்கிறார் என்பதும் தெரியவருகிறது. பல்லவர் காலப் பானை ஓடுகள், காஞ்சிபுரம், வசவசமுத்திரம் முதலிய அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. காஞ்சிபுர அகழாய்வில் பல்வேறு காசுகளைச் செய்வதற்கான மண்ணால் ஆகிய அச்சுக்கள்[3] கிடைத் திருப்பது காசுகள் தயாரிக்கப்பட்ட செய்தியைப் புலப்படுத்துவதாகும்.

தட்டார் பாட்டம், தட்டுக்காணம் ஆகியவை செம்பாலும் பொன்னாலும் வேலை செய்யும் தட்டார்கள் மீது விதித்த வரிகளாகும். இடைப்பூச்சி இடையர்கள் மீது விதிக்கப் பட்ட வரிகளாகும். வண்ணார்கள் மீது வரி விதிக்கப் பட்டதை பாறைக்காணம் என்ற வருவாய்ச் சொல் காட்டுகிறது.[4] இவ்வரிகள் இத்தொழில்கள் அரசிற்குத் தனிவருவாய் தருமளவு சிறப்புற்றிருந்தன என்பதைக் காட்டுகின்றன.

முற்காலப் பாண்டியர் காலத் தொழில்கள்

இக்காலப் பகுதியில் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் மிகக் குறைவாகக் கிடைத் துள்ளன. எனவே தொழில், தொழிலாளர் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே தெரிய வருகின்றன. குடைவரைக் கோயில்கள், கற்றளிகள் பல்லவர் ஆட்சிக்கு இணையாகவே உள்ளன. எனவே, பல்லவர் ஆட்சியில் விளங்கிய தொழில்கள் பாண்டியர் பகுதியிலும் நிலவின எனலாம். எனினும் பாண்டி நாடு முத்துடைத்து என்பர். பல்லவர் பகுதியை விடக் கூடுதலாக முத்துக் குளித்தலும், மீன்பிடித்தலும் இப்பகுதியில் நிகழ்ந்திருக்கலாம்.

செப்பேடுகளில் எழுத்துக்களைப் பொறித்தவர்களாகப் பெரும் பணைக்காரன் என்பவர்கள் குறிக்கப்படுகின்றனர்.[5] திருச்செந்தூர் வரகுணன் கல்வெட்டு ஸ்ரீஉடையாடை இணை மற்றும் அணையாக (இரண்டிரண்டாக) இருந்ததைச் சொல்கிறது.[6] எதிரிக்கோட்டை வீரபாண்டியன் கல்வெட்டு[7] அறுவை வாணியச்சேரி ஒன்றைச் சொல்கிறது இதே மன்ன னுடைய அம்பாசமுத்திரம் கல்வெட்டு புடவை முதல் பற்றிச் சொல்கிறது.[8] எனவே நெசவுத் தொழிலின் சிறப்புத் தெரிகிறது. திண்டுக்கல் இராமநாதபுரம் கல்வெட்டு[9] கற்கோதி குமிழி செய்து நீர்ப்பாசன வசதி செய்தமைத்ததைக் குறிக்கிறது. இதனைத் தொடங்கிய

1. பல்லவர் செப்பேடுகள் முப்பது பக்கம்
2. C. மீனாட்சி மேலது
3. சென்னைப் பல்கலைக் கழக தொல்லியல்துறை அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது
4. C. மீனாட்சி மேலது
5. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக்கம்
6. S.I.I. Vol. XIV, 16-A
7. மேலது எண் : 44
8. மேலது எண் : 95
9. மேலது எண் : 26

தச்சனையும் முடித்த அவன் மகனையும் சொல்கிறது இதே போல் ஆனைமலைக் குடைவரைக்கோயிலும் தந்தையின் கொடையில் தொடங்கி மகன் கொடையில் முடிந்தமையைப்[1] பார்க்கும் போது கல் தச்சர்களின் பணி கடுமையானதாகவும் கால அளவு அதிகம் கொள்ளும் பணியாகவும் இருந்தமைத் தெரியவருகிறது. குசவர், உவச்சர், ஈரங்கொல்லி (வண்ணான்) முதலிய பணியாளர்கள் வீரபாண்டியனது அம்பாசமுத்திரம் கல்வெட்டில் சொல்லப் படுகின்றனர்.[2]

இடைக் காலப் பாண்டியர்கள், மற்றும் பிற்காலப் பாண்டியர்களின் காலம் சோழர் காலத்தை ஒட்டி அமைவதால் பொதுவாக இவர்கள் காலத் தொழில்வளம், தொழிலாளர் நிலை ஆகியவை சோழர் காலத்தை ஒத்தே இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

சோழர் காலத் தொழில்கள்

கல்வெட்டுகளில் காணப்படும் சோழர் கால வருவாய்ச் சொற்களைக்[3] கொண்டு நாம் சோழர் காலத்தில் இருந்த தொழில்களைப் பற்றி அறிந்து கொள்ள இயலும். இராசராச சோழனின் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் பணியாளர் களைக் கொண்டு அன்று நிலவிய தொழில்களை அறிந்து கொள்ள இயலும். சிற்பங் களின் வாயிலாகவும் சில தொழில்களைப் புரிந்து கொள்ள முடியும். அகழாய்வுகளில் கிடைத்த பொருட்களும் பல தொழில்களை விளக்கக் கூடியவையாகும்.

கல் தச்சர்கள்

சோழர் காலத்தில் எண்ணற்ற கற்கோயில்களும் சிற்பங்களும் உருவாக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டால் இவர்களது பணி உலகளவு சிறப்பானது என்பதை அறிய முடியும். தச்சர்களுக்கும் தச்சர்களின் தலைவர்களான தச்சாசாரியர்களுக்கும் கோயில் நிலங்களில் பயிர் செய்து உண்ணும் தச்சக்காணி உரிமை நல்கப்பட்டிருக்கிறது. தஞ்சைப் பெரிய கோயில், திருவையாற்றுக் கோயில்[4] போன்று பல கோயில்களில் இவர்களைப் பற்றிய செய்திகள் உள்ளன.

கொல்லர்

கொல்லர்களின் பணியும் குறிப்பிடத்தக்கதாகும். கற்றச்சர்களுக்கு வேண்டிய உளிகள், சுத்தியல், கடப்பாறைகள் முதலியவைகளைச் செய்தவர்கள் இவர்களே. கங்கை கொண்ட சோழபுரத்தில் இடிந்த மாளிகைப் பகுதியில் மரச் சட்டங்களைப் பிணைத்த எண்ணற்ற சதுர இரும்பு ஆணிகள் கிடைத்துள்ளன. சோழர் கால வேளாண்மையைக் கருத்தில் கொண்டால் இவர்கள் செய்தளித்த கலப்பைகளின் கொழுக்கள் எண்ணிக்கையை வியக்கக் கூடும். சோழர் காலத்துப் போர்களை எண்ணினால் இவர்கள் வடித்த படைக் கலன்கள் எத்துனை எத்துனை என்று வியப்பு எழும். இவர்களது தொழில் முக்கியத்துவம் காரணமாக இவர்கள் உலைகளின் மீது வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. இவ்வரிகள் 'உலை' 'உலைவரி', 'உலைப்பாட்டம்', 'கொல்லர் உலைப் பாட்டம்' என்ற பெயர்களில் நிலவின.[5]

கைக்கோளர்

கைக்கோளர்கள்-சாலியர்கள் துணிகளை உற்பத்தி செய்து சோழர் சமுதாயத்தில் சிறப்புப் பெற்றிருந்தனர். இவர்கள் மீதும், தரிகளின் மீதும், துணிகளின் மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. அவை அச்சுத்தறி, சாலியர்தறி, சாலியர் அச்சுத்தறி, சாலிகர் பேரால்

1. மேலது எண் : 2
2. மேலது எண் : 95
3. P. சண்முகம், மேலது, பின்னிணைப்பு : 3, பக் 214-236
4. கல்வெட்டு, இதழ் : 1
5. P. சண்முகம், மேலது

கடமை, கூறைக்காசு, கூறைக்கட்டணம், கூறைத்தரகு ஆயம், தறிப்புடவை, தறிசுங்கம், தறிதரகு, தறியிறைக்கூலி, தறியிறை, கோலியர்தறி முதலியவையாகும்[1] துணிகள் புடவை எனப்பட்டன. கோயில்களில் இவை பரிவட்டம் எனப்பட்டன. கோயில் பணியாளர்களுக்குக் கொத்துக்கும் (உணவு) இலக்கை (ஆடை)க்கும் நிவந்தங்கள் கொடுக்கப்பட்டன.[2] துணிகளைத் தைப்பவர்கள் 'தையான்' எனப்பட்டனர். அவற்றில் மணிகளைக் கோர்த்து தைத்தவர்கள் 'இரத்தினத் தைய்யான்' எனப்பட்டனர்.[3]

தட்டார்

தட்டார்கள் மீது 'தட்டார் பாட்டம்' 'தட்டிறை' முதலிய வரிகள் விதிக்கப்பட்டன. .தட்டார்க்காணி'[4] என்ற முழு உரிமையுடைய கோயில் நிலங்கள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. சோழர் காலத்திய அணிகலன்களின் வரிசையைத் தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுகளில் காணும் போதும், உலகப் புகழ் பெற்றுள்ள செப்புத்திருமேனிகளைப் பார்க்கின்ற போதும் இவர்களது தொழிற் சிறப்பை நாம் சிறப்பாக உணர முடியும். கன்னாரிறை. கம்மாள மகிமை ஆகியவையும் இவ்வகைத் தொழில்கள் மீது விதிக்கப்பட்டவையே ஆகும். அக்கசாலைகளில் காசுகளை அச்சிட்டவர்களும் இவர்களாகவே இருக்க வேண்டும். இராசராசன் காலத்தியக் காசுகளின் எண்ணிக்கைக் கணக்கற்றவை என்பதைக் கொண்டு இவர்கள் பணியை உணரலாம். ஆவணங்களை எழுதியவர்களாக இவர்களை அறியும் போது இவர்களது கல்வி நிலையை அறிய முடிகிறது.

சங்கரப்பாடியார்

செக்காட்டும் தொழில் சிறப்புற்றிருந்தது. தாராசுரம் பெரியபுராணச் சிற்பங்களில் கலியனார் புராணக் கதையில் மாடு பூட்டிச் செக்காட்டும் காட்சி காட்டப்பட்டுள்ளது. இன்று பல ஊர்களில் செக்குகளிலேயே கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன.[5] செக்கார் மீது விதிக்கப்பட்ட வரிகளும் தீர்வைகளும் செக்காயம், செக்கிறைப்பாட்டம், செக்கு, செக்குக் கடமை, இறை எண்ணெய், எண்ணெய் வரி, நெய் எண்ணெய் வாணியர் பேர் கடமை முதலியவையாகும்.[6] செக்காட்டும் தொழில் புரிந்தவர்கள் சங்கரப்பாடியார் எனப்பட்டனர். உத்திரமேரூரில் இவர்கள் தனிப்பகுதியில் வசித்தனர். அங்கு பொன் உரைத்து மாற்றுப் பார்த்தல் தொடர்பான குடவோலை முறையில் இவர்கள் பங்கு பெற்றனர்.[7]

வேட்கோ

மண்ணீட்டாளர்களின் பணி சோழர் காலத்தில் சிறந்திருந்தது என்பதைக் கிடைத்துள்ள எண்ணற்ற செங்கற்கள், ஓடுகள், கலன்கள், பொம்மைகள் தெரிவிக்கின்றன. கோயில்களில் நித்தம் புதுப்பானைகளை இவர்கள் வழங்கி வந்தனர். இவர்கள் மீது குசக்காணம் என்ற வரி விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் குசவர்கள் என்றும் 'வேட்கோவர்' என்றும் அழைக்கப்பட்டனர். ஆவணம் எழுதியவர்களின் பெயர்களாகச் சில வேட்கோக்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுவது இவர்களது கல்வி நிலையைக் காட்டுகிறது.

---

1. P. சண்முகம், மேலது
2. S.I.I. Vol. VIII 53
3. Ibid., II pt. III. 66
4. Ibid., V 515
5. வரலாற்றில் செக்கு சு. இராசகோபால் 'கல்வெட்டு' காலாண்டிதழ் எண் 9
6. P, சண்முகம், மேலது, பின்னிணைப்பு : 3, பக் 214-236
7. இராசராசன் சிறப்பு மலர், துணுக்குகள் எழுபது, 1985

பிறர்

ஓடம் செலுத்துபவர்கள் கோயில்களைச் சார்ந்து இருந்தனர். திருவரங்கம், திருவானைக்காவல் ஆகிய தலங்கள் தீவினுள் இருந்ததால் ஆற்றைக் கடந்து செல்ல ஓடங்கள் இன்றியமையாதவையாக இருந்தன. திருவானைக்காவல்[1] கோயில் கல்வெட்டுகளில் ஓடக்காணி இவர்களுக்கு விடப்பட்ட செய்தி அறியக் கிடைக்கிறது. ஓடக் காசு, ஓடக் கூலி முதலிய வருவாய்ச் சொற்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஏற்கனவே குறிப்பிட்டது போல ஏரிகளில் ஓடங்களைச் செப்பனிடத் தச்சர், கொல்லர், மரம் கொண்டு வர வலையர் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்.

உப்பெடுத்தல் சிறப்பாகக் கடற்கரைப் பகுதிகளில் இருந்தது. கோயில்களுக்கு விளை நிலங்கள் கொடுக்கப்பட்டது போலவே உப்புவிளை அளங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.[2] உப்புக்காசு உப்புப்பிடி, உப்பு முதலிய வரிகள் இது தொடர்பாக நமக்குக் கிடைக்கின்றன.

கரும்பு ஆலைகள் நிறைய இருந்தன. திருவாலீஸ்வரம், சுசீந்திரம் போன்ற இடங்களில் கரும்பு பிழியும் செக்குகள் இன்னும் காணக் கிடைக்கின்றன. கரும்புகளில் ஒரு வகை, ஆலைக் கரும்பு என்றே அழைக்கப்பட்டது.[3] கோயில்களில் கும்மாயம் அக்கார அடிசில், அப்பம் முதலியவற்றிற்குச் 'சர்க்கரை' 'பலம்' என்ற நிறுத்தலளவில் வழங்கப்பட்டமை பல கல்வெட்டுகளில் காணக் கிடைக்கிறது.

விறகிடுவான், கலமிடும் வேட்கோவன், அரிசி அரித்து எச்சிலெடுப்பான், குறுகூலி (நெல்குற்றுக்கூலி) அடங்க ஒருவனுக்கு நிசதிபதினாழி நெல் என்று திருப்பழனம் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[4] சிதம்பரம் கல்வெட்டுகள் பூத்தொடுப்பவர்களைக் குறிப்பிடுகின்றன. மாலைக்காரர் எனப்படும் இவர்கள், கோயில்களில் பூக்கட்டுவதற்கென்றே கருங்கற் பலகைகள் பல கோயில்களில் கொடையளிக்கப்பட்டுள்ளன.[5] தஞ்சைப் பெருவுடையார் கோயில் கலவெட்டு நாவரசன் - அம்பட்டன் இருவரையும் குறிக்கிறது[6] இவர்கள் முடி அழகு செய்பவர்களாகவும் மருத்துவம் அறிந்தவர்களாகவும் இருந்தனர்.

கி.பி. 12 - ஆம் நூற்றாண்டினதாகக் கருதக் கூடிய திருவாரூர்க் கல்வெட்டு, ரதகாரர் எனப்படும் கம்மாளர்களின் சமூக நிலையைத் தர்மசாஸ்திரம் ஆகமம், புராணங்களை மேற்கோள் காட்டி நெறிப்படுத்தி விளக்கும் கல்வெட்டாகும்.[7]

விஜயநகரர் காலம்

சோழர் காலத்தில் உழவிற்கு அடுத்தே தொழில் சிறப்புடையதாக இருந்தது. ஆனால் விஜயநகரர் காலத்தில் தொழிலும் அது சார்ந்த வணிகமும் முதன்மையைப் பெற்றிருந்தன. கைக்கோளர்கள், கம்மாளர்கள், பொருளாதாரத்தில் மேம்பட்டு, சமுதாயத்தில் சிறப்பிடம் பெறத் தொடங்கினர்.

கி.பி. 1572-73 ஆம் ஆண்டைச் சார்ந்த எலவனாசூர், திருவதிகை, எடையார், திருநாம நல்லூர், திருவாமாத்தூர் கல்வெட்டுகள்[8] கம்மாளர்களுக்குச் சுமை ஏற்படுத்திய வரிகளை

---

1. S.I.I. Vol. VIII 340
2. பெருமுக்கல் கல்வெட்டுகள், திருமதி ஆர். வசந்தகல்யாணி அவர்களிடம் உள்ள கையெழுத்துப் பிரதி
3. S.I.I. Vol. IV 511
4. S.I.I· Vol, V 693
5. திருப்பூப்பலகை,: சொ. சந்திரவாணன், தொல்லியல் ஆய்வுத் தொகுதி 1985,
6. S I.I. Vol. II pt. I, 66
7. S.I.I. Vol. XVII 17
8. ARE 1938/493, 1921/378, 1929/293, 1940/273, 1922/65 பார்க்க நொபுருகராஷிமா, மேலது பக். 171-182

நாட்டவர் விலக்களித்ததைச் சொல்கின்றன, கம்மாளர்களாகக் கொல்லர், தச்சர், தட்டார் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் ஐந்து சாதி பஞ்சாளத்தார் என்று அழைக்கப்படுவர்.[1]

திருவெண்ணெய் நல்லூர், எடையூர், பிரம்மதேசம். திருத்தலூர், திருவாண்டார் கோயில்களைச் சேர்ந்த கி.பி. 1485, 1486, 1503-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள்[2] கைக்கோளர் களுக்குத் தண்டேறுதல் (பல்லக்கில் செல்லுதல்) சங்கூதுதல் ஆகிய மரியாதைகளைச் செய்து கொள்ள உரிமை தந்ததைச் சொல்கின்றன.[3]

திருக்கழுக்குன்றம் கல்வெட்டு (கி.பி. 1374)[4] கைக்கோளர்கள் மீது குமார கம்பணன் காலத்தில் பட்டடை நூலாயம் ஆட்டைச் சம்மாதம், பேர் சம்மாதம், மாதவிரட்டி அதிய மாதம் போன்ற வரிகள் விதிக்கப்பட்டதைச் சொல்கிறது. இவ்வரிகள் புதிதாகப் புகுத்தப் படும் வரிகள் என்றும் தெரிகிறது.[5] காஞ்சிபுரம் கல்வெட்டு (கி.பி. 1586)[6] சல்லாபடகு, பட்டாவளி என்ற இரு துணிவகைகளைச் சொல்கிறது.

விஜயநகரர் காலத்தில் நெடிதுயர்ந்த கோபுரங்கள், மதில்கள், பரந்து விரிந்த மண்டபங்கள், தந்தச் சிற்பங்கள், மரத்தேர்கள், கோபுரப் பொம்மைகள் ஆகியவை கோயில் களுக்குச் செய்தளிக்கப்பட்டதைப் பார்க்கும் போது, கல்தச்சர்கள், மரத்தச்சர்கள், மண்ணீட் டாளர்களின் பணி எத்தகையது என்பதை அறிய முடிகிறது. மதுரையில் ஆயிரங்கால் மண்டபத்தில் முதன் முதலில் வேலை தொடங்கப்பட்ட தூண் (தச்சு செய்தல்), கல்வெட்டுடன் குறிக்கபபட்டுள்ளதை இன்றும் காணலாம்.

விஜயநகரர் காலத்தில் ஏராளமான வரிகள் தொழில் புரிவோரின் மீது விதிக்கப் பட்டன. இவ்வரிகள் தொழில்களின் சமுதாயப் பொருளாதாரப் பங்கைக் காட்டுவன. நெசவின்மீது, கைக்கோளர் பேர் கடமை, நாட்டு நூலாயம், நூலாயம், புடவைப்பாடு, புடவைப் பார்வை, தறி, தறிக் கடமை, தறிப்பணம், தறியிறை போன்ற வரிகள் விதிக்கப் பட்டன. செக்காட்டுதல் தொடர்பாக எண்ணெய், எண்ணெய் விலை, நெய்யெண்ணெய், செக்காயம், செக்கிறை செக்கொட்டு, செக்குக்கடமை, செக்குமேலாயம் செக்குத்துறை முதலிய வரிகள் விதிக்கப்பட்டன. இன்னும் பிற தொழில்கள் தொடர்புடைய வரிகள் பின்வருமாறு ஆயம், கல்லாயம், கரு ஆயம், கருவியாயம், பட்டடை, சிற்றாயம், பட்டடை சலத்தரம், பட்டடை களிலாபம், கொல்லன் ஊழியம், தச்சன் ஊழியம், குசவர் ஊழியம், திருத்தேர் ஊழியம் வண்ணார் பேரால் இனவரி, வில்வரி, விற்பணம், வாள்வரி, தோலொட்டு, தட்டொலி தட்டார் பாட்டம், குறுபட்டரை, கொற்றுக் கீற்று, கீற்றுவரி, ஓடம் போன்றவையாகும்.[7]

தமிழக உழவும் தொழிலும் விஜயநகரர் காலத்திற்குப்பின் நாயக்கர்கள், வெளி நாட்டினர் ஆட்சிகளிலும், பல்வேறு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பெற்று இன்றைய நிலையை அடைந்துள்ளன.

---

1. ARE 1938/493, 1921/378, 1929/293, 1940/273, 1922/65 பார்க்க நொபுரு கரோஷிமா, மேலது பக். 159
2. ARE 1921/473, 1929/291, 1918/162, 1925/422, 1917/368 பார்க்க, நொபுரு காரஷிமா, மேலது
3. மேலது பக்கம் 166
4. ARE 1933/170
5. நொபுரு கராஷிமா, மேலது பக். 182
6. தென்னிந்திய கோயில் சாசனம் எண். 446
7. நொபுரு கராஷிமா, மேலது, பின்னிணைப்பு : 1, பட்டியல் : 1

பின்னிணைப்பு

பட்டியல் 1

அரசர் மற்றும் அரசகுலத்தவர் பெயர்களில் பண்டைய தமிழகத்து வாய்க்கால்கள்

1 அருமொழித்தேவ வாய்க்கால்
2 அறிஞ்சிகை ,,
3 இராசகேசரி ,,
4 இராசாதிராச ,,
5 இராசேந்திர சோழ ,,
6 உத்தமசீலி ,,
7 உத்தமசோழ ,,
8 கங்கைகொண்டசோழ ,,
9 கேரளமாதேவி ,,
10 கோதண்டராம ,,
11 சீபூதி ,,
12 சுங்கந்தவிர்த்தசோழ ,,
13 சுந்தரசோழ ,,
14 செம்பியன்மாதேவி ,,
15 சென நாத ,,
16 சோழகுல ,,
17 சோழ சூளாமணி ,,
18 நித்தவிநோதன் வாய்க்கால்
19 பரசக்கரதட்ட ,,
20 பரமேச்சுவர ,,
21 பராந்தகன் ,,
22 மாதேவடிகள் ,,
23 மாதேவி ,,
24 முடிகொண்ட சோழ ,,
25 வானவன் மாதேவி ,,
26 விமலாதித்த ,,
27 வீரசோழ ,,
28 வீரநாராயண ,,
29 ஜயங்கொண்டசோழ ,,
30 ஸ்ரீஅறிஞ்சிகை ,,
31 ஸ்ரீகண்ட ,,
32 ஸ்ரீகண்டராதித்த ,,
33 ஸ்ரீசெம்பியன்மாதேவி ,,
34 ஸ்ரீபராந்தக ,,

பட்டியல் 2

தெய்வப் பெயர்களில் பண்டைய தமிழக வாய்க்கால்கள்

1 ஆழி வாய்க்கால்
2 இறையான் ,,
3 கணபதி ,,
4 கருமாணிக்க ,,
5 கேசவ ,,
6 சரஸ்வதி ,,
7 சுப்ரமண்ய ,,
8 திருவேங்கட ,,
9 தில்லை விடங்க ,,
10 பரமேஸ்வர வாய்க்கால்
11 பற்பநாம ,,
12 பார்வதி ,,
13 வள்ளி ,,
14 வீரேச்சுவ ,,
15 ஸ்ரீதேவி ,,
16 ஸ்ரீபுருஷோத்தம ,,
17 ஸ்ரீமாதவ ,,

பட்டியல் 3

பண்டைய தமிழகத்து வதிகள்

அரசர் - அரசகுலத்தவர் பெயர்களில்

1 அமநிநாராயணவதி
2 ஆதித்த வதி
3 இராசகேசரி வதி
4 கண்டருள்கண்ட வதி
15 மதுராந்தக வதி
16 மாதேவடிகள் வதி
17 மும்முடிச்சோழ வதி
18 வயிரமேக வதி

5 கன்னர வதி
6 கிடாரங்கொண்ட சோழ வதி
7 குலோத்துங்கசோழ வதி
8 சோழகுலவல்ல வதி
9 சோழமாதேவி வதி
10 திரிபுவன மாதேவி வதி
11 நரதொங்க வதி
12 பஞ்சவன் மாதேவி வதி
13 பரமேஸ்வர வதி
14 பராக்கிரம வதி
19 வானவன் வதி
20 விடேல்விடுகு வதி
21 வீரநாராயண வதி
22 ஜநநாத வதி
23 ஸ்ரீ கண்டராதித்த வதி
24 ஸ்ரீ கொந்தகமாதேவி வதி
25 ஸ்ரீ செம்பியன் மாதேவி வதி
26 ஸ்ரீ ராஜகேஸரி வதி
27 ஸ்ரீ வானவன் மாதேவி வதி
28 ஸ்ரீ வீரநாராயணன் வதி

தெய்வப் பெயர்களில்

1 கவுசல வதி
2 காமதேவ வதி
3 சங்கர வதி
4 திருச்சிற்றம்பல வதி
5 திருவரங்க வதி
6 பெருமாள் வதி
7 ஸ்ரீதர வதி
8 ஸ்ரீதேவி வதி
9 ஸ்ரீகாமுக வதி
10 ஸ்ரீவீரகாமுக வதி

பட்டியல் 4

அரசர் பெயர்களில் பண்டைய ஆறுகள்

1 முடிகொண்ட சோழப் பேராறு
2 தண்பொருந்தமான முடிகொண்ட சோழப் பேராறு
3 சுங்கந் தவிர்த்த சோழப் பேராறு
4 அகளங்கப் பேராறு
5 மதுராந்தக வடவாறு
6 வீரசோழ வடவாறு
7 வீரராசேந்திர சோழனாறு
8 விக்கிரமனாறு
9 கரிகாலச் சோழப் பேராறு (கொள்ளிடம்)

பட்டியல் 5

பண்டையத் தமிழகத்து உழவு வரிகளும், வருவாய்ச்சொற்களும்

அப்புவரி
அரிசிக் காணம்
அரிமுக்கை
அளக்கும் கரணம்
அறிவாட் பதக்கு
ஆடிப்பச்சை
ஆற்றங்கரைப் பாட்டம்
ஆற்றுக்குலை
ஆற்றுப் பாட்டம்
இலைக்கூலம்
உழவிறை
ஏத்தக் காணம்
ஏர்க் கடமை
ஏர்க்காசு
ஏர்க்காடி
ஏர்ப் பொன்

ஏர்வரி
ஏரிஆயம்
ஏரிநீர்க்கோவை
ஏரிப்பட்டி
ஏரிப்பாசிவிலை
ஏரி மீன்காசு
ஏரி மீன்பாட்டம்
ஏரியமஞ்சி
ஏரில் ஒரு காசு
ஏரிவாய்ப் பாடிக்காவல்
கடமை
கன்றுமேய்பாழ்
கதிர்க் காணம்
கல்லணைக் காடுவெட்டு
கழுகுக் கடமை
காணி இறை
காணியாளர் பேறு
கார் கடமை
கார்த்திகை அரிசி
கார்த்திகைக் காசு
கார்த்திகைக் காணம்
கார்த்திகைப் பச்சை
கார்த்திகைப் பேறு
கார் வரகு
காலளவுக்குழி
காவிரிக் குலை
கிணர்
கிடைக்காசு
கீழ்வாரம்
கீழிறைக் கடமை
குடநாழி
குடிமை
குலை
குலைவெட்டி
குறைவருப்பு
கொடிக் கடமை
கொல்லைப் புஞ்சை
கொழு
கோல்வரி
செங்கொடிக் காணம்
செந்நீர்ப் பொதுவினை
செந்நீரமஞ்சி
சென்னீர் வெட்டி
சென்னீர் வெற்றாள்
தானியமுதல்
தானியவர்க்கம்
திருப்புதியிது
நிலக்கடமை
நீர்க்கிறை
நீர்க்கூலி
நீர்விலைக்காசு
நீர்விலைக்கூலி
நீராணிக்கவரி
பயிர்க்கடமை
பனம்பாகு
பாசிப்பாட்டம்
புஞ்சைக்காசு
புரவுஇறை
மரக்கடமை
மரமஞ்சாடி
மரவடை
மாக்கலம்
மாப்பதக்கு
மாவடை
மூங்கில்வரி
வட்டிநாழி
வாரக்கூலி
வாரம்
வெற்றிலைத்தரகு

பட்டியல் 6

பண்டைய தமிழகத் தொழில் வரிகளும், வருவாய்ச்சொற்களும்

அக்கசாலைவரி
அச்சதறி
அணியடுவான்வரி
ஆயம்
இடைப்பூச்சி
இடைவரி
ஈழப்பூச்சி
உப்பு
உப்புக்காசு
உப்புப்பிடி
உலை
உலைப் பாட்டம்
உலைவரி
உவச்சன் பேர் கடமை
ஊசிவாசி
எடைவரி

எண்ணெய்வரி
ஏணிக்காணம்
ஓடக்காசு
ஓடக்கூலி
ஓடம்
கண்ணாடி
கண்ணார் இறை
கணக்கப்பேறு
கம்மாள மகமை
கரு ஆயம்
கருவி ஆயம்
கல்லாயம்
காணிக்கை
கீற்றுவரி
குசக்காணம்
குசவர் ஊழியம்
குமாரக்கச்சாணம்
குறுபட்டறை
கூறைக் கட்டணம்
கூறைக் காசு
கூறைத்தரகு காசு
கைக்கோளப்பேர்கடமை
கொல்லன் ஊழியம்
கொல்லன் உலைப்பாட்டம்
கொற்றுக்கீழ்
கோலியத்தறி
சுங்க எண்ணெய்
செக்காயம்
செக்கிறை
செக்கிறைப்பாட்டம்
செக்கு
செக்குக் கடமை
செக்கு மேலாயம்
செக்குத்துறை
சேனியார் தறி
தட்டார் பாட்டம்
தட்டிறை
தட்டுக்காணம்
தச்சு
தச்சன் ஊழியம்
தச்சத்தேவை
தச்சத்துலாம்
தறி
தறிக் கடமை
தறிக் கூறை
தறியிறை
திருத்தேர் ஊழியம்
தோணிக் கடமை
தோலொட்டு
நாவிதக் காணம்
நாட்டு நூலாயம்
நெய்யெண்ணெய்
நூலாயம்
பட்டடை ஆயம்
பட்டடைகளில் லாபம்
பட்டடை சலத்தரம்
பட்டடை சிற்றாயம்
பட்டடை நூலாயம்
படாம் கழி
பறக்கூலி
பறைஇறை
பறையர் தறிப்புடவை
பாறைக்காணம்
பாண்டிவரி
புதாநாழி
மாப்பட்டடை
வண்ணான் பேரால் இனவரி
வாணிகர் பேர்க் கடமை
வாள்வரி
வில்வரி
விற்பணம்

பட்டியல் 7

வேளாண் சொற்கள்

(தஞ்சைப் பகுதிக் கல்வெட்டுகளிலிருந்து தொகுக்கப்பட்டவை. பார்க்க; நொபொரு கராஷிமா, வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம் பகுதி I சோழர் காலம் - 1995)

I நிலப்பெயர்கள்

அட்டகம்
அத்திச்செய்
அளம்
அஹோவனம்
ஆய்ப்பாடி
ஆறுமாறிடுபடுகை
இலைஅமுதுதோட்டம்
இறைச்சல்நிலன்
ஈழச்சேரி
உவர்
ஊர் ஒழுக்கை
ஊர்க்களம்

ஊர் நத்தம்
ஊர்பாழ்
ஊர்பொது
ஊர்பொதுதிடல்
ஊரிருக்கை நத்தம்
ஏத்தச்செய்
கட்டளை
கடற்கறை
கண்டம்
கண்மாணச்சேரி குடியிருக்கை
கமுகம் தோட்டம்
கமுகம் பாத்தி
கமுகு திருநந்தவனம்
கரம்பை
கருஞ்செய்
கரைப்புலம்
கழனி
கள்ளிச்செய்
களர்
களர்பாழ்
களம்
கறாய்
கறை
கன்றுமேய்பாழ்
காடு
கார்நிலம்
காவு
கிடங்கு
குடியிருப்பு திடல்
குடியிருப்பு தோட்டம்
குடி இருப்பு நந்தம்
குடி இருப்பு மனை
குண்டு
குலை
குலைவரப்பு
குளப்பாரிப்பு
கொல்லை
கோட்டகரை
கோட்டகாரம்
கோப்பு
சதுக்கம்
சாளம்
செய்
செய்தலை
சேரி
தரமிலி
தரிசு
தறை
திடர்
திருத்தோப்பு
திருமுற்றம்
தீண்டாச்சேரி
துடவை
துண்டம்
தெற்றி
தேன்படு பொதும்பு
தொட்டி
தோட்டப்பாழ்
தோப்பு
நஞ்சை, நன்செய்
நீர்கோத்துபள்ளவாய்
நீர்க்கோவை
நீர்த்திடல்
நீர்நிலம்
பட்டப்பாழ்
படாகை
படுகை
படுதுறை
பரம்பு
பள்ளம்
பறைச்சேரி நத்தம்
பாகற் தோட்டம்
பாடகம்
பாண்டவாய்க் கரைக்குலை
பாத்தி
பாதபாசம்
பாம்பரைபாழ்
பாழ்
பிடி
பீடிலிகைவாரி
புஞ்சை (புன்செய்)
புலம்
புற்று
புறத்துடவை
பூந்தோட்டம்
பெரும்புலம்
பெரும்மசக்கல்
மட்டை
மடு
மண்ணிட்டு
மணல் குன்று
மயக்கல் (மசக்கல்)
மன்று
மனைப்படப்பை
மாந்தோட்டம்
மீன்படு பள்ளம்
மீன் பயில் பள்ளம்
மூடுக்கு
வயக்காடு
வரம்பு
வழிவரம்பு
வளை
வெள்ளரி வாவை

II நீர்ப்பாசனம்

அடை
அணைவாய்க்கால்
அந்நீர்
அறுத்தல்
ஆறு, பேராறு
இறை
இறைகுளம்
உடைப்பு
உவன்றி
உட்சிறு வாய்க்கால்
ஊருணி
ஊருணி குளம்
ஊற்றங்கால்
ஊற்றுக்கேணி
ஏத்துக் கால்
ஏரி
ஓடை
கடைநீர்
கரை
கரைவாய்க்கால்
கழனிக்குளம்
கிடங்கு
கிணறு
குறங்கு
குரம்பு
குலை
குலைமடை
குளம்
குளவாய்த்தலை
குற்றேத்தம்

கூடைநீர்	தலைவாய்	மடை
கேணி	துரவு	வாய்த்தலை
கை வாய்	துலை	விலங்கு
கைவாய்க்கால்	நாற்றுக்கால்	
சென்னீர்க்கவிளை	பிலாறு	

III நிலம் திருத்துதல்

ஆக்கி	கல்லி	மயக்கி
இடு	குத்தி	
இழிக்க	திருந்தி	

IV பயிர்கள்

அம்பு	கொடி	பனை
இஞ்சி	கொழுந்து	பாக்கு
இருவாசி	செங்கழுநீர்	மஞ்சள்
இருவேலி	செண்பகம்	மா
இலுப்பை	தமநகம்	மிளகு
ஈழம்	தெங்கு	மூங்கில்
கமுகு	நெல்	வாழை
கரும்பு	பயிறு	வெற்றிலை
கள்ளி	பலா	

உழவு மற்றும் தொழில் தொடர்பான செய்திகளுக்கு மேலும் காண்க.

1. 'வேளாண் இயல்' திரு நடன. காசிநாதன் ஆய்வுக்கொத்து, ஆராய்ச்சிப் பேரவை, சென்னை 1973.
2. 'செங்கல்பட்டு, சென்னை மாவட்ட நீர்ப்பாசன வசதிகள்' திருமதி நா. மார்க்சீயகாந்தி, செங்கல்பட்டு மாவட்டக் கருத்தரங்கு, 1978,
3. 'குளம் தொட்டு வளம் பெருக்கிய கோவை மாவட்டம்' திருமதி ஆர். வசந்தகல்யாணி, கோவை மாவட்டக் கருத்தரங்கு, 1976,
4. 'நெசவு இயல்' திரு அ. அப்துல்மஜீத் ஆய்வுக்கொத்து ஆராய்ச்சிப் பேரவை, சென்னை, 1973.

காலினும் கலத்தினும் வணிகம் 9

மண்ணுலகில் தோன்றிய மாந்தர் இனம் முதலில் தாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டது. வாழ்வதற்கு இயற்கையாக அமைந்த இடங்களைப் (குகைகளை) பயன்படுத்திக் கொண்டது. கிடைத்த கனிகளையும் கிழங்குகளையும், விலங்குகளையும் உணவாக உட்கொண்டது. விலங்குகளை வேட்டையாடுவதற்கு உதவியாக கற்களைக் கொண்டு கருவிகளை உருவாக்கிக் கொண்டது.

நெருப்பின் பயன் அறிந்து கொண்ட பின்னர் அவர்களது வாழ்க்கைச் சக்கரத்தில் சிறிது மாறுபாடு ஏற்பட்டது. உணவை வேகவைத்து உண்பதற்கு மட்டுமல்லாது தங்களைக் கொடிய விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் நெருப்பு பயன்பட்டது. வில்லையும் அம்பையும் கண்டுபிடித்த பின்னர், விலங்குகளை வேட்டையாடும் தொழில் மிகவும் எளிதானது. மட்கலன்களை வரையும் தொழிலையறிந்து கொண்ட உடன் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உண்டதுபோக மீதமுள்ளவற்றைச் சேமிக்கத் தலைப்பட்டார்கள். தனித்தனியாக வாழ்த்த நிலைமாறி குழுவாக வாழும் முன்னேற்றம் ஏற்பட்டது. ஒவ்வொரு குழுவும் தம்மிடம் மிகையாக இருந்த உணவுப் பொருட்களைப் பிற குழுவிற்குத் தேவை ஏற்படும் பொழுது பரிமாற்றம் செய்து கொண்டது. இப்பரிமாற்றம் குழுவிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவரவர்களுக்கிருந்த ஆற்றலை வெளிப்படுத்த அடிகோலியது. ஆண்கள் விலங்குகளை வேட்டையாடுதல், மீன் பிடித்தல், கருவிகள் செய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டனர். பெண்கள் குடிசைகள் வேய்தல், பழங்கள் சேகரித்தல் நிலங்களில் பயிர் செய்தல் போன்ற பிற பணிகளைச் செய்தனர். இவ்வாறு அமைந்த வாழ்க்கையில் உற்பத்தியாளர்களும் நுகர்வாளர்களும் ஒரே குழுவில் இருந்தனர்.

விலங்குகளைத் தம் பணிகளுக்குப் பயன்படுத்தத் தொடங்கிய பின்னர் இக்குழுவின் பொருளாதாரத்தில் மாற்றமேற்பட்டது. அலைந்து திரிந்து வேட்டையாடும் தொழிலிலிருந்து அமைதியாக ஒரு இடத்தில் தங்கி வேளாண்மை செய்யும் தொழிலை இக்குழு மேற்கொண்டது. பல குழுக்கள் ஒன்று சேர்ந்து வாழ, வேளாண்மை காரணமாக அமைந்தது. ஒரு புதிய சமுதாயம் உருவானது. ஊர்களும் நகரங்களும் தோன்றின.

வேளாண்மைத் தொழில் புரிந்தோர், அத்தொழிலுக்குத் தேவையான கருவிகளை தம்மிடமிருந்த தானியங்களைக் கருவி செய்பவர்களிடம் கொடுத்து பெற்றுக்கொண்டனர். இப்பரிமாற்றம் பண்டமாற்றமாக உருவெடுத்தது. பண்டமாற்றம் வணிகத்திற்கு வித்திட்டது.

வணிகத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று உள்நாட்டு வணிகம் மற்றொன்று அயல் நாட்டு வணிகம்.

உள்நாட்டு வாணிகம்

பண்ட மாற்று முறை பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பண்டமாற்றுக்கு நெல் ஒரு முக்கிய பொருளாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. நெல் வெள்ளையுப்பிற்கு

மாற்றாகக் கொள்ளப்பட்டது[1] தேன் நெய் கிழங்கு ஆகியவை மீனுக்கும் நறவுக்கும் மாற்றாகக் கொள்ளப்பட்டன.[2] கரும்பும் அவலும், மான் ஊனுக்கும் கள்ளுக்கும் மாற்றாகப் பயன் பட்டன.[3] நெய்யை விற்று கட்டிப் பசும்பொன் பெறாது எருமைக் கன்றுகளை மாற்றாகப் பெற்றனர்.[4] பச்சைப் பயற்றுக்கு ஈடாகக் கெடிறு என்னும் மீன் மாற்றிக் கொள்ளப்பட்டது;) சில காலங்களில் நெல்லின் விலையும் உப்பின் விலையும் சமமாக இருந்தது.[5] பண்டமாற்று முறையில் 'குறியெதிர்ப்பு' என்னும் முறை நிலவி வந்தது. ஒரு குறிப்பிட்ட அளவு பண்டத்தைக் கடனாகக் கொண்டு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அதைத் திருப்பிக் கொடுப்பதுதான் இம்முறையாகும்.[6]

வணிகம் செழிப்புடன் வளர, ஒரு இடத்தில் உற்பத்தியாகும் பொருளை மற்றொரு இடத்திற்குக் கொண்டு சென்று விற்பனை செய்ய சாலை வசதிகள் தேவை. சாலை வசதியிருந்தால்தான் போக்குவரத்து எளிதில் நடைபெறும். போக்குவரத்திற்குத் தகுதியான சாலைகள் அமைய வழிகோலியவர்கள் வேட்டையாடுவதில் ஈடுபட்டிருந்த கற்கால மக்கள். அவர்கள் வேட்டைக்குச் செல்லும் பொழுது சிறிய பாதைகள் தோன்றின. கால்நடைகளை மேய்ச்சல் நிலம் தேடி ஓட்டிச் செல்லும் பொழுது இச்சிறிய பாதைகள் பெரிய பாதைகளாயின. அவைகளே பிற்காலத்தில் பெருவழிகளாக மாறின.

சங்க இலக்கியங்களால் இப்பெருவழிகளைப் பற்றி அறியமுடிகிறது. இப்பெருவழிகளில் கழுதைகள் மிளகுப் பொதிகளைச் சுமந்து கொண்டு திரளாகச் சென்றன. அம்மிளகுப் பொதிகளுக்கு சுங்கம் செலுத்தப் பெற்றது. அப்பெருவழிகளில் செல்லும் வணிகர்களையும், வழிப்போக்கர்களையும் வில்லேந்திய வீரர்கள் பாதுகாத்து வந்தனர்.[7]

சில பொருட்கள் உற்பத்தியான இடத்திலேயே விற்பனையாயின. சில பொருட்கள் ஊர் ஊராக எடுத்துச் சென்று விற்கப்பட்டன. உப்பு அப்படி விற்கப்பட்ட ஒரு பொருளாகும். மிளகையும் ஊர் ஊராகச் சென்று விற்பதுண்டு. பொருட்களை வண்டிகளின் மீதும் கழுதைகளின் மீதும் ஏற்றிச் செல்வர். சரக்குப் பொதிகளின் மீது அவற்றின் அளவோ எடையோ பொறிக்கப்பட்டிருக்கும்.[8] அவற்றை ஏற்றிச் சென்ற வண்டிகளின்

---

1. வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
   நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
   பட்டினப்பாலை - வரிகள். 29-30
2. பொருநராற்றுப்படை - 214-215
3. பெரும்பாணாற்றுப்படை - 161-165
4. நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
   எருமை நல்லான் கருநாகு பெறூம்உம்
   பெரும்பாணாற்றுப்படை – 164-165
5. ஐங்குறுநூறு. 47.
6. நெம்லும் உப்பும் நேரே யூரீர் கொள்ளீரோ எனச்
   சேரி தோறும் நுவலும்
   –அகம்-390, வரிகள் 8 9
7. புறம். 163. குறள். 221 (பரிமேலழகர் உரை)
8. தணர்ச் செவிக் கழுரைச் சாத்தோடு வழங்கும்
   உல்குடைப் பெருவழிக் கவலைக் காக்கும்
   வில்லுடைவைப்பின் வியங்காட்டிய வின்
   பெரும்பாணாற்றுப்படை, 80-82

மீதும் அளவு பொறிப்பதுண்டு.[1] தாம் விற்கும் பண்டங்களைப் பற்றியக் குறிப்பு எழுதப் பெற்ற கொடிகளை வணிகர்கள் தம் கடைகளின் முன்பாகப் பறக்க விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.[2]

வணிகர்கள் தம் பண்டங்களை விற்பனைக்கு எடுத்துச்செல்லும் பொழுது கூட்டங் கூட்டமாக செல்வார்கள். இவ்வாறு செல்லும் கூட்டங்களுக்கு **வாணிகச் சாத்துக்கள்** என்று பெயர். ஆறலைக் கள்வருக்கு அஞ்சி அவர்கள் சாத்துகளாகச் சேர்ந்து செல்வது வழக்கம்[3] கொள்வதிலும் மிகை கொளாது, கொடுப்பதிலும் குறைவு படாது மிக நேர்மை யாகத் தம் வணிகத்தை நடத்தி வந்தனர்.[4]

உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடந்திருக்க வேண்டுமென்று எண்ணத் தோன்றுகிறது. காசு கொடுத்து எந்த பண்டத்தையும் வாங்கிய தாகத் தெரியவில்லை. சங்க காலத்தில் காணம் என்னும் பொற்காசுகள் வழக்கத்திலிருந்த தாக அறிகிறோம்.[5] பொற்காசுகள் வேப்பம்பழம், உகாப்பழம் போன்ற உருவில் கட்டியாக இருந்ததாகத் தெரிய வருகின்றன. தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் சங்க காலச் சோழர் காசு ஒன்றும், அழகன் குளத்தில் பாண்டியர் காசு ஒன்றும் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன. கரூரில் சங்ககாலச் சேரர்களின் காசுகள் பல கண்டெடுக்கப் பட்டுள்ளன. இக்காசுகள் வழக்கத்திலிருந்தும் பண்டங்கள் ஏன் காசுகளுக்கு விற்கப்பட வில்லையெனத் தெரியவில்லை. இக்காசுகள் புழக்கத்திற்கு வராத நிலையில் பண்டமாற்று முறை நிகழ்ந்திருக்கலாம். அவ்வாறெனில் இக்காசுகளின் காலத்துக்கு முன்பாக சங்ககால இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். சங்கம் மருவிய காலத்தில் காசுகள் புழக்கத்திற்கு வந்திருக்கும். காசுகள் கொடுத்துப் பொருட்களைப் பெறுதலும்; பண்டமாற்று முறையால் பொருட்களைப் பெறுதலும், சங்கம் மருவிய காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

அயல்நாட்டு வாணிகம்

வணிகத்தால் வளம் பெற்றுத் திகழும் நாடு எதுவோ, அதுவே செல்வத்தால் சிறந்து விளங்கும். உள்நாட்டு வணிகத்தைக் காட்டிலும் அயல்நாட்டு வணிகத்தை வளர்த்து வாழும் நாடே சிறப்பான நாடாகும். அயல்நாட்டு வணிகம், தம் நாட்டுப் பொன்னைக் கொடுத்து பிறநாட்டுப் பொருளைப் பெறுவதாக அமைதல் கூடாது. அத்தகைய நாடு வணிகத்தால் வளம் பெறுவதற்கு மாறாக, தான் முன்னர் பெற்றிருந்த வளத்தையும் இழந்து விடும். அதற்கு மாறாகத் தன்னாட்டுக் கைத்தொழில்கள் ஆக்கித்தரும் பொருட்களை அயல்நாடுகளுக்கு அனுப்பி அவற்றிற்கு ஈடாக அந்நாடுகளிலிருந்து பொன்னைப் பெறும் வணிகமே வளம் தரும் வணிகமாம். இவ்வுண்மைகளை உணர்ந்து வணிகத்தை வளர்த்த வர்கள் தமிழ்நாட்டு மக்கள்.

தமிழர்கள் திரைகடலோடி திரவியம் தேடினர். கிரீஸ், ரோம், எகிப்து, சுமேரியா பாபிலோனியா ஆகிய மேலை நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் அளவிலேயே கிரேக்கர்கள் தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இவ்வணிகத் தொடர்பால் தமிழ்ச் சொற்கள் சில கிரேக்க மொழியில் இடம்பெற்றன. அரிசி என்ற சொல் 'அரிஸா' என்றும், கருவா (இலவங்கம்)

1. சிலப்பதிகாரம் 5; 111-2
2. சிலப்பதிகாரம் 26: 136
3. மதுரைக் காஞ்சி, 365-373.
4. குறுந்தொகை. 390.
5. 'கொள்வதூஉ மிகை கொளாது கொடுப்பதூஉங் குறை கொடாது' பட்டினப்பாலை-210

கார்'பியன்' என்றும், இஞ்சி வேர் 'சின்ஸிபேராஸ்' என்றும் உருக்குலைந்தன. சோபோகிளீஸ் அரிஸ்டே பேனிஸ் முதலிய கிரேக்க அறிஞர்களின் நூல்களில் இவற்றைக் காணலாம். இதன்மூலம் அந்நாடுகள் ஒன்றோடொன்று வணிகத்தில் ஈடுபட்டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வரலாம். சேரர்களில் ஒரு பிரிவினரின் நகரான கரூரில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டுக் காசுகள் கிடைத்துள்ளன. இவை தமிழகத்துடன் கிரேக்க நாட்டினர் கொண்டிருந்த தொடர்பினை உறுதி செய்கின்றன.[1]

தமிழகத்து நறுமணப் பொருள்களின் சுவையையும் பெருமையையும் கிரேக்கர்களின் மூலமே ரோமாபுரி மக்கள் அறிந்துகொண்டனர். எனினும் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரையில் ரோமானியரின் வணிகம் பெருமளவில் விரிவடையவில்லை. ரோமாபுரி மன்னன் அகஸ்டஸ் கி.மு. 30-இல் எகிப்தை வெற்றி கொண்ட பிறகு தமிழகத்துடன் நேர்முக வணிகத் தொடர்பு கிட்டியது. கி.பி. முதல் சில நூற்றாண்டுகளில் ரோம் நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் கடல் வணிகம் வளர்ந்து வரலாயிற்று. ஸ்டிராபோ, பெரிபுளஸ், பிளினி, டாலமி ஆகியோர் எழுதிய நூல்களில் தமிழகத்தின் கடல் வணிகத்தைப் பற்றிய சான்றுகள் மலிந்துக் காணப்படுகின்றன. இச்சான்றுகளை மெய்ப்பிக்கும்வண்ணம் தொல்பொருட்கள் பல தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புதுச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேட்டிலும் காஞ்சிபுரத்திலும் நடைபெற்ற அகழாய்வில், ரோமானிய நாட்டு மதுக்குடங்களும் மட்பாண்டங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முன்னர் ரோம் நாட்டைச் சேர்ந்ததாகக் கருதப்பட்ட ரௌலெட்டட் இனப் பானை ஓடுகள், தமிழகத்திலேயே ரோமானிய ஓடுகள் போன்று செய்யப்பட்டவைதான் என்று அண்மையில் இது குறித்து ஆய்வு செய்த திருமதி விமலா பெக்லி அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அழகன் குளத்தில் நடைபெற்ற அகழாய்வில், இரண்டாம் வேலன்டைன், ஆர்கேடியஸ், தியோடேசியஸ், போன்ற ரோமானிய மன்னர்களால் வெளியிடப்பட்ட காசுகளும், மதுக்குடத்தின் பகுதிகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன[2] தமிழ்நாட்டில் பல இடங்களில் ரோமானியத் தொல்பொருட்களும் காசுகளும் மிகுதியான அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கருவூரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஐந்நூறுக்கும் மேற்பட்ட ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. இக்கண்டுபிடிப்புகள் தமிழகத்துடன் ரோமானியர்கள் கொண்டிருந்த வணிகத்தின் தன்மையை எடுத்தியம்புகின்றன.

அயல்நாட்டு வணிகம் வளமுடன் நடைபெற பண்டைய துறைமுகப்பட்டினங்களான தொண்டி, முசிறி, குமரி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், புதுச்சேரி, மரக்காணம், மாமல்லை முதலியன மிகவும் துணைபுரிந்தன. வைகாசித் திங்கள் தொடங்கி நான்கு மாதங்கள் வரையில் சேர நாட்டின் கடற்கரையில் வந்து மோதும் தென்மேற்குப் பருவக்காற்றைக் கண்டறிந்த ஹிப்பாலஸ் (கி.பி. 45)க்குப் பின்னர் மேலை நாட்டு வணிகம் சிறப்படைந்தது. வணிகம் விரிவடைய விரிவடைய தமிழ் நாட்டில் குடியேறிய ரோமானியரின் தொகையும் வளர்ந்து வந்தது. அவர்கள் வாழ்ந்த இடம் ஒன்று மதுரை மாநகருடன் இணைந்திருந்ததாகத் தெரிகிறது.

ரோம் நாட்டில் இறக்குமதியான சரக்குகளின் அளவு ஆண்டு தோறும் மிகுதியாகியது ஆண்டு தோறும் 600000 பவுன் மதிப்புள்ள தங்கம் தமிழரின் கைக்கு மாறிக் கொண்டே வந்தது. தம் நாட்டுச் செல்வம் தமிழ்நாட்டுக்குச் செல்வதை உணர்ந்த ரோமானிய மக்கள் தமிழகத்து பண்டங்களின் மீது ரோமானியருக்கிருந்த வேட்கையை வன்மையாகக் கண்டித்தனர். அதனால் ரோமானியரிடம் தமிழகம் செய்து வந்த வணிகம் குன்றி வரலாயிற்று. இருப்பினும் கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டிலும் தமிழகம் ரோம் நாட்டோடு வணிகத் தொடர்பு

---

1. Maritime Trade Commerce and Contact of Tamilnadu. - by Natana. Kasinathan. paper presented in the world Archaeology meet held at New Delhi 1994 December.
2. Alagankulam (A preliminary report) by Natana. Kasinathan, A. Abdul Majeed, D. Tulasiraman, S. Vasanthi.

கொண்டிருந்தது என்பது கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டு ரோமானியக் காசுகள் தமிழகத்தில் கிடைப்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அழகன்குளம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட கி. பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய மன்னன் ஆர்க்கேடியஸ் காசு, மேலும் இக்கருத்திற்கு வலுவூட்டுகிறது.

ரோம் நாட்டிற்குத் தமிழகம் ஏற்றுமதி செய்த பொருட்களில் சாலச்சிறந்தவை இலவங்கம், மிளகு, இஞ்சி, ஏலம் அரிசி, கல் மணிகள் மற்றும் மரவகைகள் ஆகும். தமிழகத்துக் கருங்காலி மரங்கள் ரோம் நாட்டில் பெருமளவில் விற்பனையாயின. தமிழகம் ரோம் நாட்டிலிருந்து தேறலையும், பொன்னையும், அரிய மட்பாண்டங்களையும், கற்கண்டையும், ஓதிமம் என்னும் விளக்கினையும் இறக்குமதி செய்தது.

தமிழகத்திற்கும் எகிப்துக்குமிடையே ஏற்பட்டிருந்த வணிகத்தொடர்பு மிகப்பழமை யானதாகும். அத்தொடர்பு எப்பொழுது உண்டானது என்பதற்குப் பல விடைகள் கூறப்படு கின்றன. எபித்திரிய கடலின் பெரிப்ளஸ் என்ற நூலை பதிப்பித்த ஸ்காப் தம் பதிப்புரையில் 'கிரேக்க மக்கள் அநாகரிகத்தினின்றும் விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தும் பண்டைய இந்திய நாடுகளும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தன. எகிப்து நாட்டின் பண்டைய துறைமுகமான க்யுசியரில் (Qusier) கண்டெடுக்கப்பட்ட இரண்டு பானை ஓடுகளில்.'கணன்' 'சாதன்' என தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மட் பாண்ட ஓடுகள் கெய்ரோ அருங்காட்சியகத்திலுள்ளது. 'கணன்' 'சாதன்' என்ற பெயர்கள் வணிகர்களுக்குப் பொதுவாக வழங்கப்படுபவை. கி.பி. முதல் நூற்றாண்டளவில் தமிழர்கள் எகிப்துடன் கொண்ட உறவை வலுப்படுத்த இக்கண்டுபிடிப்பு துணைபுரிகிறது.[1] பாரசீக வளைகுடாவின் வடபால் இந்நாடுகள் ஒன்றோடொன்று பண்டமாற்று செய்து கொண்டன' என்று கூறுகின்றார். பண்டையத் தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பண்டங்களுள் சிறப்பானவை மஸ்லின் துணியும், ஏலம், லவங்கம் போன்ற நறுமணப் பொருட்களும் ஆகும். தமிழக வணிகர்கள் இப்பண்டங்களை மரக்கலங்களில் ஏற்றிச் சென்று ஏடன் வளைகுடாவிற்கு இருபுறமுள்ள துறைகளில் இறக்கினர். பினீஷியர் அல்லது அராபியர் அச்சரக்குகளை எகிப்திற்கு எடுத்துச் சென்றனர். எகிப்தின் பதினேழாம் அரச பரம்பரையினர் காலத்தில் (கி.மு. 1500-1350) இறக்குமதியான சரக்குகள் பல தந்தத்தினால் செய்யப்பட்டவை என அறிகிறோம். எனவே, இவற்றில் சில தென்னிந்தியாவினின்றுதான் ஏற்றுமதியாகியிருக்க வேண்டும்.

தென்னிந்தியாவிற்கும் சுமேரியாவிற்குமிடையில் கி. மு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வணிகத்தொடர்பு இருந்திருக்கவேண்டுமென்று சாய்சி (Sayce) தம் ஹிப்பர்ட் சொற் பொழிவுகளில் குறிப்பிட்டுள்ளார் (1887). தாம் குறிப்பிட்டதற்கு கீழ் கண்ட சான்றினை அவர் எடுத்துக் காட்டினார். சுமேரிய மன்னரின் தலைநகரான 'உர்' என்ற இடத்தில் சந்திரபகவானுக்கு எடுக்கப்பட்ட கோயிலின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அச்சிதைவு களில் தேக்க மரத்துண்டு கண்டுபிடிக்கப்பட்டது. 'உர்' என்ற இடம் கி.மு. மூவாயிரம் ஆண்டிலேயே அழிந்துவிட்டதால் தேக்கு மரத்துண்டின் வயதை ஐயாயிரம் ஆண்டிற்கு மதிப்பிடலாம். கேரள நாட்டிலிருந்து கி. மு. மூவாயிரத்துக்கு முன்னரே தேக்குமரம் சுமேரியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்பதை அறிகிறோம்.[2]

தமிழகத்திற்கும் பாபிலோனியாவிற்குமிடையே விரிவான வணிகம் நடைபெற்று வந்தது. இவ்வணிகம் நடைபெற்றதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. பாபிலோனியாவில் நிப்பூர் என்ற இடத்தில் முரஷு என்பவரும் அவர் மக்களும் நடத்திய காசு வணிகத்தில்

---

1. Ancient Tamil Contact Abroad - Recent epigraphical evidence - I. Mahadevan [presented at Thaninayagam Foundation Trust, Colombo, Sri Lanka on 8th Feb. 1994.

2. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் - பிள்ளை கே.கே.

கணக்குப் பதியப்பட்ட களிமண்ணேடுகள் சிலவற்றில் பாபிலோனியர் தமிழக வணிகருடன் கொண்டிருந்த பற்று வரவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அதே காலத்தில் தமிழ் வணிகர்கள் பாபிலோன் நகரத்தில் குடியேறி தம் தொழிலை நடத்தி வந்ததற்கும் இவ்வேடுகள் சான்று பகர்கின்றன.[1]

மேலை நாடுகளுடன் மட்டுமின்றி, தமிழகம் மற்ற நாடுகளுடனும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. உள்நாட்டிலிருந்து நீர் வழியாகவும், நிலவழியாகவும் வந்த பண்டங்கள் புகாரிலுள்ள சுங்கச்சாவடியில் குவிந்தன. அப்பண்டங்களின் மீது சோழமன்னனின் புலி இலச்சினைப் பொறிக்கப்பட்டது.[2]

தமிழகத்தில் காணப்படும் கல்வெட்டுகளில் வணிகர்களைப் பற்றியும், வாணிகப் பொருட்கள் மற்றும் அளவுகளைப் பற்றியும் பல குறிப்புகள் காணப்படுகின்றன. மதுரையை அடுத்த மாங்குளம் என்ற இடத்தில் பண்டையத் தமிழ் கல்வெட்டில் கடலன் வழுதி என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மாலுமி ஒருவனின் பெயராக இருக்கலாம். மேலும் கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் 'கடலகப் பெரும்படைத் தலைவன்' என்ற அதிகாரி குறிப்பிடப்பட்டுள்ளான். பாண்டிய நாட்டில் கடற்படை ஒன்று இருந்ததால், அதற்குத் தலைவனாக இருந்த அலுவலர் பெயர் "கடலகப் பெரும்படைத் தலைவன்" என்றும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். கலிங்க மன்னன் காரவேலனின் கல்வெட்டில் பாண்டிய நாட்டிலிருந்து முத்து, துணி வகைகளும், பிற பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்ற தகவல் காணப்படுகிறது.[3]

கடல்வழியாக மரக்கலங்களில் குதிரைகள் வந்திறங்கின. இக்குதிரைகள் அரேபிய நாட்டிலிருந்து வந்திருக்க வேண்டும். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டிற்கு வந்த வெனீசு நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ ஹார்மோஸ், க்ரீஸ், ஏடன், அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து குதிரைகளையும் வேறு பல பண்டங்களையும் மரக்கலங்கள் ஏற்றிக் கொண்டு பாண்டிய நாட்டிலுள்ள காயல் துறைக்கு வந்தனவென்று குறிப்பிடுகிறார். காயல்பட்டினம் வணிகச்செழிப்புடன் இருந்ததென்றும் பாண்டிய மன்னனிடம் அளவு கடந்த பொன்னும் மணியும் இருந்ததெனவும் குறிப்பிடுகிறார். கி.பி. 1740 ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி அரேபியாவிற்கு சென்றிருந்த கப்பல், 4250 அச்சைகுதிரை (அரேபியா)களுடன் வந்ததென ஆனந்தரங்கம் பிள்ளை தன்னுடைய நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.[4] பாண்டிச்சேரி, பிரஞ்சுக்காரர்களின் ஆளுகையின் கீழிருந்தபொழுது இக்குதிரை இறக்குமதி நடைபெற்றுள்ளது. சங்ககாலம் தொட்டு கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை தமிழகம் அரேபிய நாட்டுடன் குதிரை வணிகத்தில் ஈடுபட்டிருந்தது.

நிலவழியாக சகடங்களில் மிளகுப்பொதிகளும், மேருவிலிருந்து மாணிக்கமும், சாம்புநதம் என்னும் பொன்னும், குடகு மலையிலிருந்து சந்தனமும் அகிலும், தென்கடல் முத்தும், கீழ் திசைக் கடலிலிருந்து பவளமும், கங்கையாற்றின் பொருட்களும் காவிரியாற்றின் பொருட்களும், இலங்கையிலிருந்து வந்த பொருட்களும், கடாரத்திலிருந்து வந்த பொருட்களும் புகார் தெருவில் வணிகத்தின் பொருட்டு வந்திறங்கின.[5]

---

1. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் – பிள்ளை, கே.கே.
2. பட்டினப்பாலை, 129-136
3. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் – பிள்ளை, கே.கே.
4. பிரத்தயேகமான ஆனந்தரங்கம் பிள்ளையவர்களின் சொஸ்தலிகித தினப்படி சேதி குறிப்பு, முதற்புத்தகம் - 1948.
5. பட்டினப்பாலை - 185-192.

புகார்த் துறையின்கண் தறியில் அசையும் யானைகள் போன்று மரக்கலங்கள் அசைந்து நின்றனவாம். காவிரிப்பூம்பட்டினத்தில் நடத்தபெற்ற அகழாய்வில், காவிரியின் பழைய கால்வாயின் கரையில் ஆங்கில 'I' வடிவில் படகுத்துறைக் கண்டறியப்பட்டது[1] அத்துறை செங்கற்களால் கட்டப்பெற்றுள்ளது. இத்துறையின் காலம் கி. மு 3-ஆம் நூற்றாண்டாகும். பட்டினப்பாலை கூறும் செய்தியை இக்கண்டுபிடிப்பு உறுதிசெய்கிறது. இது போன்ற துறைமுகங்கள் நம் பண்டைத் தமிழகத்தின் வணிகத்தை விரிவுபடுத்த அடிகோலின.

கங்கைக் கரையிலிருந்து பல பண்டங்கள் தமிழகத்திற்கு வந்திறங்கினவென பட்டினப்பாலைக் குறிக்கும். அதனை மெய்ப்பிக்கும் வகையில் கொற்கையில் நடைபெற்ற அகழாய்விலும், அழகன் குளத்தில் நடைபெற்ற அகழாய்விலும், கங்கைச் சமவெளியிருந்து வரப்பட்ட மட்பாண்டங்களின் ஓடுகள் (NBP pot sherds) கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கண்டுபிடிப்பு தமிழகம் வட நாட்டுடன் கொண்டிருந்த வணிக உறவையும் பண்பாட்டுத் தொடர்பையும் எடுத்தியம்புகிறது.[2]

தமிழகம் மேற்காசிய நாடுகளுடன் வணிகத்தொடர்பை விரிவுபடுத்தியது போன்று தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது.

பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம், துறைமுகப் பட்டினம் மாமல்லபுரம். இம்மாமல்லபுரத்தில் வடநாட்டிலிருந்து பண்டங்களும், மேலைநாடுகளிலிருந்து குதிரைகளும் வணிகத்தின் பொருட்டு வந்திறங்கின. திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில் மாமல்லையில் கலங்கள் வந்துசென்றமையை, "கலங்கள் இயங்கும் மல்லைக் கடல்மல்லை" எனக்குறிப்பிடுகிறார். காஞ்சியும், மாமல்லையும் வேகவதி என்னும் பாலாற்றின் கிளை ஆற்றால் இணைக்கப்பட்டிருந்தன. பல்லவர்கள் சிறந்த கடற்படையைக் கொண்டு விளங்கினர். பல்லவமன்னன் முதலாம் நரசிம்மவர்மன் தன் நண்பனான இலங்கை மன்னன் மானவர்மனுக்கு உதவ கடற்படை ஒன்றை இலங்கைக்கு அனுப்பினான்.[3] பல்லவர்களின் காலத்தில் வணிகம் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் நடைபெற்றது. தாய்லாந்து என வழங்கப்படும் சயாம் நாட்டில் தகுவா-பா என்னும் இடத்தில் தமிழ் கல்வெட்டொன்று பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு, இக்கல்வெட்டு பல்லவமன்னன் மூன்றாம் நந்திவர்மனுடையது என்று கணிக்கப்பட்டுள்ளது. நாங்கூரைச் சேர்ந்த ஒருவன் இங்கு அவனி நாரணம் என்ற பெயரில் ஒரு குளத்தை எடுத்து அதனை மணிக்கிராமத்தார் என்னும் வணிகக்குழு, சேனாமுகத்தார், மற்றும் பெயர் தெளிவாக இல்லாத மற்றொரு குழு ஆகிய மூன்று குழுவினரின் பாதுகாப்பில் விட்ட செய்தியை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. நந்திக்கலம்பகம் மூன்றாம் நந்திவர்மனை அவனி நாரணன் என்று குறிப்பிடுவதால் இங்கு எடுக்கப்பட்ட குளத்திற்கு மூன்றாம் நந்திவர்மனுடைய பட்டப் பெயராகிய அவனி நாரணம் என்று பெயரிடப்பட்டுள்ளது. மணிக் கிராமத்தார் காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகாமையிலுள்ள மணிகிராமத்தைச் சேர்ந்த வணிகர்கள். இக்குளத்தை எடுத்தவன் காவூரிப்பூம்பட்டினத்திற்கு அருகாமையிலுள்ள நாங்கூரைச் சேர்ந்தவன். இக்கல்வெட்டு பல்லவர் காலத்தில் தாய்லாந்திற்கும் தமிழகத்திற்கும் நடைப்பெற்ற வணிகத்திற்குச் சான்றளிக்கிறது.[4] தாய்லாந்தில், பொற்கொல்லர்கள்

---

1. Indian Archaeology A Review - 1964-65.
2. Vasavasamudram, A Report.
3. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் - பிள்ளை, கே.கே.
4. தென்கிழக்கு ஆசியாவில் காஞ்சிப் பல்லவர் – பக்கங்கள் 115–20

பட்டைத் தீட்டப்பயன்படுத்தும் கல் ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. அக்கல் 8 செ.மீ. × 4 செ.மீ. × 3 செ.மீ. அளவினை உடையது. இக்கல்லின் பின்புறம் பெரும்பதன் கல் என பண்டைத் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இது கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக்கால அளவில் தமிழகம் தாய்லாந்துடன் கொண்ட வணிக உறவை உறுதிசெய்ய இக்கல் துணைபுரிகிறது. பல்லவர்கள் கடல் கடந்து வணிகம் செய்தனர் என்பதற்கு அவர்களால் வெளியிடப்பட்ட காசுகள் நமக்குச் சான்று பகர்கின்றது. அக்காசுகளில் முன்பக்கம் நின்ற நிலையிலுள்ள காளையின் உருவமும், வளர்பிறையும், ஸ்ரீவத்ஸமும் காணப்படுகின்றன. பின்புறத்தில் இரண்டு பாய்மரம் கொண்ட கப்பல் காணப்படுகிறது.[1]

மணிக்கிராமத்து வணிகக்குழு போன்று திசையாயிரத்தைந்நூற்றுவர் என்ற வணிகக் குழு தலைசிறந்து விளங்கியது. ஐந்நூற்றுவர் என்ற வணிகக்குழுவுடன் வளஞ்சியர், நகரத்தார், நானாதேசி போன்ற வணிகக்குழுக்களும் இணைந்திருந்தன. ஐந்நூற்றுவர், வளஞ்சியர், நானாதேசிகர் பற்றி எழுபத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் தென்னிந்தியாவில் கிடைத்துள்ளன.

ஐந்நூற்றுவர்கள் முதலில் பல பண்டங்களை விற்று வந்தனர். இவர்கள் ஊர் ஊராகச் சுற்றித்திரிந்து வணிகம் செய்ததுடன் நில்லாது அயல்நாடுகளுக்குச் சென்றும் வணிகம் செய்தனர். இவர்களுடைய கல்வெட்டுகள், இலங்கையிலும் சுமத்திராவிலும் உள்ளன. இவர்கள் வணிகத்திற்கும், நகரங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கும் தலைவராக செல்வாக்குடன் இருந்தனர். இவர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். நானாதேசி, நகரத்தார் போன்றோருக்குத் தலைவராக விள்ங்கினர். வளஞ்சியர், நகரத்தார் போன்று இவர்களும் அரசு நிர்வாகத்தில் பங்கேற்றனர். வசூலிக்கப்படும் சுங்கத்தில் இவர்களுக்கு ஒரு பங்கு (share) உண்டு. எறிவீரப்பட்டணம் போன்ற பட்டணங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெற்றிருந்தனர். சில பொருட்களை வணிகர்கள் விற்பதற்கு உரிமை கொடுக்கும் அதிகாரம் இவர்களிடம் இருந்தது.[2]

இவ்வணிகக்குழுக்களேயல்லாமல் அஞ்சுவண்ணம் என்ற குழு இருந்ததை கோட்டயம் செப்பேடுகளாலும், கொச்சிச் செப்பேடுகளாலும் அறியப்படுகிறது. இவ்விரண்டு செப்பேடுகளும் கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இராமநாதபுரம் மாவட்டம். திருவாடனை வட்டத்திலுள்ள தீத்தாண்டதானபுரம் கல்வெட்டிலும் இக்குழு குறிக்கப்படுகிறது, இக்கல்வெட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அஞ்சுவண்ணம் என்ற வணிகக் குழுவைப்பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இருப்பினும் இக்குழு பஞ்சகம்மாளர் என்றழைக்கப்படும் கொல்லர், கன்னார், சிற்பிகள், ரதகாரர், பொன்வேலை செய்யும் தட்டார் ஆகியோருள்ளிட்டவையாகும்.

மேற்குறிப்பிட்ட வணிகக்குழுவினர், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரைத் தமிழ் நாட்டிலுள்ள நகரங்கள், பட்டினங்கள் ஆகியவைகளிலிருந்து தமிழ்நாட்டின் வணிகத்தை மேம்படுத்தினர். சங்ககால வணிகம் வளர பெருவழிகள் பயன் பட்டதுபோல், பிற்காலத்தில் தமிழ்நாட்டில் அதியமான் பெருவழி, தஞ்சாவூர்ப் பெருவழி, கொங்கப் பெருவழி, வடுகப் பெருவழி, பட்டினப் பெருவழி, ராஜகேசரிப் பெருவழி ஆகிய பெருவழிகள் வணிகம் வளர துணை நின்றன.

---

1. Tamil Coins - A study, Dr. R. Nagaswamy-1981.
2. Some Medieval Mercantile Communities of South India and Ceylon - K. Indrapala

தமிழ்நாடு சீனாவுடன் மிகவும் வளமானதொரு கடல் வணிகத்தை நடத்தி வந்தது. சீனத்துடன் தமிழகம் மேற்கொண்டிருந்த வணிகத்தொடர்பு மிகவும் பழமையானது தமிழகத்துப் பண்டங்கள் கி.மு. ஏழாம் நூற்றாண்டிலேயே சீனத்தில் இறக்குமதியாயின என்று அந்நாட்டு வரலாறுகள் அறிவிக்கின்றன.[1] சீனாவிலிருந்து பட்டும் சர்க்கரையும் இறக்குமதி செய்யப்பட்டன.கி.மு இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனநாட்டுக் காசுக் குவியல் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டைக்கு அருகில் ஓலைக்குன்னம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே தமிழக வணிகர்கள், கி.மு. இரண்டாம் நூற்றாண்டு அளவிலேயே சீனநாட்டுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினால், அந்நாட்டுக் காசுகள் குவியலாகத் தமிழகத்தில் கிடைத்துள்ளன என்று கருதலாம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டி லிருந்து இந்தியாவிற்கும் சீனாவிற்கும் நேரடியான கடல் மார்க்கம் இருந்தது. இந்த கடல் மார்க்கத்தை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இட்சிங்கும் குறிப்பிடுகிறார். இந்திய வணிகர்கள் கி.பி. 750-இல் கேன்டனில் (Cantan) இருந்தனர். சீனத்தை ஆட்சி செலுத்திய சுங் மரபினர் வணிகத்திற்குஊக்கமளித்தனர். முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் முறையே கி. பி. 1015, 1033, 1077-இல் வணிகத்தின் பொருட்டு சீனத்திற்குத் தூதுக்குழுவினை அனுப்பினர். தமிழகத்திற்கும் சீனத்திற்கும் இருந்த வணிக உறவு கி.பி 14-ஆம் நூற்றாண்டில் நலிவடைந்தது.[2]

கங்கைகொண்ட சோழபுரத்தில் சீன எழுத்துக்கள் பொறித்த பீங்கான் ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை வெளியிடப்பட்ட சீனக்காசுகள் சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.[3] இக்கண்டுபிடிப்புகள் சீனத்துடன் தமிழகம் கொண்ட வணிகத் தொடர்பை மெய்ப்பிக்கும் சான்றுகளாய் அமைகின்றன.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள திருப்புடைமருதூர் கோயிலில் காணப் படும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியத்தில், அரபு நாட்டு வணிகர்களும், சீனப் பயணிகளும் கப்பலில் குதிரைகளை ஏற்றிச் செல்வது தீட்டப்பட்டுள்ளது எனவே கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலும் கூட அரேபியர்களும், சீனர்களும் தமிழர்களோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது புலப்படுகிறது.

தமிழகம் சுபத்ராவுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. முதலாம் இராஜராஜன் காலத்தில் சுமத்ராவில் சைலேந்திரர்களின் ஆட்சி நிலவி வந்தது. சைலேந்திர மன்னன் மாற விஜயோத்துங்க வர்மனுக்கு நாகப்பட்டினத்தில் பௌத்த ஸ்தூபி எழுப்பிக்கொள்ள முதலாம் இராஜராஜன் அனுமதி அளித்ததோடு நில்லாமல் ஆனைமங்கலம் என்னும் ஊரிலி ருந்து வரும் வருவாயை இத்தூபியை நிர்வகிக்கக் கொடையளித்தான், இராஜராஜனின் புதல்வன் முதலாம் இராஜேந்திரன் எக்காரணத்தை முன்னிட்டோ சுமத்ரா மீது படை யெடுத்தான். பெரும்பாலும் அது வணிகத்தின் காரணமாகலாம். சுமத்திராவில் பரோஸ் என்னும் இடத்திலுள்ள லோபுதுவா (Lobol Tolwa) என்னும் இடத்தில் ஒரு சிதைந்த தமிழ் கல்வெட்டு கண்டறியப்பட்டது. அக்கல்வெட்டின் காலம் கி.பி. 1088 ஆகும். திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்னும் வணிகக் குழுவினர் அளித்த கொடையை, இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.[4]

---

1. Maritime Trade Commerce and Contact of Tamilnadu - by Natana. Kasinathan. paper presented in the world Archaeological congress-3 held at New Delhi from 4-12-1994 to 11-12-1994

2. Tamilnadu's Trade Contacts with East and West - Brochure Brought out by The Tamilnadu State Department of Archaeology, 1990.

3. தொல்லியல் செய்திமடல் - 3 – ஆகஸ்ட்டு 1994. தொல்பொருள் ஆய்வுத்துறை.

4. பிறநாடுகளில் காணும் தமிழ்க் கல்வெட்டுகள் - தி.ந, சுப்பிரமணியன் கையேடு–1968.

தமிழர்கள் பர்மாவுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பர்மாவில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று இரண்டு தூண்களில் உள்ளது.[1] இக் கல்வெட்டுள்ள தூண் முதலாம் இராஜேந்திரனின் பர்மா வெற்றியின் ஞாபகமாக எடுக்கப் பட்டதெனக் கருதப்படுகிறது. பர்மாவில் பாகாங் என்னுமிடத்தில் கண்டறியப்பட்டது. கி.பி. 13-14 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் கல்வெட்டு ஒன்று புக்கம் ஆகிய அரிமர்த்தனபுரம் என்னும் அந்த ஊரில் நானாதேசி விண்ணகர் ஆழ்வார் ஆலயத்தில் மலை மண்டலத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன் செய்த பணிகளை எடுத்துரைக்கிறது.

கி.பி. 15 - ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய வணிகர்கள் தங்களுடைய நிறுவனங்களை இந்தியாவில் நிறுவத் தலைப்பட்டனர். கிழக்குக் கடற்கரையில் சாந்தோம் பரங்கிப்பேட்டை, நாகப்பட்டனம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் போர்த்துகீசியர் வணிகம் செய்தனர். இவ்வணிகத்தில் துணி வணிகம் முக்கிய இடத்தைப் பெற்றது. குதிரை மற்றும் பல்வேறு பண்டங்கள் தமிழகத்திற்கு இறக்குமதியாயின. கி.பி. 17-18 - ஆம் நூற்றாண்டு களில் ஆங்கிலேயர் சென்னையிலும், பிரெஞ்சுக்காரர் பாண்டிச்சேரியிலும், டச்சுக்காரர் பழவேற்காட்டிலும், டேனிஷ்காரர் தரங்கம்பாடியிலும் வணிகத்தில் ஈடுபட்டனர். இந்நான்கு நாட்டுக்காரர்களும் தங்களுடைய வணிகத்தை தமிழகத்தில் விரிவாக்க போட்டி மனப்பான்மை யுடன் செயல்பட்டனர். கிழக்குக் கடற்கரையிலிருந்த ஆங்கிலேயர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, மலேயா, சீனா ஆகிய நாடுகளுடன் வணிகம் செய்யத் தொடங்கினர். தமிழகத்தின் கடல் வணிகம் சீர்குலைந்தது.

மேற்கூறிய அனைத்துச் செய்திகளையும் கூர்ந்து ஆய்வு செய்யும் பொழுது, சங்ககாலம் தொடங்கி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை தமிழகம் மேற்கத்திய நாடுகளுடனும், தெற் காசிய நாடுகளுடனும் வளம்பொருந்திய வணிகத்தை மேற்கொண்டிருந்ததை அறியலாம். இக்காலகட்டத்தில் தமிழகம் வணிகத்தின் மூலமாக அயல்நாடுகளிலிருந்து பொன்னையும் பொருட்களையும் கொண்டு வந்து குவித்தது. பொருளாதார அடிப்படையில் தன்னிறைவு பெற்ற நாடாக விளங்கியது. பின்னர் சில நூற்றாண்டுகள் வணிகம் வளம் குன்றியது. கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் தமிழ் நாட்டினைச் சேர்ந்த வணிகக் குழுக்கள் இயங்கி வந்ததால் வணிகம் உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் தொடர்ந்து நடைப் பெற்று வந்தது. ஆனால் சங்க காலத்தில் நடைபெற்ற வணிகத்தின் செழிப்பைக் காண முடியவில்லை. கி.பி. 11, 12 - ஆம் நூற்றாண்டளவில் நம் நாட்டிலிருந்து சென்ற தூதுக் குழுக்கள் அயல் நாட்டில் நிலவி வந்த நம் வணிகத்திற்குப்புத்துயிர் கொடுக்க முயன்றன. இருப்பினும் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் வணிகம் முழுவதும் குன்றலாயிற்று. கி.பி. 15 - ஆம் நூற்றாண்டு முதல் 18 - ஆம் நூற்றாண்டு வரை ஐரோப் பியர்கள் வணிகத்தின் பொருட்டு நம் நாட்டிற்கு வந்து வணிகத்தை வளர்த்து, நம் நாட்டையே தங்கள் ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்தனர்.

---

1. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் - பிள்ளை கே.கே.

எண்ணும் எழுத்தும் 10

எண்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. — குறள் : 392

பேசத் தெரிந்த மாந்தன் எழுதத் தொடங்குமுன்பே எண்ணத்(எண்ணிக்கை) தொடங்கி இருக்க வேண்டும். ஏனெனில் அவனுக்கு எழுதிக் காட்டுவதைவிட எண்ணிக் காட்டுதல் - அஃதாவது எண்ணிக்கைகளைக் காட்டுதல் அவனது வாழ்வின் முதல் தேவையாக அமைந்திருந்தது. முதன் முதலில் தனது வேட்டை வாழ்க்கை முறையில் தான் வேட்டையாடிய விலங்கு அல்லது பறவையின் எண்ணிக்கையை அல்லது வேட்டையில் கண்ட வேட்டைக்குரிய பொருள்களின் எண்ணிக்கையைத் தன்னைச் சார்ந்தவருக்குத் தெரிவிக்க வேண்டிய தேவையே அவனை எண்ணத்தூண்டியது. அதனைத் தனது செய்கை மூலம் காட்டப் பயன்பட்டது விரல்களே. அதன் வெளிப்பாடே பண்டை மாந்தனின் பாறை ஓவியங்களில் காணப்படும் கைகள் எனக் கருதுதல் தவறன்று.

எனவே வளர்ச்சியுறும் மாந்தன் எழுத்துக்குரிய வடிவமைப்பை வகுக்குமுன் எண்ணுக்குரிய வரிவடிவை வகுத்தல் இன்றியமையாதாகிவிட்டது. அஃது எங்ஙனமாயினும் எண்கள் இன்றி எழுத்துக்கள் வளர்ந்திருக்க இயலாது. எழுத்துக்களும் எண்களும் ஒரு சேரத் தோன்றி வளர்ச்சியுற்றிருத்தல் வேண்டும் என்பதே நமக்கு இதுகாறும் கிடைத்துள்ள சான்றுகளின் முடிவு. இதுவே தொல்லெழுத்தியலாரின் துணிவுங்கூட.[1] இவ்விரண்டும் மாந்த வளர்ச்சியின் அறிவு வெளிப்பாட்டின் இணை கோடுகளாதலின், எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்க்குக் கண்ணென்பது தமிழ்க் கோட்பாடு. அதுவே வள்ளுவரின் மேற்கண்ட குறள்வழி வெளிப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தொன்மைக்குச் சான்றாகக் காட்டப் பயன்படும் நூல் தொல்காப்பியம். அஃது எக்காலத்தது என்பதற்கான வினா விடைகள் பலவாறு இருப்பினும் அண்மைச் சான்றுகள் மூலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னது என்பதில் ஐயமில்லை. அதன், காலப் பழமையின் மேலெல்லையைக் காண இன்னும் சான்றாதாரங்கள் நமக்குத் தேவைப்படுகின்ற நிலையில் அதன் கீழ் எல்லையைக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்றே கொள்வோம். முந்து நூல்களை முறைப்படி எண்ணி இலக்கணம் வகுத்தத் தொல்காப்பியத்துள் ஒன்று முதல் பன்னூறாயிரம் வரை பல்வேறு எண்கள் கருதளவாக அறுநூறுக்கு மேற்பட்ட இடங்களில் சுட்டப்படுகின்றன. அஃதோடன்றி எண்களில் பெருக்கல் நிலைகளை அறுபதுக்கு மேற்பட்ட இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.[2] கூட்டல், கழித்தல், வகுத்தல் முறைகள் கூறும் வாய்ப்பு நூற்பாவில் ஏற்படவில்லையாதலின் கூறவில்லை போலும். கீழ்வாய் எண்களில் அரை என்ற எண் சுட்டப்படுகிறது. பிற

---

1. Mahalingam, T. V., Early South Indian Palaeography, Madras University 1967, p. 63.
2. தொல்காப்பியர் கணக்கியலின் எல்லா வகைகளையும் ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார். கி.மு. வில் தோன்றிய ஓர் இலக்கண நூலுள் கணக்கியல் (அ) எண்ணியலை மிகுதியாக எடுத்தாண்டிருப்பதால் அதற்கு அடிப்படையான முந்தைய இலக்கிய காலம், அவ்விலக்கியம் தோன்றுதற்கான சமுதாய அமைப்பில் எண்ணும் எண்ணியலும் பெற்ற பயன்பாடு, அப்பயன்பாட்டிற்கு முந்தைய வளர்ச்சி எனக் கற்பனைக்கெட்டாததாக உள்ளன.

கீழ்வாய் இலக்கங்களுள் சிலவும் புணர்ச்சி விதியின் பொருட்டு கூறப்பட்டுள்ளன. அதோடு அளவைகளின் பெயர்கள் பல குறிக்கப்படுகின்றன. சுட்டப்பட்டன போக, பிற இலக்கண நூற்பாக்களில் கூற வேண்டிய நேர்ச்சி இன்மையால் கூறப்படவில்லை. ஆதலின் எல்லா வகை மேல்வாய், கீழ்வாய் எண்களும் தொல்காப்பியருக்கு முன்னமே விரிவாகப் புழக்கத்தில் இருந்துள்ளன என்பது தெளிவு. பின் வந்த சங்க நூல்களிலும் எண்களை பரக்கக் காணலாம்.

தமிழ் எழுத்துக்களின் வரி வடிவங்களை விதந்து கூறும் தொல்காப்பியர், எண்ணுருக்களை அஃதாவது எண்களின் வரிவடிவங்களைப் பற்றி ஏதும் கூறவில்லை. வாழ்வியல் பேசும் இலக்கியங்களுக்கடிப்படையான எழுத்தையும் சொல்லையும், பொருளையும் வரையறைபடுத்திக் கூற வேண்டியதன்றி எண்களை விவரிக்கும் தேவை அங்கு ஏற்படாமையால் அதன் வடிவுகளைப் பற்றிப் பேசாமலே விட்டுவிட்டார் போலும். அதனால் எண்களுக்கு வடிவில்லை என்று பொருளாகிவிடாது.

தமிழில் உரை நடை இலக்கியங்களைவிட முன்னர் தோன்றியவை செய்யுள் இலக்கியங்களே. இது காலத்தின் கட்டாயம். செய்யுளகத்தும் இலக்கண நூற்பாக்களிடையேயும் எண்கள் பலபட விரவி வந்தாலும் அவற்றை எழுத்தால் எழுதுதலே வழக்கு. அவ்வாறன்றி எண்ணுருக்களை இட்டுக்காட்டினால் செய்யுளின் எழுத்து, சீர், அசை, தளைகள் கட்டுக் கோப்புச் சிதைந்து செய்யுளின் வடிவும் வனப்பும் பாழ்பட்டுவிடும். எனவே எண்கள் எழுத்தால் எழுதப்படலே வழக்கு. இது மரபாகி நிலைபெற்றுவிட்டது. இம்மரபினை உலக இலக்கியங்கள் அனைத்துள்ளும் காணலாம். செய்யுளின் பரந்துபட்ட வழக்குத் தாக்கத்தால் உரை நடையுள்ளும் பல காலம் எண்களை எழுத்தாலேயே எழுதி வந்துள்ளனர். மேலும் சில எண்களும், எழுத்துக்களும் வடிவொப்புமை உடையனவாக இருந்தமையால் கூட இம்முறை கையாளப்பட்டிருக்கலாம்.

மேலும் ஒற்றெழுத்துக்களும் எகர ஒகரக் குறில்களும் பெற்று வந்த புள்ளி வடிவுகள் எழுதப்படு பொருளான ஓலைகளின் பயன்பாடு மிகுந்த பொழுது புள்ளியால் ஏற்படும் குழப்பத்தை- சுவடிச் சிதைவை தடுக்க புள்ளியைத் தவிர்த்ததையும், அவ்வழக்கு கல்லில் வெகுவாக எழுதப்பட்ட பொழுதும் புள்ளி தவிர்த்தலைக் கடைப்பிடித்ததையும் நமது பரந்துபட்ட கல்வெட்டுகளில் காணலாம். கல்வெட்டுகளில் புள்ளிகள் மிகுந்த அளவில் காணப்படாமையாலேயே தமிழ் எழுத்துக்கள் புள்ளி பெறா எனக் கூற இயலாமை போன்றே; எண் வடிவுகள் இலக்கண இலக்கியங்களில் காணப்படாமையால் அவை இல்லை என்று ஆகிவிடாது.

இலக்கண இலக்கியங்களில் எண் வடிவுகள் காணக்கிடைக்காவிட்டாலும் பிற்காலக் கல்வெட்டுகளில் பரவலாகக் காணக் கிடைக்கின்றன. எண்களின் தோற்றம் பற்றி நிறைவான வரையறை இன்னும் கிட்டவில்லை. எனினும் கிடைத்தவற்றைக் கொண்டு எழுத்தியலார் பலர் அவற்றின் வடிவுகளை அட்டவணை இட்டு விளக்கியுள்ளனர்.[1] இந்திய எழுத்துக்களுக்கு அசோகனது கல்வெட்டை தொன்மையானதாகக் காட்டுவது போன்றே எண்களுக்கும் காட்டுகின்றனர். இவ்வெண் உருக்கள் அசோகனது ஆட்சியின் தொடக்க காலக் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கவில்லை. ஆட்சியின் பிற்காலக் கல்வெட்டுகளால் கல்சி, ரூப்நாத் போன்ற இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் வளர்ச்சியடைந்த எண்ணுருக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.[2] அதன் பின்னர் மேற்கத்திய முழைஞ்சுகளில் உள்ள (Western Caves) கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

1. சுப்பிரமணியம், தி. நா., தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி 2, பக்கம் 1562-68.

2. Shobhana Larman Gokale, Indian Numerals, Deccon College, Poona, 1966. p. 2.

இவ்வெண்களைப் பற்றி ஆய்ந்த எழுத்தியலார், அசோகனது எழுத்துக்களின் தோற்றம் பற்றிக் கணித்தது போல எண்களையும் செமடிக், எகிப்து போன்ற பண்டைப் பண்பாட்டிடங்களிலிருந்து வந்தனவாகக் கருதினர். அதற்கு அடிப்படை முதன் முதலான எளிய கோட்டுத் தீற்றுகளே. எழுத்துக்களைப் பற்றிய கணிப்பு மாறியது போலவே எண்களைப் பற்றிய வெளிநாட்டு வரவுக் கருத்தும் இன்று மாற்றம் பெற்று எண்களும் உள்நாட்டுத் தோற்றமாகக் கருத்துருப் பெற்றுள்ளது.

எழுத்துக்களைப் போன்றே எண்களுக்கும் தோற்றம் வடக்கில் காட்டப்படுவதால் இவை வட இந்தியாவில் தோன்றின என்ற எண்ணம் ஏற்படுதல் இயற்கை. இந்திய எழுத்துக்களின் தோற்றத்திற்கு தென்னகமே களமாக இருந்துள்ளமைக்கான சான்றா தாரங்கள் எழுத்தியலில் ஏற்கனவே சுட்டப்பட்டுள்ளமையால் எழுத்தோடு ளைர்ந்த எண்ணும் தென்னகத்திலேயே தோற்றம் பெற்றுள்ளன என்பதற்கான காரணங்களை மீண்டும் விரித்தல் கூறியது கூறலாகும்.

எண்களின் தோற்றத்திற்கடிப்படையாக அமைந்தவை, பண்டை மாந்தனின் எண்ணிக்கை அறியும் இன்றியமையாத் தேவையே என முன்னரே சுட்டப்பட்டது. அவனது தேவைக்கு முதற் களமாக அமைந்து உதவியவை அவனது கைகளும், கை விரல்களுமே. தமிழகத்தில் மட்டுமன்றி உலகின் அனைத்துப் பகுதி மாந்தர்களும் தங்களது கணக்கீட்டிற்கு ஏந்தானதும் இயற்கையாய் அமைந்ததுமான கைவிரல்களையே பயன் படுத்தியுள்ளனர்.[1] எண்ணத் தலைப்பட்டதை சிறு சிறு நேர்கோடுகளைத் தீற்றி எண்ணுருக்கைகளை உருவாக்கியுள்ளனர். இச்சிறு நேர் கோடுகளே ஆதி எண்கள் எனலாம். இவ்வாறு எண்ணுகின்ற வழக்கத்தைத் திருவள்ளுவர் தனது குறட்பாவில் தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற நாட்களைக் கணக்கிடத் தலைவி தன் கைவிரல் களைக் கொண்டு தீற்றியதால் (ஒற்றியதை) அவள் விரல்கள் தேய்ந்துவிட்டன என கூறியுள்ளதை,

. . . . . அவர் சென்ற

நாளொற்றித் தேய்ந்த விரல்" (குறள் 1261) என்ற குறட்பாவால் உணரலாம். இம்முறையை இன்றுங் கூடச் சிற்றூர்களில் எழுத்தறியா மக்களிடம் காணலாம். இம்முறை ஏறத்தாழ கி.மு. 3000 ஆண்டளவில் எகிப்தின் முதல் அரசாட்சிக் காலத்திலேயே ஏற்பட்டுள்ளதற்கான சான்றுகள் அங்கு கிடைத்துள்ளன.[2]

இயல்பாக நேராக இட்ட குறியீட்டுக் கோடுகளை நாம் இன்று பார்க்க இயல வில்லை. அஃதாவது கணக்கியல் நோக்கில் கல்வெட்டுகளில் காணக்கிடைக்கவில்லை. அவை காலப்போக்கில் அறிவு வளர்ச்சிக்கேற்ப மாற்றம் பெற்றுவிட்டன எனக் கருத வேண்டி யுள்ளது. நமக்கு இன்று தொன்மையாகக் கிடைக்கின்றவை சிறு நேர்க் கிடைக்கோடுகளே. இவற்றை அசோகனது கல்வெட்டுகளிலும், மேலை இந்தியக் குடைவரைக் கல்வெட்டு களிலும் காணலாம். இவ்வெண்களுள் ஒன்று முதல் மூன்று வரை மட்டுமே நேர்க்கோடுகளால் காட்டப்பட்டுள்ளன. நான்கு என்ற எண்ணும் நேர்க்கோடுகளால் எழுதப்பட்டது என்பதற்கு கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கபூர்திகிரிக் கல்வெட்டை, திரு. ஏ.சி. பர்னல் எடுத்துக்காட்டாகக் காட்டுவர்.[3]

தமிழகத்தைப் பொறுத்தவரை நமக்குக் கிடைத்த பழந்தமிழ்க் கல்வெட்டுகள் ஒரு நூறுக்குட்பட்டவையே. பானை ஓடுகளில் எண்ணிறந்தனவாகக் கிடைப்பினும் அவை முழுத்தொடர்களற்றச் சிதைவுச் சொற்கள். ஆதலால் அவற்றைக் கணக்கில் கொள்ள இயலாது

---

1. Encylopaedia Britanica, Indian Numerals.
2. Encylopaedia Britanica, Indian Numerals.
3. Burnal A.C.; South Indian Palaeography, 1976, p. 79.

எண்ணிக்கைக் குறைந்த இக்கல்வெட்டுகளுள் வேலாயுதம்பாளையத்தில் (புகளூர்) கிடைத்த சேரர் கல்வெட்டிலும், தொண்டூரில் (செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்) கிடைத்த கல்வெட்டிலும் ஆக இரண்டு கல்வெட்டுகளில் மட்டுமே மூன்றைக் குறிக்கும் எண் குறியீடு கிடைத்துள்ளது. இவ்வெண்கள் சிந்துச் சமவெளிப் பொறிப்புகளில் கிடைத்த மூன்று என்ற எண்ணை ஒத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே தற்பொழுது கிடைத்து வரும் சான்றுகளாலும் எழுத்தியலார் கருதளவைகளாலும் சிந்துவெளி எழுத்துக்களில் இருந்தே நமது பண்டைய எழுத்தான, தமிழ் அல்லது தமிழ் பிராமி தோன்றியுள்ளது என்பதற்கானச் சிந்தனைக்கு வலிமை கூடுகிறது. அழகன்குளம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தாயக் கட்டையில் காணப்பெறும் குறியீடுகள் தமிழெண்களான ஒன்று, இரண்டு மற்றும் மூன்று ஆகியவற்றைக் குறிப்பனவாகக் கருதப்படுகிறது. கொங்கர் புளியங்குளத்துப் (மதுரை) பழந்தமிழ்க் கல்வெட்டிலும், அழகன்குளத்து அகழ்வில் கிடைத்த பானை ஓட்டிலும், இலங்கைத் தொன்மைக் கல்வெட்டுகளிலும் காணப்படும் நாற்கரக் குறியீடு நான்கைக் குறிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது.

பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக் காலத்திற்கும், தமிழகத்தின் வடக்கிலும், தெற்கிலும் முறையே பல்லவர் பாண்டியர் எழுச்சி பெற்ற கி.பி. 5-6-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. இக்காலக் கட்ட இலக்கிய நூல்களில் மட்டுமே கீழ் எண், மேல் எண்களின் பயன்பாட்டை விரிவாக அறிய முடிகிறது. அதற்குப் பின்னருங்கூட கிடைத்த எண்ணறிய கல்வெட்டுகளில் அரசனது ஆட்சியாண்டு குறிப்பிடப்பட்டாலும் அவை எழுத்துக்களாலேயே எழுதப் பட்டன. இம்முறை சற்றேறத்தாழ கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதி வரை கடைப் பிடிக்கப்பட்டுள்ளது. பல்லவர் கால இறுதி, மற்றும் சோழர்காலத் தொடக்கம் வரை இம்முறை நீடித்தாலும் சிற்சில இடங்களில் எண்ணாலும் எழுத்தாலும் எண்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

இதனிடையே பல்லவர்கள் தமிழகத்தில் ஆட்சியை வலுப்படுத்துமுன் ஆந்திரம் மற்றும் தமிழக வடபகுதியில் ஆட்சி செய்த பொழுது சில செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர் அவற்றின் வாசகத்தில் எண் குறிப்பிடப்படாவிட்டாலும், செப்பேடுகளின் இடது ஓரங்களில் பக்க எண்கள் (ஏடு எண்ணிக்கை) இட்டுள்ளனர். அதன் பின்னர் தமிழ்நாட்டில் வெளியிட்ட செப்பேடுகளிலும் இதே முறை தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டுள்ளது. இதே காலகட்டத்தில் தெற்கே ஆண்ட கடுங்கோன்வழிப் பாண்டியர்களும் செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர். அச்செப்பேடுகளிலும், ஏடுகளின் எண்ணிக்கை அறிய எண்ணிடப்பட்டுள்ளன.[1] ஆனால். செப்பேட்டின் வாசகப் பகுதியில் எண்ணுருக்களைக் காண இயலவில்லை. செப்பேட்டு வாசகத்தில் முதல் முதல் பல்லவ மன்னன் அபராசிதவர்மனுடைய வேலஞ்சேரிச் செப்பேட்டில் தான் எண்ணின் பயன்பாட்டைக் காணமுடிகிறது. இந்த வகையில் இதுவரை கிடைத்துள்ளவற்றுள் இதுவே முதல் செப்பேடு எனலாம். இதில் அவனது ஆட்சியாண்டான மூன்று மற்றும் நாள் இரண்டாயிரத்து பதின்மூன்று எண்ணுருக்களால் காட்டப்பட்டுள்ளன.

செப்பேடுகளில் கிடைத்த எண்களின் வளர்ச்சியைக் கருத்தூன்றி நோக்கில் பழந்தமிழ்க் கல்வெட்டுகளின் காலத்திற்கும், பல்லவ பாண்டியர் எழுச்சிக் காலத்திற்குமிடையே எண்களின் பயன்பாடு பெருகி இருந்ததேயொழிய அருகிக் கிடக்கவில்லை என்பது புலனாகும். அவை மிகுதியாகப் பயன்பட்டிருக்கவில்லையாயின் பல்லவ பாண்டியர் காலத்திற்குரிய வளர்ச்சி அல்லது மாற்றத்தை அவை அடைந்திருக்கவியலாது என்பது திண்ணம்.

1. சுப்பிரமணியன், தி.நா.; பாண்டியர் செப்பேடுகள் பத்து, கழக வெளியீடு.

பல்லவர்களுடைய முற்காலக் கல்வெட்டுகள் அனைத்திலும் எண்கள் எழுத்தாலேயே எழுதப்பட்டுள்ளன. பாண்டியர்களுடைய கல்வெட்டுகளில் எண்கள் எண்ணாலும் எழுத்தாலும் எழுதப்பட்டுள்ளன. எண்ணால் எழுதப்படும் முறை சோழர் காலத்தில் படிப்படியாக மிகுந்து வந்ததுள்ளமை அவர்களது கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. சோழர் கால இறுதியிலும் பிற்காலப் பாண்டியர் காலங்களிலும் எண்களைக் குறிக்க எழுத்துக்களை விட மிகுந்த அளவு எண்களைப் பயன்படுத்திலர். சோழர் கால முடிவிற்குள் எண்கள் ஏறத்தாழ முழு வளர்ச்சியை அடைந்துவிட்டன என்றே கூறலாம்.

பல்லவர் கல்வெட்டுகளிலும் பாண்டியர் கல்வெட்டுகளிலும் கீழ்வாய் எண்கள் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. வழக்கம் போல் அவை எழுத்தாலேயே எழுதப்பட்டன. சோழர் காலத்தில் முந்தைய காலத்தை விட கீழ்வாய் எண்கள் மிகுந்த அளவு ஆட்சி பெற்றுள்ளன. அவையும் தொடக்க காலத்தில் எழுத்துக்களாலும் பின் எண்களாலும் குறிக்கப்பட்டுள்ளன. கீழ்வாய் எண்களின் பயன்பாடு சோழர்களின் இறுதி காலத்தில் பல்கி பின்னர் வந்த அரசுகளின் காலங்களில் விரிந்த பயன்பாட்டைப் பெற்ற தோடல்லாது மிக நுணுக்கமான சிற்றெண்களுக்குக்கூட எண்ணுருக்களைப் பயன்படுத்தி யிருப்பதைக் காணமுடிகின்றது தமிழகத்தின் வடக்குப் பகுதியை விட தெற்குப் பகுதியில் அதன் பயன்பாடு அளவிடற்கரியதாய் காணப்படுகின்றது. கன்னியாகுமரிக் கல்வெட்டுக் களில் இதன் பரப்பைக் காணலாம்.

அரசுகளின் காலத்திற்குப் பின் வந்த வெள்ளையர் ஆட்சியிலுங்கூட தமிழ் எண்களே மிகுந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்கால ஆவணங்களில் பெரும்பாலும் தமிழ் எண்களோடு அவற்றின் மேல்வாய் கீழ்வாய் எண்களையே பயன்படுத்தினர். தமிழ்நாட்டில் ஆங்கிலக் கல்வி கற்றாரைத் தவிர மற்றைய பொது கல்வி கற்றார் அனைவரும் தமிழ் எண்களையே பயன்படுத்தியுள்ளனர். இன்றும் சிற்றூர்களில் வாழும் எழுபது அகவையைத் தாண்டிய முதியோர் தமது கணக்குகளை இவ்வெண்களாலேயே எழுதுவதைக் காணலாம் ஆங்கில ஆட்சி காலத்திலும் பொதுமக்கள் இவ்வெண்களையே அறிந்திருந்தனர் என்பதற்கு திருச்சி, தஞ்சை, தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளில் கிடைத்துள்ள ஆங்கில ஆட்சிக் கால வழிக் கற்களே (மைல்கல்) எடுத்துக்காட்டாக உள்ளன.

எழுத்தறிவு பெற்ற மக்கள், தமிழ் எண்களைப் பயன்படுத்தினாலும் எழுத்தறியா மக்கள் ஒருவகையில் பழங்குறியீடுகளையே பயன்படுத்தியுள்ளனர். கல்லாரும் அறியும் வண்ணம் பெருவழிக் (நெடுஞ்சாலை) காதக் கற்களில், அவர்கள் பயன்படுத்திய - அறிந்த – குறியீடுகளை எண்களோடு பொறித்து வைத்திருந்ததை தருமபுரி மாவட்டத்தில் கிடைத்த அதியமான் பெருவழிக் கற்களிலும், சேலம் மாவட்டம் ஆறகழூரில் கிடைத்த மகதேசன் பெரு வழிக் கல்லிலும் காணமுடிகின்றது. இவை 13-14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. அதிய மான் பெருவழிக் கற்களில் பத்தைக் குறிக்க பெரிய வட்டக் குழியும், ஒற்றை எண்களைக் குறிக்கச் சிறு வட்டக் குழிகளும் காட்டப்பட்டுள்ளன. மகதேசன் பெருவழிக் கல்லில் பதின்ம எண்ணும். ஒற்றை எண்களும் ஒற்றை எண் குழிகளாலேயே காட்டப்பட்டுள்ளன.[1]

இவையேயன்றி தென்னிந்தியாவுக்கே உரியனவாக இரண்டு எண் முறைகள் பயன் பட்டுள்ளன என்று திரு. பர்னல் தனது தென்னிந்திய தொல்லெழுத்தியல் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.[2] அவை **கடபயாதி** மற்றும் **சித்தமாத்ரிகை** என்றும் குறிப்பிட்டுள்ளார். அதோடு **பூத சங்கியை** என்ற ஒரு முறை வழக்கில் இருந்ததாக தி. நா. சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.[3]

---

1. குழந்தைவேலன், க. பெருவழிகள், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர் கட்டுரை
2. Burnal A.C. South Indian Palaeography 1976 p. 76.
3. சுப்பிரமணியம், தி.நா. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி 2, பக் 1957.

இவர்கள் குறிப்பிடுகின்ற 1) கடபயாதி 2) சித்த மாத்ரிகை அல்லது பராக்கடி அல்லது துவாதசக்காரி மற்றும் 3) பூதசங்கியைகள் தென்னிந்தியாவுக்குரியனவாகக் கூறப்பட்டாலும் இவை தமிழ் மொழி இலக்கியங்களிலோ அன்றி தமிழ் கல்வெட்டுகளிலோ சிறிதும் பயன் படுத்தப்படவில்லை. தென்னிந்தியா (தமிழ்நாடு) வில் எழுதப்பட்ட வடமொழிக் கல்வெட்டு களிலும் நூல்களிலுமே காண முடியும். இவற்றுள் கடபயாதி என்பது வடமொழி மெய் யெழுத்துக்களில் க, ட, ப, ய போன்ற எழுத்துக்களில் 'க' வை ஒன்று என மதிப்பிட்டு அதனைத் தொடர்ந்துவரும் எழுத்துகளுக்கு இரண்டு மூன்று எனத் தொடர்ந்து மதிப்பளித்து எழுத்துக்களையும் எழுத்துக்களால் ஆன சொல்லையும் கொண்டு எண்ணறியும் முறையாகும்.

சித்தமாத்திரிகை (அ) பராக்கடி (அ) துவாதசக்காரி என்பது உயிர் எழுத்துக்களுக்கு ஒன்று முதல் பன்னிரண்டு வரை மதிப்பளித்தும் பின்னர் உயிரேறிய மெய்யெழுத்துகட்கு எண் மதிப்பளித்தும் கணக்கிடும் முறையாகும். பூத சங்கியை என்பது உலகத்துள்ள பொருட்களைப் பற்றிய சொற்களைக் கொண்டு எண்ணீடு கணிப்பது ஆகும். இவை வடமொழிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்ட ஒரு முறையேயன்றி தமிழுக்கு எவ்வகையிலும் தொடர்புடையதன்று.

12-ஆம் நூற்றாண்டுக்குப் பின் தமிழ் எண்கள் முழு வளர்ச்சியுற்ற காலத்து 1, 2, 5, 7, 8, 1/4, 1/2, 3/4 ஆகியன க, உ, ரு, எ, அ, வ, இ, மு என்ற எழுத்துக்களாக உருப்பெற்றன. இக்காலத்துக்குப் பின் வந்த புலவர்களுள் இவற்றை வையவும், வாழ்த்தவும் சிலேடையாகப் பயன்படுத்தினர். அதன் வெளிப்பாடே ஔவையாரின் "எட்டேகால் (அவ) லட்சணமே என்ற பாடல்" ஒருகால் இக்குழப்பத்தைத் தவிர்க்கத்தான் எண்களை எழுத்தால் எழுதினர் போலும்.

மேலும் எண்ணெழுத்து அறிந்த பொதுமக்களும் நக்கல், நகைச்சுவைக்காக ஏழு, ஐந்து மையண்ணா (எருமை), ஒன்றே முக்கால் தையண்ணா (கழுதை), எட்டு யோக்கியன் (அயோக்கியன்) என்று பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

ஏறத்தாழ 2500 ஆண்டு பழமைபட்ட இவ்வெண்கள் நாளடைவில் பிற இன மக்களின் தாக்கத்தால் பயன்பாடு குன்றி அருகி மறையலாயிற்று.

எழுத்து

மாந்த முயற்சியின் அரிய விளைவே எழுத்துக்கள். இவ்வெழுத்துக்களின் ஆக்கமே, அவனது ஆக்கங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாயதும், இன்றைய விண்ணளாவிய வளர்ச்சியின் அடிப்படையுமாகும். தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விழைந்த மனிதன் முதலில் செய்கைகளைக் காட்டினான். பின்னர் தான் கண்டவற்றையும் உள்ளத்தெழு உணர்வுகளையும் வெளிப்படுத்தவும் நிலைப்படுத்தவும் ஓவியங்களைத் தீட்டினான். ஓவியங்கள் உருவைக் குறித்து, உரு சார்ந்த கருத்தைக் குறித்து, பின்னர் அவ்வுரு குறித்தெழுந்த ஓலியாகி; ஓவிய எழுத்தாய் (Pictograph), கருத்தெழுத்தாய் (Ideograph), அசையெடுத்திட ஒலியெழுத்தாய் (Phonograph) உருப்பெற்றது. அவ்வொலி குறித்த உருவே எழுத்தின் வரிவடியாயிற்றென்பது (Script) எழுத்தியலார் கோட்பாடு. உலகின் தொன்மை மிக்க இனங்கள் தங்களுக்கென எழுத்தைப் படைத்துக் கொண்டிருந்தன. அந்த வகையில் தோன்றிய பழவெழுத்துக்களை அகர வகை (Alphabetic) எழுத்துக்கள் என்றும், உயிர் மெய் வகை எழுத்துக்கள் (Syllabary) என்றும் இருவகையாகப் பகுப்பர். இவற்றுள் உயிர்மெய் வகை எழுத்துக்களே முதலில் தோன்றியவை என்றும் ஆய்ந்து கண்டுள்ளனர். முற்றோன்றிய உயிர்மெய் எழுத்து வகையைச் சேர்ந்ததே நமது தமிழ் எழுத்துக்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் கிடைத்த மிகத் தொன்மையான எழுத்து மொகஞ்சதாரோ, அரப்பாவில் கிடைத்த சிந்துவெளி எழுத்துக்களே. இவ்வெழுத்துக்கள் சற்றேறத்தாழ கி.மு. மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை. இவை இன்னும் தெளிவான வாசிப்பைப் பெறவில்லை. எனினும் இவ்வெழுத்துக்களைப் படைத்தவர்கள் தமிழர்

(திராவிடர்). என்று ஃபின்லாந்து மற்றும் உருசிய மொழியியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இவையாவும் தமிழ் மொழியே என்று திரு. ஈராசு பாதிரியார், திரு. சான்மார்சல் மற்றும் சிலர் கோடிட்டுக் காட்டியுள்ளனர். இதற்குக் கடுமையான எதிர்ப்பு நிலவிய போதிலும் அண்மைக் காலமாகக் கிடைத்து வரும் சான்றுகளும், ஆய்வுகளும் அவற்றை மெய்ப்பிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை உணர்த்துவதாய் உள்ளன.

சிந்துவெளி எழுத்துகளுக்குப் பின் நீண்ட நெடுங்காலம் என்ன வகையான எழுத்துகள் இருந்தன என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. அதற்குப் பின் வழங்கிய எழுத்தாக கி. மு. 4-5-ஆம் நூற்றாண்டளவினதாகக் கருதப்படும் தமிழ்நாட்டில் கிடைத்த பழந்தமிழ் எழுத்துக்களையே கூறலாம். இவை வடநாட்டில் வடமொழிக்காகத் தோன்றிய எழுத்து என்ற கருத்து நீண்ட காலமாக நிலவி வருகின்றது. எனினும் இவை தெற்கில் தமிழ்நாட்டில் தோன்றின என்பதற்கான சான்றுகளே ஆழமானவை. இச்சான்றுகளை ஆய்தல் தமிழ் எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதுவே மெய்மையான ஆய்வாக இருக்கும்.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதியை ஆண்ட மவுரியப் பேரரசனான அசோகன் தான் புத்த மதஞ் சார்ந்து அம்மதக் கருத்துக்களையும் அறங்களையும் பாறைகளிலும், கற்றூண்களிலும் வெட்டுவித்தான். இந்த கல்வெட்டுகளில் பிராமி (Brahmi) கரோசுட்டி (Karoshti) என்ற இருவகை எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் கரோசுட்டி இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. பிராமி வடமேற்குப்பகுதி தவிர்த்த மற்றை ஆட்சிப் பரப்பு முழுவதும் பயன்படுத்தப்பட்டது. இவ்விரு எழுத்துக்களையுமே கிரேக்க, சீன, பொனீசிய, ஆராமிய, எகிப்திய, செமிட்டிக் எழுத்துக்களில் இருந்து தோன்றியனவாக எழுத்தியலார் கருதி அதற்கான காரணங்களைத் தத்தம் நோக்கில் எடுத்து வைத்தனர். காலப் போக்கில் கிடைத்த அகப் புறச் சான்றுகளும் ஆய்வுகளும் கரோசுட்டி செமிடிக் எழுத்துக்களிலிருந்து உருவானது, பிராமி இந்தியாவில் தோன்றியது என்று மெய்ப்பிக்கின்றன.

பிராமி இந்தியாவில் தோன்றியது என்னும் கருத்து வலுப் பெற்றதனாலும், தொடக்க காலத்தில் இந்தியாவின் வடபகுதியில் முதன் முதலாகவும் பரவலாகவும் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பெற்றமையாலும் இது சிந்துவெளி எழுத்துக்களினின்று தோன்றியது என்றும் வேத மொழிக்காக வேதப்புலவர்களால் (வேத பண்டிதர்கள்) தோற்றுவிக்கப்பட்டதென்றும் கருதினர். மேலும் அசோகன் காலக் கல்வெட்டுகளே கண்டுபிடிப்பிலும், அளவிலும் முதன்மையாகத் திகழ்ந்தமையால் இவ்வெழுத்துக்கள் அசோகனால் தோற்றுவிக்கப்பட்டதென்றும் வலியுறுத்தப்பட்டது.

சிந்துவெளி எழுத்துக்கள் இன்னும் ஒலி எழுத்தாகப் படிக்கப்படாமையால் தமிழ் (அ) பிராமி சிந்துவெளி எழுத்தினின்று தோன்றியது எனுங் கருத்துக்குப் போதுமான வலிவு கிடைக்கவில்லை. வேத மொழியாளர்களால் படைக்கப்பட்டது எனில், கி. பி. 2-3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளில் வேத மொழியான சமசுகிருதம் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பயன்படுத்தப்படவில்லை. மேலும் சமசுகிருத மொழிக்கான கூட்டெழுத்துக்கள் போன்றவை மேற்படி கல்வெட்டுகளில் காணக் கிடைக்கவில்லை. அசோகன் காலக் கல்வெட்டுகளுக்கு முன்பே பிராமிக் கல்வெட்டுகள் கிடைப்பதால் இவை அசோகன் தோற்றுவிக்கப்பட்டது எனக் கூறவியலாது.[1] இதன் தோற்றத்திற்கான மூலம் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

---

1. Pandey R. B. Indian Palaeography, 1952, p. 19-31, Ojha G. H., Prachina Bharatiya Libi mala p. 3. Jayaswal E.I.P.I., JBORS, V. p. 550

பிராமி எழுத்துக்கள் தமிழ் மக்களால் (திராவிடம்) தோற்றுவிக்கப்பட்டு ஆரிய மக்களால் எடுத்துக்கொள்ளப் பட்டது என்ற கருத்தை முதன் முதலாக 1883-இல் திரு. எட்வார்டு தாமசு என்பவர் எடுத்துரைத்தார். அவர் காலத்தில் தமிழ் நாட்டில் பழங்கல்வெட்டுகள் ஏதும் கண்டறியப்படவில்லை. அதனால் பிராமி கல்வெட்டுகள் தெற்கில் கிடைக்காமையாலும் அவ்வெழுத்து பாகதம் ஒழிந்த வேறு எந்த மொழியிலும் எழுதப்படாமையாலும் இது வட நாட்டது என்றும், தென் நாட்டது அன்று என மறுக்கப்பட்டும் வந்தது.

1906-ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை தமிழ்நாட்டில் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்ட கல்வெட்டுகள் நாளும் கிடைத்து வருகின்றன. இதனிடையே வடமொழியும் தென்மொழியும் நன்கு கற்று வல்லவரான திரு. தி. நா. சுப்பிரமணியம் 1957-இல் தமிழ் எழுத்தியல்[1] என்ற தமது கட்டுரையில் பிராமி எழுத்துக்கள் தமிழ் மொழிக்காகத் தோன்றி பின்னர் பிராகிருத் மொழிக்கு வேண்டியவாறு உருவாக்கிக் கொள்ளப்பட்டது என விவரித்தார். அதன் பின்னர் புதிய கண்டு பிடிப்புகளும் சான்றுகளும் தெற்கில் தமிழ் மொழிக்காகத் தான் தோன்றியது என்ற கருத்துக்கு ஏந்தாகக் கிடைத்தும், ஆய்வாளர்கள் பலர் பிராமி வடமொழிக்காக வடக்கில் தோன்றியது என்னும் கொள்கையை விட முடியாமையாலும், தமிழின்கண் இத்தகைய ஒரு தோற்றத்தை ஏற்றுக்கொள்ள இயலாமையாலும் இன்னும் பிராமி வடக்கில் தோன்றியதே என்னும் கருத்துக்கு அரண் செய்து வருகின்றனர்.

1. சுப்பிரமணியம், தி. நா., தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி 2, பக். 1609

பேராட்சியும் ஊராட்சியும் 11

தமிழகத்தில் சங்க காலம் முதல் பேராட்சியும், ஊராட்சியும் தனித் தன்மையுடனும் தங்களுக்கேயுரிய அதிகாரங்களுடனும் செம்மையாகச் செயல்பட்டு வந்துள்ளன. இவ்விரு ஆட்சி அமைப்பினையும், அவை இயங்கிய முறையினையும் சங்க இலக்கியங்கள், வெளிநாட்டார் குறிப்புகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வகை ஆட்சி அமைப்பின் மூலமாக சமூகத்திற்குத் தேவையான நீதி, நீர்ப்பாசனம், பொருளாதாரம், கல்வி போன்றவற்றை முறையாக மக்களுக்கு வழங்க முடிந்தது. ஆட்சி அமைப்பில் காலத்திற்கேற்ப மாற்றமும், வளர்ச்சியும் இருந்துள்ளது என்பதைக் காலவாரியான ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

சங்க காலம்

சங்க காலத்தில் அரசியல் அமைப்பினில் பெரும் நிலப் பரப்பை சேர சோழ பாண்டிய மன்னர்களும், குறுகிய நிலப் பரப்புக்களை குறுநில மன்னர் களும் ஆண்டு வந்த காரணத்தால் பேராட்சி, ஊராட்சி என்னும் அமைப்புகள் ஏற்படக் காரணமாயிருந்தனர் என்று கூறலாம்.

நாட்டின் தலைவனாக மன்னனே ஆட்சி செய்தான். நாடுகள் பல ஊர்களைத் தன்னகத்தேக் கொண்டிருந்தன. சான்றாக; பாரியின் நாடு முன்னூறு ஊர்களைக் கொண்டு விளங்கியது.[1]

மேலும் அவ்வூர்களும் சிறூர்[2], பேரூர்[3], பட்டினம்[4], பாக்கம்[5] என்று வகைப்படுத்தப் பட்டிருந்தன. பெரிய நகரங்களும், முன்னூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்த ஊர்களும் பேரூர் என்றழைக்கப்பட்டன. துறைமுக நகரங்கள் பட்டினங்கள் என்றழைக்கப்பட்டன. கடற்கரையை ஒட்டியிருந்த ஊர்கள் பாக்கம் என்று வழங்கப்பட்டன. மருத நிலப் பகுதியில் அமைந்திருந்த ஊர்கள் சிறூர், பேரூர் என்றும், மலையையொட்டி அமைந்திருந்த வாழ்விடங்கள் குறிஞ்சியென்றும், முல்லை நிலப்பகுதியில் இருந்த வாழ்விடங்கள் முல்லை அல்லது காடு என்ற சொல்லோடு முடிவதாகவும் நெய்தல் நிலப்பகுதியில் அமைந்திருந்த வாழ்விடங்கள் பாக்கம் என்றும் பெயர் பெற்றிருந்தன.

தலைநகரங்கள், முக்கியப் பேரூர்கள், துறைமுகப் பட்டினங்கள் அரசனது அதிகாரத் திற்கு உட்பட்டிருந்தன. இவ்விடங்களில் அரசனின் உரிமைச் சுற்றமும், அதிகாரிகளும் இருந்தனர்.

---

1. புறம் - 110
2. பட்டினப்பாலை - வரி - 28 புறம் - 170
3. நெடுநல்வாடை - வரி-29
4. சிறுபாணாற்றுப்படை - வரி - 153
5. பட்டினப்பாலை - வரி - 27

பேராட்சி

பேராட்சியின் தலைவனாக வீற்றிருந்த மன்னன் நீதி வழுவாது முறையாக ஆட்சி செய்தான். நீதியைக் காத்தல் என்பதை அரசன் தன் தலையாய பணியாகக் கொண்டிருந்தான்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்'[1]

என்பது வள்ளுவம். முறை செய்து காப்பதற்கு முறையான ஆட்சி தேவை. இவ்வாட்சி முறை தமிழகத்துள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைக்கு வந்துவிட்டது என்பது தெளிவு.

'அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறை வேண்டும் பொழுது எளியோன்'[2]

ஆக மன்னன் . இருத்தல் வேண்டும் என்ற புறநானூற்றுப் பாடலுக்கு ஏற்ப சிலம்பு அமைந்துள்ளது

மன்னன் மக்களுக்கு இறை என்று இருந்தாலும், அவன் முறை தவறுகின்றபோது மக்கள் நேரிடையாகத் தொடர்பு கொள்ளும் எளிய நிலையில் இருந்தான் என்பதும், வழக்கை ஆராயாது தீர்ப்பளித்தால் 'தேராமன்னா'[3] என்று கூறி அவனைத் தட்டிக் கேட்கவும், வழக்காடவும் உரிமை இருந்தது. அவ்வகையில் ஒரு பெண் தன் காற்சிலம்பை ஆவணமாக்கி வழக்காடிய நிகழ்ச்சியும், மன்னன் தனது தவறுணர்ந்த நிகழ்ச்சியும் சிலப்பதிகாரத்தின் வழி அறிய முடிகின்றது.

இதன் மூலம் அக்காலத்து நீதி கேட்கும் முறை தெரிய வருகிறது. இவ்வழக்கு மன்னனோடு தொடர்புடையது ஆதலின் மன்னனிடமே நேரிடையாகக் கோரப்பட்டது என்பது விளங்கும்.

மன்னன், ஆட்சி முறையில் முறை தவறித் தடம் மாறும் போது; அவனுக்கு அறிவுரை கூறி நேர்வழிப் படுத்த ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் சான்றோர் அடங்கிய குழு இருந்தன. அவ்வாறு நல்வழிப்படுத்த சான்றோரில்லாத அரசு தாமே கெடும் என்பதை வள்ளுவர்;

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப் பாரிலானும் கெடும்'[4]

என்று குறிப்பிடுகின்றார்.

நீதி

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு'[5]

என அரசின் கடமைகளுள் இன்றியமையாததாக மக்களிடம் முறையாக வரி விதித்துப் பொருள் ஈட்டி; பிறர் கவரா வண்ணமும் தீயவழிகளில் செலவிடப்படாமலும் காத்து அச்செல்வத்தை முறையாக வகுத்து வழங்க வேண்டியதை அருமையாகக் குறிப்பிடுகின்றது.

புறப்பாடல் ஒன்று இக்கருத்தினை உள்ளடக்கி மிகத் தெளிவாகக் கூறுகின்றது.[6] பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுரை கூறும் போது; வருகின்ற வருவாய் சிறியதாயிருப்பினும் அது முறையாகச் செலவு செய்தால் நாட்டவர் அனைவருக்கும் பயனு

---

1. திருக்குறள் - 388
2. புறம்-34 வரி 14-15
3. சிலம்பு - ஊர் சூழ்வரி - வரி-50
4. குறள் - 448
5. குறள் - 385
6. புறம் - 184

டையதாயிருக்கும். இன்றேல் கோடிப் பொருள் சேகரித்தாலும் முறையோடு வகுக்காவிடில் 'யானை புக்க புலம் போல'[1] யார்க்கும் பயனின்றி நாடு பெரிதும் துயருறும் என்பதைக் கூறுகின்றார். திருக்குறளும் இதே கருத்தை வலியுறுத்துகிறது. [478]

நீர்ப்பாசனம்

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'[2] என்பதை உணர்ந்த மன்னன், அணைகட்டி நீர் தேக்கி, வளம் பெருக்கி மக்கள் நலம் பெற ஆட்சி செய்தான். இதனை;

'நீர் இன்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே
. . . . , ...
நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருக'[3]

என்ற புறநானூற்றுப் பாடல் நீரின் தேவையைப் படம் பிடித்துக் காட்டுவனவாய் உள்ளது.

குளம் போன்ற நீர்நிலைகள் உருவாக்கப் பட்டு பாசனம் செய்யப்பட்டதை புறப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன.[4] அவற்றில் ஒன்று;

'ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்'

என்று குளப்பாசனத்தில் விளைந்த நெல் மிகுதியைக் காட்டுகின்றது. இதனைத் தவிர்த்து அருவி,[5] ஆறு,[6] குட்டம்,[7] கேணி,[8] பொய்கை,[9] போன்ற நீர் நிலைகளைத் தெரிவிக்கின்றன பல புறப்பாடல்கள்.

கல்வி

சங்ககால மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் மொழி வளர சிறந்த தொண்டாற்றி இருக்கின்றனர். சங்க இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாகத் தமிழ்ச்சங்கம் அமைத்தனர். மன்னர்கள் பலரும் அறிவாற்றல் மிக்கவராயும் தமிழ்க் கவிஞராகவும் விளங்கியிருக்கின்றனர் என்பதைச் சங்கப் பாடல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன

பாண்டியன் அறிவுடைநம்பி,[10] ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,[11] தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்,[12] சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய

1. புறம் - 184
2. குறள் - 1031
3. புறம் – 18
4. புறம் - 142, 376, 305
5. புறம் - 9
6. புறம் - 246
7. மேலது - 364
8. மேலது - 200, 246
9. மேலது - 188
10. மேலது - 183
11. புறம் - 82
12. மேலது – 173

கிள்ளிவளவன்,[1] சோழன் நலங்கிள்ளி,[2] சோழன் நல்லுருத்திரன்,[3] சேரமான் கணைக்காலிரும்பொறை,[4] சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை,[5] ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்[6] என்று பல மன்னர்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கி பாடல் இயற்றும் வல்லமையுடையோராய் இருந்தனர் என்பதை அறியலாம்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்;

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே'[7]

என்று குறிப்பதிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே மன்னன் கல்வியின் அவசியத்தை பெரிதும் உணர்ந்தவனாய் இருந்தான் என்பதும், தம் குடிமக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற பெருவிருப்பம் உடையானாய் இருந்தான் என்பதையும் நாம் அறிய முடிகிறது

ஒக்கூர் மாசாத்தியார்,[8] ஔவையார்,[9] காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்[10] காவற்பெண்டு,[11] பெருங்கோப்பெண்டு,[12] மாறோகத்து நப்பசலையார்[13] போன்ற பல பெண்பாற் புலவர்கள் இருந்ததின் மூலம் அன்றைய நிலையில் பெண்களும் கல்வி கற்பதற்குரிய சூழ்நிலை இருந்தது என்பதையும், பெண்கல்விக்கு ஊக்கமளிக்கப்பட்டது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இது மட்டுமா! பாரி மகளிர் பாடிய கையறு நிலைப் பாடல்[14] கற்பாரைக் கரைத்து விடும் பாங்கினது.

தூதும் வணிகமும்

பாண்டிய மன்னன் ஒருவன் கிரேக்க நாட்டு அகஸ்டஸ் சீசரின் அவைக்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பினான். அந்த தூதுக்குழு அகஸ்டஸ் சீசருக்கு அளிக்கவென்று பல பரிசுப் பொருட்களையும் கொண்டு சென்றது. இக்குழுவினருடன் 'சோபிஸ்டு' ஒருவனும் சென்றான்.[15] இவன் தூதுக்குழுவை மன்னனுக்கு அறிமுகப்படுத்துபவனாக இருந்திருக்கலாம்.

இதனால் அந்நிய நாட்டவருடன் கொண்ட தொடர்பு அதிகரித்தது என்பதும் வாணிபம் செழித்தோங்கி அரசுக்கு வருமானம் பெருகியதையும் அறியலாம். இந்நாட்டில் இருந்து வெளிநாட்டிற்குப் பல பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை அகநானூறு;

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்'[16]

எனக் குறிப்பிடுகின்றது.

---

1. மேலது - 73, 75
2. மேலது - 190
3. மேலது - 75
4. மேலது - 245
5. மேலது - 71
6. மேலது - 183
7. மேலது - 279
8. மேலது - 87-104, 140, 187, மேலும் பல
9. மேலது - 278
10. மேலது - 86
11. மேலது - 246
12. மேலது - 37, 38, 126, 174, 226, 280, 383
13. மேலது - 112
14. K A. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்-ப. 77
15. அகம் - 149 வரி-9
16. புறம் - 56

யவன நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுள் 'மது' சிறப்பிடம் பெறுவதைப் புறநானூறு;

'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனை கலத்து ஏந்தி'[1]

எனக் குறிப்பதிலிருந்து அறியலாம். மேலும் தமிழகத்தில் பல கடற்கரை நகரங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் ரோமானியரோடு கொண்ட வாணிபத் தொடர்புகளை எடுத்துக்காட்டுவனவாய் அமைந்துள்ளன.

'மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கை அம் பெருந்துறை முத்தினன்ன[2]

என்ற அகப்பாடல் வரிகள் மூலமாகக் கொற்கை, பெருந்துறைமுகப்பட்டினமாக விளங்கிய தையும் கொற்கை முத்துக்கள் பெயர் பெற்று விளங்கிய பாங்கினையும் அறிய முடிகின்றது. கொற்கைத் துறைமுகத்தில் சிதறிக்கிடக்கும் முத்துக்கள் குதிரையின் கால்களை இடறும் அளவுக்கு[3] மிகுதியாக இருந்தன என்பதைச் சிறப்பித்துக் கூறுகின்றது அகநானூறு

இதுவரை நடத்தப்பெற்ற அகழாய்வுகளில் சங்கக் காசுகள் பல கிடைத்துள்ளன. இதனால் சங்க காலத்தில் காசுகளை அச்சடித்து வெளியிட்டதை சதுர வடிவக் காசுகள் உறுதி செய்கின்றன.[4] மேலும் அழகன் குளம், கரூர், காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற பழம்பெரும் நகரங்களில் இவ்வகைக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதும் கண்டு நோக்கத் தக்கதாகும்.

காசுகள் அச்சடிக்கும் இடம் 'அக்கசாலை' எனப்பட்டது. அவ்விடங்கள் மதுரையுள் இருந்ததைச் சிலம்பின் மூலமாக அறியலாம்.[5] இதே போன்று கொற்கையின் அருகே அமைந்துள்ள 'அக்கசாலை' என்ற ஊரும் குறிப்பிடத்தக்கது

நகரமைப்பு

தலைநகரங்களாக விளங்கிய பேரூர்களைக் கோட்டை கட்டி வேந்தர்களும், குறுநில மன்னர்களும் காத்து வந்தனர்.[6] அரசனால் உருவாக்கப்பட்ட அந்நகரங்கள் வில் அம்புடன் விளக்கேந்திய காவலர்களால் காவல் காக்கப்பட்டு வந்ததும்,[7] அந்நகரங்களைத் தூய்மை செய்யப் பணியாளர்கள் இருந்தனர்[8] என்பதும் சங்கப்பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

நகரங்கள் சேறு கொண்டு மெழுகி நன்கு பராமரிக்கப்பட்டதைப் பெரும்பாணாற்றுப் படை தெரிவிக்கின்றது.[9] கோயிலை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட முறையான நகர் காஞ்சி என்பதைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துக்கூறுகின்றது.[10]

---

1. அகம் – 130 வரி - 6-11
2. TAMIL COINS - A STUDY p. 76
3. சிலம்பு - மதுரைக் காண்டம் – வரி-431
4. நெடுநல்வாடை - வரி-49
5. புறம் - 37
6. மதுரைக் காஞ்சி - வரி-637-647
7. பெரும்பாணாற்றுப்படை - வரி-298
8. மேலது வரி-402-405
9. சிறுபாணாற்றுப்படை - வரி-41-83
10. மேலது

கோயில் தாமரை மொட்டைப் போன்றும், அதைச் சுற்றியமைந்த தெருக்கள் தாமரையின் இதழ்கள் போன்றும் அமைந்து இருந்தன என்பதைத் தெரிவிக்கின்றது. இதே போன்று வஞ்சி,[1] மதுரை,[2] உறந்தை[3] போன்ற நகர்களும் சிறப்புற அமைக்கப்பட்டிருந்தன என்பதும் அறிய முடிகின்றது.

நகர்களில் பல்வகையான தெருக்கள் இருந்ததாகத் தெரிகிறது. அங்காடித்தெரு,[4] தொழிலாளர் தெரு,[5] நெடுந்தெரு,[6] பரதவர் தெரு,[7] போன்ற பல தெருக்கள் ஆறு கிடந்ததைப் போல அகன்றிருந்ததையும் உணர முடிகின்றது.[8]

இதே போன்று பட்டினம்,[9] பாக்கம்,[10] மருவூர்[11] போன்ற துறைமுக நகர்களும் மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்களாகக் காட்சி தந்தன.[12] இதிலிருந்து தமிழர்கள் நகரமைப்பில் கைதேர்ந்தவர்களாக விளங்கினர் என்பதையும் அறிய முடிகின்றது.

ஊராட்சி

ஊர், பேரூர் இவற்றின் ஆட்சிமுறையினை நிர்வகிக்க 'அவைகள்' இருந்தன. 'அவைகள்' இருந்ததைப் பழம் பெரும் இலக்கணமாகிய தொல்காப்பியம்; 'எண்வகை நுதலிய அவையத்தானும்'[13] என்று எண் வகைப்பட்ட அவை இருந்ததைக் குறிப்பிடுகின்றது. எண் வகை அவையும் எட்டு வகையான பணிகளை மேற்கொண்டதாகத் தெரிகின்றது.

ஒவ்வொரு நகரத்திலும் ஊரிலும் மக்கள் கூடி; தங்கள் ஊர்க்காரியங்களைக் கவனிப்பதற்குரிய மன்றம்,[14] பொதியில்,[15] அம்பலம்[16] என்ற பொதுவிடங்கள் இருந்தன. இப்பொதுவிடம் 'அவையம்'[17] என்று அழைக்கப்பட்டது.

இவ்வகை அறங்கூறும் அவைகள் தமிழகம் முழுவதும் பரவலாக இருந்ததைச் சங்க இலக்கியங்கள் உறுதி செய்கின்றன.[18] அவ்வவை; அச்சமின்றி நேர்மையாகச் செயல்பட வேண்டும் என்பதை மதுரைக்காஞ்சி;

---

1. மேலது
2. மதுரைக்காஞ்சி - 395
3. மேலது - 510-520
4. மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்
   ஆறுகிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்
   நெடுநல் வாடை - வரி - 29-30
5. மாடம் ஓங்கிய மணல்மலி மறுகின்
   பரதர் மலிந்த பல்வேறு தெருவின்
   பெரும்பாணாற்றுப்படை - 322-323
6. நெடுநல்வாடை - வரி-30
7. முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
   பட்டினப்பாலை - வரி-218
8. மேலது வரி-27 மலைபடுகடாம் - வரி-162
9. நெடுநல்வாடை - வரி-29'30
10. தொல்காப்பியம்
11. புறம் - 283
12. புறம் - 138, 167, 251, 322, 373, 377
13. சீவகசிந்தாமணி - 2112
14. புறம் - 71, 157, 224, 230, 286
15. மதுரைக்காஞ்சி . வரி-489-493
16. புறம் - 71
17. மதுரைக்காஞ்சி - 507-510
18. மேலது வரி - 101-102

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோல் அன்ன செம்மைத் தாகி
சிறந்த கொள்கை அறங்கூறு அவையம்'[1]

என்று கூறுகின்றது.

மன்னன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் கூறும் வெஞ்சினப் பாடலுள்; 'அவையம்' அறநிலை திரியாது இயங்க வேண்டியது எத்துணை முக்கியானது என்பதையும், தவறாகத் தீர்ப்புக் கூறல் நல்லாட்சிக்குப் பெருங்கேடு என்பதையும் எடுத்துக் கூறுகின்றான்.

'அறனில் திரியா அன்பின் அவையத்து
திறனில் ஒருவனை நாட்டி, முறைதிரிந்து
மெலிகோல் செய்தேனாகுக'[2]

என்பது அப்பாடல் வரிகளாகும். இதிலிருந்து அவைத் தலைவனை நியமிக்கும் பொறுப்பை மன்னவனே மேற்கொண்டான் என்பதையும் அறிய முடிகின்றது.

அவை இருந்ததைப் போன்றே 'நாற் பெருங்குழுவும்'[3] 'இருபெயர்ப் பேராயமும்'[4] இருந்ததை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது.

ஒவ்வொரு ஊரும் பலகுடிகளை உடைய கூட்டாகச் சங்க காலத்தில் இருந்தது. இதனால் சங்க காலத்தைக் 'குடிநிறைச் சமுதாயம்' என்றும், 'குடிவழிச் சமுதாயம்' என்றும் அழைத்தனர்.[5]

குடிகள் இன அடிப்படையில் ஒன்றாகவும், தொழிலடிப்படையில் வெவ்வேறாகவும் பிரிந்திருந்தன. ஒவ்வொரு ஊருக்கும் அக்குடிகளின் மூத்த தலைவனாகவும், ஊராளும் நாயக னாகவும் விளங்கியவன் 'கிழான்' என்று அழைக்கப்பட்டான்.

'கிழான்' என்பதற்கு உரிமை உடையவன் என்பது பொருள்[6]. ஒவ்வொரு ஊரும் தமக்குரியது, தமது ஆளுகைக்கு உட்பட்டது என்று எண்ணும் வகையில் இப்பெயரிட்டு அழைக்கப்பட்டனர்.

சங்கப் பாடல்களில்; இவர்களோடுத் தொடர்புடைய ஊரின் பெயரோடு சேர்த்து அழைக்கப்பட்ட பல கிழார்களின் பெயர்களைக் காண முடிகின்றது.[7] ஊருக்கும் இவர்களுக்கும் இருந்த தொடர்பை இது காட்டுகின்றது.

சங்க கால ஊராட்சி முறையில் இவர்களின் பங்கு பெரிதென்றும், ஊர்மக்களுக்கும் அரசனுக்கும் இவர்களே தொடர்பாளர்களாக இருந்தனர் என்றும் கூறலாம். அரசு இவர்கள் மூலமாக ஊரிலிருந்து வரி வசூல் செய்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

---

1. வே. வேதாசலம்,
   இலக்கியங்கள் கல்வெட்டுகள் காட்டும் பாண்டியர் காலச் சமுதாயமும் பண்பாடும்
   —ஆய்வேடு
2. தமிழ் லெக்சிகன் - தொகுதி-II பக். 836-37
3. அகம் - 64, 202
   புறம் - 154, 156
4. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு - பக். 242
5. மேலது
6. MINAKSHI – Administration and Social Life under the Pallavas p. 54
7. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு பக். 223

சங்க காலத்திலும், அதன் பின்னர் வந்த இடைக்காலத்திலும் அரசன் ஊர்மக்களோடு நேரிடையாகத் தொடர்பு கொள்ள வில்லை என்றே கருத வேண்டியுள்ளது வரியைப் பெற்றுக் கொண்ட மன்னன், நிருவாகத் திறனை 'அவை' பார்த்துக் கொள்ளும்படி விட்டு விட்டான் என்பது தெரிகிறது. இதன் மூலம் ஊராட்சி முறை ஓரளவு தன்னாட்சி பெற்றிருந்தது எனக் கூறலாம்.

இருப்பினும் அவையின் நடவடிக்கை குறித்து முழுமையான செய்திகளை இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ள இயலவில்லை. எனினும் பின்னர் வந்த மன்னர்களின் அவைகள் சிறப்புற இயங்க இவை அடிப்படையாக இருந்தன எனலாம்.

பல்லவர் காலம்

பேரரட்சி

பல்லவப் பெருநாடுகள் மண்டலங்களாகவும், கோட்டங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தன. பல்லவர் ஆண்ட தமிழ்நாட்டில் கோட்டம், நாடு, ஊர் என்ற பிரிவுகள் காணப்படுகின்றன. தமக்கு முன்பிருந்த மன்னர்கள் தொண்டை நாட்டுப் பிரிவுக்குக் கொண்டிருந்த பெயர்களை அப்படியே பல்லவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

பல்லவர்களுடைய செப்பேட்டின் வழி அவர்களுடைய அரசுமுறை, தந்தை, மூத்த மகன் என்ற உரிமை முறையில் வருகின்றது. அரசனுக்கு வாரிசில்லாவிடில் பொறுப்பான அதிகாரிகள் ஒன்று கூடி அரசு மரபில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து முடிபுனைந்தார்கள்.

அரச ஆணைகள் செயல்படுவதற்கு அரசு முத்திரைகள் இன்றியமையாததாய் இருந்தன. அவ்வரசு முத்திரைகள் ஆணைகளிலும், காசுகளிலும் இடம் பெற்றிருந்தன. ஒவ்வொரு அரச குலத்திற்கும் ஒரு சின்னம் விளங்குவது போல பல்லவர்களுக்கு 'நந்தி' இலச்சினை அரச முத்திரையாக விளங்கிற்று.[1]

இருபக்கம் உயர்ந்த விளக்குகளுக்கு இடையே படுத்த நிலையில் நந்தி காணப் படுவதே பல்லவர் முத்திரையாகும். சிலவற்றில் சிங்க இலச்சினையும் காணப்படுகின்றது. இவை போர்களத்திலிருந்து வெளியிடப்பட்ட முத்திரைகள் எனக் கருதுகின்றனர்.[2] பல்லவர் கொடியிலும் நந்தி இலச்சினை பொறிக்கப்பட்டிருந்தது.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் நாவுக்கரசரை அழைத்து வர தம் அமைச்சரை அனுப்பியதாகப் பெரிய புராணம் குறிப்பிடுகின்றது[3] இதன் மூலம் அக்காலத்தில் அமைச்சர் குழு மன்னருக்கு உதவியாக இருந்ததை அறியமுடிகின்றது.

கல்வெட்டுக்களில் தமிழ்ப்பேரரையன், தென்னவன் பிரம்ம மாராயன்,[4] என்பன போன்ற பட்டங்கள் அலுவலர்களுக்குரியவையாகக் காணப்படுகின்றன. 'உள்படு கருமத் தலைவர்',[5] 'வாயில் கேட்போர்'[6] 'கீழ் வாயில் கேட்போர்'[7] என்ற பட்டப் பெயர்களில் அதிகாரிகள் இருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

---

1. MINAKSHI - Administration and Social Life under the Pallavas p. 63
2. மேலது
3. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு ப. 224
4. மேலது
5. மேலது
6. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு ப. 237
7. MINAKSHI - Administration and Social Life under the Pallavas p. 68

இவர்களைத் தவிர பண்டாரம்,[1] பொற்கொல்லர்,[2] பட்டய எழுத்தாளர்,[3] புலவர்கள்[4] போன்றோர் இருந்தனர். பொற்கொல்லர் அணிகலன்கள் மட்டும் செய்யாமல் அரசு ஆணைகளையும் பட்டய மாக்கித் தந்தனர். அவர்கள் 'பெருந்தட்டான்'[5] என்றழைக்கப்பட்டனர்.

அரசனுடைய மெய்ப்புகழைப் பாடும் புலவர்கள் அரசவையில் வீற்றிருந்தனர். இவர்களே கல்வெட்டிலும், செப்பேட்டிலுமுள்ள வடமொழி மற்றும் தமிழ்ப் பகுதிகளை எழுதினர். உதயேந்திரம் செப்பேட்டின் தமிழ்ப்பகுதியை எழுதியவன் 'பரமேசுவரன்' என்பவனாவான்,

படை அலுவலர்களாகச் சேனைத் தலைவர்கள் குறிப்பிடப்பட்டனர். 'வாதாபி கொண்ட சிறுதொண்ட நாயனார்'. சிறந்த சேனைத் தலைவராக விளங்கினார்.[6] இரண்டாம் நந்திவர்மன் காலத்திய 'உதயச் சந்திரனும்',[7] மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் பூதி விக்கிரம கேசரி'[8]யும் சிறந்த படைத் தளபதிகளாக விளங்கினர் என்பதை அறியலாம்.

நீதி

பல்லவ மன்னர்களின் நேரடிப் பார்வையில் நீதித்துறை விளங்கியது. 'தர்மாசனம். என்ற அமைப்பு; சொத்துக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அமைப்பாக விளங்கிற்று. இதன் தலைவன் மன்னனேயாவான்.[9]

குற்ற வழக்குகளை விசாரிக்க 'அதிகரணம்' என்ற அமைப்பு இருந்தது. அதன் தலைவர் 'அதிகரண போசகர்' என அழைக்கப்பட்டார்.[10]

அரசு நிர்வாகத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு வருவாய் தேவைப்பட்டது அவ்வருவாய் மக்களிடமிருந்து வரியாகப் பெறப்பட்டது. அவ்வகையில் பல்லவ நாட்டில் பல வகையான வரிகள் நடைமுறையிலிருந்தன என்பதை அறிய முடிகின்றது.[11]

அரசின் வருவாயில் நிலவரியே மிக முக்கிய இடம் பெற்றிருந்தது. இதேபோன்று கால்நடைகளை வளர்ப்போர்; புரோகிதர், வேட்கோவர், கொல்லர், வண்ணார், ஆடை விற்போர், ஆடை நெய்வோர், ஓடக்காரர், தரகர், செக்கார், நூல் விற்போர், வலைஞர், கள் இறக்குவோர், நெய் விற்போர், மணவீட்டார் போன்ற பல தரப்பட்ட மக்களும் ஒரு குறிப்பிட்ட வரியை செலுத்தி வந்தனர் என்பது பல செப்பேடுகளால் அறிய முடிகின்றது.[12]

கோயில் நிலங்கள் வரிவிலக்கு அளிக்கப்பெற்று தேவதான, பிரமதேயங்களாக வழங்கப் பட்டன.[13] வரிவிலக்களிக்கும் உரிமை மன்னனுக்கிருந்தது.

---

1. மேலது ப. 226
2. மேலது
3. MINAKSHI - Administration and Social Life under the Pallavas p. 77
4. மேலது.
5. சிற்றூர் செப்பேடு - 7-ஆவது ஏடு ப. 2 வரி 4-5
   'நம்பன் அபராஜிதப் பெருந்தட்டான்'
6. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு ப. 226
7. மேலது ப. 227
8. மேலது
9. மேலது
10. மேலது ப. 225
11. மேலது ப. 224
12. MINAKSHI – Administration and Social Life under the Pallavas pp. 88 to 105
13. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு ப. 236

அரசின் முக்கியப் பணிகளுள் நாணயங்கள் அச்சடிக்கும் பணியும் ஒன்றாகும். இதற்காக அரசாங்க அக்கசாலைகள் பயன்பட்டுவந்தன. பல்லவர்கள் பொன், வெள்ளி, செம்பு மற்றும் ஈயம் ஆகிய உலோகங்களில் செய்யப்பட்ட நாணயங்களைப் புழக்கத்தில் கொண்டனர். அவற்றில் நந்தி, விளக்கு, கொடிமரம், சங்கு சக்கரம், ஆமை, பாய்மரம், நண்டு போன்ற பல உருவங்களை அச்சிட்டனர்.[1]

மகேந்திரவர்மன், நந்திவர்மன், இராசசிம்மன் போன்ற பல மன்னர்கள் காசுகளை வெளியிட்டுள்ளனர். 'ஸ்ரீபர, ஸ்ரீநிதி, மானபர, சித்ர' போன்ற சொற்களும் காசுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.[2]

இவற்றைத்தவிர எழுத்துகளோடு கூடிய வேறு சில பல்லவர் காலக் காசுகளும் அண்மைக் காலத்தே தெரியவந்துள்ளன. அவற்றில் 'வபு', 'லக்ஷித', 'பரமேஸ்வர' 'பகாபிடுகு' என எழுதப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளும் பழங்காசு, துளையிட்ட செப்பொன், கழஞ்சு, காசு, மாடை என்பன போன்ற காசுகள் தொடர்பான சொற்களைப் பயன்படுத்துகின்றன.[3] மேலும் காணம், பொன், பணம் போன்ற சொற்களும் காசுகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன எனத் தெரியவருகிறது.

வணிகம்

உள்நாட்டு வணிகத்தையும் வெளிநாட்டு வணிகத்தையும் பெருக்க மன்னனின் பணி இன்றியமையாததாகும். பல்லவர் பிற நாட்டவரோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். சிறந்த கடற்கரை நகரான மாமல்லையில் இருந்தும், சிறந்த துறைமுகமான நாகையிலிருந்தும், சிறந்த துறைமுகப்பட்டினமான காவிரிப்பூம்பட்டினத்திலிருந்தும் வணிகப் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்ததை அறியமுடிகின்றது.[4]

மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டு ஒன்று சயாம் நாட்டிலுள்ளது. அக்கல்வெட்டு; கடல் கடந்த வணிகத்தில் பல்லவர்கள் சிறந்தோங்கியிருந்ததைக் குறிப்பிடுகின்றது.[5]

வெளிநாட்டார் குறிப்பின் வழிச் சீனத் தொடர்பு நன்கு விளங்குகின்றது. இராசசிம்மன் என்ற பட்டப்பெயருடன் ஆட்சி செய்த இரண்டாம் நரசிம்ம பல்லவன் கி.பி. 720இல் சீன நாட்டிற்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பினான்.[6] அவர்களிடம் சீன மன்னனுக்குச் சொல்லும் செய்தியாகத் தான் அராபிய, திபேத்தியருடன் போர் செய்யப் படை அனுப்பவுள்ளதாகவும் அப்படைக்கும், சீன மன்னன் பெயரில் கட்ட உள்ள கோயிலுக்கும் பெயர் சூட்டக் கேட்டுக் கொண்டான். அவ்வாறே சீன மன்னனும் தன் தூதுவனை அனுப்பித் தன் ஒப்புதலை வழங்கினான் என்பதையும் அறிய முடிகின்றது.

கல்வி

பல்லவ அரசர்கள் கற்றவர்களாகவும், தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்லுநர்களாகவும் இருந்தனர். இரண்டாம் நந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன், அபராஜிதன் ஆகியோர் தமிழறிஞர்களாக விளங்கினர். இராசசிம்மன் சைவ சித்தாந்தத்தில்

---

1. C. MINAKSHI - Administration and Social Life under the Pallavas p. 88
2. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு ப. 242
3. மேலது ப. 243
4. நடன. காசிநாதன், தமிழர் காசு இயல், பக். 55, 56, 58
5. மேலது ப. 57
6. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, ப. 245

சிறந்தவனாக விளங்கினான்.[1] அரசனைப் போலவே அரசியரும் கல்வியில் சிறந்திருந்தனர். எடுத்துக்காட்டாக; 'மாறம் பாவையார்' 'பிருதிவி மாணிக்கம்' ஆகியோரைக் குறிப்பிடலாம்.[2]

காஞ்சியிலிருந்த கல்லூரி உலகப் புகழ் பெற்றதாகக் கருதப்பட்டது. இது கி.பி. 4,5ஆம் நூற்றாண்டிலேயே சிறப்புற்று விளங்கிற்று. அப்போதே நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி பயின்றதும், அரசனின் நேரடிக் கண்காணிப்பில் இருந்ததும் தெரிகிறது. 'தர்மபாலர்' இங்கு கல்வி கற்ற பின்தான் நாளந்தா பல்கலைக் கழகத்திற்குச் சென்றார் எனில் அதன் பெருமை நன்கு புலனாகும்.[3]

அப்பர் பெருமான் 'கல்வியில் கரையிலாக் காஞ்சி நகர்' என்று காஞ்சியின் கல்விப், பணியைப் பாராட்டுகின்றார்.[4] நிருபதுங்கன் காலத்தில் 'பாகூர்' என்ற இடத்தில் 18 வகையான கல்வி கற்பிக்கப்பட்டதையும், கல்லூரி சிறப்புற நடைபெற மன்னன் மார்த்தாண்டன் என்ற அதிகாரியின் கீழ் மூன்று சிற்றூர்களைத் தானமாகத் தந்தான் என்பதும் சிறப்பான செய்திகளாகும்.[5]

நீர்ப்பாசனம்

நாட்டு வளம் காத்த மன்னன், நிலவளம் காக்க நீர்வளம் பெருக்கினான். ஆறு, குளம், ஏரி போல்வன நீர்ப்பாசனத்திற்கு உதவின. பல்லவர் காலத்தில் பல ஏரிகள் உருவாக்கப்பட்டன. அவை அரசனின் பெயரையோ, இறந்த தலைவர்களின் பெயரையோ, நாட்டுப் பெயரையோ, ஊர்ப் பெயரையோ கொண்டு விளங்கின.

இராச தடாகம்[6] மகேந்திரத் தடாகம்,[7] சித்திரமேகத் தடாகம்,[8] பரமேசுவரத் தடாகம்,[9] வைரமேகத் தடாகம்,[10] வாலி ஏரி,[11] மார்ப்பிடுகு ஏரி,[12] வெள்ளேரி,[13] தும்பானேரி,[14] காவிரிப்பாக்கம் ஏரி, மருத நாட்டு ஏரி, கனவல்வித் தடாகம்[15] என்பன குறிப்பிடத்தக்கன.

இவற்றைத் தவிர பெரிய கிணறுகளும் வெட்டப்பட்டன. முத்தரையர் மரபைச் சார்ந்த 'கம்பன் அரையன்' என்பவன் நந்திவர்மன் காலத்தில் ஒரு பெருங்கிணற்றை உருவாக்கி அதற்கு 'மார்ப்பிடுகுப் பெருங்கிணறு' என்று பெயரிட்டான்.[16]

---

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு ப. 228, 207
2. மேலது ப. 228
3. கே. ஏ. நீலகண்டசாஸ்திரி, தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் ப. 28
4. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு ப. 206-7 பக். 153, 188, 261.
5. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு ப. 207, 215
6. மேலது பக். 254, 255
7. மேலது ப. 255
8. மேல ப. 256
9. மேலது ப. 238
10. மேலது
11. மேலது
12. மேலது
13. மேலது
14. மேலது
15. மேலது
16. மேலது

ஆறுகளிலிருந்து பல கால்வாய்களையும், சிற்றோடைகளையும் உருவாக்கி, நீர் வளத்தினைப் பெருக்கி, நீர்வளம் அற்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்ல வகை செய்தனர். அவ்வாறு வெட்டப்பட்ட வாய்க்கால்கள் 'ஆற்றுக்கால்'[1] 'நாட்டுக் கால்' என்ற பெயர்களில் திகழ்ந்தன.

நந்திவர்மன் காலத்தில் வாய்க்கால் ஒன்றை உருவாக்கி அதற்கு 'வைரமேகன் வாய்க்கால்'[2] என்ற பெயரிடப்பட்டது. கூரத்திலிருந்த பரமேசுவரத் தடாகத்துக்கு பாலாற்றிலிருந்து நீர் கொண்டு வரப் பெற்ற வாய்க்கால் 'பெரும்பிடுகு வாய்க்கால்' என்று பெயர் பெற்றது. இவற்றைத் தவிர 'ஸ்ரீதர வாய்க்கால்' 'கணபதி வாய்க்கால்' போன்ற பெயர்களிலும் வாய்க்கால்கள் இருந்தன.

பாலாறு, காவிரி போன்ற ஆறுகளிலிருந்து நீரைத் திருப்பி விடுவதற்காக இக்கால்களை அவர்கள் உருவாக்கியுள்ளனர். பெருங்கால்களிலிருந்து பிரியும் சிறுகால் களுக்கு 'குறங்கு' 'ஓடை' 'கிளைக்கால்' என்ற பெயர்கள் சுட்டப்பட்டன.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி நிலத்தை வளமாக்கி, பல்பயிர் விளைவித்து மக்களை வளப்படுத்தியதோடு மட்டும் அல்லாமல் தங்களையும் நாட்டையும் வளப்படுத் தினர் பல்லவர்கள் என்பது புலனாகிறது.

அளவைகள்

நீர்வளமிக்க நிலத்தை முறையாக அளந்து வரிவிதித்தலும் மன்னனின் கடமையாகும். அதனால் முறைப்படுத்தப்பட்ட அளவு கருவிகள் தேவைப்பட்டன. அம்முறைப்படுத்தப் பெற்ற அளவுகளைக் கொண்டு நிலங்கள் அளக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் செப்பேடுகள் வழி அறிய முடிகின்றது. நில அளவுகளையும், நில அளவைக் கணக்குகளையும் சிற்றூர், பேரூர் அரசு அலுவலர்கள் வைத்திருந்தனர்.

முறைப்படுத்தப்பட்ட அளவுகோல்கள் 'சாண்'[3] கணக்கில் கணக்கிடப்பட்டுப் பயன் பாட்டிலிருந்தன. அவை, 'நாற்சாண் கோல்'[4] 'எண்சாண்கோல்'[5] 'பன்னிருசாண் கோல்'[6] 'பதினாறு சாண்கோல்'[7] போன்ற அளவுகளில் விளங்கின.

நில அளவுப் பெயர்களாக, 'குழி'[8] 'பாடகம்' 'பட்டி'[9] 'வேலி'[10] போன்ற அளவை களும் இருந்தன. காட்டாக நிருபதுங்கன் கல்வெட்டு 27,000 குழி நிலம் பல்வேறு மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

இதே போன்று, பல்வேறு நிறுத்தல் அளவைகளும், முகத்தல் அளவைகளும்[11] பல்லவர் காலத்தில் வழக்கில் இருந்ததைக் கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகின்றது. 'பிடி',

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு.
2. மேலது
3. மேலது
4. ஈமலது
5. MINAKSHI - Administration and Social Life under the Pallavas - p. 126.
6. மேலது ப. 126
7. மேலது ப. 127
8. மேலது
9. மேலது
10. மேலது
11. .மேலது

உழக்கு, உரி, நாழி,[1] குறுணி, பதக்கு, காடி,[2] கலம் போன்றன பயன்பாட்டில் இருந்துள்ளன.[3]

முறை செய்யப்பட்ட நாழி என்ற அளவுக் கருவி 'கருநாழி'[4] பிழையா நாழி'[5] என்றழைக்கப்பட்டன. 'நால்வாய் நாழி',[6] 'நாராய நாழி',[7] 'மானாய நாழி'[8] எனவும், உழக்கு 'விடேல் விடுகு உழக்கு'[9] எனவும், உரி என்பது நிருபதுங்கனின் பட்டத்தரசி 'பிருதிவிமாதேவி'யின் பெயரில் அழைக்கப்பட்ட 'பிருதிவி மாணிக்க உரி'[10] எனவும் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

நிறுத்தல் அளவையில் முறைப்படுத்தப்பட்ட நிறைகல், 'விடேல் விடுகு' என்ற தந்திவர்மனின் பட்டப் பெயரில் அழைக்கப்பட்டிருந்தது.[11]

அரசுப் பெயர் கொண்டு விளங்கும் இவ்வளவு கருவிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. இவ்வாறு முறைப் படுத்தப்பட்ட அளவு கருவிகளால் அரசின் வருவாய் குறைவின்றிக் கிடைத்ததோடு மட்டு மின்றி, மக்களிடையே ஏற்பட்ட அளவு தொடர்பான பூசலைத் தவிர்க்கவும் பேருதவியாய் இருந்தது.

ஊராட்சி

ஊராட்சி முறையில் நாடு, நகரம், ஊர் இவற்றிற்குரிய அவைகள் பெரும்பங்கு வகித்தன. நாடு என்பது ஊராட்சி ஒன்றியம் அல்லது வட்டத்தின் அளவுடையது எனலாம். மக்கட்பெருக்கத்திற்கும், வேளாண்மைக்குரிய நிலப் பெருக்கத்திற்கும் ஏற்ப உருவாக்கப்பட்ட நிலப்பகுதியே தவிர தொண்டை நாடு, சோணாடு, பாண்டிய நாடு என்பன போன்ற பெரு நிலப்பரப்பைக் குறிக்கும் பொருளில் ஈண்டு குறிப்பிடப்படவில்லை.

'நாடு' என்ற நிலப்பிரிவு சங்க காலத்தே இருந்த போதிலும் பல்லவர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும், சோழர் காலத்திலும் மக்கட்ப் பெருக்கத்திற்கு ஏற்ப எண்ணிக்கையில் பல்கிப் பெருகின.

நாடு என்பது பண்படுத்தப்பட்டது. ஊர்கள் பலவற்றை உள்ளடக்கியதும், வேளாண் மக்கள் வாழ்வதற்கும் உரியதாயிற்று. சங்கப்பாடல் ஒன்று இக்கருத்தினை,

'காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ'

---

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை – ப. 239
2. மேலது
3. மேலது
4. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு - ப. 257
5. மா. செந்தில் செல்வக் குமரன் - தமிழ் இலக்கியங்கள் கல்வெட்டுகள் காட்டும் தமிழ் எண்கள். அளவைகள், குறியீடுகள் – ப. 142
6. A.R.E. 1898-7
7. மேலது
8. A.R.E· 1900-33
9. மேலது
10. MINAKSHI – Administration and Social Life under the Pallavas – pp. 108, 109.
11. மா. செந்தில் செல்வக் குமரன் – மேலது – பக். 104, 105.

என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றது. மேலும் இதில் 'குடிநிறீஇ' என்பது அளபெடை யோடு வலியுறுத்தப் பெற்றது. இதன் வாயிலாக வேளாண்மைக்குரிய பண்படுத்தப்பட்ட நிலத்தில் உழுது பயிரிடுவதற்குரிய குடிகளையும் குடியேற்றிய பின்னர் தான் 'நாடு' என்ற சொல் முழுமை பெற்றதாகின்றது என்ற கருத்து பெறப்படுகின்றது.

நாட்டார்க்குத் தலையாய பணிகளுள் ஒன்றாக மன்னன் இடும் ஆணையைச் சிரமேற் கொண்டு செயல்வடிவம் கொடுத்து அறையோலைத் தருதலும் ஒன்றெனச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

இதனைப் பல்லவ மன்னனின், பட்டத்தாள் மங்கலம் செப்பேடு,[1]

'நாட்டார்க்கு விட்ட திருமுகம்
நாட்டார் தொழுது
தலைக்கு வைத்து எல்லை போய்
கல்லும் கள்ளியும் நாட்டிப் படாகை
வலம் செய்து நாட்டார் விடுத்த அறையோலை'

என்று கூறுவதன் மூலமாக அரசனிடமிருந்து திருமுகம் வர அதனை நாட்டார் நிறைவேற்றிய செய்தி தெள்ளிதின் விளங்கும்.

இதே போன்று, தான நிலத்திற்கு எல்லை தெரிவித்து அறையோலை செய்யப்பட்ட செய்தியை நிருபதுங்கனின் சிற்றூர்ச் செப்பேடும் தெரிவிக்கின்றது.[2] இவற்றோடு, பிரம்ம தேயங்களுக்குரியனவாக நாட்டாரால் சில உரிமைகள் அறையோலை செய்யப்பட்டன. அவ்வுரிமைகள்:

1. நீர்க்கியைந்தவாறு வாய்க்கால் வெட்டிக் கொள்ளுதல்,
2. நீர்க்குத் தக்கவாறு பாசனம் (விளை) உருவாக்கிக் கொள்ளுதல்,
3. பிரம்மதேயத்திற்கு உரிமை அல்லாதவர் வாய்க்கால் நீரைப் பாசனத்திக்கு எடுக்க அனுமதி இல்லை
4. பிரம்மதேயத்திற்குத் தக்கவாறு ஏரி உருவாக்கிக் கரை கட்டிக் கொள்ளுதல்
5. சுட்ட ஓட்டால் மாட மாளிகை எடுத்துக் கொள்ளுதல்
6. கிணறு வெட்டிக் கொள்ளுதல்,
7. தெங்கு, பனை நடுதல், பெருஞ் செக்கிடப் பெறுதல்
8. இரு வெறியும், எரி துரும்பும், (அடுப்பெரிக்கப் பயன்படும் மரம்) செங்கழுநீரும் நட்டுக்கொள்ளுதல்
9. இப் பிரமதேயத்து எல்லையில் இட்ட தென்னை, பனையில் இவர்கள் ஒப்புதலின்றி ஈழவர் ஏறக்கூடாது

மேற்படி உரிமைகளை வழங்கியதாக அச்செப்பேடு குறிப்பிடுகின்றது. இவை தவிர, மன்னனால் வழங்கப்பட்ட பிரமதேயம் தேவதானமாக இருந்ததால் அத்தேவதானத்திற்குப் பதிலாக வேறொரு ஊரைத் தேவதானமாக ஆக்கித் தந்ததையும் அச்செப்பேடு தெரிவிக்கின்றது.[3]

இதே போன்று ஓரூர் பிரம்மதேயமாக மாற்றி அந்தணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டது. அவ்வூரில் ஏற்கனவே இருந்தவர்களை நீக்கியும் புதிதாக எல்லைத் தெரிவித்தும்மாற்றினர் என்பதை நந்திவர்ம பல்லவனின் 'காசாக்குடிச் செப்பேடு' தெரிவிக்கின்றது.[4]

1. மா. செந்தில் செல்வக் குமரன் - தமிழ் இலக்கியங்கள் கல்வெட்டுகள் காட்டும் தமிழ் எண்கள் அளவைகள் குறியீடுகள் - 77
2. மேலது
3. மேலது – 50
4, தென்னிந்தியக் கல்வெட்டுகள் - தொகுதி-VIII-664

இதன் மூலம் நாட்டார்க்கு இருந்த ஆளுமைச் செல்வாக்கு விளங்கும்.

நந்திவர்மனின் பட்டமங்கலம் செப்பேடும்,[1] தண்டந்தோட்டம் செப்பேடும்[2] கிராம ஆட்சி முறையில் நாட்டாரின் பங்கினைத் தெரிவிக்கின்றன. நாட்டார் வழங்கிய அறையோலையே ஆணை என்பதை வேள்விக்குடிச் செப்பேடு[3] உணர்த்தி நிற்கும்.

மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் திருவெண்ணெய் நல்லூரில் ஊரவை இருந்ததைப் பெரியபுராணம் எடுத்து இயம்புகின்றது.[4] மன்னனிடமோ அன்றி அவையிடமோ வருகின்ற வழக்கை விசாரிக்க 'ஆட்சி, ஆவணம், அயலார் தம் சாட்சி' என்ற மூன்றும் அடிப்படைச் சான்றுகளாகக் கருதப்பட்டன.

ஆட்சியாவது நீண்டகாலமாகக் கையாண்டு வரும் ஒழுக்கம் என்றும், ஆவணம் என்பது உரிமைச் சான்று என்றும், சாட்சி என்பது மற்றவர்கள் கூறும் ஒப்புதல் கூற்று என்றும் கொள்ளலாம். அறங்கூறவையத்து அலுவலன் கரணத்தான் என்று அழைக்கப்பட்டான்[5]

ஊர் என்ற அமைப்பு இருந்ததை 'ஊரார்',[6] 'ஊரோம்'[7] என்ற சொல் வழக்குடைய செப்பேடு மற்றும் கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது. இவை ஊரவர் என்ற பொருளில் வராமல், ஊர்ச் சபையினர் என்ற பொருளில் வழங்கியதை அறியலாம்.[8]

இவ்வமைப்புக்கள் இருந்ததைச் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் தெரிவித்தாலும் அவைக்கும் அரசுக்கும் எவ்விதத் தொடர்பிருந்தது, அவற்றின் முறைப்படுத்தப்பட்ட பணி என்னென்ன என்பதைத் திட்டமிட்டுக் கூற இயலவில்லை. ஆனாலும் ஆங்காங்கே கல்வெட்டுகளில் காணப்படுகின்ற இடங்களைக் கொண்டு இன்னின்ன பணிகளைச் செய்து வந்தன என்பதை ஒருவாறு ஊகிக்கலாம்.

அதன்படி ஊர்க்கான பணிகளைக் கவனித்ததோடு ஊரிலிருந்து பெறப்படும் வருவாய்களைச் சேகரித்துத் தருதலும், நீர்நிலைகளைப் பாதுகாத்தலும், ஊரோடு தொடர்புடைய வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்பு கூறுவதும், கோயில் மற்றும் அறநிலையங்களைப் பாதுகாத்தலும் இவற்றின் பணிகளாக இருந்தன.

ஊரார் சபையாருடன் கலந்து ஊர்ப்பணிகளைச் செய்ததாகக் கல்வெட்டுகள் வழி அறிகிறோம். ஊரவையார் 'பெருமக்கள்' என்று அழைக்கப்பட்டனர்.[9] அவையாரைத் தவிர்த்து 'ஆளும் கணத்தார்' என்பவரும் காணப்பட்டனர்.[10] கோயில் பணிகளைக் கவனிக்க, 'அமிர்த கணத்தார்'[11] இருந்தனர்.

ஒவ்வோர் அவையும், ஏரிவாரியம், தோட்டவாரியம் என்ற பிரிவுகளைக் கொண்டு விளங்கியது.[12]

---

1. A.R.E. 1900-33
2. C. MINAKSHI - Administration and Social Life under the Pallavas - p. 110
3. A.R.E. 1912-122
4. A.R.E. 1912-162, 1901-283
5. மேலது
6. Ep. Ind. V. 20 p. 52
7. A.R.E. 1905-404
8. மேலது 1912-32
9. மேலது 1905-461
10. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு - ப. 228
11. மேலது
12. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு - 228.

ஏரி, கிணறு, வாய்க்கால், மதகு போன்ற நீர் நிலைகளை மேற்பார்வையிட்டுப் பாதுகாப்பதும், செப்பஞ் செய்தலும் ஏரிவாரியப் பணியாகும்.

பல நிலத்தானங்கள் மூலமும், நீர்ப்பாசன வசதிகள் ஏரிவாரியத்தாரால் திருத்தமுறச் செய்யப்பட்டன. ஊரின் மொத்த வருமானத்தில் ஒரு பங்கும் இதற்குப் பயன்படுத்தப் பட்டது தேவை ஏற்படும் போது அரசிடமிருந்தும் பொருள் பெற்று செவ்வனே பணியாற்றி வந்தனர்.[1]

கிராம சபை

சபை, மகாசபை என்ற அமைப்பும் பல்லவர் காலத்தில் வழக்கில் இருந்த ஒன்றாகும். இவற்றின் தலைவர் 'பெருமக்கள்'[2] என்று அழைக்கப்பட்டார். பல்லவர் காலத்தில் உத்திரமேரூர், பெருங்குழி, கூரம், வெண்குன்றம், விடேல் விடுகுச் சதுர்வேதிமங்கலம்; களத்தூர், திருப்பராய்த்துறை, வையனூர், கீழ்ப்புதூர் போன்ற பல ஊர்களில் சபைகள் இருந்ததைப் பல கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.[3]

இச்சபையும் ஊர்ச் சபையார் செய்த பணிகளைச் செய்து வந்தது. தம் பணிகளை நிறைவேற்றப் பல வாரியங்களைக் கொண்டு செயலாற்றியது. சோழர் காலத்திற்கு முன்பே வாரியம் இருந்ததை 'நந்திவர்மனின் செப்பேடு' தெரிவிக்கின்றது.[4]

'வாரியம்' 'கணங்கள்' என்ற அமைப்புகள் கிராம அலுவல்களைச் செவ்வையாக நடைபெற உதவின[5] என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

அருவாகூர்க் கல்வெட்டு; 'வாணகோவரையர் பிடாரிக்குத் தானமாகத் தந்த தங்கத்தை அருவாகூர் சபையாரிடம் ஒப்படைத்தான். கல்வெட்டில் கூறியபடி தருமம் நடைபெற வாரிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர் என்பதை அது தெரிவிக்கின்றது.

இரண்டாம் நந்திவர்மனின் 37-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று;[6] 'பனையூர் கணத்தார். 6,400 காடி நெல்லை நாகன் என்பவனிடமிருந்து பெற்றதைக் குறிப்பிடுகின்றது'. இந்த நெல்; ஆண்டுதோறும் குளத்தினைத் தூர்வாரி செப்பனிடப் பெற்றுக் கொண்டதாகத் தெரியவருகின்றது.

லால்குடிக்கு அருகிலுள்ள தேங்காங்குடி என்ற ஊரில், நிருபதுங்கனின் 26-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு நில விற்பனை தொடர்பான செய்தியைத் தருகின்றது. இதனை நிறைவேற்றும் பணிப்பொறுப்பு 'பன்மாகேசுவரர்' என்ற கோயில் நிருவாகத்தினருக்கு உரியது என்றும், இதனை நிறைவேற்றத் தவறினால் 500 காணம் தண்டம் அளித்தல் வேண்டும் என்றும் கூறி வரிவிலக்கு அளித்த செய்தியைத் தெரிவிக்கின்றது.[7]

இதன் மூலமாக சபைகளுக்கு வரிவிலக்கு அளிக்கின்ற அதிகாரம் இருந்ததையும், கடமைகளைச் செய்யத் தவறியவர்களுக்குத் தண்டம் அளிக்கும் அதிகாரம் இருந்ததையும் அறிய முடிகின்றது.

---

1. R. NAGASWAMY, Studies in Ancient Tamil Law and Society - pp. 39-40i
   Chirrur Copper Plate - V Plate - I side Lines - 1 to 9.
2. மேலது
3. S.I.I. Vol. II Part III pp. 109-110
4. Epi. Ind. 18 p. 119
5. S I.I. Vol. II Part II pp. 109-110
6. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு - ப. 229.
7. மேலது ப. 224

அபராஜிதனின் திருத்தணிக் கல்வெட்டு நம்பியப்பி என்பவன், ஒரு விவசாயியிடமிருந்து 1000 குழி நிலத்தைத் திருவீரட்டானத்துத் தேவருக்கு விளக்கெரிக்கவும் தினப்பூசை நடத்தவும் வாங்கினான். இதற்கு ஊர்ச்சபையார் வரிவிலக்கு அளித்தது மட்டுமின்றி அத்தானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் மேற்கொண்டதாகச் சுட்டுகின்றது.[1]

இதிலிருந்து கோயில் நிருவாகம் வேறு, கிராம நிருவாகம் வேறு என்ற நிலை காணப்பட்டாலும்; கோயில் நிருவாகத்தில் தவறு ஏற்பட்ட காலத்தில் கிராமசபையார் அதில் தலையிட்டு சீர் செய்யும் உரிமை இருந்ததை அறியமுடிகிறது.

நிருபதுங்கனின் 24-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு; பல்லவர்க்குக் கீழ்ப்படிந்த சிற்றரசன் ஒருவன், பதினைந்து கழஞ்சுப் பொன்னை நாராயணச் சதுர்வேதி மங்கலத்துச் சபையாரிடம் தந்து, அதிலிருந்து வரும் பொலியூட்டிலிருந்து (வட்டியிலிருந்து) அவ்வூர்க் கோயிலுக்கு விளக்கெரிக்க அர்ச்சகரிடம் இருநாழி நெய் ஒப்படைக்க வேண்டும் என்று நிர்ணயித்ததைத் தெரிவிக்கிறது.[2]

அபராஜிதனின் ஆறாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டொன்று சபையின் பணிகள் பற்றிய சில புதிய செய்திகளைத் தருகின்றது.

மாகேசுவரர்களால் 60 கழஞ்சு பொன் மணலி மகாசபையிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அச்சபை ஒவ்வொரு கழஞ்சு பொன்னிற்கும் மூன்று மஞ்சாடி வட்டி வழங்க ஒப்புக்கொள்கின்றது. மேலும் அச்சபை வட்டி வசூலிக்க ஒருவனை நியமித்து அவனுக்கு நாள் தோறும் இரண்டு முறை உணவளிக்கவும் தீர்மானித்துள்ளது. அவ்வாறு சபை வட்டி வசூலிக்கத் தவறினால் உள்ளூர் நீதித்துறையான 'தர்மாசனத்திற்கு' 8½ காணம் பொன் தண்டமாகத் தரவும் இசைவு தந்திருக்கிறது.

இச்செய்தியின் மூலமாகச் சபையாரிடம் ஒப்படைக்கப்பட்ட பொன் பலருக்கும் கடனாக வழங்கப்பட்டது. அக்கடனுக்கு நாள் வட்டி வசூலிக்கும் வழக்கம் இருந்தது என்பதையும், வட்டி வசூலிக்க ஒரு ஆள் நியமிக்கப்பட்டதையும் அறிய முடிகின்றது. சபையும் தன் கடமையில் தவறினால் தண்டம் கட்ட வேண்டிய நிலையில் இருந்தது என்பதையும் இது தெரிவிக்கிறது.

சபையைத் தவிர 'கணங்கள்' என்ற அமைப்பும் இயங்கி வந்தன. 'அமிர்த கணத்தார்'[3] 'ஆளுங்கணத்தார்'[4] 'சாத்த கணத்தார்'[5] 'சாத்தப் பெருமக்கள்'[6] என்ற பெயர்கள் பல்லவர்களின் கல்வெட்டில் காணமுடிகின்றது.

கிராம சபையும், தனது செயல்களைக் கவனித்துக் கொள்ள பல வாரியங்களை அமைத்துக் கொண்டது. அவ்வாரிய உறுப்பினர் ஏரி வாரியம், தோட்ட வாரியம், சம்வத்சர வாரியம், பஞ்ச வாரியம் என்பன சில. வாரிய உறுப்பினர்கள் 'வாரியப் பெருமக்கள்' என்றழைக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் பணிகளைச் செய்வதற்குப் பொன்னை முதலாகப் பெற்றனர் என்பதை நிருபதுங்கனின் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[7]

---

1. C. MINAKSHI - Administration and Social Life under the Pallavas - p. 143
2. மேலது
3. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு - ப.3329
4. மேலது ப. 229-231
5. C. MINAKSHI - Administration and Social Life under the Pallavas - p. 143
6. A.R.E. 1912-257
7. S.I.I. Vol. XII - 71

உக்கல் சபையார் சம்வத்சர வாரியத்திடம் 1000 காடி நெல் கொடுத்து அதன் வட்டியில் இருந்து ஊர்க்குளத்தைத் திருப்பணி செய்விக்கக் கேட்டதைக் கம்பவர்மனின் கல்வெட்டு கூறுகின்றது.[1]

இதன் மூலம் ஏரிவாரியப் பெருமக்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கும் வரை அதன் பணியை இச்சம்வத்சர வாரியம் மேற்கொண்டிருந்தது என்றறியலாம்.

கம்பவர்மனின் மற்றொரு கல்வெட்டு ஏரி வாரியம் பல்வேறு வகையில் கிடைத்த தானங்கள் மூலம் குளங்களைச் சீரமைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததைத் தெரிவிக்கிறது.[2]

பாண்டியர் காலம்

பல்லவர்களைப் போன்றே, பாண்டிய அரசில் உரிமைகள் தந்தைக்குப் பின் தனயன் என்ற முறையில் அமைந்திருந்தது. வாரிசு இல்லாச் சமயங்களில் அரசனுடைய தம்பி பட்டத்தைப் பெறுதல் வழக்கமாக இருந்தது. இரண்டாம் வரகுணன் அரசுப் பொறுப்புகளிலிருந்து விடுபடும் முன்னரே அவன் தம்பி பராந்தக வீர நாராயணன் ஆட்சிப்பீடம் ஏறி இணைந்து ஆட்சி நடத்தியதைச் சான்றாகக் கூறலாம்.[3]

முதற்பாண்டியப் பேரரசுக் காலத்தில் அரசுரிமைப் போராட்டம் ஏதுமிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து பாண்டியப் பேரரசில் உரிமைப் போர் ஏற்பட்ட காரணத்தால் ஒரே நேரத்தில் ஐந்து மன்னர்கள் ஆண்டதை வரலாறு கூறுகின்றது.

பாண்டிய மன்னர்கள் மாறன் சடையன், சடையன் மாறன் என்ற பெயர்களை மாறி மாறிப் புனைந்து கொண்டு அரசாண்டனர்.

பாண்டியர்களின் தலைநகராக மதுரை விளங்கிற்று. இதற்குக் கூடல் நகர், கூடல் மாநகர் என்ற பெயர்களுமுண்டு. அதனால் பாண்டிய மன்னர்கள், 'கூடற்கோன்',[4] 'மதுரைக் காவலன்'[5] என்று தங்களை அழைத்துக் கொண்டார்கள்.

மன்னர்கள் தங்கள் அரண்மனையில் இருந்தும், பல்வேறு பொது இடங்களில் இருந்தும் தானங்கள் பலவற்றை வழங்கினர்.

மங்கலாபுரம் என்ற இடத்தில் 'மானாபரணன்' என்ற பெயரில் திருமாளிகை ஒன்று இருந்ததைச் சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் கல்வெட்டால் அறிய முடிகின்றது.[6]

---

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு - ப. 229, 239
2. மேலது ப. 239
3. மேலது ப. 143
4. S.I.I. Vol. XII - 34
5. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு - ப. 229
6. S.I.I. Vol. XII - 42

மக்கள் குறை தீர்க்கத் தாங்கள் முகாம் செல்லும் இடத்தில் தங்குவதற்காகப் பல ஊர்களிலும் சிறிய அரண்மனைகளைக் கட்டியிருந்தார்கள். அவ்வரண்மனைகளில் அரசுக் கட்டில்களும் இருந்தன.

அரண்மனையில் அவர்கள் இருந்த இடத்தின் பெயரையும், அமர்ந்து ஆணையிட்ட அரியணையின் பெயரையும் கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது.

'மாடக்குளக்கீழ் மதுரை உள்ளாலை
அழகிய பாண்டியன் கூடத்தில் பள்ளிக் கட்டில்
பாண்டியனில் எழுந்தருளி செய்ய
திருவாய் மொழிந்தருளி'

எனக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.[1]

பாண்டியரது அரியணைகள் கலிங்கதரையன், முனையதரையன், மழவரையன் வீரகேரளன் என்ற பெயர்களில் வழங்கி வந்தன.

மதுரையிலுள்ள பள்ளிக் கட்டில்கள் 'கலிங்கதரையன்;[2] 'மழவரையன்'[3] என்று அழைக்கப்பட்டன. திருநெல்வேலியில் இருந்த பள்ளிக் கட்டில் 'முனையதரையன்'[4] என்றும் மங்கலாபுரத்தில் 'வீரகேரளன்'[5] பள்ளிக் கட்டில் என்றும் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மன்னன் முகாம் சென்ற இடத்திலிருந்து பிற ஊர்க் கோயில்களுக்குத் தானம் வழங்கியுள்ள செய்திகளைக் கீழ்வரும் கல்வெட்டு வரிகளால் தெரிந்து கொள்ள முடிகிறது.

'வரகுண மகாராஜா தொண்டை நாட்டுப்
பெண்ணைக்கரை அரைசூர் வீற்றிருந்து
இளங்கோய்க்குடிச்சபையார் கையில்
கொடுத்த காசு'[6]

மற்றொரு கல்வெட்டு; தந்தை ஸ்ரீவல்லபன் ஆட்சியிலிருக்க அவனது மகன் சுந்தர பாண்டியனும் பள்ளிக்கட்டிலில் அமர்ந்து தானம் வழங்கியதைத் தெரிவிக்கின்றது.

அக்கல்வெட்டு,

'பிள்ளையார் சுந்தரபாண்டிய
தேவர் ஆண்மர் நாட்டு அருகைக்
குன்றத்தூரில் எழுந்தருளி யிருக்க,
கோயில் உள்ளாலை பள்ளிக் கூடத்துப்
பள்ளிக் கட்டிலில் எழுந்தருளியிருந்து'

எனக் குறிப்பிடுகின்றது.[7]

---

1. மேலது - 34
2. A.R.E. 1905 - 435
3. S.I.I. Vol. XII - 95
4. A.R.E. 1930-31-22
5. S.I.I. Vol. XII - 90
6. மேலது - 71
7. A.R.E. 1912 – 257

அரசனே நாட்டு நிருவாகத்தின் தலைவனாவான். அவனுக்கு அரசாட்சியில் உதவி செய்வதற்காக அமைச்சர்களும் பல அலுவலர்களும் இருந்தனர். அமைச்சர்களுள் தலையாயவன் உத்திரமந்திரி என அழைக்கப்பட்டான். அவர்கள் அரசியல் நுட்பமும், போர் நுட்பமும் உடைய வல்லுநர்களாகத் திகழ்ந்தனர்.

நின்றசீர் நெடுமாறனுக்குக் 'குலச்சிறையார்' அமைச்சராக இருந்தார்.[1] அரிகேசரி மாறவர்மனுக்கும், அவன் மகன் முதலாம் வரகுணனுக்கும் 'மாறங்காரி' என்ற உத்திரமந்திரி இருந்தான்.[2] இவனுக்கு 'மூவேந்த மங்கலப் பேரரையன்' என்ற சிறப்பு விருதுப் பெயரும் மன்னனால் அளிக்கப்பட்டது. மாறவர்மனுக்காகப் பலபோர்களில் ஈடுபட்டு வெற்றிபெற்றதன் மூலம் ஆற்றல் மிக்கப் பெருவீரனாய்த் திகழ்ந்தான் என்பதும் தெரிகிறது. இவனே 'மதுரகவி' என்று சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டான்.[3]

மதுரகவிக்குப் பின்னர் அவரது இளவல் 'மாறன் எயினன்' பாண்டியனுக்குத் தலைமை அமைச்சன் ஆனான்.[4] இவனுக்குப் 'பாண்டி மங்கலப் பேரரையன்' என்ற சிறப்பு விருது வழங்கப்பட்டது. இவனைப் பற்றிய குறிப்பினை ஆனைமலைக் கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது.[5] அங்கு மாறங்காரி, நரசிங்கப் பெருமாளுக்குக் கற்றளி எடுத்தான். பணி முடித்துக் குடநீராட்டுச் செய்யு முன்னர் இறந்து விடுகின்றான். அவன் விட்டுச் சென்ற பணியை அவனது தம்பி மாறன் எயினன் முடிப்பித்து குடநீராட்டினான் என்பதைக் கல்வெட்டுக் குறிக்கின்றது.

இரண்டாம் வரகுணன் அவையில் மாணிக்க வாசகர் அமைச்சராய் இருந்ததை வரலாறு கூறும். அவருக்குத் 'தென்னவன் பிரம்மரையன்' என்ற சிறப்பு விருதும் வழங்கப்பட்டது.[6]

ஸ்ரீவல்லபன் காலத்தில் பராக்கிரம பாண்டியன் என்பவன் உத்திர மந்திரியாக இருந்திருக்கின்றான்.[7] இதே போன்று அண்டநாட்டு பெருமணலூர் மந்திரி திருமலை உடையானான உத்தரமந்திரி எழுத்து'[8] எனவும், 'ஸ்ரீவல்லப உத்தர மந்திரி எழுத்து'[9] எனவும் வருகின்ற கல்வெட்டுத் தொடர்களின் வழி வேறு சில உத்தரமந்திரிகளையும் அறியலாம்.

அமைச்சர்களைப் போலவே, மன்னனின் ஆணையை நிறைவேற்றப் பல அதிகாரிகள் செயல்பட்டனர். இவர்கள்தான் அரசாணையை முறையாக நிறைவேற்றினர். 'திருமந்திர ஓலை'[10] 'திருமந்திர ஓலை நாயகம்'[11] என்பவர்கள் மிக முக்கியமானவர்களாகக் கருதப் பட்டனர்.

'அரையர்' என்ற பட்டப் பெயரைக் கொண்ட அதிகாரிகள் அரசனுக்கும் மக்களுக்கும் இடையே பாலமாகத் திகழ்ந்தனர். மக்களுடைய குறைகளையும் தேவைகளையும் அரசிடம் கூறி அவற்றை நிறைவேறச் செய்தவர்களும் இவ்வதிகாரிகளே ஆவர்.

---

1. S.I.I. Vol. XII - 71
2. S.I.I. Vol. XII - 34
3. A.R.E. 1933 - 31 — 22 & 1898 - 63
4. S.I.I. Vol. III Period I p. 9
5. A.R.E. 1898, Nos. 65, 83, 84
6. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு – ப. 247
7. S.I.I. Vol. II Part V p. 509
8. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 82
9. மேலது பக். 94, 95, 118
10. மேலது ப. 124
11. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 88

'விழுப்பரையன்',[1] 'பல்லவரையன்',[2] 'காலிங்கரையன்',[3] 'முனையதரையன்'[4] என்பவர்கள் பாண்டியர் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் பல பணிகளை ஆற்றினர் என்பதைப் பல கல்வெட்டுகளால் அறிகிறோம்.

இவ்வதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மன்னர்கள் ஆணை பிறப்பித்தனர் என்பதை 'அந்தராயம் தவிர வேண்டும் என்று காலிங்கராயன் நமக்குச் சொன்னமையில்'[5] என்று வருகின்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.

நிலவரி தொடர்பான செயல்களைக் கண்காணித்தவன், திணைக்கள நாயகம்'[6] என்றழைக்கப்பட்டான். நிலங்களை அளந்து வகை செய்வான். 'நாடுவகை செய்வான்'[7] என்றும், வரி தொடர்பான கணக்கினை எழுதுபவர் 'வரியிலார்'[8] என்றும் அழைக்கப் பட்டனர். மேலும் 'புரவரித் திணைக்களத்து முகவெட்டி'[9] என்ற அதிகாரியும் காணப் படுகிறான்.

அரண்மனைப் பணிகளைச் செய்ய பல அலுவலர்கள் இருந்தனர். அரசனின் தேவை களைக் கவனிக்கும் அதிகாரிகள் 'அகப்பரிவார முதலிகள்'[10] என்றும், மனையில் பணிபுரியும் பெண்டிர் 'மனையுடையார்'[11] என்றும் அழைக்கப்பட்டனர்.

பொற்கொல்லர், கல்தச்சர், புலவர்கள் ஆகியோரும் அரசு அலுவலர்களாகக் கருதப்பட்டனர். பொற்கொல்லர்கள் அரசுக்குத் தேவையான நகைகளைச் செய்தது மட்டுமின்றி அரசனது ஆணைகளைச் செப்பேட்டில் பொறிக்கவும் செய்தனர். பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் செப்பேட்டைப் பொறித்தவன், 'பாண்டி மாராயப் பெருங் கொல்லன் ஸ்ரீவல்லபன்' என்று குறிக்கப் பெறுகின்றான்.[12]

வேள்விக்குடிச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியைப் பாடியவன் 'ஏனாதி சாத்தன்' என்ற தமிழ்ப்புலவன்.[13] இவனே படைத்தலைவனாகவும் இருந்தான் என்பதை அறிய முடிகின்றது.

ஸ்ரீவரமங்கலச் சாசனத்தைப் பாடியவன் அரசனுக்கு மகாசாமந்தனாய் இருந்த வீரமங்கலப் பேரரயனாகிய தீரதரன் மூர்த்தி எயினன் ஆவான்.

தளவாய்புரச் செப்பேட்டின் 'செந்தமிழ் பாத்தொடை செய்தோன்' பாண்டித் தமிழாபரணன் என்னும் பல சிறப்புப் பெயரெய்திய பாண்டிமாராயப் பெருங் கொல்லனாகிய சிரிவல்லபன் ஆவான்.

---

1. S.I.I. Vol. XIV - 228
2. மேலது - 257
3. ஆர். வசந்தகல்யாணி, அரசன் ஆணை, தொல்லியல் கருத்தரங்கு - ப. 27
4. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 98
5. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 88
6. S.I.I. Vol. XIV - 13 வரி 5 - 7
7. மேலது 205
8. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 156
9. S.I.I. Vol. XIV - 2
10. மேலது 1
11. S.I.I. Vol. XIV - 2
12. மேலது
13. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு, ப–156

நீதி

பாண்டியர்கள் நீதி தவறாமல் நடுவுநிலையோடு செங்கோல் நடத்தி ஆளுகை செய்ய வேண்டும் என்ற மேன்மையான எண்ணம் கொண்டவர்கள். அவர்கள் தங்களின் மெய்க்கீர்த்தியுள் 'மனு நெறி' தவறாது ஆண்டவர்கள் எனப் பெருமையோடு கூறிக் கொள்கின்றார்கள்.

'மநுதர்சித மார்க்கத்தினால் குருசரிதம் கொண்டாடி'[1] என்று பராந்தக நெடுஞ் சடையனும், 'மனுசமானன் வழுவாத செங்கோன்'[2] என்று பராந்தக வீர நாராயணனும், 'மறைநெறி வளர மனு நெறி திகழ'[3] என்று குலசேகர பாண்டியனும் 'மனுநெறி தழைப்ப மணிமுடி சூடி'[4] என்று முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும் கூறுவதிலிருந்து அறியலாம்.

ஒரு நாடு என்றால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவது இயல்பு. நிலத் தொடர்பான பிணக்குகளையும், கருத்து வேறுபாடுகளையும் தீர்க்க அரசும் சபையும், அறங்கூறவையமும் முற்பட்டன. அரசோடு தொடர்பு உடைய வழக்காயின் அரசனே நேரடிப் பார்வையில் வழக்கை விசாரித்ததைச் செப்பேட்டின் வழி அறியமுடிகின்றது.

வழக்குகளை ஆய்வு செய்து அதற்குரிய தீர்ப்பினை வழங்குதல் மன்னனின் தலையாய கடமையாகும். அவனே நாட்டின் தலைமை நீதிபதியாக விளங்கினான். அவனது அன்றாடப் பணிகளுள் ஒன்றாக வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதும் இருந்தது.

பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடும், பராந்தக வீர நாராயணனின் தளவாய்புரச் செப்பேடும் மன்னர்கள் எவ்வாறு வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கினர் என்பதைக் காட்டுகின்றன.

அவர்கள் தீர்ப்பு வழங்குவதற்கு அடிப்படையாக எழுத்துச் சான்றுகளையும், வாய்மொழிச் சான்றுகளையும், வழக்கிலிருந்த சான்றுகளையும் ஆராய்ந்து பார்த்து நீதி வழங்கினார்கள் என்று தெரிகின்றது.[5]

பொதுவாக வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கப் பத்து வகையான ஆவணங்கள் தேவை[6] என்று 'வியாச பிரசாபதி' தெரிவிக்கின்றது.

ஆனால் பெரியபுராணம் 'ஆட்சி, ஆவணம், அயலார்தம் சாட்சி'[7] என்ற மூன்றும் தீர்ப்பு வழங்க அடிப்படையானவை என்று காட்டுகின்றது. இதில் ஆவணம் என்பதில் முன் சொன்ன பத்தும் உள்ளடக்கியதாகக் கருத முடிகின்றது.

வேள்விக்குடிச் செப்பேடு, வேள்விக்குடி என்ற கிராமம், கொற்கைக்கிழான் நற்கொற்றன் என்பவனுக்குப், பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வழங்கியதைத் தெரிவிக்கிறது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அக்கிராமம் களப்பிரர்களால் கைப்பற்றப்பட்டு அத்தானம் விலக்கப்பட்டு விட்டது. கொற்கைக் கிழான் நற்கொற்றன் வழிவந்த 'கொற்கைக் கிழான் காமக்காணி நரசிங்கன்'[8] என்பவன் தம் காலத்தில் ஆட்சிபுரிந்த பராந்தக நெடுஞ் சடையனிடம் சென்று மேற்படி நிலங்களை மறுபடியும் தானமாக வழங்கக் கேட்டுள்ளான்.

---

1. S.I.I. Vol. XIV - 228, 236
2. மேலது - 229
3. மேலது - 229, 245
4. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 156
5. மேலது
6. S.I.I. Vol. XIV - 250
7. மேலது - 52, 88
8. மேலது - 262, 264, 256, 223, 234, 236

மன்னன் உடனே இவ்வழக்கில் தலையிட்டு 'நாட்டானின் பழமையாதல் காட்டி நீ கொள்க'[1] என்று கூறியுள்ளான். மன்னன் கேட்டபடியே அதற்குரிய ஆவணங்களைக் காட்டவே மன்னனும் மகிழ்ந்து, 'மேனாள் எங்குரவராற் பான்முறையிற்றப்பட்டதை எம்மாலும் தரப்பட்டது'[2] என்று நீரோடட்டிக் கொடுத்தமைத் தெரிகிறது.

இதே வேளையில் பராந்தக வீரநாராயணனிடம் வந்த வழக்கு, ஒருவனுக்குத் தான மாக வழங்கப்பட்ட நிலம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. மன்னன் அதனை ஆய்வு செய்து தானம் எதற்காக வழங்கப்பட்டதோ அதற்குரிய வழிவகை செய்ததைத் தளவாய்புரச் செப்பேடுத் தெரிவிக்கின்றது.[3]

மற்றொரு வழக்கு, 'கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் பன்னிரு அந்தணர்களுக்கு 'திருமங்கலம்' என்ற கிராமத்தைத் தானமாகத் தந்தான். சோமாசிக் குறிச்சி என்ற கிராமத்தைச் சோமயாஜி என்பவனுக்குப் பிரம்மதேயமாக வழங்கினான்.'

இவ்விரு தானத்தைக் குறிக்கின்ற தான ஓலைகளும் குழப்பமான ஆட்சிக் காலத்தில் தொலைந்து போகின்றது. சோமாசிக் குறிச்சியிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து 'மதுரதர நல்லூர்' எனப் பெயரிடப்பட்டு அந்நிலத்திற்கு உரியவர் அல்லாதாரால் அனுபவிக்கப்பட்டு வந்தது.

இந்தக் குழப்பத்தைத் தீர்ப்பதற்காக பராந்தக வீரநாராயணனுடைய அதிகாரி நாராயணன் கேசவன் என்பவன் மன்னனிடம் முறையிடுகின்றான். அவன் முறையீட்டில்:

1. சோமாசிக் குறிச்சி என்பதோடு மதுரதரநல்லூர் இணைக்கப்படல் வேண்டும்,
2. மதுரதரநல்லூரில் தற்போது வாழ்பவர்கள் வெளியேற்றப்படல் வேண்டும்;
3. சோமாசிக் குறிச்சி, திருமங்கலம் ஆகிய ஊர்களுக்கிடையேயான எல்லை மறுபடியும் தெளிவாக்கப்படல் வேண்டும்[4] என்று கேட்கிறான்.

இந்த இடத்தில் மன்னன் எந்த ஆவணத்தையும் கேட்டதாகத் தெரியவில்லை முறையிட்ட அதிகாரி சிறந்த அறிஞனாகவும் நேர்மையானவனாகவும் இருந்தலால் அவனது 'சாட்சி' ஒன்றையே ஆதாரமாக ஏற்றுக் கொண்டு அவனது முறையீட்டை நிறைவேற்றினான்.

மேற்படி முறையீட்டினைத் தனக்காகக் கேட்காமல் திருமங்கலம் சோமாசிக் குறிச்சிச் சபையாரின் வேண்டுகோளுக்கிணங்க விண்ணப்பம் செய்தான் நாராயணன் கேசவன்.

கல்வி

மன்னர்கள் நீதித்துறையில் பெரும் ஈடுபாடு கொண்டது போலவே கல்வித்துறையிலும் கவனம் செலுத்தியுள்ளனர். சுருங்கச் சொன்னால் பாண்டிய மன்னர்கள் தமிழ் மொழியைக் காதலித்தனர். தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். முத்தமிழை வளர்க்க முச்சங்கங்களை நிறுவினர். தமிழ் வளர்த்ததோடு பல துறைகளிலும் வளம் பெருக வழி வகை செய்தனர் என்பதைப் பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்தியில் ஆங்காங்கு காணமுடிகிறது.

---

1. மேலது - 234, 236
2. மேலது - 256
3. மேலது - 236
4. மேலது

மன்னர்களே தமிழ் மொழியிலும் வடமொழியிலும் புலவர்களை விட மேம்பட்டிருந்தனர் என்பதைச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடு:

'வளமதுரை நகர் கண்டும்
மற்றதற்கு மதில் வகுத்தும்
வளமிக்க மதியதனால் ஒண்டமிழும்
வடமொழியும்
பழுதறத் தானாராய்ந்து
பண்டிதரில் மேந்தோன்றியும்'[1]

என்று கூறுகின்றது. இதே செப்பேடு,

'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்'[2]

என மற்றொரு இடத்தில் குறிப்பிடுகின்றது. இதன் வாயிலாகப் பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழ் ஆய்ந்ததோடு பிறமொழியிலுள்ள இலக்கிய, இதிகாசங்களைத் தமிழாக்கம் செய்து தமிழை வளப்படுத்தித் தமிழ் மக்களைக் கல்வி கேள்விகளில் மேம்பாடடையச் செய்தனர்.

சிவகாசிச் செப்பேடு, மதுரையைத் 'தமிழ்க்கூடல்' என்று கூறுகின்றது.[3] சடையன் மாறனின் கல்வெட்டு 'சொன்மாத் தண்டமிழ்க் கூடல்' என்றும்,[4] சடையவர்பன் குலசேகரனின் மெய்க்கீர்த்தி, '. . . மாமுனி தெரிந்த இயலிசை நாடகம் எழில் பெற வளர' என்றும்[5] கூறுவதைக் காணலாம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் மெய்க்கீர்த்தி 'மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க, நால்வகை வேதமும் நவின்றுடன் வளர'[6] என்றும், குலசேகரனின் மெய்க்கீர்த்தி, 'அருந்தமிழ் வளர்க்கவும் வடமொழி சிறக்கவும்'[7] என்றும் கூறுகின்றன. சங்கப் பலகையில் அமர்ந்திருந்த புலவர் வழி வந்த ஒருவன் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனிடம் அதிகாரியாக இருந்தான். அவன் 'இருப்பைக்குடிக் கிழவன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றிருந்ததைக் கல்வெட்டின் வழி காண முடிகின்றது[8] பாண்டியர்களின் சிறந்த தமிழ் மெய்க்கீர்த்திகளே நற்றமிழ் வளரப் பாண்டியர் தந்த ஊக்கத்தை எடுத்தியம்புகின்ற சான்றுகளாய் இருக்கின்றன. செப்பேட்டின் வடமொழி, தமிழ்ப் பகுதிகளை எழுதிய புலவர்கள் சிறப்புப் பட்டங்களும், நிலங்களும் அளிக்கப்பட்டு மேன்மை செய்யப்பட்டனர். தளவாய்புரச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியை எழுதியவன், 'பாண்டித் தமிழாபரணன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவன்.[9] வேள்விக்குடிச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியினை எழுதியவன் 'ஏனாதி சாத்தன்' என்பவனாவான்.[10] 'அதிவீரராம பாண்டியன் பல தமிழ் நூல்களை இயற்றித் தமிழ் மொழிக்கு அணிசேர்த்தவன்.[11]

பாண்டியர் காலத்தில் கல்விச் சாலைகள் தனியே இயங்கின என்பதை அறியச் சான்றுகள் குறைவாகவே கிடைத்துள்ளன. சேரன் மாதேவியில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஒரு வேதபாடசாலை அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. கன்யாகுமரியிலிருந்த கல்விச் சாலை 'ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை' என்று அழைக்கப்பட்டதைக் கல்வெட்டின் வாயிலாக அறிய

1. மேலது
2. மேலது - 250
3. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 157
4. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - ப. 157
5. பாண்டியர் செப்பேடுகள் பத்து - ப. 115
6. மேலது ப. 31
7. பூ. சுப்பிரமணியன், மெய்க்கீர்த்திகள் - ப. 182
8. பாண்டியர் செப்பேடுகள் பத்து - ப. 104
9. பூ. சுப்பிரமணியன், மெய்க்கீர்த்திகள் - ப. 232
10. மேலது - ப. 240
11. R. Nagaswamy, Studies in Ancient Tamil Law and Society - p. 3

முடிகின்றது.[1] இதுவே பின்னர் 'இராசராசப் பெருஞ்சாலை' என முதலாம் இராசராசன் காலத்தில் பெயர் மாற்றம் பெற்றதை அறியமுடிகின்றது.[2] கல்வி ஏரை நூலகங்களும் துணைபுரிந்தன. பாண்டியர் காலக் கல்வெட்டுகளின் மூலம் ஒரு சில இடங்களில் நூலகங்கள் இருந்ததை அறியலாம். அந்நூலகங்கள் 'சரசுவதி பண்டாரம்'[3] என்று அழைக்கப்பட்டதைக் காணமுடிகின்றது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் சிதம்பரத்தில் ஒரு சரசுவதி பண்டாரம் இருந்தது தெரியவருகிறது. அதனை நிருவகித்தவர் சுவாமி தேவர் என்னும் ஓர் அறிஞர். இங்கு ஏராளமான ஓலைச் சுவடிகள் பல்வேறு எழுத்துக்களில் இருந்ததையும் 20 அறிஞர்கள் பணியாற்றியதையும் அறிய முடிகின்றது.[4] இதே போன்று சேரன்மாதேவியிலும் ஒரு சரசுவதி பண்டாரம் இருந்ததைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[5]

நிதி

அரசு தன் கடமைகளைச் செய்வதற்குப் பொருளாதாரம் தேவைப்பட்டது. அப்பொருளாதாரம் பல்வேறு வரிகளால் பெறப்பட்டது. அவ்வரிகள் மக்கள் மீது அரசு விதித்தவையாகும். அவற்றில் நிலவரியே அரசுக்குப் பெரும் தொகையை ஈட்டித் தந்தது. ஆதலால் அரசே நிலங்களை முறையாக அளந்து, தரத்திற்கு ஏற்றவாறு வரிவிதித்தது விளைவில் ஆறில் ஒரு பங்கு அரசிற்கு வரியாகப் பெறப்பட்டது.

வரிச்சுமை அதிகமாயிருப்பின் மக்கள் தாங்கள் வாழும் ஊரை விட்டு வேறு ஊருக்குச் செல்வதன் மூலம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டனர்.[6] இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் வரிச்சுமை பற்றி மக்கள் முறையிட்ட போது அதனைப் பரிசீலனை செய்து விளையாத நிலத்திற்கு வரிவிலக்கு அளித்த செய்தியையும் காண முடிகின்றது.[7] மழையின்மையின் போதும், விளைவின்மையின் போதும் நிலவரி நீக்கம் செய்யப்பட்டது. இவ்வாறு செய்யும் போதெல்லாம் ஊராரையும், நாட்டாரையும் கலந்து முடிவெடுக்கப்பட்டது எனலாம்.

நிலவரியைத் தவிர பல வரிகளும் அரசுக்கு வருவாய் அளித்தன. செக்கிறை, மனைஇறை, தட்டார் பாட்டம், அங்காடிப்பாட்டம் போன்ற 'தொழில் வரிகள்' விதித்து வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர்.[8] குடநாட்டாரிடம் 'சலாபத் தேவை' என்ற வரி வசூலிக்கப்பட்டது. முத்துக்குளிக்கும் பணியில் ஈடுபட்டோரிடம் இது வசூலிக்கப்பட்டதாகத் தெரிகிறது.[9] குடநாட்டுக் கொற்கை முத்துக் குளிக்கும் தொழிலுக்கு பெயர் பெற்ற இடமாதலால் இவ்வரி அங்கு வசூலிக்கப்பட்டது[10] முத்து வாணிபம் பாண்டிய அரசுக்கு நல்ல வருவாய் அளித்தது என்பது புலனாகிறது. பாண்டி நாட்டிலிருந்து பல நாட்டிற்கும் முத்துக்கள் ஏற்றுமதியாயின. இதனால் பாண்டிய அரசனுக்குக் கிடைக்கின்ற வருவாய் மிகப்பெரியது என மார்க்கோ போலோ குறிப்பிடுகின்றார்.[11]

---

1. மேலது ப. 1
   (1) இரசீது (2) அடமான ஓலை (3) விலை ஓலை (4) நிலை ஓலை (5) தொடர்பு ஓலை (6) சுத்த நகல் (7) பாகப் பிரிவினை ஓலை (8) தான ஓலை (9) எல்கை ஓலை (10) சொத்திலி ஓலை.
2. பெரிய புராணம், ஆதீன வெளியீடு
3. பாண்டியர் செப்பேடுகள் பத்து - ப. 31
4. மேலது ப. 20
5. மேலது
6. மேலது ப. 106, 107
7. மேலது ப. 109
8. R. Nagaswamy, Studies in Ancient Tamil Law and Society - p. 7
9. பூ. சுப்பிரமணியன், மெய்க்கீர்த்திகள் - ப. 206
10. மேலது ப. 29
11. மேலது ப. 214

காசுகள்

பாண்டியனின் அரசுச் சின்னமாக மீன் கருதப்பட்டது. இச்சின்னத்தை அவர்களது கொடிகளிலும், காசுகளிலும் பொறித்தனர் என்று தெரிகிறது. ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் என்ற மன்னன் தனது விருதுப் பெயராகிய அவனிப சேகரன் என்ற பெயரில், 'அவனிப சேகரன் கோளகை' என்ற காசை வெளியிட்டான்.[1]

இரண்டாம் வரகுணனின் தங்கக் காசு ஒன்று கிடைத்துள்ளது. அதில் ஒரு பக்கம் இரு கயல்களும் மறுபக்கம் 'ஸ்ரீவரகுண' என்ற பெயர் கிரந்த எழுத்திலும் காணப்படுகின்றன.[2] வரகுணன் திருச்செந்தூர்க் கோயிலுக்கு வழங்கிய தானத்தில், 'நிறை குறையாப் பழங்காசு ஆயிரத்து நானூறு' எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.[3] இதனை முதலீடாக வைத்து அதிலிருந்து பெறப்படும் வருவாயிலிருந்து மேற்படிக் கோயிற் பணிகள் நடைபெற வேண்டும் என்று குறிக்கப்படுவதால் தானமாக வழங்கப்பட்ட காசுகள் பொன்னால் ஆனவை என்று உணரலாம். ஒரு காசு என்பது ஒரு கழஞ்சுக்கும் பத்துப் பொன்னுக்கும் சமம் என்பதை வரகுணனின் கல்வெட்டால் அறிய முடிகின்றது.[4] காணம் என்ற ஒருவகைக் காசும் இவர்கள் காலத்தில் வழக்கில் இருந்தது. 'திரமம்' என்ற காசும் இருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஒன்றரைத் திரமம் என்பது ஒரு பழங்காசுக்குச் சமம் என்பதும் தெரிகிறது.[5]

வெள்ளி, செப்புக் காசுகளும் பாண்டியர் ஆட்சியில் புழக்கத்தில் இருந்தன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் 'ஆனை அச்சு' என்ற காசு வழக்கிலிருந்தது.[6] இவை தவிர 'புதுக்குளிகைப்பணம்' 'தனபாலன் குளிகை' என்பனவும் இருந்ததாகத் தெரிகிறது. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் 'எல்லாந் தலையானான்' என்ற காசு வெளியிடப்பட்டது. 'கச்சி வழங்கும் பெருமாள்' என்ற அவனது பிற விருதுப் பெயரிலும் நாணயங்கள் வெளியிடப்பட்டன. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் 'சோணாடு கொண்டான் என்று பெயர் பொறிக்கப்பட்ட காசு வெளியிடப்பட்டது.

மூன்றாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் கோதண்டராமன் என்ற காசும், திருநெல்வேலிப் பெருமாள் வீரபாண்டியனின் (கி.பி. 1413) நென்மேலிக் கலியுகராமன் என்ற காசும் வழக்கிலிருந்ததைக் காணலாம்.[7] மேலும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் 'சுந்தரபாண்டியன்', வீரபாண்டியன், சோணாடு கொண்டான்', 'கச்சி வழங்கும் பெருமாள்', 'எல்லாந் தலையானான்', 'குலசேகர' என பெயர் பொறிக்கப்பட்ட பல காசுகள் வழக்கில் இருந்தன.[8]

வணிகத்திற்குத் தேவையான ஒன்று காசு என்பதால் பாண்டிய மன்னர்களும் அதனை வெளியிட்டனர். காசுகள் அச்சடிக்கப்படும் இடம் 'அக்கசாலை' என்று பெயர் பெறும். பாண்டியர்கள் காலத்தில் கொற்கைக்கு அருகிலுள்ள 'அக்கசாலை'யிலும் காசுகள் அச்சடிக்கப் பட்டுள்ளன. இன்றும் இவ்வூர் 'அக்கசாலை' என்றே அழைக்கப்படுகின்றது. இங்கு தொன்மையான காசுகளை இன்றும் சேகரிக்க முடிகின்றது.

---

1. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - பக். 200
2. நடன. காசிநாதன், தமிழர் காசு இயல், பக். 72, 73
3. S.I.I. Vol. XIV - 16A
4. Epi. Ind. Vol. XXI - 17
5. S.I.I. Vol. XIV - 243
6. A.R.E. 1949-50 / 312
7. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - பக். 202
8. நடன, காசிநாதன், தமிழர் காசு இயல், பக். 79

வெளிநாட்டார் தொடர்பு

பாண்டியர்கள் பல வெளிநாட்டவர்களுடன் தொடர்பு வைத்திருந்ததன் மூலம் தங்கள் வணிகத்தைப் பெருக்கிக் கொண்டனர். வெளியிலிருந்து வந்த வணிகர்களையும், பயணிகளையும் நன்கு உபசரித்தனர். கி.பி. 1281-ல் சீனத் தூதுவன் மூலமாக அந்நாட்டு மன்னன் குப்ளாய்கான் என்பவனுக்குப் பாண்டிய மன்னன் இரகசிய செய்தி ஒன்றை அனுப்பினான்.[1] அராபிய வரலாற்று ஆசிரியர் 'வாசப்' தம் குறிப்பில் பாண்டிய நாட்டுச் செல்வ வளத்தைப் பற்றிக் கூறத் தம்மிடம் வார்த்தைகளே இல்லை என்று கூறுகின்றார்[2] கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வந்த மார்க்கோபோலோ இந்நாட்டின் துறைமுகப்பட்டினத்தில் நடைபெற்ற குதிரை வணிகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.[3] ஜமாலுதீன் என்ற தூதுவன் மூலம் சீன நாட்டோடு நட்பு கொண்டு பாண்டிய நாட்டுச் சிக்கலுக்குத் தீர்வு கண்டதாகத் தெரிகிறது.[4]

நீர்ப்பாசனம்

பாண்டிய நாட்டு மக்கள் பெரும்பாலோர் நிலத்தை நம்பியே வாழ்ந்தனர். அந்நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளை மன்னனும் அதிகாரிகளும் கடமையாகச் செய்யாமல் தொண்டாகவே செய்தனர். வைகையும், தண்பொருந்தப் பேராறும் [தாமிரபரணி], பல சிற்றாறுகளும் நீர்ப்பாசன வசதிக்குப் பேருதவியாய் அமைந்தன.

மழைக் காலங்களில் ஏற்படும் பெருவெள்ளத்தைத் தேக்கிப் பின்வரும் காலங்களில் பயன்படுத்தப் பல ஏரிகளையும், குளங்களையும் உருவாக்கி மக்களுக்கு அர்ப்பணித்தனர்.

சேந்தன் மாறனின் வைகைக் கரைக் கல்வெட்டு வைகையாற்றில் கட்டிய மதகு பற்றிய செய்தியைத் தருகின்றது. தளவாய்புரச் செப்பேடும்

'ஆறுபல தலைகண்டும் அமராலையம் பலசெய்தும்
சேறுபடு வியன் கழனித் தென்விழிஞநகர்' கொண்டும்

என்று குறிப்பிடுகின்றது.[5] இம்மன்னனே 'வீரநாராயணன் மதகு' ஒன்றை மதுரை மாவட்டம் நிலையூரில் ஏற்படுத்தினான்.[6] பராக்கிரம பாண்டியன் பேராறு விரபாண்டியன் கால், ஸ்ரீவல்லபப் பேறாறு என்று மன்னர்கள் பெயரால் ஆறுகள் இருந்தன.[7] ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால், வாய்க்கால் என்றும், சிறிய பேராறு என்றும் அழைக்கப்பட்டிருந்தன. அவ்வகையில் 'ஸ்ரீகண்டன் வாய்க்கால்'[8] என்பது குறிப்பிடத்தக்கது. ஆறுகள் இல்லாத இடங்களில் ஏரிகளையும் குளங்களையும் வெட்டி மழை, வெள்ளநீரைத் தேக்கி வைத்துப் பாசனம் செய்தனர். அவ்வகையில் மாறன் ஏரி, திருமால் ஏரி, கிழவனேரி நாரணன் ஏரி

---

1. தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் - பக். 48
2. மேலது
3. மேலது பக். 106, 107
4. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு, பக்–197
5. பூ. சுப்பிரமணியன், மெய்க்கீர்த்திகள் - பக். 194 வரி. 79-80
6. மேலது பக். 204
7. S I.I. Vol. XIV - 223-A. வரி. 5
8. மேலது பக். 78

என்பன சான்றாகும் புள்ளனேரி என்ற ஒன்று நக்கன் புள்ளன் என்பவனால் கட்டப்பட்டது. இப்பணி முடியுமுன் அவன் இறக்க, அவன் மகன் புள்ளன் நக்கன் என்பவன் முற்றுவித்தான்[1].

அளவைகள்

அரசு வருமானத்தில் நிலவருவாய் முதன்மையானதாக இருந்ததால், தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியிலுள்ள விளை நிலங்களை முறையாக அளந்து வரி விதிப்பது என்பது அரசின் கடமையாக இருந்தது. அவ்வாறு அளப்பதற்காக அளவு கோல்கள் முறைப்படுத்தப் பட்டன. இதனைக் கல்வெட்டுகள், செப்பேடுகள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. புறநாஞ்சில் கோல், குடிதாங்கிக் கோல், 18 அடி வீரபாண்டியன் கோல், 24 அடி சுந்தரபாண்டியன் கோல், ஊர்க் கோல் குழிக்கோல் (கல்லிடைக் குறிச்சி), பிரம்மராட்சசன் கோல் (கரிவலம் வந்த நல்லூர்) என்று அளவு கோல்கள் இருந்தன. முறைப்படுத்தப்பட்ட இவ்வளவு கோல்களின் நீளம் கோயில்களிலும், பொது இடங்களிலும் பொறித்து வைக்கப்பட்டு இருந்தன. கொற்கையில் சுந்தரபாண்டியனுடைய, 24 அடிக்கோல் பொறித்து வைக்கப்பட்டு உள்ளது. திருநெல்வேலி மாவட்டம் செங்காணி கல்லிடைக் குறிச்சி, கரிவலம வந்த நல்லூர் ஆகிய இடங்களிலும் அளவு கோல்கள் பொறித்து வைக்கப்பட்டிருக்கின்றன.[2] இவை நான்கு சமபகுதிகளாகப் பிரிக்கப் பட்டு, பின்பு நான்கில் ஒரு பகுதியை மேலும் நான்கு சமபாகங்களாகப் பிரித்துக் காட்டியுள்ளனர். அளவு பாகங்களைச் செங்காணியிலுள்ள அளவுகோலில் மிகத் தெளிவாகக் காணமுடிகின்றது. இதைப் போன்று, குழி, காணி, மா, வேலி போன்ற நில அளவுகளும் பாண்டியர் காலத்தில் இருந்தன.

நில அளவுகளை முறைப்படுத்தியது போன்றே எடுத்தல், முகத்தல் அளவுகளையும் முறைப்படுத்தினர். ஆட்சி மாறும் போது அளவு கருவிகளின் பெயரும் அளவும் மாறும் என்பதனை

> 'பண்டுள்ள பேர் தவிர்த்து
> அளப்பனவும் நிறுப்பனவும் கயலெழுதி'[3]

என்ற கல்வெட்டு வரிகளின் மூலம் அறியலாம். முறைப்படுத்தப்பட்ட அளவு கருவிகளின் மீது 'கயல்' சின்னம் பொறித்தனர் என்பது தெரிகிறது.

நாட்டுப் பிரிவுகள்

ஆட்சியைச் செம்மையாய் நடத்த மன்னர்கள் தங்கள் ஆட்சிக்குட் பட்ட பரப்பினை பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டனர். அவ்வகைப் பிரிவுகள் வளநாடுகளாகவும், கூற்றங்களாகவும், நாடுகளாகவும், ஊர்களாகவும் பெயர் பெற்றன. இவற்றைத் தவிர நகரம், சதுர்வேதி மங்கலம் என்ற அமைப்புகளும் இருந்தன.[4] சோழர் ஆட்சி பாண்டிய நாட்டில் ஏற்படு முன்னரே பாண்டிய நாட்டில் பல வளநாடுகள் இருந்தன. வளநாடு என்பது நாட்டுப் பிரிவுகளுள் பெரியதாகும். இது பலநாடுகளைத்

---

1. S.I.I. Vol. XIV No. 26
2. நேரில் கண்டது
3. நடன. காசிநாதன், ப. ஆ. கன்னியாகுமரி கல்வெட்டுக்கள், தொகுதி-I - 57
4. S.I.I. Vol. XIV - List of Geographical Divisions

தன்னகத்தே கொண்ட ஒரு அமைப்பாகும். இரண்டாம் வரகுணனின் கல்வெட்டு வைகுந்த வளநாடு என்று ஸ்ரீ வைகுண்டத்தை மையமாகக் கொண்ட நாட்டுப் பிரிவினைக் குறிக்கின்றது. இதே போல 'அமிர்த குண வளநாடு, 'நித்த வினோத வளநாடு,' 'ஸ்ரீ வல்லப வளநாடு' 'பாண்டி மார்த்தாண்ட வளநாடு' திருவழுதிவளநாடு' 'கேரளசிங்க வளநாடு' போன்ற வளநாடுகளை வரகுணன், இராசசிம்மன் ஆகிய பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளில் காண முடிகின்றது. 'வைகுந்த வளநாடு' தென் வைகை வளநாடு' போன்றவை தளவாய்புரச் செப்பேட்டில் இடம் பெறுகின்றன.

வளநாட்டிற்கு அடுத்துள்ள பெரும்பிரிவாகக் கூற்றம், நாடு ஆகியவை கருதப்பட்டன. கூற்றம் என்பது சங்கப் பாண்டியர் காலங்களிலேயே வழக்கிலிருந்தது என்பதைச் சங்கப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.[1] 'பாகனூர்க் கூற்றம்', 'கொழுவூர்க் கூற்றம்', 'வெம் பாற்றூர்க்கூற்றம்' போன்றவை பாண்டியர் செப்பேடுகளில் குறிக்கப் பெறும் கூற்றங்களாகும்.[2] கல்வெட்டுகளும் 'திருக்கானப்பேர்க் கூற்றம்', 'கீழ்க்களக் கூற்றம்' 'முத்தூற்றுக் கூற்றம்', 'மிழலைக் கூற்றம்', 'நடுவிற் கூற்றம்' எனப் பல கூற்றங்களைக் குறிப்பிடுகின்றன.[3] 'தென்களவழிநாடு' 'களக்குடி நாடு' போன்றன செப்பேடுகள் மூலம் அறியப்பெறுவன வாகும்.[4] கல்வெட்டுகள், 'அளநாடு' 'அளற்றூர் நாடு', 'அண்டநாடு', ஆண்மர்நாடு' ஆரிநாடு,' 'இடையாற்றூர் நாடு', 'களக்குடி நாடு 'கல்லக நாடு' எனப் பலநாட்டுப் பெயர்களைத் தருகின்றன.[5]

'கூற்றம்' என்ற சொல்லும் 'நாடு' என்ற சொல்லும், பாண்டியர் கல்வெட்டுகளில் பல இடங்களில் காணப்பட்டிருந்தாலும் இவ்விரண்டும் ஒரே வகையான பிரிவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன என்பதை உய்த்துணர முடிகின்றது. இதனை வலியுறுத்துவது போன்ற வாசகத்தை,

> பாகனூர்க் கூற்றம் என்னும்
> பழனக் கிடக்கை நீர்நாட்டு'[6]

என்னும் வேள்விக்குடிச் செப்பேட்டில் காணலாம். ஆனால் நாடு, கூற்றம் என்பவை பல ஊர்களைத் தன்னகத்தே அடக்கிய பகுதி என்பதை அறிய முடிகின்றதே தவிர அதன் பரப்பு எவ்வாறு அமைந்து இருந்தது என்பதையோ, எதனை அடிப்படையாக வைத்து அவற்றை அமைத்தார்கள் என்பதையோ நம்மால் உறுதியாகக் கூற இயலவில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பாண்டி நாட்டில் இருந்துள்ளன.

நாட்டினை அடுத்துள்ள சிறிய பிரிவு, ஊர் என்று அழைக்கப்பட்டது. ஊர்கள்; 'பிரம்மதேயம்' அல்லது 'சதுர்வேதி மங்கலம்' என்றும், 'நகரம்' என்றும், 'நல்லூர்' என்றும், 'பட்டினம்' என்றும், பெயர் பெற்றன. இவை அரசனின் ஆளுகைக்குள் இருந்தாலும் தங்களுக்குரிய அவையின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வந்தன.

ஊராட்சி

பாண்டிய நாட்டில் மிகச் சிறப்பான ஊராட்சி முறை இயங்கி வந்தது. சபை [மகாசபை], ஊர், நாடு என்ற அவைகள் ஊராட்சி நிர்வாக அவைகளாகும். பிரம்ம தேயங்களில் இருந்த அவை 'சபை' என்றும், பிற இடங்களில் இருந்த

1. புறம் - 24
2. பாண்டியர் செப்பேடுகள் பத்து – பக். 22, 69
3. S.I.I. XIV No. 239, 71, 245, 265, 157
4. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 69, 106
5. S.I.I. XIV. No. 52, 54, 95, 205, 194, 126, 37, 136
6. பாண்டியர் செப்பேடுகள் பத்து - பக். 22

அவை, 'ஊரவை' என்றும், வணிகர்கள் வசித்த பெருநகரங்களிலுள்ள அவை 'நகரவை' என்றும் குறிக்கப்பட்டன. சபை அலுவலர்கள் 'சபையார்' என்றும், ஊர் அலுவலர் 'ஊரார்' என்றும் நகரவை அலுவலர்கள் 'நகரத்தார்' என்றும் அழைக்கப்பட்டதைத் திருச்செந்தூர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.[1] சபைகள் பல வாரியங்களை அமைத்துக் கொண்டு பணி செய்தன.

வாரியத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை நெல்லை மாவட்டத்து மானூர்க் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[2] கற்றறிந்த அறிஞர்களே தலைவராகத் தகுதி உடையவர் என்று கூறுகின்றது. உறுப்பினர்த் தகுதியாக,

1. ஊர்ப்பங்குகளை உடையவராயினும் கல்வியறிவில்லாதாராயிருப்பின் எந்த வாரியத்திலும் உறுப்பினராக இயலாது என்றும்,
2. அதே நேரத்தில் பங்குகளை உடையோர் சபையின் அனைத்து நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ளலாம் என்றும்,
3. ஆனால் அவர்கள் சபை எடுக்கும் எந்த முடிவையும் தடுக்கவோ' எதிர்க்கவோ தகுதியற்றவர் என்றும் தெளிவாகக் கூறுகின்றது. இதனையும் மீறித் தடை செய்வாராயின் தண்டனைக்கு உரியவராவார் என்று மேலும் பல விதிகளையும் கூறி நிற்கின்றது.

தமிழகத்தில், அவை உறுப்பினர்களுக்குரிய விதிகளை எடுத்துக் கூறுகின்ற கல்வெட்டுகளில் மிகப் பழமையானது இதுவேயாகும். இக்கல்வெட்டின் காலம் கி.பி. 802 ஆகும்.

ஒவ்வொரு நாட்டிலும் ஒரு நாட்டு அவை இயங்கி வந்தது. நாட்டவை உறுப்பினர் 'நாட்டார்' எனப்பட்டனர். இவர்கள், நிலங்களின் தரத்தைக் கணித்தல், வரிவிதித்தல் அறையோலை செய்து கொடுத்தல் முதலான பணிகளைச் செய்து வந்தனர் என்பதைத் தளவாய்புரச் செப்பேடு வழி அறியலாம்.[3] இவர்கள் தனியாகவும், தேவை ஏற்படின் பிற நாட்டார், ஊரார், கணக்கர்களுடனும் சேர்ந்தும் அரச ஆணைகளை நிறைவேற்றி வைத்தனர் என்பதைத் தளவாய்புரச் செப்பேடு;

'கலைபயில் கிழவங் கோனும்
　கணக்கு நூல் பயில் கணக்கராகவும்
மாசில்வான் குடிதோன்றி ஆசிநாட்டாரும்
மச்சுறுவளம் அணலிவேந்த நேச்சுர
　நாட்டு நாட்டாரும்
உடனாகி எல்லை காட்டிப் பிடிசூழ்ந்து
　பெருநான் கெல்லை,[4]

என்று கூறுவதன் மூலம், இருநாட்டுக்குரிய எல்லை தெரிவிக்க இருநாட்டரும் கணக்கரும் பணியாற்றியதை அறிய முடிகின்றது. சபையில் ஏரி வாரியம் என்ற தனிக்குழு இருந்து குளங்கள் ஏரிகள் போன்றவற்றைத் தூர் எடுத்தும், சீர்செய்தும் பராமரித்து வந்தது.

குலசேகர பாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, நிலத்திற்கு உரியவரும், நிலத்தைப் பயிரிடுவோரும் எவ்வாறு நெல்லைப் பிரித்துக் கொள்வது; எவ்வாறு அரசுக்கு வரியைச் செலுத்துவது; போன்றவற்றில் ஏற்பட்ட சிக்கலைத் தெரிவிக்கிறது. இச்சிக்கலை ஜனநாதச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி சபையார் ஆய்வு

---

1. S.I.I. Vol. XIV - 16-A
2. மேலது 37
3. பாண்டியர் செப்பேடுகள் பத்து - பக். 127
4. மேலது - பக். 128

செய்து நிறைவேற்றிய தீர்மானங்களையும் எடுத்துக் கூறுகின்றது.[1] இதன்மூலம் வழக்கைத் தீர்க்கும் உரிமை சபையாரிடம் இருந்ததையும், இத்தீர்மானங்களை நிறைவேற்றச் சபை பாடுபட்டதையும் அறிய முடிகின்றது. இக்கட்டளையிலிருந்து தவறும் சபையார் அதற்குரிய தண்டனையை அடைவார்கள் என்றும் அக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

அரசு வரிகளைத் தவிர ஊர்ச் சபைகளும் பொதுக்காரியங்களுக்காகச் சில வரிகளை விதித்தன. உள்ளூர் நீர் நிலைகளைப் பாதுகாக்க, ஊர்க்காவலைப் பலப்படுத்த, சபைச் செலவுகளை ஈடு செய்ய அவ்வரிகள் பயன்பட்டன. தொடர்ந்து வரி செலுத்தாதார் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுக் கோயிலுக்கோ, சபைக்கோ மாற்றப்பட்டன.[2] இவர்களுக்கு வரி விதிக்கும் உரிமையிருந்தது என்பதோடு வரிகொடாதவர்களைத் தண்டிக்கும் உரிமையும் இருந்தது என்பதை அறியலாம்.

தானம் அளிக்கப்பட்ட நிலங்களும், அதன் எல்லைகளும், அதன் உரிமையாளர்கள் பற்றிய விவரங்களும் மகாசபையின் குறிப்பேட்டில் எழுதப் பட்டதைத் தளவாய்புரச் செப்பேடு தெரிவிக்கின்றது. இதன் மூலம் ஒரு ஊரின் நிலத்தைப் பற்றிய அனைத்து விவரங்களும் அடங்கிய 'அடங்கல்' சபையோரால் பராமரிக்கப்பட்டதை அறியலாம்.

சபையார் மன்னனிடம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க கோயிலுக்கு நிலத் தானம் வழங்கியதை ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது[3] இதே போன்று ஒரு நிலத் திற்குரிய விலையைப் பெற்றுக் கொண்டு, அந்த நிலத்திற்காக ஊர்ச்சபைக்குச் செலுத்த வேண்டிய வரியையும் பெற்றுக் கொண்டு வரிநீக்கிக் கொடுக்கின்ற உரிமைச் செய்தியினைக் ஸ்ரீ வல்லபனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[4]

பெரும்பாலும் சபை கூடிய இடம் கோயிலாகவும், ஊர்ப் பொது மன்றமாகவும் இருக்கும். விஜயநாராயணத்துச் சபை கூடிய இடம் கோயிலாகவும், அதே வேளையில் சூரிய கிரகணத்து நாளாகவும் இருந்தது என்பதைக் கோச்சடையன் மாறனின் கல்வெட்டு' இவ்வூர் மகாசபை சூரிய கிரணத்து நாள் மனோமய ஈச்சரத்துப் பெருங்குறி கூடியிருந்து, என்று கூறுவதன் மூலம் அறியலாம்.[5]

கோயிலை மையமாக வைத்து ஊர்கள் அமைப்பதைப் பாண்டியர்கள் வழக்கமாகக் கொண்டனர். கோயிலைச் சுற்றித் தேரோடும் பெரு வீதிகளும், பெருவீதிகளிலிருந்து பிரிந்து செல்லும் கிளை வீதிகளும் அமைக்கப்படுவது இயல்பாய் இருந்தது. செல்வந்தர்களும் அரசு அலுவலர்களும் வசிப்பதற்குரிய வீடுகள் அமைந்த மாடவீதிகளும் இருந்திருந்தன. அந்தணர்கள் வாழ்கின்ற அக்ரகாரங்கள் கோயிலைச் சுற்றியும், மற்ற தொழில்புரிவோர் தனித்தனி வீதிகளிலும் தங்கியிருந்தனர். அங்காடித் தெருக்களும் பெருநகரங்களில் இருந்தன.

மன்னர்கள் அவ்வப்போது நகர்களையும் ஊர்களையும் திருத்தியமைத்ததை மெய்க் கீர்த்திகள் எடுத்தியம்புகின்றன. 'தென்மதுராபுரி திருவிளையாட்டத்திற்கண்டு' எனச் சடைய வர்மன் வீரபாண்டியன் மெய்க்கீர்த்தியும் 'அண்டநாட்டு மின்னு கொடி நெடுமாட வீதி

1. நடன. காசிநாதன், தொல்லியல் கட்டுரைகள் பக். 69-70
2. கே. வி. இராமன், பாண்டியர் வரலாறு - பக். 114
3. S.I.I. Vol. XIV - 205
4. மேலது பக். 213
5. மேலது - பக். 67

வீரபாண்டியபுரமான செல்லூர்' எனச் சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் மெய்க் கீர்த்தியும், 'வளமதுரை நகர் கண்டும் மற்றதற்கு மதில் வகுத்தும், கூடல் வஞ்சி கோழி யென்றும் மாடமாமதில் புதுக்கியும்' என்று பராந்தக நெடுஞ்சடையனின் செப்பேடும் தெரிவிக்கின்றன.[1]

மன்னன் வாழ்கின்ற நகரம் உயரமான மதிற்சுவரையும் ஆழமான அகழியையும் கொண்டதாகத் திகழ்ந்ததைப்

பொன்மாட நெடுவீதிக் கரவந்தபுரம்
பொலி வெய்தக் கண்ணகன்றதோர்
கல்லகழொடு விசும்பு தோய்ந்து
முகிறுஞ்சலில்
அம்பறாத அகன் சென்னி நெடுமதிலை வடிவமைத்து'

என்று ஸ்ரீவரமங்கலத்துச் செப்பேடு தெரிவிக்கின்றது.[2]

சோழர் காலம்

பேராட்சியும், ஊராட்சியும் பல்லவர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் தோன்றி ஓரளவு வளர்ச்சியுற்றிருந்தாலும் அதனை முழுமை பெறச் செய்து, பல்லாற்றானும் தெளிவானதும் விரிவானதுமான ஆட்சியை ஏற்படுத்தியவர்கள் சோழர்களே எனலாம். சோழர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைப் பல மண்டலங்களாகப் பிரித்துக் கொண்டனர். இராசராசன் காலத்தில் சோழமண்டலம், இராசராசப் பாண்டி மண்டலம், செயங்கொண்ட சோழ மண்டலம், மும்முடிச் சோழ மண்டலம், நிகரிலிச் சோழ மண்டலம், அதிராசச் சோழ மண்டலம், மலை மண்டலம் எனப் பெயர் சூட்டப்பட்டு ஆளப்பட்டு வந்தது.[3] சோழமண்டலத்தைத் தவிர பிற மண்டலங்கள் யாவும் பிற மன்னர்களால் ஆளப் பட்டவையாகும். சோழன் அம்மன்னர்களை வென்று கைப்பற்றியபின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பெயர் இட்டுத் தன் ஆளுகைக்குள் நிலையாக வைத்துக் கொண்டான். மண்டலங்கள் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டன. வளநாடுகளின் உட்பிரிவுகள் நாடுகள் அல்லது கூற்றங்கள் என்றழைக்கப்பட்டன. நாடுகள் பல ஊர்களையும், தனியூர்களையும், சதுர்வேதிமங்கலங்களையும் கொண்டு விளங்கின.[4] இவ்வாறு சிறு சிறு பிரிவுகளாகப் படிப் படியாகப் பிரித்துக் கட்டுக்கோப்பான கிராம ஆட்சி முறையைச் சோழர்கள் திறம்படச் ஆற்றினர்.

பேராட்சி

பேராட்சியின் தலைவனாக மன்னனே இருந்தான். அரசுரிமை தந்தைக்குப்பின் மூத்த மகனுக்கு வழங்கப்பட்டது. மன்னன் ஆளுகின்றபோதே மூத்த மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்டப்பட்டு அரசியல் முறைகளை அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. இளவரசர்களாக இருந்தபோதே பல போர்களில் ஈடுபட்டு வெற்றிவாகைச் சூடியதை வரலாற்று நிகழ்ச்சிகள் நமக்குத் தெரிவிக்கின்றன. முதல் பராந்தகன் இராசாதித்தனுக்கும், சுந்தர சோழன் ஆதித்த

1. பூ. சுப்பிரமணியன், மெய்க்கீர்த்திகள் - பக். 172, 20
2. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக். 59
3. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் சரித்திரம் பக். - 472
4. மேலது - 475

கரிகாலனுக்கும், முதல் இராசராசன் இராசேந்திரனுக்கும், முதல் இராசேந்திரன் இராசாதி ராசனுக்கும், முதல் குலோத்துங்கன் விக்கிரமனுக்கும் இளவரசுப்பட்டம் கட்டி அரசாண்டனர்.[1]

தங்கள் ஆட்சிக்கு உறுதுணையாக அமைச்சர்களையும் பல்வேறு அரசுப் பணியாளர் களையும் நியமித்துக் கொண்டனர். அரசியல் நிருவாகத்தில் 'உடன்கூட்ட அதிகாரிகள்' என்போர் துணை புரிந்தனர். அமைச்சர்களில் தலையாயவன் முதலமைச்சன் ஆவான். கல்வெட்டில் இதற்கு நேரடிச் சான்றுகள் இல்லையாயினும் விக்கிரம சோழன் உலா, கலிங்கத்துப்பரணி போன்ற நூல்கள் சோழர் ஆட்சியில் முதன் மந்திரியும் அமைச்சர் குழுவும் இருந்ததைத் தெரிவிக்கின்றன.[2] சோழ மன்னர்கள் தம் அவைக்களத்தில் நான்கு அமைச்சர்களோடு வீற்றிருந்ததை நேரில் பார்த்ததாகச் சீன யாத்ரீகன் 'சௌ-சூ-குவா' தம் நூலுள் குறிப்பிடுகிறான். அரசனின் வாய்மொழி ஆணையை எழுத்தில் வடிக்கப் பல அதிகாரிகள் இருந்தனர். திருமந்திர ஓலை, என்பான் மன்னனிடம் ஆணையை உடனுக்குடன் ஓலையில் எழுதும் அலுவலனாவான். திருமந்திர ஓலைநாயகம் என்பவன் மேற்கூறிய அலுவலன் எழுதிய ஆணைகளைச் சரிபார்த்து மேலொப்பமிடும் அலுவலனாவான். 'விடையில் அதிகாரி என்பவன் அரசனின் ஆணையில் முத்திரையைப் பதியவைத்துச் செயலாக்கம் பெற அனுப்பி வைக்கின்ற அதிகாரியாவான். அரசனின் ஆணைப்படி பல்வேறு இடங்களுக்குச் சென்று பணிகளை ஆய்வு செய்பவன் 'காரிய ஆராய்ச்சி' என்பவனாவான். ஊர்ப்பகுதிகளில் பாதுகாவலை மேற்கொண்ட அலுவலன் 'பாடி காவல்' எனப்பட்டான். நாடு அளவில் பாதுகாவலை மேற்கொண்டவன் நாடுகாவல் என்றழைக்கப்பட்டான்.

சோழமன்னர்களுக்கு நிலவருவாயிலிருந்தே பெருமளவு நிதி பெறப்பட்டது. அந்நில வரியை ஒழுங்கு செய்து கொடுக்க வேண்டியது புரவு வரி திணைக் களத்தாரின் பங்காகும். இந்த அடிப்படையில் பல அதிகாரிகள் பணியாற்றி வந்தனர். புரவு வரித் திணைக்களம் புரவு வரித் திணைக்களத்து நாயகன், புரவு வரித் திணைக்களக்கூறு, புரவு வரித் திணைக் களத்துக் கண்காணி, வரிப்பொத்தகம், வரிப்பொத்தகக் கணக்கு, வரிப்பொத்தக நாயகம், முகவெட்டி, கீழ்முகவெட்டி, மாதண்டநாயகம், பட்டோலை போன்றோர் இருந்தனர்.[3]

இவர்களைத் தவிர படைப்பிரிவில் சேனாபதி, படைத்தலைவர் போன்ற பதவிகளும் இருந்தன. 'கிருஷ்ணன் இராமனான மும்முடிச்சோழ பிரம்மராயன், உலகளந்தானான இராசராசமாராயன்' என்போரும், 'மழபாடியான மும்முடிச்சோழன், விக்கிரமசிங்க மூவேந்த வேளான், நல்லூர்க்கிழான், தாழிக்குமரன்' போன்றோரும் படைத்தலைவர்களாக இருந்தனர்.[4] ஆண் அரசு அதிகாரிகளைப் போலவே பெண் அதிகாரிகளும் இருந்தனர். இவர்கள் 'அதிகாரிச்சிகள்'[5] என்றழைக்கப்பட்டனர். அவர்களில் 'எருதந் குஞ்சர மல்லி'[6] 'அதிகாரிச்சி முத்தான பொன் நங்கை' என்போர் குறிப்பிடத்தக்கோராவர்.

மன்னனின் ஆணையை நிறைவேற்றுவதற்குப் பல அதிகாரிகளின் ஒப்பம் தேவைப் பட்டது. இதனைக் கன்னியாகுமரியிலுள்ள இரண்டாம் இராசேந்திரனுடைய நான்காம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1055) கல்வெட்டு மிகத் தெளிவாகக் கூறுகிறது.[7] இம்மன்னன் தம்

---

1. சதாசிவ பண்டாரத்தார் பிற்கால சோழர் சரித்திரம் பக். 476, 477
2. மேலது பக். 479
3. மேலது. பக். 481
4. மேலது பக். 485
5. மேலது பக். 485
6. இராசராசன் சிறப்பு மலர், பக். 35
7. நடன. காசிநாதன் ப. ஆ. கன்னியாகுமரி கல்வெட்டுக்கள், தொகுதி I - 50

பட்டத்தரசி முக்கோக்கிழானடிகளுடைய பிறந்த நாளான அத்தத் திருநாளைத் திங்கள் தோறும் கோயிலில் கொண்டாடுதற்கும், இராசராசப் பெரும்பள்ளியின் செலவினத்திற்காகவும் தேவதான நிலங்களுக்கு வரிநீக்கம் செய்து அவ்வாறு நீக்கப்பட்ட வரிகளை இச்செயல் தடையறாது நடைபெறத் தானமாக வழங்கி உள்ளான். இந்த ஆணை கல்வெட்டாகிச் செயல்படும் வரை 16 பிரிவினைச் சேர்ந்த அதிகாரிகள் ஒப்பமிட்டிருப்பதை கன்னியாகுமரி கல்வெட்டால் அறியமுடிகின்றது.

கல்வி

கல்விச் சாலைகள் பல இருந்த செய்திகளையும், அவர்கள் அதற்குச் செய்த உதவி களையும் பல கல்வெட்டுகள் எடுத்துக்கூறுகின்றன. தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரம் என்ற ஊரில் காணப்படுகின்ற முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு, கல்லூரி இயங்கிய முறையினை எடுத்தியம்புகின்றது.[1] இதன்மூலம் கோயிலே கல்விக்கூடமாக விளங்கியதையும், கல்வி வளர மன்னன் பாடுபட்டதையும் அறியலாம். மாணவர்களுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் பலவகையான சலுகைகள் வழங்கப்பட்டன.

இதேபோன்று திரிபுவனத்திலும், திருமுக்கூடலிலும் கல்லூரிகள் இயங்கின. திருவாவடு துறையில் மருத்துவக் கல்லூரியும் திருவொற்றியூரில் இலக்கணக் கல்லூரியும் இயங்கி வந்தன.[2] கன்னியாகுமரியிலிருந்த கல்விச் சாலைக்குத் தேவையான உப்பினை மகிபால குலகாலப் பேரளத்திலிருந்து வழங்க வேண்டும் என்று உப்பளம் கூறு செய்யும் அதிகாரி களுக்கு ஆணை இட்டதை இராசாதிராசனின் கன்னியாகுமரிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதே கல்விச் சாலைக்கு இரண்டாம் இராசேந்திரன் ஊர் வரிகளைத் தானமாக அளித்ததை இம்மன்னனின் கல்வெட்டு வாயிலாக அறியலாம்.[3]

தமிழ்மொழியும், வடமொழியும் வளர்வதற்கு மன்னனது ஆதரவு இருந்தது இராசராச னுடைய குருவாக விளங்கிய கருவூர்த் தேவரே சிறந்த சமய இலக்கிய வாதியாக இருந்தார் என்பதை அறிய முடிகின்றது. இம்மன்னன் காலத்திலேயே திருமுறைகள் தொகுக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. மெய்க்கீர்த்திகளே சோழ மன்னர்களின் கல்வித் தரத்தை எடுத்து இயம்பும் சான்றுகளாகத் திகழ்கின்றன. திருக்கோயிலூருக்கு அருகிலுள்ள கீழூரில் காணப்படுகின்ற முதலாம் இராசராசனின் பாடல் கல்வெட்டு 'ஜய ஜய' எனத் தொடங்கு கின்றது. இது தில்லையில் எழுந்தருளியிருக்கும் கூத்தனுக்கு வழங்கிய தானத்தைக் குறிப்பிடு கின்றது. மேலும் இது 'தொடக்கத்தில் இராசராசனின் புகழைக் கூறிப் பின்னர் முத்தமிழை வளர்த்த செய்தியினை,

'பாடகச் சீரடிப் பனைமுலைப் பாவையர்
நாடகத் துழவு நவின்றது . . .
. . . .
பக்தர்தம் பாடல் பயின்றது முத்தமிழ்
நாவலர் நாற்கவி நவின்றது[4]

என்ற வரிகளில் தெளிவாக்குகின்றது பல்வேறு இசைக் கருவிகளின் பெயரையும் துள்ள லோசையில் எடுத்தியம்பும் பாங்கு தமிழ்க்கல்வி மேம்பட்டு விளங்கியதைத் தெளிவு படுத்துகிறது.

---

1. பொன். தங்கமணி, பழங்கால இந்தியா பக். 419
2. மேலது பக். 419
3. நடன. காசிநாதன்,(ப.ஆ.) கன்னியாகுமரி கல்வெட்டுக்கள், தொகுதி-I - 121, 56
4. பூ. சுப்பிரமணியன், மெய்க்கீர்த்திகள் பக். 16, 92-102

நிதி

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்ற வள்ளுவரின் வாக்கு மனிதனுக்கு மட்டு மல்ல அரசுக்கும் பொருந்தும். சோழர்கால அரசியலில் பொருளை முறையாகத் திட்டமிட்டு ஈட்டி அதனைப் பல்வேறு நல்வழிகளில் செலவு செய்தனர். பொருளை ஈட்டுவதற்கு நிலவரி, ஊர்வரி, வணிகவரி போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டிருந்தனர். தொழில் வரியும் விதிக்கப்பட்டது. நிலவருவாயைக் 'கடமை' எனவும், 'காணிக் கடன்' இறை' எனவும் கல்வெட்டுகள் சுட்டுகின்றன.

நிலவரியானது நிலங்களின் தரத்திற்கு ஏற்பவும், அளவிற்கு ஏற்பவும் வசூலிக்கப் பட்டது. ஊர்தோறும் இருந்த சபையார் குடிமக்களிடமிருந்து மேற்படி வரியைப் பெற்று அரசுக்கு செலுத்தக் கடமைப் பட்டிருந்தனர். விளைச்சலில் ஆறில் ஒரு பங்கினை வரியாக வசூலித்தனர். இச்செய்தியினைக் கூறும் முதற் பராந்தகனின் செங்கற்பட்டுக் கல்வெட்டு.

'ஆறு கூறில் புரவுமாயதியும் பொன்னும்
பெறுமாறு சோழ கோன்...பறிவையர் கோன்
மங்கல வீரசோழன் அத்தி மல்லன்
முங்கில் வரி என்னும் வயல்தான் கொடுத்தான்'

என்று கூறுவதைக் காணலாம்[1] மேலும் நிலம் பார்த்து, விளைந்ததற்கு ஒரு மா நிலத்திற்கு நெல் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை

'நீங்கா நெற்றுகை ஆங்கொரு
மாவிற்கு அறுகலமாக'

என்று இராசராசனின் கல்வெட்டு கூறுவதை அறியலாம்.[2] இவ்வாறு நிலவரியேயன்றித் தறி யிறை, செக்கிறை, மனையிறை, குமரக் கச்சாணம், மீன்பாட்டம், இலைப் பாட்டம், ஊர்க் கழஞ்சு, பாடிகாவல் கூலி, ஆயம், தரகுகூலி, தட்டார்ப் பாட்டம், தறிப்புடவை, கோல்கூலி வண்ணாரக் காணம், குசக்காணம், ஓடக்கூலி, தரகு, உல்கு எனப் பலப்பல வரிகள் இருந்த தைக் கல்வெட்டுகள் நமக்கு எடுத்து இயம்புகின்றன.[3] நிலவரியே புரவுவரி என்று அழைக்கப் பட்டது. மற்ற வரிகள் அந்தராயம் என்று அழைக்கப்பட்டன. வரி, இறை குடிமை, சுங்கம் போன்ற பெயர்கள் மக்களிடமிருந்து பெறப்பட்ட வரிகளின் பெயர்களாகும்.

அன்பிற் செப்பேடு, ஆனைமங்கலச் செப்பேடு, திருவாலங்காட்டுச் செப்பேடு எனப் பல சோழர் காலச் செப்பேடுகள் மூலம் வரிகள் பல இருந்ததை அறிந்து கொள்ள இயலுகின்றது.[4] சில சிறப்புத் தேவைகளுக்காகவும் அவ்வப்போது வரிகள் விதிக்கப்படுவது இருந்தது. நாட்டைக் காக்கும் பணியே மன்னனின் பணிகளுள் தலையானதாகும். ஆதலின் படையெடுப்பின்போது ஏற்படும் செலவுகளைச் சரிக்கட்டத் தனி வரிவிதிக்கும் முறை இருந்தது.[5]

கோயில் நிலங்களுக்கும், மக்களின் நிலங்களுக்கும் சிலவேளையில் மன்னன் வரிநீக்கம் செய்து தருவதும் இருந்துள்ளது. முதற் குலோத்துங்கச் சோழன் 'சுங்கம்' என்ற வரியை நீக்கியதால் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப் பெயர் பெற்றான்.[6]

1. Epi. Ind. Vol. IV No. 30. p. 224
2. பூ. சுப்பிரமணியன் - மெய்க்கீர்த்திகள் பக். 16
3. நடன. காசிநாதன், ப.ஆ. கன்னியாகுமரி கல்வெட்டுக்கள் தொ-I க. எண். 56
4. சதாசிவபண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம் பக். 524
5. மேலது பக். 527
6. கு. தாமோதரன், வரலாற்று அருவியில் சில மணிகள், பக். 67

சில வேளைகளில் வரிகள் சுமைகளாகும் போது மக்கள் கிளர்ந்தெழுந்து எதிர்த்ததையும் கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகின்றது. இராசராசச் சதுர்வேதி மங்கலத்து நாட்டார் வரிக் கொடுமை அதிகமாக இருந்த காரணத்தால் வேளாண்மை செய்வதில்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன் விளைவாகச் சபை, மகாசபை, பேரிளமை நாடு போன்ற அமைப்புகள் சுத்தவல்லிச் சதுர்வேதி மங்கலத்துத் தனியூர் இராசராசச் சதுர்வேதி மங்கலத்திலுள்ள இராசராசேச்சுரமுடையார் கோயிலில் கூடியிருந்து மேற்படி நிலைமை குறித்து ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கியுள்ளனர்.[1] வருங்காலங்களில் அவர்களிடம் வரிவசூல் செய்யத் தேவையில்லை என்றும், வரிகொடாத வேளாளர்களைச் சிறை வைப்பதையும், வீட்டுக் காவலில் வைப்பதையும் தடை செய்தனர். அத்துடன் வரியைக் குறைக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்ற தகவலைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது[2]

நாணயம்

சோழர் காலத்திலும் காசுகள் வெளியிடப்பட்டன. தமிழகத்தில் கிடைத்துள்ள காசுகளில் 'சோழர் காசுகள்' அதிகமாகும். ஆதலின் சோழர்கள் காசுகளை மிகுதியாக அச்சிட்டுப் புழக்கத்தில் விட்டனர் என்பதை அறியலாம். இவர்கள் ஆட்சிக் காலத்தில் தங்கம், வெள்ளி செம்பு ஆகிய உலோகங்களில் நாணயங்கள் உருவாக்கப்பட்டன,[3] காசுகளில் அவர்களது சின்னமாகிய புலியும், வெளியிட்ட மன்னனின் பெயரும் பொறிக்கப்பட்டு இருந்தன, சில காசுகளில் அவர்கள் வெற்றி கொண்ட நாட்டிற்குரிய சின்னங்களும் புலியுடன் பொறிக்கப் பட்டிருந்தன.

முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன், உத்தம சோழன் போன்ற மன்னர்களின் காலங்களில் காசுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை பொதுவாகச் செப்புக்காசுகளாக இருப்பினும், சிற்சில இடங்களில் தங்க நாணயங்களும் கிடைத்துள்ளன.[4] மாடை, காசு, அக்கம், திரமம், காணம் போன்ற பெயர்கள் நாணயத்தைக் குறித்து நிற்கின்றன.[5]

இராசராசன் காலத்தில் செப்பு நாணயங்கள் அதிகமாக அச்சடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஒருபுறம் நின்ற ஈழமனிதனின் உருவமும், மறுபுறம் அமர்ந்த ஈழ மனிதனின் உருவமும் காணப்படுகின்றது. அத்துடன் 'ராஜராஜ' என்ற பெயர் நாகரி எழுத்தில் பொறிக்கப் பட்டிருப்பதும் காண முடிகின்றது. இது தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கும் காசாகும்.[6] இம்மன்னன் காசுகள் அச்சடிப்பதிலும் ஒரு புதிய உத்தியைக் கையாண்டு வந்துள்ளான் என்பது தெரிகிறது. சேரநாட்டிற்குத் திருவடியும், பாண்டிய நாட்டிற்கு மீனும், சோழ நாட்டிற்குப் புலியும் பொறித்த காசுகளை அச்சடித்துப் புழக்கத்தில் விட்டனர்.[7]

கோதாவரி ஜில்லா தவளேசுவரத்தில் 120 பொன் நாணயங்கள் கிடைத்தன. அவற்றுள் 32 பொன் நாணயங்களில் கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இவை முதலாம் இராசேந்திரன் காலத்தில் அச்சடிக்கப் பட்டவையாகும். மேலும் சில காசுகளில் "மலை நாடு கொண்ட சோழன்" என்ற பெயர் கிரந்த எழுத்தில் காணப்படுகின்றது.[8] இது முதலாம் இராசராசன் காலத்தைச் சார்ந்ததாகும்.

---

1. S.I.I. Vol. VI Nos. 48, 58
2. மேலது
3. நடன. காசிநாதன், தமிழர் காசியல், பக். 59
4. சதாசிவபண்டாரத்தார் - பிற்கால சோழர் சரித்திரம் பக். 596
5. R. Nagaswamy - Tamil Coins, p. 66
6. இராசராசன் சிறப்பு மலர் பக். 34
7. நடன. காசிநாதன், தமிழர் காசியல், பக். 63
8. சதாசிவபண்டாரத்தார், பிற்கால சோழர் சரித்திரம் - பக். 596

வெளியுறவு

வணிகத்தையும், அரசின் வளத்தையும் பெருக்கிக் கொள்ள மன்னர்கள் பிற நாடுகளுக்குத் தூதுக் குழுவினை அனுப்பித் தங்கள் நாட்டின் புகழை எடுத்துக் கூறித் தங்கள் நாட்டிலுள்ள பொருட்களைப் பிற நாட்டு மன்னர்களுக்குப் பரிசுப் பொருட்களாக அனுப்பி வைத்தனர். சீனதேசம் வெளிநாடுகளோடு வணிகத் தொடர்பு வைத்துக் கொள்ள பேரார்வம் கொண்டிருந்ததை அறிந்த சோழ மன்னர்கள் தங்கள் தூதுவர்களைச் சீன தேசத்திற்கு அனுப்பினர். முதலாம் இராசராசன் கி.பி. 1012-ல் ஒரு தூதுக் குழுவை அந்நாட்டிற்கு (சீனத்திற்கு) அனுப்பி வைத்தான், அத்தூதுக்குழு கி.பி. 1015-இல் சீனதேசம் அடைந்தது. சீன அரசன் அவர்களை வரவேற்று அங்குள்ள அரண்மனையில் தங்கச் செய்தான்.[1] முதலாம் இராசேந்திரன் கி.பி. 1033-இல் ஒரு தூதுக் குழுவைச் சீனத்துக்கு அனுப்பி வைத்தான். அதன் பின்னரும் பல ஆண்டுகள் சோழ நாட்டிலிருந்து தூதுக் குழுக்கள் வந்ததைச் சீன நாட்டுக் குறிப்புக்கள் கூறுகின்றன.[2] முதல் குலோத்துங்கன் காலத்தில் 72 பேர் அடங்கிய தூதுக்குழு ஒன்று சீனத்திற்கு அனுப்பப்பட்டது. இது ஒரு சிறந்ததோர் வெளிநாட்டு வணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் பாலமாக அமைந்தது எனலாம். தமிழ் நாட்டிலிருந்து சீனா, சுமத்திரா, ஜாவா, மலேசியா போன்ற நாடுகளுக்குப் பல பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதைச் சௌ-சூ-குவா என்ற சீனத்து நூலாசிரியர் கூறுகின்றார்.[3]

சோழ நாட்டில் பல கடற்கரைப் பட்டினங்கள் இருந்தன. அக்கடற்கரைப் பட்டினங்கள் வாயிலாகக் கடல் வாணிகம் சிறந்து விளங்கிற்று. முதலாம் இராசராசன் நாகையில் கடாரத்து அரசன் விஜயோத்துங்கவர்மனுக்குப் புத்தவிகாரம் அமைப்பதற்கு அனுமதி வழங்கியதுடன் தானமும் வழங்கி செப்பேடு வெளியிட்டுள்ளான். அதன்மூலம் அனைத்து மதத்தையும் ஒரு சேர மதிப்பளித்து போற்றினான் என்பது தெரிய வருகிறது.[4]

சோழ அரச குமாரன் புத்த மதத்தைத் தழுவினான் என்றும், அவன் தன்னுடைய மகளை மான் அரசனுக்கு மணம் செய்து வைத்தான் என்பதையும் ப்ரோமில் கண்டுபிடிக்கப் பட்ட பழந்தடையம் ஒன்று கூறுகின்றது.[5]

சோழருக்கும் சீனருக்கும் ஏற்பட்டுள்ள வணிகத் தொடர்பை 'சூ-கூ-பி' தெளிவாக எடுத்துக்கூறுகின்றார். 'சு-பான்-சி', 'சௌ-சு-வா' என்ற சீன நூல்களும், அல்பர்னி என்ற அராபியரும், மானடிகாரி, பிளாகான், அபுல்பேடா, மான் ஆவணம் போன்ற குறிப்புகளும் வெளிநாட்டார் தொடர்பினைத் தெளிவுபடுத்துகின்றன.

நீர்ப்பாசனம்

அரிசிலாறும், காவிரி ஆறும், பல சிற்றாறுகளும் காலங்காலமாக சோழநாட்டை வளப்படுத்தி வருகின்றன.

சோழ மன்னர்கள் காடு திருத்திக் கழனியாக்கியும், குளங்கள் பல வெட்டியும், அணைகள் பல கட்டியும் விளைவினை மேம்படுத்திய காரணத்தால்; சோழ நாடு சோறுடைத்து' என்று கூறுவதற்குரியதாயிற்று.

---

1. சதாசிவ பண்டாரத்தார் - பிற்கால சோழர் வரலாறு, பக். 588 - 589
2. தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டார் குறிப்புகள் - பக். 43
3. சதாசிவ பண்டாரத்தார் - பிற்கால சோழர் சரித்திரம் – பக், 589
4. இராசராசன் சிறப்பு மலர் - பக். 34
5. தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் - பக். 43

கரிகாலன் காவிரிக்குக் கரை எழுப்பிய செய்தியினைத் திருவாலங்காட்டுச் செப்பேடும், வீரராசேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டும் புகழ்ந்து கூறுகின்றன.[1] வீரராசேந்திரன் ஸ்ரீரங்கத்திற்கு அருகில் பேரணை ஒன்றைக் கட்டினான். அவ்வணையினால் நீர்வளம் பெருகி நெல் விளைவு மிகுதியானது. தற்காலம் வரை இவ்வணை வலுவுடையதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.[2] வீரசோழ வடவாறு,[3] மதுராந்தக வடவாறு,[4] கீர்த்திமானாறு,[5] முடிகொண்டான் ஆறு,[6] வீர சோழன் ஆறு,[7] போன்ற ஆறுகள் சோழ மன்னர்கள் பலரால் வெட்டப்பட்டுள்ளன. இவை பேராறுகளிலிருந்து பிரியும் கிளையாறுகளாகும்.

வீரநாராயணன் ஏரி முதற் பராந்தக சோழனால் ஏற்படுத்தப்பட்டதாகும்.[8] கலியனேரி,[9] கண்டராதித்தப் பேரேரி,[10] செம்பியன் மாதேவிப் பேரேரி,[11] மதுராந்தகப் பேரேரி,[12] சுந்தர சோழப் பேரேரி,[13] குந்தவைப் பேரேரி[14] என்பன போன்ற பல ஏரிகள் சோழ மன்னர்களின் பெயரைத் தாங்கி நிற்கின்றன. இன்றளவும் அவை நிலை பெற்றுச் சோழர்களின் புகழைப் பறை சாற்றுகின்றன.

முதலாம் இராசேந்திரன் தனது கங்கை வெற்றியைக் கொண்டாடும் வகையில் தன்னுடைய புதிய தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மேற்கே 'சோழ கங்கம்' என்ற பெரிய ஏரியை வெட்டி வைத்தான். அதனை 'நீர்மயமான வெற்றித்தூண்' என்று பெருமையாகக் கூறிக்கொண்டான்.[15]

இவ்வேரியிலிருந்து பிரியும் வாய்க்கால் ஒன்றின் பெயர் 'இராசராசன் வாய்க்கால்' என்பதாகும். தன் தந்தையின் பெயரால் இதனை அமைத்தான் என்பது தெரிகிறது.[16] இம்மன்னன், 'வெற்றியைக் கொண்டாடுவதற்குக் கல்லால் ஆகிய தூணை நட்டால் மக்களுக்கு யாதொரு பயனுமில்லை' என்று கருதி ஏரியை வெட்டி மக்களுக்குப் பயன்படும் வகையில் தனது மகிழ்வைக் கொண்டாடியிருப்பது நீர்வளத்தைப் பெருக்குவதில் அவர்கள் கொண்டிருந்த அக்கரையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஏரிகளில் மதகுகள் கட்டியும், கால்வாய்களை வெட்டியும், கரைகள் இடியாது இருக்கக் கருங்கல்லால் சுவர் (Revetment) கட்டியும் சோழ மன்னர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்ப்பாசன வசதிகளைத் திறம்பட செய்துள்ளனர்.

---

1. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் சரித்திரம் - பக். 532
   நடன. காசிநாதன் ப. ஆ. கன்னியாக்குமரி கல்வெட்டுக்கள், தொகுதி I-79
2. மேலது பக். 559
3. S.I.I. Vol. VIII - 243
4. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு – பக். 555
5. மேலது
6. A.R.E. 1927-28 Nos. 75, 76
7. S.I.I. Vol. VII - 243
8. S.I.I. Vol. VI - 523, 525
9. மேலது - 106
10. A.R.E. 1919-140
11. S.I.I. Vol. V - 644
12. மேலது – 993
13. A.R.E. 1915-2
14. A.R.E. 1915 - 264
15. S.I.I. Vol. III - 205
16. மேலது

மன்னனால் ஏற்படுத்தப்பட்ட நீர்நிலைகள் பழுதுற்ற வேளையில் பழுதுநீக்கிச் செப்பனிட ஏரிவாரியங்கள் முன் நின்றன என்பதும் கல்வெட்டால் நாமறியும் உண்மையாகும்.

அளவைகள்

'நீர் உயர நெல்லுயரும்' என்ற பழமொழிக்கேற்ப; மன்னனால் செய்யப்பட்ட நீர்பாசனத்தின் வழி நில வளம் பெருகிற்று. விளைவு பெருகப் பெருக மன்னனுக்கு வருவாய் மிகுதியாகக் கட்டியது. நில வருவாய் நிருணயிக்க நிலங்களின் தரம் அறியப்படுவது அவசிய மாயிற்று. அதற்கு 'நிலமளத்தல் பணி' முக்கியம். வரிவிதிப்பதில் உள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கு நிலங்கள் முறையாக அளக்கப் பெற்றன.

முதலாம் இராசராசன் தனது 16-ஆம் ஆட்சியாண்டில், 'உலகளந்தான் இராசராச மாராயன்' என்ற அதிகாரியைக் கொண்டு நிலத்தினை முறையாக அளந்து கணக்கிட்டான்.[1] அவ்வாறு அளப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல் 16 சாண் நீளம் உடையதாக இருந்தது. அதற்கு 'உலகளந்தான் கோல்'[2] என்ற பெயர் வழங்கப்பட்டது. இதுவே இராசராசன் காலத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோலாக இருந்திருத்தல் வேண்டும். இவ்வளவுகோல் தமிழ்நாட்டின் பல இடங்களில் வழக்கில் இருந்துள்ளது.[3]

குடிமல்லம் என்ற ஊரிலுள்ள முதலாம் ஆதித்தன் கல்வெட்டில் "கடிகைக் களத்து பதினாறு சாண் கோலால் ஐம்பது குழி கொண்டது ஒரு மாவாகவும், 1000 குழி கொண்டது ஒரு பட்டியாக விலை கொடுத்துக் கொண்ட நிலம் இரண்டு பட்டியிலும்"[4] என்று வருவதன் மூலம் பதினாறு சாண் கோல் வழக்கிலிருந்துள்ளதை உணரலாம் முகத்தல் அளவு கருவிகளும் முறைப்படுத்தப்பட்டன. 'திருமறைக்காடன் உழக்கு', 'இராசகேசரி எண்ணாழிக்கால்' 'நாலுழக்கு வழுவா நாழி', 'அருமொழித்தேவன் எண்ணாழிக்கால்' 'உலோகவிடங்கன் நாழி 'அருமொழித்தேவன் மரக்கால்', 'கேரளாந்தகன் மரக்கால்' போன்ற பெயர்கள் அளவு கருவிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.[5] நிறுத்தல் அளவுக் கருவிகளும் முறைப்படுத்தப்பட்டன, 'ஆடவல்லான் கல், தட்சிண மேருவிடங்கன் கல், பரகேசரிக்கல்' போன்றவை அரசால் அனுமதிக்கப்பட்ட எடைக்கற்களாம்.[6] அளவுகளால் ஏற்படும் பூசல்களைத் தவிர்ப்பதற்காகத் தம் பேரால், இறைவன் அல்லது ஊரின் பேரால் பொதுவான சரியான அளவுகளை ஏற்படுத்தினர்.

ஊராட்சி

நீர்நிலைகளின் அமைப்பிற்கேற்ப ஊர்கள் ஏற்படலாயின. தேரோடும் திருவீதிகளையும் குடியிருப்புத் தெருக்களையும் கொண்டு ஊர்கள் அமைந்திருந்தன. பெருந்தெருக்கள் யாவும் மன்னன் பெயர்களைக் கொண்டு விளங்கின. 'மும்முடிச் சோழப் பெருந்தெரு', 'நித்த விநோதப் பெருந்தெரு', 'வீரசிகாமணிப் பெருந்தெரு', வீரசோழப்பெருந் தெரு, ஜெயங்கொண்ட சோழப் பெருந்தெரு,' 'இராச வித்தியாதரப் பெருந்தெரு 'வீரசிகாமணிப் பெருந்தெரு எனத் தெருக்களின் பெயர்கள் வழங்கப்பட்டன.[7] சில தெருக்கள்

---

1. S.I.I. Vol. II - 95
2. S.I.I. Vol. XXIII - 487
3. S.I.I. Vol. VII - 887, 947, 1047
   மேலது Vol. VIII - 316
4. தமிழ் இலக்கியங்கள் கல்வெட்டுக்கள் காட்டும்
   தமிழ் எண்கள் அளவைகள் குறியீடுகள், பக் - 183
5. மேலது பக். 371 – 381
6. மேலது பக். 404 - 409
7. சா. கணேசன், இராசராசன், பக். 74

அங்கு வாழும் தொழில் செய் மக்களைக் குறிப்பிடும் வகையில் 'ஆனை ஆட்கள் தெரு' சாலியத் தெரு' என அழைக்கப்பட்டன. தளிச்சேரிப் பெண்டுகளுக்குரிய வீடுகள் உள்ள தெருக்களில் வடசிறகிலும் தென்சிறகிலும் வீடுகள் கட்டப் பெற்றிருந்தன.[1] பேரங்காடிகள்' திரிபுவனமாதேவிப் பேரங்காடி' இராசராசப் பிரம்மமாராயன் அங்காடி என அரசன் அரசியர் பெயர்களில் விளங்கின. படை வீடு; 'இராசராசப் பிரம்மமாராயப் படைவீடு என்றழைக்கப்பட்டது.[2]

அழகிய தெருக்களையும் மாடமாளிகைகளையும் கொண்ட நகரங்கள் சோழர்களின் தலை நகரங்களாக விளங்கின. உறையூர், தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம், காவிரிப் பூம்பட்டினம் போன்றவை சோழர்களின் தலைநகர்களில் சில.

அரசின் தலைவனாக அரசன் கருதப்பட்டான். முறை செய்து காப்பாற்றும் மன்னவனாக மக்களுக்குப் பல்லாற்றானும் நன்மை செய்தான். கோயிலுக்கோ அன்றி பிறருக்கோ தானம் வழங்குவதை 'ஆணை' பிறப்பித்துக் கொடுப்பது மரபு அவ்வாணைகள் மொதுவாக அரண்மனையிலிருந்து பிறப்பிப்பார்கள். தேவை ஏற்படும்போது பிற இடங்களிலிருந்து வெளியிட்டனர். ஆணைகள் 'திருமுகம்' என்று சுட்டப்பட்டன. இராசராசனின் கல்வெட்டு ஒன்று தஞ்சாவூர்ப் புறம்படியிலிருந்து கொண்டு நாம் சொல்ல நம் ஓலை எழுதும் அமுதன் தீர்த்தன் என்று கூறக் காணலாம். இதில் தஞ்சாவூரின் அரண்மனைப் புறம்படியில் இருந்து ஆணை பிறப்பித்ததும் அதனை எழுதிய அலுவலன் பெயரும் தெரிகின்றது.[3] இதே போன்று இராசேந்திரனது கன்னியாகுமரிக் கல்வெட்டு; 'கங்கை கொண்ட சோழபுரத்துச் சோழ கேரளன் மாளிகையில் சோபானத்துக் காடு வெட்டியில் எழுந்தருளி இருந்து' ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று கூறுகின்றது.[4] எப்பொழுதெல்லாம் ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை, உத்தமச் சோழன் கல்வெட்டு; பழையாற்று நம் வீட்டில் ஆச்சிகோயில் முன்பில் கூடத்து நாம் உண்டிருக்க . . . .[5] என்றும் விக்கிரம சோழ தேவர்' 'திருவிடை மருதூரில் ஸ்ரீ கோயிலில் தியாகசமுத்திரன் திருவெழுத்துக் கட்டிலில் சோழகோன் எழுந்தருளியிருந்து'[6] என்றும் கூறும் கல்வெட்டு வரிகளால் நாம் அறியலாம்.

இராசேந்திரன்; 'காஞ்சிபுரத்தில் நம் வீட்டிலுள்ளாலை சித்திர மண்டபத்தில் இராசேந்திர சோழ பிரம்மாதி ராசனின் நாம் உண்ணா விருந்து'[7] என்று கூறுவதைக் காணும் போது உண்ணும் போதில் வழங்கப்பட்டது இவ்வாணை என்பது விளங்கும். இதே போன்று, 'உடையார் சோழ பாண்டிய தேவர் இராசேந்திர சோழபுரத்துக் கோயில் உள்ளால் திருமஞ்சன சாலையில் பள்ளிப் பீடத்தில் எழுந்தருளி இருந்த போது'[8] ஆணை வழங்கியதையும் அறிய முடிகின்றது.

நாட்டவை ஊரவை

பல நாடுகளைக் கொண்டது 'பெருநாடு' நாடுகள் பல சிற்றூர்களைக் கொண்டிருந்தன. சிற்றூர்கள் மற்றும் பிரம்மதேயங்கள் பல சபைகளைக் கொண்டிருந்தன. ஒவ்வொரு

---

1. இராசராசன் சிறப்பு மலர், பக். 6
2. மேலது பக். 23
3. A.S.S.I. Vol. IV p. 208, 209
4. நடன. காசிநாதன், கன்னியாகுமரி கல்வெட்டுகள், தொகுதி - I - 56
5. S.I.I. Vol. XXIII – 267
6. மேலது - 276
7. மேலது - 48
8. S.I.I. Vol. XIV - 194

நாட்டிற்கும் ஒரு தனிச்சபை அமைந்திருந்தது. அதனைச் சார்ந்தவர்கள் 'பெரிய நாட்டார்' என்றும், பெருக்காளர்கள்' என்றும் அழைக்கப்பட்டனர்.[1] இவர்கள் நாட்டின் பொதுக் காரியங்களை நிறைவேற்றுவதில் கவனஞ் செலுத்தினர். நாட்டிலுள்ள எல்லா நகரசபைகள் கிராம சபைகளின் உறுப்பினர்களைப் பிரதிநிதியாகத் தன்னகத்தே கொண்ட அமைப்பாகும். இவ்வகைகள் பலவிதமான பணிகளைச் செய்து வந்தன. நிலத்து எல்லை தெரிவித்தல், அறையோலை செய்தல், வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குதல், அறம் சார்ந்த காரியங்களை மேற்பார்வையிடுதல் போன்றன.

அரசனின் ஆணையை ஏற்று கொடையாக வழங்கப்பட்ட நிலத்திற்கு எல்லை தெரிவித்து அறையோலை செய்வதே மிக முக்கியமான பணியாகக் கருதினர். அரச ஆணையில் தொடர்புடைய 'நாட்டார் காண்க' என்று கூறி எல்லை வகுத்து அறையோலை செய்து தரும்படி கூறப்பட்டிருக்கும். அதனை நாடார் தொழுது வாங்கி, பிடிசூழ்ந்து, பிடாகை நடந்து, கல்லும் கள்ளியும் நாட்டி, அறையோலை செய்ததை, இராசராசனின் பெரிய லெய்டன் செப்பேடும், திருவாலங்காட்டுச் செப்பேடும் விரித்துக் கூறுகின்றன.[2]

இராசேந்திர சித்திரமேழிப் பெரியநாட்டு நாட்டாரிடம் ஒரு விசித்திரமான வழக்கு வருகின்றனது. அவ்வழக்காவது; 'சண்ணபுரத்து வெள்ளான் தாழிக்கோன் என்பவன் தன் மகன்கள் இருவருக்குள் ஏற்பட்ட தகராறில் தம்பி அடித்த அடியில் அண்ணன் இறந்து விடுகின்றான். ஆகவே அவனைத் தண்டிக்க வேண்டுகின்றான். நாட்டார் அவனை அழைத்து இவனைத் தவிர வேறு மகன் உண்டா? என்று கேட்க; தந்தை 'இல்லை' என்று கூற; அது கேட்ட சபையார் இருக்கும் ஒரு மகனையும் தண்டித்தால் உனது குடும்பத் தொடர்ச்சி கெட்டுவிடும் என்று கூறி அவனுக்கு மரண தண்டனை விதிக்காது விட்டு விடுகின்றனர். ஆனால் அவன் செய்ய வேண்டியது இரு வேலை என்று கூறி ஒன்று; வயதான தாய் தந்தையரைப் பாதுகாக்கவும், அவன் செய்த பாவத்திற்காக கோயிலுக்கு விளக்கெரிக்கவும் தீர்ப்பு வழங்கினர். இத்தீர்ப்பைக் கல்வெட்டு "சுத்த பட்டிகை" எனக் குறிப்பிடுகின்றது.[3]

இதுபோல ஒரு பிரச்சினைக்கு சபை எவ்வாறு தீர்ப்பு வழங்கியது என்பதனை காவேரிப்பாக்கத்திலுள்ள முதலாம் இராசராசனின் கல்வெட்டு தெரிவிக்கின்றது. "படுவூர் கோட்டத்து அவனிப நாராயணச் சதுர்வேதி மங்கலத்து இவ்வாட்டை ஊர் வாரியப் பெரு மக்களும், ஏரிவாரியப் பெருமக்களும், கழனி வாரியப் பெருமக்களும், பட்டர்களும், வசிட்டர் களும் உள்ளிட்ட மகாசபை"யாக காமக் கோட்டதுக் கூடியிருந்தனர்.

இதில் மகாசபையினர் யார்யார் என்பதைத் தெளிவுறக் காட்டுகின்றது கல்வெட்டு. வரிகட்டத் தவறியவர்களைத் தண்டிக்கப் போகுமிடத்துப் பெண்களை எவ்விதக் காரணங் கொண்டும் சபைக்கு அழைக்கக் கூடாதென்று கூறுகின்ற தீர்வை அனைவரும் ஏற்றுக் கொண்டதாகத் தெளிவுபடுத்துகின்றது.[4]

சபையாரின் ஒருபணியாக; ஊர் அவைக்குரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான கல்வெட்டுக்கள் பல உள்ளன. அவை; உத்தரமேரூர் கல்வெட்டு; திருப்பாற் கல்வெட்டும், செங்கல்பட்டு மாவட்டம் பிள்ளையார் பாக்கம் கல்வெட்டும் நன்னிலம் வட்டம் அய்யம் பேட்டைக் கல்வெட்டும், தஞ்சை மாவட்டம் சேய்ஞலூர் கல்வெட்டும் உறுப்பினர்களை

1. கு. தாமோதரன், வரலாற்றில் சில மணிகள் - பக். 64
2. நடன. காசிநாதன், தொல்லியல் கட்டுரைகள் - பக், 66
3. கு. தாமோதரன், வரலாற்றில் சில மணிகள் - பக் 64
4. நடன. காசிநாதன், தொல்லியல் கட்டுரைகள் பக். 64, 65

எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்ற விதிமுறைகளைக் கூறுகின்றன.[1]

இவற்றுள் குறிப்பிடத்தக்கவை உத்தரமேரூர் கல்வெட்டுகளாகும். இவை பராந்தகனின் 12, 16-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டவைகளாகும்.

உத்தர மேரூர் சபையார், 'சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரிவாரியம், பஞ்சவாரியம், பொன்வாரியம் போன்ற வாரியங்களை நிறுவுவதற்குரிய விதி முறைகளை எடுத்துக் கூறுகின்றன.[2]

முதற்பராந்தகனின் ஆணைப்படி : சபைக் கூட்டத்திற்கு வந்து மூவேந்த வேளான் என்ற அரசியல் அதிகாரி முன்னிலையில் உத்திரமேரூர் சபையார் வாரியத்திற்குரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கத் தாமே விதிகளை வகுத்துக் கொண்டதைத் தெரிவிக்கிறது.

வாரிய உறுப்பினர் ஆகத் தகுதி உடையோர்; கல்வி அறிவுடையோராகவும், அறநெறி வழுவாது தூய வழியில் நடப்பவராகவும் எந்தக் காரியங்களிலும் ஈடுபட்டு முடிவு செய்யும் மனத்திண்மை உடையவராகவும், முப்பத்தைந்து வயதிற்கு மேல் எழுபது வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் எனவும், சொந்தவீடும் கால்வேலி நிலமும் உடையவராய் இருத்தல் வேண்டும் எனவும், மூன்றாண்டுக்கு எந்த வாரியத்திலும்' உறுப்பினராக இருந்திருக்கக் கூடாது எனவும் குறிப்பிடுகின்றது.[3]

இவ்விதிமுறைகளைக் கூறும் இதே கல்வெட்டு; உறுப்பினர் ஆகத்தகுதி அற்றோரையும் குறிப்பிடுகின்றது.

உறுப்பினராய் இருந்து கணக்குக் காட்டாதோர்,
கணக்குக் காட்டாதவரின் உறவினர்கள்,
கூடத்தகாதவர்களோடு கூடியவர்கள்
பாதகங்கள் செய்தவர்கள், பிடிவாதம்
பிடிப்பவர்கள், பிறர் பொருளைக் கவர்ந்
தவர்கள், கையூட்டு வாங்கியோர்கள்
ஊர்த்து ரோகம் செய்தவர்கள்

செய்த குற்றத்திற்காக கழுதை மேல் ஏறியவர்கள், கள்ளக் கையெழுத்து போட்டவர்கள் போன்றோரும் உறுப்பினராக நிற்க முடியாது என்று குறிப்பிடுகின்றது.

இவ்விதிகளின் மூலமாகச் சுருங்கக் கூறின் நேர்மையானவர்கள் மட்டுமே வாரிய உறுப்பினராகத் தகுதி உடையோர் எனக்கொள்ளலாம். இதே கல்வெட்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. நகரமும் சதுர்வேதி மங்கலமும், ஊரும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பகுதியும் ஒரு 'குடும்பு' என அழைக்கப்பட்டது.

ஒவ்வொரு குடும்பிலும் ஒருவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குடும்புகளின் எண்ணிக்கை ஊர் மக்கள் தொகைக்கு ஏற்ப அமைந்திருந்தது எனலாம். உறுப்பினர்கள் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்குடவோலை முறை அரசு அதிகாரிகள் முன்பு நடைபெற்றது.[4]

---

1. சதாசிவ பண்டாரத்தார் - பிற்கால சோழர் சரித்திரம் - பக், 511
2. மேலது பக். 504
3. இராசராசன் சிறப்பு மலர் - பக். 25
4. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு பக். 497-498

வாரியத்திற்கு எத்தனை பேர்கள் இருக்கவேண்டும் என்ற எண்ணிக்கை பற்றியும் கூறுகின்றது. சம்வத்சர (ஆண்டு) வாரியத்தில் பன்னிருவரும், தோட்டவாரியத்தில் பன்னிருவரும், ஏரிவாரியம், பஞ்சவாரியம், பொன்வாரியம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் அறுவரும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.[1]

சம்வத்சர வாரியத்தின் உறுப்பினர்கள் மட்டும் ஏற்கனவே தோட்டவாரியத்திலும், ஏரிவாரியத்திலும் பணியாற்றிவர்களாக இருப்பர். இவ்வாரியத்திற்குள்ளோர் தகுதி; அநுபவ சாலிகளாக இருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. அதே வேளையில் உறுப்பினராக இருக்கும் காலத்தில் தவறு ஏதும் செய்வாரானால் அவர் உடனடியாக அப்பதவியிலிருந்து நீக்கப்படுவார். அவ்விடத்திற்கு வேறொரு உறுப்பினரை உடனடியாகத் தேர்ந்தெடுப்பது வழக்கமாக இருந்தது.[2]

உறுப்பினர்கள் அனைவரும் 'கணத்தார்' என்றும், 'வாரியப் பெருமக்கள்' என்றும், 'பெருமக்கள்' என்றும் மக்களால் பெருமையாக அழைக்கப்பட்டனர்.[3]

ஊரவைகள் பெரும்பாலும் கோவில் மண்டபங்களில் நடைபெற்றன எனலாம். நாலூர் சபையார் இராசராசன் ஆட்சிக் காலத்தில் அவ்வூர்க் கோயிலிலுள்ள கண்டராதித்தன் மண்டபத்திலும்,[4] இராசராசன் மண்டபத்திலும்,[5] வண்ணக்கனார் அம்பலத்திலும்[6] கூட்டம் நடத்தியுள்ளதைக் கல்வெட்டுகளில் காண முடிகின்றது.

திருவிடை மருதூர் சபையாரும், திரைமூர் சபையாரும் திருவிடைமருதூர் நாடக சபையில் கூட்டம் நடத்தியதைத் தெரிவிக்கின்றது.[7]

கிராம சபையில் சபையாருக்கு உதவ மத்தியஸ்தன், கரணத்தான், பாடிகாவல் தண்டுவான், அடிக்கீழ் நிற்பான் போன்ற பணியாளர்கள் இருந்தனர்.[8] இப்பணி யாளர்கள் அனைவரும் கிராம சபையில் ஊதியம் பெற்றுப் பணியாற்றினர். இச்சபைச் செலவிற்காக ஊர் மக்களிடம் இருந்து சபா வினியோகம், ஊரிடு வரிப்பாடு போன்ற வரிகள் வசூலிக்கப்பட்டன.[9]

வாரியங்கள் ஊர்களின் தன்மைக்கு ஏற்பத் தங்கள் பணிகளை அமைத்துக் கொண்டன என்பதைப் பல கல்வெட்டுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. சில ஊர்களில் சம்வத்சர வாரியமே அனைத்துப் பணிகளையும் செய்தது.

இவ்வாரியங்கள் ஊர் மக்களையும் அறநிலையங்களையும் பாதுகாத்ததோடு மட்டுமல்லாமல் ஏரி, ஊருணி, முதலிய நீர் நிலைகளையும் பாதுகாத்து வந்தது தெரிகிறது. அரசுக்குச் சேரவேண்டிய வரிகளை மக்களிடமிருந்து முறையாகப் பிரித்து அரசுக்குச் செலுத்த வேண்டியது இவ்வாரியங்களின் கடமையாகும். நிலவரி செலுத்தப்படாத நிலங்களை விற்று அரசிற்குச் செலுத்தவேண்டியதும் இவ்வாரியங்களின் கடமையாகும்.[10]

---

1. சதாசிவபண்டாரத்தார் - பிற்கால சோழர் வரலாறு பக். 497-498
2. மேலது பக். 499
3. மேலது பக். 500
4. A.R.E. 1910-326
5. மேலது - 322
6. A.R.E. 1908-308
7. மேலது – 1907-199
8. S.I.I. Vol. VI - 362
9. S.I.I. Vol. VI-362
10. சதாசிவபண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு பக். 501, 502

இதைப்போன்று ஊர்க்கணக்கு, கோயிற்கணக்கு போன்றவற்றைக் கவனித்தல் கணக்கு வாரியத்தின் முக்கிய கடமையாகும். இவ்வகைக் கணக்கில் தவறு ஏற்படும் போது தணிக்கை செய்து; தவறுகளைக் கண்டறிந்து; தவறு செய்தோரைத் தண்டிக்கவும் உரிமை பெற்றிருந்தது என்பதையும் அறியமுடிகின்றது.[1]

இவ்வகையில் ஊர்க்கணக்கனே மத்தியஸ்தனாக இருந்தான் என்பதை ஒரு கல்வெட்டால் அறிய முடிகின்றது. 'ஊர்க்கணக்கு இவ்வூர் மத்தியஸ்தன் பண்டிதப் பிரியனேன் இவை என் எழுத்து' என்ற கல்வெட்டு வரியால் அறியலாம்.[2]

ஒரு சபைக்குரிய பணியாளர்கள் பணியாற்ற முடியாத போது மற்றொரு சபையார் அப்பணிகளைச் செய்தனர். அல்லது மகாசபை நிருணயித்த வாரியர்களை நியமித்து செவ்வனே செயல்பட வைத்ததைச் சுசீந்திரம் கோயிலிலுள்ள இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. 'சுசீந்திரம் கோயில் பணிகளைக் கவனிக்க இரண்டு வாரியர், ஒரு கரணத்தார் நியமிக்கப்பட்டமை தெரியவருகின்றது.[3]

சில வேளைகளில் சபையாருக்குச் சிக்கல் ஏற்பட்டதும் அதனைத் தீர்த்த முறை பற்றியும் கல்வெட்டின் வழியே அறிய முடிகின்றது.

'செந்தலையில் உள்ள சபையார் நானூறு கழஞ்சு காசுகளைக் கோயிலிலிருந்து கடனாகப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் கடனுக்குரிய வட்டியைக் கூட 165 ஆண்டுகள் வரை அவர்களால் செலுத்த முடியவில்லை. அதன் காரணமாக அத்துனை ஆண்டுகள் கழித்து அவ்வரியை செலுத்துவதற்காகப் 'பொலியூற்றுப் பற்றாக' ஒரு குறிப்பிட்ட நிலத்தைக் கோயிலுக்கு வழங்கினர் என்பதை பராந்தகனின் கல்வெட்டுக் குறிக்கின்றது.[4]

ஒரே ஊரில் நான்கைந்து சபைகள் இருப்பினும் அச்சபைகள் திறம்பட இயங்க முடியும் என்பதனைப் பல கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். கல்வெட்டின் முடிவில் வருகின்ற சில வரிகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன. அவை;

'ஆமூர் கோட்டத்துப் படுவூர் நாட்டுத்
தேவதானம் திருவிடந்தைச் சபையோமும்
ஊரோமும் கையெழுத்து'[5] —எனவும்,
'இப்பரிசு இப்படி ஒட்டிக்குடுத்தோம்
திருவிடந்தைச் சபையோமும் ஊரோமும்[6]

எனவும் வரக் காணலாம்.

இதிலிருந்து இரு சபைச் சம்பந்தப்பட்ட செயலாக ஏதுமிருப்பின் இருவருமே கையொப்பமிடவேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

சபைகளைத் தவிர்த்து, கிராமங்களில் மூலபருடையார், சாத்த கணத்தார், காளி கணத்தார், கிருஷ்ண கணத்தார், குமார கணத்தார், பன்மாகேஸ்வரர் ஆகிய அமைப்புகள்

---

1. சொ. சந்திரவாணன், சோழர் காலத்தில் கணக்கு தணிக்கை, நடன. காசிநாதன், (ப.ஆ) அருண்மொழி – பக். 21
2. S.I.I. Voi, VII-204
3. T.A.S. Vol. II, p. 7
4. R. Nagaswamy, studies in Ancient Law and society - p.72
5. S.I.I. Vol III - 180
6. மேலது - 186

கோயில் நிர்வாகத்தை கவனித்து வந்தன. இவற்றோடு மணிக்கிராமத்தார், ஊஞ்சியர் போன்ற குழுக்களும் இயங்கி வந்தன. இவை வணிகக்குழுவினரின் அமைப்பாகும்.[1]

உத்திரமேரூர் கல்வெட்டுக் கூறும் விதிமுறைகளில் காலத்திற்கேற்ப சிறிது மாற்றம் செய்ய வேண்டியிருந்தது என்பதை சேய்ஞலூர்க் கல்வெட்டு எடுத்துக்கூறுகிறது அரசின் உதவியின்றிப் பட்டறிவிலும், கல்வியறிவிலும் தேர்ந்தவர்கள் கூடி இவ்விதிகளை வகுத்துக் கொண்டார்கள். அவற்றில் சில குறிக்கத்தக்க விதிகள்;

1. ஒருமுறை உறுப்பினராகப் பணியாற்றியவர் அடுத்த ஐந்தாண்டுகள் கழித்துத்தான் உறுப்பினர் போட்டிக்குத் தகுதி பெற முடியும்.
2. பதவி வகித்தவரின் மகன் நான்கு ஆண்டுகள் கழித்தும், உறவினர்கள் மூன்றாண்டுகள் கழித்தும் போட்டி இட முடியும்.
3. நாற்பது வயதுக்கு மேற்பட்டவராய் இருக்க வேண்டும்.
4. உறுப்பினராகப் போட்டியிடும் ஒருவர் அரசியல் அதிகாரிகளின் துணை கொண்டு விதிமுறைகளுக்கு முரணாக நடக்கக்கூடாது அவ்வாறு நடந்தால் அவர்கள் துரோகிகள் என்று அறிவிக்கப்பட்டு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்
5. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவ்வவர்களுக்குரிய பணிகளைப் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் நிறைவேற்ற வேண்டும். விதிக்கப்பட்ட வரிகளைத் தவிர அதற்கு அதிகமாகப் பெறக்கூடாது.
6. ஒரே நேரத்தில் 2000 காசுகளுக்கு மேல் செலவிட வேண்டுமாயின் மகா சபையின் அனுமதி பெறல் வேண்டும்.
7. அதிக வரி வாங்கினாலோ, அதிகமாகச் செலவிட்டாலோ அவர் 5 மடங்கு தண்டம் கொடுக்க வேண்டும்;
8. ஊர் மக்கள் செலுத்தாதிருக்கும் வரிகள் மட்டும் இரண்டு மடங்கு வசூலிக்கப்பட வேண்டும்.
9 வசூலிக்கப்பட்ட தண்டத் தொகையை சபாவினியோகத்தோடு சேர்த்துச் செலவிடப்பட வேண்டும்.[2]

இவ்விதிகளின் வாயிலாக அக்காலத்திலிருந்த சமூக நிலையை நாம் உணர்த்து கொள்ள முடிகின்றது. உறுப்பினர் ஆவதற்கு அரசு அதிகாரியின் துணை கொள்ளக்கூடாது என்பதின் வாயிலாக; அன்று அதிகாரியின் செல்வாக்கைப் பயன்படுத்திச் சிலர் உறுப்பினர் ஆகியிருக்கின்றனர் என்பதை உணர முடிகின்றது. விதிக்கப்பட்ட வரிகளுக்கு மேலாகத் தரும்படி மக்களைத் துன்புறுத்தி வரி வசூலிக்கக் கூடாது என்ற விதியின் மூலமாக அதிகமாக வசூல் செய்த ஓரிரு வாரிய உறுப்பினர்கள் இருந்ததையும் அறிய முடிகின்றது. 2000 காசுகளுக்கு மேல் செலவு செய்ய மகாசபையின் அனுமதி பெறல் வேண்டும். அனுமதியின்றி அதற்கு மேல் செலவிட்ட வாரியத்துக்குத் தண்டம் விதிக்கப்பட்டிருந்தது. வாரியம் தவறு செய்தால் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

சங்ககாலம் முதல் காலங்காலமாக நிலவிய பேராட்சி ஊராட்சி முறையில் பல மாற்றங்களைச் செய்து செம்மைபடுத்தியவர்கள் சோழர்கள் எனலாம். இக்காலகட்டமே தமிழகத்தின் ஆட்சிமுறையின் உச்சகட்டம் என்றும் கருதலாம்.

---

1. சதாசிவபண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், பக். 515
2. மேலது - பக். 509

நாயக்கர் காலம்

கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் பேரரசுகள் அனைத்தும் வீழ்ச்சி அடைந்து தமிழக ஆட்சி முறையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. அத்தருணத்தில் வேற்றவர்கள் தமிழகத்தின் பல இடங்களிலும் அமர்ந்து ஆளத் தொடங்கினர். ஆனால் அவ்வாட்சியும் நிலையற்றதாக, குழப்பமுடையதாகவே இருந்தது. இச்சமையத்தில் விசயநகரப் பேரரசர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் விஜய நகரப் பேரரசின் 'காரிய கர்த்தர்கள்' என அழைத்துக் கொண்டு ஒரு நிலையான ஆட்சியைத் தர முயன்று அதில் வெற்றி கண்டார்கள் எனலாம்.

அவ்வாறு வந்த காரிய கர்த்தர்களுள் முதலாமவன் நாகம நாயக்கன் ஆவான்.[1] அவனை அடுத்து அவனது மகன் விசுவநாத நாயக்கன் தமிழகத்திற்கு வந்து ஒருநிலையான ஆட்சியை ஏற்படுத்தினான் இவனைத் தொடர்ந்து கி.பி. 1529 முதல் 1736 வரை சுமார் இருநூறு ஆண்டுகள் நாயக்கர் ஆட்சி நிலைத்திருந்தது.[2]

இவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற போது தமிழகம் மிக குழப்பம் நிறைந்த ஒன்றாக இருந்ததால் அதனைத் தவிர்க்க மரபு வழி ஆட்சி முறையிலிருந்து மாற்றி புதிய தோர் ஆட்சியமைப்பை ஏற்படுத்தினர். இருப்பினும் நாட்டின் தலைவனாக மன்னனே இருந்தான்.

வாரிசுரிமையானது பொதுவாகத் தந்தைக்குப் பின் தனையன் என்ற முறையில் வந்தாலும் வாரிசில்லாக் காலங்களில் மன்னனின் உடன்பிறந்தவன் ஆட்சிப் பொறுப்பில் அமர்வது வழக்கமாயிருந்தது. மன்னன் இறந்த போதும், சரியான வாரிசு இல்லாத போதும் அவனது மனைவியை ஆட்சிப் பொறுப்பில் இருத்தி பெரும் புரட்சி ஒன்றைச் செய்தது நாயக்கர் வமிசம்.

நாயக்கர்கள் தங்கள் ஆட்சி செவ்வனே நடைபெறுவதற்காக 'தளவாய்' என்ற ஒரு பதவியை ஏற்படுத்தி, அப்பதவியில் மதிநுட்பத் திறனும், போர்த் திறனும் உள்ளவர்களை அமர்த்தினர். இப்பதவியை முதன்முதலில் ஏற்றவர் 'தளவாய் அரிய நாத முதலியார்' ஆவார்.

இவரைத் தொடர்ந்து இராமப்பையன், லிங்கமநாயக்கன், நரசிம்மன், கஸ்தூரி ரங்கய்யா, நரசப்பையா, வெங்கடாச்சாரியா போன்ற பலர், பல மன்னர்களின் கீழ்த் தளவாய் களாகப் பணி புரிந்துள்ளனர்.[3]

தளவாயே நாட்டின் தலைமை அதிகாரியாவான். இவனுக்கு பேரளவில் அதிகார மிருந்தது எனத் தெரிகிறது. நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதே இவனது பெரும் பணி யாகும். இருப்பினும் அரசின் நிருவாகப் பணிகளிலும், அறப்பணிகளிலும், பொதுப் பணிகளிலும் ஈடுபட்டான்.

நாயக்கர் ஆட்சிக்கு உறுதுணையாக; பிரதானி, நாயகம், ஸ்தானாபதி, கணக்கன் போன்ற அரசு அலுவலர்களும் இருந்தனர். இவர்களுக்குத் தனித்தனியே பொறுப்புகள் இருந்தன.[4]

---

1. R. Sathyanatha Aiyar - History of the Nayaks of Madura - p.V
2. மேலது
3. மேலது பக். 179
4. மேலது பக் 180

தங்களின் ஆட்சிக்கு வசதியாக நாட்டை 72 பாளையங்களாகப் பிரித்துக் கொண்டனர். ஒவ்வொரு பாளையத்துக்கும் ஒரு தலைவனை நியமித்து ஆளச் செய்தனர். மேலும் மதுரைக் கோட்டை 72 கொத்தளங்களை உடையதாக இருந்தது. ஒவ்வொரு கொத்தளத்தையும் ஒரு பாளையக்காரன் காத்து வரல் வேண்டுமென ஆணையிடப்பட்டது.

பாளையக்காரர்கள் போர்க்காலங்களில் மன்னனுக்குப் படைத் தந்து உதவுதலையும்; தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் வரிவசூலித்து அதில் ஒரு பங்கை மன்னனுக்கு வழங்குவதையும் பணியாகச் செய்து வந்தனர். இவர்களுக்குத் தலைவனாகத் 'தளவாயே' இருந்தான்.[1]

இவனது நாடு 'இராஜ்ஜியம்' என்று அழைக்கப்பட்டது. இராஜ்ஜியங்கள் மண்டலங்களாகவும், சீர்மைகளாகவும், நாடுகளாகவும், ஊர்களாகவும் பிரிக்கப்பட்டன. ஊர்கள் மங்கலம், சமுத்திரம், குடி, பட்டி, குளம், குறிச்சி, என்று பல பெயர்களில் அழைக்கப்பட்டன.[2]

நீதி

மக்களிடையே ஏற்பட்ட பிணக்குகளும், வழக்குகளும்; மன்னனால் அதிகாரிகளைக் கொண்டு தீர்த்து வைக்கப்பட்டன.

1544-ல் திருவிடைமருதூரில் ஏற்பட்ட ஒரு வழக்கு மன்னனால் தீர்த்து வைக்கப்பட்டது. 'அவ்வூர்க் கருவூல அதிகாரி; கோயில் பற்றாக வழங்கப்பட்ட நிலத்தைத் தமக்குரியது' என்று கூறி அனுபவித்து வந்தான். அத்தகாத செயலைப் பற்றி திருக்கோயில் தேவகன்மிகள்; அவ்வூருக்கு மன்னன் முகாம் மேற்கொண்டிருந்தபோது முறையிட்டனர். மன்னன் நேரிடையாகச் சென்று எல்லைக் கற்களை ஆராய்ந்து கோயிலுக்குரியது எனத் தீர்ப்பளித்தான். இது அக்காலத்தில் மக்களுக்கு ஏதும் குறை ஏற்பட்டால் மன்னனிடம் சென்று முறையிடுவதற்கு வாய்ப்பிருந்தது என்பதையும், மன்னன் தீர ஆய்வு செய்த பின்னர் தான் தீர்ப்பளித்தான் என்பதையும் தெளிவு படுத்துகிறது.

மேலும் அரசு முத்திரையைச் சோதிப்பதற்காக 'முத்திரை வாங்கி' என்ற ஒரு அதிகாரி இருந்ததையும் அறியமுடிகின்றது.[3]

இதேபோன்று முத்து வீரப்ப நாயக்கன் காலத்தில் (கி.பி. 1617) இரு நாட்டாரிடையே ஏற்பட்ட பிணககை மன்னன் தீர்த்த விதத்தை ஓலைச்சுவடி ஒன்று கூறுகின்றது. காங்கேய நாட்டாருக்கும், பூந்துறைக்கும் இடையே எல்லைத் தகராறு ஏற்படுகின்றது. இதில் ஏற்பட்ட சண்டையில் இருபக்கத்திலும் பலபேர் இறந்து விடுகின்றனர். மன்னன் திம்மப்ப முதலியார் என்ற அதிகாரியை அனுப்பி இவ்வழக்கைத் தீர்த்து வைக்கின்றான். திம்மப்ப முதலியார் இவ்வழக்கைத் தீர்க்க 24 நாட்டார்களையும் இராதாபுரம் சம்பிருதி தளத்து சேர்வைக்காரன் ஆகியோரையும் தனக்குத் துணையாக அழைத்து முறையாக எல்லை வகுத்து இருநாட்டவர்க்கும் ஏற்பட்ட எல்லைத் தகராறைத் தீர்த்து வைத்தான். இவ்வோலைச்சுவடி திம்மப்ப நாயக்கன் யானை மீது அமர்ந்து கொள்ள மற்ற நாட்டவர்கள் குதிரை மீது அமர்ந்து அவருடன் வர எல்லை குறிக்கப்பட்டதாக குறிப்பிடுகின்றது.[4]

இதற்கு முந்தைய காலத்தில் நாட்டார்கள் யானை மீது அமர்ந்து வர எல்லை தெரிவித்ததும்; இவ்வோலைச் சுவடியின் மூலம் அரசு அதிகாரிக்கு அத்தகுதி மாறியிருப்

1. R. Sathyanatha Aiyar - History of the Nayaks of Madura - p. 181
2. மேலது பக். 182
3. நடன. காசிநாதன், தொல்லியல் கட்டுரைகள் - பக். 87-89
4. R. Nagaswamy - Studies in Ancient Tamil Law and Society - pp. 90-97

பதையும் அறிய முடிகின்றது. மேலும் இங்கு வழக்கிற்குத் தீர்வு காணுவதில் பேராட்சிக்குத் துணையாக ஊராட்சியும் இருந்திருப்பதை அறிய முடிகின்றது.

இதே போன்று; இரு குழுவினரிடையே ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்ததும் தெரிய வருகிறது.[1]

நிதி

அரசுக்கு ப்பல்வேறு வகையிலும் வருவாய் பெறப்பட்டது. நில வருவாயே தலையாயது அதே வேளையில் தொழில் புரிவோர்களிடமும் வரி வசூலிக்கப்பட்டது. குறிப்பாக கைத்தறித் தொழிலாளர்களிடம் தறி ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு $\frac{1}{4}$ பணம் வரியாகப் பெறப்பட்டது,[2] என்பதை அறியலாம் வரிவிதிப்பில் எதிர்ப்பு ஏற்பட்டபோது அதன் காரணம் ஆராய்ந்து மன்னனால் வரி விலக்கு செய்யப்பட்டதைக் காண முடிகின்றது.

சேரன் மாதேவியைச் சுற்றியுள்ள இறையிலி நிலங்களுக்கு வரி வசூலிக்கப்பட்டதை எதிர்த்து குடியானவர்கள் நிலங்களைப் பயிரிடாமல் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதனை அறிந்த விசுவநாத நாயக்கன் நிலைமையை விசாரித்து 'உழவுவரி', 'பண்டார வாடை' போன்ற எல்லா வரிகளையும் நீக்கி நாலில் ஒரு பங்கு மட்டும் அரசுக்கு வழங்கினால் போதும் எனக் கூறி தீர்வு காணுகின்றான்.[3]

விஜயரங்க சொக்கநாத நாயக்கன் காலத்தில் மிகுந்த வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து ஒருவன் கோயில் கோபுரத்தின் மீதேறி விழுந்து தற்கொலை செய்து கொள்கிறான். இந்நிகழ்ச்சி தளவாய், பிரதானி கோட்டைத்தளபதி, சம்பிருதி கோயில் மேலாளர் மற்றும் கோயில் சபை உறுப்பினர்கள் போன்ற அனைவரது கவனத்தையும் ஈர்த்தது என்பது தெரிகிறது.[4]

இவ்வாட்சி காலத்தில் விசுவநாத நல்லூரில் தவறாக வரி வசூல் செய்யப்பட்டதை மன்னன் அறிந்து மீண்டும் அவர்களிடமே பணத்தைத் திருப்பி கொடுத்த செய்தியையும் அறியமுடிகின்றது இதன் மூலம் இவர்கள் காலத்தில் 'பணம்' என்ற காசு வழக்கிலிருந்ததை அறிய முடிகின்றது.[5]

மேலும் விஜயநகர சக்கரவர்த்திகளால் அச்சிடப்பட்ட காசுகள் நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும் புழக்கத்தில் இருந்துள்ளன. முதலாம் ஹரிஹரன், முதலாம் புக்கன், இரண்டாம் ஹரிஹரன், முதலாம் தேவராயன், வீர நரசிம்மன், இரண்டாம் தேவராயன், கிருஷ்ணதேவராயர், ஸ்ரீரங்கன் ஆகியோரால் வெளியிடப்பட்டக் காசுகள் இதுகாறும் கண்டறியப்பட்டுள்ளன. இக்காசுகளில் ஒருபுறம் சைவ, வைணவ தெய்வ உருவங்களும், மறுபுறம் மன்னனின் பெயரும் பெரும்பாலும் நாகரி எழுத்திலும் சிலவற்றில் கிரந்தம், கன்னட எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.[6]

கல்வி

நாயக்க மன்னர்கள் தெலுங்கராயிருந்த போதும் தமிழ் வளர்க்கப் பெரும் தொண்டாற்றியுள்ளனர் என்பதை, இவர்களது மிகுதியான செப்பேடுகள், கல்வெட்டுகளை

---

1. A.R.E. 1903 - 6
2. M.E.R. 1909 - 318
3. A.R.E. 1916 - 721
4. Burgeos - No. 24
5. A.R.E. 1909 - 515
6. நடன. காசிநாதன், தமிழர் காசு இயல், பக். 106 முதல் 112 வரை

தமிழில் வெளியிட்டமையால் அறியலாம். குமரகுருபரர் என்னும் புலவர் மன்னன் திருமலை நாயக்கரால் ஆதரிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் மன்னர் அவையில் பல தமிழ் நூல்களை அரங்கேற்றினார் என்பதையும் அறியலாம்.

நீர்ப்பாசனம்

நீர்வளம் பெருக; நாயக்க மன்னர்கள் ஏரிகளையும், குளங்களையும், கிணறுகளையும் வெட்டி வைத்தனர். 'விசுவநாத நாயக்கன் பேரேரி' என்ற ஏரி மன்னன் பெயரால் அவன் காலத்தில் அரிய நாத முதலியாரால் வெட்டப்பட்டது. அவ்வேரி இன்றும் 'தளவாய்க்குளம் என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணப்ப நாயக்கன் மகன் நாயினியப்ப நாயக்கன் தேவிகாபுரம் என்ற ஊரில் குளம் ஒன்றை வெட்டி; கிணறுகள் பல ஏற்படுத்தி நிலங்கள் பலவற்றைத் திருத்தி வளம் பெறச் செய்ததை கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. 'செல்லங்க சமுத்திரம் என்ற பெயரில் குளம்' வெட்ட தானம் வழங்கப்பட்டதையும் ஒரு கல்வெட்டு கூறுகின்றது.[1]

இதே போன்று மன்னர் முத்துவீரப்ப நாயக்கர் காலத்திலும் ராணி மங்கம்மாள் காலத்திலும் குளத்தில் 'கலிங்குகள்' ஏற்படுத்தப்பட்டன. இராணி மங்கம்மாள் திருச்சியி லுள்ள உய்யகொண்டான் காலில் ஏற்படுத்திய மடை 'மங்கம்மாள் மடை' என்று பெயர் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.[2]

நீர்வளம் கண்ட நாயக்கர்கள், ஏற்கனவேயுள்ள அளவுகளோடு பல புதிய அளவு களையும் ஏற்படுத்தினர். 'கண்டார்கண்டன் கோல்' 'பிரம்மராட்சசன் கோல்', 32 அடிக்கோல் போன்ற முறைப்படுத்தப்பட்ட அளவு கோல்களும் இவர்கள் காலத்தில் நடைமுறையில் இருந்தன.[3]

இவர்கள் காலத்திலிருந்த ஊராட்சி முறை பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை எனினும், கிடைக்கின்ற சான்றுகளை வைத்து தொடர்ந்து அவையமைப்பு இருந்ததை அறிய முடிகின்றது. சான்றாக; 'முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் இரண்டு நாட்டார்களிடையே ஏற்பட்ட வழக்கைத் தீர்க்க அரசு அதிகாரிகளுடன் 24 நாட்டார்கள் உடன்வந்து எல்லை தெரிவித்த நிகழ்ச்சியை அறிய முடிகின்றது.

இருப்பினும் இக்கால கட்டத்தில் 'அவை'யின் செல்வாக்கு குறைந்து அதிகாரிகள் பாளையக்காரர்களின் செல்வாக்கு மேலோங்கி நின்றது. ஆதலின் ஊர் அவையின் செயல் பாடுகளைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள இயலாது போயிற்றெனலாம்.

தொகுப்புரை

சங்க காலம் தொட்டே தமிழகத்தில் மன்னர்களின் முடியாட்சி நிலவி வந்தது என்பதும்; அவர்கள் அறம் தழுவி, செங்கோல் நடத்தி வந்தனர் என்பதும் தெரிகிறது. ஆட்சி முறையை எளிமைப் படுத்தி பேராட்சி, ஊராட்சி என்ற அமைப்பைக் கொண்டனர் மன்னர்கள். பேராட்சியின் தலைவனாக மன்னன் இருந்து கல்வி, நிதி, நீதி, நீர்ப்பாசனம், வணிகம், வெளிநாட்டார் தொடர்புகள் போன்றவற்றை நேரடியாக நிருவகித்தான். ஊராட்சி முறையில் பல சபையும், சபைப் பிரிவுகளும் இயங்கி மக்களுக்குத் தொண்டாற்றின. இவை தனித்து இயங்கி வந்தாலும் மன்னனின் கட்டுப் பாட்டிற்குள் இருந்து வந்தன. அதே நேரத்தில் உள்ளூர் வரி விதித்தல், பொதுக் காரியங்களுக்காக வரிவிதித்துச் செலவிடல், வரி நீக்குதல், வழக்கில் தீர்ப்புக் கூறல் போன்ற சுய ஆட்சிப் பணிகளையும் முறையுடன் செய்து வந்தனர்.

1. A.R.E. 1912 - 388
2. A.R.E. 1890 - 17
3. கட்டுரை ஆசிரியர்களால் நேரில் பார்த்து எழுதப்பட்டது.

தான் நினைத்தது எதையும் சாதித்துவிட முடியும் என்று மன்னனோ, அவைத் தலைவர்களோ நினைத்து விட முடியாது.

தவறு செய்வோர் மன்னனேயாயினும் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்கு இருந்தது. மக்களிடம் கொண்ட அச்சம், மரியாதை காரணமாக மன்னன் காட்சிக்கு எளியனாகக் கடுஞ்சொல் அல்லனாக இருந்து அறநெறி வழுவாது ஆட்சி செய்தான்.

மக்களுக்கு ஏற்படும் பிணக்கு, வழக்கு, வரிப்பளு, எல்லைத் தகராறு போன்றவற்றைத் தேவை ஏற்படின் மன்னனே முன்னின்று தீர்வு கண்டான். கல்வி, வேளாண்மை முதலிய வற்றிலும் தாம் மேம்பட்டதைப் போலவே மக்களையும் மேம்படச் செய்ய வழிவகைச் செய்தான்.

சுருங்கச் சொன்னால் மக்களுக்கு அளிக்கப்பட்ட பலன் மக்களுக்குப் போய்ச் சேரும் வரை பிழையபறாது பேராட்சி ஊராட்சி முறை அமையவேண்டும் என்பதில் அதிகக் கவனம் கொண்டனர் என்பது தெரிகிறது.

இவ்வாறு பேராட்சி, ஊராட்சி முறை வித்திட்டுச் செயலாகிச் செழித்திருந்த படி நிலைகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு தொடங்கி வீழ்ச்சியுறத் தொடங்கிற்று எனலாம். குழப்பமான சூழல், வேற்றவர் படையெடுப்பு ஆகியவற்றால் நாடு பொலிவிழந்தது. மன்னருக்கும் மக்களுக்கும் தொடர்பாளராய் ஒருவன் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு படிப்படியாகத் தன்னிலை இழந்தது என்பதை மேற்கண்ட ஆய்வு தெளிவுபடுத்துகிறது.

பேரரட்சியும் ஊரராட்சியும் என்ற கட்டுரையின் அடிக்குறிப்புக்களை
216-ஆம் பக்கத்திலிருந்து கீழ்க்காணுமாறு படிக்கவும்

பக்கம் *216*

1. புறம்
2. குறள் 1031
3. புறம் 18
4. ,, 142, 376, 305
5. அகம் 28, 38, 68, 91
6. புறம் 9
7. ,, 246
8. ,, 364
9. ,, 209, 246
10. ,, 188
11. ,, 183
12. ,, 72

பக்கம் *217*

1. புறம் 173
2. ,, 73, 75
3. ,, 190
4. ,, 75
5. ,, 245
6. ,, 71
7. ,, 183
8. ,, 279
9. ,, 87, 104, 140, 187
10. ,, 278
11. ,, 86
12. ,, 246
13. ,, 37, 39, 126, 174, 226, 280, 383
14. ,, 112
15. K.A. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள் ப. 77
16. அகம் 149; வரி 9

பக்கம் *218*

1. புறம் 56
2. அகம் 27
3. அகம்–130 வரி 9-11
4. Dr. R. Nagaswamy - Tamil Coins A Study p. 76
5. சிலம்பு – மதுரைக்காண்டம் வரி-431
6. நெடுநல்வாடை : வரி-49
7. புறம் 37
8. மதுரைக்காஞ்சி : வரி 637-647
9. பெரும்பாணாற்றுப் படை வரி 298
10. மேலது வரி 402-405

பக்கம் 219

1. சிறுபாணாற்றுப் படை வரி 41-83
2. மேலது
3. மேலது
4. மதுரைக்காஞ்சி வரி 395
5. மேலது வரி 510-520
6. நெடுநல்வாடை வரி 29-30
7. பெரும்பாணாற்றுப்படை 322-323
8. நெடுநல்வாடை வரி 30
9. பட்டினப்பாலை வரி 218
10. மேலது வரி 27
    மலைபடுகடாம் வரி 162
11. அகம் 96
    சிலம்பு காதை 5 வரி 76
12. நெடுநல்வாடை வரி 29-30
13. தொல்காப்பியம்
14. புறம் 283
15. புறம் 138, 167, 251, 322, 373, 377
16. மணிமேகலை பதிகம் வரி 67
    சீவகசிந்தாமணி 2112
17. புறம் : 71, 157, 224, 239, 286
18. மதுரைக் காஞ்சி : வரி. 489-493

பக்கம் 220

1. மதுரைக் காஞ்சி : வரி. 489-493
2. புறம் : 71
3. மதுரைக் காஞ்சி : வரி. 507-510
4. மேலது. வரி. 101-102
5. டாக்டர் வெ. வேதாசலம், இலக்கியங்கள், கல்வெட்டுகள் காட்டும் பாண்டியர் காலச் சமுதாயமும் பண்பாடும் - ஆய்வேடு
6. தமிழ் லெக்சிகன், தொகுதி II, பக். 936-937
7. அகம் : 64, 202, புறம் : 154, 156

பக்கம் 221

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, பக். 242
2. மேலது.
3. மேலது. பக். 223
4. Dr. C. Minakshi, Administration and Social Life under the Pallavas
5. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு பக். 224
6. மேலது.
7. மேலது.

பக்கம் 222

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு, பக்.237
2. Dr. C. Minakshi. Administration and social life under the Pallavas, p. 68
2. மேலது. பக். 226
3. மேலது.
4. மேலது. பக். 77
5. சிற்றூர் செப்பேடு-7வது ஏடு; பக். 2; 4-5
6. மா. இராசமாணிக்கம்பிள்ளை. பல்லவர் வரலாறு பக். 227
7. மேலது.
8. மேலது.
9. மேலது. பக். 225
10. மேலது. பக். 224
11. Dr. C. Minakshi. Administration and social life under the Pallavas. pp. 88-105
12. மா. இராசமாணிக்கம்பிள்ளை - பல்லவர் வரலாறு பக். 236
13. Dr. C. Minaskshi. Administration and social life under the Pallavas p. 88

பக்கம் 223

1. மா. இராமாணிக்கம்பிள்ளை. பல்லவர் வரலாறு பக். 242
2. மேலது. பக். 243
3. திரு. நடன. காசிநாதன், – தமிழர் காசு இயல் பக். 55, 56, 58
4. மா. இராச மாணிக்கம்பிள்ளை - பல்லவர் வரலாறு பக். 207, 228
5. மேலது பக். 228
6. K. A. Nilakanta Sastri - தென்னிந்தியாவைப் பற்றிய வெளி நாட்டினர் குறிப்புகள் பக். 28

பக்கம் 224

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை. பல்லவர் வரலாறு பக். 206-207 153, 188, 261
2. மேலது பக். 207-215
3. மேலது பக். 254-255
4. மேலது பக். 255
5. மேலது பக். 256
6. மேலது
7. மேலது
8. மேலது
9. மேலது
10. மேலது
11. மேலது
12. மேலது
13. மேலது
14. மேலது
15. Dr. C. Minakshi. Administration and social life under the Pallavas p. 126
16. மேலது பக். 126

பக்கம் 225

1. Dr. C. Minakshi-Administration. and Social Life under the Pallavas, p. 127.
2. மேலது
3. டாக்டர் மா. செந்தில்செல்வக்குமரன் - தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுகள் காட்டும் தமிழ் எண்கள், அளவைகள், குறியீடுகள் ப. 142
4. ARE 1898/7
5. மேலது
6. மேலது 1900/33
7. மேலது
8. Dr. C. Minakshi - pages 108, 109,
9. மேலது
10. மேலது
11. டாக்டர் செந்தில்செல்வக்குமரன் - பக். 77

பக்கம் 226

1. டாக்டர். செந்தில்செல்வக்குமரன் – தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுகள் காட்டும் தமிழ் எண்கள், அளவைகள். குறியீடுகள்
2. மேலது பக் 50
3. S.I.I. vol. VIII. NO : 664
4. ARE 1900/33
5. Dr. C. Minakshi - p. 110
6. ARE 1912/122
7. மேலது 1912/162, 1901/283
8. மேலது
9. E.I. vol. XX. p. 52
10. ARE 1905/404
11. மேலது 1912/32

பக்கம் 227

1. மா. இராசமாணிக்கம்பிள்ளை பல்லவர் வரலாறு பக்-228
2. Dr. R. Nagaswamy, Studies in Ancient Tamil Law and Society pp. 39-40
3. மேலது
4. S.I.I. vol. II Part III pp. 109-110

பக்கம் 228

1. E.I. vol, XVIII p. 119
2. S.I.I. vol. II part III. pp. 109-110
3. பாண்டியர் செப்பேடுகள் பத்து
4. மா. இராசமாணிக்கம் பிள்ளை – பல்லவர் வரலாறு பக். 229
5. மேலது பக். 224
6. Dr. C. Minakshi - p. 143
7. மேலது

பக்கம் 228

8. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு பக். 229.
9. Dr. C. Minakshi p. 143
10. ARE 1912/257
11. S.I.I. vol XII No 71
12. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு பக். 229, 239.

பக்கம் 229

1. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு பக்.
2. Dr. C. Minakshi p. 143
3. மேலது
4. S.I.I. vol. XII No 34
5. மா. இராசமாணிக்கம் பிள்ளை - பல்லவர் வரலாறு பக் 229
6. S.I.I vol XII No 34.
7. ARE 1905/435

பக்கம் 230

1. S.I.I. vol XII No. 95
2. ARE 1930-31/22
3. S.I.I. vol. XII No. 71
4. மேலது
5. ARE 1912/257
6. S.I.I. vol. XII No. 71
7. மேலது எண் 34

பக்கம் 231

1. S.I.1. vol. III part I p. 9
2. ARE 1898/Nos 65, 83, 84
3. கே. வி. இராமன் - பாண்டியர் வரலாறு பக். 82
4. மேலது
5. மேலது
6. மேலது பக். 88

பக்கம் 232

1. S.I.I. Vol. XIV No. 228
2. மேலது. 257
3. ஆர். வசந்தகல்யாணி. அரசன் ஆணை - தொல்லியல் கருத்தரங்கு பக். 27
4. கே. வி. இராமன் - பாண்டியர் வரலாறு. பக். 98
5. மேலது. பக். 88
6. S.I.I. Vol. XIV No. 13
7. மேலது. எண். 205

பக்கம் 233

1. கே. வி. இராமன் - பாண்டியர் வரலாறு பக். 156
2. S.I.I. Vol. XIV No. 2
3. மேலது எண். 1
4. S.I.I. Vol. XIV No. 2
5. மேலது
6. கே. வி. இராமன் - பாண்டியர் வரலாறு பக். 156
7. S.I.I. Vol. XIV No. 228, 236
8. மேலது எண். 229
9. மேலது எண் 229, 245
10. கே. வி· இராமன் – பாண்டியர் வரலாறு பக் 156
11. மேலது

பக்கம் 234

1. S.I.I. Vol. XIV No. 250
2. மேலது எண் 52, 88
3. மேலது எண் 262, 264, 256, 223, 234, 236
4. மேலது எண் 234, 236
5. மேலது எண் 256
6. மேலது ,, 236
7. மேலது
8. மேலது
9. மேலது எண் 250
10. கே. வி. இராமன் - பாண்டியர் வரலாறு பக். 157
11. மேலது
12. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 115
13. மேலது

தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 12

இப்பூவுலகில் மனிதன் என்று தான் பார்த்த உருவத்தை மணற்பரப்பின் மீதோ அல்லது மலைப் பாறையின் மீதோ வரையத் தொடங்கினானோ அன்றே எழுத்துத் தோற்றம் பெற்று விட்டதெனக் கூறலாம். இதற்கு அடுத்த கட்டமாக, தான் கண்ணுற்ற ஒன்றைப் பிறருக்குப் புலப்படுத்த விரும்பியவன் உருவம் மூலம் விளக்கிக் கூற முனைந்த போது செய்திப் பரிமாற்றத்துக்கு உருவம் துணை புரியலாயிற்று. எழுத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைப் பற்றி அண்மைக் காலங்களில் நடந்துள்ள ஆய்வுகள் கீழ்க்காணும் முடிவுகளைத் தெரிவித்துள்ளன.

முதன்முதலில் உருவ எழுத்துக்கள் (Pictograph) தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பின்னர் அதிலிருந்து வளர்ச்சி பெற்றுச் கருக்கெழுத்துக்கள் (Ideograph) ஏற்பட்டிருக்க வேண்டும். இறுதியாக ஒலிபெழுத்துக்கள் (Phonograph) நிலை பெற்றிருக்க வேண்டும் என்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

எழுத்துத் தோற்றத்தில் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தமிழர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே கண்டறிந்துள்ளனர் என்பதைத் தமிழிலக்கண நூலான யாப்பருங்கலத்துக்கு உரை எழுதிய ஆசிரியர் அதன் இறுதிச் சூத்திரத்துக்கு விளக்கம் கூறுகையில் கீழ்வரும் பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளதன் மூலமாக அறிய முடிகிறது.[1]

'உருவே உணர்வே ஒலியே தன்மையென
இருவகை யெழுத்தும் ஈரிரண்டாகும்'

எழுத்தாவது நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதை உரு, உணர்வு, ஒலி, தன்மை என்று சுட்டுகிறது. ஒவ்வொரு வகை எழுத்துக்கும் விளக்கமான பாடல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

'காணப்பட்ட உருவம் எல்லாம்
மாணக்காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப்படுவது உருவெழுத்தாகும்'.

உருவ எழுத்து எவ்வாறு எழுதப்பட்டது என்பதை மேற்கண்ட பாடல் புலப்படுத்துகிறது. உணர்வு, ஒலி, தன்மை எழுத்துக்கான விளக்கப் பாடல்களும் கீழ்வருமாறு காணப்படுகிறது.

'கொண்டவோர் குறியால் கொண்டவதனை
உண்டென்று ணர்த்துவது உணர்வெழுத்தாகும்'.

'இசைப்படு புள்ளின் எழா அல் போலச்
செவிப்புல னாவது ஒலியெழுத்தாகும்'.

---

1. தி. நா. சுப்ரமணியம், தென்னிந்திய கோயிற் சாசனங்கள் தொகுதி-3, பகுதி-2, பக்கம். 1576-1578, (1957 பதிப்பு)

'முதற்காரணமும் துணைக் காரணமும்
துணைக் காரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மை யெழுத்து'.

நன்னூலுக்கு எழுதப் பெற்ற மயிலைநாதர் உரையிலும் எழுத்தின் வளர்ச்சிக்குச் சில சூத்திரங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இச்சூத்திரங்கள் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமிநாத தேசிகரால் எழுதப் பெற்ற இலக்கணத்துக்குக் கூறப்பெற்றுள்ள உரையின் பாயிரத்திலும் காணப்படுகின்றன. அச்சூத்திரங்கள் கீழ் வருமாறு:[1]

''வடிவு பெயர் தன்மையுண் முடிவு நான்கா
நடைபெறு நாவலர் நாடிய வெழுத்தே''

வடிவு, பெயர், தன்மை, (உண்) முடிவு என நால்வகை எழுத்துக்கள் வழங்கின என்பதை இச்சூத்திரம் தெரிவிக்கிறது. மேலும் ஒவ்வொரு வகை எழுத்தையும் விளக்கும் வண்ணம் கீழ்வரும் சூத்திரங்கள் தரப்பட்டுள்ளன.

''கட்புலனில்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
உட்கொளற்கிடும் உருபாம் வடிவெழுத்தே''

''வடிவு முதன் மும்மையின் வழங்கும் எழுத்திற்
படுபல பகுதிக் கிடுபெயர் பெயரே''

''தான முயற்சி தரக்கொளச் செவிப்புலன்
ஆயவொலி தன்மை யெழுத்தாகும்மே',

''உருவமுடன் மும்மையோ டொன்றிய வியல்பை
மருவவுளன் துணிவ துண்முடிவெழுத்தே''

கி.பி. 8ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் தமிழ் நிகண்டு திவாகரம்[2]

''பெயர் எழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயர் இயம்பினரே''

என்று எழுத்துக்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

மற்றொரு நிகண்டான பிங்கலந்தை[3] 'வடிவு, பெயர், தன்மை, முடிவு நான்கெழுத்து' என்று கூறுகிறது. இந்நிகண்டுகள் மேற்கூறப்பட்ட எழுத்தின் நான்கு கட்ட வளர்ச்சியைத் தான் தெரிவிக்கின்றன.

கிறித்து அப்தத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பும், சில நூற்றாண்டுகளுக்குப் பின்பும் இந்தியாவில் வழக்கில் இருந்த எழுத்துக்களைப் பற்றி கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமவயங்க சுத்த என்ற சமண நூலும், கி.பி. 3-ஆம் நூற்றாண்டினது எனக் கருதப்படும் லலிதவிஸ்தர என்ற பௌத்த நூலும் குறிப்பிடுகின்றன. சமண நூலில் 18 வகையான எழுத்துக்களும், பௌத்த நூலில் 64 வகையான எழுத்துக்களும் தரப்பட்டுள்ளன.

1. தி. நா. சுப்ரமணியம், தென்னிந்திய கோயிற் சாசனங்கள் தொகுதி-3, பகுதி-2, பக்கம். 1576-1578. (1957 பதிப்பு)
2. மேலே கண்டது, பக்கம். 1579.
3. மேலே கண்டது, பக்கம். 1580.

எழுத்தில் ஏற்பட்ட நான்கு கட்ட வளர்ச்சியைத் தெரிவிக்கும் சூத்திரங்களையடுத்து யாப்பருங்கலவிருத்தியில் பின்வருமாறு காணப்படுகின்றது.[1]

"[மகடூஉ, ஆ, பிடி, குமரி, கன்னி, பிணவு, முடுவன், என்றின்ன சிலவெழுத்தும்] அ க ச ட த ப ய முதலிய வாயவெழுத்தும், அ ச ல வ ர ங ய முதலிய இராசியெழுத்தும், கார்த்திகை முதலிய நாளெழுத்தும், தோப முதலிய நால்வகை எழுத்தும், சாதி முதலிய தன்மையெழுத்தும், உச்சாடன முதலிய உக்கிரவெழுத்தும், சித்திரகாருடம் முதலிய முத்திற வெழுத்தும், பாகியல் முதலிய நால்வகையெழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதியெழுத்தும், தாது முதலிய வொளியெழுத்தும், மாகமடையம் முதலிய சங்கேதவெழுத்தும், கலி முதலிய சங்கேதவெழுத்தும், பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் என்று இத்தொடக்கத்தனவும், கட்டுரையெழுத்தும், வச்சிர முதலிய வடிவெழுத்தும் மற்றும் பல வகையாற் காட்டப்பட்ட எல்லா எழுத்தும் வல்லார்வாய்க் கேட்க" என்பதாகக் காணப்படுகிறது. இதில் பதினைந்து வகையான எழுத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட எழுத்துக்களுக்கு இன்னமும் முழுமையான விளக்கம் யாராலும் தரப்படவில்லை. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் 1935ஆம் ஆண்டில், தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் சித்திர எழுத்துக்கள் (The Pictographs in Tamil Literature) என்னும் கட்டுரையில் இவைபற்றி எழுதியுள்ளார். மேலும் தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம்-3 பகுதி-2ல் சில சித்திர எழுத்துக்களை, மேற்கண்ட சமண, பௌத்த நூல்களில் தரப்பட்டுள்ள சில எழுத்துக்களோடு ஒப்பிட்டுக் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்.[2]

ஆயவெழுத்து

ஆயம் என்றால் வருமானம், இலாபம் முதலான பொருள்களைத் தரும். கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் இச்சொல் வரிகள், நுழைவு வரி மற்றும் சுங்க வரியைக் குறிப்பதற்குக் கையாளப்பட்டுள்ளது. சமண நூலில் 'ஆயஸ' அல்லது 'ஆதம்ஸ' எழுத்து என்று ஒன்று குறிக்கப்படுகிறது. 'ஆதம்ஸ' என்ற சொல் சில இடங்களில் 'பொறித்த' என்னும் பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது. 'அய' என்றால் இரும்பு என்று பொருள். ஆதலால் இரும்பால் பொறிக்கப்பட்ட எழுத்து என்று பொருள் கொள்ளலாம். தமிழில் வழங்கப்பட்ட 'ஆயம்' என்ற எழுத்தும், 'ஆயஸ்' எழுத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

இராசியெழுத்து

'ராசி' என்னும் சொல் இராசி மண்டலத்தையும் குறிக்கும். இராசியையும், நட்சத்திரத்தையும் குறிக்க, வான இயலும், சோதிட இயலும் சிற்சில உருவங்களைக் குறிப்பது நமக்கும் தெரியும். பண்டைக் காலத்திலேயே மேற்கூறப்பட்ட இரு இயல்களும் மிகுந்த முன்னேற்ற நிலையில் வளர்ச்சி பெற்றிருந்தன. இத்தகைய வளர்ச்சி சில குறியீடுகளையும் படங்களையும் பயன்படுத்துவதற்குக் காரணமாக அமைந்திருக்கும். ஆதலால் இத்தகைய படங்களோ அல்லது குறியீடுகளோதான் 'இராசி எழுத்து' என வழங்கப் பெற்றிருக்கும்.

நாள் எழுத்து

நாள் என்னும் சொல் ஒரு பகல், ஓர் இரவு சேர்ந்த நாளைக் குறிக்கும். முற்காலத்தில் இச்சொல் நட்சத்திரத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. நட்சத்திரத்தைக் குறித்த, நாள் என்னும் சொல்லையே மக்கள் ஒரு பகல் ஓர் இரவைக் குறிக்கப் பயன்படுத்தியிருப்பர் எனத் தெரிகிறது. தமிழகத்தில் வழங்கப் பெறும் "நாள் என்ன செய்யும்

1. தி. நா. சுப்ரமணியம், தென்னிந்திய கோயிற் சாசனங்கள், தொகுதி-3, பகுதி-2, பக்கம். 1580, (1957 பதிப்பு)
2. மேலே கண்டது பக்கம் 1583.

கோள் என்ன செய்யும்", என்ற பழமொழி மூலம் நாள் என்பது நட்சத்திரத்தையும், கோள் என்பது இராசியையும் குறிப்பதாக இதன்மூலம் உணரலாம் - ஆதலால் நட்சத்திரம் போன்ற உருவம் எழுத்தைக் குறிக்கப் பயன்பட்டதையே 'நாள் எழுத்து' என்று வழங்கி யிருக்கின்றனர்.

மேற்கூறப் பெற்ற எழுத்துக்கள் எவ்வாறு வரையப் பெற்றிருக்கலாம் என்பதற்குச் சான்றாக மொகஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ள உருவ எழுத்துக்களைக் குறிப்பிடலாம். அத்தகைய உருவ எழுத்துக்கள் குஜராத் மாநிலத்திலுள்ள லோத்தல், துவாரகா போன்ற இடங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஓவியத்தில் காணப்பெறும் உருவ எழுத்து

தமிழகத்தில் முதன் முதலாக இத்தகைய உருவ எழுத்துக்கள் விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கீழ்வாலை என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பண்டைய ஓவியத்தில் காணப்படுகின்றன. இதில் ஐந்து எழுத்துக்கள் உள்ளன. முதல் எழுத்து தென்னங்கீற்று போன்றும், இரண்டாம் எழுத்து மத்தளம் போன்றும், மூன்றாம் எழுத்து சீப்பு போன்றும், நான்காம் எழுத்து மத்தளம் போன்றும், ஐந்தாம் எழுத்து நான்கு குறுக்குக் கால்களையுடைய சக்கரம் போன்றும் எழுதப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்கள், இங்குள்ள ஓவியங்களை வரைந்தவனின் பெயராக இருக்கலாம் என்றும், கி.மு. 1000விருந்து கி.மு. 500 ஆண்டுகட்கு உட்பட்டதாக இருக்கலாம் என்றும் பி.எல். சாமி குறிப்பிட்டுள்ளார்.[1]

பானை ஓடுகளில் காணப்பெறும் உருவ எழுத்துக்கள்

தமிழகத்தில் எந்தப் பகுதியில் அகழாய்வு நடத்தப் பெற்றாலும் அங்கெல்லாம் கருப்பு-சிவப்பு (Black and Red ware) பானைகளோடு சில உருவங்கள் வரையப்பெற்ற பானை ஓடுகள் பெரும்பாலும் பெருங்கற்காலப் பொருட்களோடேயே கிடைத்து வருகின்றன. ஆதலால் பெருங்கற்கால மக்கள் இவற்றை எழுதியிருக்கின்றனர் என்று உறுதியாகக் கூறலாம். இவ்வுருவங்களும், உருவ எழுத்தின் (pictograph) தொடர்ச்சியே என்று கருதலாம். இக்காலக் கட்டத்தில் இவ்வெழுத்துக்கள் ஒலி வடிவம் (phonograph) பெற்று வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதை நாம் அறிய முடியவில்லை. பானை ஓடுகளில் கிடைக்கும் இவ்வுருவங்களை மொஹஞ்சதாரோ, ஹரப்பா உருவ எழுத்தோடு ஒப்பிட்டு ஓர் ஆய்வைத் தொல்லியல் வல்லுநர் பி. பி. லால் மேற்கொண்டார். அவ்வாய்வின் மூலம் பானை ஓடுகளில் அதுவரை காணப்பெற்ற 61 உருவங்களில் 47 உருவங்கள் மொகஞ்சதாரோ, ஹரப்பா கால உருவ எழுத்துக்கள் போன்றே காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.[2] சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை சேகரித்து வைத்திருந்த பானை ஓடு ஒன்றின் மீது இருந்த உருவத்தைப் பார்த்துவிட்டு அது ஹரப்பன் கால உருவம் மாதிரியே இருப்பது அறிந்து பெரிதும் வியப்புத் தெரிவித்தார் அஸ்கோ பர்போலோ என்னும் பின்லாந்து நாட்டு அறிஞர்.

இலங்கை முத்திரை உருவம்

சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் வடக்குப் பகுதியான யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள அனைக்கோடை என்ற இடத்தில் நிகழ்த்தப் பெற்ற அகழாய்வில் பெருங் கற்காலச் சின்னத்தில் ஒரு செப்பு முத்திரை கண்டெடுக்கப்பட்டதாகவும் அதில் ஒரு வரியில் உருவ எழுத்துக்களும், மற்றொரு வரியில் தமிழ் பிராமி (Archaic Tamil) எழுத்துக்களும் பொறிக்கப் பெற்றிருப்பதாகவும், மேற்கூறப்பட்ட இரு வரிகளுமே ஓரே

---

1. பி. எல். சாமி; ஐ.ஏ.எஸ்., தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம், பக்கம். 77, (பதிப்பு 1984)
2. B. B. Lal, From the Megalithic to the Harappa, Tracing back the graffiti on the pottery.

பொருளைக் குறிப்பனவாக இருக்கலாம் என்றும் இலங்கையைச் சார்ந்த இந்திர பாலா என்னும் வரலாற்றறிஞர் செய்தி வெளியிட்டிருந்தார்.[1] அதில் காணப்பெற்ற உருவ எழுத்துக்கள் தமிழ் நாட்டில் பெருங்கற்காலப் பானை ஓடுகளில் பொறிக்கப் பெற்றிருந்த உருவங்கள் போன்றே காணப்பட்டன. ஆதலால் தமிழ்நாட்டுப் பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டிருக்கும் உருவங்களும் ஏதோ ஒரு பொருளை உணர்த்தும் உருவ எழுத்தாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதலாம். அது மட்டுமல்லாமல் கிறித்து அப்தத்தின் தொடக்கக் காலத்தில் வாழ்ந்த மக்கள் உருவ எழுத்தையும், (Pictograph) தன்மை எழுத்தையும் (Standardized script) அறிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அதன் காரணமாகத் தான் பின்னாளிலும் உருவ எழுத்தைப் பற்றிய செய்தியை இலக்கிய ஆசிரியர்கள் எடுத்தாண்டிருக்கிறார்கள் என்று நம்பலாம்.

பண்டைத் தமிழ் எழுத்துக்களோடு காணப்பெறும் உருவங்கள்

தமிழ்நாட்டில் சில இடங்களில் பண்டைத் தமிழ் எழுத்துக் (தமிழி எழுத்து) கல்வெட்டுக்களோடு சில உருவங்களும் வரையப் பெற்றுக் காணப்படுகின்றன. அண்மையில் அழகன்குளம் அகழாய்வில் பண்டைத் தமிழ் எழுத்துக்களின் நடுவில் குறியீடு ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ள பானையோடு கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இதே போன்று இலங்கையில் காணப்பெறும் பண்டையக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் அவற்றின் முன்னோ அல்லது பின்னோ அல்லது மேற்பகுதியிலோ, கீழ்ப்பகுதியிலோ சில உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. அவ்வாறு காணப்பெறும் அவ்வுருங்களையெல்லாம் பட்டியல் இட்டுத் தொகுத்துத் தந்துள்ளனர். மேலும் அவ்வுருவங்கள் எந்தக் கல்வெட்டின் அருகில் காணப் படுகின்றனவோ அந்தக் கல்வெட்டுக்கும் அங்கு காணப்பெறும் உருவத்துக்கும் யாதாவதொரு தொடர்பு இருத்தல் வேண்டும் என்றும் எழுதியுள்ளனர். அவற்றில் 'ஸ்வஸ்திகா' உருவம் 'திஸ' என்னும் ஒலியைக் குறிப்பதாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. அத்தோடு ஹரப்பன் கால உருவ எழுத்துக்களைப் புரிந்து கொள்வதற்கு இலங்கைக் கல்வெட்டுக்களோடு காணப்பெறும் உருவங்கள் உதவக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.[2]

ஆதலால் தமிழகத்துப் பண்டைக் கல்வெட்டுக்களோடு காணப்பெறும் உருவங் களுக்கும், அந்தக் கல்வெட்டு வாசகங்களுக்கும் தொடர்பு கட்டாயம் இருந்ததால் வேண்டும். இது பற்றி சில ஆண்டுகளுக்கு முன்பாகத் 'தமிழகக் கல்வெட்டுக்களோடு காணப்படும் குறியீடுகள்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை இக்கட்டுரை ஆசிரியர் எழுதியுள்ளார். உருவங்கள் காணப்பெறும் கல்வெட்டுக்கள், வணிகர்கள் சமணத் துறவிகளுக்கு அளித்த கொடையைப் பற்றி தெரிவிக்கின்றன. தமிழ் இலக்கியங்கள், பல்வகைப் பொருட்களை விற்கும் வணிகர்கள், தங்களுக்கென வெவ்வேறு உருவம் பொறித்த கொடியை நாட்டிக் கொண்டு வாணிபம் செய்வர் என்று கூறுவதால்; அவ்வணிகப் பொருட்களைக் குறிக்கும் உருவங்களாக இருக்கலாம் என்று அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. அத்தோடு வேறு சில கல்வெட்டுக்களோடு காணப்பெறும் உருவங்கள் அவை காணப்பெறும் கல்வெட்டு வாசகங்களைக் கொண்டு பார்க்கையில் அவர்கள் செய்த தொழிலைக் குறிப்பதாகவும் இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.[3]

எழுத்துக்களின் வடிவம் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்றும்; இந்த ஒலியைத் தான் குறிக்கிறது என்றும் வரையறுக்கப்பட்ட பின்பு தான் இலக்கியங்களும், இலக்கணங்களும் எழுதப்படலாயின. தமிழ் மொழியின் மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியம், எழுத்தைப் பற்றிக் கூறுகையில்,

---

1. Hindu, April, 26, 1981.
2. S. Paranavitana, Inscriptions of Ceylon, Vol. I, Introduction, p.XXVI, (pub. 1970)
3. ஆய்வுக்கோவை (பத்தாவது கருத்தரங்கு) தொகுதி - 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, 1978, பக்கங்கள் 58-62.

எழுத்து எனப்படுப,

அகரம் முதல்

னகர இறுவாய் முப்பஃது என்ப

என்று தெரிவிக்கிறது. தொல்காப்பியர் காலத்தில், எழுத்துக்கள் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலையில், வரையறுக்கப்பட்ட நிலையில், இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

நன்னூலில் "தொல்லை வடிவின எல்லா எழுத்தும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறெனில் தொல்காப்பியம் நன்னூல் காலங்களுக்கு முன்பேயே இவ்வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து (Standard Script) ஏற்பட்டுவிட்டது என்று உணரலாம்.

வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து ஏற்பட்டதும் இவ்வெழுத்துகக்ளை இரு வகையாகப் பிரித்துள்ளனர் மொழி அறிஞர்கள். அவை (1) அகர வகை எழுத்துக்கள் (2) உயிர்மெய் வகை எழுத்துக்கள் என்ற இரு வகையாகும். அகர வகை எழுத்துக்கள் என்பது மெய் எழுத்துக்குப் பக்கத்தில் உயிர் எழுத்தைத் தனியாக எழுதுவது. இவ்வெழுத்து ஆங்கில எழுத்து வகையைச் சாரும். ஆங்கில எழுத்தில் உயிர் மெய்யான 'க' என்பதைக் காட்டுவதற்கு கே+ஏ (K+A) என்று எழுதப்படுகிறது. இதில் கே என்ற மெய்யும், ஏ என்ற உயிரும் உள்ளன. உயிர்மெய் வகை எழுத்துக்கள் என்பது, உயிர்மெய் எழுத்தை மெய் எழுத்து, உயிர் எழுத்து என்று தனித்தனியாக எழுதாமல் உயிர் ஏறிய மெய்யாக, ஒரே எழுத்தாக எழுதுவது. தமிழ் எழுத்து உயிர்மெய் வகை எழுத்தைச் சேர்ந்தது. 'க' என்று எழுதுவற்கு க்+அ என்று எழுதாமல் உயிர் ஏறிய மெய்யாக 'க' என்று எழுதுவது ஆகும்.[1] தமிழ்நாட்டில் காணப்பெறும் குகைக் கல்வெட்டுக்களில் மிகப் பழமையாக உள்ளவற்றில் அகர வகை எழுத்துக்களைக் காணமுடிகிறது, நாளாக நாளாக உயிர்மெய் வகை எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் எழுத்து வளர்ச்சியில் தன்மை எழுத்துக்கு அடுத்த கட்ட வளர்ச்சியாக அகர வகை எழுத்துக்களும், பின்னர் உயிர்மெய் வகை எழுத்துக்களும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது.

இந்தியாவில் கி.மு. 3-2 நூற்றாண்டுகளில் பதினெட்டு வகை எழுத்துக்கள் வழக்கில் இருந்தன என்பதை 'சமவயங்கசுத்த' மற்றும் 'பண்ணாவனசுத்த' என்னும் சமண நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இந்நூல்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. புத்தமத நூல்களான 'மஹாவஸ்து' 30 வகை எழுத்துக்களையும் 'லலிதவிஸ்தரம்' 64 வகை எழுத்துக்களையும் தெரிவிக்கின்றன. இவ்விரு நூல்களின் காலத்தைச் சரியாகக் கூற முடியவில்லை. ஆயினும் லலிதவிஸ்தரம் சீன மொழியில் கி.பி. 308-ல் மொழிமாற்றம் செய்யப் பெற்றிருப்பதால் சீன நூலுக்கு ஓரிரு நூற்றாண்டுகள் முன்னதாக லலிதவிஸ்தரம் எழுதப் பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.[2]

சமண நூல்கள் தெரிவிக்கும் 18 வகை எழுத்துக்களில் 'கரோஷ்டி', 'பிராமி' 'தாமிலி' ஆகிய எழுத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ் எழுத்துதான் பிராகிருத மொழியில் 'தாமிலி' என்று எழுதப்பட்டுள்ளது.

---

1. இரா. நாகசாமி, கல்வெட்டியல், பக்கம் 5 (பதிப்பு 1980)
2. தி. நா. சுப்ரமணியன், தெ. இ. கோ. சா. தொகுதி-3, பகுதி-2, பக்கங்கள் 1587-88 (பதிப்பு 1957).

கரோஷ்டி எழுத்துக்கள் என்பது 'கழுதையின் காது' போன்ற வடிவில் இருந்ததால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ்வெழுத்து இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மட்டும்தான் வழங்கி வந்திருக்கிறது. மத்திய, கிழக்கு ஆசிய மக்களின் தொடர்பால் இந்தியாவில் இவ்வெழுத்து உருவாகி வழங்கி வந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

மேலே கூறப்பட்டுள்ள பதினெட்டு வகை எழுத்துக்களில் 'யவனாலி' அல்லது 'யவனாலிய' என்று ஒரு எழுத்தும் குறிக்கப்படுகிறது. இது கிரேக்க எழுத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மௌரியப் பேரரசு காலத்தில் கிரேக்க மன்னர்கள் இந்தியாவுக்கு வந்ததும். அப்பொழுது அவர்கள் தங்கள் காசுகளில் கிரேக்க எழுத்தையும் பிராமி எழுத்தையும் பொறித்து வெளியிட்டதும் வரலாற்று உண்மை. ஆதலால் அவர்களது எழுத்தைத்தான் இலக்கியங்கள் 'யவனாலி' என்று குறிக்கிறது என்று உறுதியாகக் கூறலாம். 'தரிபிலி' என்று குறிக்கப்படும் எழுத்து தமிழ்நாட்டில் வழங்கி வந்த தமிழ் எழுத்தைக் குறிப்பது போல் மற்ற எழுத்துக்களும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வழக்கத்திலிருந்த எழுத்துக்கள் தாம் என்று கொள்ளலாம்.

இந்தியாவின் எல்லாப் பகுதியிலுமே, தமிழ்நாடு உட்பட ஒரே எழுத்துதான் வழங்கி வந்திருக்கிறது. அதை ஒவ்வொரு பகுதி மக்களும் தனித்தனி பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். மௌரியப் பேரரசு நிலவிய பகுதியில் அதற்கு 'பிராமி' என்றும், தமிழ்நாட்டில் 'தமிழ் என்றும் வழங்கப் பெற்றிருக்கின்றன. பிற பகுதிகளில் வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டிருக்கின்றன. இக்காலக்கட்டத்தைச் சார்ந்ததாகக் காணப்பெறும் இந்தியாவின் அனைத்துப் பகுதி எழுத்தும் ஒரே வடிவில்தான் காணப்படுகின்றன. ஒரு சில எழுத்துக்களில் அவ்வப்பகுதிகளில் வழங்கி வந்த மொழிகளுக்கேற்ப சில மாறுபட்ட எழுத்து வடிவங்களைக் காணமுடிகிறது.

கி.பி. 1-2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 'லலிதவிஸ்தரம்' என்ற புத்தமத நூல் அறுபத்து நான்கு வகையான எழுத்துக்களைக் குறிப்பிடுகிறது. இந்தியாவின் சிறுசிறு பகுதிகளில் எல்லாம் பழக்கத்திலிருந்த அனைத்து வகை எழுத்துக்களையும் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அங்கலிபி, வங்கலிபி, மகதலிபி என்று ஒவ்வொரு சிறு சிறு பகுதிகளிலும் வழங்கிய எழுத்தைத் தெரிவிக்கிறது. இதில் தேவலிபி, நாகலிபி, யக்ஷலிபி, மிருகசக்ரலிபி ஆகிய எழுத்துக்களும் காணப்படுகின்றன. தேவர்கள் எழுத்து, நாகர்கள் எழுத்து, யக்ஷ எழுத்து, அசுரர் எழுத்து என்றும் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இவைகளின் விளக்கம் சரியாக விளங்கவில்லை. இவ்வெழுத்துக்கள் பட்டியலில் பிராமிலிபி, கரோஷ்டிலிபி, த்ராவிடலிபி, தக்ஷிணலிபி, கனாரிலிபி போன்றவைகளும் உள்ளன. த்ராவிடலிபி, தக்ஷிணலிபி என இரு எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் தமிழ் எழுத்து என்று தனியாகக் குறிக்கப்படவில்லை. ஆதலால் த்ராவிட எழுத்து என்பதைத் தமிழ் எழுத்து என்று கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டை வட நூலார் 'த்ரமிள தேசம்' என்றும் 'திராவிட தேசம்' என்றும் குறிப்பிட்டு வழங்கியிருப்பதால் தமிழ் எழுத்தைப் புத்தமத நூலும் திராவிட லிபி என்று குறிப்பிட்டுள்ளது என்று கொள்ளலாம். இந்நூல் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளதாலும் இது உறுதியாகிறது.

பண்டைத் தமிழ் எழுத்து

தமிழகத்தில் மிகப் பழமையானது என்று கருதப்படும் எழுத்து 'தமிழ் எழுத்து' ஆகும். இவை 'பிராமி' எழுத்தென்றும், 'தென்னிந்திய பிராமி' எழுத்து என்றும் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை வழங்கி வந்தனர். நாம் இவ்வெழுத்தை நம் வசதிக்காகப் 'பண்டைத்தமிழ் எழுத்து' (Archaic Tamil Script) என்று கூறுவோம். இவ்வெழுத்து கி.மு. 3-2ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கிறது என்று அண்மைக் காலம் வரை

கருதப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப் பட்டுள்ள பூலாங்குறிச்சி கல்வெட்டால் தமிழ் எழுத்தின் பழமை மேலும் ஓரிரு நூற்றாண்டு களுக்கு முன்பாகவே இருத்தல் வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

பூலாங்குறிச்சி கல்வெட்டின் காலம், அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு சக ஆண்டு என்று கொண்டு ($192 + 78 = 270$) கி.பி. 270 என்று முடிவு செய்துள்ளார் முனைவர் நாகசாமி.[1] அதிலுள்ள எழுத்தமைதியின் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டெனில். அறச்சலூர்க் கல்வெட்டின் காலத்தை இன்னும் சிறிது முன்னுக்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். அறச்சலூர் கல்வெட்டு கி.பி. 1-2ஆம் நூற்றாண்டென்றால் புகழியூர் கல்வெட்டின் காலத்தை கி.மு. 2 முதல் கி.மு. 1ஆம் நூற்றாண்டு எனக் கூறுதல் வேண்டும், அவ்வாறாயின் சேர அரசர்களின் பரம்பரையை கி.மு. 2-1ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளல் வேண்டும் இந்த முடிவு முற்காலக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் எழுத்துக்களின் தன்மைக்கும் ஒற்றுமையாகக் காணப்படுகிறது.[2]

தமிழகத்தில் காணப்பெறும் பழந்தமிழ்க் கல்வெட்டுக்களை இரண்டு வகையாகப் பிரித்துள்ளார், ஐராவதம் மகாதேவன் அவர்கள். முதல் வகையில் புள்ளியில்லா மெய் வடிவு, மெய்யை மட்டும் குறிக்கும்; அகரம் ஏறிய மெய்யைக் குறிக்காது. அகரம் ஏறிய மெய்யைக் குறிக்க ஒரு கோடு இடப்பட்டது. இக்கோடு 'ஆ' -காரத்தை குறிக்கவும் இடப்பட்டிருக்கிறது. இரண்டாம் வகை எழுத்தில் புள்ளியில்லா மெய்யெழுத்து, அகரம் ஏறிய மெய்யெழுத்தாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கல்வெட்டுக் களில் எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம், குறில், நெடில் பிரித்துக் காட்டுவதற்கு எவ்விதக் குறியும் இடப்படவில்லை என்றும்; இக்கல்வெட்டுக்களில் கூட்டெழுத்துக்களே காணப்பட வில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இக்கல்வெட்டுக்களைப் பற்றி மேலும் ஆய்வு செய்த முனைவர் இரா. நாகசாமி அவர்கள் புகழியூர், அறச்சலூர் கல்வெட்டுக்களில் மெய்யைக் குறிக்க புள்ளியிடப்பட்டிருக் கிறது என்றும், எகர, ஒகரம் குறிக்கவும் புள்ளி இருக்கிறது என்றும் கருத்துத் தெரிவித்து இருக்கிறார். இவர் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும். இதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட் டிருப்பவைவளில் மெய்யைக் குறிக்கவும், எகர, ஒகரக் குறிலைக் குறிக்கவும் புள்ளி காணப் படவில்லை. அவைகளில் அகரம் ஏறிய உயிர்மெய்யைக் குறிக்க சில இடங்களில் மெய் எழுத்துக்குப் பக்கத்தில் 'அ' கரத்தைத் தனியாக எழுதிக் காட்டியிருக்கிறார்கள். சில இடங்களில அகரம், ஆகாரம் ஏறிய உயிரைக் குறிக்க கோடு இடப்பட்டிருந்தாலும், மிகப் பழைய முறையான மெய்யையும், உயிரையும் தனித்தனியாக எழுதிக் காட்டும் முறையையும் பயன்படுத்தியிருக்கிறார்கள் இம்முறை அக்கல்வெட்டுக்களின் பழைமைத் தன்மையைக் காட்டா நிற்கும். அத்தோடு இக்கல்வெட்டுக்களில் எதிலுமே கூட்டெழுத்துக்கள் காணப் பெறவில்லை என்பதும் இவ்வெழுத்துக்களின் மிகப் பழைமைத் தன்மைக்கு மற்றொரு சான்றாகக் கருதலாம்.

நன்றாக வளர்ச்சியடைந்த நிலைப்படுத்தப்பட்ட (Standardised) எழுத்தை அசோகனது கல்வெட்டுகளில் காண்கிறோம். அசோகனது கல்வெட்டுக்களில் புள்ளியிடப்பட வேண்டிய இடங்களில் புள்ளியிட்டு எழுதப்பட்டிருக்கின்றன.

---

1. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுதுறைக் காப்பாட்சியர் துளசிராமனால் 19-5-79ல் கண்டுபிடிக்கப்பெற்று; முனைவர் இரா. நாகசாமியால் முதன்முதலில் கட்டுரை எழுதப் பெற்று, ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் படிக்கப்பெற்றது. ஜனவரி 4 முதல் 10 முடிய, 1981.

2. நடன. காசிநாதன், கல்லெழுத்துக்கலை, பக்கங்கள் 116-117, (பதிப்பு 1989).

ஆனால் தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் உயிரெழுத்துக்கள் பத்துதான் எழுதப் பட்டுள்ளன. 'ஐ' காரமும், 'ஔ' காரமும் காணப்படவில்லை. தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் 'அகரமும், இகரமும்' மற்றும் 'அகரமும், யகர ஒற்றும்' ஐகாரம் ஆகும் என்றும்; 'அகர, உகரம்' 'ஔகாரம்' ஆகும் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.[1] அதன்படி பார்க்கையில் அகரத்தையும், இகரத்தையும்: அகரத்தையும், யகர ஒற்றையும் தனித்தனியாக எழுதி அதை ஐகாரம் எனக் கொண்டார்களென்றும்; அகர, உகரத்தைத் தனித்தனியாக எழுதி ஔகாரம் எனக் கருதினார்கள் என்றும் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த வகையில் பார்த்தாலும் தமிழகக் கல்வெட்டுகள் மிகவும் ஆரம்ப கட்ட நிலையிலேயே இருந்திருக்கின்றன என்று கருத வேண்டியுள்ளது.

இதுகாறும் கூறப் பெற்றவைகளைப் பார்க்கையில் திரு டி என். சுப்பிரமணியம் தாம் தொகுத்து வெளியிட்ட 'தென்னிந்திய கோயிற் சாசனங்கள், தொகுதி-3, பகுதி-2ல் (South Indian Temple Inscriptions Vol. 3 Part 2), பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவைகளுள் பழைமையான தான தமிழுக்காக அது தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா பூராவும் அதுவே பழக்கத்தில் நிலவியது என்றும் கூறியுள்ள கருத்து முற்றிலும் உண்மையாகக் காணப் படுகிறது.[2]

மௌரியப் பேரரசன் அசோகன் தமது கல்வெட்டுக்களைப் பிராகிருத மொழியிலும், பாலி மொழியிலும் எழுதியபோது இவ்வெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். பின்னர் வந்த குப்தப் பேரரசர்களும் இவ்வெழுத்தையே உபயோகித்திருக்கின்றனர். அவர்களது கல்வெட்டுக்களில் இகரத்திலிருந்து 'ஈ' காரத்தை வேறுபடுத்திக் காட்ட மேலும் ஒரு புள்ளியைச் சேர்த்திருக்கிறார்கள். இம்முறை தமிழ்நாட்டில் நெடிலிலிருந்து குறிலாக்கப் பயன்படுத்திய புள்ளியிடும் முறையை ஒட்டியதாகும் என்றும்; ஆனால் அவர்கள் குறிலுக்குப் பதிலாக நெடிலுக்குப் புள்ளியிட்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறுவது சிந்திக்கத்தக்கது.

மெய்யைப் புள்ளியிட்டுக் காட்டுவதும், எகர, ஒகரத்துக்குப் புள்ளியிடுவதும் தொல்காப்பிய காலத்தில் நிகழ்ந்திருக்கிறது.[3] ஆதலால் அறச்சலூர், புகழியூர் கல்வெட்டுக் களின்காலமான கி.மு. 2-முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குள் உள்ள காலக் கட்டத்தைச் சார்ந்ததாகத் தொல்காப்பியத்தின் காலம் இருக்கலாம். மெய்யைக் குறிக்க புள்ளியிடாமல் எழுத்துக்கள் வழங்கி வந்த காலம் தொல்காப்பிய காலத்துக்கும் முந்தையது. தொல் காப்பியத்தில் பல இடங்களில் 'என்மனார் புலவர்', 'என்ப' என்ற சொற்கள் காணப்படு கின்றன. அவை தொல்காப்பியருக்கு முன்பிருந்த நிலைமையைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் காலத்திலேயே பழைய சில எழுத்து மரபுகள் வழக்கொழிந்துவிட்டன என்பது பெறப்படுகிறது. அக்காலக் கட்டத்தில்தான் மாங்குளம் போன்ற இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே அவை காலத்தால் முந்தையவை ஆகின்றன. ஆதலால்தான் அவை கி.மு. 5-4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை களாக இருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

அண்மையில் இலங்கை நாட்டில் உள்ள அநுராதபுரத்தில் அகழாய்வில் கிடைக்கப் பெற்ற பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்ற பானையோடுகளின் காலத்தை

---

1. தொல்காப்பியம், எழுத்து அதிகாரம், மொழிமரபு, சூத்திரங்கள்–21,23 மற்றும் 22, மர்ரே இராஜம் (பதிப்பு 1960)
2. தென்னிந்திய கோயில் சாசனங்கள் தொகுதி-3, பகுதி-2, பக்கம் 1607 (பதிப்பு 1957)
3. தொல்காப்பியம், எழுத்து அதிகாரம், நூல் மரபு, சூத்திரங்கள் - 15, 16.

சி. 14 என்ற அறிவியல் காலக் கணிப்பு முறையால் கி.மு. 750 எனக் கணித்துள்ளனர்[1] இக்காலக் கணிப்பு நம் கருத்துக்கு அரண் சேர்க்கிறது. மேலும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பட்டிபுரோலுவில் கிடைத்துள்ள கல்வெட்டும் இக்கருத்திற்கு உறுதுணையாகிறது. அக்கல்வெட்டிலும் மெய்யைக் குறிக்க புள்ளியில்லை. மேலும் அகரம் ஏறிய மெய்யைக் காட்ட பக்கக்கோடு ஒன்று இட்டும், 'ஆகாரம்' ஏறிய மெய்யைக் குறிக்க பக்கக் கோட்டோடு கீழ்நோக்கிய கோடு ஒன்று இட்டும் எழுதியிருப்பது மனத்தில் கொள்ள வேண்டியதாகும். இம்முறை மாங்குளம் எனும் இடத்தில் காணப்படும் கல்வெட்டுக்களின் வளர்ச்சி பெற்ற நிலையைக் காண்பிப்பதாகக் கருதுதல் வேண்டும்.

தமிழகத்தில் பழந்தமிழ் எழுத்துப் பொறித்த கல்வெட்டுக்கள் மலைக் குகைகளில் மட்டுமல்லாமல் பானை ஓடுகள், காசுகள் ஆகியவற்றிலும் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, கொற்கை, உறையூர், காஞ்சிபுரம், கரூர், வல்லம், கொடுமணல், அழகன்குளம், ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் பானை ஓடுகளில் இவ்வெழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்துக்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டியில் கிடைத்த ஈயக் காசுகள்[2], கரூரில் கிடைத்துள்ள சேரர்களின் செப்புக்காசுகள், பாண்டியன் 'பெருவழுதி'க்காசு[3] ஆகியவற்றில் இவ்வெழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் மக்களிடத்தில் இவ்வெழுத்து பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு மதத்தார்தான் இவ்வெழுத்தைப் பரப்பினர் என்ற கருத்தை உடைத்தெறிவதாக இதைக் கருதலாம். அனைத்து மக்களும் நன்கு அறிந்த ஒரு எழுத்தாக இது நிலவி வந்திருக்கிறது. அவ்வாறெனில் தொன்று தொட்டே இவ்வெழுத்துத் தமிழகத்தில் வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்று நாம் உறுதியாகக் கூறலாம். பானை ஓடுகளிலும், குறிப்பாகக் கருப்பு சிவப்பு பானை ஓடுகளிலும் இவ்வெழுத்து எழுதப்பெற்றிருப்பது, இவ்வெழுத்துக்களின் பழமை கி.மு. 5-4ஆம் நூற்றாண்டு என்று கொள்வதற்கு மேலும் ஆதாரமாக அமைகிறது.

தமிழ் மொழிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வெழுத்தைப் பின்னாளில் பிராகிருத மொழி பயன்படுத்திக்கொண்டது என்னும் கருத்துக்குச் சான்றாகச் சாதவாகனர்களின் இருமொழிக் காசுகளைக் கூறலாம். அக்காசுகளில் ஒரு பக்கத்தில் தமிழ் மொழியிலும், மற்றொரு பக்கத்தில் பிராகிருத மொழியிலும் எந்த மன்னனால் அக்காசு வெளியிடப்பட்டது என்பது குறிக்கப் பெற்றிருக்கும்.[4] இரு மொழிகளிலுமுள்ள வாசகங்கள் ஒரே வகை எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன.

கி.பி. 2-3ஆம் நூற்றாண்டளவில் இப்பண்டைத் தமிழ் எழுத்தின் வடிவம் மாற்றம் பெறத்தொடங்குகிறது. கல்லில் உளியாலும், துகிரிகை கொண்டு வண்ணத்திலும் எழுதி வந்த தமிழர்கள். ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதத் தொடங்கிய காரணத்தால் இவ்வடிவ மாற்றம் தொடங்கி இருக்கலாம் என்று கருதலாம். எழுத்தாணியால் ஓலையில் நேர்க் கோடுகளையும், பக்கக்கோடுகளையும் எழுதினால் ஓலை கிழிந்துவிடக்கூடிய நிலை ஏற்படும். அதைத் தவிர்க்கும் நோக்குடன் நேர்க்கோடுகளிலும், பக்கக் கோடுகளிலும் சிறு வளைவுகளைச் சேர்த்து எழுதத் தொடங்கியிருக்கின்றனர். இம்மாற்றத்தை அறச்சலூர், ஈரெட்டிமலை, பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களில் நன்கு காண முடிகிறது. பின்னர்

1. Brahmi writing of 750 B.C. found at Anurathapura, The Sunday Times, Srilanka, 15-4-1990. The Sunday observer, 29-4-90.
2. Dr. R. Nagaswamy, Tamil Coins A Study, pp. 140-141.
3. இரா. கிருஷ்ணமூர்த்தி, பாண்டியர் பெருவழுதி நாணயங்கள், பக்கங்கள் 13-23, (வெளியீடு 1987).
4. Tamil Coins A Study, pp. 132-134.

நாளடைவில் மேலும் மேலும் வளைவுகளைப் பெறறு 'வட்டெழுத்து' என்று அழைக்கின்ற அளவுக்கு மாற்றம் பெற்றுவிட்டது. முழு வட்ட வடிவம் பெற்ற தமிழ் எழுத்துக்களை கி.பி. 8-9ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் காணமுடிகிறது. வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமனூர் செப்பேடுகளில் இவ்வெழுத்தைப் பார்க்கலாம். இவ்வெழுத்து இவ்வாறு வளைவு பெற்றதால் சில எழுத்துக்களை வேறுபடுத்திப் புரிந்துகொள்ள முடியாதபடி எழுதப்பட்டிருக்கிறது. உதாரணமாகப் ப, ம, ய, வ ஆகிய எழுத்துக்கள் மிகச் சிறு வேறுபாட்டோடு எழுதப்பட்டு காணப்பெறும். அதேபோன்று ண, த, ற போன்ற எழுத்துக்களிலும் அதிக வேறுபாடு காணமுடியாது. கி.பி. 17-18ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கும் இவ்வெழுத்தைக் காணில் படிப்பதென்பது மிகவும் கடினம். காரணம் அனைத்து எழுத்துக்களும் வடிவில் ஒன்று போன்றே தோன்றும். இவ்வெழுத்து மிகப் பிற்காலம் வரை தமிழகத்தின் தென்கோடிப் பகுதியிலும், கேரளப் பகுதியிலும் வழங்கி வந்திருந்தாலும், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இவ்வெழுத்து புரியாத எழுத்தாகத் தமிழக மக்களுக்கு கி.பி. 11-12ஆம் நூற்றாண்டிலேயே ஆகிவிட்டது. அதற்குக் காரணம் அப்பகுதி களில் மற்றொரு வகை எழுத்து உருவாகத் தொடங்கியதேயாகும்.

இந்த மற்றொரு வகை எழுத்தைத்தான் நாம் இன்று தமிழ் எழுத்து என்று அழைக் கின்றோம். இவ்வெழுத்தும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டளவிலேயே வளரத் தொடங்கினாலும், கி.பி. 6-7ஆம் நூற்றாண்டில்தான் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கப்பட்டிருக்கிறது. சிம்மவர்மனின் பள்ளங்கோயில் செப்பேட்டிலும், மகேந்திரவர்மன் காலத்திய வல்லம் குடைவரைக் கோயிற் கல்வெட்டிலும் இவ்வெழுத்தை முதன் முதலில் காண்கிறோம். பின்னர் பாண்டி நாட்டில் மலையடிக்குறிச்சியில் உள்ள சேந்தனின் கல்வெட்டில் இவ் வெழுத்தைக் காணமுடிகிறது.

பல்லவர்கள் தம் செப்புப் பட்டயங்களிலும், குடைவரை மற்றும் கட்டடக் கோயில் களிலும் சம்ஸ்கிருத மொழியை எழுத கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவ் வாறு எழுதுவதை பெருமையாகக் கருதிய பாண்டிய மன்னர்களும் தங்கள் செப்புப் பட்டயங் களிலும், சில குடைவரை மற்றும் தனிப்பட்ட கல்வெட்டுக்களிலும் சம்ஸ்கிருத மொழியையும், கிரந்த எழுத்தையும் பயன்படுத்தியிருக்கின்றனர். உதாரணங்களாக வேள்விக்குடிச் செப்பேடு, ஆனைமலை, திருப்பரங்குன்றம் குடைவரைக்கோயில் கல்வெட்டுகள் மற்றும் வைகைக்கரைக் கல்வெட்டு ஆகியவற்றைக் காட்டலாம். கிரந்த எழுத்துக்களில் சிலவும், புதிதாக உருப்பெற்ற தமிழ் எழுத்துக்கள் சிலவும் ஒன்றுபோலவே காணப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் பாண்டிய மன்னர்கள், தங்களுக்குச் சொந்தமான வட்டெழுத்தில் காணப்பெறும் செப்பேடுகள் சிலவற்றில், சம்ஸ்கிருதப் பகுதியில் தமிழ்ச் சொல்லை எழுதுவதற்கு வட்டெழுத்தைப் பயன்படுத்தாமல் தமிழ் எழுத்தைப் பயன்படுத்தி யிருப்பது மற்றொரு வகைத் தமிழ் எழுத்தைக் கிரந்த எழுத்து உருவாக்குவதற்குப் பயன் படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகப் புலப்படுகிறது[4]

இவ்வகைத் தமிழ் எழுத்து சோழர் காலத்தில் பெரும் ஆதரவைப் பெற்றது. சோழர்கள் தாங்கள் வென்ற பகுதிகளிலெல்லாம் இவ்வெழுத்தைப் பயன்படுத்த வலியுறுத்தினர். அதன் காரணமாக முன்பு இருந்த எழுத்தான வட்டெழுத்து மறையத் தொடங்கியது. பல்லவ மன்னர்களும், சோழ மன்னர்களும் தங்கள் செப்பேடுகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத் தான் பயன்படுத்த வலியுறுத்தியிருக்கின்றனர். அதிலிருந்தே அவர்களின் ஒருமித்த பேராதரவு இப்புதிய தமிழ் எழுத்துக்குத்தான் கிடைத்திருக்கிற தென்பது வெளிப்படை. இவ்வெழுத்தைப் பிற்காலப் பாண்டியர்களும் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுவிட்டது. ஏனெனில் தாங்கள் வெற்றி கண்ட சோழ

1. Larger Sinnamanur Plates of the Pandya king Rajasimha, S.I.I Vol. III.

நாடு, தொண்டை நாட்டுப் பகுதிகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் பயன்படுத்த வேண்டியதாயிற்று. காரணம், இப்பகுதி மக்கள் முற்றிலும் பழைய தமிழ் எழுத்தான வட்டெழுத்தை மறந்துவிட்டமையே ஆகும். 'புரியாத வட்டம்' ஆகையால் அவை தமிழாகப் படுத்தி எழுதப்பட்டன என்று சில கல்வெட்டுக்கள் தெரிவிப்பதிலிருந்தே கி.பி. 11-12ஆம் நூற்றாண்டளவில் வட்டெழுத்து மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலையை எய்திவிட்டது என்பதை உணரலாம். ஆனாலும் தென்பாண்டி நாட்டில் மக்கள் தங்கள் கல்வெட்டுக் களில் வட்டெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

பிற்காலப் பாண்டியர்களுக்குப் பிறகு ஆட்சி புரிந்த விசயநகர மன்னர்களும் பல்லவர் களைப் போன்றே ஆந்திரப் பகுதியிலிருந்து வந்தவர்கள். சமஸ்கிருத மொழிக்கும், கிரந்த எழுத்துக்கும் முக்கியத்துவம் தருபவர்கள். ஆதலால் இவர்களும் புதிய தமிழ் எழுத்தையே தங்கள் கல்வெட்டுக்களில் பயன்படுத்தினர். அது மட்டுமல்லாமல் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் ஒரு படி மேலே சென்று கிரந்த எழுத்தையும், புதிய தமிழ் எழுத்தையும் சேர்த்தே கல்வெட்டுக்களில் எழுதலாயினர்.

அவர்களை அடுத்து வந்த நாயக்க மன்னர்களும் இப்புதிய தமிழ் எழுத்தையே பயன்படுத்தினர். ஆதலால் இப்புதிய தமிழ் எழுத்து பொலிவோடும், வலிவோடும் தொடர்ந்து தமிழகத்தில் வழங்கி வரும் நிலை ஏற்பட்டுவிட்டது. அச்சு இயந்திரம் வந்து விட்ட இந்நாளில் இனி இவ்வெழுத்து முறையில் எந்தவித மாற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆதலால் இத்தமிழ் எழுத்தே இனி என்றென்றும் செங்கோலோச்சும் என்று நம்பலாம்.

பிழை திருத்தங்கள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	26	கல் இன்றி மண் இன்றி	செங்கல் இன்றி மரம் இன்றி
6	2	காணப்பகிறது	காணப்படுகிறது
6	23	சதுரவவடிவமாக.	சதுரவடிவமாக
8	29	எறும்பியூர்	எறும்பூர்
9	23	எட்ச்கவர்	உட்சுவர்
27	28	உடமைப்பு	உடலமைப்பு
34	6	ருக்மணி	ருக்மணி
43	23	பயற்ணீஸ்வரர்	பயறணீஸ்வரர்
47	4	ஓவத்தன்ள விடனுடை	ஓவத்தன்ன இடனுடை
49	11	பின்பக்கச் சுவற்றில்	பின்பககச் சுவரில்
52	39	பிச்சை உசுக்கும் பெருமாள்	பிச்சை உசுக்கும் பெருமாள்
55	15	ஐய்யனார்	ஐயனார்
	28	கனப்பொள்ளலான உருவம்	கனமான உருவம்
	31	கனப்பொள்ளலாகவே செய்யப் பட்டன.	கனமாகச் செய்யப்பட்டன.
57	17	வட இந்தியாவில் செப்புப் படிமங் கள் கனப் பொள்ளலான முறையில் வார்க்கப்படுகின்றன.	வடஇந்தியாவில் செப்புப் படிமங்கள் பொள்ளலான (Hallow casting) முறையில் வார்க்கப்பட்டன.
37	37	காசீயபம்	காசியபம்
	37	சாரஸ்வதம்	சாரஸ்வதீயம்
60	4	திருமலை நாயக்கரின் உருவம் கலைய்பழகு வாய்ந்த உருவமாகும்.	திருமலை நாயக்கரின் கலையழகு வாய்ந்த உருவமாகும்.
61	13	இடுப்பில் குட்டையான ஆடையினையும்	இடுப்பில் குட்டையான ஆடையும்
63	32	கைலையங்கிரி	கயிலையங்கிரி
66	11	தந்தைக்கு ஏற்ற தமையனாக	தந்தைக்கு ஏற்ற தனயனாக

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
74	9	அராகம், சரிதகம்	அராகம் சுரிதகம்
81	30	பாடல்வடிவில் எழுதப்பட்டன நாடக நடனங்கள் ஆகும்.	பாடல் வடிவில் எழுதப்பட்ட நாடக நடனங்கள் ஆகும்.
106	24	பெறுமாள்	பெருமாள்
	29	அன நானூற்றில்	அகநானூற்றில்
153	17	ஆர்காட்டை முற்றுகையிடுவது தான்	ஆர்க்காட்டை முற்றுகையிடுவது தான்.
157	37	ஓனம் திருநாள்	ஓணம் திருநாள்
161	36	திருக்காம்புளியூர்	திருக்காம்புலியூர்
165	11	மண்ணைக் கிளர	மண்ணைக் கிளற
	24	நீண்ட கயிரையே	நீண்ட கயிற்றையே
168	11	நாடு கழவோனே	நாடு கிழவோனே
	13	நிலவுடமையாளர்கள்	நிலவுடைமையாளர்கள்
181	14	மரனாருடுக்கை மறையுறை குறைவர்	மரனாருடுக்கை மலையுறை குறவர்
186	32	தரிகளின் மீதும்	தறிகளின் மீதும்
304	27	தமிழகம் சுபத்ராவுடன்	தமிழகம் சுமத்ராவுடன்
206	28	எண்களில் பெருக்கல் நிலைகளை	எண்களில் பெருக்கல் நிலைகள்
211	34	வரிவடியாயிற்றென்பது	வரிவடிவாயிற்றென்பது
212	39	இவை அசோகன் தோற்றுவிக்கப் பட்டது எனக் கூறவியலாது.	இவை அசோகனால் தோற்றுவிக்கப் பட்டது எனக் கூறவியலாது.
217	26	யவனர் தந்த வினைமா நன்கலம்	யவனர் தந்த வினைமாண் நன்கலம்
262	8	கிருஷ்ணப்ப நாயக்கன் மகன் நாயினியப்ப நாயக்கன்	கிருஷ்ணப்ப நாயக்கன் மகன் நயினியப்ப நாயக்கன்
264	9	பெற்றுச் சுருக்கெழுத்துக்கள்	பெற்றுக் கருத்தெழுத்துக்கள்
267	42	B.B. Lal, From the Megolithic to the Harappa, Tracing back the graffiti on the Pottefp	B.B Lal, From the Megalithic to the Harappa, Tracing back the graffiti on the Pottery, Ancient India, No. 16, pp. 4-24.

பிழை திருத்தங்கள்


பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	26	கல் இன்றி மண் இன்றி	செங்கல் இன்றி மரம் இன்றி
6	2	காணப்பகிறது	காணப்படுகிறது
6	23	சதுரவவடிவமாக	சதுரவடிவமாக
8	29	எறும்பியூர்	எறும்பூர்
9	23	எட்ச்சுவர்	உட்சுவர்
27	28	உடமைப்பு	உடலமைப்பு
34	6	ருக்மணி	ருக்மணி
43	23	பயற்ணீஸ்வரர்	பயறணீஸ்வரர்
47	4	ஓவத்தன்ள விடனுடை	ஓவத்தன்ன இடனுடை
49	11	பின்பக்கச் சுவற்றில்	பின்பககச் சுவரில்
52	39	பிச்சை உசுக்கும் பெருமான்	பிச்சை உசுக்கும் பெருமாள்
55	15	ஐய்யனார்	ஐயனார்
	28	கனப்பொள்ளலான உருவம்	கனமான உருவம்
	31	கனப்பொள்ளலாகவே செய்யப் பட்டன.	கனமாகச் செய்யப்பட்டன.
57	17	வட இந்தியாவில் செப்புப் படிமங் கள் கனப் பொள்ளலான முறையில் வார்க்கப்படுகின்றன.	வடஇந்தியாவில் செப்புப் படிமங்கள் பொள்ளலான (Hallow casting) முறையில் வார்க்கப்பட்டன.
37	37	காசீயபம்	காசியபம்
	37	சாரஸ்வதம்	சாரஸ்வதீயம்
60	4	திருமலை நாயக்கரின் உருவம் கலைய்பழகு வாய்ந்த உருவமாகும்.	திருமலை நாயக்கரின் கலையழகு வாய்ந்த உருவமாகும்.
61	13	இடுப்பில் குட்டையான ஆடையினையும்	இடுப்பில் குட்டையான ஆடையும்
63	32	கைலையங்கிரி	கயிலையங்கிரி
66	11	தந்தைக்கு ஏற்ற தமையனாக	தந்தைக்கு ஏற்ற தனயனாக

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
74	9	அராகம், சரிதகம்	அராகம் சுரிதகம்
81	30	பாடல்வடிவில் எழுதப்பட்டன நாடக நடனங்கள் ஆகும்.	பாடல் வடிவில் எழுதப்பட்ட நாடக நடனங்கள் ஆகும்.
106	24	பெறுமாள்	பெருமாள்
	29	அனநானூற்றில்	அகநானூற்றில்
153	17	ஆர்காட்டை முற்றுகையிடுவது தான்	ஆர்க்காட்டை முற்றுகையிடுவது தான்.
157	37	ஓனம் திருநாள்	ஓணம் திருநாள்
161	36	திருக்காம்புளியூர்	திருக்காம்புலியூர்
165	11	மண்ணைக் கிளர	மண்ணைக் கிளற
	24	நீண்ட கயிரையே	நீண்ட கயிற்றையே
168	11	நாடு கழவோனே	நாடு கிழவோனே
	13	நிலவுடமையாளர்கள்	நிலவுடைமையாளர்கள்
181	14	மரனாருடுக்கை மறையுறை குறைவர்	மரனாருடுக்கை மலையுறை குறவர்
186	32	தரிகளின் மீதும்	தறிகளின் மீதும்
304	27	தமிழகம் சுபத்ராவுடன்	தமிழகம் சுமத்ராவுடன்
206	28	எண்களில் பெருக்கல் நிலைகளை	எண்களில் பெருக்கல் நிலைகள்
211	34	வரிவடியாயிற்றென்பது	வரிவடிவாயிற்றென்பது
212	39	இவை அசோகன் தோற்றுவிக்கப் பட்டது எனக் கூறவியலாது.	இவை அசோகனால் தோற்றுவிக்கப் பட்டது எனக் கூறவியலாது.
217	26	யவனர் தந்த வினைமா நன்கலம்	யவனர் தந்த வினைமாண் நன்கலம்
262	8	கிருஷ்ணப்ப நாயக்கன் மகன் நாயினியப்ப நாயக்கன்	கிருஷ்ணப்ப நாயக்கன் மகன் நயினியப்ப நாயக்கன்
264	9	பெற்றுச் சுருக்கெழுத்துக்கள்	பெற்றுக் கருத்தெழுத்துக்கள்
267	42	B.B. Lal, From the Megolithic to the Harappa, Tracing back the graffiti on the Pottefp	B.B Lal, From the Megalithic to the Harappa, Tracing back the graffiti on the Pottery, Ancient India, No. 16, pp. 4-24.


பக்கம்	வரி	பிழை	திருத்தம்
268	27	இருந்ததால் வேண்டும்	இருந்தாதல் வேண்டும்
270	12	தரிபிலி	தாமிலி
270	15	தமிழ்தாடு	தமிழ்நாடு
270	18	‘தமிழ்	தமிழ்’
270	23	கி.பி. 1-2 ஆம்	கி.பி. 3-ஆம்
271	8	புகழியூர்	புகளூர்
271	36	(Standardised)	(Standardized)



படம் 1. படகுத்துறை, கீழையூர் - காவிரிப்பூம்பட்டினம்
காலம் : கி. மு. 3-ஆம் நூற்றாண்டு




படம் 2. புத்தவிகாரம் - பல்லவனீச்சுரம், காவிரிப்பூம்பட்டினம்
காலம் : கி. பி. 4—5-ஆம் நூற்றாண்டு




படம் 3. மாற்பிடுகுப் பெருங்கிணறு - திருவெள்ளறை
பல்லவர் காலம், கி பி 9-ஆம் நூற்றாண்டு




படம் 4. அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட
முதலாம் இராஜேந்திர சோழனின் அரண்மனைப் பகுதிகள்
கங்கைகொண்ட சோழபுரம்
காலம் : கி. பி. 11-ஆம் நூற்றாண்டு




படம் 5. அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட கட்டடப்பகுதிகள்,
சம்புவராயர் தலைநகரம், படைவீடு
காலம்: கி. பி. 14-ஆம் நூற்றாண்டு




படம் 6. மணிக்கோபுரமும், ஆயுதக்கோபுரமும்,
தஞ்சாவூர் அரண்மனை
காலம்: கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டு




படம் 7. நெற்களஞ்சியம், திருவரங்கம்
மராட்டியர் காலம், கி. பி. 18-ஆம் நூற்றாண்டு



படம் 8. இராமலிங்க விலாசம் அரண்மனைவாயில்
இராமநாதபுரம், காலம்: கி. பி. 18-ஆம் நூற்றாண்டு



படம் 9. இராசசிம்மேசுவரம் என்னும் கயிலாயநாதர் கோயில்
காஞ்சிபுரம், இராசசிம்மன் காலம், கி. பி. 8-ஆம் நூற்றாண்டு




படம் 10. கடற்கரைக் கோயில் - மாமல்லபுரம்
இராசசிம்மன் காலம், கி. பி. 8-ஆம் நூற்றாண்டு




படம் 11. அவனிகந்தர்ப்ப ஈசுவரகிருகம் (இரட்டைக் கோயில்)
பெரும்பழுவூர், காலம்: கி. பி. 9-ஆம் நூற்றாண்டு




படம் 12. இராசராசேசுவரம் என்னும்
தஞ்சைப் பெரிய கோயில்
முதலாம் இராசராசன் காலம்,
கி. பி. 10-ஆம் நூற்றாண்டு.



படம் 13. கங்கைகொண்ட சோழீச்சுரம் - விமானம்
கங்கைகொண்ட சோழபுரம்
முதலாம் இராசேந்திர சோழன் காலம்,
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு



படம் 14. தியாகராசசுவாமி கோயில்
மேற்குக் கோபுரம் - திருவாரூர்
மூன்றாம் குலோத்துங்கன் காலம், கி.பி. 12—13-ஆம் நூற்றாண்டு



படம் 15. கோபுரம் கட்டிய சிற்பிகளின் உருவங்கள்
வடக்குக் கோபுரம் - சிதம்பரம்
காலம் : கி. பி. 16-ஆம் நூற்றாண்டு



படம் 16. அழகிய மானின் ஓவியமும், அருகே மானிறைச்சியைக் கோலில் மாட்டித் தீயில் வாட்டும் காட்சியும், செத்தவரை, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் காலம்: கி. மு. 1500.




படம் 17. உட்புறம் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்ட பெரிய மீனின் உருவம் - செத்தவரை, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், காலம் : கி.மு. 1500.




படம் 18. குதிரை மீதமர்ந்த மனித உருவமும் அருகில் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்த நிலையில் மற்றோர் உருவமும், கீழ்வாலை, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்.
காலம் : கி.மு. 1000.




படம் 19. குதிரை மீதமர்ந்து ஈட்டி எறியும் மனிதன் - வேட்டைக்காரன்மலை, வெள்ளெருக்கம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.
காலம் : கி.மு. 1000-500




படம் 20. எழுவர் கைகோத்து வரிசையாகத் தோன்றும் காட்சியும், யானை, குதிரை மற்றும் மனிதனின் ஓவியங்களும் - வேட்டைக்காரன்மலை, கோயம்புத்தூர் மாவட்டம். காலம் : கி.மு. 1000-500



படம் 21. கல் திட்டையில் வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ள புலி போன்ற உருவம் - மல்லசமுத்திரம், தருமபுரி மாவட்டம் காலம் : கி.மு. 1000-500



படம் 22. வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்ட கலைமானின் ஓவியம் - சிறுமலை, மதுரை மாவட்டம், காலம் : கி.மு. 1000-500



படம் 23. வேலேந்திப் போரிடும் குதிரை வீரர்கள் - மல்லப்பாடி, தருமபுரி மாவட்டம், காலம் : கி.மு. 500.




படம் 24. வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்ட மனித உருவங்களும் மற்றும் சேவல், கோழிகளும் - சையது பாஷா மலை, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம். காலம் : கி.மு. 500-100.




படம் 25. ஆடல் அணங்கின் அழகிய தோற்றம்.
சித்தன்னவாசல் - புதுக்கோட்டை மாவட்டம்.
முற்காலப் பாண்டியர் காலம் – கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.




படம் 26. முகிலினிடையே நடனமிடும் ஆடல் மகளின்
அற்புத ஓவியம் - தஞ்சைப் பெரிய கோயில்
சோழர் காலம், கி. பி. 10—11-ஆம் நூற்றாண்டு




படம் 27. காளியன் எனும் நாகத்தின் மீது நடமாடும் கண்ணன் - இருபுறமும் ருக்மிணி சத்யபாமா ஆகிய தேவியர். திருவீழிமிழலை, திருவாரூர் மாவட்டம், விசயநகர அரசர் காலம், கி.பி. 15-ஆம் நூற்றாண்டு



படம் 28. அரக்கியின் வாயுள் நுழைந்து வயிறு கிழித்து வெளிப்படும் அனுமன். திருவெள்ளறை, திருச்சி மாவட்டம், விசயநகர அரசர் காலம், கி.பி. 1550.



படம் 29. அரேபிய வணிகர்கள் குதிரைகளோடு கப்பலொன்றில் வந்திறங்கும் காட்சி - திருப்புடைமருதூர்க் கோயில், திருநெல்வேலி மாவட்டம். விசயநகர அரசர் காலம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



படம் 30. இராணி மங்கம்மாள் அங்கயற்கண்ணி அம்மையிடம் செங்கோல் பெறும் காட்சி - மீனாட்சி அம்மன் கோயில், மதுரை. நாயக்கர் காலம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு



படம் 31. தெலுங்கு மொழியிலமைந்த "அரங்கநாதர் இராமாயணக் காட்சி", செங்கம், திருவண்ணாமலை மாவட்டம், நாயக்கர் காலம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு



படம் 32. மன்னர் இரண்டாம் சரபோஜியின் எழில்மிகு வண்ண ஓவியம், மராட்டிய தர்பார் மண்டபம், தஞ்சை அரண்மனை, தஞ்சாவூர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு



படம் 33. மன்னர் இரண்டாம் சரபோஜியின் முகப்பொலிவு



படம் 34. பலவகை மதுக்கிண்ணங்களுக்கு நடுவே சேதுபதி தம் பட்டத்தரசியுடன் - இராமலிங்கவிலாசம் சேதுபதி அரண்மனை, இராமநாதபுரம், விஜயரகுநாத சேதுபதி மன்னர் காலம், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு



படம் 35. தாய்த்தெய்வம், செப்புத்திருமேனி, ஆதிச்சநல்லூர் தூத்துக்குடி மாவட்டம், காலம் கி. மு. 7-ஆம் நூற்றாண்டு,



படம் 36. தங்கமுலாம் பூசப்பெற்ற மைத்ரேயர் செப்புத் திருமேனி, பூம்புகார்-மேலையூர், நாகப்பட்டினம் மாவட்டம், பல்லவர் காலம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




படம் 37. சேயுடைச்செல்வி, செப்புத்திருமேனி, பல்லவனீச்சுரம், பூம்புகார், நாகப்பட்டினம் மாவட்டம், முற்காலச் சோழர் காலம், கி பி. 9-10-ஆம் நூற்றாண்டு



படம் 38. சோழப்பேரரசி செம்பியன் மாதேவி, செப்புத்திருமேனி, காமரசவல்லி, திருச்சி மாவட்டம், முற்காலச் சோழர் காலம், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு




படம் 39. உமா பரமேசுவரி, செப்புத் திருமேனி, கல்யாணசுந்தரேசுவரர் கோயில், நல்லூர், தஞ்சை மாவட்டம், சோழர் காலம், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு




படம் 40. ஆடவல்லான், செப்புத் திருமேனி, பெரிய கோயில், தஞ்சாவூர், இராசராச சோழன் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு



படம் 41. முருகப்பெருமான், செப்புத் திருமேனி,
கங்கைகொண்டசோழபுரம், பெரம்பலூர் மாவட்டம்,
முதலாம் இராசேந்திர சோழன் காலம்,
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு



படம் 42. விசிறிப்பாறை, உடையாநத்தம்,
விழுப்புரம் மாவட்டம், பெருங்கற்காலம்,
கி மு 3-ஆம் நூற்றாண்டு



படம் 43. திருமறு (ஸ்ரீவத்ஸம்), வேலஞ்சேரி,
திருவள்ளூர் மாவட்டம், கி.பி. 6-ஆம் நூற்றாண்டு



படம் 44. புடைச் சிற்ப வரிசை, வேலஞ்சேரி, திருவள்ளூர் மாவட்டம்.
கி.பி. 6-ஆம் நூற்றாண்டு



படம் 45. தத்தாத்ரேயர், பொன்னூர்,
வேலூர் மாவட்டம், பல்லவர் காலம்
கி.பி. 7-ஆம் நூற்றாண்டு



படம் 46. மகிடனோடு போர் புரியும் அன்னை,
மகிடாசுரமர்த்தனி குடைவரை, மாமல்லபுரம்,
பல்லவர் காலம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



படம் 47. பால் கறக்கும் ஆயன்,
கிருட்டிண மண்டபம், மாமல்லபுரம்,
பல்லவர் காலம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




படம் 48. மகரயாழ் மீட்டும் முனிவரும் பிறரும்,
திருமால் குடைவரை, திருமெய்யம், புதுக்கோட்டை மாவட்டம்,
பாண்டியர் காலம், கி.பி. 9-ஆம் நூற்றாண்டு




படம் 49. குழலூதும் சிவகணம் - கைலாசநாதர் கோயில், காஞ்சிபுரம்-
காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவர் காலம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



படம் 50. வீணை இசைக்கும் பெண், குழலூதும்
பிள்ளை கோயில், திருவரங்கம், திருச்சி மாவட்டம்
போசளர் காலம், கி. பி. 13-ஆம் நூற்றாண்டு



படம் 51. நாயக்க அரசனும் அரசியும்,
தந்தச் சிற்பம், திருவரங்கம் திருக்கோயில்
காட்சிக் கூடம், திருச்சி மாவட்டம்,
நாயக்கர் காலம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு



படம் 52. இணைந்தாடும் ஆடவரும் மகளிரும்,
தான்தோன்றீசுவரம், காஞ்சிபுரம்,
காஞ்சிபுரம் மாவட்டம், முற்காலப் பல்லவர் காலம்,
கி பி. 7-ஆம் நூற்றாண்டு



படம் 53. 'வட்ட முழவத்தில் கொட்டுகரம்
இட்டவொலி தட்டும் நந்தி' காஞ்சிபுரம்,
காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவர் காலம்,
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



படம் 54. இலயம் சதிபிழையாதே கொடியிடை
உமையவள் காண ஆடிய அழகன்,
திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம்,
முற்காலப் பாண்டியர் காலம்,
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




படம் 55. 'காளிதன் பெரிய கூத்து'
கோலவிழி அம்மன் கோயில், மயிலாப்பூர்
சென்னை, முற்காலச் சோழர் காலம்
கி.பி. 10-ஆம் நூற்றாண்டு




படம் 56. செம்மாந்து நிற்கும் சீரிய அவிநயம்,
தியாகராசர் கோயில், திருவாரூர், திருவாரூர் மாவட்டம்,
இடைச்சோழர் காலம், கி. பி. 11-ஆம் நூற்றாண்டு




படம் 57. 'நரம்பு மீ திறத்தல் செய்யா நல்லிசை
யாழ் மீட்டும் ஆடல்மகன்' தில்லைச் சிற்றம்பலம்,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்,
பிற்காலச் சோழர் காலம்,
கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு



படம் 58. வீழ்ந்தாடல், சாரங்கபாணி கோயில்,
கும்பகோணம், தஞ்சை மாவட்டம்,
இடைச்சோழர் காலம்,
கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு



படம் 59 படிந்தாடல், சாரங்கபாணி கோயில், கும்பகோணம்,
தஞ்சை மாவட்டம், கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு



படம் 60. வில்லென வளைந்து மேருவை உருவகிக்கும் ஆடல் மகளிர்,
சிதம்பரம், கடலூர் மாவட்டம், விசயநகரர் காலம், கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு



படம் 61. சேதுபதி அரசவையில் ஆடல் அழகியர்,
இராமலிங்க விலாச அரண்மனை, இராமநாதபுரம், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு



படம் 62 நடுகல் - எடுத்தனூர், மகேந்திரவர்ம பல்லவன் காலம்




படம் 63 நடுகல் - ஆனந்தூர், விசய நகர வேந்தர் காலம்



படம் 64 முதுமக்கள் தாழி - சங்க காலம், கம்பம் பகுதி



படம் 65 ஈமப் பேழை - விலங்கின் உருவமும் பல கால்களும் கொண்டது, தருமபுரி பகுதி.



படம் 66 குறியீடு பொறித்த மட்கலன் - சங்க காலம், கொற்கை



படம் 67 உரோமானிய மதுக்குடத்தின்
கழுத்துப் பகுதி - சங்க காலம், வசவசமுத்திரம்



படம் 68 சீனநாட்டு மட்கலன் - இராசபாளையத்திற்கு அருகிலுள்ள மலைப்பகுதியில் கிடைத்தவை




படம் 69 சுடுமண் விளக்கு - சம்புவராயர் காலம், படைவேடு




படம் 70. பழங்காலக் கலப்பைகள் - இராசபாளையம் அருகிலுள்ள மலைப்பகுதியில் கிடைத்தவை




படம் 71. பொன்னேர் பூட்டும் காளை - போளுமாம்பட்டி




படம் 72. கப்பல் - காளை உருவம் பொறிக்கப்பட்ட காசு, பல்லவர் காலம்




படம் 73 "சித்திரமேழிப் பெரிய நாட்டார்" - கல்வெட்டுள்ள கலப்பை, சோழர் காலம்




படம் 74 நீர் இறைக்கும் சால் - தற்காலம்




படம் 75. நாட்டுக்கல், குண்டூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்




படம் 76. 'குண்டூர் பெருந்தட்டான் மாறன்
குவாவன் செய்வித்த கற்குழி' குண்டூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
கி. பி. 9-ஆம் நூற்றாண்டு




படம் 77. திருச்சுனைத் தூம்பு, திருச்சுனை,
மதுரை மாவட்டம், காலம் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு



படம் 78. வட்டெழுத்துக் கல்வெட்டு
வைகைக்கரை-மதுரை
பாண்டியன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் காலம்
கி. பி. 7-ஆம் நூற்றாண்டு




படம் 79. ஏரிக்கல்வெட்டு - முதல் பாண்டியப் பேரரசு காலம்
இராமநாதபுரம், கி. பி. 9-ஆம் நூற்றாண்டு



படம் 80. சோழகங்கம் ஏரியின் மடை, கங்கை கொண்ட சோழபுரம்,
முதலாம் இராசேந்திரசோழன் காலம்




படம் 81. சோழர்கால ஏரிக் கலிங்கு தற்கால மாற்றங்களுடன்
நெரிஞ்சிக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்



படம் 82. 'பொற்கொடி வீரர் பேரால் இட்ட செக்கு'
வட்டெழுத்து செக்குக் கல்வெட்டு, வஞ்சி நகரம், மதுரை மாவட்டம்,
கி. பி. 10-ஆம் நூற்றாண்டு




படம் 83. பதினெண் விசயத்தார்
கல்வெட்டில் தொழிற் கருவிகள்,
திருப்பழனம்,
தஞ்சாவூர் மாவட்டம்
கி.பி. 16-ஆம் நூற்றாண்டு



படம் 84. கப்பல் உருவம் பொறிக்கப் பெற்ற ரௌலட்டட் வகைப் பானை ஓடு, அழகன்குளம், இராமநாதபுரம் மாவட்டம்
கி.பி. 1—2-ஆம் நூற்றாண்டு.




படம் 85. நான்கு கால்கள் கொண்ட சாடி
சங்க காலம் - தருமபுரி பகுதி



படம் 86. வண்ணந்தீட்டிய மட்கலன் - சங்ககாலம், கொற்கை,
தூத்துக்குடி மாவட்டம்




படம் 87. சீன நாட்டுக் கலன்கள் - இராசபாளையம் அருகிலுள்ள மலைப்பகுதியில் கிடைத்தவை




படம் 88. காசுகள் வைக்கும் கலன் (உண்டியல்) சோழர் காலம் - தஞ்சைப் பகுதி



படம் 89. மூக்குக் கெண்டி - நாயக்கர் காலம், கொங்கு நாட்டுப் பகுதி




படம் 90. 'தாயன் ஓதலன்' என்று பண்டைத் தமிழெழுத்துப் பொறிக்கப் பெற்ற பொன் மோதிரம், கரூர், கரூர் மாவட்டம், கி.மு. 2-ஆம் நூற்றாண்டு



படம் 91. 'பேர்அவதான்' என்று பண்டைத் தமிழெழுத்தில் பொறிக்கப்பட்ட வெள்ளி மோதிரம், கரூர், கரூர் மாவட்டம், கி.மு. 2-ஆம் நூற்றாண்டு




படம் 92. பண்டைத் தமிழ்க் கல்வெட்டு, திருமலை, சிவகங்கை மாவட்டம், கி. மு. 2-ஆம் நூற்றாண்டு



படம் 93. சிதைந்த நிலையிலுள்ள பண்டைத் தமிழ்க் கல்வெட்டு, திருமலை, சிவகங்கை மாவட்டம், கி. மு. 2-ஆம் நூற்றாண்டு



படம் 94. தமிழ் பிராமி கல்வெட்டு, தொண்டூர், விழுப்புரம் மாவட்டம், கி.மு. 2, 1-ஆம் நூற்றாண்டு




படம் 95. இசைக் கல்வெட்டு - அறச்சலூர், கி.பி. 3-ஆம் நூற்றாண்டு




படம் 96 "பரிவாதினி" - இசைக்கல்வெட்டு, குடைவரைக் கோயில், திருமயம்
புதுக்கோட்டை மாவட்டம்



படம் 97. 'வபு' என்று எழுதப்பட்ட பல்லவர் வெள்ளிக் காசு, கரூர், கரூர் மாவட்டம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முன்பக்கம்




படம் 98. பல்லவர் வெள்ளிக்காசு, கரூர், கரூர் மாவட்டம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு பின்பக்கம்




படம் 99. பல்லவ கிரந்தம் - இராசசிம்மன் காலம், சாளுவன் குப்பம் (மாமல்லபுரம்) காஞ்சிபுரம் மாவட்டம்.




படம் 100. நாகரி கல்வெட்டு, இராசசிம்மன் காலம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு சாளுவன் குப்பம் (மாமல்லபுரம்)
காஞ்சிபுரம் மாவட்டம்




படம் 101. வட்டெழுத்துக் கல்வெட்டு
பராந்தக நெடுஞ்சடையன் காலம்
கி.பி. 770. ஆனைமலை
மதுரை மாவட்டம்




படம் 102. பராந்தக நெடுஞ்சடையன் கல்வெட்டு
கி.பி. 773 - ஆனைமலை,
மதுரை மாவட்டம்




படம் 103. தூண்மீது தமிழிலும் கிரந்தத்திலும்
எழுதப்பெற்றுள்ள வடமொழிக் கல்வெட்டு
இராசராசன் அகழ்வைப்பகம்,
தஞ்சாவூர், தஞ்சை மாவட்டம்,
கி.பி. 10-ஆம் நூற்றாண்டு




படம் 104. சீனச் செப்புக் காசுகள்
தரங்கம்பாடி, நாகை மாவட்டம்.
கி.பி. 13 மற்றும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு




படம் 105. இசைக் கல்வெட்டு - குடுமியான்மலை,
புதுக்கோட்டை மாவட்டம், கி. பி. 8-ஆம் நூற்றாண்டு



படம் 106. கண்டகோபாலன் மாடை - தங்கக்காசு, முன், பின்பக்கங்கள்.
வரதராஜன்பேட்டை, கடலூர் மாவட்டம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு




படம் 107. திருமலை நாயக்கர் செப்பேடு,
கி.பி. 17-ஆம் நூற்றாண்டு, அம்மைய நாயக்கனூர்,
திண்டுக்கல் மாவட்டம்



படம் 108. திருமலை நாயக்கர் செப்பேடு முன்பக்கம்,
கி.பி. 17-ஆம் நூற்றாண்டு, சிறுவாலை.



படம் 109. திருமலை நாயக்கர் செப்பேடு பின்பக்கம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு
சிறுவாலை, மதுரை மாவட்டம்.



படம் 110. திருமலை நாயக்கர் செப்பேடு,
17-ஆம் நூற்றாண்டு, தருமத்துப்பட்டி.